உள்ளபடியே விவசாயம் பெருகவேண்டும்; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே. இப்பொழுது இருப்பதைவிட 35 சதவிகிதம் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது. உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதினால் விவசாயிகளுக்கு உற்சாகம் இருக்க முடியாது. அவர்களுக்கு நல்ல உற்சாகம் இருக்கவேண்டுமானால், நல்ல விலை அவர்கள் விளைவிக்கும் பொருள்களுக்குக் கிடைக்கவேண்டும். பொருள்களுடைய விலையைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று சொன்னால், அது உணவுத் தானியங்களின் விலையைக் கட்டுப்படுத்துவதினால் ஏற்பட்டுவிடாது. அதற்குப் பதிலாக, உணவுத் தானியங்களுக்குக் குறைந்தப்பட்ச விலையை நிர்ணயப்பதோடுகூட, ஆங்கிலேய நாட்டில் செய்ததுபோல, பொதுவாக விலைகளைக் கட்டுப்பாடு செய்து, அதற்கு உபரிப் பணம் தேவைப்படுகிறது என்றால், அரசாங்கமே அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். பொதுவாக, எல்லாப் பொருள்களின் விலையையும் கட்டுப்பாடு செய்து, கட்டுப்பாட்டுக்குத் தகுந்தவாறு எந்த அளவு நஷ்டம் ஏற்படுகிறதோ அதை அரசாங்கமே ஏற்றுக்கொள்வது என்ற கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதுதான் ஆங்கிலேயே நாடு ஏற்றுக்கொண்ட கொள்கை. இதைக் கடைப்பிடித்தால் நாம் நிச்சயமாக வெற்றி காண முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தும் கவர்னர் உரையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குக் கொடுத்திருக்கும் 'ட்ராப்ட் ப்ளானிங்'-ல் எதற்கு முதல் இடம் கொடுக்கவேண்டும், எதற்கு இரண்டாவது இடம் கொடுக்கவேண்டுமென்று அதில் கண்டிருக்கிறது. பொதுவாக, நாட்டிலே மூன்றாவது திட்டத்திலே விவசாயத்திற்கு முதல் இடமும், தொழில்களுக்கு இரண்டாவது இடமும் கொடுக்கவேண்டும் என்று கண்டிருக்கிறது. ஆனால், நமது மாகாணத்தைப் பொறுத்தவரைக்கும் நான் சொல்வேன், விவசாயத்திற்கு அல்ல நாம் முதல் இடம் கொடுக்கவேண்டியது. தொழில்களுக்கு நம் மாகாணத்தில் முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று நான்

[Sri S. Lazar] [8th August 1960

கருதுகிறேன். இதைப்பற்றிக்கூட கவர்னருடைய பேருரையின் மீது அங்கத்தினர்கள் கருத்துத் தெரிவிக்கவேண்டுமென்று எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். நமது மாகாணம் மற்றைய மாகாணங்களில் இருக்கும் நிலைமையைவிட நல்ல முறையில் விவசாயம் செய்கிறது என்று புள்ளிவிவரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்தியாவிலேயே மற்ற மாகாணங்களைவிட ஒரு ஏக்கரில் அதிகப்படியாக உற்பத்தி செய்யக்கூடியது சென்னை மாகாணம் என்று கண்டிருக்கிறது. ஏதோ ஓரளவுக்குத்தான் நமது மாகாணத்தில் உற்பத்தியை எதிர்பார்க்க முடியுமே தவிர, விவசாயத்தைப் பொறுத்தவரைக்கும். அதிகமான அளவுக்கு அபிவிருத்தியை நாம் எதிர்பார்க்கமுடியாது. அதே சமயத்தில் மற்ற மாகாணங்களைவிட நமது மாகாணத்திலே ஜனப் பெருக்கம் அதிகம்; 'டென்ஸிடி' அதிகமாக இருக்கிறது. அதே சமயத்தில், இருக்கும் நிலப் பரப்பும் மிகவும் குறைவு. கவர்ன ருடைய பேருரையில் ஒவ்வொரு தனிப்பட்ட மனித னுடைய சராசரி வருமானத்தையும் அதிகப்படுத்த வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே சென்னை மாகாணத்திலுள்ள பொதுமக்களுடைய தனிப்பட்ட வருமானத்தை அதிகப்படுத்த வேண்டு மென்றால், விவசாயத்தில் மட்டும் அக்கறை காட்டினால் போதாது; தொழிற்சாலைகளுக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அந்த முறையிலேதான் தொழிற்சாலைகள் ஏராளமாக ஏற்படவேண்டும்; பரவலாக ஏற்படவேண்டும். சென்னை மாகாணம் ஏற்கனவே பின் தங்கியிருக்கிறது என்று நாம் தெரிந்துகொண்டிருக்கும் காரணத் தினால், அது நன்றாகப் புரிகின்ற காரணத்தினால், இன்னும் அதிகமான தொழிற்சாலைகள் ஏற்படவேண்டும் என்று கவர்னர் கூட அதைப்பற்றி வற்புறுத்தியிருக்கிறார்கள்.

அப்படிச் சொல்கிறபோது, குறிப்பாகச் சொல்லக்கூடிய ஒரு சில கருத்துக்கள் அதற்குத் தேவைப்படக்கூடிய ஆதாரப் பொருள்கள் (Basic Raw Materials) இங்கே இல்லை என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. அதைக் குறித்தும்கூட, நமது அரசாங்கம் இப்பொழுது பரிசீலனை செய்திருக்கிறது. கனரகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியாது என்றாலுங்கூட, உப தொழில்களைப் பல இடங்களில் ஏராளமாகச் செய்ய முடியும். இங்கிருந்து ஜப்பானிய நாட்டுக்கு இரும்புக் கனியைக் கொண்டு சென்று, அங்கே பொருள்கள் செய்து இந்தியாவுக்குக் கொண்டு வந்து, இங்கு லாபகரமாக விற்க முடியும் என்ற நிலைமை இருக்கும் போது, அதுபோல் மற்ற இடங்களிலே தயாரிக்கின்ற கனிகளை நமது மாகாணத்திற்குக் கொண்டுவந்து உப பொருள்களைத் தயாரிப்பதிலே நாமும் ஈடுபடமுடியும் என்ற வாதத்தை நமது அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது. அந்த வாதம் நல்ல முறையிலே நடந்து, நமது மாகாணத்தில் ஏராளமான தொழிற் சாலைகள் நிறுவப்பட வேண்டுமென்ற கருத்தினை இந்தச் சபை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளும் என்று நான் எதிர் பார்க்கின்றேன்.



8th August 1960] [Sri S. Lazar]

அதோடுகூட இன்னும் ஒரு முக்கியமான கருத்தினை நான் தெரிவிக்க விரும்புகிறேன். மாகாணத்தில் அதிகப்படியான தொழில்கள் ஏற்படவேண்டுமென்றால், அதற்கு நிதி தேவைப் படுகிறது. நமது மாகாணத்தைப் பொறுத்தவரைக்கும், நிதியைத் தாராளமாக உபயோகிக்கக்கூடிய அளவுக்கு வைத்தி ருக்கும் நபர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. ஆகையால் தான், அரசாங்கம் இதிலே துணிவான முடிவு எடுக்கவேண்டும். தொழில்களை யார் ஆரம்பித்தாலுங்கூட அதில் அதிகப்படியான ஷேர் காபிடலை அரசாங்கமே போடவேண்டும் என்ற முடிவை எடுப்பதோடுகூட, ஒருசில தொழில்களை அரசாங்கமே எடுத்து நடத்தவேண்டும் என்ற முடிவுக்கு வந்தாகவேண்டும். இது போன்று மற்றைய மாகாணங்களிலும் இப்பொழுது நடந்து கொண்டு வருகிறது. ஒருசில தொழில்களை அரசாங்கமே தங்க ளுடைய உபரித் தொகையை அதிலே மூலதனமாகப் போட்டு, அந்தத் தொழில்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். நமது மாகாணத்திலே முதலீடு (Capital) செய்வதற்கு சற்று அச்சப் படும் காரணத்தால், அரசாங்கமே முன் நின்று, அதற்கான பொருள்களை முதலீடு செய்து, சில தொழில்களை ஆரம்பிக்க முடியும் என்று ஏற்பட்டிருக்கிறது. கவர்னருடைய பேருரையிலே தொழில்களைப் பற்றிப் பேசும்போது, சேலத்திலே கிடைக்கும் இரும்பைப்பற்றி அதிலே சொல்லியிருக்கிறது. இதைப்பற்றி நான் அமைச்சர்களைப் பாராட்ட வேண்டியிருக்கிறது. நமது மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்கள் இதற்கென தனிப் பட்ட முயற்சிகள் எடுத்து, கிழக்கு ஜெர்மனி நாட்டிலிருந்து அந்த நாட்டின் அமைச்சரையே பிப்ரவரி மாதத்திலே கொண்டு வந்தார்கள். அவர்கள் பரீட்சை செய்தார்கள். பரிசீலனை செய்த தற்குப் பிறகு இங்கே கிடைக்கும் இரும்புக் கனிப் பொருள்களைக் கொண்டு இரும்பு தயார் செய்யமுடியும் என்ற முடிவை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதை மேலும் பரிசீலனை செய்வதற்கு இப்பொழுது மத்திய சர்க்கார் ஒரு குழுவை நியமித்துள்ளது. அந்தக் குழுவிலே நமது மாகாண சர்க்காரிலுள்ள தொழில் காரியதரிசிகூட இடம் வகிக்கின்றார். இரும்புக் கனியை உபயோ கப்படுத்தி, இரும்பு தயார் செய்யக்கூடிய தொழிலை நிச்சயமாக நமது மாகாணத்தில் ஏற்படுத்த நல்லதொரு முடிவு செய்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கும் அமைச்சர் அவர்களும் இந்த அரசாங்கமும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் வற்புறுத்திச் சொல்கிறேன்.

ஏற்கனவே சொல்லியதுபோல், பெட்ரோலியம் ஏராளமாக இருக்கிறது என்ற முடிவுக்கு வரக்கூடிய அரசாங்கம் அதற்கான ஒரு தனிக் குழுவை நியமித்து, காவிரி பேஸினில் பரிபூரண ஆராய்ச்சி செய்வதற்கு முடிவு எடுத்திருப்பதாக உரையிலே கண்டிருப்பது எல்லோருக்கும் ஒரு மகிழ்ச்சியைத் தரக்கூடிய விஷயமாக இருக்கிறது.

தொழில் துறையிலே, தொழிலாளர் பற்றிய கொள்கை என்ன என்பதைப்பற்றி வரையறுத்துப் பேசக்கூடிய கவர்னர், குறிப்பாக நூல் தொழிற்சாலைகளிலும், பீடித் தொழில்களிலும் இருந்த சச்சரவைத் தீர்த்து நல்லதொரு நிலைமையை ஏற்படுத்தி

யிருப்பதுபற்றி குறிப்பிட்டிருக்கிறார். அதேபோல் சிமெண்டுத் தொழில்களைப் பொறுத்தும்கூட, அகில இந்திய ரீதியில் ஒரு 'வேஜ் போர்டு' நியமிக்கப்பட்டு அவர்களும் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதை நடைமுறைக்குக் கொண்டுவர சிக்கல்கள் இருக்கின்றன. நமது மாகாணத்திலே மூன்று சிமெண்டுத் தொழிற்சாலைகள் இருந்தும், ஒன்றில்கூட அதை நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. ஆகவே, சீக்கிரமே நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற கருத்தினைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயப் பெருக்கைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுச் சொன்னேன். விவசாயம் பெருகவேண்டும் என்பதிலே எல்லோருக்கும் அக்கரை இருக்கிறது. அதிலும் நமது மாகாணம் முதல் இடம் பெற்றிருக்கிறது, என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும். 'பாக்கேஜ் ப்ரோக்ராம்'-ஐப் பற்றி கவர்னர் பெருமான் உரையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதுவும் நல்ல முறையிலே நடந்துகொண்டு வருகிறது. உரம் வந்து கொண்டிருக்கிறது. ஆனால், மற்றைய மாகாணங்களிலே விவசாயிகளுக்குத் தேவைப்படும் அளவுக்கு உரம் கிடைக்கவில்லை என்ற நிலைமை இப்பொழுது இருக்கிறது. குறிப்பாக, திருச்சி ஜில்லாவில் சொல்லவேண்டுமானால், ஏக்கர் ஒன்றுக்கு 32 பவுண்டு அமோனியம் சல்பேட்டும், 14 பவுண்டு யூரியாவும்தான் கிடைத்திருக்கிறதே தவிர, அதற்குமேல் அதிகமாகக் கிடைக்கவில்லை. ஒரு ஏக்கரில் நல்ல சாகுபடி செய்யவேண்டுமானால், சராசரி குறைந்தது 100 பவுண்டு உரமாவது கிடைக்கவேண்டும். ஆகையால், இந்த நிலைமையை நன்றாகப் பரிசீலனை செய்து அதிகப்படியான அளவுக்கு மாகாணங்களுக்கு உரத்தை அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது.

மின்சாரத்தைப் பற்றி பெருமைப்படக்கூடிய நிலையில் நமது மாகாணம் இருக்கிறது. 19,000 கிராமங்களிலே மின்சாரம் அகில இந்திய ரீதியில் இருக்கிறது என்று சொன்னால், நமது மாகாணத்தில் 10,000 கிராமங்களுக்கு மின்சாரம் கிடைத்திருக்கிறது. இதைவிடப் பெருமைப்படக்கூடிய காரியம் வேறு எதுவுமே இருக்க முடியாது. இந்தியா பூராவுக்குமே இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவிலே 19,000 கிராமங்கள் மின்னொளி பெறும் என்றால், நமது மாகாணத்தில் 10,000 கிராமங்களுக்குக் கிடைத்திருக்கும். இதை இன்னும் அதிகப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அதைப்பற்றிக் கவர்னர் உரையிலே நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட 'ட்ராப்ட் பிளானை'-ப் பார்க்கும்போது, தர்மல் ப்ளாண்ட், அட்டாமிக் ப்ளாண்ட் ஏற்படுத்துவதுபற்றி அதிலே குறிப்பிடப்படவில்லை. நமது மாகாணத்திலே அட்டாமிக் ப்ளாண்ட் ஏற்படவேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறோம்; அடிக்கடி இங்கே எடுத்துப் பேசப்பட்டிருக்கிறது. இதையும் வற்புறுத்தி, ட்ராப்ட் ப்ளானிலே இப்பொழுது சேர்க்கவில்லை. அதைச் சேர்ப்பதற்கான நடவடிக்கையும் நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது.



கவர்னருடைய உரையில் எல்லாவிதமான நல்ல அம்சங்களும் ஏராளமாக அமைந்திருக்கின்றன. அவருடைய உரையை மனமாரப் பாராட்டி, வாழ்த்தி, அதோடுகூட, அந்த உரையை நிகழ்த்திய கவர்னர் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, சீரும் சிறப்புடன் இருக்கவேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக்கொண்டு, நான் கொடுத்திருக்கும் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று சபையையும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **SRI N. MAHALINGAM**: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பேருரைக்காக நன்றி கூறுவதை ஆமோதிக்கும்பொருட்டு நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதலாவதாக, நமது ராஜ்யத்தின் மிகப் பெரிய விவசாய மின்சார திட்டமாகிய பரம்பிக்குளத் திட்டத்தைப்பற்றி கேரள ராஜ்யத்தோடு வெற்றிகரமாக முடிவான ஏற்பாடுகள் செய்ததுபற்றி நம்முடைய ராஜ்ய அமைச்சர் அவைக்கும், மத்திய சர்க்காருக்கும் என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பரம்பிக்குளத் திட்டத்தைப்பற்றி பல ஆண்டுகளாக நம்முடைய பி. டபிள்யூ. டி. இலாகாவினால் கணக்கு எடுக்கப்பட்டு அந்தத் திட்டம் நிறைவேற்றப்படக்கூடிய திட்டம் என்று இறுதியாக இருந்த நிலைமையிலும், சமீபத்திலே கேரள ராஜ்யத்தினுடைய முட்டுக்கட்டையினாலே சில மாதங்களுக்கு முன்னாலேயே ஆரம்பிக்கப்படவேண்டிய திட்டம் தடைபட்டிருந்தது நம் எல்லோருக்கும் தெரியும். மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் நமாகு இருக்கக்கூடிய அப்பேர்ப்பட்ட ஒரு பெரிய முக்கியமான திட்டம் நமது ராஜ்ய சர்க்காருடைய முயற்சியினாலும், மத்திய சர்க்காருடைய தலையீட்டாலும் அதிகமாக மாறுதல்கள் இன்றி முடிவுற்றது நம் எல்லோருக்கும், முக்கியமாக கோவையில் இருக்கக்கூடிய விவசாய மக்கள் எல்லோருக்கும் அதிக சந்தோஷத்தை அளிக்கிறது. ஆரம்பத்தில் 12,000 மிலியன் கன அடி தண்ணீர் கேரளத்திற்கு கொடுப்பதாக இருந்தது. இப்பொழுது 12,300 மிலியன் கன அடி தண்ணீர்தான் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஒரு சிலர் தவறாக நாம் கேரளாவிற்கு அதிகமாக தண்ணீர் கொடுத்து விட்டோம் என்று தப்பு அபிப்பிராயம் கொண்டிருப்பதை நீக்கிக் கொள்ளுவது அவசியம் என்று நான் இந்த சமயத்தில் கூற விரும்புகிறேன்.

பரம்பிக்குளத் திட்டத்தை தவிர, இரு ராஜ்யங்களுக்கும் பயன்படக்கூடிய மற்றொரு நதி ஒன்று பாக்கி இருக்கிறது. பரம்பிக்குளப்பகுதியில் ஆனமலையாறு என்ற ஒரு நதி இருக்கிறது. அந்த நதியில் அணை கட்டுவதுபற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தி சீக்கிரம் முடிவு எடுப்பது அவசியம். அந்த நதியில் அணை கட்டுவது என்று முடிவு செய்தால் நம்முடைய ராஜ்யத்தில் இன்னும் 50,000 ஏக்கருக்குத் தண்ணீர் கிடைக்கும். 40,000 கிலோ-வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்பதை நான் அமைச்சர் அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த ஆற்றின் தண்ணீரை

நம்முடைய ராஜ்யத்திற்கு திருப்பினால் கேரள ராஜ்யத்திலுள்ள மேட்டுப் பக்கமான பிரதேசத்திற்கு தண்ணீர் கொடுக்கக்கூடிய வசதியும் இருக்கிறது. ஆகவே, இந்த ஆற்றுத் தண்ணீரை திருப்புவதன்மூலம் கேரள ராஜ்யத்திற்கும் பல சௌகரியங்கள் இருக்கின்றன. ஆகவே, இது சம்பந்தமாக சீக்கிரத்தில் பேச்சு வார்த்தைகள் நடத்தவேண்டுமென்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்களை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சமீபத்தில் நம்முடைய தேசம் எங்கிலும் எல்லோருடைய, முக்கியமாக மக்கள் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலை நிறுத்தம். அது சம்பந்தமாக நமது சர்க்கார் எடுத்துக்கொண்ட மிக தீவிரமான நடவடிக்கைகளை இந்த சமயத்தில் நான் பாராட்ட விரும்புகிறேன். மத்திய சர்க்காருடைய சிப்பந்திகள் மாகாண சர்க்காருடைய சிப்பந்திகளைவிட அதிகமாக சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மேலும் அதிக சம்பளம் மத்திய சர்க்காரிலே கொடுப்பது சரியல்ல. மாகாண சர்க்காருடைய சிப்பந்திகளுடைய சம்பளத்தை ஒரு கால கட்டத்திற்குள்ளாவது மத்திய சர்க்கார் சிப்பந்திகளுடைய சம்பள அளவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதை இந்த சபையிலே நாம் பல முறை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம். பே கமிஷன் குறிப்பிட்ட சம்பள விகிதத்தை அப்படியே பூரணமாக அமுல் செய்ய நம்முடைய ராஜ்ய சர்க்கார் ஒப்புக்கொண்டிருந்தும் கூட, இன்னும் ராஜ்ய சர்க்காருடைய சம்பள விகிதங்கள் மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய சம்பள அளவுக்கு வந்து சேரவில்லை. நிலைமை அப்படியிருக்கும்பொழுதுகூட, மத்திய சர்க்கார் சிப்பந்திகள் சில தொழிற்சங்க தலைவர்களின் தூண்டுதலின் பேரிலும் மேலும் மத்திய சர்க்காருடைய சிப்பந்திகளுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்பதற்காக ஒரு பெரிய கிளர்ச்சியும் வேலை நிறுத்தமும் செய்ய முற்பட்டனர். இது மிகவும் வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். நல்ல வேளையாக இந்த வேலை நிறுத்தத்திற்கு பொது மக்களுடைய ஆதரவு இல்லை பல் வேறு இடங்களிலே இந்த வேலை நிறுத்தத்தின் போது, பொது மக்கள், அவர்களே முன்வந்து சில பணிகளை செய்து மக்களுடைய சிரமங்களை குறைத்ததன் பயனை, இதை அவர்கள் உணர்ந்து வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கிக்கொண்டார்கள். இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் தேசத்தில் இருக்கக்கூடிய கஷ்டமான நிலையில் அரசாங்கம் உறுதியுடன் இருக்கவேண்டியது அவசியம். மக்கள் எப்பொழுதுமே அரசாங்கத்தினுடைய நியாயமான நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதற்குத்தான் மத்திய சர்க்காருடைய சிப்பந்திகளின் வேலை நிறுத்தம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஆகவே, இனிமேலாவது இம்மாதிரி தேசத்திற்கு பல துன்பம் கொடுக்கக் கூடிய செயல்களில் ஈடுபடும்பொழுது சம்பந்தப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களும், தொழிற் சங்கத் தலைவர்களும் கொஞ்சம்





நல்ல முறையில் யோசித்து எதிர்கால நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அதற்கு இப்பொழுது நடந்த வேலை நிறுத்தம் எப்பொழுதும் ஒரு எடுத்துகாட்டாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக நமது ராஜ்யத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் கொண்ட கமிட்டியானது பல கூட்டங்கள் கூடி முன்னேற்றத்திற்கு வேண்டிய கவனம் செலுத்திவருகிறது. மேல் நாடுகள் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறதோ அந்த அளவுக்கு நம்முடைய தேசமும் முன்னேற வேண்டும், சுயமாக முன்னேறக்கூடிய பொருளாதாரம் இயங்க வேண்டும், அதாவது 'செல்ப் ஜெனரேடிங் எகானமி' என்ற அளவிலே நம்முடைய தேசம் சீக்கிரமாக விளங்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தயார் செய்யப்படுகிறது. தயார் செய்யப்படுகிற இந்தத் திட்டமானது மிக அதிகம் என்று ஒரு சிலர் குறிப்பிடுகிறார்கள். இம்மாதிரி பெரிய திட்டம் போடுவதற்கு நம்மிடத்தில் பணம் இல்லையே, அயல் தேசங்களுக்குச் சென்று கடன் வாங்கவேண்டியிருக்கிறதே என்றெல்லாம் இதுபற்றி ஒரு சிலர் குறை கூறுகிறார்கள்.

(ஸ்ரீமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் தலைமை வகித்தார்.)

மற்றொரு கட்சியினர் நம்முடைய ராஜ்யத்திற்கு மட்டும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,000 கோடி ரூபாய் செலவில் திட்டம் தயார் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். திட்டம் பெரிது என்று சொல்லக்கூடியவர்களும் இன்னும் பெரிய திட்டமாக போடவேண்டும் என்று சொல்லக் கூடியவர்களும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு நம்முடைய அரசாங்கம் போடும் திட்டங்களை குறை கூறிக் கொண்டிருப்பதை நாம் பல இடங்களிலே பார்க்கிறோம். இது மக்களுக்கு மிக ஆச்சரியத்தை கொடுக்கிறது. திட்டம் பெரியதாகப் போட வேண்டும் என்று சொல்லக்கூடியவர்களும், திட்டமே கூடாது என்று சொல்லக்கூடியவர்களும் எவ்வாறு ஒன்றாக இயங்குகிறார்கள், எவ்வாறு ஒரே முறையிலே பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தை குறை கூறுகிறார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய நோக்கம் அரசாங்கத்தை ஏதோ குறை கூறவேண்டும் என்பதாக இருக்கிறதே தவிர, நியாயமான உண்மைகளை கருத்தூன்றி கவனித்து அபிப்பிராயம் கூறுவது இல்லை என்று நினைப்பதற்கு இடம் கொடுக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் நம்முடைய தேசத்தின் ராஷ்டிரபதி அவர்கள் நம்முடைய ராஜ்யத்திற்கு வரக்கூடிய சந்தர்ப்பத்தில் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய ஒரு அரசியல் கட்சியானது அவருக்கு கருப்புக் கொடி காட்டவேண்டுமென்று தீர்மானம் செய்திருந்தது நம்முடைய மாகாண மக்கள் எல்லோருக்கும் பெரிய வருத்தத்தைக் கொடுத்தது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நல்ல வேளையாக அவர்கள் கடைசி நிமிஷத்திலாவது

[Sri N. Mahalingam] [8th August 1960

ஒரு சரியான முடிவு செய்து இந்த இயக்கத்தை வாபஸ் வாங்கிக் கொண்டதுபற்றி நான் சந்தோஷப்படுகிறேன். மொழிக் கொள்கை சம்பந்தமாக நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் மிக விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 1965-ம் வருஷத்திற்கு பிற்பாடும் ஆங்கிலம் தொடர்ந்து தேசீய மொழியாக இந்தியுடன் இணைந்திருக்கும் என்று சொல்லியிருக்கிறார். இந்தியை தேசீய மொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தேசீய மொழி அல்ல, நிர்வாக மொழி.

SRI N. MAHALINGAM : இந்தியை நிர்வாக மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்று வற்புறுத்த வேண்டிய காரணம், நமது தேசத்தில் பெருவாரியான மாகாணங்களில் இருக்கக்கூடிய அதிகப்படியான மக்கள் பேசக்கூடிய மொழி
10-10 a.m. இந்தி என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. ஆனால் இப்பொழுது இந்தி பேசாத மற்ற மாநிலக் குழந்தைகள், மூன்று பாஷைகள், லிபிகள், படிக்க வேண்டியிருக்கிறது. தாய்மொழி அல்லது பிராந்திய மொழி, தேசீய மொழியாகிய இந்தி, ஆங்கிலம். இந்தக் குழந்தைகளின் சிரமத்தைக் குறைக்கவேதான், இந்தியை ரோமன் லிபியில் வைக்க வேண்டும் என்பது. முன்பு சேனையில், ரோமன் லிபியில்தான் இந்தி போதிக்கப்பட்டது. ரோமன் லிபியாகச் செய்யும்போது, அதற்கேற்ப, தற்கால அவசியத்திற்கேற்ப, டைப்ரைட்டர்கள், மற்றும் பல இயந்திரங்கள், ரோமன் எழுத்துக்களிலேயே ஏற்படுத்திக் கொண்டால், நிர்வாகத்தை சுலபமாக நடத்த முடியும். தேசீய மொழியைப் பற்றியவரை ஒரு கட்சியார் அபிப்பிராயபேதம் கொண்டிருப்பது, அவர்களுக்கு இன்னமும் பூரணமான, விசாலமான சிந்தனை வரவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. அவர்களும் தேசீயமொழியின் அத்தியாவசியத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தாய் மொழியின்மூலம் கல்லூரிப் போதனைகள் செய்ய நடவடிக்கைகள் எடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். அந்த நடவடிக்கைகளை கூடிய சீக்கிரம் எல்லா இடங்களிலும் அமுலுக்கு கொண்டு வரவேண்டும் என்றும், அந்தத் துறையில் அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம் பிராந்திய மொழியாகிய தாய் மொழி, சட்ட மன்றங்களிலும், கல்லூரிகளிலும் மற்ற விஷயங்களிலும், அமுலாக்கப்பட வேண்டிய திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் இராஜ்ய சர்க்கார் சென்ற இரண்டாவது திட்ட காலத்தில் செய்திருக்கும் பல காரியங்களைப் பார்த்தால், தேசத்திலேயே நாம் முதல் இடம் வகிக்கிறோம் என்பது தெரியும். சிலர் நாம் பிற்போக்காக இருக்கிறோம் என்கிறார்கள். பிற்போக்கு என்று சொல்வதே சிலருக்குப் பொழுதுபோக்காக இருக்கிறது. அவர்கள்



8th August 1960] [Sri N. Mahalingam]

வாதத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை; புள்ளிவிவரங்கள் மாறாக இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நம் ராஜ்யத்திலே இருக்கக்கூடிய 'தார் ரஸ்தாக்கள், மைல் கணக்கை எடுத்துக்கொண்டால்', நம் ராஜ்யம் முதல் இடம் வகிக்கிறது. கனம் லாஸர் அவர்கள் சொன்னார்கள், மின்சார வசதியளிக்கப்பட்ட கிராமங்களை எடுத்துக்கொண்டால், நம் ராஜ்யம் முதல் இடம் வகிக்கிறது என்று. அதேபோல், தொழில் கல்வியை எடுத்துக்கொண்டாலும், எஞ்ஜினியரிங் காலேஜ், பாலிடெக்னிக் இவைகள் நம் ராஜ்யத்தில் அதிகமாக இருந்துவருகிறது என்பதை எல்லோரும் அறிவோம். அப்படி பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டிருக்கும் அளவுக்கு நம் ராஜ்ய அமைச்சரவை நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை இந்த சமயத்தில் பாராட்ட விரும்புகிறேன். அதே சமயத்தில், இன்னும சில விஷயங்கள் அதிக அவசியமாக இருக்கின்றன. அவற்றையும் அமைச்சரவை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மூன்றாவது திட்டத்தில் முதலாவதாகச் செய்யவேண்டியது ஒன்று இருக்கிறது. அதாவது நம் ராஜ்யத்தில் இப்பொழுது இரண்டே சர்வகலாசாலைகள்தான் இருக்கின்றன, ஒன்று சென்னை சர்வகலாசாலை, மற்றொன்று அண்ணாமலை சர்வகலாசாலை. இன்னமும் இரண்டு சர்வகலாசாலைகள், மதுரையில் ஒன்றும், கோவையில் ஒன்றும் ஏற்படுத்த வேண்டும். சர்வகலாசாலை நிதிக் கமிஷன் புது சர்வகலாசாலைகளுக்கு எல்லா வசதிகளும் கொடுக்க இருக்கிறது. அப்படி நாம் புது சர்வகலாசாலைகளை ஏற்படுத்தாவிட்டால், மத்திய சர்க்கார் கொடுக்கும் பணத்தையும், யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் கொடுக்கும் பணத்தையும் நாம் பூர்ணமாகப் பெறமுடியாது. ஆகவே, சீக்கிரமாக அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கோவையில் ஒரு சர்வகலாசாலை வைக்க, அங்கு ஒரு வைத்தியக் கல்லூரிதான் பாக்கி. அதையும் சர்க்கார் சீக்கிரமாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நம் ராஜ்யத்தில் பல பெரிய நகரங்கள் ஏற்பட்டுவிட்டன. மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் போன்றவைகள் பெரிய நகரங்களாகிவிட்டபோதிலும், அங்கு எல்லாம் நகர சபைகளே இருக்கின்றன. அவைகள் அதிக வளர்ச்சியடைந்துவிட்ட காரணத்தினால், அங்கெல்லாம் கார்ப்பொரேஷன்கள் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம் ராஜ்யம் தொழில் வளர்ச்சியில் முன்னேறியிருக்கும் காரணத்தால், அவற்றிற்கு பூரணமாக மின்சாரம் கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கு இங்கே ஒரு அடாமிக் ப்ளாண்ட் வேண்டும்.

ரேணிகுண்டா முதல் சென்னை வரை, ப்ராட் கேஜ் இரண்டு லைன்கள் இருக்கும்படி அமைக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் கனிப் பொருள்கள், 'ரா மெடீரியல்ஸ்', பல பிராந்தியங்

களிலிருந்தும் இங்கே வந்து சேர வசதியாக இருக்கும். இத்துடன் கவர்னர் பெருமான் உரையை ஆமோதித்து, என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri P. S. CHINNADURAI:** மதிப்பிற்குரிய சபைத் தலைவியவர்களே, கவர்னர் பெருமான் உரையில் மக்களது அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசிகள் நியாயமான முறையில் வைக்க திட்டமான நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா என்று குறிப்பிடவில்லை என்பதற்காக வருந்துகிறேன். சமீபத்தில் நடைபெற்ற மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலை நிறுத்தம் மிகவும் சுமுகமாக முடிந்துவிட்டது என்பது குறித்து கவர்னர் உரையில் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள். அப்படித்தான் ஒரு பொய்யான மகிழ்ச்சியிலே (குறுக்கீடு)—தவறான மகிழ்ச்சி என்று மாற்றிக்கொள்ளுகிறேன்—நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த மாதிரித் தவறான மகிழ்ச்சியிலே நாம் ஆழ்ந்திருப்பது எத்தனை காலத்திற்கு நடக்கும் என்று நினைத்துப் பார்க்க வேண்டும். மத்திய சர்க்காரின் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தது, விளையாட்டாகவோ, அல்லது பொழுதுபோக்காகவோ, அல்லது அரசியல் சூழ்ச்சியோ அல்ல. ஏன் வேலை நிறுத்தம் செய்தார்கள், அவர்கள் குறைகள் எதுவாக இருந்தது என்பதை ஆழ்ந்து பார்க்க வேண்டும். அப்படி அவர்கள் என்ன கோரினார்கள்? அவர்கள் கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை. விலைவாசி ஏற்றத்திற்குத் தக்கவாறு, விலைவாசிப் புள்ளிகளோடு கிராக்கிப் படியை இணைக்க வேண்டும் என்பதுதான். விலைவாசி ஏறாது என்ற ஆறுதலைச் சொன்னார்கள். உண்மையிலேயே அந்த ஆறுதலில் நம்பிக்கை வைத்திருந்தால், விலைவாசிகளோடு இணைக்கச் சம்மதித்து இருப்பார்கள். ஆனால் ஏன் அதை மதிக்கவில்லை? அது அவர்களுக்கே தெரியும், விலைவாசிப் புள்ளிகள் உயர்ந்துகொண்டேதான் போகும் என்று. இரண்டாவது திட்டத்தில் அப்படித்தான் நடந்தது. மூன்றாவது திட்டத்திலும் விலைவாசிகள் ஏறிக்கொண்டேதான் போகும் என்று அவர்களுக்குத் தெரியும். ஆகவேதான் விலைவாசிப் புள்ளிகளோடு கிராக்கிப் படியை இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்கள். மத்திய சர்க்கார் ஊழியர்களின்பேரில் அவர்கள் வேலை நிறுத்தத்திற்கு காரணமாக இரண்டு குற்றச் சாட்டுக்களைச் சுமத்தினார்கள். ஒன்று, அது மக்களுக்கு எதிரான போராட்டம் என்பது. மற்றொன்று, சீனர்கள் ஆக்ரமித்திருக்கும் வேளையிலே, பீதிகொண்டிருக்கும் வேளையிலே, மறைமுகமான தூண்டுதலால், செய்கிறார்கள் என்று சொல்லத் தயங்கவில்லை. உண்மையிலேயே, சீனர்கள் ஆக்ரமிப்பதற்கு யார் காரணம்? அது நம் நாட்டிலே நேர்ந்ததற்கு யார் பொறுப்பு? இந்த நாட்டை ஆட்சி புரியும் காங்கிரஸ்காரர்களே இந்த ஆக்ரமிப்பிற்கு பொறுப்பே அன்றி வேறு யாரும் இல்லை. அவர்கள்தான் சொன்னார்கள், "இவர்கள் நம் சகோதரர்கள், நம் நண்பர்கள்; இந்தி—சீனி பாய் பாய்," என்று கோஷம் போட்டு, நாட்டிலே





அவர்கள் நம் நட்பைச் சந்தேகிக்காதவாறு, மக்கள் நடந்துக் கொள்ள வேண்டும் என்று கூறிய இந்திய அரசாங்கம், காங்கிரஸ் கட்சியே சீனர்கள் ஆக்ரமிப்பிச் செய்வதற்குக் காரணம், பொறுப்பாளிகளே அன்றி வேறு யாரும் இல்லை என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இவர்கள் திறமைக்கு எடுத்துக்காட்டாக, சபைத்தலைவி அவர்களே, தங்கள் மூலமாக, இதைச் சமர்பிக்க விரும்புகிறேன்; 1947-ல் இவர்களிடம் ஒப்புவிக்கப்பட்ட நிலப் பரப்பின் அளவு என்ன, இப்பொழுது 1960-ல் இவர்கள் வைத்திருக்கும் நிலப் பரப்பின் அளவு என்ன? 1947-ல் இருந்த, ஒப்படைக்கப்பட்ட நிலப்பரப்பில் 12,000 சதுர மைல்கள் அன்னியருக்கு இழந்து விட்டிருக்கிறார்கள். தங்கள் திறமையைக் குறித்து மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி, தங்கள் முகத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால் இந்த 12,000 சதுர மைல் நிலத்தையும் திருப்பிக் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது மக்களுக்கு எதிராக போராட்டத்தை நடத்துகிறார்கள் என்று சொல்லப்பட்டது. சமீபத்தில் மத்திய சர்க்கார் ஊழியர்கள் நடத்திய போராட்டம் ஒரு மாபெரும் போராட்டமாகும். விலைவாசிகள் அதிகரித்துவிட்டது என்று அவர்கள் போராடினார்கள். விலைவாசி உயர்வைத் தடுக்க வேண்டும் என்றும், விலைவாசி உயர்வுக்கேற்றபடி அவர்களுடைய கிராக்கிப்படியை உயர்த்த வேண்டும் என்றும் அவர்கள் பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். அப்படிப்பட்ட விலைவாசியின் உயர்வால் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அப்படி உயர்ந்து போய் விட்டது என்று அவர்கள் கூறிக்கொண்டேதான் இருக்கிறார்கள். ஆனால் இந்த சர்க்காரோ அல்லது மத்திய சர்க்காரோ அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்பது தெரியவில்லை. இதைப்பற்றி பல வருஷங்களாக மக்கள் கூறிக்கொண்டே வந்திருக்கிறார்கள். இந்த ராஜ்ய சர்க்காரும், மத்திய சர்க்காரும் சேர்ந்து அதைத் தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதைத் தடுக்க எடுத்துக்கொண்ட முயற்சி என்ன? அதன் பலன் என்ன என்பதையெல்லாம் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கனம் லால்குடி அங்கத்தினர் அவர்கள் பேசும்போது விலைவாசிகள் இருபது சதமானம் உயர்ந்துவிட்டது என்று சொன்னார். அப்படிச் சொல்வதை என்னால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. விலைவாசிகள் சாதாரணமாக ஐம்பது சதமானம் உயர்ந்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். எல்லா பண்டங்களின் விலைவாசிகளும் கிட்டத்தட்ட ஐம்பது சதமானம் உயர்ந்திருக்கிறது. உணவு பண்டங்களும் சரி, நூல் விலையும் சரி, எல்லாம் ஐம்பது சதமானம் உயர்ந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த ஓராண்டு காலத்திற்குள் உள்ள நிலைமையைப் பார்த்தால் சுமார் ஐம்பது சதமானம் உயர்ந்திருப்பது நன்றாகத் தெரியவரும். அந்த ஏற்றத்தைத் தடுக்க இந்த ராஜ்ய சர்க்காரோ அல்லது மத்திய சர்க்காரோ என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அல்லது இந்த ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு என்ன ஆலோசனையைச்

சொன்னார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன். ஆனால் கனம் அமைச்சர் சொல்லுகிறார், நூல் விலை உயர்ந்துவிட்டது என்று. மில் முதலாளிகளைக்கூட்டி மகாநாடு கூட்டுகிறார். அப்படிக் கூட்டி அவர்களை விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்று கெஞ்ச வேண்டியதாக இருக்கிறது. எப்படியாவது கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்களேன் என்று கேட்க வேண்டியதாக இருக்கிறது. இப்படி அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு அவர்கள் பத்து சதமானம் குறைத்துக்கொள்ளுகிறோம் என்று சொல்லுகிறார்கள். அதைக் கண்டு சர்க்கார் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் உண்மை நிலைமை என்னவென்றால் சுமார் ஐம்பது சதமானம் உயர்ந்திருக்கும்போது பத்து சதமானம் குறைக்கிறோம் என்று சொல்வதை வைத்துக்கொண்டு அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். இதைக் கண்டு ராஜ்ய சர்க்காரும் மத்திய சர்க்காரும் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்கள். இப்படி ஒவ்வொருவரும் தங்களுடைய மகிழ்ச்சியை பங்கிட்டுக்கொள்ளுகிறார்கள். இது சரியானதுதானா என்பதை அறிய வேண்டும். இப்படிப்பட்ட மில் முதலாளிகளுக்கு அவசரச் சட்டம் போட்டு விலையைக் குறைக்க வேண்டும் என்று சொல்வதற்கு அவ்வளவு துணிச்சல் இந்த சர்க்காருக்குக் கிடையாது. ஆனால் மத்திய சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அதற்கு தடை செய்யும் அளவில் உடனே அவசரச் சட்டத்தைப் போடுவதற்கு முன் வருகிறார்கள். மில் முதலாளிகளுக்கு அவசரச் சட்டம் போடாமல் இருக்கிறார்கள். அப்படிப் போடுவதற்கு சர்க்காருக்கு துணிச்சல் கிடையாது. மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய அளவில் இருக்கக்கூடிய மில் முதலாளிகளுக்கு ஏன் அவசரச் சட்டம் போட்டு விலைவாசியைக் குறைக்கச் சொல்லக் கூடாது என்று கேட்கிறேன். அப்படிப் போடாமல் இருப்பதற்குக் காரணம் சர்க்காருக்கு அவ்வளவு துணிச்சல் கிடையாது. அவர்களைக் கண்டு பயப்பட வேண்டியதாக இருக்கிறது. மில் முதலாளிகளுடன் இந்தச் சர்க்கார் ஒண்டிக்கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது. அதன் காரணமாக அவர்களுக்கு அவசரச் சட்டம் போட முடியாமல் இருக்கிறார்கள். ஆனால் மத்திய சர்க்கார் ஊழியர்கள் என்றால் அவர்களுக்கு உடனே அவசரச் சட்டம் போட்டு அவர்களுடைய வேலை நிறுத்தப் போராட்டத்தை உடைத்து நிறுத்த அவசரச் சட்டத்தைப் போடுகிறார்கள். அவர்களுடைய சங்கத்திற்கு தடை விதிக்கிறார்கள். அவர்கள் சங்கம் வைத்துக்கொள்வதற்கு உரிமை அளித்துவிட்டும், அவர்கள் பேசுவதற்கு உரிமை அளித்துவிட்டும், தங்களுடைய குறைகளை எடுத்துச்சொல்வதற்கு உரிமைகளை அளித்துவிட்டும், பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு உரிமை அளித்துவிட்டும், அதன் பிறகு பேச்சு வார்த்தை நடத்தக்கூடாது என்றும் சங்கம் அமைத்துக் கொள்ளக்கூடாது என்றும் சட்டம் போட்டு தடை செய்கிறார்கள். வேலை நிறுத்தத்தை தடை செய்ய திடீரென்று அவசரச் சட்டம் போடுகிறார்கள். இப்படிப் போடுவது ஜனநாயக நாட்டிற்குப் பண்பா என்பதை கவனிக்க வேண்டும். ஆனால் பண்டித நேரு என்ன சொல்கிறார் என்றால் இப்படி அரசாங்க ஊழியர்களை தடை செய்யக்கூடிய நிலைமை கம்யூனிஸ்ட் நாடுகளில் இருக்கிறது என்று சொல்கிறார். இப்படிப்பட்ட சட்டம்





போடுவது என்பது அமெரிக்க நாட்டிலோ அல்லது இங்கிலாந்திலோ கிடையாது. அங்கு இப்படிப்பட்ட சட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பண்டித நேரு என்ன சொல்லுகிறார் என்றால் கம்யூனிச நாடுகளில் அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதைத் தடை செய்ய சட்டங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார். இது ஜனநாயக நாட்டிற்கு ஏற்ற பண்பா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: On a point of order, Madam. The hon. Member is thinking that this House is the Central Parliament and he is speaking on the action of the Central Government. But this House forms part of the State Legislature and it has nothing to do with the Ordinance passed by the Central Government.

Temporary Chairman SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAN: மத்திய அரசாங்கத்தைப்பற்றி பேசக்கூடாது, ராஜ்ய சர்க்காரைப் பற்றியே பேசுங்கள். இந்த சர்க்கார் விஷயமாகப் பேசுங்கள்.

SRI P. S. CHINNADURAI: மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய வேலை நிறுத்தத்தைப்பற்றி கவர்னர் பெருமான் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டிருப்பதால் அந்த விஷயத்தை எடுத்துப் பேசுகிறேன். அப்படிப் பேசுவது தவறு என்று கருதினால் அதைப்பற்றி தீவிரமாக முடிவு கூறும்வரையில் நான் பேசுவதை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

Temporary Chairman SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAN: நீங்கள் தொடர்ந்து பேசலாம்.

SRI P. S. CHINNADURAI: இப்படிப்பட்ட உரிமைகளையெல்லாம் அமெரிக்க நாட்டிலும் இங்கிலாந்திலும் பறிப்பது இல்லை. இந்தியாவில் மட்டும் பறிக்கப்படுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன். கம்யூனிஸ்ட் நாடுகளில் இருக்கிறது என்றால் அதை ஏன் பின்பற்ற வேண்டும்? பண்டித நேருவுக்கு ஜனநாயக பண்பு வேண்டாமா? உண்மையிலேயே இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை கையாளுவது என்பது நியாயம் அல்ல. காங்கிரஸ் கட்சியும் சரி, அதைச் சார்ந்த தலைவர்களும் சரி இப்படிப்பட்ட காரியங்களை செய்வது சரியல்ல என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். வேலை நிறுத்தத்தை முறியடிக்க வேண்டும் என்று இந்த முறையைக்கையாளுவது சரியல்ல. அது இந்த நாட்டிற்கு உகந்தது அல்ல. இதனால் தொழில் சங்க இயக்கம் நாளடைவில் பாதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தடை செய்யும் அதே நேரத்தில் அடக்குமுறை அனுசரிப்பது அவ்வளவு சரியல்ல. போலீஸ் பலத்தை வைத்துக்கொண்டு வேலை நிறுத்தத்தை தடை செய்வதும் முறியடிப்பதும் அவ்வளவு நல்லதல்ல. இதனால் தொழில் சங்கம் பாதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட கொள்கையை அனுசரித்தால் தொழில் சங்கங்கள் நாட்டில் எப்படி முன்னேற்றமடையும் என்பதையும் கொஞ்சம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அதே சமயத்தில் 'வாலண்டரி ஆர்பிட்ரேஷன்' இஷ்டபூர்வமான மத்தியஸ்தம் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த முறையை அவர்கள்

கையாண்டார்களா என்று கேட்கிறேன். இப்படிப்பட்ட கொள்கையை அனுசரித்து வந்தால் அதனால் நாட்டிற்கு நன்மை அல்ல, தீமையைத்தான் விளைவிக்கும். நாடு எந்த விதத்திலும் பயனடையப்போவதில்லை. நம்முடைய அரசாங்கம் மிகவும் மோசமான நிலைமையில் போய்க்கொண்டிருக்கிறது. போலீசாரைக் கொண்டு அடக்குவதற்கு முற்படுகிறார்கள். மத்திய சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு அவர்களை உருட்டி மிரட்டி பயமுறுத்தி வேலை நிறுத்தத்தை முறியடித்திருக்கிறார்கள். அப்படி முறியடித்துவிட்டு வேலை நிறுத்தத்தை முறியடித்துவிட்டோம் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். அதைக்கண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள். அதைக் கண்டு சில அங்கத்தினர்களும் மகிழ்ச்சியை தெரிவித்தார்கள். அடக்கு முறையால் அடக்கினால் மகிழ்ச்சி அடையக் கூடியது அல்ல. அடக்கு முறை என்பது மிகவும் மோசமானது. மத்திய அரசாங்க ஊழியர்களுடைய குடும்பங்களை மிகவும் கேவலமாக நடத்தியிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்களை கைது செய்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கேவலமாக நடத்தியிருக்கிறார்கள். பயமுறுத்தி இருக்கிறார்கள் இப்படிப் பட்ட நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது என்பது ஜனநாயக முறைக்கு உகந்தது அல்ல. இந்த ராஜ்ய சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் மூலம் ஜனநாயக பண்பைக் கெடுத்து விட்டார்கள். இப்பொழுது வெற்றி கண்டுவிட்டோம் என்று நினைக்கலாம். ஆனால் இந்த நாட்டின் தொழில் சங்கச் சரித்திரத்தில் இதைப்பற்றி பொன்னெழுத்தால் எழுதப்படும். அவர்களுடைய தியாகத்தால் அவர்கள் பட்ட கஷ்டங்கள் எல்லாம் அந்த சரித்திரத்தில் எழுதப்படும். அது ஒரு உண்மை யான சரித்திரமாக இருக்கும் என்பதை இங்குள்ள மந்திரி களுக்கும், தலைவர்களுக்கும் வலியுறுத்திச் சொல்ல விரும்பு கிறேன்.

விலைவாசி கொடுமையைக் குறித்து நாட்டுமக்கள் மிகவும் அல்லல்பட்டு வருகிறார்கள். அந்த அல்லலைப் போக்குவதற்குரிய ஒரே ஒரு மார்க்கம் உற்பத்தியைப் பெருக்கவேண்டுவதுதான் என்று நான் கருதுகிறேன். விவசாய உற்பத்தியாகட்டும், இதர பண்டங்களுடைய உற்பத்தியாகட்டும் கணிசமாகப் பெருகினால் தான் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும். யுத்தத்தினால் சீர் அழிந்துபோன நாடுகளைப் பாருங்கள். ஜெர்மென் நாடு, இதாலி நாடு, பிரான்சு நாடு முதலிய ஐரோப்பிய நாடுகள் எல்லாம் இன்றைய தினம் இந்தியா போன்ற ஒரு நாட்டுக்குப் பல வகையிலும் உதவி செய்ய முன்வருகிறார்கள். அப்படி இருக்க நாம் ஏன் முன்னேறவில்லை என்றால் முன்னேற வேண்டும் என்று போதிய அக்கறையோடு நடவடிக்கை எடுத்துக்கொள்ளாத ஒரு கட்சி இங்கே இருப்பதுதான் என்று நான் சொல்வேன். முன்னேற வேண்டும் என்பதில் அக்கறை காட்டக்கூடிய ஒரு கட்சி இங்கே இல்லை. அல்லது அப்படி அக்கறை காட்டுகிற கட்சிகள் எல்லா வற்றையும் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டுள்ள தேசீய சர்க்கார் இந்த நாட்டில் இல்லை. அதுதான் நாம் முன்னேறாமல் இருப் பதற்குக் காரணம். சுதந்திரம் அடைந்தது முதல் கடந்த பதினான்கு ஆண்டுகளாக ஒரு கட்சி பதவியில் இருந்து வருகிறது:





அவர்கள் நாட்டை சீர்குலைத்து வரும் உணவுப் பிரச்னையைத் தீர்த்தாரில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு பல தொழில்களையும் வளர்ப்பதற்கு மார்க்கத்தைக் கண்டாரில்லை. ஆகவே இப்படி முக்கியமான பிரச்னைகளில் நம் சர்க்கார் தவறி இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முன்பு மின்சாரத்தில் மிகவும் மகோன்னதமான நிலைமையில் இருப்பதாக கூறினார்கள். நம் ராஜ்யம் மின்சாரத்தைப் பொறுத்த வரையில், மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில் எந்த நிலைமையில் இருக்கிறது என்பதைப் பார்த்தால் ஒவ்வொரு குடி மகனுடைய உள்ளமும் திடுக்கிடும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் இதற்கு முன்னால் 3-வது நிலையில் இருந்த நம் ராஜ்யம் ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் ஐந்தாவது நிலைக்குத் தள்ளப்படுகிறது. நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் 12-வது நிலைக்குத் தள்ளப்படுகிறது. இதுதான் முன்னேற்றம் அடைந்து வருகிறோம், முன்னேற்றம் அடைந்து வருகிறோம் என்று சொல்லிக் கொள்வதன் பயனா என்று கேட்கவிரும்புகிறேன். "நம் ராஜ்யம் மிகவும் பிற்போக்காக இருக்கிறதென்று சொல்லிக்கொள்வதில் சிலருக்கு ஆனந்தம்" என்று சொன்னார்கள். "முற்போக்காக இருக்கிறது, முற்போக்காக இருக்கிறது" என்று சொல்லி ஏமாற்றிக் கொள்வதில் சிலருக்குப் பிரமை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முற்போக்காக இருக்கிறோம் என்றால் முன்பு இருந்த நிலையைவிட ஒன்றாவதாக, இரண்டா வதாக நாம் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் அடைந்திருக்க வேண்டும். விவசாய நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரை யிலாவது முன்னேற்றம் அடைந்து இருக்கவேண்டும். ஆனால் இந்த இரண்டிலும் பின்னேறி இருக்கிறோம் என்றால் இதற்குக் காங்கிரஸ் கட்சிதான் காரணம். இந்த ராஜ்ய சர்க்காருக்கு மத்திய சர்க்காரில் போதுமான அளவுக்குச் செல் வாக்கு இல்லை. செல்வாக்கு இருக்குமானால் அதை நாம் பலகையில் பார்க்கலாம்.

தூத்துக்குடி துறைமுக விஸ்தரிப்புக்கான ஏற்பாடுகள் நடக் கிறது என்று பார்த்தேன். காணவில்லை. ஏன் இல்லை? இந்த சர்க்காருக்கு செல்வாக்கு இல்லை, அதனால் இல்லை என்று நான் பதில் கொடுக்கிறேன்? அப்படி இல்லையென்றால் அதற்கு அவர்கள் பதில் கொடுக்கவேண்டும். தொழில் கல்லூரிகளை, விவசாயக் கல்லூரிகளை அதிகப்படுத்தவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை விவசாயக் கல்லூரியில் சேர்க்க முடியாமல், தொழில் கல்லூரியில் சேர்க்க முடியாமல், பாலி டெக்னிகில் சேர்க்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இது கொடுமை என்று கூறவேண்டும். இந்தக் கொடுமையைப் போக்க என்ன மார்க்கத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். வைத்திய கல்லூரியைப் பொறுத்தவரை யில் அதிக மாணவர்கள் படிக்க இடம் கண்டுபிடித்துவிட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்படிக் கண்டுபிடித்தார் கள். இணைப்பு இந்திய வைத்தியக் கல்லூரியை எடுத்துவிட்டு அங்கே இந்த வைத்திய மாணவர்கள் படிக்க ஏற்பாடு செய்திருப் பதாக சொல்கிறார்கள். இணைப்பு இந்திய வைத்தியக் கல்லூரியை எதற்காக எடுக்கவேண்டும்? சித்த வைத்தியத்திற்கும், யுனானி

வைத்தியத்திற்கும், ஆயுர்வேத வைத்தியத்திற்கும் தனித்தனியாக கல்லூரிகள் ஏற்படுத்த வேண்டும். வைத்திய கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தியிருக்கவேண்டும்.

பரம்பிக்குளத் திட்டம் சம்பந்தமாக ஒரு வார்த்தை. பரம்பிக்குளத் திட்டம் நல்லபடியாக நிறைவேற்றப்படும் என்பதற்கான அறிகுறிகள் இப்போது தென்படுகின்றன. மேலும் அதை விஸ்தரிப்பதற்கு ஒரு மகத்தான யோசனையை ஸ்ரீ. மகாலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள். ஏற்கனவே அரசாங்கம் இதனைக் குறித்து ஆலோசித்துக்கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். இந்தத் திட்டத்தின்மூலமாகத்தான் கோயம்பத்தூர் ஜில்லாவின் பஞ்சப் பிரதேசம் வளம்பெறவேண்டும். ஆகவே இதனை நல்லபடியாக ஆலோசிக்கவேண்டும் என்றும், இந்தத் தாலூக்காகளுக்கு சரியானபடி விநியோகிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பாசன வசதிகளுக்காகப் பல்வேறு குட்டைகளுக்கு தண்ணீர் கொடுக்கப்படுகிறது. பரம்பிக்குளம் திட்டத்தைக்கொண்டு இதைக் கொடுக்க ஆலோசிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக ஒரே ஒரு வார்த்தை. பஞ்சாலைத் தொழிலாளர்கள், முதலாளிகள் இடையே ஊதியம் சம்பந்தமாக எழுந்த ஒரு தகராறை சுமுகமான முறையில் தீர்த்து வைத்ததற்காக ராஜ்ய சர்க்காரையும், தொழில் அமைச்சர் அவர்களையும் பாராட்டி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பி.அண்டு.ஸி. மில்தான் விதிவிலக்காக இருக்கிறது. அவர்களும் கூட அதைக் கடுமையாக எதிர்க்க முன் வந்ததற்குக் காரணம் மத்திய சர்க்கார் தன் சிப்பந்திகளை ஒடுக்க கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டதுதான். இந்த மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டியது சர்க்காரின் கடமை. மேலும் மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் ஸ்ட்ரைக் சம்பந்தமாக 4-வது செக்ஷன் படி தொடரப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட்டது குறித்து என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அனுதாபச் சலுகையை இன்னும் கொஞ்சம் விஸ்தரிக்க வேண்டும். ஏற்கனவே தண்டிக்கப்பட்டவர்களுடைய தண்டனையையும் ரத்து செய்து அவர்கள் வேலை பெறுவதற்குரிய வாய்ப்பையும் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் தொழில் உறவு நன்கு சீரமையும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **Sri K. S. ARDHANAREESWARA GOUNDER** : கனம் சபைத் தலைவி அவர்களே, இந்தச் சபை முன் நமது கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு தெரிவிக்கப்பட்ட நன்றி அறிவிப்புப் பிரேரணையின்மீது சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக எங்கள் சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரையில் அங்கு ஒரு பெரிய அலுமினிய தொழிற்சாலையும், இரும்பு தொழிற்சாலையும் ஏற்படுத்துவதற்கு வேண்டிய திட்டங்கள் கவர்னர் அவர்களுடைய உரையில் இருப்பது பற்றி நான் வரவேற்கிறேன். திரு. எம். பி. சுப்ரமணியம் அவர்கள் கையை விரிக்கிறார்கள். இருக்கக்கூடிய நிலைமையை சற்று நன்றாக உணரவேண்டும். ஒரு பெரிய திட்டம் நிறைவேற்ற



வேண்டுமென்றால் அது அவ்வளவு சுலபத்தில் முடியக்கூடிய காரியம் அல்ல. கவர்னர் உரையில் எடுத்தவுடன் மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். நாமும் இதை நன்றாக உணரவேண்டும். வேலை நிறுத்தம் ஏற்படுவதன் காரணத்தினால் எவ்வளவு தொழில்கள் பாதிக்கப்படுகின்றன, எவ்வளவு குந்தகம் ஏற்படுகிறது என்பதை உணரவேண்டும். அதுவும் தவிர நாட்டுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் உணரவேண்டும். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ. சின்னதுரை அவர்கள் ஊழியர்களுடைய இயக்கத்தை சர்க்கார் நசுக்கி விட்டார்கள் என்று சொன்னார்கள். உண்மையிலேயே ஒரு நல்ல பாடம் கற்பித்திருக்கிறார்கள், இந்தப் போலித் தலைவர்களுக்கு. ஜீவனத்திற்காக என்று தலைமை வகித்து வருகிற போலித் தலைவர்களை நாட்டுமக்கள் அம்பலப்படுத்தி நல்ல பாடம் கற்பித்து விட்டார்கள் என்றே சொல்லவேண்டும். பொதுமக்கள் தங்கள் கடமையை உணர்ந்து நடந்து கொண்டதற்குப் பாராட்ட வேண்டும். திரு. சின்னதுரை அவர்கள் தொழிற்சங்கம் முன்னேற வேண்டும் என்றார்கள். தொழிற்சங்கமானது நல்ல முறையில் நடந்து கொண்டால் இது வரவேற்கவேண்டியதுதான். அதிலும் தொழிற்சங்கங்களைப் பொறுத்தவரையில் சர்க்கார் நல்ல முறையில் 10–30 a.m.
சில திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். தொழிலாளர்களுடன் தொழில் தகராறு ஏற்பட்டால் அதற்கு மத்தியஸ்தம் செய்ய டிரிபூனல் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது தவிர தொழிலாளர்களுக்கு நீதி மன்றம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் தொழிலாளர்கள் நலன்களைப் பாதுகாக்கவும், தொழிலாளர்களுடைய குடும்பங்களைப் பாதுகாக்கவும் இவைகளையெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தொழிற் சங்கத் தலைவர்கள் தங்கள் கட்சியைப் பலப்படுத்துவதற்காக தொழிலாளர்களை வேலை நிறுத்தத்திற்குத் தூண்டிவிடுகிறார்கள். மத்திய சர்க்கார் ஊழியர் வேலை நிறுத்தத்திற்கு இதுதான் காரணம். இம்மாதிரி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் நம் நாட்டிற்கு பெரும் பாதகம் ஏற்படும் என்பதை தொழிற்சங்கத் தலைவர்கள் உணர வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேலாவது தொழிற்சங்கத் தலைவர்கள் தூண்டுதலால் வேலை நிறுத்தம் ஏற்படுமாயின் அது நிச்சயம் வெற்றிபெறாது என்பதை சமீபத்தில் நடந்த மத்திய சர்க்கார் ஊழியர் வேலை நிறுத்தத்திலிருந்து தெரிந்துகொண்டிருப்பார்கள். ஆகையால் கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்களுடைய காலத்திலே மக்கள் நன்மையை கருதி இம்மாதிரி வேலை நிறுத்தத்தை நடைபெறாமல் பார்த்துக் கொள்வார் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக மேட்டூர் நீர்த்தேக்கத்தைப்பற்றி கவர்னர் பெருமான் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. ஸ்ரீனிவாச அய்யர் தெரிவித்தார்கள், காவேரி நதியில் உற்பத்தியாகும் கிளை நதியின் நீரை மைசூர் சர்க்கார் அணைக் கட்டி தேக்கி நம் மாகாணத்திற்கு தண்ணீர் வராமல் தடுத்து இருக்கிறார்கள் என்று. மைசூர் சர்க்கார், சென்னை—மைசூர் உடன்பாட்டிற்குப் புறம்பாக காவேரி நதியின் கிளை நதியின் தண்ணீரை

திருப்பி தேக்கி இருப்பதாக சொல்லப்படுகிறது. இதைப்பற்றி நிபுணர்களைக் கொண்டு பரிசீலித்து இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தண்ணீர் மட்டம் குறைவாக இருப்பது கவலையாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அநேக ஆண்டுகளில் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் தண்ணீர் மட்டம் முழு அளவிற்கு வரும். கவர்னர் பெருமான் கூட அவர்கள் உரையில் இந்த நீர்த்தேக்கத்தைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். சீக்கிரத்தில் தண்ணீர் நிரம்பிவிடும் என்று தெரிவித்தார்கள். ஆனால் இன்றே மேட்டூர் தேக்கம் 95 டிகிரி உயர்ந்து இருக்கிறது. அது பாராட்ட வேண்டிய விஷயம். தஞ்சாவூர் பிரதேசத்திற்கு மேட்டூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் வேண்டிய அளவு தண்ணீர் விடப்படுகின்றது. ஆனால் மேட்டூர் வாய்க்காலில் தண்ணீர் குறைந்து அதாவது 1200 கன அடியிலிருந்து 600 கன அடிக்கு ஓடுகிறது. சேலம், கோயம்பத்தூர் முதலிய இடங்களில் உள்ள விவசாயிகள் நல்ல முறையில் அதிக உற்பத்தி செய்கிறார்கள். இம்மாதிரி 1200 அடியிலிருந்து, 600 அடிக்கு தண்ணீர் குறைந்திருப்பதனால் அவர்களுடைய நஞ்சை பயிர்கள் பாதிக்கப்படுகிறது. அவர்கள் சரியான பருவத்தில் நாற்றுக்கால் நடமுடிவதில்லை. ஆகையால் பழயபடி தண்ணீர் 1200 கன அடிக்கு உடனடியாக உயர்த்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக உணவு உற்பத்தியைப்பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ரசாயன உரம் அத்தியாவசியமானது. ஆனால் அந்த ரசாயன உரம் எங்கு இருக்கிறது? ஒவ்வொரு ஜில்லாவிலும் சர்க்கார் கிடங்கில் வினியோகிக்கப்படாமல் தேங்கியிருக்கிறது. இந்த உரங்களை வினியோகம் செய்வதற்கு கூட்டுறவு சொசைடிமூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவைகள் பல இடங்களில் நல்ல முறையில் வினியோகம் செய்யப்படாமல் இருக்கின்றன. சர்க்கார் உர வினியோகம் பொறுத்தவரையில் மாதத்திற்கு ஒரு முறை கொடுக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், மூன்று நான்கு மாதத்திற்கு வேண்டிய கோட்டாவை உடனடியாக விவசாயிகளுக்கு கொடுத்தால் அவர்கள் சரியான பருவத்தில் பயிர்த் தொழில் செய்வதற்கு நலமாக இருக்கும். கனம் அங்கத்தினர் லாசர் அவர்கள்கூட அதிகமான உற்பத்தி பெருக்குவதற்கு உரம் அத்தியாவசியம், ஆகையால் அதை உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆகவே விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உடனடியாக ஜில்லா கலெக்டர்கள் உரத்தை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அதிவிரைவில் வினியோகத்திற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறு கைத்தொழில்களைப்பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிறு கைத்தொழில்களைப் பொறுத்தவரையில் நமது மாகாணம் மற்ற மாகாணங்களைவிட மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது. அதற்கு என்ன காரணம்?



பட்டறைகள் இல்லாத காரணம் அல்ல. சிறு தொழில்களுக்கு மூலப்பொருள் கிடைப்பதில்லை. சாதாரணமாக என் தொகுதியில் கொளத்தூரில் கொல் தச்சு கூட்டுறவு சங்கம் இருக்கிறது. ஒரு சிறு தொழில் ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தத் தொழிலுக்கு இரும்பும், மரமும் கிடைக்காததினால், அங்குள்ள மக்கள் மனம் உடைந்து உற்சாகம் காட்டவில்லை. ஆகையால் சிறு கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். மேல் இடத்தில் கொடுக்கும்படியாக உத்திரவு போட்டாலும், கீழுள்ள அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். ஆகையால் சிறு தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் நல்ல முறையில் வினியோகிப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சேலத்தில் மோகனூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு சர்க்கார் அனுமதி கொடுத்தது பற்றி பாராட்டுகிறோம். அதற்கு வேண்டிய இயந்திரம் வாங்க அனுமதி கொடுத்ததற்கு சர்க்காரை மிகவும் பாராட்டுகிறோம். அடுத்தபடியாக கல்வியைப் பொறுத்தவரையில் இப்பொழுது பல இடங்களில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆரம்பப் பள்ளிகளும், உயர்தரப் பள்ளிகளும் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் எங்கே பள்ளிகளை அமைக்கலாம் என்று இடங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் சாதாரண பள்ளிகளைவிட தொழில் பள்ளிகளை அமைத்தால் நம் நாட்டில் தொழில் வளம் பெருகி தொழில் துறையில் அபிவிருத்தி அடைவார்கள் என்பதுதான். தொழிற்பள்ளிக்கூடம்—பாலிடெக்னிக் அமைத்தால் நம் நாடு தொழில் துறையில் முன்னேற முடியும். ஆகையால் நிறைய தொழிற்பள்ளிக்கூடங்கள் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri R. CHIDAMBARA BHARATHI : தலைவி அவர்களே, நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை என்று தமிழ் நாட்டில் ஒரு பழமொழி சதாகாலமும் சொல்லி வருகிறார்கள். கவர்னர் பெருமான் உரையிலே நீர்த்தேக்கங்களில் தண்ணீர் நிரம்பவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் இந்த உரையை எழுத ஆரம்பித்த சமயத்தில் தண்ணீர் நிரம்பவில்லைதான். ஆனால் அவர்கள் பிரார்த்தித்துக் கொண்டதின் பேரில் மழை பெய்து எல்லாக் குளங்களிலும் தண்ணீர் நிரம்பவேண்டிய முழு அளவிற்கு நிரம்பி இருக்கிறது. அவர்களுடைய வேண்டுகோள் வீணாகாமல் நிறைவேறியதற்கு விவசாயிகள் எல்லாரும் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். அதனால் அவர்களைப் பாராட்டுவதோடு அவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

அதேபோன்று அதில் யாராவது தவறு கண்டு பிடிக்க முற்பட்டால் கவர்னர் பெருமான் உரையைப் பற்றி தேசப் பற்று இல்லாத, தமிழ் அன்பில்லாத, தொழிலாளர் மீது அன்பில்லாத, அவர்கள் மீது இரக்கமில்லாத, ஏழைகள் படும் கஷ்டங்களை உணராத யாராவது ஒரு சிலர்தான் கவர்னர் பெருமான் உரை பற்றி இந்த சபையிலே குறைகூற முடியும் என்று நினைக்கிறேன்.

செய்யவில்லை. இவர்களின் தூண்டுதலின் பேரில்தான் வேலை நிறுத்தம் ஏற்பட்டது என்பதை மத்திய சர்க்கார் ஊழியர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பித்த அன்றே பத்திரிகைகளில் வந்த பல அறிக்கைகள் மூலம் பொது மக்கள் தெரிந்து கொண்டார்கள். ஆக, எதிர்கட்சிக்காரர்களை இந்த சபை சார்பில் மக்கள் சார்பில் அறைகூவி அழைக்கிறேன். ஒரு சில வருடங்கள் இந்த சர்க்காரை எதிர்க்கப்போவதில்லை, ஒரு சில மாதங்களாவது எதிர்ப்பதில்லை, சர்க்கார் திட்டங்களுக்கு ஒத்துழைக்கிறோம் என்று கூறினால், அவைகளை நிறைவேற்றிய பின்னர் இந்த நாட்டில் வறுமையிருந்தால், பண்புக் குறைவிருந்தால், ஒழுக்கக் குறைவு இருந்தால், இப்பொழுது இந்த சபையிலும் வெளியிலும் பேசிக் கொண்டிருக்கிறார்களே, அப்படி பேசினால் அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆகவே, நான் அரசியல் கட்சிக்காரர்களைக் கேட்பது என்னவென்றால், தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள் மீது உங்களுக்கு அன்பு இருக்குமானால், அவர்கள் உழைத்து உருக்குலைந்து நோய்வாய்ப்பட்டு மடிவதை மனதில் கொண்டு, அவர்களின் வருவாயை விட மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு ஊதியம் குறைவாக இருக்கிறது என்றெல்லாம் (மணி அடிக்கப்பட்டது) சொல்லி வேலை நிறுத்தம் போன்றவைகளை தூண்டி விடாமல் இருங்கள். அதோடு, விவசாயிகளுக்கு சரியான பங்கு கொடுக்க வேண்டுமென்று கூறுகிறீர்களா? ஆக, எதிர்கட்சிகள் ஒரு சில வருடங்களுக்காவது தங்கள் எதிர்ப்பை நிறுத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு கவர்னர் பெருமான் அவர்கள் உரையை வரவேற்கிறேன்.

*SRI M. P. SUBRAMANIAM: சட்டமன்ற தலைவி அவர்களே, இன்றைய தினம் நம் கவனத்தை எல்லாம் பெரிதும் ஈர்த்து இருப்பதும், மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் வரையில் முக்கியமாக குறிப்பிட்டிருப்பதுமான ஒரு பிரச்னை, இந்தியப் பிரதமர் நேரு அவர்களால் பாராளுமன்றத்தில் செப்டம்பர் 4-ம் தேதி இந்திய ஆட்சிமொழி பற்றி கொடுத்த வாக்குறுதியும், அதன் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டதாக கூறப்படும் இந்தியக் குடியரசுத் தலைவரின் உத்தரவும் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

SRI R. CHIDAMBARA BHARATHI: ஆன் எ. பாயின்ட். ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்கள் இன்று கேள்வி நேரத்தின் போது, மொழிப்பிரச்னை பற்றி விவாதிக்க இரண்டு தினங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன, அப்பொழுது அதுபற்றி பேசலாம் என்று கூறினார்கள். ஆகவே, இப்பொழுதும் அதுபற்றி பேசி நேரத்தை வீணாக்க வேண்டாம்.

Temporary Chairman SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAN: பொது விவாதத்தில் பேசும்போது எதையும் பேசலாம். கனம் அங்கத்தினர் தொடர்ந்து பேசலாம்.

SRI M. P. SUBRAMANIAM: கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருப்பது, செப்டம்பர் மாதம் 4-ம் தேதி நமது பிரதம மந்திரி தந்த கொள்கை விளக்கத்தின் அடிப்படையில் குடியரசு தலைவருடைய உத்தரவு அமைந்திருக்கின்ற





காரணத்தினால் மொழியால் ஏற்படக்கூடிய தொல்லைகள் யாவும் மறைவது மகிழ்ச்சிகரமான செய்தி என்று குறிப்பிட்டிருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. குடியரசுத் தலைவருடைய உத்தரவில் ஏற்பட்ட சந்தேகத்தை, அல்லது அதன் உண்மையான நிலை என்ன என்பதை இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு மட்டும்தான் இந்த உண்மை புலப்பட்டதா, மற்றவர்களுக்குப் புலப்படவில்லையா என்று கேட்கக் கூடும். அது மட்டுமல்ல, இதைப்பற்றி நான் துருவிப்பார்த்துவிட்டேன். அதில் தவறு ஒன்றுமில்லை. அவ்விதம் ஏதாவது இருக்குமானால், தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சிகளையும் அழைத்துப்பேசி அதற்காகப் போராடலாம் என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் கூறியிருப்பதைப்பார்த்து உண்மையிலேயே நான் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் உண்மை நிலை என்ன என்பதை உணர்வதற்கு தவறிவிடக்கூடாது என்பதற்காகத்தான், அதை நான் சற்று விரிவாக எடுத்துக் கூற விரும்புகிறேன். நாங்கள் கூறிய கருத்துப்படத்தான், மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் குடியரசு தலைவருடைய உத்தரவில் பிரதமர் தந்த வாக்குறுதியைப்பற்றி தெளிவாகச் சொல்லப்படவில்லை. இந்தி புகுத்தப்பட மாட்டாது என்ற உறுதி தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்று சொல்லியிருப்பதை நான் இந்த சபையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அதோடு மேற்கு வங்காளத்தில் அகில இந்திய மொழி பாதுகாப்புக் குழுவில் இருக்கக்கூடிய வல்லுநர்களும் அறிஞர்களும் இதே கருத்தைத் தான் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் தமிழகத்தில் இருக்கின்ற பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால் 'சுதேச மித்திரன்', 'தமிழ்நாடு', 'சுயராஜ்யா' போன்ற பத்திரிகைகள் இதே கருத்தையொட்டி தலையங்கங்கள் எழுதியிருக்கின்றன என்பதை இங்கே நாம் உணர வேண்டும். "இந்து" பத்திரிகையும் இதே சந்தேகத்தைச் செய்தித் தலைப்பாக கொண்டு செய்தியை வெளியிட்டிருந்தது. "மெயில்" பத்திரிகையின் டில்லி நிருபர், டெல்லி வட்டாரத்தில் அரசியல் தலைவர்களிடையே பிரதமர் கொடுத்த வாக்குறுதி குடியரசுத் தலைவரின் உத்தரவில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்ற அபிப்பிராயம் பரவலாக இருந்து கொண்டிருக்கிறது என்று எழுதியிருக்கிறார். இவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கண்ணோட்டத்தோடு இருப்பவர்களோ, விடுதலை உணர்ச்சியோடு இந்திய உபகண்டத்திலிருந்து பிரிந்து இருக்கவேண்டும் என்று எண்ணுபவர்களோ அல்ல என்பதை நாம் மனதில் வைத்துக்கொண்டு இந்தக் கருத்துக்களைப்பார்த்தால் இவைகளில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். இவைகளுக்கு எல்லாம் மேலாக நேரு அவர்கள் செப்டம்பர் 4-ம் தேதி கொடுத்த வாக்குறுதி என்ன என்பதை நாம் இந்த நேரத்தில் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். அவர் அன்று சொன்னது . . .

"Even after 1965 English will continue as associate or additional or alternative official language of the Indian Union and it will

[Sri M. P. Subramaniam] [8th August 1960

ultimately be the non-Hindi speaking people who will decide if and when Hindi can replace English as official language. In this regard Hindi speaking people have no right to say anything."

என்பதைத்தான் மிக தெளிவாக கூறியிருக்கிறார்கள். அதனுடைய பொருள் இந்தி பேசாத மக்களுக்குத்தான், இந்தி ஆங்கிலத்தின் உடைய இடத்தைப் பெறுவது எப்போது என்று நிர்ணயிக்கிற உரிமை உண்டு, இந்தி பேசாத மக்களுக்குத் தான் இதைப்பற்றி முடிவு செய்யக்கூடிய உரிமை உண்டு என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார். ஆனால் இவர் கொடுத்த வாக்குறுதி குடியரசுத் தலைவர் தந்த அறிக்கையில் அடங்கியிருக்கிறதா என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். எங்களுடைய சிறிய அறிவுக்கு எட்டிய வரையில் இதை ஆராய்ந்து பார்த்ததில், நேரு கொடுத்த வாக்குறுதி இதில் இல்லை என்றுதான் சொல்ல முடியும். குடியரசுத் தலைவரின் உத்தரவை இரண்டு பகுதியாகப் பிரிக்கலாம். ஒரு பகுதியை Preamble என்று சொல்லக்கூடிய முறையில் பிரித்துப்பார்க்கலாம். . . . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: தலைவி அவர்களே இந்த வாக்குறுதி அடங்கி இருக்கிறது என்று சொல்லும்போது கனம் அங்கத்தினர் அவர்கள் இம்மாதிரியான வாக்குறுதி இல்லை என்று மீண்டும் சொல்லுவதால் நிலைமை இன்னும் குழப்பமாகும். அவர்களே அதில் அடங்கி இருக்கின்றது என்று சொல்லும்போது நாம் ஏன் அதில் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்? இதனால் காலம்தான் வீணாகும்.

SRI C. N. ANNADURAI: இதிலே அடங்கியிருக்கிறதா இல்லையா என்பதைப்பார்த்துவிட்டு, இல்லையென்று தெரிந்து கொண்டால், எங்களோடு சேர்ந்துகொண்டு இதற்காக வேலை செய்யலாம் அல்லவா?

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் இதைப்பற்றி விளக்கமாக பத்திரிகை நிருபர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். நான் அதைப் பார்த்த வரைக்கும் அதில் ஜனாதிபதி அவர்களுடைய உத்தரவுக்கும், பிரதமருடைய உத்தரவுக்கும் கொள்கையில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறேன். ஆகவே கொள்கை கைவிடப்பட்டுவிட்டது என்று சொல்வதற்கில்லை. அதோடு கொள்கை கைவிடப்படவில்லை என்று உறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வாக்குறுதி விடப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருப்பதில் காலம்தான் வீணாகும், வீணான குழப்பமும் ஏற்படும்.

SRI M. P. SUBRAMANIAM: அமைச்சர் அவர்கள் கொடுக்கிற ஆறுதல் மொழியை நான் ஏற்றுக்கொள்கிறேன். குடியரசுத் தலைவர் அவர்களுடைய அறிக்கையில் இல்லை என்று வாதாடுவது, இவ்விதமான உறுதிமொழி இருந்திருக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கூறுவதற்காகத்தான். அதை ஈடு செய்கின்ற முறையில் பிரதமர் அளித்த உறுதியைப்பார்த்து உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் இதைச் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று சொல்வது சரியல்ல என்பதை சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதை நான்



8th August 1960] [Sri M. P. Subramaniam]

இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். அதை எடுத்துக்காட்டுவது என் கடமையுங்கூட என்று நான் கருதுகிறேன். குடியரசுத் தலைவரின் உத்தரவை நான் முன்பு குறிப்பிட்டதுபோல் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலில் இந்திய ஆட்சி மொழி குழுவின் சிபார்சுகளைப் பரிசீலனை செய்வதற்காக முப்பது பார்லிமெண்ட் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்தார்கள். அந்தக் குழு செய்த சிபார்சுகளைப்பற்றி முதலில் சொல்லப்பட்டிருக்கிறது. "ஸ்டேட்மெண்ட் ஆப் பாக்ட்ஸ்" என்ற முறையில் சிலவற்றை சொல்லி விட்டு இரண்டாவது பகுதியாக In exercise of the powers conferred by clause (6) of Article 344, the President . . . . . . issues the directions hereinafter appearing என்று ஆரம்பித்து அதற்குப் பின்னால் உத்தரவினுடைய உள்ளடக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உள்ளடக்கத்தில் நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதியைப்பற்றியோ அல்லது நேரு அவர்கள் குறிப்பிட்டபடி, அந்த வாக்குறுதிகள் எல்லாம் இன்னின்ன வகையில் செயல்படும் என்றோ, அதிலும் முக்கியமாக இதைப் பற்றி முடிவு செய்வதற்குத்தான் இந்தி பேசாத இடத்திலுள்ள மக்களுக்குத்தான் உரிமையுண்டு, அல்லது இதைப் பற்றி முடிவு செய்வதற்கு அவர்கள் தான் லாயக்கு என்பதைப்பற்றியோ ஒன்றும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் இங்கு கூற விரும்புகிறேன். தெளிவாகக் குறிப்பிட்டு காட்டவில்லை என்ற சந்தேகம் எங்களுக்கு மட்டும் ஏற்பட்டதல்ல. ஏதோ இதில் விடுதல் (omission) ஏற்பட்டு விட்டது என்று வேண்டுமானால் திருப்திக்காகச் சொல்லலாம். அதோடு இதில் முரண்பாடு ஒன்றுமில்லை என்றும் நமது அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள். ஆனால் அவர்களுக்கு ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்மையில் ஸ்ரீநகரில் மாநில சட்ட அமைச்சர்கள் மாநாடு நடந்தது. நமது நிதி அமைச்சர் அவர்களும் அதில் கலந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். அதில் கலந்துகொண்டு பேசிய மத்திய மந்திரி ஸ்ரீ சென் அவர்கள் குறிப்பிட்டிருப்பதையும் நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். சுப்ரீம் கோர்ட்டுகளில் இந்தி மொழியை கொண்டு வர வேண்டும். அவ்விதம் வரும்போது மாநிலங்களில் உள்ள உயர்நீதி மன்றங்களிலும் இந்தி மொழியை கொண்டுவர வேண்டியது அவசியமாகும் என்று வலியுறுத்திக் கூறியிருப்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அவர் குறிப்பிட்டிருப்பதாவது . . . .

"It will be a bad day for India when High Courts in the States begin to function in their respective regional languages."

'அதாவது, இந்தியாவுக்கு பெருங் கெடுங்காலம் எதிர்பார்த்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநிலத்தின் தாய் மொழியிலோ அல்லது அந்தந்த வட்டார மொழியிலோ அந்தந்த உயர்நீதி மன்றங்கள் நடந்தால் அப்போது கெட்ட காலம் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். குடியரசுத் தலைவர் அவர்கள் பிறப்பிக்கும் உத்தரவில் இவ்வாறுதான் இருக்கும் என்று தெரிந்துதான் இவ்விதம் பேசியிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை, அதில் நமது நிதி அமைச்சர்

[Sri M. P. Subramaniam] [8th August 1960

அவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்து என்ன என்பதையும் எடுத்துக் கூறியிருக்க வேண்டும். குடியரசுத் தலைவர் அவர்களின் உத்தரவில் Operative part என்ற பகுதியில் நேரு அவர்களுடைய வாக்
11 a.m. குறுதியைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதி எந்தவித முரண்பாடும் இல்லை என்று சொல்வதை நான் உண்மையில் ஒப்புக்கொள்வதற்கில்லை என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக ஒன்று சொல்லவேண்டுமானால் "Training of administrative personnel in Hindi medium" என்று குறிப்பிட்டு அந்தத் தலைப்பின் கீழ் "In accordance with the opinion expressed by the committee in service training in Hindi may be made obligatory for Central Government employees who are aged less than 45 years." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 45 வயதுக்குக் கீழே இருக்கக் கூடியவர்கள், மத்திய சர்க்கார் அலுவலகங்களில் பணியாற்றக் கூடியவர்கள் இந்தியைக் கட்டாயம் கற்றுக்கொள்ளவேண்டும். இதிலிருந்து என்ன வெளிப்படுகிறது? உறுதியாக மத்திய சர்க்கார் அலுவலகங்களில் பணியாற்றக் கூடிய 45 வயதுக்குக் குறைவாக உள்ளவர்கள் இந்தியைக் கற்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அது மட்டுமல்லாமல் இந்தியைப் பரப்ப ஆங்காங்கு தனிப்பட்ட ஸ்தாபனங்கள் இருந்து வருகின்றன. ஆனால் இனிமேல் ஒவ்வொரு மாநிலமும் அதிகார பூர்வமாக இந்தியைப் பரப்ப முயற்சி எடுக்க வேண்டுமென்று தாக்கீது பிறப்பிக்கின்றேன் என்று குறிப்பிட்டிருப்பதானது இந்தி பேசாத இடங்களில் இந்தியைப் புகுத்த முயற்சியில்லையா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கும் நிலையில் பார்த்தால் இராணுவத்தில் பயிற்சி கொடுப்பது முதற்கொண்டு இந்தியிலேயே நடைபெறுகிறது என்பதை நாமெல்லாம் உணர்வோம். அதோடுகூட இலாக்காக்களுக்கெல்லாம் ஒரு சுற்றறிக்கை கூட அனுப்பப்பட்டிருக்கிறது என்று நாங்கள் கேள்விப்படுகிறோம். அதிலே, அரசாங்க அலுவலகங்களிலே வேலை செய்கின்றவர்கள் வேலை செய்கின்ற நேரத்திலே கொஞ்சம் நேரத்தை இந்தி கற்கப் பயன்படுத்தலாம், இந்தி கற்கும் நேரம் வேலை நேரமாகவே கருதப்படும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தியைப் படித்து கற்றுத் தேர்ந்தால்தான் உத்தியோக நிரந்தரம் உயர்வு கிடைக்கும் என்றும் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. 1965-ஆம் ஆண்டுக்கு பின்னரும் ஆங்கிலம் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருக்கும் என்று இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு நேர் மாறாக, அதற்கு எதிராக—அரசியல் சட்டத்திற்கு முரணாக—இப்போது இந்தி புகுத்தப்பட்டிருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன். இதைப்பற்றி பல நேரங்களில் இதே சட்டசபையில் குறிப்பிட்டிருக்கிறோம். ஆனாலும்



8th August 1960] [Sri M. P. Subramaniam]

தமிழ் நாட்டிலுள்ள மைல் கற்களில் எண்கள் இந்தியில் எழுதப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி சட்டசபையிலே கேள்வி கேட்கப்பட்ட நேரத்தில் இங்கே இருக்கின்ற அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இது அவசியமில்லை, இந்தப் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு எழுதுகிறோம் என்று சொன்னார்கள். இதைப் பற்றி பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட நேரத்தில் அப்படிப்பட்ட ஒரு "ரெப்ரெஸெண்டேஷன்" சென்னை அரசாங்கத்திடமிருந்து வரவில்லை என்று உள்நாட்டு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதானது இந்தியை எந்த விதத்தில் இந்த மாநிலத்தில் புகுத்த இவர்கள் ஒத்துழைக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் எடுத்துக்கொண்டால், போலீஸ் இலாக்காவில் "ரைட்", "லெஃப்ட்" டிரில்லுக்குக்கூட இந்தியை உபயோகிப்பதாகக் கேள்விப்படுகிறேன். இது உண்மையா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இதைப் பற்றி நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும்.

இன்றைய தினம் பள்ளிகளில் மூன்று மொழிகள் கற்க வேண்டும். ஒன்று தாய்மொழி, மற்றொன்று ஆங்கிலம், மூன்றாவதாக வேறு ஏதாவது ஒரு மொழி கற்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. மூன்றாவது மொழியாக எந்த மொழி இருக்க வேண்டுமென்றால், அது ஆங்கிலமும் அல்ல, தாய் மொழியும் அல்ல "any other Indian language other than the regional language or mother tongue என்று சொல்லி இந்தியைத்தான் பெரும்பாலான பள்ளிகளில்—நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பள்ளிகளில்—கட்டாயமாக்கியிருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், "இது ஆப்ஷனல்தான் கட்டாயம் ஒன்றுமில்லை" என்று. எது வேண்டுமானாலும் கற்கலாம் என்று சொன்னாலும் பெரும்பாலும் இந்திதான் இருப்பதால் இந்தி கற்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM: மாணவர்கள் இந்தி எடுக்கக்கூடாது என்று உத்திரவு போடச் சொல்லுகிறீர்களா?

SRI M. P. SUBRAMANIAM: விரும்பினால் ஒன்றல்ல, ஐந்து மொழிகள் வேண்டுமானாலும் கற்க வாய்ப்பளியுங்கள். தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஜெர்மன், ரஷ்யன், ஃப்ரெஞ்ச், சைனீஸ் எல்லாம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்—வேண்டாமென்று சொல்லவில்லை. இப்போது மூன்றாவது மொழியைக் கட்டாயமாகக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று இருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM: இது உங்கள் கட்சியும் சேர்ந்து ஒப்புக் கொண்ட திட்டம்.

SRI M. P. SUBRAMANIAM: அன்று இந்தி கற்க வேண்டுமென்பது கட்டாயமல்ல என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு நடைமுறையில் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்தப் பார்க்கிறார்கள், அந்த முயற்சியில் இறங்குகிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

[Sri M. P. Subramaniam] [8th August 1960

இறுதியாக, இந்திய ஆட்சி மொழியாக உண்மையாக இரு மொழிகள் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று நம் அரசாங்கம் சொல்லுவது உண்மையானால், மேற்கு வங்காளத்தில் செய்திருப்பதைப் போல—அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இல்லை—இந்திய உபகண்டத்திலே இந்தி மட்டும் ஆட்சி மொழியாக வர இயலாது. முடியுமானால் ஆங்கிலம், இல்லையானால் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், வங்காளி எல்லாமே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று இரு சட்டசபைகளிலும் ஒரு தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றியிருப்பதைப் போன்று சட்ட மன்றமும் தெளிவான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, இன்னும் சந்தேகம் ஏற்படாத வகையில் இந்திய அரசியல் சட்டத்தையே திருத்தி அமைக்க வேண்டும். அப்போது தான் இந்தி பேசாத மக்களுக்கு இருக்கக் கூடிய சந்தேகம் நீங்கும். "அஷ்யூரன்ஸ்"-ஐ மீண்டும் மீண்டும் கொடுத்தாலும், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தும் முயற்சியில் இறங்க வேண்டும்.

SRI C. N. ANNADURAI : அமைச்சர் அவர்கள் "நான் மாணவர்கள் இந்தி படிக்க வேண்டாம் என்று உத்திரவு போடட்டுமா" என்று கேட்டார்கள். இப்போது இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள வேறு மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கு வசதி அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் பதில் சொல்லும் போது சொல்லுகிறேன். அல்லது மொழிப் பிரச்னைபற்றி விவாதம் நடக்கும்போது சொல்லுகிறேன். இப்போது இந்திய மொழியில் ஏதாவது ஒரு மொழி கற்க வேண்டும் என்று இருக்கிறது. ஒரு பள்ளியில் ஒரு மாணவர்தான் வருகிறார் தெலுங்கு கற்கவேண்டுமென்று. அந்த ஒருவருக்காக தனி ஆசிரியர் போட்டு சொல்லிக் கொடுக்க முடியுமா? குறைந்த அளவு இத்தனை பேர்கள் வந்தால் ஒரு வகுப்பு ஏற்படுத்தலாம் என்று இருக்கிறது. அப்படி வரக்கூடிய இடத்தில் கன்னடம், மலையாளம், குஜராத்தி இவைகளுக்குக்கூட சில இடங்களில் ஏற்பாடு செய்து சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அப்படி குறைந்த அளவுக்கு வராத இடங்களில், பெரும்பாலான மாணவர்கள் எந்த மொழி படிக்கிறார்களோ அதையே அவர்களும் படிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இதுதான் இதிலே இருக்கக் கூடிய கஷ்டமே தவிர, வேறு மொழிகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதல்ல.

SRI C. N. ANNADURAI: மொழிப் பிரச்னை பற்றிய விவாதத்திற்கு முன்னால் எந்தெந்த பள்ளிகளில் இந்தியைத் தவிர வேறு மொழிகளைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விவரங்கள் கொண்ட குறிப்பை அரசாங்கம் மேஜை மீது வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* SRI B. K. LINGA GOWDER : Sir, while welcoming our revered Governor's Address, I wish to make a few observations.

The Madras State, though shrunk to a small territory after the reorganisation of the States, has been maintaining its importance.



8th August 1960] [Sri B. K. Linga Gowder]

It is a matter for profound gratification that our State has been progressing very fast in every direction. A great deal has been done and a lot remains to be done in future to achieve what is called the 'Welfare State'. At the present time our country is faced with international stresses and internal strifes and it is the duty of every patriotic citizen to come forward and strengthen the hands of the Government. I don't think there can be two opinions about this. We have removed the shackles of foreign rule and now we have to face the problems of peace which are more complicated than war. We have to ceaselessly guard the hard-won independence for which thousands of our leaders have suffered and sacrificed everything.

It is a matter for profound regret that some communal fanatics are always fanning the fire of unrest and their ultimate aim is to uproot the Government and fish in the troubled waters if they succeed. They also preach wrong ideas about democracy to illiterate people in rural parts and this had led to disastrous consequences. The misconception of democracy even has lead to some so-called independent section of the people to think that even printed faked currency is not a crime. They have taken it as a hobby. These diabolic things must be put an end to. I feel that the participation in these heinous crimes by some of the officers of our Government, can be curbed and the guilty must be severely dealt with. It won't be too much if I say that such traitors are shot dead even without trial. I also suggest that the Criminal Procedure Code must be suitably amended.

Another unsocial act to upset the peace and administration of the country was the strike by some of the Central Government employees. Thanks to the firm stand taken by the Central and State Governments and by the willing co-operation of the public, this strike fizzled out. I am very sorry to say that the kindness and lenience of our Government are always mistaken to be a weakness. In such a critical juncture, while the enemies of our country are standing at our borders, such a move must be crushed once and for all.

I am sure, Sir, that the Government will bring home to the planners the need for starting important industries in this part of the country. It is gratifying to note that there are proposals to start fertiliser, aluminium and sugar factories in our State in collaboration with the foreign firms.

We have large untapped resources and with the co-operation and collaboration of the foreign experts all latent potentials of our State can be explored.

I thank the Government, Sir, for selecting Ootacamund for the location of the film industry. There were doubts and misgivings about selecting that place and fortunately the uncertainty has ended. This is a major industry of course. When it comes to fruition, it will be supplying millions of foreign exchange. This industry by itself is not going to solve all our problems. That we must remember. There is vast scope for starting various other major industries like the manufacture of baby food. We have got

[Sri B. K. Linga Gowder] [8th August 1960

about 1,000 acres of land in Wenlock Downs which could be developed as fine pasture land for feeding the cattle. This could be started in collaboration with some foreign firm. I understand that one of the Swiss firms is interested in this. So, I request the Government to negotiate with that firm and see that this industry is located in our district.

In this connection, I wish to tell the House with considerable feelings of regret and sorrow that the Queen of Hill Stations, Ootacamund is fast languishing in decay. I have been crying hoarse in this House and requesting the Government repeatedly to help Ootacamund regain its lost importance and glory as the Queen of Hill Stations, but it is a matter for regret that the Government have not taken any serious steps in that direction till now. Even the holding of the Legislature Session for a few days at Ootacamund has been discontinued. I take this opportunity to appeal to the House and the Government to revive it again.

Now, the new era of Panchayat Raj is drawing very soon. I am very glad that the Government have set apart large sums of money for the development of panchayats through the Panchayat Unions. I wish to impress upon the Government that if proper and effective propaganda is not carried on in the villages to educate the illiterate public about the laudable policies of the Government and the steps taken by the Government to give effect to those policies, I am afraid that the illiterate public would be subject to the exploitation of the interested few and the result will be that the existing factions in the villages would be multiplied.

The education policy of the Government is welcome and I am sure it will be implemented very shortly. Only greater and greater literacy will lead to the salvation of our country.

I am sure the acceptance of the recommendations of the Pay Commission by the Government must have dealt a severe blow to some of the leaders who have been trying to make political capital out of this issue. Our Non-gazetted Government Officers deserve more sympathy and consideration and I am sure that the Government will better their lot still further when the Government's finances improve and permit it again.

Regarding electric power, I am very glad to tell that the Kundah Project is working now. Two generators have begun to work and they are producing 40 M. Watts with the existing water levels in the dams. The second power-house will go into commission very shortly. I am sure that the Government will take up the third stage also. In this connection, I very much regret to have to bring to the notice of the Government that the people who have sacrificed their only possession in land for the sake of this project have not been cared for. The alternative lands promised to them have not been given to them. My appeal to the Government in this regard has been unheeded. I hope the Government will do the needful in the matter without further delay.

Finally, I congratulate our State Government on their abled administration of our State which is considered to be the best-administered State in the whole country. The team spirit and



8th August 1960] [Sri B. K. Linga Gowder]

the co-operation and also the efficiency exhibited by them will serve not only as an inspiration but also as an example for other States to follow. Thank you, Madam.

* SRIMATHI KOLANTHAI AMMAL: மாண்பு மிக்க அவைத் தலைவி அவர்களே, இன்று, கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்தும், அவர்களுடைய உரையை ஆதரித்தும் ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே உள்ள பெரும்பாலான ஊழியர்கள் சார்பிலே சமர்ப்பித்த சம்பள கமிஷன் சிபாரிசை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தச் சம்பள உயர்வானது சிறப்பாக, ஆசிரியப் பெருமக்களுக்கும், என்.ஜி.ஓ.-க்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் அளித்திருக்கின்றமைக்காக நான் முதற்கண் அரசாங்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிக முக்கியமாக, ஆரம்ப ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஓரளவு அவர்கள் எதிர்பார்த்த அளவுக்குமேல் நல்ல சம்பள உயர்வைக் கொடுத்தமைக்காக நான் இந்த அமைச்சரவையைப் பாராட்டி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய சென்னை அமைச்சரவையானது, கோயம்புத்தூர் ஜில்லாவுக்குப் பயன்படக்கூடிய பரம்பிக்குளத் திட்டத்தை விரைவிலே பயன் அளிக்கின்ற அளவுக்குப் பாடுபட்டு சீக்கிரமாகக் கொண்டு வந்தமைக்காக கோவைப் பெருமக்கள் சார்பாகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தப் பரம்பிக்குளத் திட்டத்தின் மூலம் வரண்ட பிரதேசம் என்று சொல்லப்படும் பல்லடம் தாலூகா பயன்பெறும் வகையில் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறேன். மிக உயரமான இடத்திலே இருக்கின்ற காரணத்தினால் தண்ணீர் அங்கே ஏறாது என்பதினால் தடை ஏற்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டது. அதே சமயத்தில், எவ்வளவு செலவு செய்தாகிலும் அந்த உயர்ந்த பகுதிக்குத் தண்ணீர் கொண்டு செல்லவேண்டுமென்பதற்கான யோசனைகளைச் செய்யவேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் கூறியிருக்கிறார். அவர்களுடைய யோசனையை மேற்கொண்டு இந்தப் பல்லடம் தாலூகாவுக்கு இந்தத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய பலனை வெகு சீக்கிரத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த சபையிலே வற்புறுத்திச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

இந்தச் சபையிலே, ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடும்போது, அமைச்சரவையினுடைய சிறந்த சேவைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கொள்ளுவதை ஓரளவு மறுத்துப் பேசுவதுபோலக் குறிப்பிட்டார்கள். உதாரணமாக, அவர்கள் 'பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உங்கள் கையிலே ஒப்படைக்கப்பட்ட நிலப் பரப்பின் அளவை எடுத்துப் பாருங்கள், இப்பொழுது குறைந்திருக்கிற அளவையும் எடுத்துப் பாருங்கள்'

என்று சொல்லி, ‘இழந்துவிட்ட பன்னிரண்டாயிரம் சதுர மைலுக்கு என்ன பதில் சொல்லப் போகின்றீர்கள்?’ என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ஆனால், இதே சட்ட மன்றத்திலே, நாம் இழந்துவிட்டதாகக் கூறும் பன்னிரண்டாயிரம் சதுர மைல் நிலத்தைப்பற்றியே சிந்தனை இல்லாத ஒரு கட்சியும் இருக்கிறது என்பதையும் அந்த அங்கத்தினர் அவர்கள் உணருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சரவையானது எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களுடைய எண்ணத்தையும் திறம்பட ஆலோசனை செய்துதானே ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்ற நியதி இருப்பதால் அவர்களுடைய நிலைமை எந்த அளவுக்கு இருக்கும் என்பதையும் இங்கே நாம் யோசனை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அடுத்தபடியாக அவர்கள் குறிப்பிட்டார்கள்—மத்திய சர்க்கார் ஊழியர்கள் செய்த சேவை— பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டுமென்று. என்ன சேவை என்று சொன்னால், அவர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டார்கள் என்பதாகும். நான் மிக வருத்தத்தோடு அந்த அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், இந்தச் சென்னை மாநிலத்தில் வேலை செய்யக்கூடிய சென்னை சர்க்கார் ஊழியர்களைப் பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள் என்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன். மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய சேவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், நம்முடைய சென்னை சர்க்கார் ஊழியர்களுடைய சேவை வைர எழுத்துக்களால் அல்லவா பொறிக்கப்படவேண்டும் என்று இந்த இடத்தில் ஞாபகப்படுத்துகின்றேன். ஆகையால், ஊழியர்களை அவர்கள் வேலை நிறுத்தம் செய்யத் தூண்டுவதோ, அவர்களுடைய வேலையில் தலையிடுவதோ ஒரு அரசியல் கட்சியினுடைய நல்ல முற்போக்குச் சாதகமாக இருக்கும் என்று நான் கருதவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பொதுவாக நாட்டிலே இருக்கும்படியான விவசாயத் தொழிலாளர் மக்களுடைய ஊதியம் எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதை நாம் நன்றாக உணருவோம். ஆகையால் வாழ்க்கைத் தரம் முன்னுக்கு வரவேண்டும் என்பதைச் சிந்தனையிலே கொண்டு, விலைவாசிகள் இன்னும் உயராமற்படிக்கு அதிகமான சம்பள உயர்வு கொடுக்கும்போது, இந்தப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஆலோசனை செய்ய நமக்கும் பொறுப்பு உண்டு என்பதை இந்த இடத்திலே வற்புறுத்திச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

தூத்துக்குடித் துறைமுகத்தைப்பற்றி பேசும்போது, நம்முடைய வ. உ. சி. அவர்கள், கப்பல் ஓட்டிய தமிழன், தமிழ் நாட்டிலே பிறந்து, தன்மானத்தோடு இந்த நாட்டிலே தொழில் வளம் பெருக வேண்டும் என்பதற்காக, திரை கடல் ஓடியும் திரவியம் தேட வேண்டும் என்ற நிலைமையிலே பழந்தமிழ் மக்களின் பெருமையை நிலைநாட்டுவதற்காக, தானே கப்பல் ஓட்டி இந்த நாட்டினுடைய பெருமையை நிலைநாட்டின வ. உ. சிதம்பரனார் அவர்கள் ஞாபகார்த்தமாக, நம்முடைய





நாட்டின் சரித்திரத்திலேயே பெயர் பெற்றதான அந்தத் தூத்துக்குடித் துறைமுகத்தை நல்ல முறையிலே சீக்கிரமாக வேலைகள் செய்து, அபிவிருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்று இந்த இடத்திலே ஞாபகப்படுத்திக்கொள்வதோடு கூட, அதற்கு அதிகப்படியான தொகை செலவு செய்வது தமிழ்நாட்டு மக்களுடைய முன்னேற்றத்திற்கும், தமிழனுடைய ஒரு பழமைப் பண்பாட்டின் வளர்ச்சிக்கும் அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதையும் சொல்லிக்கொண்டு, அந்தத் துறை முகத்தின் அபிவிருத்தி வேலைகளை மிக விரைவிலும் சீக்கிரமாகவும் செய்ய வேண்டும் என்று அமைச்சரவையை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, சிறிய தொழிற்சாலைகளிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு இரும்பு, நிலக்கரி கொடுப்பது ‘கோட்டா ஸிஸ்டத்’தின்படி இருக்கிறது. பத்து டன் ‘கோட்டா’ என்றால், உண்மையிலேயே அவர்களுக்குக் கிடைப்பது இரண்டு அல்லது இரண்டரை டன்தான். ஆகையால், சிறிய தொழிற்சாலைகளிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசாங்கம் குறைந்த வட்டிக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவருகிற அதே நேரத்திலே அவர்களுக்கு வேண்டிய ‘ரா மெடீரியல்ஸ்’ கிடைப்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது. ஆனால், ஒரு டன்னுக்கு 300, 350 ரூபாய் கொடுத்தால் ப்ளாக் மார்க்கெட்டிலே எத்தனை ஆயிரம் டன் வேண்டுமானாலும் எளிதாகக் கிடைக்கும் நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை அமைச்சரவை சீர்தூக்கிப் பார்த்து, 50 டன் உபயோகிக்கக்கூடியவர்களுக்குப் பாதி அளவாவது ‘கோட்டா’ முறையில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்பொழுதுதான் நாம் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்த பணத்தைக் கொண்டு ஏராளமான மெஷினரி வாங்கி வைத்து, தொழிற்சாலைகளில் பர்மனென்ட் ஆட்கள் 20, 30 பேர்களை வைத்துக்கொண்டு, மாதா மாதம் சம்பளம் கொடுக்கும் சிறிய தொழில் நிறுவனத்திலே இருக்கக் கூடியவர்களுக்கு மூலப் பொருள்கள் கிடைக்காத கஷ்டத்தை நிவர்த்தி செய்து நமது நாட்டிலே சிறு தொழில் அபிவிருத்தி ஏற்படுவதற்கு மிகவும் சாதகமாக இருக்கும் என்பதை இந்த இடத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மின்சார இலாகாவிலே, மின்சாரம் உபயோகிக்காமல் இருந்தால், அவர்களுக்குக் கட்டணத்திலே சலுகை காட்டப்பட்டிருக்கிறது. இதுவரைக்கும் இருந்த குறைபாடு ஓரளவு நீக்கப்படும் என்று கவர்னர் பெருமான் தம் உரையில் ஆற்றியிருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். இதில் பத்து சத விகித விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக, மினிமம் சார்ஜ் குறைக்கப்பட்டு, உபயோகித்ததற்கு மட்டும் மின்சாரக் கட்டணம் என்று குறிப்பிட்டிருப்பது இங்கே பாராட்டத் தக்கதாகும்.

அதோடு ஒன்று சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் இரண்டு ஆண்டுகள் உபயோகித்த சராசரியை எடுத்து, அவர்கள் டெபாசிட் தொகை கட்ட வேண்டும் என்ற விதி இப்பொழுது இருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு அவர்கள் அதிகமாக மின்சாரம் உபயோகித்தால் இரண்டு ஆண்டு சராசரியை எடுத்து டிபாசிட் கட்டியிருப்பார்கள். அடுத்த ஆண்டு சராசரியை எடுத்து மீண்டும் டிபாசிட் கட்டவேண்டுமென்று மூன்றாவது ஆண்டும் விவசாயிகளிடமிருந்து டெபாசிட் வசூலிக்கப்படுகிறது. ஆகையால், இது 'பிக்ஸட் டெபாசிட்'டாக சராசரி கடந்த இரண்டு ஆண்டுகளிலே எடுத்ததை வைத்துக்கொண்டு நிர்ணயிக்க வேண்டும். மீண்டும் அந்த விவசாயிகளைத் தொல்லை செய்யாமல் இருக்கவேண்டும் என்பதை விவசாயிகள் சார்பிலே கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்காகப் பன்முறை அமைச்சரிடமும் அதுபற்றிக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

நம்முடைய நாட்டிலே திட்டம் போட்டுப் பல நல்ல காரியங்கள், பெரிய திட்டங்கள், நீர்ப்பாசன வசதிக்கான திட்டங்கள் எல்லாம் நல்ல முறையிலே நிறைவேறியிருக்கின்றன; இது மிக மகிழ்ச்சிக்குரியது. கீழ் பவானி வாய்க்காலிலிருந்து கழிவாக வெளியிலே செல்லும் தண்ணீர் ஏராளமாக இருக்கிறது. அதையும் ஆங்காங்கு பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை அவசர அவசரமாகச் செய்யவேண்டுமென்று இந்த இடத்திலே ஞாபகப்படுத்துகின்றேன். கிராமங்களிலே நல்ல ரோடுகளைக் கழிவுநீர் கெடுத்துவிடுகிறது. அதனால் போக்குவரத்து பாதிக்கப் படுவதோடு கூட, நல்ல விவசாயம் செய்திருந்த இடத்தில் அந்த நீர் போய் அங்கும் உரம்பு எடுத்துக்கொள்ளும் அளவுக்கு அந்த வட்டார மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால், இந்தத் திட்டத்தை இன்னும் தீவிரமாக்கி, அதற்காக பணம் செலவழித்து, ஆங்காங்கு தண்ணீரை வாய்க்கால் மூலமாக விடுவதற்கு ஏற்ற வாய்ப்புகள் செய்யவேண்டும் என்பதை வற்புறுத்துகின்றேன்.

நம்முடைய கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றியிருக்கும் உரையில், தமிழ் ஆட்சி மொழியாவதற்கு ஆதாரபூர்வமாக கோயமுத்தூர் ஜில்லாவில் சில ஆசிரியப் பெருமக்களுக்குத் தமிழிலே பயிற்றுவிக்கக்கூடிய ஒரு பயிற்சியைக் கொடுப்பதற்கு முன்னுக்கு வந்திருக்கிறார்கள். அதற்காகவும் எங்களுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்று தமிழில் பயிற்சிபெற ஆசிரியப் பெருமக்கள் முன்வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் சலுகை காட்டவேண்டும். மாணவர்களுக்குக் காட்டியிருக்கும் சலுகை ஏராளம் என்பதைச் சொல்லிக்கொண்டு, ஆசிரியர்கள் அந்தப் பயிற்சி பெறுகிற காலத்தில் அவர்களுக்குச் சம்பளம் கொடுத்து, பயிற்சி பெற ஓர் ஆண்டு அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்தால்தான் அவர்கள் நல்ல முறையில் பயிற்சி பெற்று, வரலாறு பொருளாதாரம் போன்ற பாடங்கள் கற்க முற்படுவார்கள். மூன்று மாதங்கள் என்று சொல்வது அனுபவமும் திறமையும் உள்ள ஆசிரியர்களுக்குப் போதுமானதாகும்; ஆனால், இளம் வயதுள்ள ஆசிரியர்களுக்குப் போதாது





என்று கருதுகிறேன். ஆகையால், இவற்றையெல்லாம் நல்ல முறையில் யோசனை செய்து, எடுத்துக்கொண்ட திட்டம் வெற்றி பெற ஏற்ற வாய்ப்புகளைச் செய்யவேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

எங்களுடைய தொகுதியில் ஒரு பகுதி ப்ளாக் ஏரியா ஆகிவிட்டது; மற்றொரு பகுதி ப்ளாக் ஏரியாவாகவேண்டுமென்று பல முறை பேசப்பட்டது; அதுபற்றிக் கேட்டும் கூட, 'லோகல் டெவலப்மென்ட் ஓர்க்'கிலிருந்து ஏராளமான பணத்தைச் செலவழித்துவிட்டார்கள்' என்று சொல்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர் கேட்காததால்தான் அந்தப் பகுதி ப்ளாக் ஏரியாவாக வில்லை என்று அங்குள்ள மக்கள் குறை கூறுகிறார்கள். ஆகையால், அந்தக் குறையை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

SRI N. K. PALANISAMI : கனம் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய பிரசங்கம் வெள்ளிக்கிழமையன்று படிக்கப் பட்டது. பதினொரு மணியிலிருந்து 12 மணி வரை ராகுகாலம் ஒரு பக்கம். (சிரிப்பு.) இன்னொரு பக்கம் மொழிப் பிரச்னை குழப்பம். மற்றொரு பக்கம் விலைவாசி ஏற்றத்தினால் ஜனங்களுக்கு மிகவும் கஷ்டம். 11-30 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : கம்யூனிஸ்டுகளுக்கு ராகு காலத்தில் நம்பிக்கை இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

SRI N. K. PALANISAMI : 1965-க்குப் பிறகு இந்தியும் இருக்கும், ஆங்கிலமும் இந்தியோடு உபமொழியாக இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டதுபற்றி ஜனாதிபதி அவர்களும், நேருஜி அவர்களும், திரு. பந்த் அவர்களும் விளக்கம் தந்திருப் பதின் காரணமாக மொழிப் பிரச்னை சம்பந்தமாக ஒரு சந்தேகம் தீர்ந்திருக்கிறது. ஆனால், அதிலுள்ள முக்கியமான குறைபாடுகள் என்ன? இன்றைய தினம் ஆட்சிமொழியாக இந்தியும் ஆங்கிலமும் இருக்கும்பொழுது, அகில இந்திய உத்தியோகத் தேர்வுகளுக்கு அந்தந்த பிரதேச மொழியிலும் எழுதலாம் என்று இருந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். ஜனாதிபதியின் உத்தரவின்படி 1965-க்குப் பிறகு இந்தியும் ஆங்கிலமும் யூனியன் மொழியாக இருக்கும்பொழுது அந்தந்த பிரதேச மொழியிலே படித்து பட்டம் பெற்றவர்கள் அந்தந்த பிரதேச மொழியிலே எழுத வேண்டும் என்று இல்லாவிட்டால் என்ன பிரயோசனம் என்று கேட்கிறேன். பிரதேச மொழியானது கல்லூரி மட்டத் திலும் போதனா மொழியாக வரும்பொழுது அந்தந்த பிரதேச மொழியிலேதான் எழுதினால் சௌகரியமாக இருக்குமே தவிர, இந்தியிலோ, ஆங்கிலத்திலோ எழுதினால் என்ன பிரயோசனம்? உதாரணமாக நாம் தமிழை ஆட்சி மொழியாக ஏற்படுத்தியிருக்கிறோம். தமிழ் ஆட்சி மொழியாக இருக்கும்பொழுது ஆங்கிலத்திற்கு அந்த இடம் கிடையாது. 'செகண்டரி லாங்குவேஜாகத்' தான் இருக்க

முடியும். ஆட்சி மொழி தமிழ் மொழியாக இருக்கும்பொழுது அந்த மாணவர்கள் பட்டம் பெற்று வரக்கூடிய காலத்தில் உத்தியோக உயர்வுக்காக பரீட்சை எழுதும்பொழுது இந்தியிலோ ஆங்கிலத்திலோதான் எழுதவேண்டுமென்றால், உண்மையாகவே இந்தி தெரிந்தவர்களுக்கும், ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கும்தான் சௌகரியமான நிலைமை ஏற்படும். இந்த திருத்தம் இல்லாவிட்டால் தமிழ் படித்தவர்கள் எப்பொழுதுமே அடிமையாகத்தான் இருக்கவேண்டிவரும். இதை நம் சர்க்கார் ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் இதை ஏன் நமது சர்க்கார் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தவில்லை என்று நான் இன்றைய தினம் கேட்க விரும்புகிறேன். தமிழை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்ட பிறகு அதை உடனடியாக கல்லூரி மட்டத்தில் கொண்டு வருவதற்கு சர்க்கார் ஏன் தயங்க வேண்டும்? உயர் நிலைப் பள்ளியில் படித்து வெளிவரும் மாணவர்கள் காலேஜில் ஆங்கிலத்தில்தான் படிக்கவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்யப்படுவது நமக்கு நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்ல, இப்பொழுது எட்டு டிபார்ட்மெண்டுகளில் மட்டும்தான் தமிழில் கடிதப்போக்குவரத்து நடக்கிறது. 1960-க்குள் எல்லா டிபார்ட்மெண்டுகளிலும் தமிழ் வந்துவிடும் என்று சொல்லப்பட்டது. 1963-வது வருஷத்திற்குள்ளாக எல்லா கல்லூரி மட்டத்திலும் தமிழ் போதனை மொழியாக வரும் என்று சொல்லிய சர்க்கார் கோயம்புத்தூரில் இப்பொழுது ஒரு 'பைலட் ஸ்கீம்' ஏற்படுத்தியிருக்கிறோம், அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு 1963-க்குப் பிறகு சில வகுப்புகளிலே தமிழை போதனை மொழியாகச் செய்யலாம் என்று சொல்லுவது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. இதற்காக எதிர்ப்புத் தெரிவித்தவர்களைக் கண்டு சர்க்கார் ஏன் தயங்க வேண்டும்? உடனடியாக தமிழை எல்லா மட்டத்திலும் கொண்டு வரவேண்டும். இப்பொழுது ஐந்தாவது வகுப்பிலே ஆங்கிலம் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. 1962-ஆம் வருஷத்திற்குப் பிறகு நான்காவது வகுப்பிலேயே ஆங்கிலம் கற்றுக்கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால், நம்முடைய தமிழ் மொழி என்ன ஆவது? மேலும், ஆங்கிலம்தான் ஆட்சிமொழியாக நீடிக்குமா? தமிழிலே படிக்கக்கூடிய ஒரு மாணவன் அகில இந்திய யூனியன் பரீட்சைக்குப் போகும்பொழுது எந்த மொழியிலே பரீட்சை எழுதுவது என்பதற்கு சர்க்கார் விளக்கம் கொடுக்கவேண்டும். கோயம்புத்தூரில் தமிழில் பி.ஏ. படித்து பாஸ் செய்த மாணவர்களுடைய நிலைமை என்ன ஆகும்? அவர்கள் பாக்கியிருக்கக்கூடிய காலேஜ்களில் போய் சேருவதற்கு அனுமதிக்கப்படுவார்களா? உத்தியோகத்தில் அவர்களுக்கு எந்த அந்தஸ்து கொடுக்கப்படும் என்பதையெல்லாம் தெளிவுபடுத்த வேண்டும்.

இன்றைக்கு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருப்பது விலைவாசியின் உயர்வால்தான். நாம் எவ்வளவோ திட்டம் போடுகிறோம். விலை என்பது ஒரு 'காம்பொனன்டு பார்ட்'. பிளானில் அது ஒரு முக்கியமான பகுதி. உற்பத்தி ஏராளமாக ஆகிறது.



உற்பத்தியாகக்கூடிய பொருள்கள் அதிகப்படியான ஜனங்களுக்கு குறைவான விலையில் கிடைக்க வேண்டும். திட்டம் போடப் போட ஜனங்களுக்கு எந்த அளவுக்கு பொருள்கள் கிடைக்கின்றன, எந்த அளவுக்கு விலை ஏறுகிறது என்பதை நாம் இன்றைய தினம் பார்க்கவேண்டும். உதாரணமாக முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். மூன்றாவது திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, ஏராளமான பொருள்கள் உற்பத்தியாகின்றன. 1,000 மூட்டை சிமெண்டு அதிகப்படியாக உற்பத்தி யாகிறது என்று சொன்னால் பணம் உள்ளவர்கள் 10 பேர்கள் ஆளுக்கு 100 மூட்டைகள் வாங்கி, விலையை அதிகமாக உயர்த்திவிடுகிறார்கள். ஆகையினால் விலை அதிகமாக உயர்ந்து விடுகிறது. They push up the prices குறைவாக சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கு (பிக்ஸட் இன்கம் குரூப்) பொருள்கள் அதிகமான விலைக்குத்தான் கிடைக்கிறது. அவர்கள் அதிகப்படியான பணத்தைக் கொடுத்து குறைவான பொருள்கள் வாங்க வேண்டியிருப்பதால், அவர்கள் மேலும் பாபராகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. கையில் பணம் இருக்கக்கூடியவர்கள் இம்மாதிரி பொருள்கள் வாங்கி அதிகப்படியான விலைக்கு விற்பதன் காரணமாக அவர்களிடத்திலேயே ஏராளமான பணம் குவிகிறது. ஆகவே திட்டம் போடப்போட ஒரு பக்கத்தில் பொது ஜனங்களுக்கு பொருள்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இன்னொரு பக்கத்தில் வர்த்தகச் சூதாடிகளுக்கும், பெரிய வியாபாரிகளுக்கும் மேலும், மேலும் பணம் சேருகிறது. ஆகவே, இந்த இரண்டு விதமான நிலைமை ஏற்படுவதைப் பார்க்கிறோம். ஆறு சர்க்கரை மில்கள் போதாது என்பதற்காக மேலும் ஆறு மில்கள் ஏற்படுத்த திட்டம் போடப் பட்டிருக்கிறது. ஆனால் அதிகப்படியான ஜனங்களுக்கு சர்க்கரை குறைவான விலையில் கிடைப்பது கிடையாது. முன்பு 350 கோடி கெஜம் துணி வருஷத்திற்கு உற்பத்தி செய்துகொண்டிருந்தோம். இப்பொழுது 500 கோடி கெஜம் உற்பத்தி செய்கிறோம். ஆகவே, 150 கோடி கெஜம் துணி உற்பத்தி அதிகமாயிருந்தாலும், விலை ஏன் ஏறுகிறது, எந்த அளவுக்கு ஜனங்கள் அதை வாங்கி உபயோகிக்கிறார்கள் என்பதையும் பார்க்கவேண்டும். நூல் விலை ஏறிக்கொண்டே போகிறது. நூல் விலையை சர்க்கார் கட்டுபடுத்தவில்லை. பஞ்சு விலையை கட்டுபடுத்தியிருக்கிறார்கள், பருத்தி விலையை கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். குறைவான விலையில் கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். வேஜ் போர்டு நிர்ணயித்த கூலியை ஊழியர்களுக்கு கொடுப்பதற்கு 3, 4 மாதங்களுக்கு முன்னாலேயே விலை ஏறியிருந்தது. 13 ரூபாய் விற்ற மட்டரக நூல் ரூ. 22½ ஆக இருக்கிறது. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் நூல் விலையை குறைக்கவேண்டுமென்று 24-ம் தேதி தீர்மானம் போட்டார்கள். 26-ம் தேதி அதைப்பற்றி கேட்கும்பொழுது நூல் விலையை குறைக்க முடியாது, ஜனங்கள்தான் பார்த்து 'அட்ஜஸ்டு' செய்துகொள்ளவேண்டும், மட்ட ரக நூல்களை வாங்கு

[Sri N. K. Palanisami] [8th August 1960

வதைவிட அதிக 'கவுண்டு' உள்ள நூல்களை வாங்கி நீங்கள் நெய்ய வேண்டும், அப்பொழுதுதான் அதற்குத் தகுந்தபடி ஊதியம் கிடைக்கும் என்ற முறையிலே பேசியிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் உபயோகிக்கக்கூடிய நூல் விலையை மாத்திரமாவது ஏன் குறைக்கக்கூடாது? அவர்களுக்கு குறைந்த விலையில் நூல் கிடைக்கும்படிச் செய்வதற்கு சர்க்கார் ஏன் தயங்கவேண்டும்? சர்க்காருடைய கொள்கை என்ன? அவர்களுக்கு பொது ஜனங்களைப் பற்றி அக்கறை கிடையாது. யார் உற்பத்தி செய்கிறார்களோ அவர்கள்பேரில் அக்கறை கிடையாது, வர்த்தகச் சூதாடிகளுக்கு ஆதரவான கொள்கைதான் இன்று பின்பற்றப்படுகிறது. ஆகவே, பல திட்டங்கள் மூலமாக ஏராளமாக பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 'ரேடபிள் வொர்க் பெர் வொர்கர்', 'வால்யூம் ஆப் ப்ரொடக்ஷன்' ஜாஸ்தியாகியிருக்கிறது. ஆனால் ஜனங்கள் வாங்க முடியாத அளவுக்கு விலை ஏறிக்கொண்டே போகிறது. ஜூன் மாதத்தில் 10 பாயிண்டு ஏறியிருக்கிறது. ஜூலை மாதத்தில் 'லிவிங் இன்டெக்ஸ்' 6.6 புள்ளி ஏறியிருக்கிறது. விலைவாசி இப்படி உயர்ந்துக்கொண்டே போகும்பொழுது ஜனங்களுடைய நிலைமை என்ன ஆகும் என்பதையும் நாம் சற்று கவனிக்கவேண்டும். ஆகவே, திட்டத்திற்காக 4,000 கோடி செலவாகிறது. 4,000 கோடி ரூபாய் அளவுக்கு விலைவாசி உயர்கிறது. அதனால் ஜனங்களுடைய மனப்பான்மை என்ன? இருக்கும் பூமியை விற்றுவிட்டு ஒரு லாரி வாங்கி வைத்துக் கொண்டால் என்ன என்று தோன்றுகிறது. மணல் விலை ஆகிறது, சிமெண்டு விலை ஆகிறது, செங்கல் விலை ஆகிறது. சுதந்திரக் கட்சி சொல்லுவது போல் திட்டம்போடப் போட பொருள்களை இம்மாதிரி ஏராளமாக வாங்கி அதிக விலைக்கு விற்கவேண்டும் (go after commodity) என்ற மனப்பான்மை ஏற்படுகிறது. இந்த சர்க்கார் ஆட்சியில் தான் அம்மாதிரி பொருள்கள் கிடைக்கும். அவைகளை கண்டிரோல் செய்யக்கூடிய சக்தியும் இந்த சர்க்காருக்கு கிடையாது. இன்றைக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10,000 கோடி ரூபாய் செலவு செய்யப்படுமென்றால், அந்த அளவுக்கு விலை உயர்கிறது. விலை உயர்வை தடுப்பதற்கு சர்க்கார் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. திட்டத்தின்போது உற்பத்தி கணக்கிடப்படுகிறது. திட்டம்போடும்போது உற்பத்தி in relation to the mass, in relation to the price இருப்பது கிடையாது. ஆகையால், சர்க்கார் உடனடியாக விலைவாசியைக் கட்டுப்படுத்தவேண்டும். நியாயமான விலையை நிர்ணயம் செய்து 'கன்ஸியூமர் கோவாபரேடிவ் சொஸைடிகளின்' மூலம் பொருள்களை விநியோகம் செய்யவேண்டும். நாகபுரி தீர்மானத்தில் சொல்லியிருக்கிறார்கள். 'நாஷனல் டெவலப்மெண்டு கவுன்சிலில்' தீர்மானம் செய்திருக்கிறார்கள். "எசென்ஷியல் கமாடிட்டி" பூராவும் "State Trading" கொண்டு வருவதாகச் சொன்னார்கள். 3 வருஷங்களில் முடியாது என்று சொல்லி விட்டார்கள். 75,000 டன் ப்ரொக்யூர்மெண்டு பாக்கியிருக்கிறது. கேஸ் நடத்தும்போது பின் வாங்கிவிட்டார்கள். சர்க்காருடைய



8th August 1960] [Sri N. K. Palanisami]

கொள்கை மக்களுக்கு குறைவான விலையில் பொருள்கள் கிடைக்க வேண்டுமென்பது இல்லை. வர்த்தகச் சூதாடிகளுக்கு இந்தத் திட்டம் போய்க் கொண்டிருந்தால், அது உருப்படாது.

சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்காததனுடைய அம்சம் தான் மத்திய சர்க்காருடைய சிப்பந்திகளின் ஸ்ட்ரைக்குக்குக் காரணம். விலைவாசியைக் குறைப்பதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கவேண்டும். அவர்கள் சம்பளம் அதிகமாகக் கோரவில்லை. எந்த அளவுக்கு விலை ஏறுகிறதோ அந்த அளவுக்கு பஞ்சப்படி கொடுக்கப்படவேண்டும் என்று தான் கோரினார்கள். அவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கிடைக்கிறது. நிரந்தரமான உத்தியோகம் கிடைக்கிறது. அப்படியிருந்தும் அவர்கள் ஏன் வேலை நிறுத்தம் செய்தார்கள்? விலைவாசியைக் குறைக்கவேண்டும் என்பதற்கு மறைமுகமாக பொதுஜன ஆதரவு இருக்கிறது. சர்க்கார் அதை ஒடுக்க வேண்டும் என்பதற்காக தங்களிடத்தில் இருக்கக்கூடிய போலீஸ், 'ஆர்மி', 'டெரிடோரியல் ஆர்மி', இன்னும் அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும் உபயோகப்படுத்தி ஸ்ட்ரைக்கை உடைத்தார்கள். சர்க்கார் அதற்குப் பதிலாக ஒரு அவசரச் சட்டம் போட்டு விலையை யார் ஏற்றுகிறார்களோ அவன் மீது நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். சாதாரணமாக ஊழியம் செய்யக்கூடியவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக வர்த்தகச் சூதாடிகள், கொள்ளை லாபம் சம்பாதிப்பவர்கள் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுத்திருந்தால் உண்மையாகவே நாம் சர்க்காருக்கு ஆதரவு கொடுக்கவேண்டியது அவசியம்தான். கள்ள நோட்டு அடிக்கிறவர்களுக்கு 'ஏ' கிளாஸ் கொடுக்கப்படுகிறது.

அடுத்தபடியாக என்.ஜி.ஓக்களைப் பற்றி, சர்க்கார் அப்ரோச் சரியாக இருக்கிறது ரூ. 500-க்கு மேல் வாங்குகிறவர்களுக்கு எந்தச் சலுகைகளும் கிடையாது என்பது. ஆனால் ஒரு ப்யூனுக்குக் கிடைத்திருப்பது என்ன? ரூ. 5-க்கு அதிகமில்லை. ஆசிரியர்களுக்கும் அப்படியே. ஆனால், செக்ரடேரியட் சிப்பந்திகளுக்கு மட்டும் அதிகப்படியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. செக்ரடேரியட் சிப்பந்திகளுக்கும், மற்ற அம்மாதிரி ரகத்தில் உள்ள சிப்பந்திகளுக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. ஒரு சாதாரண சிப்பந்தியை எடுத்துக் கொண்டால், அப்பர் டிவிஷன் கிளார்க் சம்பளம், செக்ரடேரியட்டில் 140-10-240. ஆனால், இதர இடங்களில் 125-5-175 தான். சூப்பிரண்டெண்டை எடுத்துக் கொண்டாலும், இங்கே 250-25-500 என்றும், மற்றவர்களுக்குக் குறைவாகவும் இருக்கிறது. இவ்வளவு வித்தியாசம் வைக்கக் காரணம் என்ன?

அடுத்தபடியாக, அடிக்கடி கோரப் பட்டுவரும் 'காண்டக்ட் ரூல்ஸ்,' 'பெர்ஸனல் பைல்', போன்ற இம்மாதிரி விஷயங்கள் கவனிக்கப்படவில்லை. கான்ஸ்டிட்யூஷன் 309-வது பிரிவுப்படி, 'பர்ஸனல் பைல்', 'காண்டக்ட் ரூல்ஸ்' இவைகளைப் பரிசீலனை

செய்ய என்று லெஜிஸ்லேசர் கமிட்டி ஒன்றைப் போட்டு அவற்றைப் பரிசீலனை செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

**SRI A. VEDARATHNAM:** அன்பும் ஆற்றலும் மிக்க அவைத் தலைவி அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையைப் பாராட்டி, வரவேற்று சில வார்த்தைகள் நான் கூற விரும்பு கிறேன். அவர்களுடைய உரையில். மத்திய அரசாங்க ஊழியர் களின் வேலை நிறுத்தம் சுமுகமாக முடிந்தது குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதைப் பற்றி இங்கே பேசிய எதிர்க் கட்சி அங்கத்தினர்கள், ரொம்ப அருமையான விஷயங்களைக் குறிப் பிட்டார்கள். "அவர்கள் சம்பள உயர்வு கேட்கவில்லை, பஞ்சப் படியை விலைவாசியோடு இணைக்க வேண்டும என்றார்கள்" என்று இப்பொழுது ஒரு புது விஷயத்தைப் புகுத்தினார்கள். குறைந்த பட்ச சம்பளம் ரூ. 50 என்று ஏற்படுத்தியதை மாகாண அரசாங்க ஊழியர்கள் எல்லாம் வரவேற்று மாநாடுகளில் வரவேற்புத் தீர்மானங்கள் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 80 குறைந்த பட்ச சம்பளம்; அது போதாது, ரூ. 125 ஆக்க வேண்டும் என்று கூறியிருப்பது அவர்கள் கோரிக்கைகளில் முதல் அம்சம். இரண்டாவது அம்சம் தான், பஞ்சப் படியை விலைவாசியோடு இணைக்க வேண்டும் என்பது. இப்பொழுது குறிப்பிட்டார்கள் கனம் பழனிசாமியவர்கள், சென்ற மாதம் 10 புள்ளி உயர்ந்தது, அடுத்த மாதம் 6 புள்ளி உயரும் என்று. ஆமாம், ஏழுமலையான் கோவிலுக்குப் போவதுபோல்தான் உயருகிறது. ஆகவே, அதற்காக, மாதாமாதம் பட்ஜட் கூட்டம் நடத்துவதா? அல்லது, ஏறினாலும், இறங்கினாலும், கூட்டியோ, குறைத்தோ கொடுக்க வேண்டும் என்று, அப்படிச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று நிதியமைச்சருக்கு உத்தரவு போடுவதா? இதையெல்லாம் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீசை வைத்து வேலை நிறுத்தத்தை அடக்கிவிட்டதாகக் கூறினார்கள். அறியாமையால் ஏற்பட்ட அந்த வேலை நிறுத்தக் காரர்களைப் பாதுகாக்க போலீசு பயன் பட்டதே தவிர, வேலைநிறுத்தத்தை அடக்குவதற்கில்லை என்பதை அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். விசுவாச ஊழியர்களை, தேசத் துரோகிகள், ஐந்தாம்படையினர் என்று சொல்லி அவர் களைத் தடிகொண்டு தாக்கி நிறுத்தினார்களே, அப்படித் தாக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க போலீசு பயன் பட்டது. இன்னொரு அருமையான பிரச்சினையை பிரஜா-சோஷ லிஸ்ட் தலைவர் அவர்கள் புகுத்தினார்கள். "உங்களிடம் ஆட்சிப் பொறுப்பிற்காக ஒப்படைக்கப்பட்டது எவ்வளவு சதுரமைல், இப்பொழுது எத்தனை சதுரமைல் நிலப் பரப்பளவு இருக்கிறது" என்று கேட்டார்கள். அவர்களைக் கேட்க விரும்புகிறேன், ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்களோ என்று. அதுதான் 12,000 சதுரமைல் குறைந்து விட்டது என்கிறார்கள். அவர்களுக்கு நினைவிருக்கலாம், இந்த நாட்டை வெள்ளையன் ஒப்படைத்த காலத்தில், வெள்ளைக்காரர்களின் ஆட்சியில், அவர்கள் நேர் பொறுப்பில் இருந்த பரப்பைத் தான் காங்கிரஸ் அரசாங்கத்தி





னிடம் ஒப்படைத்தான். ஏனைய, சுதேச சமஸ்தானங்கள், அந்தந்த சுதேச அரசர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டன; 630 சமஸ்தானங்கள், இந்தியாவின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பாகம், இன்றைக்கு இந்திய யூனியனில் வந்திருக்கும் கனம் சின்னதுரையவர்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மேலும், பிரஞ்சு ஆட்சிப் பொறுப்பில் இருந்த பாண்டிச்சேரி, காரைக்கால், சந்தரநாகூர் முதலிய பகுதிகளும், நம்மிடம் ஒப்படைக்கப்படாதவைகள், இப் பொழுது சேர்ந்திருக்கின்றன. அந்த விஷயத்தையும் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கோவா, டையூ, டாமன் தவிர, வேறு எந்த பாக்கெட்டும் கிடையாது, என்ற பெருமையை உன்னிப்பார்க்க ஏன் தவறியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. மற்ற பகுதிகளைப்போல், இவற்றையும் காந்திய முறையில் சேர்க்க காத்திருக்கிறோமேயல்லாமல், கையாலாகாத் தனம் இல்லை என்பதை அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். 22,000 அடிக்கு மேல், மனித வாசனையே இல்லாத, ஈ, காக்கை கூட பறக்காத, பூச்சி புழுக்கூட இல்லாத இடத்தில் அவர்கள் வந்திருக் கிறார்கள். அவர்களும் பழையகால நண்பர்கள் தானே தவிர வேறொன்றும் இல்லை. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய உறவு காரணமாக சீனர்களிடமிருந்து இந்த பீதி வந்திருக்கிறதோ என்று நினைக்கிறேன். அந்த நாட்டின் தலைவன் இந்த நாட்டுக்குத் தருவிக்கப் பட்டு அரசாங்க அவையில் சமமாகப் பேசும் வாய்ப்பு அளிக்கப்பட்டு இருந்தது உலக சரித்திரத்திலேயே இம்மாதிரிப் பார்த்திருக்க மாட்டார்கள், கேள்விப் பட்டிருக்க மாட்டார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த வேலை நிறுத்தம் இந்த நாட்டிற்கு வந்ததற்கு முக்கிய காரணம் வாஸ்தவத்தில் கனம் சின்னதுரை போன்ற பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்காரர்களைச் சார்ந்ததுதான். அவர்கள் தான் முக்கியமாக இந்த வேலை நிறுத்தத்திற்குக் காரணம். அவர்கள் செய்த தவறை உணர்ந்து அவர்கள் கன்னத்தில் போட்டுக்கொள்ளாது போனாலும் அவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு இந்த மாதிரியான தவறுகளை இனி மேல் புரியாமல் இருப்போம் என்றாவது சொல்ல வேண்டும். தவறைச் செய்து விட்டு அதன் பிறகு வீராப்புப் பேசுவதில் என்ன பிரயோசனம் இருக்கிறது அவர்களுக்கு என்பது எனக்குப் புரியவில்லை.

அவர்கள் விலைவாசியைப்பற்றி கூறினார்கள். விலைவாசி இறங்க வில்லை இறங்கவில்லை என்று கூறினார்கள். ஒன்று அவர்களுக்கு நான் சொல்வேன். இம்மாதிரியான அரசியல் வாதிகள், அரசியல் தலைவர்கள் இந்தத் தொழில் சங்கங்களில் தலையிடாமல் தனித்து இருந்தால் அன்றி இந்த விலைவாசிகள் இறங்கவே இறங்காது. அவர்கள் தலையிடாமல் இருந்தால் தான் இந்த நாடு தன்னுடைய நிலைக்கு வரும். எல்லா விலைவாசிகளும் அதன் அதன் விலைக்கு வரும். இந்தப் பாடத்தை அவர்கள் அறிந்து கொண்டு இனி மேலாவது அவர்கள் தலையிடாமல் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது

கற்றுக்கொண்ட பாடத்திலிருந்து அவர்கள் இனிமேலாவது தலை யிடாமல் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படி அவர்கள் இருந்தால் தான் நாட்டில் விளையக்கூடிய அத்தனை பொருள்களும் அதன்அதன் விலைக்கு விற்கப்படும்.

(Mr. Speaker in the Chair.)

உற்பத்தியாகக்கூடிய பொருள்கள் அதன் அதன் விற்பனை இடத்திற்கு வரும் என்பதை அவர்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மொழிப் பிரச்னை இதில் இடம் பெற்றிருக் கிறது. அதில் நான் நமது நிதி அமைச்சர் அவர்களைத்தான் குறை கூற வேண்டியதாக இருக்கிறது, எதிர்க் கட்சிக்காரர்களை அல்ல. நமது அரசியல் சட்டத்தில் 344-வது பிரிவில் இதைப்பற்றி ஸ்பஷ்டமாக கூறப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஏகமனதாக முடிவு செய்த விஷயம். நம்முடைய எதிர்கால தேசீய மொழி ஹிந்தி என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஆங்கிலம் என்று குறிப்பிடவில்லை. அது அமுலுக்கு வரவேண்டியது 1965 என்று இருக்கிறது. இந்தச் சபையிலுள்ள 152 அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்த கோடிக்கணக்கான மக்களுடைய கொள்கையை நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டும் என்று கோடிக்கணக்கான மக்கள் நிற்கிறார்கள், என்ற விஷயத்தை நினைவூட்டுகிறேன். இப்படிப்பட்ட கொள்கை இருக்கும்போது அதை நிறைவேற்றக்கூடாது என்று சொல்லக் கூடிய ஒரு சிலருடன் காம்ப்ரமைஸ் பண்ண வேண்டிய அவசியம் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. அதற்கு என்ன அவசியம் ஏற்பட்டிருக்கிறது? அதைப்பற்றி விளக்கமாகக் கூற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அகில இந்தியாவிலுள்ள அத்தனை மக்களும் இதனை ஆதரித்து நிற்கிறார்கள். இந்த மாகாணத்திலுள்ள பெரும்பாலான மக்களும் இதை ஆதரித்து நிற்கிறார்கள். அவர்களுக்குப் பக்க பலமாகத்தான் நாம் இருக்க வேண்டும். அந்த நிலைமையில் ஒரு சிலருக்கு ஏன் நாம் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறேன். அதற்கு என்ன அவசியம் வந்தது என்பதை அவர்கள் கவனிக்க வேண்டும். ஒரு சிலர் ஹிந்தி திணிக்கப்படுகிறது என்று அவர்கள் ஒருதரம் சொன்னால் நம் தலைவர்கள் பத்துதரம் பதில் சொல்லுகிறார்கள். அப்படி பதில் சொல்லும்போது காம்ப்ரமைஸ் பண்ணும் முறையில் பதில் சொல்லுகிறார்கள். அதற்கு அவசியம் என்ன? (சிரிப்பு). இந்த நிலைமையில் போய்க்கொண்டிருந்தால் வரப்போகும் மூன்று வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் நாம் எப்படி கட்டாயக் கல்வி திட்டத்தை அமுல் நடத்தப்போகிறோம் என்பது தெரியவில்லை. இதைப்பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கல்வி யில் விருப்பம் இல்லாதவர்கள் அதைக்கண்டு எதிர்ப்பார்கள். "கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்" என்று பாடியிருப் பதை மேற்கோளாகக் காட்டி பள்ளிக்குச் செல்லாமல் இருக்கிற வர்களிடம் கல்வியை திணிக்கக்கூடாது என்று சொல்வதற்கும் முன் வருவார்கள். அப்பொழுது நம்முடைய ஐந்தாண்டு





திட்டத்தில் கட்டாயக் கல்வியை எப்படிப் புகுத்துவது என்பதைப் பற்றியும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி அவர்களுக்காக நாம் காம்ப்ரமைஸ் செய்வது என்றால் அது நியாயமா? எதிர்காலத்தில் ஹிந்திதான் தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை நாம் ஏற்கனவே கடைப் பிடித்து வருகிறோம். மாணவர்களும் அதைக் கட்டாயமாகத்தான் படிக்கப்போகிறார்கள். அதைக் கட்டாயமாகச் சொல்லிக் கொடுத்தாலும் சரி கட்டாயமாக சொல்லிகொடுக்கா விட்டாலும் சரி, மாணவர்கள் அதைப் படிக்கத்தான் போகிறார்கள். ஹிந்தி வேண்டாம் என்று சொல்லக்கூடியவர்களுக்குக்கூட அநேகருக்கு ஹிந்தி நன்றாகத் தெரியும். அவர்களுடைய பிள்ளைகள் கூட ஹிந்தி படித்துக்கொண்டுதான் வருகிறார்கள். இப்படி ஹிந்தி வேண்டாம் என்று சொன்னால் யார் ஏமாந்து போகப்போகிறார்கள் என்றால் இதனுடைய அருமை உணராதவர்களும், சும்மா இருக்கிறவர்களும் கல்வியில் அக்கறை இல்லாமல் ரொம்பவும் பின்தங்கிய மக்களும்தான். அவர்கள்தான் இதனால் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஹிந்தியை பயன்படுத்திக்கொள்ளக் கூடியவர்கள்தான் முன்னுக்கு வருவார்கள். தேசீய மொழியான ஹிந்தியைக் கற்றுக்கொள்ளக் கூடியவர்களுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது எதிர் காலத்தில், கட்டாயம் அவர்கள் முன்னுக்கு வருவார்கள். மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். கறுப்புக்கொடியைக் காட்டுவார்களாம், நமது ஜனாதிபதி ராஜன் பாபுவுக்கு. இப்படிக் கறுப்புக்கொடி காட்டுவது என்பது நம்மிட மிருந்து அவர்கள் கற்றுக்கொண்டது. அதையே நம்மிடம் காட்டுகிறார்கள். ஸர் ஜான் சைமன் இந்நாட்டிற்கு விஜயம் செய்தபோது அவர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டுவது என்று முதலில் நாம் ஆரம்பித்தோம். அதை நம்மிடமிருந்து கற்றுக் கொண்டு நமக்கே காட்ட ஆரம்பிக்கிறார்கள். வெள்ளைக்காரன் போக வேண்டும் என்று நாம் காட்டினோம். அவர்கள் நமது ஜனாதிபதி வரவேண்டாம் என்று கறுப்புக்கொடி காட்டுகிறார்கள். இது என்ன ஆச்சரியம்! இது நம் நாட்டிற்கு அவசியம்தானா என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே ஹிந்தி விஷயத்தில் காம்ப்ரமைஸ் எதற்கு என்பதுதான் புரிய வில்லை. காம்ப்ரமைஸ் அவசியம்தானா என்பதையும் அறிய விரும்புகிறேன். அகில இந்தியாவிலும் இதை ஒப்புக்கொண் டிருக்கிறார்கள். பல முறை சிந்தித்துப்பார்த்தும் இதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நம்மை விட்டுப் பிரிந்து சென்ற கேரளம் இதை ஒப்புக்கொண்டிருக்கிறது, கன்னடம் ஒப்புக் கொண்டிருக்கிறது, ஆந்திரா கூட ஒப்புக்கொண்டிருக்கிறது. அந்த நிலைமையில் நம் ராஜ்யத்தில் மட்டும் ஏன் இதற்கு இவ்வளவு எதிர்ப்பு? மொழிப் பிரச்னைக்கு எதிர்ப்பு எதற்கு? இது அரசாங் கத்தின் கொள்கை. இதற்கு ஆட்சேபணை செய்கிறவர்கள் நாளைக்கு ஏன் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆட்சேபணை செய்யமாட்டார்கள்? இன்றைக்கு ஒரு சிலர் தேசத்திற்கு விரோதமான பணி செய்து வருகிறார்கள். அதனால் இதற்கெல்லாம் ஆட்சேபிக்கிறார்கள். இதற்காக அவர்களுடன்

காம்பரமைஸ் செய்துகொள்ள வேண்டுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது அவசியம்தானா என்பதை மறுமுறையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மூன்றாவதாக . . . . . . . .

(மணி அடிக்கப்பட்டு பேச்சு நிறுத்தப்பட்டது.)

* SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் நிகழ்த்திய விரிவான உரைமீது, சில வார்த்தைகள் மூலம் அதை ஆதரித்துப் பேசுவதற்கு சபையின் அனுமதி கோருகிறேன். குறிப்பாக அவர் இந்த நாட்டில் இருக்கக்கூடிய எல்லா நிலைமையையும் ஆராய்ந்து சாலச் சிறந்து விளங்க வைத்து இருக்கிறார் என்று நான் எண்ணுகிறேன். அதில் பல பிரச்னைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார், அதில் முக்கியமானது விலைவாசி உயர்வுப் பிரச்சினை. இப்பொழுது நாட்டில் தேவையான எல்லாப் பொருள்களுடைய விலையும் உயர்ந்து இருக்கிறது என்பதைப்பற்றி யாரும் மறுக்க முடியாது. மறுக்கவும் மாட்டார்கள். அதனாலேயே கவர்னர் பெருமான் அதற்கு தன்னுடைய உரையில் முக்கிய கவனம் செலுத்தி இருக்கிறார். இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்களோ அதைச் சீக்கிரத்தில் கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களின் விலையை கவனித்தால் அவைகளின் விலைகள் எல்லாம் விஷம் போல் உயர்ந்து கொண்டே போய்கொண்டிருக்கின்றன. இப்படி விலைவாசிகள் உயர்ந்து கொண்டிருப்பதால் மக்கள் அமைதியான நிலைமையில் இல்லாமல் இருக்கிறார்கள். குறிப்பாக ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாக நாட்டிற்கு எவ்வளவு நல்ல வேலைகளைச் செய்தாலும் அதிகப்படியாக ஆண்டுதோறும் மக்களுக்கு செலவு செய்து கொண்டு வந்தாலும் அவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களின் விலைகள் உயர்ந்துகொண்டே போய்க் கொண்டிருப்பதால் அவர்களால் அமைதியான வாழ்க்கையை நடத்த முடியவில்லை, அவர்கள் திருப்தி அடையாமல் இருக்கிறார்கள் என்பதை கவர்னர் அவர்கள் உரை எடுத்துக்காட்டுகிறது. இப்பொழுது விலைவாசிகளைப் பார்த்தால் ஒரு படி அரிசி ரூ. 1–6–0 என்றும், துவரம் பருப்பு ஒரு படி ரூ. 1-7-0 என்றும், எண்ணெய் வீசை ஒன்று ரூ. 3–4–0 என்றும் விற்கப்படுகிறது. இப்படி விலை விற்றால் எத்தனை 'பே கமிஷன்' போட்டாலும் திருப்தி அடைய முடியாது என்பதை நாம் உணர வேண்டும். இதைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு என்று பல குழுக்களை அமைக்கலாம். அந்தக் குழுக்கள் அவற்றை ஆராய்ந்து அறிவதற்கு பல ஆண்டுகளாகும். பல ஆலோசனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கும். அந்த முறையில் போனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்கூட தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாமல் போய்விடும். ஆகவே தேவைக்கு அவசியமாக உள்ள பண்டங்களின் விலைவாசி குறைவதற்கு வேண்டிய நடவடிக்கை



எடுத்துக்கொள்ள வேண்டும். அவசியமான பொருள்களை அதிகப் படியாக உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களாகிய அரிசி, பருப்பு, மிளகாய், எண்ணெய் வித்துக்கள் போன்றவைகளை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு அதிகப் படியான செலவு ஆகாமல் அவர்களுடைய 'காஸ்ட் ஆப் 'ப்ரொடக்ஷன்' எவ்வளவு குறைவாக இருக்க வேண்டுமோ அவ்வளவு குறைவாக இருக்கும் அளவில் கட்டுப்படுத்த வேண்டும். அதைச் செய்யாமல் விலையை மட்டும் கட்டுப்படுத்துவதில் பிரயோசனம் இல்லை. ஆகவே விவசாயிகளுக்கு மானியத் தொகையாவது கொடுத்து உற்பத்திச் செலவு அதிகமாகாமல் பார்த்துக்கொண்டு அதன் பிறகு விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும்போது அவர்களுக்குக் கொஞ்சம் லாபம் கிடைக்கும் அளவில் அமைக்க வேண்டும். இது மிக மிக முக்கியம். அப்பொழுதுதான் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளால் குறைந்த விலைக்குக் கொடுக்க முடியும். அதுதான் நியாயம். அத்துடன் சர்க்காருடைய இறக்குமதி, ஏற்றுமதிக் கொள்கையையும் கொஞ்சம் தளர்த்த வேண்டும். ஜாவாவிலிருந்து சர்க்கரை வந்து கொண்டிருந்தபோது எந்த அளவில் விற்கப் பட்டது? இப்பொழுது வீசை ஒன்றுக்கு ரூ. 1-11-0 கொடுத்தாலும் கிடைக்கவில்லை. எவ்வளவோ ஆலைகளை அமைத்தும் 24 லட்சம் டன் உற்பத்தி செய்தும் இன்னும் வீசை ஒன்றுக்கு ரூ 1–11–0 தான் விற்கப்படுகிறது. ஆகவே காலம் சரியாகும் வரையிலாவது இறக்குமதி ஏற்றுமதிக் கொள்கைகளைக் கொஞ்சம் கொஞ்சம் தளர்த்த வேண்டும். அந்த முறையில் இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்ய வேண்டும். இதைச் செய்யாமல் எத்தனை சம்பளம் கொடுத்தாலும் திருப்தி அடைய முடியாது. விலைவாசிகளைச் சமாளிக்க முடியாது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வெற்றி காண முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கப்புறம் வரும்போது குறிப்பாக திருத்தணிப் பகுதியை 12-00 noon.
சேர்த்துக் கொண்டோம் என்ற மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறோம். ஆனால் சேர்க்கப்பட்ட திருத்தணிப் பகுதியைச் சென்று பார்த்தால் அப்படிப்பட்ட ஒரு பகுதி இன்னுமா இருக்கிறது என்று வியப்பு அடைவோம். அவ்வளவு பின்தங்கியவையாக இருக்கிறது. ரோடுகள் கிடையாது. விளக்குகள் கிடையாது. திருவாலங்காட்டுக்குப் போய்விட்டு வந்தால் பத்து நாள் படுக்கையைவிட்டு எழுந்திருக்க முடியாது போய்விடும். ரோடுகள் அப்படியிருக்கின்றன. "இவை தமிழ் மாகாணத்தோடு சேரத்தானே போகின்றன" என்று அவர்கள் இப்படி அந்தப் பகுதியைப் புறக்கணித்து வந்தார்களோ என்னமோ நமக்குத் தெரியாது. ஆனால் காரைக்கால் அம்மையாருக்கு வீடு கொடுத்த திருத்தலம் இன்று அக்கறை காட்டப்படாமல் சீரழிந்து இருக்கிறது. உடனடியாக பணத்தை ஒதுக்கிவைத்து திருவாலங்காட்டுக்கு ரோடு போடவேண்டும். அந்தமாதிரி இன்னும்

[Srimathi T. N. Anandanayaki] [8th August 1960

எத்தனை ரோடுகள் இருக்கின்றனவோ, நமக்குத் தெரியவில்லை. உடனடியாக இப்பிரதேசத்திற்கு ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்து அங்கே ரோடு வசதி, விளக்கு வசதி ஆகிய எல்லா வசதிகளையும் அளிக்கவேண்டும். அப்போதுதான் திருத்தணிப் பகுதி நம்மோடு சேர்ந்தது என்ற மகிழ்ச்சி பூர்த்தியாகும்.

மூன்றாவதாக எங்களைப் போன்ற சென்னை நகர பிரதிநிதிகளுக்குத் தலைவலி பிரச்சினையாக இருப்பது சேரிப் பிரச்னை. சேரிகளை எல்லாம் சிங்காரத் தோட்டங்களாகச் செய்துவிடுவோம் என்று வாயடி அடித்து உள்ளே சென்ற கட்சிக்காரர்கள் எப்படித் தான் தூங்கிக்கொண்டிருக்கிறார்களோ நமக்குத் தெரியவில்லை. சேரிக்கும் வரி போடுவதை கண்டார்களே தவிர சேரி ஒழிப்புக்காக நான்கு கோடி ரூபாய் ஒதுக்கி வைத்து கூவத்திற்கு வடக்கே கார்ப்பரேஷன், தெற்கே ஸி.ஐ.டி என்று பிரித்து வைத்தும் எவ்விதமான நடவடிக்கையும் சேரி ஒழிப்பில் அக்கறையோடு எடுத்துக்கொள்ளவில்லை. அடுக்குமொழியில் பேசி அவர்கள் வோட்டுக்களை எல்லாம் பெற்று அதிகாரத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிற அந்த கட்சியார் என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்க்கிறபோது பெரிய கேள்வி ஒன்றைத்தான் போடவேண்டியிருக்கிறது. ஒரு சேரியும் சீர்த்திருத்தப்படவில்லை. அதற்காக மாநில அரசாங்கமே அதை எடுத்து துரிதமாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்குச் சட்டம் போட வேண்டுமென்று கவர்னர் பெருமான் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறேன். ஏற்கெனவே இருக்கிற சட்டத்தை அமுல் நடத்தினாலே போதும். புதிதாக ஒரு சட்டம் அவசியம் இல்லை. இருந்தாலும் புதிதாக வருகின்ற சட்டத்தையும் வரவேற்கிறோம். எப்படியாவது சேரிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். என் தொகுதிக்குச் சென்றால்—கண்ணில் தண்ணீர் அல்ல—ரத்தம் சொட்டும். அவ்வளவு மோசமான நிலைமையில் சேரிகள் இருக்கின்றன. தனியார் தோட்டங்களில் இருந்தாலும், பொதுவிடத்தில் இருந்தாலும் அந்தச் சேரிகளை எல்லாம் உடனடியாக சீர்திருத்தம் செய்வதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்குப் பின்னர் வரும்போது நம்முடைய மாகாணத்தில் தொழில் வளம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு போவதுபற்றி மகிழ்ச்சி அடைகிறேன். கவர்னர் பெருமான் உரையில் இரும்பு உருக்குவதிலிருந்து, அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்தும் வரையில் இதாலி, ரஷியா, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளில் இருந்து பல தொழில் நிபுணர்களை வரவழைத்து நடவடிக்கை எடுத்திருப்பது மிகமிக போற்றத்தக்கது. முக்கியமாக இன்று நம்மை எதிர்நோக்கி இருக்கும் பிரச்னை வேலையில்லாத் திண்டாட்டம். அதிகமான மாணவர்கள் இன்றையதினம் படித்து விட்டு வேலை கிடைக்காமல் திண்டாடுகிற நிலைமை பரிதாபமாக இருக்கிறது. இந்தப் பரிதாபகாமான நிலைமையைப் போக்குவதற்கு அவசரமாக, அவசியமாக தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டாகவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் எத்தகைய



8th August 1960] [Srimathi T. N. Anandanayaki]

செல்வார்கள் என்று சொல்ல அபாயகரமான பாதையில் முடியும். முடியாது. நாட்டுக்கே இந்தப் பிரச்சனை ஆபத்தாக திண்டாட் ஆகவே மிக அதிகமான அளவில் வேலையில்லாத் வேண்டும். டத்தைப் போக்குவதற்கு தொழிற்சாலைகள் பெருக வேண்டி தொழில் வாய்ப்புகள் அதிகரிக்க வேண்டும். அதற்காக நடவடிக்கையை பல தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்காக மேற்கொண்டிருப்பதற்கு நான் பாராட்டமல் இருக்க முடியாது என்று சொல்ல விரும்புகிறேன். இரும்புத் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை எல்லாம் நம் நாட்டில் ஏற்பட்டு விட்டால் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லி வந்தவர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும், தெற்கு இதர பகுதிகளுக்கு வழிகாட்டியாகிவிடும் என்று நம்புகிறேன்.

தொழிலை வளர்த்துவிட்டால் போதாது. தொழிலாளர் சூழ்நிலை களுடைய நிலைமையை யோசித்துப் பார்க்கவேண்டிய வளர்ந்து வருகிறது. இன்றைக்கு தொழிலாளர்களுடைய நிலைமையைச் சீர்குலைத்து, தொழில் துறையில் நிலவவேண்டிய அமைதியைக் குலைத்து வருகிறவர்கள் தன்னலம் படைத்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள்தான். இனி மத்திய சர்க்காருடைய தொழில் நிலையங்கள் சம்பந்தப்பட்டவரை அங்கு உள்ள தொழிற்சங்கங்களுக்குத் தலைவராகவும், காரியதரிசியாகவும் தொழிலாளர்களைச் சேர்ந்தவர்களேதான் வரவேண்டும். இதர தன்னல அரசியல் கட்சிக்காரர்கள்—வெளியாராக இருப் பவர்கள்—வரக்கூடாது என்று செய்கிறார்கள். அது மிக ....மிக வரவேற்கத் தக்கதாகும். அது எந்த தொழிற்சங்கமாக இருந் தாலும், சர்க்கார் தொழில் ஸ்தாபனத்தைச் சேர்ந்ததாக இருந் தாலும், தனியார் தொழில் ஸ்தாபனத்தைச் சேர்ந்ததாக இருந் தாலும் இனிமேல் அந்த அந்த ஸ்தாபனத்தில் வேலை செய்யக் கூடியவர்களே தலைவராகவும், காரியதரிசியாகவும் வரவேண்டும் என்பதாகச் செய்ய வேண்டும். இதைச் செய்து பிற ராஜ்யங் களுக்கே நாம் வழிகாட்டியாக இருக்கவேண்டும். ஏனென்றால் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும், அவர் களுடைய குறைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும் என்பதை நாம் ஆதரிக்கிறோம். ஆனால் தொழிலாளர்களுடைய வோட்டு வாங்கும் பகடையாகக்கொண்டு சில தன்னல அரசியல் கட்சிகள் அவர்களிடையே புகுந்துகொண்டு அமைதியைக் குலைத்து வருவதை அனுமதிக்கக்கூடாது. தேர்தல் வருகிறது என்றால் உடனே வேலைநிறுத்தம் என்றும், கோரிக்கை மகஜர் என்றும் தொழிலாளர்களை இந்தத் தலைவர்கள் கிளப்பிவிட்டு தங்கள் சாதனைகளாகச் சொல்லிக்கொள்வதற்காக 'எலெக்ஷன் ஸ்டண்டு' நடத்துவதற்கு அனுமதிக்கக்கூடாது. இதனால் தொழில் அமைதி பெரிதும் பாதிக்கப்படும். ஆகவே தொழில் துறையில் அமைதி நிலவுவதற்கும், அதே சமயத்தில் தொழிலாளர்களுடைய நிலைமை சீராக உயர்வதற்கும் தொழிற்சங்கங்கள் நல்ல முறையில் இயங்க தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளைத் தவிர வெளி ஆட்கள் தொழிற்சங்கங்களுக்குள் புகுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பீடித் தொழிலாளர்களுடைய பிரச்சனையைப் பொறுத்த
வரையில் ஒரு சுமுகமாக ஏற்பாட்டுக்கு வந்திருப்பதாகப்
பாராட்டுகிறேன். மேலும் அச் சட்டத்தில் உள்ள சில நிபந்தனைகளை
வற்புறுத்தக்கூடாது. காரணம் அப்படி வற்புறுத்துவது என்றால்
மைசூர், ஆந்திரா போன்ற மாகாணங்களுக்கு இந்தத் தொழிலே
போய்விடக்கூடிய நிலைமை ஏற்படும். அப்படிப்பட்ட அச்சத்
திற்கு இடம் அளிக்காத வகையில் அதில் உள்ள நிபந்தனைகளை
வற்புறுத்தக்கூடாது.

அடுத்தபடியாக மின்சாரத் துறையில் நாம் அதிகமாக
முன்னேறி வருகிறோம். ஓரளவுக்கு தொழில், விவசாயப் பெருக்கத்
திற்காக மினிமம் சார்ஜை தளர்த்தியிருக்கிறோம். இருந்தும்
இன்னும் எட்டு லைசென்சுதாரர்கள் இருக்கிறார்கள். ஏற்கென
வேயே அவர்கள் சரியான முறையில் அந்தப் பகுதிகளில்
மின்சாரத்தை விஸ்தரிப்பது இல்லை என்ற புகார்கள் இருந்து
கொண்டிருக்கின்றன. அப்படி இருக்க இன்னும் அந்தக்
கம்பெனிகளைத் தேசியமயமாக்காது தனியார் கையிலேயே அந்த
எட்டு வினியோகக் கம்பெனிகளையும் இருக்கும்படியாக விட்டு
வைத்திருப்பதன் காரணம் தெரியவில்லை. காரணம் மினிமம்
சார்ஜ் அதிகம் கேட்கிறார்கள். அரசாங்கம் கேட்பதைவிட
அதிகச் சதமானம் கேட்கிறார்கள். அவர்கள் சொல்வது, நாளையே
அரசாங்கம் எடுத்துக்கொண்டுவிடும், ஆகவே, எங்களுக்கு அதனால்
லாபம் என்று. அதோடு, நாங்கள் அரசாங்கத்தினிடம் கடன்
கேட்டிருக்கிறோம், அவர்கள் கொடுத்தால் பார்த்துக் கொள்ளலாம்
என்று சொல்கிறார்கள். இதனால் கிராம மக்கள் விவசாயத்
துறையிலும் மற்ற வகைகளிலும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே,
அரசாங்கம் துரிதமாக இந்தக் கம்பெனிகளை தேசியமயமாக்க
வேண்டும். இல்லாவிடில் லைசென்சுதாரர்கள் மின்சாரம் கொடுக்
காத இடங்களில் அரசாங்கமே நேரடியாக கொடுக்கும் அதிகா
ரத்தை அவர்களே எடுத்துக் கொள்ள வேண்டும். எல்லாக்
கிராமங்களும் அழகாக மின் ஒளியோடு திகழும்போது ஒரு சில
கிராமங்கள் மட்டும் வாடி வதங்கிக் கொண்டிருக்க வேண்டிய
சூழ்நிலை நமக்குத் தேவையில்லை. ஆகவே, அதிலும் முற்போக்கு
காட்டினால் நல்லது, காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு
கிறேன்.

இறுதியாக தூத்துக்குடி துறைமுகத்தைப்பற்றி ஒரு வார்த்தை.
செய்தித்தாள்களில், தூத்துக்குடி துறைமுகத்தையும், மங்களூர்
துறைமுகத்தையும் இப்பொழுது எடுத்துக் கொள்ளப் பட
மாட்டாது, ஒதுக்கியிருக்கக்கூடிய பணத்திற்குள் அவை வர
முடியாது என்ற செய்தியை பார்த்தோம். அதை நாம் விடக்
கூடாது. எப்படியாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்
அதைச் சேர்த்தேயாக வேண்டும். தூத்துக்குடி துறைமுகத்
திட்டத்தை எப்படியாவது மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில்
சேர்ப்பதற்கு வேண்டியதைச் செய்ய வேண்டும். நமது நிதி
அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்





கொண்டிருப்பார்கள் என்றாலும் இன்னும் விடாப்பிடியாக நட
வடிக்கைகள் எடுத்துக் கொண்டு அதை மூன்றாவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் சேர்க்க வேண்டும். இதுபற்றி எதிர்கட்சிக்காரர்கள்
சொல்ல வேண்டியதில்லை. நமக்கே அதில் விருப்பம் இருக்கிறது.
அதை செய்தே தீரப் போகிறோம். ஆகவே, கனம் நிதியமைச்சர்
அவர்கள் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள்
எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
இதனால் வேறு மாகாணங்களில் அதிகத் தொகை போட்டுச் செய்
வதைக் குறைத்தாவது தூத்துக்குடி துறைமுகத்தை விரிவு படுத்த
வேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டும். அதனால் நமது
மாநிலத்தின் வியாபார வசதிகளை அதிகப்படுத்த முடியும்.
ஆகவே, இதில் கவனம் செலுத்துவது மிக முக்கிய தேவையாகும்.
அதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்
கொண்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதைக் கட்டாயம்
சேர்த்துக் கொள்ளும் என்று நினைக்கிறேன்.

* **SRI V. SUBBIAH :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர்
பெருமான் அவர்கள் உரையில் பல நல்ல திட்டங்கள் இருந்தாலும்
கூட நமது ராஜ்யத்தில் பெருமளவில் விவசாய மக்களுக்கு அடுத்த
படியாக இருக்கக் கூடிய கைத்தறி நெசவாளர்களின் நிலை பற்றி,
அவர்களுக்கு ஓரளவாவது முக்யத்துவம் கொடுத்து அவர்கள்
நிலை பற்றி கூறாமல் இருப்பது குறித்து வருந்தாமல் இருக்க முடிய
வில்லை. இன்று நம் ராஜ்யத்தில் லட்சக்கணக்கான தறியாளர்கள்
மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். புராதனமான
இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் இன்று மிகவும் கஷ்டப்
படக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். விசைத்தறி கதரோடு
இணைக்கப் பட்டு அவர்களை நாம் காப்பாற்றிக் கொண்டிருக்
கிறோம். அவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம், ரிபேட்
என்ற முறையில். இந்நிலை மாறவேண்டும். அந்தத் தொழிலில்
ஈடுபட்டிருக்கக் கூடிய மக்களுக்கு நாம் ஒரு வகையை
ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இல்லா
விடில் அவர்களுக்காக அரசாங்கம் பல கோடி ரூபாய் செல
வழித்துக் கொண்டிருக்கும் நிலைதான் இருக்கும். அடுத்தபடி
யாக, விவசாயம் பற்றி கவர்னர் அவர்கள் குறிப்பிடும்போது
குறிப்பிட்டிருக்கிறார்கள், பல ஜில்லாக்களில் மழை பெய்யாது, ஏரி,
குளங்கள், கண்மாய் இவைகள் நிரம்பாது, அதன் காரணமாக
உற்பத்தி குறைந்து விட்டது என்று. உண்மையிலேயே, மழை
பெய்யாததன் காரணமாகத்தான் கண்மாய்கள் நிறையவில்லையா?
அதற்குக் காரணம், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் நாம்
கவனம் செலுத்தாத குறைதான். இன்று உணவுப் பொருள்களின்
விலைவாசி ஏறுகிறது என்றால் அதற்குக் காரணம் பணப்
புழக்கம் மட்டுமல்ல. அது ஓரளவு இருக்கலாம். உணவுப்
பொருள் உற்பத்தி குறைந்திருப்பதுதான் அதற்கு முக்கிய
காரணம். எங்கள் பகுதியை எடுத்துக் கொண்டால், திருநெல்
வேலி ஜில்லாவில் வட கோடியில் உள்ள இரண்டு மூன்று

[Sri V. Subbiah] [8th August 1960

தாலுகாக்கள் இராமநாதபுரம் ஜில்லாவில் தென் பகுதியில் உள்ள இரண்டு மூன்று தாலுக்காக்கள் இன்று மிகவும் வறண்ட பிரதேசங்களாக, மக்கள் தண்ணீர் ஓடுவதை மாதக்கணக்கில் கண்ணுலேயே பார்க்கமுடியா திருக்கும் தாலுக்காக்கள். அவை, மேற்குத் தொடர்ச்சி மலைப்பக்கத்தில் இருக்கக்கூடியவை. கேரளாவில் ஏராளமான ஜீவ நதிகள் உற்பத்தியாகி அதன் தண்ணீர் அரபிக் கடலில் போய்க் கொண்டிருக்கிறது, விணுக. அப்படியிருந்தும் அந்தத் தண்ணீரை கேரள மக்கள் நமக்குக் கொடுக்கத் தயாரா யில்லை. நமது துரதிருஷ்டவசமாக, அதிகப் பற்றுக்குறை இருக்கிற காரணத்தால், கேரளத்திற்கு அரிசி அனுப்பக் கூடிய நிலையில் இல்லாதிருக்கிறோம். ஆகவே, அவர்கள் நமக்கு தண்ணீர் கொடுக்க மாட்டேன் என்று சொன்னுல் அதற்கு நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. அது மட்டுமல்ல. இன்று கோவை ஜில்லாவை எடுத்துக் கொண்டால், கவர்னர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறுர்கள், பரம்பிக்குளத் திட்டத்தைப் பற்றி. பரம்பிக் குளம் அல்ல, அமராவதி அல்ல, பவானி அல்ல, இது போன்ற 90 %-க்கு மேல் கோவை ஜில்லாவில் நீர்ப் பாசன வசதிகள் இருக்கின்றன. அதற்கு நமது அமைச் சர்கள் பொறுப்பாளிகளாக இருக்கிறுர்கள். ஆகவே இனி மேலாவது எங்கள் ஜில்லாவைப்பற்றி கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன். கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் நீர்ப்பாசனத் திட்டங்கள் இல்லையென்று 50 வருடங்களாகவே சொல்லிக் கொண்டு வருகிறோம். கேரளா தண்ணீர் கொடுக்கவில்லை என்றுல், எங்கள் பகுதியில் ஓடுகிறது, சித்ரா நதி. அதில் அணையில்லை. அங்கு ஒரு அணை கட்டி தண்ணீரைத் தேக்கினுல் பல மைல்களுக்கு அது புலன் அளிக்கும். வைப்பார் எங்கள் பகுதியில் ஓடுகிறது. அது மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து ஓடிக் கொண்டிருக்கிறது. அதில் ஒரு தேக்கம் கட்டினுல் பல கண்மாய்களில் தண்ணீர் நிரப்ப முடியும். அந்தத் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. எங்கள் பகுதியில் பல சிற்ருேடைகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆக, பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் சேர்ப்பதற்கு அரசாங்கம் விட்டு விட்டார்கள் என்று சொல்ல முடியும். இன்று அரிசிப் பற்றுக்குறை, நவ தான்யப் பற்றுக்குறை இவையெல்லாம் இருக்கத்தான் செய்யும். அரசாங்கமும் அதை ஒப்புக் கொள்ளத்தான் செய்கிறுர்கள். அடுத்தபடியாக, வைகைத் திட்டம் வந்த பிறபாடு அங்கு தண்ணீர் நிரம்ப ஓடிக் கொண்டிருக்கிறது. வரண்ட பிரதேசங் கள் எல்லாம் இன்று குளுமையான பிரதேசங்களாக மாறியிருக் கின்றன. அதேபோன்று, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் உடனடியாக கவனிக்க வேண்டும். அரசாங்கத்தின் வருவாயி லிருந்தே அதைச் செய்ய முடியும். அவைகளை, கேரளா அல்லது மற்ற மாகாணங்களை எதிர்பார்க்காமலேயே செய்ய முடியும்.

அடுத்தபடியாக, இன்று கிராமங்களிலிருந்து மக்கள் நகரங் களுக்குக் குடியேறிக் கொண்டிருக்கிறுர்கள். மதிப்பிற்குரிய ஒரு



8th August 1960] [Sri V. Subbiah]

மெம்பர் அவர்கள் குறிப்பிட்டார்கள், நகரங்களில் வீடு கட்டும் திட்டங்கள், சேரித்திட்டங்கள் எல்லாம் பயங்கரமாக இருக் கின்றன என்று சொன்னுர்கள். எந்த அரசாங்கம் வந்தாலும் இதற்கு ஒன்றும் செய்யமுடியாது. கிராமப் பொருளாதாரம், நகரப் பொருளாதாரம் இவைகளை எடுத்துக் கொண்டால் இன்னும் ஒரு சில வருடங்களில் கிராமங்களே அழிந்து எல்லோரும் நகரங்களுக்கு குடியேறி விடுவார்கள். அப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க முடியவில்லை. காரணம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்தான். இதற்குக் காரணம் என்னவென்று சிந்திக்க வேண்டும். தொழிற் சாலைகள் எல்லாம் பரவல் முறையில் அல்லாது, குவியல் முறையில் நகரங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. கிராமங்களில் தொழில் பேட்டைகள், எஸ்டேட்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, இண்டியில் இருப்பதைப் போன்று. அன்றே காந்தியடிகள் சொன்னுர்கள், பரவல் முறையில்லாதிருந்தால் இந்த நாட்டில் சேரிப் பிரச்னை அதிகரிக்கும் என்று. பல கோடி செலவு செய்தும் கூட, அரசாங்கம் மான்யங்கள் கொடுத்தும் கூட இப்பிரச்னையைத் தீர்க்கமுடியவில்லை. ஆகவே, நாம் செய்ய வேண்டியது என்ன வென்றுல், கிராமப் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். கிராமங்களில் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும். கிராமங்களில் இயந்திரத் தொழிற்சாலைகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்பொழுது மக்கள் கிராமங்களிலேயே தங்குவார் கள். அதில்லாமல் நகரங்களில் கூடுதல் வசதி செய்து கொடுக்கக் கொடுக்க கிராம மக்கள் நகரங்களில் குடி யேறிக் கொண்டேயிருப்பார்கள். இன்று கிராமங்களில், கிராம மக்கள் தண்ணீரற்ற நிலையில், வருமானமற்ற நிலையில், வீடற்ற நிலையில் வாழ்கிறுர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. கவர்னர் பெருமான் அவர்களே பரவல் முறை வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறுர்கள். அதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். அவர்களை வாழ்த்துகிறேன்.

அடுத்தபடியாக மின்சாரத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இதைப்பற்றி விரிவாகப் பேசுவதற்கு மின்சார பட்ஜெட் வரும்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நம்புகிறேன். இப்போது கனம் மின்சார அமைச்சர் அவர்கள் அதிர்ஷ்ட வசமாக இங்கு வீற்றிருக்கிறுர்கள். குறிப் பாக, எடுக்காத மின்சாரத்திற்கு மினிமம் சார்ஜை எடுத்து விட்டதற்காக அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. விவசாயிகளுக்கு ஒரு பெரும் பாரமாக இருந்து வந்ததை நீக்கி விட்டார்கள், அதோடு மேலும் விவசாயிகளுக்கு இருந்து கொண் டிருக்கும் சில கஷ்டங்களை கனம் அமைச்சர் அவர் களுடைய ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கிராமங்களில் விவசாயிகள் உபயோகிக்கும் மின்சாரத் திற்குக் கொடுக்கப்படும் கட்டணத்தைப் பார்த்தால், நகரங் களில் பெரிய தொழிற்சாலைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கட்டணத்தை விடக் கூடுதலாகவே இருந்து கொண்டிருக்கிறது.

இதில் பெரிய ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கிராமங்களில் விவசாயத்திற்கு யூனிட்டு ஒன்று 1½ அணாவுக்கு கொடுக்கப்படுகிறது என்றால், நகரங்களில் பெரிய தொழிற்சாலைகளுக்கு ½ அணாவுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இது தவிர டெப்பாசிட் கட்டுகிறார்கள், வருஷாந்திர மினிமம் சார்ஜ் கொடுக்கிறார்கள், சர்சார்ஜ் கட்டுகிறார்கள். அது மட்டுமல்ல, இன்றைக்கு 'க்ரூப்பிங் ஸிஸ்டம்' என்ற ஸிஸ்டத்தின் கீழ் விவசாயிகள் படுகிற கஷ்டங்களைச் சொல்லி முடியாது. விவசாயிகளில் சிலர் ஒரே ஒரு கிணறுதான் வைத்துக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு இரண்டு ஏக்கர்களுக்கு நடவு போட வேண்டுமானால் 20 கூலி ஆட்களையும் வேலைக்கு அமர்த்தி 12 மணிக்கு வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்றிருந்தால், நடவு ஆரம்பிக்கும் போது ஃப்யூஸ்-ஐ எடுத்து விடுகிறார்கள். இதனால் வேலை தடைபடுகிறது. அதே சமயத்தில் 20 கூலிகளுக்கும் முழுக் கூலியும் கொடுக்கவேண்டியிருக்கிறது. விவசாயக் கூலிகள் கிடைப்பதே கஷ்டமாயிருக்கிறது, அப்பேர்ப்பட்ட நிலையில் பாதி நாட்கள் வேலை செய்தாலும் முழு நாட்களுக்குள்ள கூலி கொடுத்தாக வேண்டும். அதுமட்டுமல்ல, ஃப்யூஸ் அடிக்கடி மாற்றப்படும் போது மோட்டார் பர்னாகி எரிந்து போகிறது. எங்கள் பகுதியில் பல இடங்களில் இவ்விதம் நடந்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றியுள்ள விவரங்கள் அமைச்சர் அவர்களுக்கு வராமல் இருக்கலாம், அல்லது இதைப்பற்றி அறியாமல் இருந்திருக்கலாம். ஆகவே இதை உடனடியாக நேரில் பார்வையிட்டு வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களானால் இன்னும் நமது மின்சார அமைச்சர் அவர்களை பாராட்ட முடியும், வாழ்த்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் ஆதாரக் கல்வியை பரப்புவதற்காக எவ்வளவோ திட்டம் போட்டிருக்கின்றோம். ஆனால் பல லட்சக்கணக்கான கிராமங்களிலுள்ள குழந்தைகளுக்கு படிப்பதற்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. பல வசதியற்ற குழந்தைகள் படிப்பதற்கு எந்த விதமான வசதியுமில்லாமல் மாடு மேய்க்கின்ற தொழிலைத்தான் முக்கியமாகக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரிப்பட்ட குழந்தைகளை எல்லாம் கட்டாயக் கல்வியின் கீழ் கொண்டு வர வேண்டும். கட்டாயக் கல்வியைப்பற்றி கவர்னர் பெருமான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை சில இடங்களிலாவது முன் மாதிரியாகக் கொண்டு வந்து கிராமப் பகுதியிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI S. RANGANATHA MUDALIAR : Mr. Speaker, Sir, while supporting the motion of the hon. Mr. Lazar, I wish to make a few observations. His Excellency the Governor's Address is a remarkable statement, remarkable in the sense that it is modestly



worded and free from bombast. The nature of the statement cannot be better described than in the words "Much has been done for the improvement of the living conditions of the people of this State and much more remains to be done." That means our Government takes credit for what has been achieved but does not claim credit fo what it proposed to do or what it meant to do.

I wish to express my grateful thanks to His Excellency for according welcome to my constituents. The addition of Tiruttani area is important not only from geographical and economic aspects but also from a political aspect. The addition of Tiruttani taluk is not merely an augmentation of area of this State or its population; Its political significance is important. It is acquisition of strength to the Congress Party. I may tell without exaggeration that 90 per cent of the population of Tiruttani taluk are either full-fledged Congress members or Congress-minded people. It is no exaggeration to state that these people are not aware of the existence of any other party and their genuine sympathy with that great organisation must have become manifest to the Hon. Ministers who happened to tour my area during the recent weeks.

Another contribution, of which I feel proud, which the Tiruttani people have made is the creation of the Pataskar formula. We have been responsible for this formula, the best formula for the solution of the border troubles in future. This has been so acclaimed on more than one platform by the present Congress President and we are glad to say that it is the outcome of the collaboration of our present Congress President and our doughty Chief Minister.

His Excellency in his Address referred to the settlement of the much vexed question of official language. We are glad that the formula of prolonged bi-linguism, i.e., both Hindi and English, has been accepted at the Government of India level, and at the State Government level the regional language has been adopted as the medium in Government institutions and other institutions. Tamil has become the State language and similarly in Andhra Pradesh, efforts are being made to make Telugu as the State language. This is what it ought to be.

The achievements of our State have been many. So far as I am able to see with my short experience, the benefits derived by our people have been manifold. Particularly in the field of education we are given to understand that a sum amounting to Re. 1 out of every income of Rs. 5 is set apart for education, an achievement which no other State has been capable of. Free and compulsory education has been introduced and we are told in the Governor's Address that a start has been given to it. We are also glad to be told that the ambition of our Chief Minister is to extend this compulsory free education so as to cover all High School classes. The mid-day meal scheme, I observe, has become very popular and panchayats vie with one another for working it on a voluntary basis.

[Sri S. Ranganatha Mudaliar] [8th August 1960

Talking of education in our Tiruttani taluk, though it is not even four months since its addition to our State, we are glad to say that three High Schols, one Basic Training School and a Girls' High School have been started, not to mention a number of Elementary Schools that have come into existence owing to the very liberal policy of the Government and owing to the particular attention which this Government has been pleased to devote to our
12-30 p.m. area considering the fact that it has been an undeveloped area and that it was no man's land all these years. That itself will show the amount of interest that our State Government have been taking in the matter of education. I must say that education is being imparted at great speed. I should say that the spread of education has been going on at electric speed in the Tiruttani taluk. Having said that, I do not know how to compare the extension of electricity in that taluk, especially the speed at which power is being extended to our neglected area. You will be glad to know that 50 per cent of the area has already been electrified and we are told by the Government that steps will be taken to electrify the other parts also. We are indeed pleased to note that the departmental heads and authorities from top to bottom have been taking very lively interest in our welfare and they were pleased to promise us that by the end of this year, the whole of the benighted taluk of Tiruttani will be electrified. Another great achievement—for which we are thankful to the Government—is the abolition of the levy of the unconnected minimum charges and the promised liberalised rules on the minimum guarantee. These will really be a boon to the rural population and will give no small encouragement to the extension of electricity and power in rural areas.

Still another great achievement for which we must all feel proud is the plan for decentralisation of administration. Such decentralisation, we are told, is working very well in Rajasthan and it has been recently started in Andhra Pradesh. How it is being worked out, is being watched by us. We are told that the National Extension Services and the Community Development schemes will come under the charge of the Village Panchayat Unions, with the village panchayats as agencies of the State for administering the schemes relating to village sanitation, rural health, village roads, etc., and with the Panchayat Councils entrusted with schemes relating to agriculture, rural communications, rural industries, rural education. We shall be deemed to have travelled far on the road of decentralisation.

One other great and important achievement by which our Government have endeared themselves to their employees is the ready and outright implementation of the recommendations of the Pay Commission. The implementation has been given effect to from 1st June, I am told. I think it has given universal satisfaction to all the employees. I know the State employees in Andhra Pradesh are feeling envious about the treatment, the much better treatment given to our Government employees on account of this liberal implementation.



8th August 1960] [Sri S. Ranganatha Mudaliar]

The great industrial projects adumbrated in the Governor's Address, viz., the Neiveli Lignite Project, a Steel Unit in Salem, Fertiliser Factory under construction in Neiveli, the Paper Industry Project in Mettur area, the proposed Aluminium Factory at Salem, the Raw Film Plant at Ootacamund, a Surgical Instruments Plant and an earth-moving machinery plant near Madras, the grant of licence to three sugar mills, the starting of more and more sugar mills are really very grand schemes in the public sector. When they reach fruition, they will be achievements, they will be record achievements over which any Government may take justifiable pride. Thank you, Sir.

* **Sri M. R. KANDASWAMI MUDALIYAR**: கனம் சபைத் தலைவர் அவர்களே, நம்முடைய கவர்னர் பெருமானின் உரையை வரவேற்கும் முறையில் சுற்சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, நம்முடைய மாகாணத்திலே பெருமைப் படக் கூடிய முறையிலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்தி பல துறைகளிலும் நாம் அபிவிருத்தி அடைந்திருக்கிறோம். அதை எடுத்துக்காட்டாக வைத்து மேற்கொண்டு மூன்றாவது திட்டத்திலே நாம் செலவழிக்கக் கூடிய ரூபாயை எந்த முறையிலே, எந்த அளவிலே செலவு செய்தால் நம்முடைய நாட்டுக்கு நல்லதொரு பணி செய்ய முடியும் என்ற நம்பிக்கையை இரண்டாவது திட்டத்தின் செயலிலிருந்து புரிந்துகொண்டோம் என்று கவர்னர் பெருமானின் உரையில் சொல்லியிருப்பதானது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம்—போற்றுதற்குரிய விஷயம். காரணம், முதலில் 152 கோடி ரூபாய் செலவழிப்பது என்று திட்டமிட்டிருந்தோம். அதிலே பற்பல துறைகளில் எவ்வளவோ அபிவிருத்தி செய்ய வேண்டிய வேலைகள் திடீரென்று ஏற்பட்ட காரணத்தினால், 152 கோடி ரூபாய் போதாமல் 181 கோடி ரூபாய் வரையில் திட்டங்களைப் போட்டு இரண்டாவது திட்டத்தில் வேலைகளைச் செய்து வந்திருக்கிறோம். அந்த அளவில் நமது ராஜ்யத்தில் நல்ல முறையில் அமைச்சர்களெல்லாம் பணி புரிந்த காரணத்தினால் பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டிருக்கிறோம். அதிலே உணவு விஷயத்தில் முக்கியமான முன்னேற்றம் கண்டிருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே இரண்டாவது திட்ட ஆரம்பத்தில் 10 லட்சம் டன் தான்யம் உற்பத்தியாகிக் கொண்டிருந்ததானது இப்போது 15 லட்சம் டன் அளவுக்கு உற்பத்தியாகக் கூடிய வகையில் திட்டங்களைப் போட்டு நிறைவேற்றி வந்திருக்கிறோம். அதிலே நாம் போடக் கூடிய திட்டங்களை நிறைவேற்றக் கூடிய வகைகளிலே பல அரசியல் கட்சிகள் குறுக்கிட்ட காரணத்தினால், குறுக்கிட்டுக்கொண்டு இருக்கின்ற காரணத்தினால்தான் பல நல்ல காரியங்களைக்கூட நல்ல முறையில்—சுமுகமான முறையில்—நடத்தி வைக்க முடியாமல் இருக்கிறது. அந்த முறையில் பலவிதமான இன்னல்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. அந்தக் காரணத்தினால்தான் நம் கவர்னர் பெருமான் கூட தன்னுடைய உரையில் இதைப்பற்றி முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறார். நாட்டுக்குக்

கெடுதலை உண்டாக்கக் கூடிய—சூழ்நிலையை உண்டாக்கக் கூடிய—வேலை நிறுத்தம் தீர்ந்து விட்டது என்று அவர் மகிழ்ச்சியடைந்திருக்கிறார் என்று சொன்னால் வேலை நிறுத்தத்தின் பலனாக நம்முடைய நாட்டில் எவ்வளவு கெடுதியை உண்டு பண்ணக் கூடிய முறையில் அரசியல் கட்சிகள் தொழிலாளர்களையும், மத்திய சர்க்கார் ஊழியர்களையும் ஊக்குவித்து வருகிறார்கள், ஊக்குவித்து நல்ல காரியங்களைச் செய்வதில் இடையூறாக இருக்கிறார்கள் என்பதை மனதில் கொண்டு உரையிலே மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வேலை நிறுத்தம் நின்று போனது பெருமைப்படக் கூடியது. இந்த வேலை நிறுத்தத்தினால் வரக் கூடிய இன்னல்கள் சில அரசியல் கட்சிகளின் தூண்டுதல்களால் ஊதிய உயர்வு, ஊதிய உயர்வு என்று சொல்லி ஒரு பக்கத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் ஊதியம் உயரவும், அதே நேரத்தில் கால் வயிற்று கஞ்சிக்குக் கூட வழி இல்லாமல் இருக்கக் கூடியவர்களும் இருக்கும்படியான ஒரு பொருளாதார அமைப்பு இருக்கிறது. இதைப் பார்க்கும்பொழுது இது மிகவும் வருத்தப்படக் கூடிய விஷயம். அரசியல் கட்சிகள் தொழிலாளர் பேரில் கருணை கூர்ந்து, எல்லா தொழிலாளர்களுக்கும் நன்மை செய்கிறோம் என்று பேசக் கூடிய காலத்தில் மத்திய சர்க்கார் ஊழியர்களின் ஸ்டிரைக்கை எந்த வகையில் ஆதரித்தார்கள் என்று நினைக்கக் கூடிய நேரத்தில் மிகவும் வெட்கப்படக் கூடிய நிலையில் இருக்கிறோம். ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். நூல் மில்லில் வேலை செய்யும் தொழிலாளிகள் தினசரி ரூ. 3 கூலி வாங்குகிறார்கள். ஆனால் அந்த நூலை வாங்கி நெய்யும் நெசவாளிக்குத் தினம் ஒன்றுக்கு ரூ. 1 கூலி கிடைக்கிறது. இந்த ஒரு ரூபாய் கூலி வாங்கும் தொழிலாளிக்கும் 3 ரூபாய் கூலிவாங்கும் தொழிலாளிக்கும் விலைவாசி ஒன்றுதான். உணவு தான்ய விலை இருவருக்கும் ஒன்றேதான், என்பதை அறியவேண்டும். ஆகையால் அதிகச் சம்பளம் வாங்கும் மத்திய சர்க்காரின் ஊழியரை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டுவது சரியல்ல என்று சொல்லுகிறேன்.

**Sri C. N. ANNADURAI:** வேலை நிறுத்தம் சட்டப்படி ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கும் ஒரு உரிமை என்ற முறையில் அரசியல் கட்சிகள் ஆதரிக்கும்போது அங்கத்தினர் அவர்கள் அரசியல் கட்சிகளை எல்லாம் பொதுவாக இழித்துப் பேசுவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR:** சட்டப்படி அவரவர்களுடைய உரிமையைக் கேட்க அவரவர்களுக்கு உரிமை உண்டு. ஆயினும் பொருளாதாரத் துறையில் ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடிய நிலைமையில், மற்ற ஏழைத் தொழிலாளர்களைப் பாதிக்கக் கூடிய வகையில் இருப்பதால் மக்களின் பிரதிநிதி என்ற முறையில் கண்டிக்கிறேன். மத்திய அரசாங்க ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் இறங்கினால் அதனால் பொதுவாக நம்முடைய நாட்டின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படும் என்பதை உணரவேண்டும். இன்றைக்கு உயர்ந்த சம்பளம் வாங்கிக் கொண்டு நல்ல நிலைமையில் வாழ்கிற மத்திய சர்க்கார் ஊழியர்களை





நீங்கள் தூண்டிவிட்டு அவர்கள் ஸ்டிரைக் செய்வதனால் ஏழைத் தொழிலாளர்களும், நெசவாளர்களும், விவசாயிகளும் பாதிக்கப் படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது.

**Sri C. N. ANNADURAI:** 'தொழிலாளர்களைத் தூண்டி விட்டு' என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுகிறார். இதிலே யாரும் தூண்டவில்லை. "தூண்டி விட்டது" என்பதற்கும் "ஆதரித்தது" என்பதற்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தைக் கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM:** தூண்டி விட்டவர்களைப் பற்றித்தான் அவர் சொல்லுகிறாரே தவிர, தூண்டாதவர்களைப் பற்றியல்ல.

**Sri C. N. ANNADURAI:** பொதுவாக, அரசியல் கட்சிகளைப் பற்றிப் பேசுவதால் தான் . . . . . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM:** தூண்டிவிட்ட அரசியல் கட்சிகளைப் பற்றி.

**Sri A. MARIAPPAN:** அங்கத்தினருக்கு உத்தரவு போடுவது தலைவரா அல்லது வேறு ஒரு அங்கத்தினரா?

**Mr. SPEAKER:** சபாநாயகர் மூலமாகப் போடுகிறார் அந்தக் கேள்வியை.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR:** சபைத் தலைவர் அவர்களே, நான் இன்ன அரசியல் கட்சி என்று சொல்லவில்லை. பொதுப் படையாகத்தான் அரசியல் கட்சிகள் என்று சொன்னால் அவர்கள் ஏன் தங்களைப் பற்றித்தான் சொல்லப்படுகிறது என்று எடுத்துக் கொள்ளவேண்டும்? நாம், மக்களுடைய பிரதிநிதிகளாக, மக்களுக்கு நன்மை செய்யக்கூடியவர்களாக இங்கே அமர்ந்து இருக்கிறோம். இன்று இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பொருளாதார ஏற்றத் தாழ்வை ஒழித்து, சோஷலிச சமுதாயத்தை ஏற்படுத்தவேண்டுமென்று பாடுபட்டு வருகிறோம். இன்று விலைவாசி உயர்ந்து கொண்டே போகப் போக சம்பளத்தை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டே போனால் விலைவாசியும் மேலும் மேலும் உயர்ந்து கொண்டேதான் இருக்கும். இந்த மாதிரி வேலை நிறுத்தங்கள் அரசாங்கத்துக்கு தொல்லை கொடுக்கக் கூடிய முறையிலே ஏற்பட்டுக்கொண்டே இருக்குமானால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும். இந்த விலைவாசி உயர்வை இவர்களே சமாளிக்க முடியவில்லையானால் ஒரு நாளைக்கு பன்னிரண்டு அணா, ஒரு ரூபாய் கூலி பெறுகின்ற விவசாயிகளும், நெசவாளர்களும் எப்படிச் சமாளிப்பார்கள்? ஏழு லட்சம் நெசவாளர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் அல்லவா? இன்றைக்கு மில்களிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் எட்டு மணி நேரம் வேலை செய்துவிட்டு ஒரு நாளைக்கு மூன்று ரூபாய் கூலி பெறுகிறார்கள். இவர்களெல்லாம் தங்களுக்குக் கூலி உயர்வு வேண்டுமென்று வேலை நிறுத்தம் செய்தால் அவர்களுடைய கூலியை உயர்த்தி விடுவதில் முதலாளிக்கு

ஒன்றும் கஷ்டமில்லை. முதலாளி அந்தக்கூலி உயர்வைச் சரிக்கட்ட நூல் விலையை ஏற்றிவிடுகிறார். அதனால் நெசவாளிகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். இந்த மாதிரி ஒரு குறிப்பிட்ட நோக்கில் வேலை செய்து அதிகக் கூலி பெறுகிறவர்களைக் தூண்டிவிட்டு வேலை நிறுத்தம் செய்யத் தூண்டினால், அதிக நேரம், 16 மணி நேரம் உழைத்து ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கூலி பெறுகிற நெசவாளர்களையும், விவசாயிகளையும் அரசாங்கத்திற்கு எதிராகத் தூண்டிவிடுவது எங்களுக்குச் சுலபமானதுதான். அந்தத் தொழிலாளர்களுக்கு இருப்பது போன்று எங்களுக்கும் இன்ஷூரன்ஸ் வசதி, சுகாதார வசதி, கூலி உயர்வு வேண்டுமென்று இவர்களைத் தூண்டிவிடுவதில் கஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால் அதன் விளைவு என்ன என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அதனால்தான் அந்த நெசவாளர்களும், விவசாயிகளும் அரசாங்கத்துக்கு உள்ள சிரமங்களையெல்லாம் தங்களுடையதாக ஏற்றுக்கொண்டு இன்றைக்கு அரசாங்கத்தோடு ஒத்துழைத்து வருகிறார்கள். மத்திய அரசாங்க ஊழியர்கள் ஸ்ட்ரைக்கை அரசாங்கம் போலீஸ் படையை வைத்து அடக்கினார்கள் என்று கனம் மெம்பர்கள் பேசினார்கள். அரசாங்கம் பலாத்கார முறையிலே அடக்கினார்கள் என்று சொன்னார்கள். அவ்வாறு நிச்சயமாக அடக்கித்தான் ஆகவேண்டும். அவ்வாறு அடக்கியது நல்லது என்று கூற விரும்புகிறேன். இந்த மாதிரி செய்யாவிட்டால் இன்றைக்கு இருக்கக்கூடிய தொழிலாளர் தலைவர்கள் எல்லாம் இந்த நாட்டில்..........

**Sri P. S. CHINNADURAI :** கனம் சபாநாயகர் அவர்களே, நானும் கனம் அங்கத்தினர் அவர்களுடைய பேச்சைக் கவனித்துக் கொண்டே வருகிறேன். அவர் பேசும்போது அடிக்கடி என்னைச் சுட்டிக் காட்டியே, என்னை நோக்கியே பேசுகிறாரோ என்பதை அறிய விரும்புகிறேன்.

**Mr. SPEAKER :** இந்தச் சபையில் சபாநாயகரைப் பார்த்துத்தான் பேசவேண்டும். கனம் அங்கத்தினருக்குப் பொதுக்கூட்டத்தில் பேசிப் பழக்கம்போல் தெரிகிறது.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR :** கனம் மெம்பரைப் பார்த்துப் பேசினாலும் பேசக்கூடிய விஷயங்களைச் சபாநாயகர் மூலமாகத்தான் எடுத்துச் சொல்லுகிறேன். "கோழி திருடியவனுக்குக் கொண்டையில் மயிரிருக்கும்" என்று சொன்னவுடன் கோழி திருடியவன் தன் குடுமியைத் தடவிக்கொண்டானாம். அது போல் நான் பொதுவாகப் பேசினாலும் எதிர்க் கட்சிக்காரர்கள் "என்னைக் குறித்துப் பேசுகிறீர்களே" என்று கேட்கிறார்கள். இந்த மாதிரித் தவறான பாதையில் நீங்கள் போகாமல் நாட்டின் நலன்களில் அக்கறை காட்டவேண்டுமென்ற முறையிலேதான் இதைப் பற்றிக் கவர்னர் பெருமான் அவர்கள் தம்முடைய உரையின் முதல் பகுதியிலேயே குறிப்பிட்டிருக்கிறார் என்று கூற விரும்புகிறேன். இப்பொழுது மூன்றாவது திட்டத்திலே நம்முடைய தேசத்திலுள்ள பல பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய வகையிலே தொழிற்சாலைகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.



அதை வரவேற்கிறேன். சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை, நூற்பு ஆலை, சர்க்கரை ஆலை முதலியவைகளை ஏற்படுத்தப் போவதற்காகப் பெருமிதம் கொள்ளுகிறேன். அதற்காக கவர்னர் பெருமானுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

V211,31 N60
N61.33;4.

*** Sri P. U. SHANMUGAM :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையின்மீது எனது கருத்தினைத் தெரிவிக்கின்ற இந்த வாய்ப்பின்போது நான் எடுத்து விவாதிக்கத் துவக்கக்கூடிய பிரச்சினை—இந்த மன்றத்தில் முன்பு ஒரு நாள் நிதி அமைச்சரைப் பார்த்து, மிக வேண்டிக் கேட்டுக்கொண்டதற்குப் பதில் சொல்லும்போது சொன்னார்கள்—'நீங்கள் கேட்டதற்காக இந்த நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கவில்லை; நீங்கள் கேட்பதை கொஞ்ச நாட்களாவது நிறுத்தி வைத்துக்கொள்ளுங்கள்; நான் வைக்கிறேன்' என்று அப்பொழுது பெருந்தன்மையோடு சொன்னார். ஓராண்டுக் காலம் பொறுத்திருந்து பார்த்தோம். அப்பொழுதாவது நிதி அமைச்சர் அவர்கள் தமது வாக்கைக் காப்பாற்றுகிற வகையிலே இந்த நாட்டுக்கு அந்தப் பெயரை வைப்பார் என்று எதிர்பார்த்தேன். அதற்கு மாறாக, ஒரு அங்கத்தினர் பேசும்போது, 'தமிழகம், தமிழகம், தமிழகம்', என்று சொல்லி நா மணக்கச் சொன்னாரே தவிர, இந்த நாட்டுக்கு அந்த நல்ல [illegible]வில்லை; எங்கோ நீலகிரியில் இருக்கும் [illegible]ர்கள் என்று வருத்தத்தோடு சொல்லி[illegible] என்று [illegible]யைத் துவக்குகின்றேன்.

6134(?)

மொழியைப் பற்[illegible] சொல்லும்போது, [illegible] அமைச்சர் அவர்கள் தனது வாத[illegible]மையைக் காட்டி, [illegible]தியக் குடியரசின் தலைவருடைய [illegible]ரவில் பண்டி[illegible]நருவினுடைய வாக்குறுதி இருக்கிறது [illegible]ள். பண்டித நேருவின் வாக்குறுதி இந்[illegible]வரின் உத்தரவில் இருக்கிறதா, இல்லையா எ[illegible] விவாதிப்பதைவிட, இத்தகைய பெருந்தன்மை வாய்ந்த பெருந் தலைவர்கள் சொல்லுகிறார்களே என்ற காரணத்திற்காக, 'இருக்கிறது' என்றே ஒத்துக்கொள்வோம். ஆனால், அப்படியிருக்கும் உத்தரவாதத்தை உடைத்தெறியும் வகையில் சென்னை அரசியலார் நடக்கிறார்கள் என்று வருத்தத்தோடு என்னால் சொல்லாமல் இருக்க முடியாது.

சென்னை அரசியலார் போலீஸ் இலாகாவில் 'இடது பக்கம் திரும்பு', 'வலது பக்கம் திரும்பு', என்று சொல்வதற்கும்கூட இந்தி வார்த்தைகளை உபயோகிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில் எங்கே அந்த உத்தரவாதத்தைக் காப்பாற்றப் போகிறார்கள் என்ற ஐயம் என் போன்றவர்களுக்கு நிச்சயம் எழத்தான் செய்கிறது.

பாடசாலையில் சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் கட்டாயமாக இந்தியைப்—பிராந்திய மொழியானத் தமிழ் அல்லாத இன்னொரு மொழியைப்—படித்துத் தேர்ச்சி பெற்றால்தான் வெற்றி

பெற்றவர்கள் ஆவார்கள் என்ற நிபந்தனையை ஏற்படுத்தியிருக்கும் போது, அந்த உத்தரவாதம் எங்கே நிலைக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

கனம் அங்கத்தினர் ஒருவர், "இந்தியை 1965-ம் ஆண்டுக்குள் கற்றுக்கொண்டு, 1965-க்குப் பிறகு இந்தியை நாட்டின் அரசியல் மொழியாக ஆக்கவேண்டும்; எதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தாரிடம் போய் நீங்கள் ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறீர்கள் ?", என்று குறிப்பிட்டார்கள். அவர்களோடு ஒப்பந்தம் செய்துகொள்ளுவதற்குப் பெருமை கொள்ளவில்லை. அவ்வளவு அவசரப்பட்டு இந்தியைப் புகுத்தியாகவேண்டுமென்று துடிதுடிக்கின்ற அந்த முது கிழவரின் வாதத்தைப் பார்த்துத்தான், தங்கள் மூலம் நினைவுபடுத்த விரும்புகிறேன். பீகார் மாநிலத்தில், இந்தியை ஜூலை 1-ந்தேதி முதற்கொண்டு எல்லாத் துறைகளிலும் கையாளவேண்டும் என்று அந்த அரசாங்கம் உத்தரவு பிறப்பித்த பதினைந்து நாட்களுக்கெல்லாம் பல இலாகாக்களில் அந்த உத்தரவு வாபஸ் பெறப்பட்டிருக்கிறது என்பதைப் பத்திரிகையிலே அந்த முது கிழவர் படித்திருப்பார் என்று நம்புகிறேன். அப்படி, பிறந்த இடத்திலேயே, இந்தியைக் கொண்டுவந்து அரசியல் மொழியாக ஆக்க முடியவில்லை என்றால், இந்திய உபகண்டத்தில் இந்தியைக் கற்றறியாத மாநிலங்களில் எப்படிக் கொண்டுவந்து அரசியல் மொழியாகத் திணிக்கப்படுகிறது என்று நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நான் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்வேன்--தமிழ் மீது எங்களுக்கு இருக்கும் பற்றைவிட, பாசத்தைவிட தங்களுக்குத்தான் அதிகம் இருக்கிறது என்று அடிக்கடி பேசிக் கொள்ளுகிற அவரை நான் கேட்டுக்கொள்ளுவேன்—தமிழ் நாட்டின் மானத்தைக் காப்பாற்றும் வகையிலாவது இந்தியை அரசாங்க மொழியாகத் திணிக்க முயற்சி செய்யாதீர்கள் என்று போடப்பட்டிருக்கும் உத்தரவைக் கட்டாயம் திருப்பிப் பெறுக வேண்டுமென்ற உத்தரவாதத்தை தயவு செய்து அமைச்சர் அவர்கள் பெற முயற்சிக்கவேண்டும். அப்பொழுதுதான் இந்தியக் குடியரசின் தலைவர் உத்தரவில் பண்டித நேருவின் வாக்கு இருக்கிறது என்று நாம் நம்புவது சாத்தியமாகும். பண்டித நேருவின் வாக்குறுதியை நம்புங்கள், நம்புங்கள் என்று சொல்லும் அரசியலார், உண்மையிலேயே வாக்குறுதிக்கு மதிப்பு வைக்கிறவர்களானால், உள்ளபடியே தாங்கள் பின்பற்றி வழி நடக்க வேண்டுமென்று தங்கள் மூலம் நிதி அமைச்சரை மிக மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த உரையில் மற்ருென்று சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. நெய்வேலி நிலக்கரியைப் பற்றியும், சேலத்து இரும்பைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினரைக் குறித்து மற்ருெரு உறுப்பினர் இந்த மன்றத்தில் கேலி செய்து பேசியதும், அந்தக் கேலிக்கு ஒப்ப உத்தரவு பிறப்பிக்கும் வகையில் இந்த மாநில மந்திரி ஒருவர் பேசிய பேச்சு தங்களுக்கு நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன். 'சேலத்து



இரும்பு கவைக்கு உதவாது; கெட்டியானது அல்ல' என்று சொல்லி, பாராளுமன்ற உறுப்பினர் சொன்னதை எள்ளி நகையாடித் தூக்கி எறிந்துவிட்ட பிரச்சினையை மீண்டும் கொண்டுவருகிறோம் என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பதை உன்னிப் பார்க்கும்போது, இது கண்துடைப்போ என்று ஐயுறுகிறேன். காரணம், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட நகல் எல்லோர் கையிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே சேலத்து இரும்பு பற்றி சேர்க்கப்பட்டிருக்கிறதா என்ருல் நிச்சயமாகக் கிடையாது. சேலம் இரும்பைப்பற்றி ஒரு வார்த்தையும் இல்லாத போது, இனி சேர்க்க முயற்சிக்கிறோம் என்று சொல்கிருர்கள். இதற்கு நாங்கள் எந்தவித ஆதரவும் தரத் தயாராயிருக்கிறோம். கட்டாயம் சேர்க்க வேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : படித்துப் பாருங்கள்.

SRI P. U. SHANMUGAM : இப்பொழுது தரப்பட்டிருக்கும் அறிக்கையில் இருக்கிறது என்று சூசகமாகச் சொல்கிருர்கள். இருந்திருந்தால் தலைவணங்கி ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். சேலத்தில் இரும்பு உருக்குவதுபற்றி நிதி அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு முறை சொன்னார்கள். நெய்வேலி நிலக்கரியைக் கொண்டு உருக்க முடியுமா என்று ஆராய்ச்சி செய்து பார்த்த பிறகுதான் முடிவு காணவேண்டுமென்று சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் அப்பொழுது, 'நெய்வேலி நிலக்கரி எப்பொழுது கிடைக்கும் ?' என்ற ஒரு கிளைக் கேள்வி கேட்டபோது, "1965-இல்தான் சாத்தியம் ஆகும்; இப்பொழுது சாத்தியம் இல்லை" என்று சொன்னார்கள். அதைப் பார்க்கும்போது . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : 1961-இல் என்றேன்.

SRI P. U. SHANMUGAM : 1961-இல் என்று சொல்கிருர். 1961-இல் நெய்வேலி நிலக்கரியைக்கொண்டு சேலத்து இரும்பை உருக்க முடியுமா என்று ஆராய்ச்சி செய்துபார்த்து, அதன் பிறகு, சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்த முடியுமா என்று தீர்மானிக்கவேண்டும் என்று சொன்னால் விந்தையாக இருக்கிறது. சேலத்து இரும்பை உருக்கி இருக்கிருர்கள் என்பதற்கு நல்ல ஆதாரங்கள் பல பொதுக்கூட்டங்களிலும், இந்த மாமன்றத்திலும்கூட எடுத்துச் சொல்லியாகிவிட்டது. சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டுமென்றதற்கு அவர்கள் மனம் உருகும் வண்ணம் எடுத்துச் சொல்லியும், அவர்கள் ஏனோ தங்கள் மனதை இரும்பாக்கிக் கொண்டிருக்கிருர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. சேலத்தில் இரும்பை எடுப்பதில் இந்த அரசியலார் முழுக்கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கவர்னர் உரையில் நான் படித்த ஒரு வாசகம் உள்ளபடியே உள்ளத்தைக் கவர்ந்ததாகும். ஒரே ஒரு உண்மையைப் பட்ட வர்த்தனமாகக் காண்கிறேன். முன்பு ஒரு முறை கவர்னர் உரையைப்பற்றிச் சொல்லும்போது—நிதி அமைச்சர் சொல்லியதா

[Sri P. U. Shanmugam] [8th August 1960

தயங்கவேண்டும் என்று ஏன் இந்த சர்க்கார் கேட்கக்கூடாது.
இந்த சர்க்கார் கேட்காத காரணத்தினால்தான், பணம் இல்லை
என்று அவர்கள் சொல்லும்பொழுது பேசாமல் வாய்மூடி மௌனி
யாக இருந்து, மத்திய சர்க்காருக்கு நல்ல பிள்ளையாக இருக்க
வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த சர்க்கார் இருக்கிற
காரணத்தினால்தான், எதைச் சொன்னாலும் அவர்கள் கேட்டுக்
கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு பிறந்திருக்
கிறது. அதனால்தான் நாம் சொல்லுவது அத்தனையும் புறக்
கணிக்கிறார்கள். தூத்துக்குடி துறைமுகம் சம்பந்தமாகச் சந்தே
கத்தைக் கிளப்பி அது விஷயமாக ஒரு முற்றுப் புள்ளியும்
வைக்கப்பட்டுவிட்டது.

தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தோடு இணைக்கப்பட்ட சேது
சமுத்திரத் திட்டத்தைப்பற்றி திரு. கருணாநிதி அவர்கள் இந்த
மாமன்றத்தில் விவாதித்திருக்கிறார். புள்ளிவிவரங்களோடு
அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். கவர்னர் அவர்
களுடைய உரையில் மூன்றாவது ஐந்தாவது திட்டத்தைப்பற்றி
கருத்துக்களை சொல்லுங்கள் என்று கூறியிருக்கிறார். ஆனால்,
அம்மாதிரி கருத்துக்களைச் சொல்லி என்ன பயன்? அவர்கள் அவை
களை எடுத்துககொள்ளப் போகிறார்களா?

மற்றொன்று சொல்ல விரும்புகிறேன். மொழியைப் பற்றி
எடுத்துக்காட்டும்பொழுது, அடிப்படை ஒற்றுமை எப்போதும்
காப்பாற்றப்படுமென்று எதிர்பார்ப்பதாகச் சொல்லியிருக்
கிறார்கள். அந்த ஒற்றுமை நிலைக்குமா? நிலைக்கின்ற வகையிலே
சென்னை அரசியலார் நடந்துக்கொள்ளுவார்களா என்பதை
தங்கள் மூலம் சென்னை அரசியலாரை கேட்டுக்கொண்டு, கவர்னர்
அவர்களுடைய உரையில் இவ்வளவு குறைகள் இருக்கின்றன
என்று சொல்லிக்கொண்டு, முடித்துக் கொள்ளுகிறேன்.
வணக்கம்.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : தலைவரவர்களே,
கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையை வரவேற்று, எனது கருத்துக்
களைச் சொல்ல முற்படுகிறேன். கவர்னர் அவர்களுடைய கருத்துக்
களை ஆதரித்தும், எதிர்த்தும் பல அங்கத்தினர்கள் பேசியிருக்
கிறார்கள். அவர்கள் கூறிய பலவற்றையும் அதிகப்படுத்தியும்,
குறைத்தும்கூட பேசியிருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய
ஒரு சிலர் தமிழகத்திலே உள்ள ஆர்வத்தை எடுத்துக்காட்டி
தாங்கள் தமிழுக்கே பிறந்தவர்கள் என்றெல்லாம் பேசியிருக்
கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய கட்சியின்
பெயரை முதலில் மாற்றிக் கொள்ள முன்வராமல், அடுத்தவர்களை
குறை கூறுவது வேடிக்கையாக இருக்கிறது.

மத்திய அரசாங்கத்தைப்பற்றிப் பேசவேண்டிய வார்த்
தைகளை இங்கு பல பேர்கள் திரும்பத் திரும்ப
பேசியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ஊழியர்கள்
சமீபத்தில் அனுஷ்டித்த வேலை நிறுத்தத்தைப் பற்றித்
தான் அவர்கள் இங்கு விவாதித்திருக்கிறார்கள். அதைப்
பற்றி இங்கு பேசி இருக்கவேண்டிய அவசியம் இல்லை. தொழிற்



8th August 1960] [Sri P. S. K. Lakshmipathi Raj]

சங்கத்தில் நானும் ஒரு சில ஊழியம் புரிந்திருக்கிற காரணத்
தினால் அது பற்றி சில விஷயங்களைக் கூற பிரியப்படுகிறேன்.
ஏதோ ஒரு கதை சொல்லுவார்கள். அண்ணன், தம்பி ஒரு
ஆற்றங்கரையில் நின்று கொண்டு, ஆற்று வெள்ளத்தில் மிதந்து
வரும் ஒரு கறுப்பு சாமானை நீந்திச் சென்று எடுத்துவர
அண்ணன், தம்பிக்கு கட்டளையிட்டான். தம்பி நீந்திச் சென்று
அந்தக் கறுப்பு கம்பளியை எடுக்கும்பொழுது, கம்பளி அவனைப்
பிடித்துக்கொண்டு விடுகிறது. அப்பொழுது ஆற்றங்கரையில்
நிற்கும் அண்ணன் தம்பியைக் கூவி அழைக்கிறான். நான்
கம்பளியை விட்டுவிட்டேன், அது என்னை விடமாட்டேன்
என்கிறது என்று தம்பி சொல்லியது போல, பி.சோ. கட்சிக்
காரர்கள் ஆரம்பித்த வேலை நிறுத்தத்தை கம்யூனிஸ்டுகள் கை
யாள ஆரம்பித்தார்கள். இதன் காரணமாக ஏற்பட்ட
நிலைமையை பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்காரர்கள் நன்றாக
உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த ஸ்ட்ரைக் ஏற்பட்ட
பொழுது பொது மக்கள் மத்தியிலே ஒரு நல்லவித உணர்ச்சி
ஏற்பட்டது. நல்ல நிலைமையிலேயே இருக்கிறவர்கள்கூட மீண்டும்
சர்க்காரிடம் போராடிக்கொண்டிருப்பதை மற்றவர்கள் பார்த்துக்
கொண்டு இருக்கிற நிலைமை மாறி, அதை எதிர்த்து நிற்கின்ற
ஒரு நிலையைத்தான் இந்த ஸ்ட்ரைக் முடிவு எடுத்துக் காட்டு
கிறது. இந்த ஸ்ட்ரைக்கை அரசாங்கம் சட்டப்படி தடை
செய்யாவிட்டால் மக்களே எழுந்து திரண்டு அதை ஒழித்துக்
கட்டியிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கும். சர்க்கார் ஒரு அவசர
சட்டத்தைக் கொண்டுவந்து இந்த வேலை நிறுத்தத்தை தடுத்தகை
பற்றி நான் அவர்களை பாராட்டுகிறேன். கிராமங்களிலே பயிரிடு
கின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு போதிய வருமானம்
கிடையாது. அவர்கள் கட்டியிருக்கிற கௌபீனத்தைத் தவிர
அவர்களுக்கு வேறு கதியில்லை. அவர்கள் வாடி வதங்கி, ஒட்டிய
வயிற்றோடு திரிகிறார்கள். தலையை சீவிக்கொள்ள எண்ணெய்
வாங்கக்கூட அவர்களிடம் துட்டு இல்லை. படுப்பதற்குப் பாய்
கிடையாது. இம்மாதிரி அவல நிலைமையில் இருக்கும் பல
கோடிக்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் அவதிப்பட்டுக்
கொண்டிருக்கும்பொழுது, தங்களுக்கு மேலும் மேலும் வசதி
வேண்டும் என்று கோருவது சரியல்ல. அம்மாதிரி கோருகிற
வர்கள் தரப்பில் அரசாங்கம் இருந்தால் ஜனங்களே அந்த
அரசாங்கத்தைத் தூக்கி எறிந்து இருப்பார்கள். நாட்டிலே
இருக்கக்கூடிய நிலைமையைப் புரிந்துகொண்டு சில தொழிற்
சங்கங்கள் நடந்துகொண்டிருந்தால் இந்த அவல நிலைமை ஏற்
பட்டிருக்காது. ஸ்ட்ரைக்குக் காரணம் அவர்கள் அல்ல என்று
நான் ஒத்துக்கொள்ளுகிறேன். சில தலைவர்கள் தங்களுடைய
ஜபர்தஸ்துக்காக, தொழிலாளர்கள் மீது தங்களுக்குள்ள ஆதிக்
கத்தை வெளி உலகத்திற்குக் காட்டுவதற்காக, பலப் பரீட்சை
செய்வதற்காக இந்த ஸ்ட்ரைக் நடந்ததே தவிர, மத்திய சர்க்கா
ருடைய சிப்பந்திகள் தங்களுடைய குடும்பச் செலவுக்குப் பணம்
போதாது என்ற காரணத்திற்காக இந்த ஸ்ட்ரைக் நடத்தவில்லை
என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். தங்கள் சுய
நலத்தை மட்டும் கருதக்கூடாது. நாட்டில் உள்ள மற்ற தொழி
லாளர்களுடைய வாழ்க்கையை பற்றி கொஞ்சம் சிந்தித்துப்

பார்க்க வேண்டும். இந்த நிலையினால் எதிர்காலத்தில் வரக்கூடிய பலன்களை தொழிலாளர்கள் நன்கு புரிந்துகொள்ளுவதற்கு இந்த ஸ்ட்டைக் முடிவு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று நம்புகிறேன். அரசாங்கத்தில் வேலை செய்பவர்களுக்கு, அதுவும் முக்கியமாக அத்தியாவசியமான சர்வீசில் வேலை செய்பவர்களுக்கு இதுபோன்று தொழிற் சங்க உரிமைகள் அளிக்கப்பட்டால் என்ன நிலைமை ஆவது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இந்த நிலை மூலம் தான் மத்திய அரசாங்கத்திற்கு கண் திறக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக உள்ள சர்வீஸ்களில் ஸ்ட்ரைக் செய்யும் உரிமையை ரத்து செய்தால் அதை நாடு வரவேற்கும். இன்று நாட்டிலுள்ள நிலைமையில் அவர்களுக்கு தொழிற்சங்க உரிமைகள் கொடுக்கப்படக்கூடாது. அவர்கள் வேறு தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஊழியர்களைப் போல் அல்ல. தந்தி, தபால், ரயில்வே நிலயங்களில் ஸ்ட்ரைக் செய்வதன் காரணமாக அரசாங்கத்திற்கு பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்த நெருக்கடியை நல்ல முறையில் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்த மத்திய சர்க்காரை, துணிகரமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து ஒரு நல்ல முடிவை ஏற்படுத்தியதற்கு நான் மனமார பாராட்டுகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: (அ) Yes, Sir.

(ஆ) 44 persons.

SRI M. A. B. ARUMUGHASAMY: கொடுக்கப்பட்ட மனைகளில் ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொண்டார்களா? அப்படி வீடுகள் கட்டிக் கொள்ளாவிட்டால் அதன் காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN: அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள மனைகள் கொடுக்கப்பட்டன. வீடுகள் கட்டினார்களா இல்லையா என்பது அவர்களுடைய பிரச்னை.

SRI V. K. KOTHANDARAMAN: ஹரிஜனங்கள் வீடு கட்டிக் கொள்ள மனைகள் வேண்டுமென்று எழுதி பல வருஷங்கள் ஆகியும் கிடைக்காத நிலைமையில் இருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியானால் குறைந்த பட்சம் ஒரு வருஷத்திற்குள்ளாவது வீட்டு மனைகளை கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI P. KAKKAN: மனைக்கட்டுகள் கொடுப்பதற்கு எங்கெல்லாம் துரிதமான நடவடிக்கை எடுக்க முடியுமோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், நிலச்சொந்தக்காரர்கள் சில சமயங்களில் கோர்ட்டுக்குச்சென்று வழக்காடுவதனால்தான். மற்றபடி காலதாமதம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.



9th August 1960]

SRI K. B. S. MANI: ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படும் மனைக்கட்டுகளில் சில பள்ளங்கள் நிறைந்த இடங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அவர்கள் வசிக்கும் கிராமங்களுக்கு வெகுதூரத்திலும் கொடுக்கப்படுவதால், கிராமப்பகுதியிலேயே அவர்களுக்கு நிலத்தைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN: கிராமப் புறங்களில் சர்க்காருடைய புறம்போக்கு நிலங்களாக இருந்தால் அதை அவர்களுக்கு "அஸைன்" செய்கிறோம். அது தனியார் நிலமாக இருந்தால் நிலச்சொந்தக்காரரின் அபிப்பிராயத்தைக் கேட்டுத்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சில இடங்களில் மனைகள் பள்ளமாக இருக்கலாம். ஆனால் அதைச் சரிப்படுத்துவதற்கு ஆயிரக் கணக்கான ரூபாய் செலவாகும். அப்படி செய்வதற்கில்லை. ஆகையால், குறிப்பிட்ட இடத்தில்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லமுடியாது.

SRI G. G. GURUMURTHI: மனைக்கட்டுகள் கொடுக்கும்போது அவர்களுடைய புறம்போக்கு நிலங்களில் உள்ள பனைமரங்களை வீடு கட்ட உபயோகப்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

THE HON. SRI P. KAKKAN: புறம்போக்கு நிலங்களில் ஸீப்பேஜினாலோ தீயினாலோ பாதிக்கப்பட்டவர்களுக்கு சில சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அங்குள்ள மரங்களை உபயோகப்படுத்த வேண்டுமென்றால், கலெக்டரிடம் தெரிவித்தால் அவர் பரிசீலனை செய்வார்.

*Hostel for Senior Co-operative Inspectors undergoing training*

* 33 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to construct a hostel for the Senior Inspectors of Co-operative Societies undergoing training?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, Sir.

*Award of prizes to elementary school teachers*

* 34 *Q.*—SRI P. G. MANICKAM: }
SRI S. M. ANNAMALAI: } கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

கல்வித் துறையில் ஆரம்ப ஆசிரியர்களும், ஆசிரியைகளும் செய்யும் மெச்சத்தக்க சேவையை அங்கீகரித்துப் பாராட்டுவதற்காக பரிசுகளும், தகுதி நற்சான்றிதழ்களும் வழங்குவதற்கான திட்டம் எப்போது அமுலுக்குக் கொண்டுவரப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: There are at present two schemes for the award of prizes to elementary school teachers to render meritorious service in the field of education—one instituted by the Government of India with effect from the school year 1958–59 and the other instituted by the State Government with effect from the school year 1959–60.

[9th August 1960

SRI P. G. MANICKAM: ஆரம்ப ஆசிரியர்கள் என்னென்ன விதமான சேவைகள் செய்தால் பரிசுகள் வழங்கப்படும்? அந்த சேவைகளின் விவரங்களை கனம் அமைச்சர் அவர்கள் கொடுக்க முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதாவது அறிக்கையின் பிரகாரம் பொதுவாக கல்வியின் வளர்ச்சிக்கு நல்ல முறையில் சேவை செய்கிறார்கள் என்பதற்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதற்காக ஒரு பரீட்சை வைத்து எந்த முறையில் அவர்கள் வேலை செய்யவேண்டுமென்று கட்டுப்படுத்துவதல்ல.

SRI S. M. ANNAMALAI: மத்திய சர்க்கார் இந்தப் பரிசுகளைக் கொடுக்கும்போது மாநில சர்க்காரின் யோசனையைக் கேட்டு கொடுக்கப்படுகிறதா? அப்படியென்றால் எந்த அடிப்படையில் சிபார்சு செய்திருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM: இங்கே இதற்கு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு டி.பி.ஐ. சேர்மன் ஆகவும், டிரெயினிங் காலேஜ் பிரின்சிபாலும், கல்வியிலே அக்கறையுள்ள ஒருவரும் மெம்பர்களாக இருக்கிறார்கள். இந்தக் கமிட்டியின் சிபார்சின் அடிப்படையிலே மத்திய அரசாங்கம் பரிசு வழங்குகிறது.

SRI P. G. MANICKAM: ஒவ்வொரு வருஷமும் எவ்வளவு பேருக்கு ரொக்கப்பரிசுகள், எவ்வளவு பேருக்கு சர்டிபிகேட்டுகள் வழங்கப்படுகின்றன?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதிலே மத்திய அரசாங்கத்தின் திட்டப்பிரகாரம் இரண்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் 500 ரூபாய் என்று இரண்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. சென்னை அரசாங்கம் கல்வி ஜில்லா அடிப்படையில் 24 கல்வி ஜில்லாக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இரண்டு பரிசுகளாக 48 பரிசுகள் வழங்கப்படுகின்றன ஒவ்வொருவருக்கும் 200 ரூபாயும், சர்டிபிகேட்டும் கொடுக்கப்படுகிறது.

SRI K. VINAYAKAM: Sir, did the Government satisfy themselves whether the recommendations made by the Director of Public Instruction as far as teachers in the City are concerned were just and proper or did they simply automatically accept the recommendations?

THE HON. SRI C. SUBRAMANIAM: So far I have not received any complaint against the selections made. Naturally we have to be guided by the recommendations of the Committee. I don't think the Government should set up another machinery to check up these selections.



9th August 1960]

*Award of prizes to efficiently-managed schools*

*35 Q.—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் திறமையாக நடைபெறும் பள்ளிகளுக்குப் பரிசளிக்கும் திட்டம் எப்போதிலிருந்து அமுலுக்கு வரும்? அதன் விவரம் என்ன?

(ஆ) பரிசுக்குத் தகுதியுள்ள பள்ளிகளைத் தேர்ந்தெடுக்க வகுத்திருக்கும் முறை என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) There is no scheme for the award of prizes to efficiently-conducted schools in this State.

(ஆ) Does not arise.

SRI A. VEDARATHNAM: திறமையுள்ள ஆசிரியர்களுக்கு பரிசு கொடுப்பதற்குப் பதிலாக நல்ல முறையில் திறமையாக நடத்தப்படும் பள்ளிகளுக்கு பரிசு கொடுக்க அரசாங்கம் முன் வருமா? அப்படிக் கொடுத்தால் அங்கு வேலை செய்யும் ஆசிரியர்களுக்குள் "டீம் ஸ்பிரிட்" ஏற்படுவதற்கு அது உதவியாக இருக்காதா? அரசாங்கம் இதைக் கவனிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆசிரியர்கள் சரிவர பாடம் கற்பித்தால்தான் பள்ளிக்கூடம் நன்றாக நடைபெறும். ஆகையால்தான் ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்குவதுதான் சரி என்று மத்திய சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

SRI K. B. S. MANI: இந்தப் பரிசுகளை சென்னை அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் ஆசிரியர்களுக்கு வழங்குவதில் . . . . .

MR. SPEAKER: நாம் இப்போது 35-வது கேள்வியில் இருக்கிறோம். ஆனால் அங்கத்தினர் கேட்கும் கேள்வி 34-வது கேள்வியைப் பற்றியதாக இருக்கிறது.

SRI S. RANGANATHA MUDALIAR: Sir, does 'efficient management' come under meritorious service or does the expression 'meritorious service' mean something else?

THE HON. SRI C. SUBRAMANIAM: The management may be different from the teaching staff. In some places the teacher himself might be the manager. It includes everything—how the school is being maintained, how the teaching is done, how discipline is maintained, how the extra curricular activities and school activities are being carried on and how the co-ordination between the community activities and school activities are done—all these things are taken into consideration in arriving at a decision.

SRI A. VEDARATHNAM: இப்பொழுது பரீட்சைக்கு அனுப்பப்படுகிற மாணவர்களில், சில பள்ளிகளில் 100-க்கு 100 பேர்கள் பாஸ் செய்து விடுகிறார்கள். சில பள்ளிகளிலிருந்து அனுப்பப்படுகிற பிள்ளைகளில் ஒருவர்கூட பாஸ் செய்யாமல் "ஸீரோ"

மார்க் வாங்குகிறார்கள். ஆக நன்கு சொல்லிக் கொடுக்கப்பட்டு "ஸெண்ட் பர்ஸெண்ட் பாஸ்" செய்கிற பள்ளிகளுக்கு அரசாங்க அங்கீகாரம் இருந்தால், அது, மற்ற பள்ளிகளும் அப்படி நன்கு வேலை செய்வதற்கு ஊக்கம் தருவதாக இராதா? ஆகவே, இது பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆம். நல்லமுறையில் தேறுகிற மாணவர்கள் உள்ள பள்ளிகளுக்கு நற்சான்றுப் பத்திரங்கள் மாதிரி வழங்கப்படுகின்றன. குறைவாகத் தேர்வு உள்ளவைகளிடம் ஏன் இவ்வளவு குறைவாக இருக்கிறது என்று காரணம் கேட்டு எழுதி அடுத்த வருடம் அந்தக் குறைகள் நீக்கப் பட வேண்டுமென்று நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

*Community Development Schemes*

* 36 *Q*.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any time-limit has been fixed for the introduction of Community Development Schemes in all the areas of the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes.

(*b*) The entire State will be covered by the Community Development Programme by the middle of the third year of the Third Five-Year Plan.

SRI N. K. PALANISAMI: இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை "ஸ்டேட்" பூராவும் விஸ்தரிப்பதற்கு உத்தேச செலவு என்னவாகும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that in certain districts there are more Community Development Blocks than in other districts? May I know the reason for such variation?

THE HON. SRI C. SUBRAMANIAM: Initially allotments were made on a certain basis and ultimately it was found that certain districts had gained advantage over others. Now that factor has been taken into consideration in the allotment of new blocks.

SRI K. VINAYAKAM: In the matter of selection for these Community Development Blocks in the coming year, will the Government take note of the areas that have just been included in the State which has been suffering for a long time without any improvement, viz., Tirutani taluk?

THE HON. SRI C. SUBRAMANIAM: There were also Community Development Blocks in the transferred territory. But the idea is to cover the entire State.



*Andipatti Block in Madurai district*

* 37 *Q*.—SRI A. VEDARATHNAM (on behalf of Sri N. R. THIAGARAJAN): கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா ஆண்டிப்பட்டியில் பிளாக் ஏற்பட்டு எத்தனை வருடங்களாகின்றன?

(ஆ) பிளாக்கில் இருந்து எத்தனை மைல் புது ரோடு போடப்பட்டது.

(இ) எத்தனை பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டன?

(ஈ) ஆண்டிப்பட்டி பிளாக் எத்தனை சதுர மைல் விஸ்தீரணமுள்ளது?

(உ) அந்த பிளாக் பகுதியில் மொத்தம் எத்தனை மைல் ரோடுகள் இருக்கிறது?

(ஊ) உத்தியோகஸ்தர் சம்பளம், அலவன்ஸ் இந்த பிளாக்கில் எவ்வளவு இதுவரை செலவாகி இருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) 2 years and 8 months.

(ஆ) 3½ furlongs.

(இ) 2 Elementary school buildings.

(ஈ) 191.38 sq. miles.

(உ) 54 miles.

(ஊ) Rs. 96,212.66 during 1957–58 to 1959–60.

*Government control over educational institutions*

* 38 *Q*.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the attention of the Government has been drawn to a statement by Sri Moraji Desai, Union Finance Minister, that the State Government should not attempt to assert control over the educational institutions and State control was bound to cripple them?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Government have seen press reports on the subject.

SRI A. A. RASHEED: May I know whether the Central Government have advised the State Government against such control and interference in the educational institutions in our State?

THE HON. SRI C. SUBRAMANIAM: This is an opinion expressed by the Union Finance Minister. I suppose Ministers are also entitled to express their own points of view.

*Marumakkathayam Act*

MR. SPEAKER: The hon. Member, Sri T. Sampath is not in his seat. The question and the answer will be printed in the official prceedings.

**SRI S. NAGARAJA MONIGAR:** இந்தத் திட்டம் சென்ற ஆண்டு நடைபெறுமல் போனதற்கு அங்குள்ள கல்வி அதிகாரிகள், மற்ற ஜில்லா போர்டு போன்ற ஸ்தாபனங்கள், அதுபற்றி அங்கு ஏற்பட்ட கஷ்டங்களை உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்களுக்கு தெரிவித்து அவர்கள் அவர்களுடைய சகாயங்களைத் தேடாமல்—அல்லது அவர்களுக்கு தெரிவிக்காமல்—இருந்ததும் ஒரு காரணம் என்பதை சர்க்கார் அறியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: தாமதம் இருந்தது என்பது தெரிகிறது. தாமதத்தை நீக்க இப்பொழுது அறிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது கொஞ்சம் ஜரூராக நடக்கிறது என்று கேள்வி.

SRI A. VEDARATHNAM: ஸ்தல ஸ்தாபனங்கள் ஆசிரியைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்க முன்வராத இடங்களில், அரசாங்க உதவி பெறும் பள்ளிகளுக்கு அரசாங்கமே இந்த உதவியை அளிக்க முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஸ்தல ஸ்தாபனங்கள் ஏன் செய்யக் கூடாது என்று தெரியவில்லை. அவர்கள் கட்டாயம் செய்தாக வேண்டும்.

*Colleges of Physical Education*

SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் எத்தனை உடற் பயிற்சிக் கல்லூரிகள் இருக்கின்றன?

(ஆ) பெண்கள் உடற்பயிற்சிக்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

(இ) போஸ்ட்-பேசிக் பள்ளிகளுக்கு உடற் பயிற்சி ஆசிரியர் நியமிக்கும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Three, Sir.

(ஆ) There is provision for imparting instruction in physical education to girls both in high schools and colleges.

(இ) No, Sir.

SRI A. VEDARATHNAM: இந்த உடற் பயிற்சிக் கல்லூரிகளில் என்ன முறை அனுஷ்டிக்கப்படுகிறது? இந்திய முறையில், சூரிய நமஸ்காரம், ஆஸனம் போன்ற பயிற்சிகள் அங்கு அளிக்கப்படுகின்றனவா? அப்படியானால் அந்த ஆசிரியர்கள் அந்த முறையில் பயிற்சி பெற்றவர்களாயிருக்கிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்திய முறையிலும் விளையாட்டுகள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. சிலவிடங்களில், யோகாஸனம், சூரிய நமஸ்காரம் ஆகியவைகளும் சொல்லிக் கொடுக்கப் படுகின்றன என்பதுதான் எனக்குத் தெரிந்த வரையில்.



SRI A. VEDARATHNAM: பெண்களுக்கு உடற்பயிற்சி அவசியமில்லை என்ற காரணததால் அது கைவிடப் பட்டிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: பெண்களுக்கும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது என்றுதான் பதில் சொன்னேன். "போஸ்ட்-பேஸிக் ஸ்கூல்களுக்கு ஆசிரியர் நியமிக்கப் போகிறார்களா?" என்று கேட்டதற்கு "இல்லை" என்று சொன்னேன்.

SRI A. A. RASHEED: Will the Hon. Minister be pleased to state whether the Government are running any College of Physical Education in our State and if so, how many?

THE HON. SRI C. SUBRAMANIAM: All the three are privately-run colleges.

SRI P. G. MANICKAM: மேற்கண்ட உடற் பயிற்சிக் கல்லூரிகளில் எஸ்.எஸ்.எல்.ஸி. "பாஸ்ட்" அல்லது "பெயில்ட்" மாணவ-மாணவ-மாணவிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களுக்குள் "லோயர் கிரேட்", "ஹையர் கிரேட்" என்ற பாகுபாடு இருக்கிறது. ஆனால் ஒரேவித பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆகவே, "லோயர்", "ஹையர்" என்று இல்லாமல் ஒரே கிரேடாகப் போடுவதில் சில அனுகூலங்கள் கிடைக்கும். தற்போது "லோயர் கிரேட்" பாஸ் செய்த அநேக ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருப்பதால் இதுபற்றி கவனித்து ஒரே கிரேடாக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: தனிக் கேள்வி வேண்டும்.

*Land Mortgage Banks*

MR. SPEAKER: The hon. Member Sri K. R. Viswanathan is not in his seat. The question and the answer will be printed in the official proceedings.

* 43 Q.—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the basis on which the lands offered as security to the Land Mortgage Banks are valued;

(b) whether the present market rates are taken into account while fixing the value of the land; and

(c) if not, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) Till recently lands offered as security in respect of loans advanced by Land Mortgage Banks are being valued with reference to their value during pre-war years, i.e., 40 per cent was added to the pre-war value and loans were advanced up to 50 per cent of the value so arrived at. Government have since decided that such lands should be valued with reference to the average market value of similar lands sold in the vicinity during a period of five years prior to the date of application and loans should be allowed by Land Mortgage

[9th August 1960

**SRI S. LAZAR:** இந்த நகர சபைகள் திட்டங்களைத் தயார் செய்து அரசாங்கத்திற்கு தாமதமாகவே கொண்டு வருகிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே "டவுன் பிளானிங்" மூலம் இதை துரிதமாக நடத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN:** திட்டங்களைத் தயார் செய்து சர்க்காருக்கு அனுப்புவதில்லை, ஐ.எல்.பி.-க்குத்தான் அனுப்ப வேண்டும். அவர்களிடமிருந்து தான் சர்க்காருக்கு வர வேண்டும்.

**SRI S. PAKKIRISAMI PILLAI :** இந்த மாதிரியான வீடுகளுக்கு, அதாவது குடிசைப்பிரதேசத்தை நீக்கி செம்மைப் படுத்தி கட்டப்படும் வீடுகளுக்கு, அரசாங்கம் என்ன குடக்கூலி வசூலிக்கிறது ?

**THE HON. SRI R. VENKATARAMAN:** சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் எவ்வளவு செலவாகிறது என்பதைக் கணக்குப் போட்டுப்பார்த்து அதனுடைய வட்டியில் பாதி குடக்கூலியாகவும் பாதி ஸப்ஸிடியாகவும் வசூலிக்கப்படுகிறது. அதன் படி பார்க்கும் போது இப்போது ஒரு வீட்டுக்கு 10 ரூபாய் வரும். அதோடு இரண்டு அல்லது மூன்று ரூபாய் லைட்டுக்காகவும், குடி தண்ணீர் வசதிக்காகவும் வசூலிக்கப்படுகிறது. இதை இன்னும் சற்று குறைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

SRI K. S. G. HAJA SHERIFF : May I know how many slums have been taken up for clearance in Madras City?

THE HON. SRI R. VENKATARAMAN : Thirty, Sir.

**SRI V. K. KOTHANDARAMAN:** ஸார், அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து 4 முதல் கிரேட் நகரசபைகளுக்கு "லோன்" கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இரண்டாவது, மூன்றாவது கிரேட் முனிசிபாலிட்டிகளுக்குக் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. அப்படியானால் எப்போது கொடுக்கப்படும் ?

**THE HON. SRI R. VENKATARAMAN:** மற்ற இடங்களுக்குக் கொடுப்பதைப் பற்றி மூன்றாவது திட்டத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**SRI K. B. S. MANI:** இம்மாதிரியான இடங்களில் இன்னின்ன டைப்களில் வீடுகள் கட்ட வேண்டும் என்று நகர சபைகளுக்கு யோசனை கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : These are technical matters with which Government are not directly concerned. They will go to the Town Planing Officer who would decide these things.



9th August 1960]

**SRI P. S. K. LAKSHMIPATHIRAJ:** ஸார், லட்சக்கணக்கான மக்கள் வந்து போய்க் கொண்டிருக்கின்ற இரண்டாவது கிரேட் முனிசிபாலிட்டிகளுக்கு இது போன்ற வசதி செய்து கொடுக்கப்படுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN:** கனம் அங்கத்தினர் அவர்களும் இதற்காக மனு (அப்ளிகேஷன்) செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

**SRI S. LAZAR:** சென்ற ஆண்டில் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை காலதாமதம் ஏற்பட்டதின் காரணமாக உபயோகிக்கப் படாமல் இருந்து விட்டது. இந்தக் காலதாமதத்தைப் போக்குவதற்காக முன் ஆண்டிலேயே இதற்கான திட்டத்தைத் தயார் செய்து, அரசாங்கத்திற்கு அனுப்பி, அதன் பேரில் சாங்ஷன் வாங்கி வைத்துக்கொண்டால் நல்லது என்பதை நகரசபைகளுக்கு அரசாங்கம் வற்புறுத்துமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN:** இதை அந்தந்த நகர சபைகளில் சொன்னால் நல்லதாக இருக்கும்.

**SRI N. K. PALANISAMI:** கோவை நகரில் இதற்காக ஒன்றும் ஒதுக்க வில்லையே, அங்கு ஸ்லம்கள் இல்லை என்று அரசாங்கம் எண்ணியிருக்கிறதா ?

**THE HON. SRI R. VENKATARAMAN:** அதற்குப் பின்னால் ஒதுக்கப்படும். அங்கு "இன்டஸ்டிரியல் ஹௌஸிங் ஸ்கீம்"-ன் கீழ் 400 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்காகத் தனியாக ஒதுக்கப்படவில்லை.

SRI C. R. RAMASWAMI : As the rent of Rs. 10 or above will be beyond the reach of the poor man, will the Hon. Minister consider the desirability of reducing the rent to Rs. 5 per tenement?

THE HON. SRI R. VENKATARAMAN : I thank the hon. Member for having put the question. There is a great deal of misconception about the people living in slum areas. Many of them are employed in Port Trust, Harbour and other industries and they are able to pay Rs. 10 and more. Actually about 25 per cent of the people living in slums can afford to pay rents which the Government have fixed. But we are not able to provide even for those 25 per cent of the people living in slums. There is a certain amount of propaganda going on that if these people do not go to the tenements built by Government, Government would reduce the rent to Rs. 5 or Rs. 3. It is absolutely uneconomic. If the slum dweller did not go to these tenements, Government would be obliged to divert these tenements to other people who can afford to pay the rent.

[9th August 1960

(b) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) The details of the scheme have not yet been finished by the Government of India.

SRI A. A. RASHEED : May I know, Sir, the nature of the national service the students are required to do.

THE HON. SRI C. SUBRAMANIAM : The scheme has not yet been finalised. I am unable to give the details.

SRI M. KALYANASUNDARAM: நமது அரசாங்கத்தை அபிப்பிராயம் கேட்டார்களா? நமது அரசாங்கம் என்ன அபிப்பிராயம் தெரிவித்தார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM: அபிப்பிராயம் கேட்டிருக்கிறார்கள். இன்னும் தெரிவிக்கவில்லை.

SRI A. A. RASHEED : May I know, Sir, whether this National service is compulsory for even girl students?

MR. SPEAKER : What is the point in the hon. Member asking this question when the hon. Minister has said that the scheme has not yet been finalised.

*Smallpox*

49 Q.—SRI M. P. SARATHI: கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் இந்த ராஜ்யத்தில் அம்மை வியாதி பரவலாகக் கண்டிருந்ததா?

(ஆ) அதைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) There was no widespread prevalence of small-pox in the State. Only sporadic cases were reported.

(ஆ) Mass vaccination and re-vaccination drives, disinfection of the affected premises and materials, and isolation of cases in the Infectious Diseases Hospitals or sheds or Home segregation wherever feasible have been carried out. Health Education of the public in regard to the mode and spread of small-pox and the preventive measures to be taken have also been done in the affected areas.

SRI S. M. ANNAMALAI: ஸார், மலேரியா போன்ற வியாதிகளை முழுதும் ஒழிக்க சர்க்காரிடத்தில் திட்டம் இருக்கிறது. அதே போன்று வைசூரியை ஒழிக்க சர்க்காரிடத்தில் திட்டம் இருக்கிறதா? அப்படியானல் அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: நல்ல திட்டம் இருக்கிறது. சில வருஷங்களிலே வைசூரியை நம் நாட்டிலேயே



9th August 1960]

இல்லாமல் செய்வதற்குத் திட்டம் இருக்கிறது. அதற்காக "பைலட் ஸ்கீம்" செங்கற்பட்டு ஜில்லாவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

SRI M. K. SOMASUNDARAM: ஸார், செங்கற்பட்டு ஜில்லாவில் "பைலட் ஸ்கீம்" நடந்து வருவதாகத் தெரிகிறது. அதற்கு எத்தனை பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தாவாரியாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்கு, அதிகமாக "வாக்ஸினேஷன்" செய்ய சிப்பந்திகள் வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது—பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, பைலட் ஸ்கீமுக்கு வேண்டிய ஆட்கள் இருக்கிறார்கள்.

SRI A. VEDARATHNAM : ஸார், இப்போது போட்டிருக்கும் திட்டப்படி அம்மை நோயை இந்த நாட்டிலிருந்து அறவே ஒழிக்க எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதிலே அரசாங்க சிப்பந்திகள் போதுமான ஆர்வம் காட்டி, பொது மக்களும் ஒத்துழைத்தால் சில வருஷங்களிலேயே ஒழித்து விடலாம் என்று நினைக்கிறேன்.

SRI K. B. S. MANI: சர்க்காரினல் இந்த வைசூரி நோயை ஒழிக்க கொடுக்கப்பட்ட பயிற்சி மருந்துகள் மூலமாகவா, அல்லது மந்திரங்கள், மாரியம்மன் தாலாட்டு போன்றவைகள் மூலமாகவா?

THE HON. SRI M. A. MANICKAVELU : மந்திரத்தினலெல்லாம் இது படியாது. "வாக்ஸினேஷன்" செய்யவேண்டும். அதைத்தான் செய்கிறோம்.

SRI A. GOVINDASAMI: இந்த அம்மை நோய் உண்டாக முக்கிய காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்தக் கேள்விக்கு கனம் சபாநாயகர் அவர்கள் தான் பதில் சொல்லவேண்டும். (சிரிப்பு.)

MR. SPEAKER : நான் இங்கே பதில் சொல்ல முடியாதே! (சிரிப்பு.)

SRI A. A. RASHEED : May I know, Sir, whether the Government have received any aid from the World Health Organization to eradicate this disease from our State?

THE HON. SRI M. A. MANICKAVELU: மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்கு வெளி நாட்டு உதவி இருக்கிறது. வைசூரி நோய் விஷயத்தில் மத்திய சர்க்கார் முழுப் பொறுப்பையும் எடுத்திருக்கிறார்கள். அவர்கள்தான் செலவிற்கு ஆகும் தொகையைக் கொடுக்கிறார்கள். வெளி நாட்டிலிருந்து உதவி இனிமேல் வந்தாலும் வரலாம்.

[9th August 1960

*Maniyamkaram-Thiruppuvaram*

* 50 Q.—Sri K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the extent of lands in Shencottah taluk that come under the (i) Maniyamkaram and (ii) Thiruppuvaram;

(b) whether there is a proposal to abolish these categories; and

(c) if so, when a legislation to this effect will be introduced?

The Hon. Sri M. A. MANICKAVELU: (a) Sri Padmanabhaswami temple at Trivandrum has two kinds of income, namely—

(i) the rent payable by the tenants of Sripandaravagai lands, i.e., lands held on favourable terms by the temple, and

(ii) Thiruppuvaram payable by the holders of lands of different tenures. The term "Maniyamkaram" refers to both these kinds of income. There are no Sripandaravagai lands in Shencottah taluk. Thiruppuvaram is payable on 371·12 acres of wet land and 5·48 acres of dry land in the taluk.

(b) Yes.

(c) The matter is under correspondence with the Kerala Government.

Sri K. SATTANATHA KARAYALAR: ஸார், திருப்புவாரம், மேல்வாரம், மணியம்கரம் ஆகிய இந்த நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பது வரையறை செய்யப்பட்டு திட்டவட்டமாகத் தெரியுமா? ஒரு நிலத்தை சொந்தக்காரர் 10 அல்லது 15 ஆண்டுகள் வைத்திருந்த பிறகு, திடீரென்று திருப்புவாரம் கொடுக்க வேண்டும் என்று கோர்ட் தீர்ப்புக் கொடுத்து, 10 அல்லது 15 ஆண்டுகளுக்கும் சேர்த்து பணம் கட்டவேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த மாதிரி நிலை ஏற்படாமல், இருக்கக்கூடிய தஸ்தாவேஜுகளையெல்லாம் பார்த்து இந்த வட்டாரத்தில் இவ்வளவு நிலம் இருக்கிறது என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறதா? இல்லையானால் அம்மாதிரி வரையறை செய்ய நடைமுறையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: கனம் அங்கத்தினர் அவர்கள் செங்கோட்டை தாலூக்காவைப் பற்றி தகவல் கேட்டிருக்கிறார். தகவல் கொடுத்தேன். மற்ற இடங்களிலும் எவ்வளவு இருக்கிறது என்று கேரள சர்க்காரைக் கேட்டிருக்கிறோம். ஏனென்றால் அந்தத் தகவல் அவர்களிடத்தில் தான் இருக்கும். அது வந்த பிறகு பரிசீலனை செய்து எப்படி மாற்றுவது என்று பார்க்கலாம்.

Sri A. NESAMONY: Sir, are the Government aware that a Bill called the Special Rights in Land Abolition Bill was introduced in the Travancore-Cochin Assembly with the consent of His Highness the Maharajah and that it was subsequently dropped as these dues were common only in the transferred territory?



9th August 1960]

The Hon. Sri M. A. MANICKAVELU: I have asked the Kerala Government to furnish the details regarding this matter.

Sri K. SATTANATHA KARAYALAR: ஸார், இதைக் கவனிப்பதற்கு உத்தியோகஸ்தர்களும், உத்தியோகப் பற்றற்றவர்களும் அடங்கிய கமிட்டி அமைத்து குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக நிலைமை என்ன என்பதை பற்றிய அறிக்கையை வெளியிட சர்க்கார் உத்திரவு பிறப்பிக்குமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: இதைப் பற்றி முன்னால் அங்கு கலெக்டராக இருந்தவர் ரிப்போர்ட் செய்திருக்கிறார். அதிலிருந்து சில விஷயங்கள் நமக்குத் தெரிய வேண்டியிருந்தது. அதற்காகப் பக்கத்து அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். அதெல்லாம் வந்த பிறகு அவசியமிருந்தால் செய்கிறோம்.

Sri A. NESAMONY: Are the Government aware that on payment of 16-2/3 of the capitalised value of the rent, the then Government were prepared to enfranchise the lands in favour of the tenants?

The Hon. Sri M. A. MANICKAVELU: Probably the other Government were prepared and I am not aware of it. I want to look into the matter.

*Slum clearence scheme in Madurai district*

Mr. SPEAKER: கனம் அங்கத்தினர் ஸ்ரீ தியாகராஜன் அவர்கள் சபையில் இல்லாததால் கேள்வியும் பதிலும் சபை நடவடிக்கைகளில் பிரசுரிக்கப்படும்.

* 51 Q.—Sri N. R. THIAGARAJAN: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லாவுக்குரிய இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில், சேரி சுத்தப்படுத்தும் திட்டம் கீழ்க்கண்ட மேஜர் பஞ்சாயத்துக்களில் அமுல் செய்யப்பட்டதா—

1. அம்மையநாயக்கனூர்.
2. அல்லிநகரம்.
3. உசிலம்பட்டி.
4. மேலூர்.
5. கீரனூர்.
6. உத்தமபாளையம்.
7. கம்பம்.

(ஆ) அதற்கு செலவான தொகை எவ்வளவு?

The Hon. Sri R. VENKATARAMAN: (அ) The Slum Clearance Scheme has not been extended to the Major Panchayats in the State.

(ஆ) Does not arise.

[9th August 1960

*Sales Tax on foodgrains transported by lorries*

* 52 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) லாரி மூலம் ஏற்றிச் செல்லும் நெல், அரிசி முதலிய தானியங்களுக்கு விற்பனை வரி செலுத்தாமல் கடத்தப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(ஆ) இதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) Yes.

(ஆ) The Government have established check-posts at important places and they have also employed detection staff in each district to check evasions of sales tax on goods transported by lorries, boats, railways, etc.

SRI A. VEDARATHNAM: இந்த லாரி மூலம் ஏற்றிச் செல்லப்படுகிற தானியங்கள் எல்லாம் வியாபாரிகள் அனுப்பிய போதிலும் கூட மிராசுதார்கள் பேரிலேயே அனுப்புவதாகக் கணக்கு வைக்கிறார்கள். இதன் காரணமாக வரியை ஏமாற்றச் சந்தர்ப்பம் இருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: வரியை ஏமாற்றுகின்ற முறை பல உண்டு. அதிலே இது ஒன்று. அதற்காகத்தான் "டிடெக்ஷன் ஸ்டாஃப்" போட்டிருக்கிறோம். உண்மையாகவே மிராசுதார்கள் அயல் நாட்டு ராஜ்யங்களுக்கு அனுப்புகிறார்களா அல்லது போலியாக அனுப்புகிறார்களா என்பதைத் துப்பறியும் அதிகாரிகள் கண்டுபிடிக்கிறார்கள்.

SRI A. DURAISAMI REDDIAR: லாரியிலே சரக்கை ஏற்றி தவறுதலான அட்ரஸை எழுதி விட்டு அனுப்புவதால லாரிக்காரர்கள் ப்ளாக் மார்க்கெட்டில் சரக்கை விற்றுவிடுகிறார்கள. இதனால் "சேல்ஸ் டாக்ஸ்" கொடுப்பது ஏமாற்றப்பட்டு வருகிறது. இந்த லாரிக்காரர்களின் மீது நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இப்போது லாரி மூலமாக சரக்குகள் கொண்டு போனால் அந்த லாரிக்காரர் தன்னுடன் ஒரு பில்லை கொண்டு போக வேண்டும். "கன்ஸைனர்" யார், "கன்ஸைனி" யார், எந்த இடத்தில் இருக்கிறார் என்பதெல்லாம் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த அட்ரஸை வாங்கிக்கொண்டுதான் லாரிக்காரர் சாமான்களை ஏற்றிக்கொண்டு போகவேண்டும். இந்த விதமான பில்களின் ஒரு "டூப்ளிகேட் காப்பி"-யைச் சர்க்கார் கேட்டால் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். முதலிலே எந்த இடத்தில் சரக்கு ஏற்றி



9th August 1960]

அனுப்பியிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறாரோ அங்கே அட்ரஸ் இருக்கிறதா என்று பார்க்கிறோம். அவ்வாறு இல்லாவிட்டால் லாரிக்காரர் மீது நடவடிக்கை எடுக்கிறோம்.

*Distribution of cattle to development blocks*

53 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) 1960-ம் வருஷத்தில் பிளாக் டெவலப்மெண்டுகள் மூலமாக எத்தனை பசு மாடுகளும், எருமைகளும், இதர கால் நடைகளும் வழங்கப்பட திட்டமிடப்பட்டிருக்கிறது?

(ஆ) இதற்காக என்னென்ன விதமான (Hariana and other) வர்க்க கால்நடைகள், எந்தெந்த இடங்களிலிருந்து, எத்தனை கால்நடைகள் வாங்கப்படும்?

(இ) இத் திட்டத்துக்காக எவ்வளவு தொகை தேவைப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) The number of bulls and rams to be supplied depends on the demand in each block. Provision is made for the supply of 10 bulls, 5 Murrah buffaloes and 50 pedigree rams in a five-year period in each block. Based on this, the number of bulls, buffaloes and rams to be supplied during 1960–61 in block areas will be about 394 bulls, 194 buffaloes and 1,970 rams.

(ஆ) The varieties of breed to be supplied depends on the tracts in which the blocks lie. For draught purposes, breeds such as Kangayam, Hallikar, Alambadi, Umblachery, Burgur, etc., and for milch purposes Red Sindhi, Gir, Tharparka, Sahiwal are distributed. Regarding buffaloes, Murrah breed of buffaloes are supplied. The breeding bulls are purchased by the Block Development Officer from the key village areas. The rams required are purchased by the Block Development Officers through the Sheep and Goat Development Officer, Madras.

(இ) A sum of Rs. 7,500 for the supply of bulls and buffaloes and another sum of Rs. 1,500 for the supply of pedigree rams are provided for a period of five years for each block.

SRI P. G. MANICKAM: மேற்கண்ட மாடுகளோ, எருமைகளோ ஒருவருக்குக் கொடுக்கப்பட வேண்டுமானால் அவர்கள் பாதித் தொகையைக் கட்டவேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. இந்தப் பாதித் தொகையைக் கட்ட முடியாத நிலைமையில் குறிப்பாக ஹரிஜனங்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஹரிஜன இலாகா மூலம் எருதுகள் வாங்கிக் கொடுப்பது போன்று, இந்த ப்ளாக் டெவலப்மெண்ட் திட்டத்தின் மூலம் இலவசமாகக் கால் நடைகள் வாங்கிக்கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: தனியாக ஹரிஜனங்களுக்கு என்று கொடுக்க வேண்டிய சலுகைகளை ஹரிஜன இலாகா மூலமாக வழங்குகிறார்கள். ஆகவே, இந்தக் கேள்வியை ஹரிஜன இலாகா மந்திரிக்குப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[9th August 1960

*Wage Board for plantation workers*

54 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute a Wage Board for plantation workers;

(*b*) whether this Government have represented to the Centre to exclude Madras State from the constitution of Wage Board; and

(*c*) if so, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes. The Government of India have proposed to constitute three Wage Boards for Plantation Industry, one each for tea, coffee and rubber plantations.

(*b*) No, Sir. But we have expressed our doubts about the effectiveness of Wage Boards in the solution of wage problems.

(*c*) Does not arise.

*State Board of Education*

* 55 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is a proposal to establish a State Board of Education; and

(*b*) if so, when?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

*Pig-iron smelting furnaces*

* 56 *Q.*—SRI M. P. SARATHI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) தேனிரும்பு உற்பத்தி உலைகள் நிறுவ அனுமதி கோரி எத்தனை மனுக்கள் வந்தன?

(ஆ) அவைகளில் எத்தனைக்கு அனுமதி வழங்கப்பட்டன?

(இ) இதுவரையில் எத்தனை உலைகள் நிறுவப்பட்டுள்ளன? எங்கெங்கே?

(ஈ) அவைகளில் அரசாங்கம் பங்கு கொண்டு உள்ளதா? எந்த அளவுக்கு?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) It is presumed that the hon. Member refers to applications to set up factories for manufacture of pig-iron. During 1956–57, five such applications were received. There have been no applications in subsequent years.

(ஆ) Three of the applicants have been granted licences. The other two have withdrawn their applications.



9th August 1960]

(இ) A pig-iron plant has been installed in Coimbatore.

(ஈ) The Government have not participated in the capital structure of any of these projects.

SRI M. P. SARATHI : ஸார், முதல் கேள்விக்கு உண்டான பதிலையே தமிழிலே சொன்னால் நாங்கள் உப கேள்விகள் கேட்க முடியும். அந்த வகையில் சர்க்கார் முதல் கேள்விக்கும் தமிழிலேயே பதில் கொடுத்தால் நல்லது.

THE HON. SRI R. VENKATARAMAN : தேனிரும்பு என்பதற்கு "பிக் அயர்ன்", "ராட் அயர்ன்" என்று இரண்டு விதமான "ட்ரான்ஸ்லேஷன்" இருக்கிறது. தாங்கள் கேட்பது "பிக் அயர்ன்" என்று எடுத்துக்கொண்டு சர்க்கார் பதில் அளிக்கிறது. 1956-57-ல் ஐந்து அப்ளிகேஷன்கள் வந்தன. அதில் மூன்று பேர்களுக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்டது. இரண்டு பேர்கள் வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். தேனிரும்பு "ப்ளாண்ட்" கோயம்புத்தூரில் வைக்கப்பட்டிருக்கிறது.

SRI M. P. SARATHI : அந்த மூன்று அப்ளிகேஷன்கள் எந்தெந்த இடங்களிலிருந்து வந்தன?

THE HON. SRI R. VENKATARAMAN: ஒன்று கோயம்புத்தூர்; இரண்டாவது கலிங்கா இண்டஸ்ட்ரீஸ், கல்கத்தா; மூன்றாவது சௌந்தரராஜன் கம்பெனி, சென்னை.

SRI K. ANBAZHAGAN : சென்னை மாநிலத்தில் சிறு தொழில்களுக்கு இந்தத் தேனிரும்புத் தேவை மிகுதியாக இருக்கும் காரணத்தினால் அரசாங்கமே இப்படிப்பட்ட இரண்டு, மூன்று தொழிற்சாலைகளை ஏற்படுத்த முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்காகத்தான் இப்போது ஏராளமான முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். தேனிரும்பைப் பொறுத்தவரையில் நம் ராஜ்யத்தில் இருக்கும் இரும்புச் சத்து மிகவும் குறைவு என்று ஆராய்ச்சியிலிருந்து தெரிந்திருக்கிறது. ஆகவே, சிறு தொழில்களாக ஆரம்பிக்க முடியாது. பெரிய தொழிலாகத்தான், குறைந்த பட்சம் 3 லட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய தொழிலாகத்தான் ஆரம்பிக்க வேண்டும்.

SRI J. MATHA GOWDER : கோயம்புத்தூரில் ஒரு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அங்கு எந்த இடத்திலிருந்து தேனிரும்பு கிடைக்கிறது என்று சொல்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : பல இடங்களில் கிடைக்கிறது. நீலகிரியிலும் கிடைக்கிறது.

SRI S. NAGARAJA MONICAR : இந்தக் கேள்வி கேட்ட கனம் எம். பி. சாரதி அவர்கள் மூன்று அப்ளிகேஷன்கள் என்று சொன்னார்கள். "அப்ளிகேஷன்" என்றால் என்ன என்று எனக்கு விளங்கவில்லை.

[9th August 1960

MR. SPEAKER: The question is out of order.

*Use of iron removed from Madras tram lines*

* 57 Q.—SRI A. VEDARATHNAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

சென்னையிலுள்ள டிராம் லைன்களிலிருந்து கிடைக்கும் இரும்பு இம் மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளிலேயே வேலைக்காகும் பொருள்களுக்கு உபயோகப்படுத்த அப் பொருள்களை இங்கேயே விநியோகிக்க அரசாங்கம் வகைசெய்ய உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: The possibilities of allotting the tram rails to the Rerolling Mills in this State to produce some specified materials which are in great demand were explored and in view of the lack of response on the part of the Rolling Mills, the proposal was dropped.

SRI A. VEDARATHNAM: இங்கு அந்த இரும்பைப் பயன்படுத்த முடியவில்லையானால் இப்போது அதை என்ன செய்திருக்கிறார்கள்? வெளி நாட்டுக்கு எங்காவது கொண்டு போகப் போகிறார்களா? இப்போது கண்ட்ரோல் ஆர்டர் இருக்கும் காரணத்தால் இந்த மாநிலத்திற்கு வந்த இரும்பை வெளியே கொண்டு போகலாமா? இதைப் பயன்படுத்த தனியார்கள் முன்வரவில்லையானால் அரசாங்கமே ஏன் எடுத்துப் பயன்படுத்தக் கூடாது?

THE HON. SRI R. VENKATARAMAN: இதில் ஐந்தாறு கேள்விகள் இருக்கின்றன. சென்னை ராஜ்யத்தில் இருக்கும் "ரீ-ரோலிங்" மில்லில் இதை உபயோகப்படுத்த முடியவில்லையென்று சொல்லிவிட்டார்கள். வெளி ராஜ்யத்திலிருந்து வாங்கிய கம்பெனியார் வெளி ராஜ்யத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். சென்னை சர்க்கார் "ரீ-ரோலிங்" செய்ய வேண்டுமென்றால் "ரீ-ரோலிங் மில்" வேண்டும். அது இப்போது இல்லை.

SRI R. SRINIVASA IYER: அந்தத் தண்டவாளங்கள் இப்பொழுது எந்த இராஜ்யத்திற்கு எடுத்துக்கொண்டு போகப்படுகின்றன? அந்த இராஜ்யத்திலுள்ள ரீ-ரோலிங் மில்லிலே இந்த இராஜ்யத்தின் சார்பாக அவைகளை 'ரீ-ரோல்' செய்து நமக்குத் தேவையான இரும்பு சப்ளை செய்யக் கூடிய வகையில் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: I want to remind the hon. Member that he can put questions which are within the competence and jurisdiction of this Ministry. I do not know what they have done with these rails which they have produced and whetner they have exported them and all that.

SRI A. GOVINDASAMI: தண்டவாளங்களைப் பெயர்த்து எடுத்ததில் சர்க்காருக்குக் கிடைத்த தொகை எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN: ஒன்றும் இல்லை.



9th August 1960]

SRI A. VEDARATHNAM: இங்கிருந்து அந்த இரும்பை வெளியே கொண்டுபோகும் நேரத்திலே, அதை மறுபடியும் நம்முடைய இராஜ்யத்திலே கொண்டுவந்துதான் விநியோகிக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையின்பேரில் அவர்கள் இந்த மாநிலத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்கு அனுமதி கொடுக்க முடியாதா?

THE HON. SRI R. VENKATARAMAN: அவ்விதமான அதிகாரம் சர்க்காருக்கு இல்லை.

SRI K. SATTANATHA KARAYALAR: எடுக்கப்பட்ட தண்டவாளங்கள் ஏராளமான ஸ்டாக் சென்னையிலேயே இருக்கிறது என்று சர்க்காருக்குத் தெரியுமா? இதற்குத் தனிப்பட்ட விலை நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் அந்த விலைக்கு அதிகமாக அவர்கள் விற்க முடியாது என்றும் சர்க்காருக்குத் தெரியுமா? இதைப் பயன்படுத்த முடியும் என்றால் அதுபற்றி சர்க்கார் ஏதாவது முயற்சி எடுத்துப் பார்த்ததா?

THE HON. SRI R. VENKATARAMAN: இதைப் பயன்படுத்துவதாக சர்க்காருக்கு இப்பொழுது யோசனை இல்லை. கனம் அங்கத்தினர் சொல்லிய மற்ற விஷயங்களையெல்லாம் நான் தகவலாக எடுத்துக்கொள்ளுகிறேன்.

*Schemes for the welfare of women and children*

* 58 SRI P. G. MANICKAM: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை செகரடேரியட்டில் 1960-ம் வருடம் மே மாதம் 18-ந் தேதி ராஜ்ய சமூக ஷேம நல போர்டுடன், அபிவிருத்திக் கமிஷனர் திரு. ஆர். ஏ. கோபால்சாமி அவர்கள் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் விளைவாக பெண்கள், குழந்தைகளுக்கான எதிர்கால வேலைத்திட்டத்தைக் குறித்து பரிமாறிக் கொண்ட கருத்துக்கள் நம் ராஜ்ய சர்க்காரின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்பட்டதா?

(ஆ) இக் கருத்துக்களின் மீது நம் ராஜ்ய சர்க்காரால் பரிசீலனை செய்யப்பட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Yes, Sir.

(ஆ) The matter is under examination.

*Union official language*

* 59 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have made any further representation to the Union Government regarding the Union official language?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

[9th August 1960

SRI A. A. RASHEED: May I know whether the Government have received any assurance from Union Government that English will be retained as Union Official Language even after 1965?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Presidential Order makes reference to that and more than that the Prime Minister of India has given an assurance on the floor of Parliament.

*Mettur Dam*

* 60 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மேட்டூர் அணை கட்டியதற்குப் பிறகு அணைக்கட்டில் தேக்கி வைப்பதற்கான அளவுக்கு மேல் தண்ணீர் நிரம்பிய காரணத்தால் அணைக்கட்டுக்கே ஏற்படும் அபாயங்களை தவிர்ப்பதற்காக சர்க்காரால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன?

THE HON. SRI P. KAKKAN: The Mettur Dam is designed for an F.R.L. of 790 00 and M.W.L. of 796.00 and waters are stored only up to F.R.L. Therefore the question of storing to levels higher than the designed F.R.L. and consequent damages to the Dam does not arise.

SRI P. G. MANICKAM: அளவுக்கு மேலே அந்த அணைக்கட்டிலே தண்ணீர் வந்துகொண்டிருக்கும்போது அபாயம் ஏற்படும் என அநேக தடவை சர்க்கார் பொது ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறது. ஆகையால், அவ்வாறு அளவுக்கு மேலே தண்ணீர் வரக்கூடிய சந்தர்ப்பத்திலே அந்தத் தண்ணீரை ஒரு பக்கம் சேமித்து வைத்து, விவசாயத்திற்குக் கொடுப்பதற்கான திட்டம் ஏதாவது சர்க்காரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா?

THE HON. SRI P. KAKKAN: மேட்டூர் அணைக்கட்டுக்கு அபாயம் வராத முறையில்தான் அது கட்டப்பட்டிருக்கிறது. 60 அடி நீளம், 20 அடி அகலம் உள்ள 16 ஸ்லூயிஸ்கள் ஒரு பக்கம் இருக்கின்றன. இன்னொரு பக்கம், 716 அடி நீளமுள்ள தண்ணீர் விடுவதற்கான வழியும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், எப்பொழுதும் அங்கு ஆபத்து இல்லை என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டூர் அணையிலிருந்து அதிகமான அளவு தண்ணீர் வெளியே விடும்போதுதான் கீழே இருக்கும் பகுதிகளுக்கு அபாயம் இருக்கும். அப்பொழுதுதான் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

SRI S. LAZAR: மேட்டூர் அணையை மேற்கொண்டு பத்து அடி உயரமாகக் கட்டமுடியும் என்று ஆராய்ச்சி செய்து நமது அரசாங்கத்தின் ஒருசில இன்ஜினியர்கள் சொல்லிய கருத்து



9th August 1960]

அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியானால், அதைப் பரிசீலனை செய்து மேற்கொண்டு பத்து அடி உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

THE HON. SRI P. KAKKAN: அந்தத் தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

SRI M. KALYANASUNDARAM: தற்சமயம் இருக்கும் நிலைமையைப் பார்க்கும்போது மேட்டூர் அணையில் அளவுக்கு மேல் தண்ணீர் வந்து அபாயம் ஏற்படுவதாக இல்லை. அதற்கு மாறாக, அங்கு வரவேண்டிய அளவு தண்ணீர் வராததால் ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது. வழக்கமாக வரவேண்டிய ஜலம் வர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

THE HON. SRI P. KAKKAN: மெர்க்காராவில் நன்றாக மழை பெய்தால் தண்ணீர் தாராளமாக வரும். இப்பொழுது தண்ணீர் நன்றாக வந்துகொண்டிருக்கிறது. இன்றைய தினம் 95 அடி உயரத்திற்குத் தண்ணீர் அதிகமாக வந்திருக்கிறது.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

**II.—ADJOURNMENT MOTION *re* NON INCLUSION OF DEVELOPMENT OF TUTICORIN PORT IN THE THIRD FIVE-YEAR PLAN.**

MR. SPEAKER: I have received notice of an adjournment motion from hon. Member Sri M. Kalyanasundaram. He wishes to move for the adjournment of the House to discuss a matter of urgent public importance, viz., the failure of the Government to secure the approval of the Planning Commission for inclusion in the Third Five-Year Plan of the Tuticorin Port for development into a major all-weather port as an integral part of the Sethusamudram Project which concerns the interests of Madras State as a whole. How is the matter relevant to be discussed in this House? Will the Hon. Member explain?

SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய சபையில் அமைச்சர்கள் அடிக்கடி உறுதி கூறி வந்திருக்கிறார்கள். தூத்துக்குடித் துறைமுகத்தை ஒரு பெரிய துறைமுகமாகக் கட்டாயம் அபிவிருத்தி செய்வதற்குள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி வந்திருக்கிறார்கள். ஒரு விசேஷ தீர்மானம் கூட இந்தச் சபையில் கொண்டுவரப்பட்டு இங்கே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சமயத்தில் அமைச்சர் உறுதி அளித்திருக்கிறார். அந்தத் தீர்மானம் விவாதிக்கப்பட்டு பல வருஷங்கள் இருக்கும். சமீபத்தில் செய்திகளிலிருந்து பார்க்கும்போது, இந்தத் துறைமுகம் இப்பொழுது அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்படாது என்பது தெரிய வருகிறது. நமது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது

[Sri M. Kalyanasundaram] [9th August 1960

என்பதுதான் நாம் இப்பொழுது குறிப்பாக கவனிக்க வேண்டியது. இந்தச் சபைக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி எடுத்த நடவடிக்கை என்ன, அதற்குக் குந்தகம் என்ன என்று சொல்லப்படவில்லை. தூத்துக்குடித் துறைமுகம் தமிழகத்திற்கு முக்கியமானது. சென்னையில் ஒரு துறைமுகம் இருந்தாலும், அது தமிழகத்திற்கு மட்டும் அல்லாமல் அண்டை ராஜ்யங்களுக்கும் பயனளிக்கக்கூடியதாக இருக்கிறது. தூத்துக்குடித் துறைமுகம் அபிவிருத்தி அடைந்தால் தமிழகத்தின் தென் ஜில்லாக்களுக்கு அது உபயோகமாக இருக்கும். அதோடு, சேது சமுத்திரத் திட்டத்தின் ஒரு முக்கிய பாகமாக தூத்துக்குடித் துறைமுகம் பெரிய துறைமுகமாக அபிவிருத்தி அடைய வேண்டும் என்பது திட்டம். தூத்துக்குடித் துறைமுக அபிவிருத்தி கைவிடப்பட்டால், சேதுசமுத்திரத் திட்டமும் கைவிடப்படும் என்ற சூசகம் இருக்கும் காரணத்தால் அரசாங்கம் இது சம்பந்தமாக அவசர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். கவர்னர் உரையின்மீது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது என்று தெரிந்தும், இதன் முக்கியத்துவத்தை முன்னிட்டு அந்த விவாதத்தின்போதுகூட குறுக்கிடவேண்டிய அளவுக்கு தமிழகத்திற்கு முக்கியமானது ஆகையால் இதை இப்பொழுது விவாதிக்கவேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

MR. SPEAKER: May I know what is the Government's responsibility in this matter?

SRI S. LAZAR: Is the hon. Member, Sri Kalyanasundaram moving the motion?

MR. SPEAKER: I am asking the hon. Member Sri M. Kalyanasundaram what the urgency is?

SRI S. LAZAR: That will arise only after the Speaker gives consent to the hon. Member, Sri Kalyanasundaram to move the motion. Then only he may be allowed to say anything on that.

MR. SPEAKER: I shall give my ruling after hearing the Hon. Minister.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் சபாநாயகர் அவர்களே, முதன் முதலில் இதை ஒத்திவைப்புப் பிரேரணையாக எடுத்துக்கொள்ளவேண்டுமா, வேண்டாமா என்பது ஒருபுறமிருக்க, இது மிகவும் முக்கியமான விஷயம் என்பதைப்பற்றிக் கருத்து வேற்றுமையே இருக்க முடியாது. தூத்துக்குடித் துறைமுகத்தினுடைய அபிவிருத்தி, அத்துடன் சேதுசமுத்திரத் திட்டம் இந்த இரண்டுமாகச் சேர்ந்து எடுக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி இந்த அரசாங்கம் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறது. திரு. ராமசாமி முதலியார் அவர்களைத் தலைவராகக் கொண்டு, இங்கேயிருக்கும் நம்முடைய காரியதரிசி திரு. ஆர். ஏ. கோபாலசாமி அவர்களை ஒரு அங்கத்தினராகவும்



9th August 1960] [Sri C. Subramaniam]

காரியதரிசியாகவும் கொண்டு இங்கு நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டி, அதன் அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கும். அதிலே, பத்து கோடி ரூபாய் செலவழித்து இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றமுடியும் என்று கண்டிருக்கிறது. இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது, மத்திய அரசாங்கத்திலே இருக்கும் அந்த இலாக்கா இதைப் பரிசீலனை செய்து பார்த்து, 'பத்து கோடி ரூபாய் அளவிலே முடியாது, முப்பது கோடி ரூபாய் செலவாகும்' என்று அவர்கள் கணக்குக் கொடுத்து இருக்கிறார்கள். முப்பது கோடி ரூபாய் அளவிலே செலவு செய்யவேண்டியது அவசியமா என்று பரிசீலனை செய்யவேண்டும் என்ற முறையிலே இருந்துவந்தது.

இதிலே இரண்டு பகுதிகள் இருக்கின்றன. தூத்துக்குடித் துறைமுக அபிவிருத்தி ஒன்று. அதற்குப் பிற்பாடு சேது சமுத்திரக் கால்வாய் வெட்டி, வரக்கூடிய கப்பல்கள் இலங்கையைச் சுற்றிக்கொண்டு வராமல், நேரடியாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மத்தியிலே நம்முடைய கடற் பகுதியிலே போகக்கூடிய முறையில் ஏற்பாடு செய்வதன் மூலமாக, கடலோரங்களிலே செல்லும் கப்பல்களுக்கு அதிக தூரம் அதன் மூலமாகக் குறைக்கப்படுகிறது என்ற காரணத்தினால் இதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருந்தோம். 9

சேதுசமுத்திர திட்டத்தைப்பற்றி கொஞ்சம் தாமதமாக யோசித்துப்பார்த்தாலும்கூட, தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். இதற்கு மத்தியிலே மத்திய அரசாங்கம் 'இண்டர்மிடியட் போர்ட்ஸ் டெவலப்மெண்ட் கமிட்டி' என்ற குழுவை நியமித்து, இந்தியாவிலே பல்வேறு பகுதிகளிலே இருக்கக்கூடிய சிறு துறைமுகங்களை, மத்திய துறைமுகங்களைப் பரிசீலனை செய்து பார்த்து, எந்தத் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பது பற்றி சிபார்சு செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். அந்தக் கமிட்டி எல்லாத் துறைமுகங்களையும் பரிசீலனை செய்து பார்த்த பிற்பாடு தூத்துக்குடிக்கு முதல் இடம் கொடுத்து 10 கோடி ரூபாய் அளவிலே இதை அபிவிருத்தி செய்வதற்கு சிபார்சு செய்திருக்கிறார்கள். இந்த நிலைமையில்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை எடுத்துக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி பரிசீலனையில் இருந்துவருகிறது. இன்னும் இறுதியாக ஒன்றும் முடிவு ஏற்படவில்லை. ஆனால், தற்போதைக்கு தூத்துக்குடி, மங்களூர் துறைமுகங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மத்திய சர்க்கார் துறைமுக இலாகா எழுதியதின் காரணமாக, இரண்டையும் எடுத்துக்கொள்ளுவதற்கு இப்பொழுது நிதி வசதி இல்லை என்கிற முறையில் பிளானிங் கமிஷன் அதனுடைய அபிப்பிராயத்தை சொல்லியிருக்கிறது. இன்னும் முடிவு ஒன்றும் எடுக்கப்படவில்லை. சென்னை சர்க்காரைப் பொறுத்தவரையில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சில பணிகளை கட்டாயம் எடுத்துக்

கொள்ளவேண்டும் என்கின்ற ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். பல் வேறு விஷயங்களையும் பரிசீலனை செய்து பார்த்து மற்றவைகள் தானாக நடக்கலாம், நடக்காமல் போகலாம், ஆனால் அடிப் படையில் சில திட்டங்களை நிறைவேற்றினால்தான் தமிழ் நாட்டு பிற்கால அபிவிருத்தி அதன் அடிப்படையில் ஏற்படமுடியும் என்ற காரணத்திற்காகச சில திட்டங்களுக்கு முதலிடம் கொடுத்து இவைகளை எப்படியாவது சாதித்தாகவேண்டும் என்கிற தற்கால முடிவை எடுத்திருக்கிறோம். அப்படி எடுத்திருக்கிற முடிவுகளில் தூத்துக்குடி துறைமுகம் ஒன்று. அந்த முறையிலே மறுபடியும் மத்திய அரசாங்கத்திற்கும் பிரதம மந்திரி அவர்களுக்கும் இதைப் பற்றி எடுத்துச் சொல்லி இதைக் கட்டாயம் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக் கிறோம். ஆகவே, இதுபற்றி ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொணடு வந்து பரிசீலனை செய்யக்கூடிய அவசியம் ஒன்றும் ஏற்படவில்லை. இந்த விஷயத்தில் முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காரிடத்தில் இருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கம் நல்ல முடிவு எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. ஆகையினால் கவர்னர் உரையின் விவாதத்தில் பேசும்பொழுது இதைப் பற்றி விவாதிக்கலாம். அதற்கு அடுத்தாற்போல் என்னைப் பொறுத்தவரையில், இந்த அசெம்பளிக் கூட்டத்திலேயே செப்டம்பர் 5-ம் தேதி கூடுகிறபொழுதோ, அதற்கு முன்னு லேயே, இரண்டு நாட்கள் ஒதுக்கிவைத்து மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி இந்தச் சபை விவாதிக்க வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன். அப்படி விவாதிக்கும்பொழுது சில திட்டங்களை எடுதது, அந்தத் திட்டங்களை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்கின்ற முறையில் நாம் எல்லோரும் ஏகமனதாக அதுபற்றி யோசனை சொல்வோமானால் அவைகளைப்பற்றி வற் புறுத்துவதற்கு இன்னும் அதிக பலம் ஏற்படும். ஆகையினால், இதுபற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை இப்பொழுது ஏற்றுக் கொள்ளுவதற்கு இடம் இல்லை. விஷயம் ரொம்பவும் முக்கிய மானது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். அதுபற்றி எல்லா விதமான நடவடிக்கையையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளும். அதற்கு இந்தச் சபையினுடைய ஆதரவு மட்டுமல்ல, மக்களுடைய முழு ஆதரவும் இருக்கும் என்பதில் சந்தேகமே கிடையாது.

SRI K. ANBAZHAGAN: On a point of information, Sir, on the subject explained by the Hon. Minister . . .

MR. SPEAKER: Normally I should not have allowed any discussion on this matter. This matter being very important I allowed the hon. Member and the Hon. Minister to speak. The hon. Member Sri Lazar has objected to even the hon. Member Sri Kalyanasundaram speaking on the same. I am sure he would object even to the elaborate statement of the Hon. Minister. Anyway, there has been some discussion. From that I am clear that there is no ministerial responsibility in this matter. The



hon. Member can speak on this subject as much as he likes when he speaks on the Governor's Address and the Hon. Minister will reply to it. I, therefore, feel that I cannot allow any further discussion on the matter.

I rule this adjournment motion out of order.

### III.—PRIVILEGE MOTION *re* ARREST OF SRI M. KALYANASUNDARAM.

MR. SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of a matter of privilege with regard to his recent arrest under Section 151, Cr.P.C. He contends that his arrest involves a breach of privilege for the following reasons:—

(1) that his arrest and detention under Section 151, Cr.P.C., is not an arrest under criminal charge or under Public Safety Act as that Section authorises a police officer to arrest without warrant;

(2) that the House has not been informed of the reasons of arrest;

(3) that he was residing in the Legislators' Hostel and preparing for the ensuing session and was thus prevented from doing the Legislature work; and

(4) that he was arrested within the immunity period of 40 days.

Some Members rose.

MR. SPEAKER: I am not going to allow any speeches. The matter is very important, I quite agree. So far as I am aware I think there is no precedent for this matter. I should like the Leader of the House and the hon. Member Sri M. Kalyanasundaram to give their views on the subject on a subsequent date. After hearing their views I will give my ruling. When will the House like to take it up?

THE HON. SRI C. SUBRAMANIAM: It may be taken up on the 18th.

MR. SPEAKER: I will take it up on the 18th August.

Sri Lazar rose.

MR. SPEAKER: The hon. Member, being the Chairman of the Committee of Privileges, will not insist on speaking on that date.

SRI K. VINAYAKAM: Has the hon. Member Sri M. Kalyanasundaram been subsequently released?

MR. SPEAKER: Otherwise he cannot be in this House. I must tell the House that as soon as he was arrested, the Speaker was intimated of his arrest and was given the reasons for the arrest.

SRI M. KALYANASUNDARAM: The House was not

[9th August 1960

MR. SPEAKER : The Speaker only must be informed according to the rules. The Speaker has been informed and the matter has been passed on to the Members of the House.

SRI M. KALYANASUNDARAM : The reasons were not given.

MR. SPEAKER : It is not necessary to give the reasons.

### IV.—CALLING ATTENTION TO THE FAILURE OF WATER-SUPPLY IN THE NANDIAR CHANNEL.

SRI S. LAZAR : I beg to call the attention of the Hon. Minister for Works to a matter of urgent public importance, *viz.*, the failure of water-supply in the Nandiar channel and the consequent failure of kuruvai crops in 27 villages in Lalgudi and Udayarpalayam taluks.

*ஸார், திருச்சி மாவட்டத்தில் நந்தியார் கால்வாய் உடையார் பாளையம், லால்குடி தாலுக்காவிலே சென்று கொண்டிருக்கிறது. இருபத்தி ஏழு கிராமங்கள் இந்தக் கால்வாயின் பாசனத்தில் இருந்துகொண்டிருக்கின்றன. ஆண்டுதோறும் இந்தக் கால்வாய் பாசனத்தை உபயோகிக்கக்கூடிய நிலங்களில் இருபோக சாகுபடி நடப்பது வழக்கம். இந்த ஆண்டில் இந்தக் கால்வாயில் தண்ணீர் வராமல் இருந்ததால் குறுவை சாகுபடி சுத்தமாக சாகுபடியாகாமல் போய்விட்டது. அடுத்த சம்பாவும் சாகுபடி நடக்குமா என்கின்ற சந்தேகம் விவசாயிகளிடத்திலே ஏற்பட்டுள்ளது. காரணம் திடீரென்று காலம் தவறி அதிலிருந்து ஸ்லூயிஸை எடுத்துவிட்டு, வேறு ஒரு ஸ்லூயிஸ் கட்டவேண்டுமென்ற முறையில் ஆரம்பித்த அரசாங்க அலுவலகர் அதைக் குறித்த காலத்தில் முடிக்காமலே இருந்ததோடுகூட எந்தவிதமான வேலையும் செய்யாமலே இருந்துவிட்டார்கள். அதன் காரணமாக ரொம்பவும் பாதகம் ஏற்பட்டுள்ளது. ஒருபோக சாகுபடி பூராவும் கெட்டுப் போய்விட்டது. மக்கள் ரொம்பவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது விஷயமாக துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நானும் கனம் அங்கத்தினர் சுப்பையா அவர்களும் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். மக்களுடைய தொல்லைகளை நீக்குவதற்கு வாய்தா வஜா செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா, எப்பொழுது மீண்டும் அடுத்த சம்பா சாகுபடிக்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.*

* THE HON. SRI P. KAKKAN : The Nandiar channel takes off, from the Nandiar river, above its infall into the Coleroon river, in Lalgudi taluk limits of Tiruchirappalli district. In the absence of rains and flow in the Nandiar river, the Nandiar channel depends for its supplies, purely on the drainage of the Koolayar drain, which in turn receives the drainage flows mainly from the Peruvalai channel and partly from the Ayyan and Panguni channels, which draw supplies ultimately from the Cauvery river. The waters of the Koolayar are diverted into the Nandiar channel by the Koolayar anicut located near its infall into the Coleroon river.



9th August 1960] [Sri P. Kakkan]

The Nandiar channel therefore depends for its supplies on the drainage flows of the Cauvery channels. The total registered ayacut of the Nandiar channel in Lalgudi and Udayarpalayam taluks is 7,338.46 acres. During the past five years, there has been an increase in the total cultivated area by about 3,000 acres.

Usually, the Nandiar channel is opened for irrigation on the 15th June every year (i.e.), 15 days after the opening of the Ayyan and Peruvalai channels. But this year, the Nandiar channel was opened on the 25th June 1960, due to the postponement of the closure period of Ayyan and Peruvalai channels by ten days.

The scarcity of supplies in the Nandiar channel was also brought to the notice of the Government on 26th July 1960 itself, and the Chief Engineer (Irrigation) was asked to issue necessary instructions immediately to the Superintending Engineer concerned, to ensure regular supplies in the channel.

At the time of opening the Nandiar channel, the supply is generally inadequate, as it takes some time for the drainage of the upper channels to collect. This year, the work to provide screw gearing shutters in the Nandiar and Koolayar anicuts was taken up under Special Minor Irrigation Programme. To carry out the work, ring bunds were put up in front of the anicuts and irrigation was carried on with the available water. But, due to unexpected rains in the catchment of the Nandiar, there were heavy floods in the river and the ring bunds, already put up, gave way. As a result, it was not possible either to send adequate supplies for irrigation and to carry out improvements works immediately to such a stage as to divert all the available discharge in the Koolayar to the Nandiar channel. Consequently there was low supply in the channel. The improvement works that were being carried out to the anicuts have since come up to the crest level and all the available supply is being diverted into the Nandiar channel. It is also reported that arrangements have since been made for diverting full supply from 2nd August 1960.

From the above, it may be seen that there has been no failure of water-supply in the channel pointed out by the Member, but only low supply due to the circumstances beyond the control of the department.

### V.—ANNOUNCEMENT—THE MADRAS SALES OF MOTOR SPIRIT TAXATION (AMENDMENT) BILL, 1960.

MR. SPEAKER : I have to announce that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1960.

[9th August 1960

VI.—GOVERNMENT BILL.

THE MADRAS SALES OF MOTOR SPIRIT TAXATION (AMENDMENT) BILL, 1960.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1960 *.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1960.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VII.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : Now hon. Members will move their amendments to the motion of thanks to the Governor's Address. I shall call the number of the amendment and the hon. Member who has given notice of it will move it. If hon. Members are not in their seats, I take it that they are not moving their amendments. (At this stage the hon. Member, Sri N. K. Palanisami entered the House).

I am glad that the hon. Member Sri N. K. Palanisami has come now.

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no mention has been made about the soaring prices of foodstuffs and other commodities ".'

SRI M. KALYANASUNDARAM : Sir, I second the amendment.

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no mention has been made about the increasing unemployment problem in the State ".'

SRI M. KALYANASUNDARAM : Sir, I second the amendment.

SRI P. S. CHINNADURAI : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no mention has been made about any definite measures to be taken for arresting the rising prices of essential commodities ".'

*Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 9th August 1960.



9th August 1960]

SRI K. R. NALLASIVAM : Sir, I second the amendment.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that there is no enunciation of a clear cut policy for preventing the rise in the prices of consumer goods ".'

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note the failure of the Government to order the release of political prisoners belonging to the Communist Party who are undergoing long terms of imprisonment in the Central Jails of Madurai and Coimbatore ".'

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no mention has been made regarding the introduction of Tamil in the Courts ".'

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no mention has been made regarding the construction of new dams in the State ".'

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no mention has been made of any concrete steps to be taken to check the rising cost of prices as suggested by the All Parties Price Reduction Committee during the previous year ". '

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no mention has been made regarding the starting of a Steel Plant in this State ". '

The amendment was duly seconded.

[9th August 1960

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no mention has been made regarding the extension of Intensive Cultivation Scheme to the North Arcot district".'

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no mention has been made regarding the grant of loans to House Construction Societies".'

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that the Address failed to mention the re-enforcing of the system of Tariff Guarantee in the electricity supply".'

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no mention has been made about the malpractices by Beedi Employers throughout the State".'

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that the Government have failed to include the starting of a steel plant in the Third Plan".'

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that the Government have failed to take steps to start a factory for producing alcohol from sugar waste".'

The amendment was duly seconded.



9th August 1960]

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that the Government have not taken over the midday-meal scheme for school-going children, throughout the State".'

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that the conservancy workers of municipalities are not benefitted by the recommendations of the Madras Pay Commission".'

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that Government have not taken steps for Slum Clearance".'

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that the Governor has failed to make mention of the appalling conditions of poverty and starvation in which handloom weavers live in this State".'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no reference has been made about the demands raised by the village officers".'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no reference has been made to solve the unemployment problem in this State".'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

"but regret to note that no reference has been made to constitute a committee to watch the enforcement of Land Reformation Acts in this State".'

The amendment was duly seconded.

[9th August 1960

SRI A. GOVINDASAMY : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

" but regret that the Address failed to express the disappointment of the people of Tamilnad at the omission of the scheme to convert the Tuticorin Port into a deep-sea harbour in the Draft Third Five-Year Plan ".'

The amendment was duly seconded.

SRI M. KARUNANITHI : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

" but regret to note the failure of our Government to take effective steps to formulate a scheme for the utilisation of the waters of the Godavari and Krishna now running waste in the set ".'

The amendment was duly seconded.

SRI K. ANBAZHAGAN : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

" but regret that the Address failed to mention the disapproval of the policy of imposing Hindi in all the High Schools in the State in an indirect manner ".'

The amendment was duly seconded.

SRI P. U. SHANMUGAM : Sir. I move the following amendment :—

'Add at the end the following :—

" but regret that there was no mention in the Address of the failure of the Government to check the soaring prices ".'

The amendment was duly seconded.

SRI M. KARUNANITHI : Sir, I move the following amendment :—

'Add at the end the following :—

" but regret that the Address has failed to mention that necessary steps will be taken to amend the Constitution suitably to the effect that any switch-over to Hindi as the Official Language of India from English will be decided by the non-Hindi speaking people as indicated by the Prime Minister of India in his assurance in this regard on 4th September 1959 ".'

The amendment was duly seconded.

MR. SPEAKER : Now, we shall continue the discussion on the Governor's Address.

SRI M. KALYANASUNDARAM : Sir, I have given notice of two amendments. One amendment has been circulated but the other amendment has not been circulated. May I know the reason for it?

MR. SPEAKER : I cannot give any reason. I would have ruled it out of order. If I give the reason in the House I will be



9th August 1960] [Mr. Speaker]

setting up a bad precedent. If I have to give the reason for every amendment ruled out of order, I will have to take up the whole time of the House only for giving reasons.

SRI M. KALYANASUNDARAM : If hon. Members know the reasons, there will be no repetition of such a mistake.

MR. SPEAKER : Every hon. Member is supposed to know the Rules thoroughly.

SRI N. K. PALANISAMI : Sir, I have also given notice of an important amendment and that has not been circulated.

MR. SPEAKER : For the same reason, I would have ruled it out of order.

According to the agreement reached yesterday, the Leader of one Party will speak to-day. Now the hon. Member, Sri Pakkirisami Pillai will speak. I allow 20 minutes for him.

## VIII.—POINT OF INFORMATION *RE*: ATTENDANCE OF A MEMBER IN COURT.

SRI A. V. P. ASAITHAMBI : On a point of information, Sir. இன்றைக்கு கவர்னர் உரைமீது பேசுவதற்கு என் பெயரும் எங்கள் கட்சியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்று ஒரு வழக்கு இருக்கிறது, இந்த அமைச்சர்களை நான் அவதூறாகப் பேசினேன் என்பது சம்பந்தமாக. ஆகவே அந்த வழக்குக்குப் போக வேண்டியிருக்கிறது; இங்கேயும் பேச வேண்டியிருக்கிறது. அங்கே போவதானால், இங்கே பேச முடியாது.

MR. SPEAKER : அப்படியானால் நீங்கள் நாளைக்கு இங்கே பேசுங்கள்.

SRI A. V. P. ASAITHAMBI : முன்பு கனம் ரஷீத் விஷயத்தில் அவர்கள் கோர்ட்டுக்குப் போகவேண்டியதில்லை என்று தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள் . . .

MR. SPEAKER : நான் சொல்லவில்லை. சபையைக் கேட்டேன், சபை அப்படித் தீர்மானித்தது. அதோடு, தங்கள் பேரில் இன்று இருப்பது க்ரிமினல் கேஸ் என்று நினைக்கிறேன். க்ரிமினல் கேஸுக்குப் ப்ரையாரிடி கொடுக்கவேண்டும்; ஆகையினால், தாங்கள் இன்றைக்கு கோர்ட்டுக்குப் போங்கள், நாளைக்கு இங்கே வாருங்கள். (சிரிப்பு.) நாளைக்கு நீங்கள் பேசலாம். இன்று இங்கே பேசுவதற்கு தயவுசெய்து கனம் கோவிந்தசாமியை வேறு பெயர் கொடுக்கச் சொல்கிறேன். (சிரிப்பு.)

## VII.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

* SRI S. PAKKIRISAMI PILLAI : கனம் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய பிரசங்கம் நல்ல உயர்ந்த லட்சியத்தைக் கொண்டு ரொம்ப அழகாக இருந்திருக்கிறது. சமீபத்தில் நடைபெற்ற, அண்மையில் நடைபெறப்

[Sri S. Pakkirisami Pillai] [9th August 1960

போகின்ற, சம்பவங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே முதல் இடம் இந்த மத்திய சர்க்கார் சிப்பந்திகள் சம்பத்தில் வேலை நிறுத்தம் செய்தார்களே, அந்த வேலை நிறுத்தம் எப்படிக் கொஞ்ச நாட்களில், அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுவிட்டது என்பதைப் பற்றி. அதற்குக் காரணம், போலீசார் திறமை, போலீசாருடைய நடவடிக்கை, போலீசார் எடுத்துக்கொண்ட ஒரு தீவிர செயல் முறை என்று இவைகளைக் குறிப்பிட்டு அவர்களுக்கு ஒரு பாராட்டுதல் சொல்லி, அந்த மத்திய சர்க்கார் சிப்பந்திகள் வேலை நிறுத்தம் முடிவடைந்ததுபற்றி கவர்னர் பெருமான் மகிழ்ச்சியுடன்கூடிய திருப்தியை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே அந்தமாதிரியான திருப்தி எல்லாருக்கும் அதிக சம்பளம் வாங்குகிறவர்கள், பெரிய பணக்காரர்கள் அத்தனை பேர்களுக்கும் மகிழ்ச்சி அளித்திருக்கும்; ஆனால், ஏழை, எளியவர்கள் அம்மாதிரி அடக்கப்பட்டார்கள் என்பதில் சந்தோஷம் அடைந்தார்கள் என்று சொல்லமுடியாது. சாதாரணமாக, அந்தமாதிரி, சிப்பந்திகளுக்கு என ஒரு தொழில் சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு முதல்ல் இடம் கொடுத்துவிட்டு, தொழில் சங்கத்தை ரிஜிஸ்டர் செய்து, தொழில் சங்க விதிகள் பிரகாரம் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்போது, கடைசியில் தடை செய்வது நம் இந்திய சர்க்காருக்குப் பழக்கமாக ஆகிவிட்டது.

ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் குறைந்த சம்பளம் வாங்கிக்கொண்டு தங்களுடைய வாழ்க்கைத் தரத்தைச் சரிக்கட்டுவதற்கு முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதின் காரணமாக அவர்கள் ஊதியம் அதிகம் வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் அதற்கு எதிரிடையாக சர்க்காரிடம் வேலை செய்யும் கொழுத்த சம்பளம் வாங்குகிற பெரிய அதிகாரிகள், மந்திரிகள் முதலானவர்கள் (குறுக்கீடு: மந்திரிகளும்தான் பொது மக்களின் பணத்திலிருந்து சம்பளம் வாங்குகிறார்கள்) சேர்ந்து அதை அடக்கிவிட்டார்கள். ஆகவே கொழுத்த சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் அவர்கள் கீழே வேலை செயயக்கூடிய குறைந்த சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கும் இடையேதான் இந்தப் போராட்டம் நடைபெற்றது என்று சொல்லவேண்டும். நாம் எதிர்பார்த்த விதம் அந்தப் போராட்டத்தை அவர்கள் அடக்கி விட்டார்கள். அவ்வளவு பேர்களுக்கும் பல்வேறு வழிகளில் பல தொந்தரவுகளைக் கொடுத்தார்கள். போலீசார்களுடைய உதவியால் போராட்டத்தை நடத்தியவர்கள் ஒடுக்கப்பட்டார்கள். அப்படித் தடுத்து நிறுத்திவிட்டோம் என்றும் நமது கவர்னர் திருப்தியுடன் சொல்லியிருக்கிறார். தொழில் சங்கச் சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்ட உரிமையை மத்திய அரசாங்க அதிகாரத்தில் இருந்துவரும் ஜனாதிபதி அவர்கள் தனக்கு இருக்கும்படியான விசேஷ அதிகாரத்தை வைத்துக்கொண்டு சிவில் ரைட்ஸை க்ருமினல் அபென்ஸாக மாற்றி அந்த முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார். இப்படிப்பட்ட க்ருமினல் அபென்ஸின் கீழ் இப்பொழுது போலீஸ் அதிகாரிகளுக்கு அந்தந்த ராஜ்யங்களில் அதிகப்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் இலாகாவில் உள்ள கீழ்த்தர சிப்பந்திகளுக்கும் இப்படிப்



9th August 1960] [Sri S. Pakkirisami Pillai]

பட்ட அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. இப்படிப்பட்ட முழு அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுப்பது என்பது அவ்வளவு நல்லது அல்ல. அதனால் தொழிலாளர்கள் படக்கூடிய அவதி சொல்லி முடியாது. எனக்குத் தெரிந்த வரையில் பெரம்பூர் வொர்க்ஷாப்பில் உள்ளே நுழைந்து வேலை செய்யச் சென்றவர்களையெல்லாம் தடி கொண்டு தாக்கி அவர்களில் அநேகரை லாரியில் ஏற்றிக்கொண்டு போய் ஜெயிலில் போட்டு விட்டார்கள். மேலும் வெளியில் சென்றவர்களைக்கூட வழியில் மடக்கி ஒரு பக்கம் லாரி இன்னொரு பக்கம் போலீஸ் கார் இப்படி வைத்துக்கொண்டு அவர்களையெல்லாம் பிடித்துக்கொண்டு லாரியில் போட்டுக் கொண்டுபோய் ஜெயிலில் அடைத்து விட்டார்கள். உள்ளே சென்றால்கூட அங்கே இருக்கக்கூடிய ஒரு சங்கத் தலைவரும் அல்லது அந்த சங்கத்தைச் சேர்ந்தவர்களும் மற்ற சங்கத்தைச் சேர்ந்தவர்களைக் காட்டிக்கொடுத்து போலீஸார் வசம் ஒப்படைத்தார்கள். இப்படி போலீஸில் ஒப்படைக்கப்பட்டவர்கள் போலீஸாரால் பலவித இம்சைக்குள்ளாக்கப்பட்டனர். கடந்த 11, 12, 13-ம் தேதிகளில், ஆக இந்த மூன்று நாட்களிலும், அங்கு நடந்த போலீஸ் அட்டகாசமும், போலீஸ் தர்பாரும் சொல்லி முடியாது. தெருவில் போனவர்களையும் வீட்டின் முன்னிருந்தவர்களையும் பிடித்துப்போய் ஜெயிலில் போட்டார்கள். இதை நாங்கள் பார்த்தோம். இம்மாதிரியான அக்கிரமம் அங்கே நடைபெற்றது. இதற்கு வேறு காரணம், அங்கு போலீஸ் கீழ் அதிகாரிகளுக்கு முழு அதிகாரமும் கொடுத்ததுதான். பெரிய அதிகாரிகள் செய்ததாகத் தெரியவில்லை. சிறிய அதிகாரிகள்தான் செய்தார்கள். சப்-இன்ஸ்பெக்டர் முதலானவர்களுக்கு அதிகப்படியான அதிகாரத்தைக் கொடுத்ததன் பயன்தான் இது. அவர்களுக்கு இப்படிப்பட்ட முழு அதிகாரத்தைக் கொடுத்ததினால் அவர்களுக்கு ஆகாதவர்களையெல்லாம் பிடித்து அங்கே அடித்திருக்கிறார்கள். அத்துடன் ஜெயிலிலும் போட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான ஒரு அக்கிரமும் அங்கே நடைபெற்றிருக்கிறது. இந்த அக்கிரமச் செயல்களைப்பற்றி பரிசீலனை செய்ய ஒரு பகிரங்க விசாரணை நடத்த வேண்டும். அங்கு போலீஸார் நடத்திய அக்கிரமத்தைக் கண்டிக்கக்கூடிய வகையில் பகிரங்க விசாரணை நடத்தவேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி நடத்தி அப்படி அவர்கள் அக்கிரமம் செய்திருக்கிறார்களா என்று கண்டு பிடித்து அவர்களுக்குக் கண்டிப்பாக இந்த அரசாங்கம் தண்டனை கொடுக்க வேண்டும். தண்டனை கொடுக்கும்போது கடுமையான தண்டனையும் கொடுக்கவேண்டும். ஆகவே ஒரு பகிரங்க விசாரணை நடப்பதற்கு வழிவகை காண வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸார் அக்கிரமம் செய்தது ஒரு பக்கம் இருக்க, தேசத் தலைவர்கள் பேச்சு நடைமுறையில் நியாயமாகப் போனாலும்கூட அவர்களுக்குக் கீழ் இருக்கும்படியான அதிகாரிகள் இன்னும் மனதில் இரக்கம் காணும்படியான நிலையில் நடந்து கொள்ளவில்லை. சில அதிகாரிகள், தொழில் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பலரை "சஸ்பெண்ட்" செய்திருக்கிறார்கள். பலர் மீது

கோர்ட்டு நடவடிக்கைகூட எடுத்திருக்கிறார்கள். சங்கம் என்று ஒன்று வைத்துக்கொண்டு அதன் மூலமாக தங்களுடைய உரிமைக்கு என்று வேலை செய்யும்போது தடுக்கப்படுகிறது. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சாதாரணமாக இப்படிப்பட்ட நடவடிக்கைகள் ஜனநாயக நாட்டில் நடைபெறக் கூடியதாக இல்லை. தொழில் சங்கச் சட்டத்தில் வேலை நிறுத்தம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் வேலை நிறுத்தம் செய்வது கூடாது என்று சொல்வது சரியல்ல. அதிலும் முதலில் அந்த விதமான ஒரு உரிமையைக் கொடுத்து விட்டு அதற்கு வேண்டிய எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்து விட்டு கடைசியில் அதைத் தடைசெய்வது என்பது நியாயமாகாது. இப்படிக் கடைசியில் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்று போலீஸார்களைக்கொண்டு அடக்குவது என்பது ஜனநாயக நாட்டிற்கு உகந்த பண்பு அல்ல. இதைவிட அக்கிரமமான செயல் வேறு கிடையாது. இந்த நிலையில்தான் விநோபாஜி அவர்கள் அரசாங்கம் போலி கௌரவத்தை கடைபிடிக்கிறார்கள் என சொல்லியதைக்கூட கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மத்திய அரசாங்கமே ஒரு கமிஷனுக்கு ஏற்பாடு செய்தார்கள். அந்தக் கமிஷன் சிலவற்றை சிபாரிசு செய்தது. அந்தச் சிபாரிசு முழுவதையும் அங்கீகாரம் செய்தார்கள். அதன் பிறகு அதை ஏன் அமலுக்குக் கொண்டு வரவில்லை? இப்படி அமலுக்குக் கொண்டு வரமுடியாவிட்டால் கமிஷனை நியமிக்க வேண்டிய அவசியம் என்ன? அதேமாதிரி பஞ்சாலை தொழிலாளர்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை சரிக்கட்டும் வகையில் ஒரு "வேஜ் போர்ட்" நியமிக்கப்பட்டு அந்த "வேஜ் போர்ட்" விசாரணைக்குப் பின்னர் தங்களுடைய சிபாரிசையும் தெரியப்படுத்தியது. தென்னிந்திய மில் முதலாளிகள் அதை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. நமது தொழில் சங்கப் பிரதிநிதிகள் அதற்கு எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியின் விளைவாக பல்வேறு கட்சிப்பிரதிநிதிகளும் இருதரப்பாரும் பேச்சு வார்த்தைகளை நடத்தி ஒரு முடிவுக்கு வரவில்லை. அதன் பிறகு நமது ராஜ்ய தொழில் அமைச்சர் அவர்கள் தன்னுடைய சொந்த முயற்சியினால் வெகு சூசகமாக நல்ல வழியில் ஒரு முடிவைக் காணும்படி நேர்ந்தது. ஆனால் ஏற்கனவே மில் முதலாளிகள் அங்கே எவ்வளவு அதிக பட்சமாக கொடுக்கப்படும் என்று நினைத்திருந்தார்களோ அந்தத் தீர்ப்பைத்தான் அமைச்சர் அவர்களும் வற்புறுத்தினார்கள். அதற்கு மேல் அந்த சம்பளக் கமிஷன் திட்டம் எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று கணக்குப் பார்க்கும்படியான சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டது. அநேக மில் முதலாளிகள் அதை ஒத்துக்கொண்டு கையெழுத்தும் போட்டார்கள். ஆனால் ஒரு மில் முதலாளி மட்டும் ஒத்துக் கொள்ளவில்லை. பி. அண்ட். சி. மில் முதலாளி அதை எதிர்க்க ஆரம்பித்தார். அதற்கு அவர்கள் என்ன காரணம் சொன்னார்கள் என்றால் தாங்கள் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான சலுகைகள் கொடுக்கிறோம் என்றும் வருஷத்திற்கு ஒரு சத விகிதம் சம்பள உயர்வு கொடுக்கிறோம் என்றும், ப்ரொடக்ஷன் அலவன்ஸ் கொடுக்கிறோம் என்றெல்லாம் சொல்லி வாதத்தைக்





கிளப்ப ஆரம்பித்தார்கள். இப்படிப்பட்ட எதிர் கோரிக்கைகளை தொழிலாளர்களுக்கு எதிராக அரசாங்கத்தின் முன் போட்டார்கள்.

இந்த எதிர் கோரிக்கைகளை அரசாங்கத்தார் அனுமதித்து 10-00 a.m.
அதன் பேரில் பேச்சு வார்த்தை நடத்தியது சரியல்ல. அதை அவர்கள் முன்னாலேயே ஒத்துக்கொள்ளாமல் அவர்களை மற்றவர்களுடன் ஒத்துக்கொள்வதற்கு வற்புறுத்தியிருந்திருப்பார்களேயானால், அதற்குப் பின்னால் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகள் அங்கே நடந்தே இருக்காது. ஏற்கனவே பல தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டதன் பிரகாரம் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அந்தத் தேதிப் பிரகாரம் வேலை நிறுத்தம் செய்த பிற்பாடு அரசாங்கத்தார் அந்தமாதிரி வேலை நிறுத்தம் செய்வதுநீது நல்லது அல்ல என்று அபிப்பிராயப் பட்டார்கள். அரசாங்கத்தாரின் மனப்போக்கைப் பார்த்து வேலை நிறுத்தம் உடனே வாபஸ் பெறப்பட்டது. அவ்வாறு வாபஸ் வாங்கினவுடன் மில் முதலாளிகள் நோட்டீஸ் போட்டு ஏன் வேலை நிறுத்தம் செய்தவர்களுடைய சம்பளத்தை ஆறு நாட்களுக்குப் பிடிக்கக்கூடாது என்று பயமுறுத்த முற்பட்டனர். அதற்கப்புறம் திரும்பவும் வேலை நிறுத்தம், திரும்பவும் வாபஸ் என்று ஏற்பட்டது. இன்னும் ஒருவித சமரச முடிவும் நல்லவகையில் ஏற்படவில்லை. இன்னும் எத்தனை காலம் அதற்கு ஆகுமோ? அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்குமோ? கொழுத்த பி. அண்டு ஸி. மில் முதலாளிகள் பணத்தைச் சுரண்டிக்கொண்டிருக்கிறார்கள். பணத்தின் ஆசை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஓரளவு கொஞ்சம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ளலாம் என்று தொழிலாளர்கள் ஆசைப்பட்டால் அவர்கள் நசுக்கப்படுகிறார்கள். ஓரளவு தொழிலாளர்கள் பக்கம் அரசாங்கத்தார் இருந்து அவர்களுக்கு நல்லவழியில் உதவி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நமது தொழில் அமைச்சர் அவர்கள் இன்னொரு நல்ல காரியத்தைச் சமீபத்தில் செய்துவிட்டிருக்கிறார்கள். பீடி முதலாளிகளுடைய ஒரு அக்கிரமத்தை, ஆணவத்தை, அடக்கி ஒருமாதிரியாக அவர்களையும் சட்டத்தின் விதிகளுக்கு இணங்கும்படியாகச் செய்திருக்கிறார்கள். அவர்கள் இதுவரையில் சட்டத்திலிருந்து தப்பிக்கொள்வதற்கு என்னென்ன தந்திர உபாயங்களை எல்லாம் அனுஷ்டிக்க முடியுமோ அவ்வளவையும் அனுஷ்டித்து வந்தார்கள். ஆனால் கடைசியில் இப்போது குறைந்தபட்ச சம்பளத்தையாவது ஒப்புக்கொள்ளும்படியான நிலைமைக்கு அவர்களை உட்படுத்தியிருப்பதைக் கண்டு தொழில் அமைச்சர் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

நம் நாட்டில் பீடித் தொழில் மிகவும் ஏழைகள் செய்யும்படியான தொழில். பட்டினியைப் போக்கிக்கொள்ள பணம் வாங்கும்படியான நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வகையில் தீர்வு காணமுடியுமோ அந்த வகையில் தீர்வுகாணும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தவிர லேபர் டிபார்ட்மெண்ட் போதுமான அளவுக்குத் திருப்திகரமான அளவில் வேலை செய்யவில்லை என்பது என் கருத்து. உதாரணமாக லேபர் ஆபீசர் நம்பர் 1. அவரை மாற்றி இன்னொருவரைப் போடாத காரணத்தினால் தொழில் சச்சரவுகள் அதிகமாக தீர்வுகாணமுடியாமல் இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றுக்கு நல்ல முடிவு காண சீக்கிரத்தில் வழிவகை செய்தாக வேண்டும். அதற்கு என்னென்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டாகவேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பல்வேறு வழிகளில் திட்டங்களைப் போட்டு அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய்களை அதில் செலவு செய்திருக்கிறார்கள். அப்படிச் செலவழித்திருப்பதற்குப் பயன் எந்த வழியில் கிடைத்திருக்கிறது என்பதைப் புள்ளி விவரங்களுடன் இன்னும் கொடுக்கவில்லை. இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வருகிறது. அதில் தொழிலாளர்களுக்கு உண்டான ஒரு நல்ல வசதி வாய்ப்புகளுக்குண்டான திட்டங்கள் ஏதும் செய்யவில்லை, அவர்களுக்கு உண்டான க்ஷேமநலங்கள் சம்பந்தமாக என்ன திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன? ஏதோ தொழிலாளர்களுக்கு இரண்டொரு இடங்களில் வீடு கட்டிக்கொடுத்தார்கள். அந்த ஒன்றையும் சரியாகச் செய்யவில்லை. வேறு திட்டம் எதுவும் கிடையாது. இதுதான் இன்றுள்ள நிலைமை.

"ஷாப் அண்டு எஸ்டாப்ளிஷ்மெண்ட் ஆக்ட்" ஒன்று நிறுவினார்கள். மத்திய அரசாங்கத்தார் அதற்கு உண்டான வழியில் புதிதாகக் கொண்டுவரப்போவதாகச் சொன்னார்கள். அந்தமாதிரி இன்னும் கொண்டுவரவில்லை. ஆகவே தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரையில் இந்த அரசாங்கமும் சரி, மத்திய அரசாங்கமும் சரி, என்ன நல்ல வேலைகள் செய்யப்போகிறார்கள் என்பதைப் பற்றி கவர்னர் அவர்கள் தம் பிரசங்கத்தில் ஒன்றும் சொல்லவில்லை. தொழில் அமைச்சர் அவர்கள் கடந்த ஆறுமாத காலத்திற்குள் நல்ல சிறந்த பணியைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு எங்களுடைய நன்றியையும், பாராட்டுதலையும் சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI T. KARIA GOUNDER : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின் மீது என்னுடைய நன்றியைத் தெரிவிக்கும் முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர் தம்முடைய பேச்சின் பாராவிலேயே வேலை நிறுத்தத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அது சுமுகமாக முடிந்ததைப் பற்றியும், பாராட்டுதலையும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நாட்டிலே தொழிற்சங்கங்கள் என்று சொல்லக் கூடிய சங்கங்கள் எல்லாம் சேர்ந்து தொழிலாளர்களுக்கு ஏதோ சர்க்கார் சரிவரச் செய்யவில்லையென்று இந்தமாதிரியான வேலைநிறுத்தம் செய்ய திட்டமிட்டதனால் பொதுமக்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றியும் நான் சொல்லாமலேயே எதிர்க்கட்சியில் பேசிய நண்பர்கள் உணர்வார்கள் என்பதை இந்தச் சமயத்தில் நான் நினைப்பூட்ட விரும்புகிறேன்.





ஆகவே நான் சொல்ல விரும்புகிற ஒன்று என்னவென்றால் ரயில்வே தொழிலாளர்கள் எல்லாம்கூட வேலை நிறுத்தம் செய்யப் போவதாக குறிப்பிட்டவுடன் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அழுகு பொருள்களை வெளி நகரங்களுக்கு ஏற்றுமதி செய்யப் போவதில்லை என்று சொல்லி விட்டார்கள். அதன் காரணமாக எங்கள் ஊரில் மட்டும் ஒரு லட்சம் ரூபாய் பெறுமான தக்காளிக் கூடைகள் ஏற்றுமதி செய்யப்படாமல் நின்றுவிட்டன.

(Sri S. Ranganatha Mudaliar in the Chair.)

இதனால் எவ்வளவு நஷ்டம், பொதுமக்கள் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், என்பதைப்பற்றி இந்தச் சமயத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ மாநில சர்க்கார் போலீஸ் ஆட்சியைக் கொண்டு ரொம்ப பாதகங்கள் செய்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அம்மாதிரி செய்யாமல் இருந்திருப்பார்களேயானால் பொதுஜனங்கள் பாதுகாக்கப்படாமல் போயிருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் காலையில் ஒரு மணி நேரமும், மாலையில் ஒரு மணி நேரமும் வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடத்தில் வேலை செய்வதாகச் சொல்லியிருந்தார் என்று வெளிவந்திருந்தது. அதைக் குறித்து நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு சீக்கிரத்தில் இந்த வேலை நிறுத்தம் முடிந்ததுபற்றி நாம் எல்லோரும் கவர்னர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இனியாவது தொழில் கட்சி சம்பந்தப்பட்ட நண்பர்கள் பொதுமக்களிடத்தில் இம்மாதிரியான குழப்ப நிலைமையை உண்டுபண்ணாமல் இருக்குமாறு அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தச் சமயத்தில் நான் உதாரணம் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். நேற்றைய தினம் மாலையில் ஒரு வாலிபன் வந்தான். "நீ எந்த ஊர்" என்று கேட்டேன். "நான் ஆரணியிலிருந்து வந்திருக்கிறேன்" என்று சொன்னான். "எங்கே வந்தாய்" என்று கேட்டபோது, "வேலைதேடி வந்தேன்" என்றான். "ஆரணியைவிட்டு இங்கே வருவானேன்" என்று கேட்டதற்கு "நான் பட்டு நெசவாளி. கூலி அதிகம் வேண்டுமென்று கேட்டு எங்கள் தொழிற்சங்கம் வேலைநிறுத்தம் செய்தது. அதனால் இந்தத் தொழில் செய்கிறவர்கள் எல்லோரும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தொழிற்சாலை மூடப்பட்டது. அதனால்தான் நான் வேலையில்லாமல் சென்னைக்கு வந்தேன்" என்று சொன்னான். இம்மாதிரி சங்கங்கள் இருப்பதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதல்லாமல் வாலிபர்களெல்லாம் அவரவர்களுடைய இடங்களை விட்டு நகரங்களுக்கு வந்து வேலை தேடி அலைகிறார்கள். ஆகையால் தொழிற்சங்கங்கள் சரியான முறையில் வேலை செய்ய தொழிற்சங்கத் தலைவர்கள் நல்ல முறையில் பணியாற்றவேண்டும் என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் உரையில் இரண்டாவது பாராவில் பாய்பிக்குளம்

[Sri T. Karia Gounder] [9th August 1960

திட்டம் நிறைவேறியதுபற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். கேரளாவிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர்கூட கிடைக்காது என்று பத்திரிகையிலே கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. இருந்தாலும் பரம்பிக்குளம் திட்டத்திற்கு சர்க்கார் பணத்தை விரயம் செய்கிறார்கள் என்று எழுதினார்கள். ஆனால் நம்முடைய அமைச்சரவை—அதிலும் குறிப்பாக நிதி மந்திரி அவர்கள்—பரம்பிக்குளம் திட்டத்திலிருந்த சிக்கலை நீக்கி வெற்றிகரமான ஒரு முடிவுக்கு வந்தது குறித்து நாம் அவருக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக மொழி சம்பந்தப்பட்டவரையில் ரொம்ப நாளாகப் பேசப்பட்டு வருகிறது. இந்த சமயத்தில் இங்கு ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1923-ம் வருடத்திலே சென்னை சட்டமன்றத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தீர்மானம் வந்தது. ஒரு அங்கத்தினர் சட்ட சபையிலே குறிப்பிட்டார்கள்—"பிரிட்டிஷார் இந்த நாட்டிற்கு வந்த காலத்திலே அவர்களை இருக்கச்சொல்லி நாங்கள் அடைக்கலம் கொடுத்து எங்களுடைய முயற்சியிலே பிரிட்டிஷார் இந்த நாட்டிலே வேரூன்றி இருக்க முடிந்தது. இம்மாதிரி வகுப்புவாத பிரதிநிதித்துவ தீர்மானம் நிறைவேற்றப்படுமானால் நாங்கள் எல்லோரும் எதிர்த்துப் போராடுவோம்" என்று சொல்லியது எனக்கு இந்த சமயத்தில் ஞாபகம் வருகிறது. காரணம் ஹிந்தியை சாதாரணமாக படித்துக் கொள்ளவேண்டுமென்று நியதி இருக்கிறதே தவிர கட்டாயம் படிக்கவேண்டும் என்று இல்லை. மத்திய சர்க்காரில் உத்தியோகத்தை விரும்பி தேவை என்று படிக்கிறவர்கள் படிக்கலாம் என்ற விதி இருக்கிறது. ஆனால் நிர்வாகப் பொறுப்பிலே ஆங்கிலமே தொடர்ந்து இருக்கவேண்டுமென்று நமது சட்டசபையிலே எல்லாத் தலைவர்களும் கட்டுப்பாடாக ஏகமனதாக செய்த முடிவைப்பற்றி மீண்டும் முன்போலவே ஒரு குழப்பத்தைக் கொண்டுவருவது பெரும் வருத்தத்தைக் கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கிறது. நமது மேன்மை தங்கிய ஜனாதிபதி வருகின்றபோது கருப்புக்கொடி காட்டவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அதிர்ஷ்டவசமாக அதைக் கைவிட்டு விட்டார்கள்; வெற்றி கண்டோம் என்று சொன்னார்கள். அதற்கு நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அடுத்து ஆகஸ்ட் 31-ம் தேதி ஹிந்தியை எதிர்க்கப்போவதாக சொல்லுகிறார்கள். ஆனால் முன்பு எடுத்த முடிவு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கனம் நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குறிப்பிடுவார்கள் என்று விரும்புகிறேன். இந்த நாட்டிலே தமிழ் ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று சர்க்கார் தீவிர கவனம் செலுத்தி கோயம்புத்தூரிலே காலேஜ் படிப்பு அளவிற்கு தமிழிலே சொல்லிக்கொடுக்கவேண்டியது என்ற திட்டத்தை நிறுவி இருக்கிறார்களென்றால் நாம் எல்லோரும் பெருமைபடவேண்டுமென்று இந்தச் சமயத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது மைல் கற்களில் ஹிந்தி இருக்கிறது, ரூபாயில் ஹிந்தி இருக்கிறது, கார்டில் ஹிந்தி இருக்கிறது என்று சொன்னார்கள். வெள்ளைக்காரன்



9th August 1960] [Sri T. Karia Gounder]

காலத்திலே தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம் எல்லாம் இருந்தன என்று நினைவுப்படுத்த விரும்புகிறேன். ஆனால் நண்பரிடம் ஒன்றே ஒன்று கேட்டுக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய ஆசை. கேரளா, கன்னடம், ஆந்திரா ஆகிய இந்த மூன்று ராஜ்யங்களையும் கூட்டி ஹிந்தி மொழிக்குப் பதில் தமிழ்த்தாய் சிம்மாசனம் ஏறவேண்டும் என்று தீர்மானம் வாங்கி மத்திய சட்டசபையிலே கொண்டுபோய் இந்த நாட்டின் அரசாங்க மொழி தமிழாக வேண்டுமென்று அவர்கள் வாதித்தால் இந்தக் குழப்பம் எல்லாம் வரவேண்டிய அவசியம் இல்லை. இமயம் முதல் குமரிவரை தமிழ் நாடாக இருந்தது, இந்தியாவில் உள்ளவர்கள் எல்லோரும் தமிழிலேயே பேசி வந்தார்கள் என்று தமிழ் ஆராய்ச்சியாளர்கள் சொல்லி வருகிறார்கள். (குறுக்கீடு) புதுக்குழப்பம் உண்டாக்குவது என்னுடைய எண்ணம் அல்ல. இதனால் தமிழ்த்தாய் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும் என்பதுதான். ஹிந்தி வேறு என்று நாம் சொன்னால் தமிழ் வேறு என்று வடக்கே உள்ளவர்கள் சொல்லுகிறார்கள். எனக்குக்கூட பொறுமை வரும் சில சமயங்களிலே.

கோயம்புத்தூரைப் பார்த்து நாங்கள் தெற்கு வளருகிறது என்று சொல்லலாம். இங்கு ஏறத்தாழ 9 லட்சம் ஏக்கருக்கு நீர் பாசனம் பெறும் நம்பிக்கை இருக்கிறது. பரம்பிக்குளம் திட்டம் இருக்கிறது. லோயர் பவானித் திட்டம் இருக்கிறது. அதோடு கைத்தொழிலிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. வேலூரில் உள்ள நாங்கள் தெற்கு வளருகிறது என்று சொல்லி கோயம்புத்தூரைப்பற்றி பொறுமைப்படலாம், ஆனால் பிரயோஜனம் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இம்மாதிரி பிரிவு மனப்பான்மை இருப்பதனால்தான் அன்னியர்கள் நம்மை ஆள முடிந்தது என்று இந்த சமயத்தில் நண்பர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். கோயம்புத்தூர் மாவட்டத்தில் சூழ்நிலை அப்படி இருக்கிறது. அமராவதி ஆறு இருக்கிறது. பரம்பிக்குளம் ஆறு இருக்கிறது. லோயர் பவானி ஆறு இருக்கிறது. எங்கள் ஊரிலே தண்ணீர் இல்லாத ஏரி; எங்கள் பகுதியிலே சூழ்நிலை அப்படி இருக்கிறது. அதற்கு கோயம்புத்தூரைப்பற்றி பேசுவதாக இருந்தால் அர்த்தமே இல்லை. அவர்கள் எல்லாவிதத்திலும் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். இதனால் நாம் எல்லோரும் ஒற்றுமையாக முன்னேறவேண்டும் என்ற முறையில் தான் சொல்ல விரும்புகிறேன்.

தூத்துக்குடி துறைமுகத்தைப்பற்றி நேற்று சர்க்காரை கண்டித்து பேசப்பட்டது, இந்தச் சட்டசபையில். அப்போது கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஆதாரத்தோடு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். நேற்றுதான் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தைப் பற்றிய புஸ்தகம் கொடுத்தார்கள். தூத்துக்குடி துறைமுகத்தைப்பற்றி அதில் விட்டிருக்கலாம். சேலத்தில், தென் ஆற்காட்டில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை வைத்துக் கொண்டு, இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டுமென்று பல தடவை சட்டசபையில் பேசும்போது அதற்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள், இது பரிசீலனை

[Sri T. Karia Gounder] [9th August 1960

யில் இருக்கிறது என்று. பழுப்பு நிலக்கரி நெய்வேலியில் இருக்கிறது. நான் அடிக்கடி 4, 5, முறை நெய்வேலிக்குச் சென்றிருக்கிறேன். கிழக்கு ஜெர்மனியிலிருந்து வந்த நிபுணர்கள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். இதில் வெற்றி கண்டால் தென் ஆற்காட்டுக்கு பெரிய தனம்தான்.

சம்பளக் கமிஷனைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். என்.ஜி.ஓ.-க்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஒரு சில நண்பர்கள் நம்பிக்கொண்டிருந்தார்கள். சம்பளக் கமிஷன் உயர்வு கொடுத்த பிறகு நமது நிதியமைச்சர் அவர்கள் எங்கள் ஜில்லாவிற்கு ஒரு மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். அந்த மாநாடு நடந்த அன்று மாலை எனது நண்பர் ஒருவர் சொன்னார், "எனது சம்பள உயர்வு பற்றிய சர்க்கார் உத்தரவு வந்து விட்டது, எனக்கு 230 ரூபாயிலிருந்ததற்குப் பதில் 375 ரூபாயில் ஆரம்பிக்கப் போகிறார்கள், நாங்கள் நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். ஆசிரியர்கள் எல்லோரும் சந்தோஷப்படுகிறார்கள். 3-லிருந்து 5-க்குப் போய் விட்டது, 7-லிருந்து 12-க்குப் போய் விட்டது மின்சாரம் என்று நேற்று கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்கள் சொன்னார்கள். நெய்வேலியை எடுத்துக் கொள்ளுங்கள், குந்தாவை எடுத்துக் கொள்ளுங்கள். அதிலே உற்பத்தியாகும் லட்சக்கணக்கான கிலோ வாட்ஸ் மின்சாரத்தை மக்களுக்குக் கொடுக்கப் போகிறார்கள் அரசாங்கத்தார். "வாய் கொழுப்பு சீலையில் வழிந்தது" என்று ஒரு பழமொழி சொல்வார்கள். ஆக, அவசரப்படாமல் நிதானமாக யோசித்துப் பார்க்கவேண்டும். நாம் எதிர்ப்பார்க்கும் இந்த லட்சக்கணக்கான கிலோ வாட்ஸ் மின்சாரம் உற்பத்தியானல் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் மின்சாரம் கொடுக்கப்போகிறோம். மின்சாரத் துறையில் மாகாணத்தில் முதன்மையில் இருக்கிறது வேலூர் தாலுக்கா.

அடுத்தபடியாக பஞ்சாயத்து ஆக்டைப் பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பின்னர், பள்ளிக்கூடங்கள். பத்து லட்சம் பிள்ளைகளுக்கு பகல் உணவு கொடுக்கிறோம். 15 லட்சம் பிள்ளைகளுக்கு உடை வழங்குகிறோம். பள்ளிக்கூடங்கள் இல்லாத ஊரே கிடையாது, கட்டிடம் இல்லாத ஊரே கிடையாது. பின்னர், பத்திரிகையில் படித்ததைச் சொல்கிறேன், திறந்த பள்ளிகளை இழுத்து மூடும் அவல நிலைகண்டு வருத்தப் படுகிறோம். கல்விக்காக 16 கோடி செலவு செய்கிறோம். 12 ஆண்டுகளில் 40 பர்சென்ட் பேர்கள் படித்தாகி விட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில், 200 வருடங்களில் 3 பர்சென்ட் பேர் கூட படிக்கவில்லை. இப்பொழுது 40 பர்சென்ட் ஆகி விட்டது. இது ஒரு பெரிய முன்னேற்றம் அல்லவா? அடுத்த ஆண்டு முதல் 10-வது வகுப்பு வரை இலவசக் கல்வி கொடுக்கப் போகிறோம். அப்பொழுது உயர்ந்தவன், தாழ்ந்தவன், முற்பட்டவன் என்று இருக்காது. ஆக, அப்படி அரசாங்கம் முடிவு செய்திருப்பதைப் பார்க்க மகிழ்ச்சி அடைகிறோம். அதற்காக அரசாங்கத்திற்கு நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக்கிறோம். ஆக, நாங்கள்



9th August 1960] [Sri T. Karia Gounder]

என்ன செய்தாலும் குற்றங்குறை சொல்லிக் கொண்டே மக்கள் மனதைக் குழப்பாதீர்கள். 25 கோடி ரூபாய் வரை கல்விக்காக செலவு செய்யப் போகிறோம். நாங்கள் அதிகப்படியான பள்ளிக்கூடங்கள் வைக்கப் போகிறோம். அது உங்களுக்கு பிடிக்கவில்லையென்றால், பொது மக்களிடம் வேண்டாம் என்று சொல்லுங்கள். ஆனால் தேர்தல் நெருங்க நெருங்க மக்கள் மனதைக் குழப்பாதீர்கள். மக்களுக்கு ஒன்றும் தெரியாது. தென் ஆற்காட்டிற்கு போகும்போது, அங்கு பார்த்தால் கோவணம் கட்டியவர்கள் அதிகம் பேர்களைப் பார்க்கிறோம். அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. மக்களின் சராசரி வருமானத்தை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்தபடியாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கண்டிருக்கிற வெற்றியோடு தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தையும் நிறைவேற்றி வைக்கவேண்டும். அதோடு இந்த இரும்புத் தொழிற்சாலையையும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு மத்திய சர்க்காரிடம் சொல்லி ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு கவர்னர்பிரான் அவர்கள் உரையை ஆதரித்து, போற்றி, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**Sri G. NARAYANASAMI NAIDU** அன்பு மிக்க தலைவர் அவர்களே, கவர்னர்பிரான் உரையை ஆதரித்து அதன் காரணமாக ஒரு சில வார்த்தைகள் சொல்லலாமென்று ஆசைப்படுகிறேன். இந்த உரை பற்றிப் பேசிய சக அங்கத்தினர்கள் அவ்வளவு பேர்களும் ஒன்றை மிக முக்கியமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கவர்னர் அவர்களும் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள், அதாவது என்.ஜி.ஓ.-க்கள் வேலை நிறுத்தம் என்பது பற்றி. அகில இந்திய சர்க்கார் ஊழியர்களைப் பற்றி மிகவும் அதிகமாக இரு தரப்பார்களும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அதிக சம்பளம் கேட்பதில் ஆச்சரியம் இல்லை. ஆனால், அதை அதிகரிப்பதற்கு முன் ஜனத்தொகையில் அவர்கள் சராசரி எவ்வளவு சதவீதம், அதை விட பலமான நல்ல வேலை செய்பவர்கள், இன்று அவர்கள் பெறுகிற கூலி எவ்வளவு என்பதைப் பற்றி சிந்தித்திருக்க வேண்டாமா, என்று நான் கேட்கிறேன். ரயில் இல்லாமல் ஒரு காலத்தில் மனிதர்கள் வாழ்க்கை நடத்தியதுண்டு. தபால், தந்தி இன்றி மனிதர்கள் ஒரு காலத்தில் வாழ்க்கை நடத்தியதுண்டு. ஆனால் மனிதன் என்றுமே ஆகாரம் இல்லாமல் வாழ்க்கை நடத்தியதாக இருந்ததில்லை. இன்று மேற்குறிப்பிட்டவர்களுக்குக் கிடைக்கக் கூடிய கூலி, சர்க்கார் ரீதியில் ஒரு மரக்கால், அதாவது இரண்டு பட்டணம் படி நெல். அவர்கள் தான் இந்த தேசத்தின் முதுகெலும்பாக இருக்கக்கூடியவர்கள். அவர்கள் கூலியை உயர்த்துவது பற்றி ஒரு சப்தத்தையும் காணோம். ஆனால் சம்பளம் அதிகமாக வாங்கிக் கொண்டிருப்பவர்களின் சம்பளத்தை மேலும் மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்று பலமான கிளர்ச்சி செய்வதில் பெரிய பலன் ஏற்படும்

என்று கருத முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. நமக்கு ஆகாரம் அளிக்கக்கூடியவர்களின்—அம்மனிதர்களின்—வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதுதான் முக்கியமானதாகும் என்று சொல்ல விரும்புகிறேன். அதோடு, இப்பொழுது நாம் பின்தங்கியிருக்கிறோமா அல்லது முன்னேறியிருக்கிறோமா என்பது பற்றி இரண்டு மூன்று வழிகளில் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எங்கள் ஊரில் முன்பு ஒரு சினிமா கொட்டகை வைத்திருந்தவர் அதை எடுத்து விட்டு போய் விடுவோமா அல்லது வைத்துக் கொண்டிருப்போமா என்று ஆலோசித்துக் கொண்டிருந்தார். இப்பொழுது 5, 6 கொட்டகைகள் இருப்பதோடு இன்னும் 6, 7-க்கு லைசென்ஸ் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று ஒரு பஸ் போவதா வேண்டாமா என்ற நிலை போக இப்பொழுது எவ்வளவோ கம்பெனிகள் 400 பஸ் என்றிருந்தும் கூட, பிரயாணிகளுக்கு சௌகரியமாகச் செல்வதற்கு முடியவில்லை. பஸ்ஸில் இடம் கிடைக்க மாட்டேன் என்கிறது. பள்ளிக்கூடங்களில் இடம் கிடைக்க மாட்டேன் என்கிறது. ரயிலில் இடம் கிடைக்கமாட்டேன் என்கிறது. ஆக நான் குருட்டாம்போக்கில் சொல்கிறேன், பொருளாதார ரீதியில் சொல்லவில்லை, நாம் பின்தங்கி நிற்கவில்லை, எங்கு பார்த்தாலும் முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறோம் என்று. சிகரெட் இறக்குமதியைப் பார்த்தால் முன்பு இருந்ததைவிட இப்பொழுது ஆறு, ஏழு மடங்கு உள்நாட்டு உற்பத்தியைவிட வெளிநாட்டிலிருந்து இறக்குமதி அதிகமாயிருக்கிறது. அதில் கூட அதிகமாகியிருக்கிறது. ஆக, நாம் பின்தங்கி நிற்கவில்லை. டாம்பீகம் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆடம்பரச் செலவுகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. ஒருவன் வாரத்திற்கு இரண்டு முறை சினிமா பார்க்கத் தவறுவதில்லை, ஒரு நாளைக்கு இரண்டு பெட்டி சிகரெட் காலியாக்கத் தவறுவதில்லை. ஆகவேதான் படித்தவர்களிடையே சம்பளக் கூடுதல் கோரிக்கை வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, இவைகளையெல்லாம் சர்க்கார் நிறுத்தினால் இம்மாதிரி கோரிக்கைகள் பின்னால் வந்து ஒருவித தொந்தரவும் ஏற்படாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதை சர்க்கார் கவனத்தில் வைக்க வேண்டும். கவர்னர் உரையில் மின்சாரம் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சி நண்பர் கனம் சின்னதுரை அவர்கள் சொன்னார்கள், 4-லிருந்து 8-க்கு வந்து விட்டது என்று. ஆனால் விளக்கமாகச் சொல்லவில்லை. ஒருவர் எழுதியிருந்தார், "சீனாவில் ஆகாரம் அதிகப்படியாயிருக்கிறது, ஆகவே 1970-ம் வருடம் பிறந்தால் அந்தத் தேசத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு ரேஷன் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்" என்று. ஆக, "மால்தூஸியன் தியரி"யை யார் எதிர்த்து வந்தார்களோ அவர்களே அந்தச் சித்தாந்தத்திற்கு வந்தாக வேண்டுமென்று அரசியல் அறிஞர்கள் எழுதியிருந்தார்கள். நாம் மின்சாரத்தை உபயோகப்படுத்தி, ஒவ்வொரு மனிதரும் உபயோகப்படுத்துவதால் நமது பற்றாக்குறை 3, 4, 5 தரத்திற்கு வந்து விடுமோ அல்லது பாக்கி மாகாணங்கள் உபயோகப்படுத்துவதைக் குறைத்து அவர்கள் முதல் ஸ்தானம் அடைந்து முன்னுக்கு வந்து விடுவார்



களோ என்பது போன்றவைகளை விளக்கிச் சொல்லியிருந்தால்,
அந்தப் புள்ளிவிவரத்தை வைத்துத் தெரிவித்தார்கள் என்பதை 10 30 a.m.
நாம் தெரிந்துகொண்டிருக்க முடியும்.

நம்மையெல்லாம் மயக்கத்தில் ஆழ்த்துவதற்குத்தான் அந்த பிரசங்கம் பயன்பட்டது. இன்னொரு தடவை அவர்கள் இதைப் பற்றி பேசும் போது எப்படி மூன்றாம் தரமாகவும் நான்காம் தரமாகவும் இறங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதைப்பற்றித் தெளிவாகச் சொல்ல வேண்டும். அது எந்தெந்தப் படிகளில் இறங்கிக் கொண்டிருக்கிறது என்று தெரிந்தால் அதன் வழி நாம் இறங்கிக் கொள்ளலாம் என்று ஆலோசனை செய்கின்றேன். ஆகவே, இன்னொரு தடவை அவர்கள் பேசும்போது இதைப்பற்றி விளக்கமாகப் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவில் ஒரு புதிய புரட்சியை உண்டு பண்ணிவிட்டார்கள். தண்ணீர் கிடைக்கவில்லை, எரு கிடைக்கவில்லை என்ற ஒரு புரட்சி பத்திரிகைகளில் வந்தது. அகில இந்திய ஊழியர்களுடைய புரட்சி பத்திரிகையில் எப்படி வந்து கொண்டிருந்ததோ அதைப்போல் இதுவும் ஒரு பெரிய புரட்சியாக வந்துக்கொண்டிருந்தது. இதைப் பார்த்துவிட்டு அங்கிருந்த ஊழியர்கள் எல்லாம், கலெக்டர், ஆர்.டி.ஓ.-க்கள் எல்லாம், ஓடோடி வந்து எல்லா இடங்களையும் பார்வையிட்டார்கள். யாரோ வேண்டாதவர்கள் முக்கால் அணா செலவு செய்து ஏதோ ஒன்றைக் கிளப்பிவிட்டால் இம்மாதிரித்தான் பெரிய புரட்சிபோல் வந்துவிடுகிறது. அதோடு அங்கு சரியாக வேலை செய்து கொண்டிருக்கும் அதிகாரிகளுக்கும் "நீ எவ்வளவு வேலை செய்தாலும் இதுதான் நிலை" என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை வந்துவிடுகிறது. இதன் காரணமாக அதிகாரிகளுக்கு உற்சாகக் குறைவு ஏற்பட்டுவிடுகிறது. தண்ணீர் வருவதற்கு முன்னால் ஒரு அவசியமில்லை என்பது பத்திரிகைக்காரர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். அவர்கள் இதைப் பற்றி சிந்திக்கவேயில்லை. பொதுவாக நகரத்தில் இருந்துகொண்டு பத்திரிகை நடத்துகிறவர்களுக்கு விவசாயத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. தண்ணீர் வந்து, உழுது, பண்படுத்தப்பட்ட பின்னால்தான் எரு போடமுடியும்; அதற்கு முன்னால் குப்பை உரம் மட்டும்தான் போடமுடியும். ஆனால் பத்திரிகைகள் இந்த இரண்டையும் சேர்த்துக் குழப்பிவிட்டதோ என்னவோ தெரியவில்லை. தண்ணீர் வரவில்லை, எரு கொடுக்கப்படவில்லை, இதன் காரணமாக தஞ்சை ஜில்லாவில் பயிர்கள் எல்லாம் பாழாய் போய்விட்டது, அதி தீவிர சாகுபடி திட்டத்தில் உற்சாகக் குறைவு ஏற்பட்டுவிட்டது என்று அரசியல் பிரசாரத்திற்காகவோ என்னவோ தெரியவில்லை, இவ்விதம் ஒரு புரட்சியைக் கிளப்பிவிட்டார்கள், அரசியல் பிரசாரமாக இருக்கவில்லை, அதிகாரிகளைத் தாக்குகின்ற முறையில் தலையங்கங்களை எழுதி அதிகாரிகளின் மீது குற்றச்சாட்டுகளை தெரிவித்தார்கள். இதன் மூலமாக நல்ல உற்சாகத்தோடு வேலை செய்துகொண்டிருக்கும் அதிகாரிகளைப் பார்த்து நீங்கள் வேலை ஒன்றும் செய்யாதீர்கள், என்னசெய்தாலும் இதுதான் நிலை என்று

[Sri G. Narayanasami Naidu] [9th August 1960

அவர்களுக்குச் சொல்வதுபோல் இருந்தது. ஆனல், உண்மையில் அங்கு அப்படி ஒன்றும் நடந்து விடவில்லை. நல்ல முறையில்தான் விவசாயம் நடந்துகொண்டிருக்கிறது. அகில இந்திய ஊழியர்களுடைய போராட்டம் எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது தஞ்சை ஜில்லாவில் நடக்கும் அதி தீவிர சாகுபடித் திட்டமும். அங்குதான் முதலில் இந்தத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அதோடு குறிப்பிட்ட உற்பத்தி அளவையும் எட்டிய ஜில்லா எங்கள் ஜில்லா. திடீரென்று அந்த ஜில்லாவில் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை, தண்ணீர் கிடைக்கவில்லை, உரம் கிடைக்கவில்லை என்று சொல்லியிருப்பது எல்லாம் சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னென்றையும் நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். அதாவது எப்போதும் போலவே குடகில் 12 அங்குலம் மழை பெய்திருக்கிறது என்று தெரிகிறது. அப்படியிருக்கும்போது திடீரென்று காவேரியில் மேட்டூருக்கு அந்தப்பக்கம்—அதாவது கண்ணம்பாடி பகுதிக்கு இந்தப் பக்கம் மட்டும்—தண்ணீர் குறைந்து வருவதன் காரணமென்ன என்பதைப் பற்றி நாம் பரிசீலனை செய்யவேண்டும். இதைப்பற்றியெல்லாம், எனது சக அங்கத்தினர் திரு. சீனிவாச அய்யர் அவர்கள் பல கணக்குகளை எல்லாம் வைத்துக்கொண்டிருக்கிருர்கள். கண்ணம்பாடியில் இருக்கும் அதிகாரிகள் ஏதாவது பயமுறுத்துகிருர்களா என்ற சந்தேகமும் ஏற்படுகிறது. காவேரியின் இந்தப் பக்கத்தில் மட்டும் தண்ணீர் குறைவாக வருவதற்குக் காரணம் என்ன, நமக்கும் மைசூர் அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் சரியாக அமல் நடத்தப்படுகின்றனவா என்பதைப்பற்றியும் நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். முன்னல் பெய்த மழையை வைத்துக்கொண்டு பார்த்தால் மேட்டூரில் இப்போது இருப்பதை விடக் கூடுதலாகத் தண்ணீர் இருந்திருக்கவேண்டும். எங்கெங்கு புதிதாகத் தண்ணீர் கொண்டு போகப்படுகிறது என்பதைப் பற்றியும் நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இதையெல்லாம் விட்டுவிட்டு, பின்னல் 'வந்ததும் போச்சு' என்ற நிலையில் ஆகாதபடி நாம் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் ஜில்லாவிலிருந்து இருக்கும் அமைச்சர் அவர்கள் தொழில் நுணுக்கங்கள் எல்லாம் நன்ருகத் தெரிந்தவர். இதைப்பற்றியும் கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கலாம். அதோடு காவேரி டெல்டா ஓரங்களிலெல்லாம் மண்ணெண்ணெய், கியாஸ், போன்றவைகள் கிடைக்கின்றன என்றும், அதற்கான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் தெரிகிறது. எங்கள் ஜில்லாவில் இந்த இடங்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பதைப்பற்றியும் கவர்னர் பெருமான் அவர்கள் இரண்டொரு வார்த்தைகள் ஜாடையாகக் குறிப்பிட்டிருக்கலாம். (குறுக்கீடு: குறிப்பிட்டிருக்கிருர்கள்.) -எந்த இடத்தில் என்று தெரிந்தால் அந்த இடத்தையாவது **போய்** வாங்கியிருக்கலாம். காவேரி எங்கள் பக்கத்தில் இருப்பதால் அந்த எண்ணம் ஏற்படுகிறது. இதையும் இரண்டொரு வருஷங்களுக்குள் சிறந்த முறையில் எவ்வளவு நன்ருகச் செய்ய முடியுமோ அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



9th August 1960] [Sri G. Narayanasami Naidu]

கல்வியைப் பொறுத்தவரையில் சுமார் 10 லட்சம் மாணவர்களுக்கு சாப்பாடு போடுகிறேம். வேறு எந்த மாகாணத்திலும் செய்யாத அளவு நாம் இந்த காரியத்தைச் செய்திருக்கிறேம். அதோடு உடையும் சேர்த்துக் கொடுத்துவிட்டால் ஓரளவுக்கு ஜாதி வித்தியாசம் போவதற்கும் ஒரு வழியாக இருக்கும் என்று எண்ணுகிறேன். ஒரே மாதிரியான உடை கொடுத்தால் ஏற்கனவே இருந்துகொண்டிருக்கும் ஜாதி வித்தியாசம் ஒழிந்து போவதற்கு வசதியாக இருக்கும் என்று நம்புகிறேன். ஆகவே அதையும் சர்க்கார் உடனடியாகச் செய்யும் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தப்படியாக, இன்றையதினம் பிரதானமாக இருந்துகொண்டிருப்பது நிலச் சீர்திருத்தம். அதற்கு அடுத்தது கூட்டுறவு சாகுபடி. இவைகளைப்பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் கொஞ்சம்கூட குறிப்பிடவில்லை. இது மிகவும் அவசியமானது. கூட்டுறவு சாகுபடி முறையைக் கொண்டுவரவேண்டும் என்கிற எண்ணம் நமது சர்க்காருக்கு ரொம்பகாலமாகவே இருந்து கொண்டிருக்கிறது. இதன் பேரில் பல இடங்களில் பரீட்சைகளும் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனல் பல சர்க்கார் அதிகாரிகள்கூட இதற்கு எதிரிடையாக வேலை செய்துவருவதாகப் பத்திரிகைகளில் பார்க்கிறேம். கூட்டுறவு சங்கத்தில் இருக்கின்றவர்களே, கூட்டுறவு சாகுபடியை எதிர்க்கின்ருர்கள். தர்மம் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு அதர்மத்தை நடத்திக்கொண்டிருக்கின்றவர்கள் இதை எதிர்த்துக் கொண்டிருக்கிருர்கள். மணலி எஸ்டேட் போன்றவைகள் 15 ஆயிரம் வேலி நிலங்களை வைத்துக்கொண்டு 10 பேர்களுக்குச் சாப்பாடு போட்டு, நடுவாரந்தார்களையும் தாங்கள் வைத்துக்கொண்டு, சாதாரண மக்களைத் தொந்தரவு செய்துகொண்டிருக்கிருர்கள். திருவிளப்புத்தூர், கள்ளப்புலியூர் இந்த இடங்களைப்பற்றி நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். அந்த இடங்கள் இப்போது மிகவும் பின்னடிதான் போய்க்கொண்டிருக்கின்றனவே தவிர முன்னேறியிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இதில் போதிய கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பற்றி அறுபது, எழுபது கேள்விகளைப் போட்டு, மக்களிடையே மயக்கம் வரும்படியான நிலையில், பலவிதமான ஆட்சேபணைகளைக் கிளப்பும்படியான அளவில், மிகுந்த ஜாக்கிரதையாக இருக்கும்படியான அளவில் போடப்பட்டிருக்கிறது. மக்களின் பிரதிநிதிகளாக நாம்தான் இங்கே இருந்துகொண்டிருக்கிறேம். இரண்டு தரப்புக்காரர்களும்—ஆளும் கட்சியினரும், எதிர் கட்சியினரும்—இங்கே இருக்கிறேம். இதைப்பற்றி நாம் இங்கே பேசுவதற்கு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அதைவிட்டு பொதுவாக மக்களிடத்தில் இவ்விதம் அபிப்பிராயங்களைக் கேட்டு கொண்டுவரப்பட்டது என்ற எண்ணத்தையெல்லாம் பரப்புவதற்கும், அதன் மூலம் பல குழப்பங்களை ஏற்படுத்துவதற்கும் வழி செய்கிறது. அதனல் சட்டமே பலஹீனமாய் போய்விடக் கூடாது. அந்த முறையில் எந்தவிதமான பலஹீனமும் ஏற்பட்டுவிடாமல் ஜாக்கிரதையாக இதில் வேண்டிய நடவடிக்கைகள்

[Sri G. Narayanasami Naidu] [9th August 1960

எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**Sri A. V. P. ASAITHAMBI** : தலைவர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தூத்துக்குடியும், மங்களூரும் புறக்கணிக்கப்படவில்லை, அவைகள் நிச்சயமாகச் சேர்த்துக்கொள்ளப்படும் என்கின்ற அளவில் நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள்—(கனம் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணியம் : மங்களூரைப் பற்றி நான் சொல்லவில்லை)—தூத்துக்குடியைப் பற்றிக் கூறினார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் தூத்துக்குடி கைவிடப்பட்டது, அல்லது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதெல்லாம் நாங்கள் அடிக்கடி வலியுறுத்திக் கூறி வருகின்றபடி வடக்கு வளர்கிறது, தெற்கு வஞ்சிக்கப்படுகின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்பதை என்னால் விளக்கிச் சொல்லமுடியும். நடுத்தர துறைமுகங்கள் அபிவிருத்திக் குழு தூத்துக்குடி துறைமுகத்தையும் மங்களூர் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு பத்து கோடி ரூபாய் திட்டத்திலே சிபாரிசு செய்தது. அதன் மேல் டாக்டர் சுப்பராயன் அவர்களை அமைச்சராகக் கொண்ட அந்த இலாகா பதினைந்து கோடி ரூபாயில் இவைகளை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று சிபாரிசு செய்தது. ஆனால் திட்டக்குழு அந்நியச் செலாவணி வசதி இல்லாமையால், பண வசதி இல்லாமையால், இப்போது இவைகளை எடுத்துக்கொள்வதற்கில்லை என்று ஒத்தி வைத்திருக்கிறது. இதிலே நாம் கவனிக்கவேண்டியது, தூத்துக்குடியும் மங்களூரும் மாத்திரம் அந்நியச் செலாவணி இல்லாமையினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதா, அல்லது வேறு பகுதியில் இருக்கக் கூடியவைகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதா என்று. அப்படிப் பார்த்தால் வேறு ஒன்றும் இல்லை. கல்கத்தா அருகிலே ஹால்டா என்ற துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இதே திட்டக்குழு இருபத்து ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கி, ஹால்டா துறைமுக அபிவிருத்திக்காக வேண்டி இந்த இரண்டு துறைமுகங்களின் அபிவிருத்தியைக் கைவிட்டிருக்கிறதே தவிர வேறு அல்ல. அது மாத்திரமல்லாமல் கட்ச் வளைகுடாப் பகுதியில் இருக்கின்ற கண்ட்லா துறைமுகத்தை, முக்கால் சதுர மைலுக்கு அதை "ஃப்ரீ போர்ட்"-ஆக அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. அந்த கட்ச் வளைகுடா பகுதி—கண்ட்லா பகுதி—கள்ளக் கடத்தலுக்குப் பெயர்போன இடம். அந்த மாதிரியான இடத்தை "ஃப்ரீ போர்ட்"-ஆக இந்த அரசாங்கம் ஆக்குகிறது என்று சொன்னால், மேலும் மேலும் கள்ளக் கடத்தல் அதிகரிக்க வசதி ஏற்படும். அந்தத் துறைமுகத்தையும், கல்கத்தாவிற்கு அருகில் இருக்கும் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டி, தெற்கே இருக்கின்ற மங்களூரும், தூத்துக்குடியும் கைவிடப்படுகிறது என்று சொன்னால், இதை வடக்கால் தெற்கு வஞ்சிக்கப்படுகிறது என்று சொல்லாமல் வேறு எந்த வார்த்தைகளால் சொல்வது என்று நீங்களே எண்ணிப் பார்க்க வேண்டும். அது மாத்திரமல்ல. அமைச்சர் அவர்கள்



9th August 1960] [Sri A. V. P. Asaithambi]

சொன்னார்கள், "நான் மங்களூரைப்பற்றிச் சொல்லவில்லை. தூத்துக்குடியைப் பற்றித்தான் சொன்னேன்" என்று. இதிலே அமைச்சர் அவர்களுடைய கண்ணோட்டம் சரிவர இல்லை என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். தூத்துக்குடி எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததோ அந்த அளவுக்கு மங்களூரும் முக்கியம் என்று நான் சொல்வேன். காரணம், மங்களூரைச் சுற்றி இரும்பு தாது இருக்கிறது. சிட்டல்துர்க் மாவட்டத்தில் மாத்திரம் வருடம் ஒன்றுக்கு இருபது லட்சம் டன் இரும்பு தாது—வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு—இருக்கிறது. அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய இரும்பை எடுத்து மங்களூருக்குக் கொண்டுவர ஹஸனிலிருந்து மங்களூருக்கு ரயில் பாதை போடவேண்டும். ஹஸன், மங்களூரிலிருந்து 120 மைல் தூரத்திலிருக்கிறது. இந்த ரயில் பாதையைப் போட்டால் வருடம் ஒன்றுக்கு இருபது லட்சம் டன் இரும்பு தாதுவை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யமுடியும்; அதனால் நமக்கு வேண்டிய அந்நியச் செலாவணி கிடைக்கும். இந்த ரயில் பாதையைப் போடாவிட்டால் 8-ல் ஒரு பங்கைக்கூட ஏற்றுமதி செய்யமுடியாது. இந்த அளவுக்கு இதைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல், "திட்டக் கமிஷன்கூட ரூபாய் ஸாங்க்ஷன் செய்யவேண்டாம்", அந்த மாவட்டத்திலுள்ள இரும்பை எடுத்து செய்கிறவர்கள் "நாங்கள் பணம் தருகிறோம்" என்று முன் வந்திருக்கிறார்கள். ரயில்வே போர்டு . . . . . . . .

**The Hon. Sri R. VENKATARAMAN** : எவ்வளவு பர்ஸெண்ட் இரும்பு கண்டெண்ட் என்று சொல்லமுடியுமா ?

**Sri A. V. P. ASAITHAMBI** : என்றால் திட்டவட்டமாக, புள்ளிவிவரத்தோடு சொல்ல இயலாது. ஆனால் நடுத்தர துறைமுகங்கள் அபிவிருத்திக் குழுவைச் சேர்ந்த அங்கத்தினர் ஒருவர் இதைப் பற்றித் தெளிவாகக் கூறியிருக்கிறார். அது மாத்திரமல்லாமல் மேற்கு ஜெர்மனியிலிருந்தும், இத்தாலியிலிருந்தும் இரும்புப் பாதை போட பண உதவி பெறமுடியும் என்று அபிவிருத்தி போர்டு அங்கத்தினர் ஒருவரே வெளியிட்டிருக்கிறார். இது எல்லா பத்திரிகைகளிலும் வெளி வந்திருக்கிறது.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : மங்களூரைப் பற்றி "ஆர்க்யூ" பண்ணிக்கொண்டிருக்கிறீர்களா ?

**Sri A. V. P. ASAITHAMBI** : இரண்டையும் சேர்த்துப் போட்டிருக்கிறபடியால் இரண்டையும் சேர்த்துப் பேசுகிறேன். கைவிடுவதற்கு காரணம் ஹால்டா துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு எடுத்துக் கொண்டதுதான். அமைச்சர் அவர்கள் நிச்சயமாக தூத்துக்குடி துறைமுகம் அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லமுடியுமானால் அவர் உறுதி மொழி கொடுக்கட்டும். திட்டக் குழு கைவிட்டாலும் எப்படியாவது இதை நாங்கள் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்கிறோம் என்று இந்த மன்றத்தில் சொன்னால் அதை நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம்.

அந்த அளவுக்கு நம் அரசாங்கம் நடப்பதாக இருந்தால்
நிச்சயமாக இந்த தெற்கு புறக்கணிக்கப்படுகிறது என்ற குரல்
இவ்வளவு அதிகமாக வந்திருக்க முடியாது. ஆனுல் இந்த மந்திரி
சபை தெற்கு வடக்கினுல் வஞ்சிக்கப்படாமல் இருக்க—மேலும்
மேலும் வஞ்சிக்கப்படாமல் இருக்க—அந்த அளவுக்குத் துணிந்து
கேட்பதாக இல்லை என்று இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

இந்த விஷயத்தில் மாத்திரமல்லாமல், மொழி விஷயத்தை
எடுத்துக்கொள்வோம். பண்டித நேருவின் உறுதி மொழிக்குப்
பிறகு இந்தியும் ஆங்கிலமும் காலவரையறையின்றி நீடிக்கும்
என்று வந்துவிட்டது. இது எல்லோரும் ஏகமனதாக ஒப்புக்
கொண்டது. ஆனுல் இந்தியும் ஆங்கிலமும் காலவரையறையின்றி
நீடிக்கும் என்ற நிலை இருக்கும்போது இந்தி மொழியை ஒவ்வொரு
துறையிலும் புகுத்தவேண்டிய அவசியம் என்ன? இந்தி மொழியை
அடிப்படையாகக் கொண்ட சகா சகாப்தத்தைப் புகுத்த
வேண்டிய அவசியம் என்ன? இந்தி நிர்வாக மொழியாக இருக்க
வேண்டிய அவசியம் என்ன? இந்தி பேசப்படாத—தமிழ்,
தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய பகுதிகளில் இந்தி
மொழிக்கு வேலை கிடையாது. அது திணிக்கப்படக் கூடாது.
எந்த ரூபத்திலும் வரக்கூடாது. அதைத் தடுக்க இந்த அரசாங்கம்
முன்வர வேண்டும். முன்வருமா வராதா என்ற சந்தேகம் எனக்கு
இல்லை—மத்திய அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்களே
சென்னை அமைச்சர்களைப் பற்றி கடிந்து குறைந்து கொண்டிருப்
பதை அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு
கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அவர் தமிழ் போதன
மொழியாக வரக் கூடாது என்று சொல்லியிருக்கிருர். அதை
நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

SRI A. V. P. ASAITHAMBI: தமிழ் போதன மொழியாக
ஆகவேண்டுமென்பதில் அமைச்சருக்கு இருக்கின்ற அக்கரை
எனக்கு உண்டு. இன்னும் சொல்லப் போனுல் தமிழ் மொழி
சொல்லிக் கொடுக்கக் கூடியவர்களை கல்லூரிகளிலும், ஹைஸ்கூல்
களிலும் தலைமை ஆசிரியர் நிலைக்கு உயர்த்தினுல் தமிழ் மொழி
யின் நிலையும் தானுக உயரும் என்று கூடச் சொல்வேன். அமைச்
சருக்கு இருக்கக்கூடிய அக்கரை எனக்கும் உண்டு—அதில் கொஞ்
சம் கூடக் குறைவு இல்லை. டாக்டர் சுப்பராயன் அவர்கள் அதே
அறிக்கையில் சொல்லியிருக்கிருர், "எவ்வளவோ சொன்னுலும்
கூட இந்தி வெறியர்கள் இந்தியைப் புகுத்துவதைத் தடுக்க
முடியவில்லை. இதை சென்னை அமைச்சர்களின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்" என்று. 1965-ம் ஆண்டு வரையில் இந்தி,
ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளும் உண்டு, அதற்குப் பிறகும்
இரண்டு மொழிகளும் உண்டு என்ற நிலை இருந்தும் மைல் கற்களில்
ஏன் இந்தியில் போடப்படுகிறது? ஏன் போட அனுமதித்திருக்
கிறீர்கள்? உத்தரவு இல்லாமல் அடுத்தவர்கள் போட அவர்





களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இதை ஏன் தடுக்கக்
கூடாது? அற நிலைய இலாகாவிற்கு ஒரு "சர்க்குலர்" போகிறது
இந்தி மொழி சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று. கோவில்களைப் பராமரிக்கக் கூடிய இந்த இலா
காவில் இந்தி மொழி ஏன்? எந்த உருவத்திலும் இந்தி இங்கே
நுழையக் கூடாது. இந்தி புகுத்தப்படுவதை திராவிட முன்னேற்
றக் கழகம் கடைசி மூச்சு வரையில் எதிர்க்கும் என்று இந்த
மன்றத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அளவுக்கு
இந்த ஆட்சியினர் வட நாட்டுக்காரர்கள் என்ன சொன்னுலும்
வளைந்து கொடுக்கிறது என்ற நிலையில் போவதால் நாம் இந்த
நிலைமையில் பின் தங்கியிருக்கிருேம்.

கவர்னர் உரையில் விலைவாசியை கட்டுப்படுத்த முடியவில்லை
என்று வருத்தத்தைத் தெரிவித்திருக்கிருர்கள். நாங்கள்
தேர்தலின் போதே சொன்னுேம். "நாட்டு வாட்டம் போக்கிட
நோட்டடித்தால் போதாது" என்று சொன்னுேம். மந்திரி சுப்பிர
மணியம் அவர்கள் நினைத்திருக்கலாம், ஏதோ எதுகை மோனைக்
காக அவ்வாறு போட்டிருக்கிருர்கள் என்று. நாங்கள் அன்று
சொன்னதை நீங்கள் இன்று பார்க்கிறீர்கள். இன்று உள்ள
நிலைமை என்ன? அரசாங்கம் நோட்டு அடித்தது. அதோடுகூட,
எட்டணு நாணயம், ஒரு ரூபாய் நோட்டு, ஐந்து ரூபாய் நோட்டு,
நூறு ரூபாய் நோட்டு ஆகியவை அச்சடிப்பது இன்று ஒரு
குடிசைத் தொழில் போல் சர்வசாதாரணமாக நடந்து வருகிறது.
இவ்வாறு நடப்பதற்குக் காரணம் என்ன? இதையெல்லாம்
தடுக்க அரசாங்கம் இல்லையா? போலீஸ் இலாகா இல்லையா?
இந்த மாதிரி கள்ள நோட்டுகள் அச்சடிப்பவர்களைத் தடுப்ப
தற்கு ஏன் ஒரு தனி இலாகாவையே ஏற்படுத்தக்கூடாது? இந்த
அளவுக்கு நோட்டுகள் அரசாங்கத்தால் அச்சடிக்கப்படுவதோடு
கூட கள்ள நோட்டுகளும் அச்சடிக்கப்படுவதால் பாதிக்கப்
படுவோர் இந்த மந்திரிகள் அல்ல. ஏழை மக்கள்தான் இதனுல்
பெரிதும் பாதிக்கப்படுகிருர்கள். இந்தமாதிரி கள்ள நோட்டு
வழக்குகள் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதற்குக் காரணம்
என்ன? ஒன்று, போலீஸ் இலாகா சரிவர இயங்காமல் இருக்க
வேண்டும், அல்லது போலீஸ் இலாகாவில் யாருடைய தலையீடா
வது இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படு
கிறேன். இந்தக் கள்ள நோட்டு வழக்கிலே பெரும் புள்ளிகள்
எல்லாம் இருக்கிருர்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த மண்டல
காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள் எல்லாம் ஈடுபட்டிருக்கிருர்கள்.

இந்த நாட்டின் பொருளாதாரம் சரியானபடி முன்னேற
வேண்டுமானுல் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாங்கள்
சொல்லுகிற வார்த்தைகளை வைத்துக் கொண்டு மத்திய சர்க்காரி
டத்தில் போய் என்னென்ன காரியங்களை நாம் கேட்க
வேண்டுமோ அந்த அளவுக்குக் கேட்டு, போராடிப் பெற
வேண்டும். இந்த அமைச்சரவையானது மற்ற மாநில அமைச்
சரவைகளைவிட பெயர் பெற்ற மதிப்புள்ள, கெட்டிக்காரத்தனமான
அமைச்சரவை என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இவர்கள்
ஒவ்வொரு துறையிலும் நம்முடைய உரிமையை வற்புறுத்திச்

[Sri A. V. P. Asaithambi] [9th August 1960]

சண்டை போட்டுப் பெறுவதற்கு முயற்சிக்கவேண்டும். இவர்கள் அந்த அளவுக்கு முயற்சி எடுத்திருப்பார்கள் என்று சொன்னால் தூத்துக்குடித் துறைமுக விஸ்தரிப்புத் திட்டம் இந்த மூன்றாவது திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். இனியாவது இந்த அமைச்சரவை அந்தத் திட்டத்தைச் சேர்க்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த அவகாசம் கொடுத்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **SRI V. ARUNACHALA THEVAR :** தலைவர் அவர்களே, கடந்த 5-ம் தேதியன்று நமது மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் நிகழ்த்திய உரையை நான் வரவேற்று சில வார்த்தைகளை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். அதிலே நமது கவர்னர் பெருமான் அவர்கள் மத்திய அரசாங்கத்தின் வேலை நிறுத்தத்தைக் குறித்தும், அதைப் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் சமாளித்தது குறித்தும் தன் நன்றியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக அரசாங்கத்திற்கு இக்கட்டை விளைவிக்கிறார்கள் என்று பொதுமக்கள் பொங்கி எழக்கூடிய நிலையில் இருந்தார்கள். அந்தச் சமயத்தில் நமது போலீஸ் உத்தியோகஸ்தர்கள் பொதுமக்களிடத்தில் நிலைமையை விளக்கி அவர்கள் எந்தவித கலகத்திலும் ஈடுபடா வண்ணம் பாதுகாத்தார்கள்.

நம்முடைய ராஜ்யத்திலே உள்ள மாகாண அரசாங்க ஊழியர்கள் எந்த வீட்டிலே வசிக்கிறார்களோ அதே வீட்டிலே மத்திய அரசாங்க ஊழியர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் எந்த இலாகாகளில் வேலை செய்து வருகிறார்களோ அதே இலாகாக்களின் பக்கத்தில் அதே மாதிரி வேலையைச் செய்து கொண்டு, குறைந்த சம்பளத்தை வாங்கிக் கொண்டு வந்தார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய குறைகளை தங்களுடைய தலைவர்கள் மூலமாக ராஜ்ய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொன்னார்கள். இப்போது அரசாங்கம் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தியிருக்கிறது. இவ்வாறு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாது நல்ல முறையிலே தங்களுடைய கோரிக்கைகளை அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி தங்களுடைய தேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, திருத்தணி தாலுகா நம்முடைய ராஜ்யத்தோடு ஏப்ரல் 4-ந் தேதியன்று இணைந்தது குறித்து கவர்னர் பெருமான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த மக்கள் நம்முடைய ராஜ்யத்துடன் இணைந்திருப்பதை நாம் வரவேற்கிறோம்.

நமது மாகாணத்தில் அநேக ஜில்லாக்களில் பருவ மழை விட்டு விட்டுச் சில இடங்களில் பெய்திருக்கிறது என்று கவர்னர் பெருமான் குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பாக, புதுக்கோட்டை பிராந்தியத்தில் கடந்த மூன்று வருஷங்களாக பருவ மழை சரியாக இல்லாத காரணத்தால் ஏரிகளெல்லாம் பெருகவில்லை. அதன் காரணமாக அங்குள்ள மக்கள் பஞ்சத்தால் வாடுகிறார்கள்.



9th August 1960] [Sri V. Arunachala Thevar]

புதுக்கோட்டைப் பிராந்தியத்தில் உள்ள காட்டாறுகளான அக்கினியாறு, வெள்ளாறு, பாம்பாறு, கோரையாறு போன்றவற்றில் சிறு சிறு அணைக்கட்டுகளைக் கட்டி அதன் மூலம் அங்கு 11-00 a.m.
மழை காலத்தில் மழை பெய்து வெள்ளமாக ஓடக்கூடிய தண்ணீரைத் தேக்கி பாசனத்திற்குப் பயன்படுத்த வழிசெய்து கொடுக்கவேண்டுமென்று கடந்த 10 ஆண்டுகளாக நாங்கள் எடுத்துக் கூறி வந்திருக்கிறோம். ஆனால் இதுவரை அந்தத் திட்டங்கள் எதுவும் எடுத்துக்கொள்ளப்படவில்லையென்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அரசாங்கம் காவேரித் தண்ணீரைக் கொடுக்க முன்வராவிட்டாலும் அந்தப் பகுதியிலுள்ள காட்டாறுகளில் சிறு சிறு அணைகளைக் கட்டி விவசாயிகளுககு நல்ல முறையிலே உதவி புரியக் கூடிய வகையில் அந்தத் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனால், பக்கத்தில் ஓடக்கூடிய காவிரி ஆற்றின் தண்ணீர் ஜொடர்பாளையத்திலிருந்து புதுக்கோட்டைக்கு வரக்கூடிய வசதி இருக்கிறது என்று பன்முறை இங்கே எடுத்துச் சொல்லியும், அனேக முறைகளில் அரசாங்கத்திற்கு மனுக்கள் சமர்ப்பித்தும், எந்த விதமான அக்கறையும் காட்டவில்லையே என்ற செய்தியை நான் இங்கு வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். காவிரி விஷயமாக பிரிட்டிஷ் அரசாங்கம் சென்னை அரசாங்கத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படித்தான் இப்பொழுது நமக்கு மைசூர் அரசாங்கத்தார் தண்ணீர் விட்டுக் கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், சமீப காலத்திலே கட்டளைக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய் இவைகள் வெட்டப்பட்டதன் காரணமாக அவர்களுடைய அனுமதி இல்லாது மேற்படி கால்வாய்கள் வெட்டப்படுகிறதாக மைசூர் அரசாங்கம் தகராறு சொல்லியதாகப் பத்திரிகையிலே பார்த்தோம். ஆனால், மைசூர் அரசாங்கத்திடம் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒப்பந்தம் செய்துகொண்ட முறைப்படியே அவர்கள் விடும் தண்ணீரை நாம் எடுத்துக் கொள்ளுகிறோமே தவிர, நாம் போய் அவர்களுடைய தேக்கத்திலிருந்து தண்ணீரைத் திறந்துவிடும் அதிகாரம் இல்லை என்று நினைக்கிறேன். பிரிட்டிஷ் அரசாங்கம் எந்த விதத்தில் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார்களோ அந்த பிரகாரமே மைசூர் அரசாங்கம் நமக்குத் தண்ணீர் விட்டுக் கொடுக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஆனால் நமக்கு விடக்கூடிய தண்ணீரை நாம் எந்த விதத்தில் பயன்படுத்தினால் அவர்களுக்கு என்ன என்று எனக்கு விளங்கவில்லை. மைசூர் அரசாங்கம் சொல்லும் தகராறு என்ன என்பதை நான் அறிய ஆசைப்படுகிறேன். ஆனால், அந்த அரசாங்கம் கொடுக்கும் தண்ணீரை நாம் எந்த விதத்தில் உபயோகப்படுத்தினாலும் அவர்கள் அதைப்பற்றி அக்கறை எடுக்கவேண்டியதில்லை என்று என் சிற்றறிவுக்கு எட்டியவாறு நான் சொல்ல விரும்புகிறேன். அதிலே இப்பொழுது திருச்சி ஜில்லாவிலிருந்து கட்டளைக் கால்வாய் வல்லம் வரையில் போய்க் கொண்டிருக்கிறது. வல்லத்திலுள்ள லெவலைப் பார்த்து அங்கிருந்து புதுக்கோட்டைப் பிராந்தியம் ஆலங்குடி தாலுகாவிலுள்ள

மாங்காடு வரையில் தண்ணீர் போவதுபற்றி பரிசீலனை செய்யப் படுகிறதாக அறிகிறேன். அதையும் அரசாங்கம் கவனித்து நடத்தவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

புதுக்கோட்டைப் பிராந்தியத்தில் அடிக்கடி பஞ்சம் ஏற்படுவதினால் மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். மணப்பாரையிலிருந்து அறந்தாங்கி வரையிலும், புதுக்கோட்டையின் மூன்று தாலூகாக்களிலும் கடந்த மூன்று வருஷங்களாக பஞ்சத்தால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக, ஏரிகளில் 10, 15 நாட்கள் பாயக்கூடிய தண்ணீர்தான் விழுந்திருக்கிறது. அதை நம்பி விவசாயிகளெல்லாம் விதைக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், பிற்காலத்தில் அவர்கள் எப்படி சாகுபடிக்குக் கொண்டுவரமுடியும் என்பதை என்னால் சொல்ல முடியவில்லை.

தொழிற்சாலைகளைப் பரவலாக அமைக்கவேண்டுமென்று கவர்னர் பெருமான் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்கள் புதுக்கோட்டைப் பிராந்தியத்தில் கடந்த மூன்று வருஷங்களாக ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக குளங்களில் தண்ணீர் இல்லாததால் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுத்து கரும்பு சாகுபடி செய்து வருகிறார்கள். சென்ற வருஷம் ஒரு ஏக்கர் கரும்பு சாகுபடி செய்தவர்கள் இந்த வருஷம் இரண்டு, மூன்று ஏக்கர் சாகுபடி செய்திருக்கிறார்கள். அந்தப் புதுக்கோட்டைப் பகுதியில் ஒரு கரும்பு ஆலை நிறுவினால் அதைக் கொண்டாவது மக்கள் நல்ல முறையிலே கரும்பு சாகுபடியை விருத்தி செய்யக்கூடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையை ஒரு தனி ஜில்லாவாக ஆக்கவேண்டும் என்று எத்தனையோ முறை இந்த சட்டமன்றத்திலே என்போன்ற சில அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லியும் அரசாங்கம் அதைக் கவனிக்கவில்லை. ஆனால், திருச்சி போன்ற பெரிய ஜில்லாவில் ஒரே இடத்தில் அனேக வேலைகளைக் குவியல் குவியலாக வைத்து, அனேக உத்தியோகஸ்தர்களை அங்கே நியமித்திருக்கிறார்கள். புதுக்கோட்டையில் நல்ல கட்டிடங்களிருக்கின்றன. (அக்கிராசனர் மணி அடித்து அடுத்த அங்கத்தினரைப் பேசக் கூப்பிட்டார்.)

* **SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM** : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நமது கவர்னர் பெருமான் அவர்கள் நிகழ்த்திய பேருரையானது நம்முடைய லட்சியங்களெல்லாம் பிரதிபலிக்கக் கூடிய முறையிலே இருக்கிறது என்பதை அறிய மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

சென்னை சம்பளக் கமிஷன் செய்த சிபார்சுகள் அனைத்தையும் நம்முடைய சர்க்கார் ஏற்றுக்கொண்டு ஜூன் மாதம் 1-ந் தேதி முதல் அவைகளை அமுல் செய்திருப்பதானது மிகவும் மகிழ்ச்சியை ஊட்டுவதாக இருக்கிறது. நம்முடைய சர்க்கார் பணியாளர்களும், உபாத்திமைத் தொழில் செய்கிறவர்களும் இதனால் மிகுந்த திருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த இடத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.





இருந்தாலும்கூட, இந்தத் திருப்தியானது எதுவரையிலும் நீடித்திருக்கும் என்பதைச் சொல்ல முடியாது. காரணம், உணவுப் பொருள்கள் அனைத்தும் மிகவும் விலை ஏறிக்கொண்டே செல்கிறது. அவைகளைக் கட்டுப்படுத்தாத வரையில், எவ்வளவு அதிகம் நாம் சம்பளம் கொடுத்தாலும், எவ்வளவு அதிகமாக எல்லாவித நலன்கள் செய்து கொடுத்தாலுங்கூட மக்கள் திருப்தி அடைவதற்கு ஏதுவாக இருக்கமுடியாது என்பதைத்தான் நான் நினைவூட்ட விரும்புகிறேன். உணவுப் பொருள்களின் விலை கூடுதல் காரணமாக ஏழைகள் மட்டுமல்ல, நடுத்தர வகுப்பினர்கள் மிகுந்த தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். சர்க்கார் காரியாலயங்களில் வேலைசெய்யும் பணியாளர்கள் தங்களுக்குச் சம்பளம் போதவில்லை என்று தெரிவித்துக்கொள்ள முடிகிறது. ஆனால், அன்றாடம் வேலை செய்து பிழைக்கும் கூலி ஆட்களும், மாதத்திற்கு இவ்வளவு தான் சம்பளம் என்று நிர்ணயிக்கப்பட்டு வேலையில் ஈடுபட்டிருக்கிறவர்களும் மாதா மாதம் தங்களுக்குச் சம்பளம் கிடைப்பது போதவில்லை என்று அதிகம் கேட்பார்களானால், அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள். அதன் காரணமாக, தமக்கு ஏற்பட்டிருக்கும் அந்தக் கஷ்டத்தையும் சொல்லிக்கொள்ள முடியாத நிலையிலே உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தின் காரணமாகத் துன்பப்படுகிறார்கள். ஆகையால், நம்முடைய சர்க்கார் உணவுப் பொருள்களின் விலையிலே மிகவும் கவனம் செலுத்தி அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நெய்வேலியில் ரசாயன உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவது குறித்து மிகுந்த துரிதமாக ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்பது மிகவும் மகிழ்ச்சி அடையக்கூடிய விஷயம். ஏனென்றால், விவசாயம் உரத்தை நம்பித்தான் செய்ய முடிகிறது. அந்த உரம் சரியான முறையில் கிடைப்பதில்லை என்ற காரணமாக பலர் அதிகமான விளைச்சல் ஏற்படுத்த முடியாமல் இருக்கிறார்கள். ஆகையால், இம்மாதிரியான ஒரு ரசாயன உரச்சாலை நம்முடைய மாகாணத்தில் இருக்குமானால், அதனால் நம்முடைய விளைச்சலை நாம் அதிகப்படுத்த முடியும் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். அதில் இன்னும் தீவிர கவனம் செலுத்தி ரசாயன உரத் தொழிற்சாலையை மிக சீக்கிரத்திலே ஏற்படுத்தவேண்டுமென்று நான் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பொருள் விலையைப் போன்று மோட்டா ரக நூல் விலை ஏறிக்கொண்டே செல்கிறது. மோட்டா ரக நூலை நெசவு செய்து பிழைக்கும் நெசவாளிகள் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலைச் செய்து பிழைக்கின்றவர்களும் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காரணம், எந்தப் பொருளும் அடக்க விலைக்கு அதிகமாக விற்பதுதான் வியாபாரம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், நூல் விலை ஏற்றத்தின் அளவிலே துணி விலை ஏறிக்கொண்டே போகுமானால்,

[Srimathi P. K. R. Lakshmikantham] [9th August 1960

இதனால் பாதகம் இல்லை; அந்தத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கும் கஷ்டம் இருக்காது. அந்தத் தொழிலை நம்பி வாழ்கின்ற நெசவாளிகளுக்கும் கஷ்டம் இருக்காது. ஆனால், மோட்டா ரக நூலை வாங்கிச் செய்யும் பெட்ஷீட், டவல் போன்றவைகளை விலை அதிகமாக விற்க முடியாது. ஆகையால், இந்த நூல் விலை காரணமாக அந்தத் தொழில்கள் செய்கின்றவர்கள் அனைவரும் அந்தத் தொழிலை நிறுத்திவிடவேண்டுமென்ற அளவிலே அவர்கள் இருக்கிறார்கள். மதுரையைப் பொறுத்தவரையில் பலர் அந்தத் தொழிலை நிறுத்தியும் இருக்கின்றார்கள். அவர்களிடத்திலே பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமான ஸ்டாக்குகள் இருக்கிற படியினால், மேற்கொண்டு நூலை வாங்கி நெசவாளிகளுக்குத் தொழிலைக் கொடுக்கவேண்டிய அளவுக்கு அவர்களுக்குச் சாதகம் இல்லாத காரணத்தினாலும் அந்தத் தொழிலை நிறுத்தியும் இருக்கிறார்கள். இந்த முறை ஏற்படுமேயானால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் முதலாவதாக நெசவாளர்கள் என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். இதற்காக பல மாதங்களுக்கு முன்பே முக்கூட்டு மகாநாடுகள் கூட்டப்பட்டன. பல தடவை நமது அமைச்சர் அவர்கள் மில் முதலாளிகளைக் கண்டு பேசியும் இருக்கிறார்கள். ஆனால் எந்த விதமான பலனும் இதுவரைக்கும் ஏற்படவில்லை என்பதைக் கண்டுதான் நான் வருந்தவேண்டியிருக்கிறது. ஆகையினால் உடனடியாக மோட்டா ரக நூல்களின் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில்களை நாம் இணைக்கும்பொழுது கனரகத் தொழிற்சாலைகளை பல இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு நமக்கு மூலப் பொருள்கள் வேண்டியிருக்கிறது. மூலப் பொருள்கள் எங்கு கிடைக்கிறதோ அந்த இடங்களில் அந்தத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதுதான் நியாயம். ஆனால் அதிலிருந்து வருகிற உருக்குகளைக் கொண்டு நாம் ஏற்படுத்துகிற புதிய தொழிற்சாலைகளைப் பரவலான முறையிலே ஏற்படுத்தவேண்டும். தொழிற்சாலைகள் இல்லாத பகுதிகளிலே அந்தத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதன் மூலம் அந்தப் பகுதிகளிலே இருக்கிற மக்களுக்கு "நம்முடைய திட்டங்கள் ஓரளவில் பயன்பட்டு வருகின்றன. அதனால் நாமும் பலன் பெறுகிறோம்" என்கிற உணர்ச்சி ஏற்படும். நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தவரையிலே பிற்பட்ட பகுதிகள் பல இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே பல தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு வேண்டிய யோசனைகளைச் செய்து அந்த வட்டாரங்களைப் போய்ப் பார்த்து, அந்தப் பகுதிகளில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவேண்டுமென்று நான் மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அது மாத்திரமல்ல. பல தொழில்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் அந்தத் தொழில்கள் நன்கு நடைபெறுவதற்கு வேண்டிய நல்ல சூழ்நிலையை நாம் உண்டாக்கித் தர வேண்டும். நம்முடைய நாடு சுதந்திர நாடு. சுதந்திர நாட்டிலே



9th August 1960] [Srimathi P. K. R. Lakshmikantham]

நல்ல முறையிலே தொழில்களைச் செய்து தொழில்களைப் பெருக்குவதன் மூலம்தான் முன்னேற்றம் அடையவேண்டும் என்று கருதிச் செய்யப்படுகின்ற தொழில்களெல்லாம் பல சூழ்நிலை சரியாக அமையாததன் காரணமாக கெட்டுப்போய்விடுகின்ற நிலைமையும் இருக்கிறது. அவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து அந்தப் பகுதியிலே நடக்கின்ற தொழில்கள் அனைத்தும் சீரான முறையிலே நடைபெறுவதற்கு வேண்டிய ஒத்தாசையும், அதற்கு வேண்டிய சூழ்நிலையையும் நம்முடைய சர்க்கார் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே நம்முடைய மாகாணம் மிகவும் முன்னேற்றமான நிலைமையில் இருக்கிறது என்பதைக் குறித்து எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நம்முடைய மதிப்பிற்குரிய கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் நல்ல முறையிலே நாம் படித்து அறிந்து இருக்கிறோம். இந்த ஆண்டு முடிவிற்குள்ளாக 10,000 கிராமங்களுக்கு நாம் மின்சாரத்தைக் கொடுக்க இருக்கிறோம். அடுத்த திட்டத்தின் இறுதிக்குள்ளாக அநேகமாக நம்முடைய மாகாணத்திலே எல்லா கிராமங்களுக்கும் நாம் மின்சாரம் சப்ளை செய்யக்கூடிய நிலைமையிலே இருக்கிறோம் என்று சொன்னால், நம்முடைய நாட்டிற்கே ஒரு வழிகாட்டியாக சென்னை மாகாணம் இருக்கிறது என்பதைப்பற்றி நாம் எல்லோரும் பெருமிதம் கொள்ளவேண்டும்.

விவசாயிகளுக்கு இன்னொரு பெருத்த நன்மையும் நம்முடைய மின்சார இலாகாவினால் ஏற்பட்டிருக்கிறது. அதாவது 'மினிமம் சார்ஜ்' இல்லை என்ற விஷயமானது விவசாயிகளுக்கு ஒரு பெருத்த மகிழ்ச்சியை ஊட்டுவதாக இருக்கிறது. விவசாயத்திற்கு வேண்டிய மின்சாரம் அவர்களுக்கு வேண்டிய அளவுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம், அவசியம் இல்லை என்று சொன்னால் அதற்கு குறைந்தபட்ச கட்டணம் கட்டவேண்டியதில்லை என்பதைக் குறித்தும் நாம் மகிழ்ச்சி அடையவேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

அண்மையிலே நடந்த வேலை நிறுத்தத்தைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசினார்கள். உண்மையாகவே மத்திய அரசாங்க ஊழியர்களது வேலை நிறுத்தமானது நாட்டிற்கே அவர்கள் செய்த ஒரு பாதகச் செயல் என்று சொன்னால் அது மிகையாகாது என்றுதான் நான் கருதுகிறேன். ஏன் என்று சொன்னால், சர்க்காரைப் பயமுறுத்திப் பணியவைத்து விடவேண்டும் என்கின்ற ஒரு உள்நோக்கத்துடன் அவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தம் சர்க்காருக்கு எதிராகச் செய்யும் வேலை நிறுத்தம் என்று அவர்கள் மனதிலே எண்ணிக்கொண்டு செய்ததன் காரணமாகத்தான் அவர்கள் அந்த வேலை நிறுத்தத்தில் எந்தவிதமான வெற்றியும் அடைய முடியாமல் போக நேர்ந்தது. வேலை நிறுத்தமானது பொது மக்களுக்கு எதிராகச் செய்த வேலை நிறுத்தம் என்று சொன்னாலும் அது உண்மை என்றுதான் கொள்ளவேண்டும். ஏனென்று சொன்னால் மத்திய சர்க்கார் ஊழியர்கள் பலவிதமான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கு அன்றாட வாழ்க்கைக்கு அவசிய

மான காரியங்கள் நடக்கின்ற இடங்களிலே, போக்குவரத்து போன்ற தொழில்களிலே மத்திய சர்க்கார் ஊழியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் செய்கின்ற வேலை நிறுத்தத்தினால் சர்க்காரைப் பயமுறுத்தி பணிய வைக்க முடியும் என்று எண்ணினதானது மிகவும் தவறு. அவர்கள் செய்த வேலை நிறுத்தம் பொது மக்களுக்கு எதிராகச் செய்த வேலை நிறுத்தம். ஆகையினால்தான் பொது மக்களுடைய ஆதரவின்றி அவர்கள் அந்த வேலை நிறுத்தத்திலே தோல்வியுற்றார்கள். இனிமேல் வரப்போகின்ற ஒரு காலத்தில் இது ஒரு நல்ல படிப்பினையாக இருக்கும் என்பதையும் நான் இந்த இடத்திலே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக, மொழி சம்பந்தமான விஷயத்திலே பலர் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நேற்று பேசிய கனம் அங்கத்தினர் திரு. மகாலிங்கம் அவர்கள், இந்தி லிபிக்குப் பதில் ரோமன் லிபியே இருந்துவிட்டால் என்ன, அதனால் பலவிதமான சங்கடங்கள் நிவர்த்தியாகும் அல்லவா, என்பதைப்பற்றி அவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இந்தி மொழியை ரோமன் லிபியில் கற்பதைக் காட்டிலும் அந்தப் பிரதேச மொழியிலே இந்தியைக் கற்றுவிட்டால் என்ன என்கின்ற ஒரு பிரச்னையும் எழுவது சகஜம்தான். இந்த விஷயங்களையெல்லாம் சிந்தித்துப் பார்க்கும்பொழுது நாகர லிபியிலே இந்தியைக் கற்றுக்கொள்ளுவது மிகவும் முக்கியம் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, அது இல்லையென்றால் அந்தந்தப் பிரதேச லிபியிலே இந்தி மொழியைக் கற்றுக்கொள்ளுவது அதைக் காட்டிலும் கொஞ்சம் சுலபமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, நமது கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் மீது சில கருத்துக்களை தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பைப் பெற்றதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த உரைக்கு என்னுடைய மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொண்டு, முடித்துக் கொள்ளுகிறேன், வணக்கம்.

* **SRI K. SATTANATHA KARAYALAR:** கனம் சபா நாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் பேருரையின் ஆரம்பத்திலே மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய வேலை நிறுத்தத்தைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சபையிலே பேசிய பல நண்பர்களும் வேலை நிறுத்தம் செய்தது சரியா, தவறா என்பதைப்பற்றி அபிப்பிராய வித்தியாசங்களை இருதரப்பிலும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், அதே நேரத்திலே கவர்னர் பெருமான் பேருரையிலே வேலை நிறுத்தத்திற்கு காரணமாயிருந்த அம்சங்கள் நியாயமானவை என்பது சூசகமாக தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது விலைவாசி உயர்வு நாட்டிலே கூடிக்கொண்டே போகும் போது "பிக்ஸெட் இன்கம்",—நிர்ணயிக்கப்பட்ட வருமானம் உள்ளவர்கள் மேலும் மேலும் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள், அதைத் தெட்டத் தெளிவாகத் தேக்கி, அதிலே உள்ள குறைபாடுகளை நீக்க வழிவகைகளைச் செய்ய மத்திய சர்க்காருக்கும் சிபாரிசு செய்துள்ளோம் என்றும் குறிப்பிட்டு விட்டார்கள். மத்திய சர்க்கார்





ஊழியர்கள் கோருவதுபோல். விலைவாசி உயர்வுக்குத் தக்க பஞ்சப்படியையும் இணைத்து அவர்களுக்கு பஞ்சப்படியென்று ஒரு நியாயமான தொகையைக் கொடுக்கவேண்டும் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் யாருக்கும் அபிப்பிராய பேதம் இல்லை. **ஆனால்**, கவர்னர் பெருமான் பேருரையில், விலைவாசியைக் கட்டுப்படுத்த என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார்கள் என்பதைப்பற்றி யாதொன்றும் குறிப்பிடப்படவில்லை. உண்மையாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, அத்தியாவசியப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும் "லெவி" லிஸ்டப்படி எடுக்கவேண்டும் என்று சர்க்கார் கருதுகிறார்களா, "பாங்க்" முதலிய "பார்வர்ட் ட்ரேடிங் அட்வான்ஸ்"-களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சர்க்கார் கருதுகிறதா என்பதையெல்லாம்பற்றி எந்த விதமான சூசகமும் இல்லை. "பாங்க் டெபாசிட்" தொகைகள் "இன்ப்ளேஷன்" காரணமாக அதிகமாகியிருக்கிறது. அதற்கு ஒரு வரையறை கட்ட சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைப்பற்றி யாதொன்றும் குறிப்பிடப்படவில்லை.

அடுத்தபடியாக, நாட்டிலே, குறிப்பாக தமிழ் நாட்டிலே, மக்கள் உணர்ச்சியைத் தூண்டியிருக்கும், கவலைக்கு இடமாகவிருக்கும் பிரச்னை, மொழிப் பிரச்னை. அது இங்கே மட்டுமல்ல. பஞ்சாபிலும், அஸ்ஸாமிலும், இது குழப்பத்தை பெரிய அளவுக்குக் கொண்டுபோய் விட்டிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டும், நாம் இங்கே கையாளும் கொள்கை, நமது சர்க்கார் கையாளும் கொள்கை, ஓரளவு மக்களுக்கு திருப்தியாக இருந்தாலும், எல்லோருக்கும் சந்தேகமின்றிச் செய்யவேண்டுவது பற்றி மேலும் சிந்திக்க வேண்டிய விஷயம். அதே போன்று அகில இந்திய மொழி ரீதியில் கொள்கையிருந்தால் சரி. அங்கும் இங்கும் ஒரே கட்சியாக இருந்தாலும், கொள்கையில் வித்தியாசம் இருக்கிறதா, அப்படியானால், அந்தக் கட்சியின் கொள்கை என்ன? மொழியைப் பொறுத்தவரையில், வட்டார மொழி தாய் மொழிதான் என்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. எந்தக் கட்சிக்கும் அபிப்பிராயபேதம் இல்லை. தமிழ் நாட்டிலே இன்று ஹிந்தியைப் பொறுத்தவரை துணைப்பாடமாகக் கொண்டுவரக்கூடிய ஏகோபித்த அபிப்பிராயம் இருக்கிறது. சர்க்கார் ஒத்துக்கொள்கிறது. ஆனால், இதர மாகாணங்கள் அம்மாதிரி ஒத்துக்கொள்ளவில்லை. கல்லூரிகளில் போதனா மொழி சம்பந்தப்பட்ட மட்டில், தமிழ் போதனா மொழியாக 1963-க்குப் பிறகு பரிபூரண போதனா மொழியாக இருக்கும் என்கிற முடிவு வரவேற்கக்கூடிய விஷயம். அதே நேரத்தில், இதர மாகாணங்கள் அம்மாதிரியே முடிவு எடுக்க இருக்கின்றனவா? நாம் அகில இந்திய ரீதியில் ஹிந்தியை ஒத்துக் கொள்ளவில்லையென்றால், அதற்குப் பதிலாக எந்த மொழியை ஒத்துக் கொள்கிறோம்? தமிழ் அந்த நிலைக்கு வர முடியுமா என்பதில் ஐயப்பாடு உண்டு. ஆகவே, இன்று இருக்கும் ஆங்கிலத்தை தொடர்ந்து அகில இந்திய ரீதியில் ஏற்றுக்கொள்ள வழிவகைகள் செய்தாக வேண்டும். அதற்குத் திட்ட வட்டமாக வழிவகைகள் செய்தாக வேண்டும். கோயம்புத்தூர் கல்லூரியில்

உள்ளது போல் இதர கல்லூரிகளிலும் தமிழே போதனை மொழியாகும் நேரத்தில், அகில இந்திய போட்டிகளில், நம் மாணவர்கள் எந்த முறையில் பங்கு எடுக்க முடியும், எப்படி அகில இந்திய வேலைகளுக்குப் போகமுடியும் என்பதையெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். ஆங்கிலம் அறவே வேண்டாம் என்று சொல்லும் நண்பர்களும் இங்கேயே இருக்கிறார்கள்; கல்லூரிகளிலும் ஒழிந்து வரவேண்டும் என்று கருதும் நண்பர்களும், படிப்பாளிகளும் இருக்கிறார்கள். இரண்டும் மாறுபட்ட அபிப்பிராயங்கள். தமிழை மாத்திரம் போதனை மொழியாக வைத்தால், தமிழ் ஆட்சி மொழியாக இருப்பதால், நம் மாநிலத்தில் உத்தியோகத்திற்கு வருகிறவர்களுக்கு உபயோகமாகவிருக்கும். ஆனால், அது அகில இந்திய வேலைகளுக்கு எந்த அளவுக்குச் சாதகமாக இருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும். அப்படி வரும்போது, ஆங்கிலமே தொடர்ந்து இருக்கவேண்டும் என்று வரும். ஆகவே தமிழோடு கூட ஆங்கிலமும் இருக்கவேண்டுமா என்ற அவசியத்தைப்பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டும். அண்மையிலே உள்ள மாநிலங்களைப் பொறுத்தவரை, கேரளத்தைப் பொறுத்த வரையில், பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில், ஆங்கிலம் போதனை மொழியாக இருந்துவருகிறது. அந்த மாணவர்களோடு, நம் மாணவர்கள் அகில இந்திய ரீதியில் எப்படி ஆவார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே, "பாரலல்" ஆக, இரண்டும் சொல்லிக் கொடுக்கப்படவேண்டுமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஒரு கல்லூரிக்கு அதிகமாக இருக்கும் பெரிய நகரங்களிலாவது, ஒரு கல்லூரியிலாவது ஆங்கிலம் தொடர்ந்து போதனை மொழியாக இருக்கவேண்டியது சாலச் சிறந்ததாக இருக்காதா என்று சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டும்.

விலைவாசி உயர்வுகளைப் பற்றிக் கூறும் சமயத்தில், சர்க்கரை விலை அவசியமின்றி மேலும் மேலும் உயர்ந்துகொண்டே போகிறது. அதுவும் மக்களுக்குக் கிடைப்பதில்லை. அதேமாதிரி, உரவினியோகத்திலும், கூட்டுறவு முறையில் பல இடங்களிலே காலாகாலத்தில் கிடைப்பதில்லை; அப்படி ஆங்காங்கு உரங்கள் வந்து சேர்ந்தாலும், நிறுவை சரியாக இல்லாமல் பல குறைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் சரி செய்யவேண்டும்.

கடைசியாக, இன்று நமது மாவட்டங்களைப் பொறுத்த வரைக்கும், மழை நல்ல முறையிலே இல்லை என்று கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தெந்த மாவட்டங்களிலே மழை சரியாக இல்லையோ, எங்கெங்கு பயிர்த் தொழில் பாதிக்கப் பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் விவசாயிகளைப் பாதுகாக்க, "க்ராப் இன்ஷூரன்ஸ் ஸ்கீம்" என் கொண்டு வரக்கூடாது என்று சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டும் என்பது மிக முக்கியமானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாகாண என்.ஜி.ஓ.-க்களைப் பொறுத்தவரை, "பே கமிஷன்" சிபாரிசுகள் வரவேற்கத்தக்கவை. ஆனாலும், வேலைப் பளுவையும் கூடுதலாகச் செய்திருக்கிறோம். அதிக வேலையை அவர்கள் தலையில் சுமத்தியிருக்கிறோம். உண்மையாக இன்று இருக்கக்கூடிய நிலையில், தினம் அரை மணிக்கூறு அவர்களிடம் அதிகமாக வேலை வாங்குகிறோம். ஒரு வருஷத்தில், 365 நாளில், சுமார் 52 நாட்கள் "ஸன்டேஸ்", 12 தினங்கள் "பெனல்டிமேட் சாடர்டேஸ்", ஓய்வு நாட்கள் இருந்தன. அது தவிர 24 தினங்கள் அவர்களுக்கு வருஷத்தில் "காஷுவல் லீவு" ஆகவும், "க்ளோஸ்ட் ஹாலிடே"-க்களும் இருந்தன அவைகளெல்லாம் இப்பொழுது குறைந்திருக்கிறது. சுமார் 275 நாட்கள் வேலைசெய்து வந்தவர்கள், இப்பொழுது 289 தினங்கள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அது தவிர, தினம் அரை மணிக் கூறு வீதம் அதிகமாக வேலை செய்வதில் 144 மணிநேரம் அதிகமாக வேலை செய்யவேண்டியிருக்கிறது. மொத்தத்தில் ஒரு ஆண்டிலே 40-1/2 நாட்கள் அல்லது 1-3/4 மாதம் அவர்களிடம் நாம் அதிகமாக வேலை வாங்குகிறோம். ஆகவே சர்க்கார் பொதுவாக சுமத்தியிருக்கும் ஓர்க்லோடைப் பொறுத்த வரை லாபகரமாகவே செய்திருக்கிறார்கள் என்பது வரவேற்கத் தக்கதுதான். வேலை வாங்குவது பற்றிக் கவலையில்லை. ஆனால், ஊதியம் கொடுக்கும்போது, வயிறாரக் கொடுத்து, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, "க்ரெயின்ஸ்" முதலியவைகளை கட்டுப்பட்ட விலையில் கொடுத்து, சம்பளத்தையும் கூட்டிக் கொடுத்தால் போதும். அவர்களுக்கு சர்வீஸ் கண்டிஷன்களை இனியும் தளர்த்திக் கொடுக்கவேண்டும். கல்வித் துறையில் என்.ஜி.ஓ.-க்களின் குழந்தைகளுக்கு, பள்ளிக்கூடச் சம்பளச் சலுகை கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் முதலில் பணத்தைக் கட்டிவிட்டு, திருப்பி வாங்கும் நிலை மாறி, என்.ஜி.ஓ.-க்களின் குழந்தைகளுக்கு ஆண்டு முதலிலிருந்தே பணம் வாங்காமல் இருக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். அதற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். அதேபோல், மருத்துவச் சலுகைகளிலும், பல வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். முக்கியமாக, உணவுப் பொருள்களை, கட்டுப்படுத்திய விலைக்கு, நியாயமான விலைக்கு, ஜில்லாக் காரியாலயங்களிலாவது, கூட்டுறவு இயக்கம் மூலமாக வினியோகிக்க, ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

*SRI G. GOMATHISANKARA DIKSHITAR : அன்பு மிக்க உதவி சபாநாயகர் அவர்களே, நமது கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரையை ஆதரித்து அந்த உரையில் கண்டுள்ள நமது ராஜ்ய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளைக் கண்டு என்னுடைய மகிழ்ச்சியை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நமது ராஜ்யம் இந்தியாவிலேயே எல்லா முறைகளிலும் அபிவிருத்தி அடைந்து வருகிறது என்பதற்கான அறிகுறிகள் இருப்பதால் இந்த ராஜ்யத்திலுள்ள ஒவ்வொருவரும் அரசாங்கத்துடன் அரசியல் அபிப்பிராய பேதம் இல்லாமல் இந்த ராஜ்யம் முன்னேற்றமடைவதற்கு ஒத்துழைக்க கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த ராஜ்யத்தின் முன்னேற்றம் நம்முடைய முன்னேற்றம் என்று கருதி அதற்கு எல்லோரும் ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் 11-30 a.m.

[Sri G. Gomathisankara Dikshitar] [9th August 1960

பொதுப் பாஷை விஷயத்தில் எந்த விதமான அபிப்பிராய பேதமும், தகராறும் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அதற்கு அதிகப்படியாக கவனம் செலுத்தாமல் நாட்டின் முன்னேற்றத்திற்கு அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும். அதற்கு அரசாங்கம் பாடுபட்டு வருகிறது; அதற்கு பல திட்டங்களைப் போட்டு அவற்றை நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. அதற்கு ஒத்துழைக்க வேண்டியது நம்முடைய கடமையாக இருக்கிறது. இந்நாட்டு மக்கள் பொருளாதாரத் துறையில் சுபிட்சமாக வாழ்வதற்கு அரசாங்கத்துடன் ஒத்துழைக்க எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கு எடுத்துக்காட்டாக நமது கவர்னர் பெருமானுடைய உரை இருக்கிறது.

தேசத்தின் முன்னேற்றத்திற்கு மிகவும் பாதகமாக, இந்நாட்டில் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்தக் காலத்தில் மத்திய அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். நெருக்கடியான சமயத்தில் அந்தச் செயல் ஒரு தேச விரோதமான செயல் என்பதைப் பொது மக்கள் நன்கு அறிந்து அந்த வேலை நிறுத்தம் வெற்றி ஆகாமல் இருக்க வேண்டும் என்று அரசாங்கத்துடன் ஒத்துழைத்தார்கள். அதைக் கண்டு அனைவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். எந்த ஆட்சி நடைபெற்ற போதிலும் இப்படிப்பட்ட செயல் நல்லது அல்ல. அரசாங்கம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு இது மிகவும் பாதகமாக இருக்கும் என்பதை எடுத்துக்காட்டுகிறேன்.

நம்முடைய ராஜ்யத்திலுள்ள என்.ஜி.ஓ.-க்களுக்கு சம்பள உயர்வு "பே கமிஷன்" அறிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக இலாகாக்கள் எல்லாம் நல்ல விதமான முறையில் நடைபெறும் என்று நம்புகிறேன். என்.ஜி.ஓ.-க்களும் தங்களுக்கு ஊதியம் அதிகப்படியாக கிடைத்திருப்பதால் நாட்டின் முன்னேற்றப் பாதையில் ஈடுபட்டு வருவார்கள். அரசாங்கம் கொண்டு வரக்கூடிய திட்டங்களையெல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு வேண்டிய முறையில் வேலை செய்து வருவார்கள். அதற்கு இந்த "பே கமிஷன்" மூலமாகக் கொடுக்கப்பட்ட சம்பள உயர்வு சாதகமாக இருக்கிறது என்று நான் நம்புகிறேன். ஆனால் ஒரே ஒரு குறை மட்டும் இருக்கிறது. அதாவது கிராம உத்தியோகஸ்தர்களுடைய குறை. அது வெகு காலமாக இருந்து கொண்டு வருகிறது. அவர்கள் பாரம்பரையினர்களா அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர்களா என்ற பிரச்னை இருந்து கொண்டே இருக்கிறது. அது இன்னும் தீர்ந்தபாடில்லை. நாம் போடக்கூடிய திட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் நிறைவேற வேண்டுமானால் கிராம உத்தியோகஸ்தர்களுடைய ஒத்துழைப்பு வேண்டியதாக இருக்கிறது. அது நமக்கு மிகவும் தேவையாக இருக்கிறது. இப்பொழுது இருக்கிற நிலையைப் பார்த்தால் நாம் போடக்கூடிய திட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் செயல்படுவதற்கு இல்லாதபடி அவர்களுடைய நிலை இருக்கிறது.



9th August 1960] [Sri G. Gomathisankara Dikshitar]

அவர்களுடைய நிலை நமக்கு அனுகூலமாக இல்லாமல் இருக்கிறது. ஆகையினால் அவர்களுடைய நிலையை கவனித்து "பே கமிஷன்" நியமித்து எல்லோருக்கும் சம்பளத்தை உயர்த்தியது போன்று "காபினெட் சப் கமிட்டி" அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் முன்னேற்றமடையக் கூடிய வகையில் "காபினெட் சப் கமிட்டி" நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால் கிராமங்களில் மக்கள் எல்லோரும் இந்த கிராம உத்தியோகஸ்தர்கள் மூலமும் மற்ற சிறிய சிறிய உத்தியோகஸ்தர்கள் மூலமும்தான் அவர்களுடைய கடமைகளை நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுப்பதன் மூலமாகவும் அவர்களுடைய நிலையை உயர்த்துவதன் மூலமும் அவர்களை நல்ல முறைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கும் தருவாயில் இருக்கிறது. அந்த நிலையில் இந்த நாடு நல்ல முறையில் பொருளாதாரத்தில் சுபீட்ச வாழ்வு பெற வேண்டுமானால் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நல்ல முறையில் செயல் பட வேண்டும். அதற்கு எல்லா மக்களுடைய ஒத்துழைப்பும் வேண்டும். அப்பொழுது கட்சி பேதம் இல்லாமல் எல்லோரும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒத்துழைக்க எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டில் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி முதற்கொண்டு பஞ்சாயத்து கவுன்சில் வரப்போகிறது. கிராம ராஜ்யம் சட்ட பூர்வமாக கிராம மக்களுக்கு வரப்போகிறது. சட்ட பூர்வமாக கிராம மக்களுக்கு அதிகாரம் பங்கிட்டுக் கொடுக்கக்கூடிய நிலை வரப்போகிறது. ஆகவே பஞ்சாயத்து கவுன்சில் மூலமாகவும் சமுதாய நலத் திட்டங்கள் மூலமாகவும் கிராம மக்கள் சுபீட்சமாக வாழ்வதற்கு வழி ஏற்படப்போகிறது. அப்பொழுது எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி சுபீட்சமாக வாழ்வதற்கு அவசியமாக உள்ளது குடிசைத் தொழில், கைத்தறி நெசவுத் தொழில்; இப்படிப்பட்ட பல தொழில்களை கிராமங்களில் ஆரம்பிப்பதன் மூலம் கிராம மக்கள் சுபீட்சமாக வாழ்வதற்கு வழி ஏற்படப்போகிறது. நம்முடைய அரசாங்கம் அதற்கு வேண்டிய வேலைகளைச் செய்து வருகிறது; முன்னேற்றப்பாதையில் பல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறது. அதைக் கண்டு நாம் மகிழ்ச்சி அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட பல முன்னேற்றக் காரியங்களைச் செய்து வருவதால்தான் நம்முடைய ராஜ்யம் மற்ற ராஜ்யங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. மத்திய அரசாங்கத்துடன் வாதாடி நமக்கு வேண்டியதைப் பெறுவதற்கு சக்தியுள்ள மந்திரிகள் நமது ராஜ்யத்தில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மந்திரிகளை நாம் பெற்றிருக்கிறோம். அது நமக்கு மிகவும் சந்தோ

[Sri G. Gomathisankara Dikshitar] [9th August 1960

ஷத்தைக் கொடுக்கிறது. அது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயமாகவும் இருக்கிறது. ஆகவே எல்லா வழிகளிலும் நாம் முன்னேற்றமடைவதற்கு நமக்குள் ஒற்றுமை இருக்கவேண்டும். அந்த சமயத்தில் பாஷை பிரச்னையைக் கிளப்புவதற்கில்லை. அப்படிக் கிளப்பினால் நாட்டின் ஒற்றுமைக்கு அது பாதகமாக இருக்கும். ஆகவே பாஷைப் பிரச்னையைக் கிளப்பாமல் தேசத்துடன் ஒற்றுமையாக இருந்து எல்லாவற்றையும் அனுதாபத்துடன் கவனித்துவருவது அவர்களுடைய கடமையாக இருக்கிறது. பாஷைப் பிரச்னை அரசியல் காரியங்களுக்குக் குறுக்கீடாக இருக்கக்கூடாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியில் கவர்னர் பெருமானுடைய உரையை ஆதரித்து பாராட்டுதல் அளிக்கிறேன். எல்லாவிதமான சிறிய தொழில், பெரிய தொழில், கனரகத் தொழில், ரசாயனத் தொழில், உர உற்பத்தி, மின்சார உற்பத்தி முதலியவைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார். அவைகள் எல்லாம் கிராம மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கிறது. அவைகளின் மூலம் நாட்டு மக்கள் முன்னேற்றமடைவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும், அதற்கு எல்லோரும் பாடுபடவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* Sri R. SRINIVASA IYER: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, சபை முன் லால்குடி தொகுதி அங்கத்தினர் அவர்கள் வைத்துள்ள பிரேரபணையை ஆதரித்துச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். வழக்கம்போல் கவர்னர் உரையில் பருவ மழையைப்பற்றியும் அது இவ்வருஷம் தவறி விட்டதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். அதைப்பற்றி அவருடைய உரையில் நாலாவது பாராவில் குறிப்பிட்டிருக்கிறார். கவலைக்கு இடம் அளிக்கிறது என்றும், நல்ல மழை பெய்ய கடவுளை பிரார்த்திக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பெய்திருக்கக் கூடிய மழைத் தண்ணீரானது நமக்கு வரவேண்டியது வந்திருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். சென்ற இருபத்தைந்து ஆண்டு காலமாக இந்த மேட்டூர் அணை சரித்திரத்திலேயே பார்த்திராத ஒரு விஷயத்தை நாம் இப்பொழுது பார்க்கிறோம். அந்தச் சரித்திரத்தை இப்பொழுது கொஞ்சம் ஆராய்வது அவசியமாக இருக்கிறது. சென்ற வருஷம் பெய்த மழைக்கு, இவ்வருஷம் ஜூன்–ஜூலை மாதத்தில் மழை 12 அங்குலம்தான் குறைவு. ஆகஸ்ட் 1-ம் தேதி வரை நான்கு அங்குலம்தான் குறைவு. இன்றைய வரையில் சென்ற வருஷ அளவுக்கு மழை பெய்திருக்கிறது. ஆனால் இப்பொழுது மேட்டூர் தேக்கத்தில் 95 அடி தண்ணீர், அதாவது பாதி ஏரி அளவுதான் இருக்கிறது. இது திருப்திகரமாக இல்லை. மேட்டூர் அணையில் இப்பொழுது மூன்றில் இரண்டு பங்குக்குக் குறைவாகத்தான் தண்ணீர் இருக்கிறது. இதே சமயத்தில் சென்ற வருஷம் மேட்டூர் நீர்த்தேக்கம் நிரம்பி வழிந்து பிரவாகம் வருமோ என்ற பயம் இருந்தது. இப்பொழுது



9th August 1960] [Sri R. Srinivasa Iyer]

போதுமான தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மழை இல்லாமல் இல்லை. போன வருஷம் இந்த சமயத்தில் "சர்ப்ளஸ்" இருந்தது. இந்த வருஷத்தில் நமக்குக் கிடைக்க வேண்டிய விகிதாச்சாரத் தண்ணீர் கிடைக்கவில்லை. அதற்கு வேண்டிய மழைக் கணக்கு மேட்டூர் அணையில் "இன்ஃப்ளோ" கணக்கு முதலிய புள்ளிவிவரத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டால் விஷயம் நன்றாகத் தெரியும். ஆகவே புள்ளிவிவரங்களை கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று மராமத்து இலாகா அமைச்சரையும் இந்த இலாகா இஞ்சினியரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப்பற்றிய சந்தேகம் எனக்கு இருக்கிறது. சென்ற மே மாதம் நான் மைசூருக்குச் சென்றிருந்தேன். அங்கு மைசூர் சர்க்கார் எக்சிபிஷன் வைத்திருந்தார்கள்; அதைப் பார்வையிட்டேன். அங்கு சில பகுதிகளைப் பார்த்தபோது எனக்குக் கவலை ஏற்பட்டது. அங்கு காவேரியிலும் அதன் உபநதிகளிலும் அணைகள் கட்டியிருப்பதையும் இனியும் கட்டப்போவதற்கு திட்டமிட்டிருப்பதையும் காட்டியிருந்தார்கள். அதன் பிறகு 1924-ம் வருஷ ஒப்பந்தப்படி அவர்கள் நமக்கு உரிமையான தண்ணீரை விடுகிறார்களா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். சென்ற வருடம் நமக்குப் போதுமான தண்ணீரும், சர்ப்ளசும் இருந்ததே, இந்த வருஷம் போதுமான தண்ணீர்கூட இல்லையே அதற்குக் காரணம் என்ன என்பதை ஆராயவேண்டும். சர்ப்ளஸ் இருக்கவேண்டிய காலத்தில் குறைவாக இருக்க வேண்டிய காரணம் என்ன?

தினசரி "இன்ஃப்ளோ" ( in-flow )-வை கவனிக்கவேண்டும். ஒவ்வொரு தினமும் எவ்வளவு அங்குலம் மழை பெய்தது, அதன் காரணமாக மேட்டூருக்கு எவ்வளவு க்யூசெக்ஸ் ( cusecs ) தண்ணீர் விடப்பட்டது என்கிற கணக்கை கவனிக்கவேண்டும். இதை நிர்ணயிப்பதற்கு "கேஜ் டிவிஷன்" என்று மைசூரில் நமது சர்க்கார் பி.டபிள்யூ.டி. வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சரியான கணக்கை எடுக்கவில்லை என்றும், எடுக்க முடியவில்லை என்றும் மைசூர் சர்க்கார் அதிகாரிகள் தடை செய்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இதை ஏற்கெனவே சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறேன். வேறு யாராவது அங்கு போய்ப் பார்க்கப் போனாலும் அனுமதிப்பதில்லை. இந்த உண்மையை விசாரிக்க வேண்டும். ஆனால் இந்த மேட்டூர் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் இந்த வருஷத்தையும், சென்ற வருஷத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால்—நமக்கு வரவேண்டிய தண்ணீர் வரவில்லை என்பது தெரியும். இதன் காரணமாக நன்றாக ஆராயவேண்டும். நம்மிடத்தில் சிறந்த நிபுணர்கள் இருக்கிறார்கள். ஏற்கெனவே நமது மாநிலத்தில் பணியாற்றிய நிபுணர்கள் திரு. திருமலை ஐயங்கார், திரு. வெங்கிடகிருஷ்ண ஐயர் போன்றவர்கள் இப்போது நம்மிடம் இல்லாவிட்டாலும் கூட, அவர்கள் இதர ராஜ்யங்களில் இருந்தாலும் கூட, இங்கே இருக்கக் கூடியவர்கள் சிறந்த நிபுணர்கள். இவர்களே நேரே சென்று காவேரி நதியையும்

[Sri R. Srinivasa Iyer] [9th August 1960

காவேரியின் ஒவ்வொரு உபநதியையும், மெர்க்காரா முதல் மேட்டூர் வரையில் பார்வையிட்டு, 1924-ம் வருஷத்துக்குப் பிறகு எவ்வளவு அணைகள் புதிதாகக் கட்டியிருக்கிறார்கள், கணக்குப் படியாக ஜலம் வருகிறதா, சென்ற வருஷம் எப்படி வந்தது, இப்போதும் அப்படி விட்டிருக்கிறார்களா என்பதை எல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். ஏதோ வரக்கூடிய தண்ணீரைப் பகிர்ந்துவிடுகிறோம் என்று சொல்வதிலும், திருப்திபடுவதிலும், பிரயோஜனம் இல்லை. நமக்குள்ள உரிமைகளைக் காபந்து செய்யவேண்டியது சர்க்காரின் கடமை என்பதை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு 4—8—1960-ந் தேதி இந்து பத்திரிகையில் மைசூர் நியூஸ் லெட்டரைப் பார்த்தால் தெரியும். மைசூர் கவர்ன்மென்டார் இன்னும் ஜாஸ்தி விஸ்தீரணம் சாகுபடிக்குக் கொண்டு வருவது பற்றி யோசித்து, 1924-ம் வருஷ ஒப்பந்தத்தையே கூட மாற்றி அமைக்கவேண்டுமென்று பிரயாசைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மாற்றாக நமது சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போன வருஷம் நான் எழுதியதற்கு அதற்கு நடவடிக்கை தேவை இல்லை என்று சர்க்கார் கருதியதாக நேற்று மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இனிமேலாவது இதைப்பற்றி நன்றாக ஆராய்ந்து பார்த்து நமக்கு வரவேண்டிய தண்ணீர் குறை இல்லாமல் இருப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேட்டூர் ஒரு "மல்டி-பர்பஸ்" (multi-purpose) பிராஜெக்ட். அதாவது நீர்ப்பாசனத்திற்கும், மின்சாரத்திற்குமாகச் சேர்ந்து அமைக்கப்பட்டது. அதில் இரண்டாயிரம் க்யூசெக்ஸ் மின்சாரத்திற்காகவிட வேண்டுமென்றதில், நாலாயிரம் க்யூசெக்ஸ்க்கு மேல் காலவரையறைக்குப் பிந்தியும்கூட விடப்பட்டிருக்கிறது. இதனால் பெரும் அளவு பாதிக்கப்படாது என்றாலும், நாம் கவனிக்க வேண்டும். இந்த ஜலம் வீணாகப்போவதில்லை, எங்கோ விவசாயத்திற்கு விடப்படுகிறது என்று சொன்னாலும் நிரந்தரமான சாகுபடி இதனால் பாதிக்கப்படுவதைப் பார்க்க வேண்டும். இருக்கும் தண்ணீரை பி.டபிள்யூ.டி. அதிகாரிகள் சரியான முறையில் பகிர்ந்து அளிக்கிறார்கள் என்றாலும், கிராண்டு அணைக் கட்டுக் கால்வாயினால் சாகுபடி செய்யப்படுகிற எங்கள் பகுதியில் இன்னமும் பெரும்பாகம் நாற்று விடப்படவில்லை. நான் அதிகாரிகளை குறை கூறவில்லை. பூராத் தண்ணீர் வந்தால்தான் பகிர்ந்து கொடுக்க முடியும். கிட்டத்தட்ட இவ்வாண்டு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ஏக்கரா என் பகுதியில் இதுவரையில் போதுமான தண்ணீர் விடப்படாத காரணத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் உணவு உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் கீழ் (Grow More Food Campaign காலத்தில் நீர்ப்பாசனத்திற்காக போடப்பட்ட டெம்பரரி பைப்புகளையெல்லாம் யாதொரு முன் எச்சரிக்கையும் இல்லாமல் எடுத்துவிட்டார்கள். முன் திட்டமிட்டபடி 73 ட்யூடி கணக்கை அனுசரித்து அந்தப்படி எடுக்கப்பட்டு வருகிறது. என்னுடையதை எடுத்துவிட்டார்கள், அவனுடையதை எடுத்துவிட்டார்கள் என்று ஒவ்வொரு நாளும்



9th August 1960] [Sri R. Srinivasa Iyer]

என் தொகுதியில் பலர் குறைப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். 73 ட்யூடியில் என் பகுதி சி.எம்.பி. பாசன இடங்களில் சாகுபடி செய்ய முடியாது. இதை பி.டபிள்யூ.டி. அதிகாரிகளே ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆகவே மேலும் நல்ல முறையில் நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்கு இதுபற்றி முழுவதுமே ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் மைனர் இர்ரிகேஷன் திட்டத்திற்கு ஸ்டாஃபுகள் (staff) வேண்டுமென்று கேட்டால் அதை சாங்ஷன் செய்ய ரொம்பக் காலதாமதமாகிறது. 25—11—1959-ல் கேட்கப்பட்ட ஸ்டாஃப் இன்னமும் அனுமதிக்கப்படவில்லை. கிட்டத்தட்ட ஓராண்டுகாலமாகியும்கூட உத்தரவு செய்யப்படவில்லை. இதற்கு சீக்கிரமாக சாங்ஷன் செய்து இந்தப் பிராந்தியங்களில் உள்ள சிறிய அணைக்கட்டுகளைக் கட்டினால்தான் பெய்கின்ற மழைத் தண்ணீரையாவது தேக்கி வைத்துக்கொண்டு இங்கே பாசனம் செய்வதற்கு வசதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இதே நேரத்தில் இவ்வருஷம் எஸ்டிமேட்ஸ் கமிட்டி சமர்ப்பித்திருக்கும் ரிப்போர்ட்டில் நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. வழக்கம்போல இதைப் பரிசீலனை செய்வதற்குக் காலதாமதம் செய்யாமல், சீக்கிரமாக அவற்றைப் பரிசீலனை செய்து உணவு உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டியது அவசியமாக இருப்பதினால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவு சீக்கிரம் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செயல்படுத்த வேண்டும்.

அடுத்தது, உணவு தானியங்களின் விலைவாசி. அதைக் குறைக்க வேண்டுமென்று ஒரே கூச்சல். உணவு உற்பத்தி செய்கின்றவர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி எடுத்துச் சொல்வதற்குக் கட்சி கிடையாது. அவர்களுள் யூனியன் கிடையாது. யாரும் அதைப்பற்றிச் சொல்வதில்லை. ஆனால் உணவு தானியங்களின் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறவர்கள் இங்கே மின் விசிறிக்கு (electric fan) அடியில் உட்கார்ந்து கொண்டு வேலை செய்கிறவர்கள்தான். விவசாயிகள் படும்பாடு இவர்களுக்குத் தெரியாது. உரம், கடலைப் பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை, துணி முதலியவற்றின் விலைகள் எல்லாம் ரொம்ப ஜாஸ்தியாக ஏறி இருக்கின்றன. விவசாயத் தொழிலாளர்கள் ஒரு கஜம் 4 அணாவுக்கு வாங்கிய துணி ஒரு ரூபாய், ஒன்னரை ரூபாய் என்று கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆனால் அவர்கள் உற்பத்தி செய்கின்ற உணவு தானியங்களின் விலையைமட்டும் குறைக்க வேண்டும் என்று போடப்படுகிற கூச்சல் தாங்க முடியாததாக இருக்கிறது. இன்றைய தினம் விவசாயக் கூலிகளுக்கும் நியாயமான குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதனால் எல்லாம் சாகுபடிச் செலவு எவ்வளவு அதிகமாகிறது? ஆகவே இந்தப் பிரச்னைக்கு என்னைக் கேட்டால் சர்க்கார்தான்

[Sri R. Srinivasa Iyer] [9th August 1960

சப்ஸிடி (subsidy) கொடுத்து இந்த தானியங்களை சாகுபடியாளர்களுக்கு எவ்விதமான பாதகமும் ஏற்படாதவகையில் வாங்கி, சென்னை, கோயம்புத்தூர் போன்ற தொழிலாளர்கள் இருக்கும் இடங்களில் குறைந்த விலைக்கு விற்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தப் பிரச்னையை தீர்க்க முடியும். அப்போது தொழிற்சாலைகளில் அரசியல் கட்சிகளுக்கு தொழிலாளர்களிடம் வேலையிராது.

இரண்டாவதாக விவசாய ப்ரொடக்ஷன். அநேகமாக இதர ராஜ்யங்களையெல்லாம்விட நாம்தான் உற்பத்தி லிமிட்டை எட்டிவிட்டோம். சராசரி ஒரு ஏக்கருக்கு 1968 பவுண்டுக்குமேல் நெல் உற்பத்தி செய்கிறோம். கோயம்புத்தூர் காலேஜில் இதற்குப் புள்ளிவிவரம் இருக்கிறது. இதர ராஜ்யங்களில் 828 பவுண்டுக்குத்தான் உற்பத்தி இருக்கிறது. அந்தப் பகுதியில் கங்கையிலும், இதர நதிகளிலும் தண்ணீர் போய்க்கொண்டே இருந்தாலும் அணைக்கட்டி தண்ணீர் சப்ளை செய்தாலும் அம்மாநில விவசாயிகள் அதை உபயோகப்படுத்துவதில்லை. மழையைப் பார்த்துச் சாகுபடி செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. இங்கே அப்படி இல்லை எல்லா நீர்ப்பாசனத் திட்டங்களையும் நன்கு பயன்படுத்துகிறோம். இங்கே போடவேண்டிய எல்லாத் திட்டங்களும்—இரண்டொன்றைத் தவிர—பூர்த்தியாகிவிட்டன. உணவு உற்பத்தி லிமிட்டையும் தாண்டிவிட்டோம். ஆகவே ஸ்ரீ சின்னதுரை சொன்னதுபோல நாம் மிகவும் பிற்போக்காக இருக்கிறோம் என்று ஒன்றும் வருந்த வேண்டியதில்லை.

இன்னொன்று. உர விநியோகம்பற்றி அநாவசியமாக ஏற்பட்ட குழப்பத்திற்கு இடமே இல்லை. கூட்டுறவு சொஸைடி மூலமாக உர விநியோகம் செய்யவேண்டுமென்ற ஏற்பாடு மிகமிகச் சிறந்த ஏற்பாடு. நியாயமான உத்தரவு. தனிப்பட்ட வியாபாரிகள் முன்பு மூட்டை முப்பத்தி ஏழு ரூபாய்க்கு வாங்கி, எழுபத்தைந்து, எண்பது ரூபாய்க்கு விற்றார்கள். அதைப் போக்க இந்த முறை சிறந்தது. ஆனால் கூட்டுறவு சொஸைடிகள் போதுமான பணத்தை வைத்துக்கொள்ளாததனால் சிரமம் ஏற்பட்டது. அதிகாரிகளைக் குறைகூறிப் பயனில்லை. எவ்வளவுதூரம் தேவையோ அது கொடுக்கப்பட்டது. இன்னமும் கொடுக்கப்படும். மத்திய பாங்கு கடன் உதவி அளிக்கிறார்கள். ஆகவே போதுமான அளவுக்கு கூட்டுறவு சொஸைடிகள் முன்கூட்டியே கடன்உதவி பெற்று உரம் வாங்கி வைத்துக்கொண்டால் சாகுபடி காலத்தில் தட்டு இல்லாமல் விநியோகிக்க முடியும். அப்படிச் செய்யவேண்டுமே தவிர சர்க்காரைக் குறைகூறுவது சரியல்ல.

முக்கியமாக ஒரு விஷயத்தை சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன். அது மேஜர் அண்ட் மைனர் போர்ட்ஸ், **(major and minor ports)** தூத்துக்குடி, மங்களூர் துறைமுகங்கள் இவைகள் எல்லாம் பெரிய சமாசாரம். தஞ்சாவூரில் 540 மைல் நீளம் சமுத்திரக்கரையிருக்கிறது. நாகபட்டினம், ஒரு பெரிய துறைமுகம். சிறிய துறைமுகங்களான அதிராமபட்டினம், கோடிக்கரை, காவிரிப்பூம்பட்டினம் அல்லது தரங்கம்பாடி இவைகளில் பாய்கள் கட்டிய கப்பல்களில் பிரபலமான வியாபாரம் நடந்தது எனக்குத் தெரியும். அவைகள் இப்பொழுது அடைபட்டுக் கிடக்கின்றன ஆக, மைனர் துறைமுகங்களை விருத்தி செய்தால், அதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு திட்டம் வகுத்தால், ரெயில் மூலம் ஏற்றுமதியாகக்கூடிய சரக்குகள் சம்பந்தமான பிரச்னை மிகக் குறையும். ஆகவே தூத்துக்குடி துறைமுகத்திற்கு முதலிடம் கொடுத்து அதற்கு வேண்டியது செய்து இதை விருத்தி செய்யவேண்டியது தவிர நான் சொன்ன இந்த மூன்று மைனர் போர்ட்டுகளை, தஞ்சாவூரில் நன்கு விளங்கி வந்தவைகளை, விருத்தி செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மற்ற விஷயங்களைப் பற்றிப்பேசுவதற்கு சாவகாசம் இல்லாததால் சாவகாசம் கிடைக்கும்போது பேசிக்கொள்கிறேன் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



9th August 1960] [Sri R. Srinivasa Iyer]

* **DR. SRIMATHI SATHIYAVANIMUTHU** : சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களது உரையின்மீது நான் என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு 5-12-1959-ல் அவர்கள் தந்த பேருரைக்கும், எட்டு மாதங்கள் கழிந்த பிறகு இப்பொழுது அவர்கள் தந்துள்ள இந்தப் பேருரைக்கும் நான் அதிக வித்தியாசம் காணமுடியவில்லை. இன்ன திட்டங்கள் செய்ய இருக்கிறோம் என்பதில் வேண்டுமானால் மாறுதல்கள் பல இருக்கின்றனவே தவிர இன்னின்ன திட்டங்களை முடித்து விட்டோம், அதனால் இன்னின்ன பலன் இப்பொழுது அடைந்திருக்கிறோம் என்ற புள்ளிவிவரங்களோ அல்லது அதற்குரிய விளக்கங்களோ இந்தப் பேருரையில் இல்லாததைக் கண்டு நான் பெரிதும் வருந்துகிறேன். பிற மாநிலங்களின் ஆற்று நீரை சென்னைக்குக் கொண்டுவர பல திட்டங்கள் இருக்கின்றன என்று அவர் மகிழ்ச்சியோடு தெரிவித்துள்ளார். ஆனால் கோதாவரி, கிருஷ்ணா ஆற்று நீரை எப்பொழுது கொணர இருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டாமல் இருப்பது உண்மையிலேயே நமக்கு ஏமாற்றத்தைத்தான் அளிக்கிறது. குறிப்பாக, சென்னை மாநிலத்திற்கு குடிதண்ணீரும், நீர்ப்பாசன வசதிக்கும் மிக மிக நல்ல முறையில் ஒத்துழைப்பு தந்து இந்த மாநிலம் செழிக்கச் செய்ய இந்த இரு ஆறுகளின் தண்ணீரையும் எப்பொழுது கொணர இருக்கிறார்கள் என்பதுபற்றி ஒரு வாசகம்கூட இல்லாதிருப்பது சென்னை வாசியான என்னைப் போன்றோருக்கு பெரிதும் ஏமாற்றத்தை அளிக்கிறது. அதேபோன்று, "1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் தேதி நமது பிரதம மந்திரி இந்திய மொழிக்கொள்கை பற்றிப் பேசிய பேச்சும், அரசியலமைப்பின் 344-வது பிரிவின்படி ஜனாதிபதி மேற்படி கொள்கை அடிப்படையில் வெளியிட்ட உத்தரவும், மொழி பற்றிய தொல்லை தரும் பிரச்னைக்கு முடிவு கண்டுள்ளன" என்று திட்டவட்டமாக இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நேருபிரானின் கொள்கை அடிப்படையில்தான் ஜனாதிபதி அவர்கள் கொள்கையிருக்கிறது என்பதை இங்கு அழுத்தந்திருத்தமாக கூறியிருப்பதை நான் உண்மையிலேயே கண்டிக்க விரும்புகிறேன். நான் மாத்திரமல்ல. நேருபிரான்

தந்த இந்த உறுதிமொழி அளவிற்கு ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் தந்த உறுதிமொழி தொனிக்கவில்லை என்பதை இந்த நாட்டிலுள்ள பல பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன, வற்புறுத்தியிருக்கின்றன. நான் ஆதாரபூர்வமாகச் சொல்லவேண்டுமானால், இது குறித்து நாங்கள் நடத்திய போராட்டத்திற்கும், அந்தப் போராட்டத்தை திருப்பிப் பெற வேண்டுமென்று மதிப்பிற்குரிய நேரு பிரான் அவர்கள் எங்கள் போராட்டக் குழுவின் தலைவராகிய பாராளுமன்ற உறுப்பினர் தோழர் ஈ.வி.கே. சம்பத் அவர்களுக்கு எழுதிய பதிலில்கூட அவர் நேரடியாக வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளாவிடினும், நாங்கள் எந்தக் குற்றச்சாட்டைச் சொல்லி ராஜேந்திர பிரசாத் அவர்கள் சொல்லியதை திருப்பிப் பெற வேண்டுமென்று கேட்டோமோ அந்தக் குற்றச்சாட்டை ஒத்துக் கொள்ளும் முறையில் நேருபிரான் வாசகம் இருக்கிறது. "நான் கூறிய உறுதிப்பாடு மேலெழுந்தவாரியாக பிரசாத் அவர்களின் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர நான் கூறிய உறுதிமொழியின் அடிப்படையில் அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு அவர்கள் "டைரக்டிவ்"—உத்தரவு—கொடுக்கவில்லை" என்பதைத் தான் அந்தப் பதிலில்கூட எழுதியிருக்கிறார்கள். நேரு அவர்களே, மேலெழுந்தவாரியாகத்தான் என் கருத்து பிரதிபலிக்கிறதே தவிர எனது உறுதிமொழி அடிப்படையில் பிரசாத் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஒரு பெரிய போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற எங்களுக்குப் பதில் தந்திருக்கிறார்கள் என்றால், கவர்னர் அவர்கள் "மேற்படி கொள்கை அடிப்படையில் வெளியிட்ட உத்தரவும்" என்று கூறியிருப்பது உண்மையில் வருந்தத் தக்கதாகும். யாரிடத்திலிருந்து இந்த உறுதிமொழி வரவேண்டுமென்று எதிர்பார்த்தோமோ அது வந்துவிட்டதால் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தவிர கவர்னர் அவர்கள் உரையில் இந்த ஐயப்பாடு இருப்பது வருந்தத்தக்கது. அதேபோன்று இம்மாநில ஆட்சி மொழி தமிழ் என்று நாம் ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம். அந்த முடிவை படிப்படியாக அமுலுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறப்பட்டிருக்கின்றன. அது சரியல்ல என்று ஆதாரபூர்வமாக காட்டமுடியும். எங்கள் கட்சியைச் சார்ந்த இருவர் பேசியதில், போலீஸ் இலாகாவிலும், ஆலயங்களிலும், தமிழ் இருக்கவேண்டிய இடத்தில் இந்தி திணிக்கப்படும் முறையில் பல உத்தரவுகள் போடப்படுகின்றன என்றார்கள். ஆக, படிப்படியாக தமிழைக் கொண்டுவருவதற்கு மாறாக, படிப்படியாக இந்தியை புகுத்துவதைத்தான் நாம் நேரில் காண்கிறோம். ஆக, சொல் ஒன்று செயல் வேறாக இருப்பதைப் பார்த்து நாங்கள் வருந்துகிறோம். அதேபோன்று, "எந்த மொழியையும் அவர்கள் விருப்பப்பட்டால்தான் படித்துக் கொள்ளவேண்டுமே தவிர நாமாக அவர்கள்மீது பலாத்காரமாக திணிக்கக்கூடாது" என்ற நல்லதொரு வாசகத்தை நேரு பிரான் அவர்கள் "ஆட்சி மொழி பற்றி பிரதம மந்திரி நேரு அவர்கள்" என்பதில் விளக்கிக் கூறியிருக்கிறார்கள். ஒரு மொழியைத் திணிப்பதில் எந்தளவு திணிக்கப்படுகிற மாகாணங்களில் உள்ள மக்கள் அந்த மொழியை வெறுப்பார்கள், அது எந்தவிதமான எதிர்ப்பில் கொண்டு செல்லும் என்பதை ஆருடம்





கூறுவதுபோல் நேரு அவர்கள் சொல்லியிருப்பதை, இன்றைய தினம் நாங்கள் திராவிட நாடு பிரிய வேண்டுமென்று லட்சியம் வைத்துக் கொண்டிருப்போர் அழுத்தந்திருத்தமாக நாங்கள் அதை வரவேற்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர்கள் கூறியிருப்பது, "இந்தியாவின் வட்டார மொழிகள் நாளடைவில் போதனா மொழிகளாக வரப்போகின்றன என்கின்ற இந்த அடிப்படை உண்மையை நீங்கள் கிரகித்துக் கொண்டால் இந்தியாவில் வரப்போகிற புரட்சிகரமான மாறுதலை பற்றி நீங்கள் பாராட்டுவீர்கள். இந்த மாறுதல் நல்லதோ கெட்டதோ அது ஒருபுறமிருக்கட்டும். இது ஏற்பட்டுத் தீரவேண்டிய ஓர் இன்றியமையாத மாறுதல். இதனால் சில அபாயங்கள் ஏற்படும் என்பதை நான் உணர்ந்தாலும், இது விரும்பத்தக்க மாறுதல் என்றுதான் கருதுகிறேன்" என்று கூறியிருக்கிறார்கள். விரும்பத் தக்க மாறுதல் என்று நேரு அவர்கள் சொல்லியிருப்பது எதைச் சுட்டிக் காட்டுகிறது என்றால், அது பற்றி சொல்கிறார், "பிரிவினை உணர்ச்சியினால் ஓரளவுக்கு ஏற்படுகின்ற அபாயங்களைப் பற்றி நான் சொல்கிறேன், அவற்றை நான் உணர்ந்தாலும் இந்தப் பிரச்னையை அலட்சியம் செய்வதால் மட்டும் நீங்கள் அந்த அபாயங்களை ஒழித்து விட முடியாது. என்றைக்காவது ஒரு நாள் அவற்றை எதிர்நோக்கியே ஆகவேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள். "விரும்பத்தகாத மொழித் திணிப்பு பிரிவினை உணர்ச்சிக்கு ஏதுவாகி கட்டாயம் ஏக இந்தியா என்ற அடிப்படை மாறி மாநிலக் கோரிக்கைகள், பிரிவினை உணர்ச்சிகள் தலையெடுத்து விடும்" என்று நேருபிரான் அவர்கள் ஆருடம் கூறியிருப்பது, நாங்கள் கோருவது திராவிட நாடு பிரியத்தான் வேண்டுமென்று, அதற்கு இந்தித் திணிப்பு எங்கள் கோரிக்கையை வலுப்படுத்துகிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பிற மொழி எங்களுக்கு வேண்டாமென்று சொல்லும்போது அதைத் திணிக்கிறீர்கள். ஏன் திணிக்கிறீர்கள் என்று கேட்கும்போது இந்த மன்றத்திலும், வெளியிலும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களும், ஏனையோரும், அகில இந்திய அரசியல் சட்ட அமைப்புப்படி இந்தியை கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். அகில இந்தியா என்று ஒத்துக் கொண்டால் அவர்கள் சொல்கிற கொள்கையை ஏற்றுக் கொள்ளலாம். குறிப்பாக ஆண்டவனிடத்தில்கூட, நாம் ஆண்டவனிடம் சென்று நம் குறைகளை நாம் தமிழிலேயே எடுத்துச் சொல்லி "பகவானே என் குறைகளை நீக்க மாட்டாயா" என்று ஆண்டவனோடு மனம் விட்டுப் பேசக் கூடிய இடத்தில்கூட இவ்வளவு காலமாக வடமொழியில் சொல்லவேண்டுமென்று இருந்தது. இப்பொழுது இந்தியில் இருக்கவேண்டுமா? அகில இந்தியா அரசியல் சட்டத்தை ஒத்துக்கொண்டால் தமிழ் இருக்க வேண்டிய இடத்தில் இந்தி வருவது, நம்மை அறியாமலேயே இந்தி வருவதை நாம் ஒத்துக்கொள்கிறோம். எனவே, இதைக் கைவிட வேண்டுமென்றும், இந்திய அரசியல் சட்டத்தை நாம் மாற்றியமைக்க வேண்டுமென்ற முறையில் எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கு பேசியிருக்கிறார்கள். எனவே இந்திய

[Dr. Srimathi Sathiyavanimuthu] [9th August 1960

அரசியல் சட்டத்தில் இந்தத் திருமணத்தைக் கொண்டுவர சிபாரிசு செய்யுங்கள்.

12 noon. ஆகவே, நேரு பெருமான் அவர்களே இந்தப் பிரிவினையை ஆதரிக்கின்ற முறையில் இருக்கும்போது, இந்த மாநில அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நேரு பெருமான் அவர்கள் வழியில் செல்லுங்கள், அவரது வழிப்படி அவர்கள் சொல்லுவதை ஒத்துக்கொள்ளுங்கள் என்று.

அதே போன்று, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல திட்டங்களை நிறைவேற்றி விட்டோம் என்று கவர்னர் பெருமான் அவர்கள் கூறியிருக்கிறார்கள். என் தொகுதியை பொறுத்த அளவில், இரண்டு சேரிகளை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொண்டார்கள். ஒன்று கிரேநகர், இன்னொன்று வாழைமாநகர். இதுவரை ஒதுக்கப்பட்ட தொகையைவிட அதிகப்படியான தொகையை செலவழித்து விட்டோம் என்று பெருமையோடு சொல்லப்பட்டிருந்தும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொண்ட இந்த இரண்டு சேரிகளையும் சீர்படுத்தவில்லை. அது மட்டுமல்ல, சேரிகளை அபிவிருத்தி செய்யவும், இன்னும் பல மசோதாக்களை கொண்டு வரப் போகிறோம் என்று சர்க்கார் தரப்பில் கூறப்பட்டது. அதே சமயத்தில் இந்த மாநகராட்சி சேரிகளை ஒழுங்காக வைத்திருக்கவில்லை என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கண்ணீருக்குப் பதிலாக செந்நீர் வடித்தார்கள். அது நிஜக் கண்ணீரா வெறும் நீலிக் கண்ணீரா என்பதை 'சாகவில்லை இருக்கிறோம் சாக்கடையில் வாழ்கிறோம்' என்று தினம் சேரியில் உழன்று வேதனைக் கண்ணீர் வடிப்பவர்கள் அறிவார்கள். வெறும் வெத்துக் கண்ணீர் வடிக்கின்றவர்கள் சேரிவாழ் மக்களுக்காக ஒன்றும் செய்யவில்லை, வேண்டுமானால் அவர்களுடைய இந்த நீலிக் கண்ணீர் தேர்தல் காலத்துக்கு ஓட்டுப் பெற பயன்படும் என்று அவர்கள் நினைக்கலாம். இவ்விதம் ஒன்றும் செய்யாமல் இருந்து விட்டு இங்கு வந்து நீலிக்கண்ணீர் விடுவது பேதமையிலும் பேதமை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆட்சி பீடத்திற்கு வந்து 13 ஆண்டுகள் ஆகியும் இதுவரையிலும் சேரிகளுடைய நிலையைச் சீர்திருத்தவில்லை என்றால், அதற்கு என்ன காரணம்? 64 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்துவிட்டு, அதில் 34 லட்சம் ரூபாய் செலவிடப்படவில்லை என்று சொன்னால், சேரிவாழ் மக்களுடைய பணத்தை மிச்சம் பிடித்து வைத்துக் கொண்டு இருப்பார்களானால், இவர்கள் தங்கள் இருதயத்தை இரும்பாக மாற்றி வைத்துக்கொண்டு, அதனை ஏணி மேல் ஏறி பரண் மீது வைத்துவிட்டு இதயமில்லாதவர்களாக பேசுகிறார்களே தவிர, சேரிவாழ் மக்களின் நிலையை உணர்ந்து பேசுபவர்கள் அல்ல. இந்த நிலைமையை இன்னும் நீடித்துக்கொண்டிருக்கமுடியாது, இன்னும் அவர்களை ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. ஆகவே அவர்களுக்காக வேண்டிய திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



9th August 1960] [Dr. Srimathi Sathiyavanimuthu]

அதோடு புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் போது எல்லாப் பிராந்தியங்களிலும், பரவலாக அவற்றை பகிர்ந்தளிக்கும் அவசியத்தை மத்திய அரசாங்கத் திட்டக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்ததே இந்த அரசாங்கம் செய்த மற்றொரு காரியம், என்று கவர்னர் பெருமான் கூறியிருக்கிறார். நாங்கள் நீண்ட காலமாக இம்மாதிரி தொழிற்சாலைகள் ஏற்படும் போது அவைகள் பரவலாக இருக்கவேண்டுமென்று பேசி வந்தோம். அப்போதெல்லாம் எங்களைப்பார்த்து கேலி செய்தார்கள். இன்று தெரிந்தோ தெரியாமலோ நாங்கள் சொன்னதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் வடநாட்டு அரசாங்கத்தின் தூதுவராக இருக்கிற கவர்னர் பெருமான் அவர்கள். இந்த மாநிலத்திலுள்ளவர்கள் எங்களைப்பற்றி எவ்வளவு தான் திரைபோட்டு மறைத்து வைத்திருந்தாலும் கூட டெல்லி தூதுவராய் இருக்கின்ற கவர்னர் பெருமான் அவர்கள் எங்கள் கோரிக்கையை நன்றாக உணர்ந்துதான், தொழிற்சாலைகளை பரவலாக ஏற்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதோடு நம்மிடையே இருக்கின்ற வேற்றுமைகளை மறந்து செயல்பட்டால் நமது காரியங்கள் எல்லாம் நிறைவேற்றப்படும் என்று உறுதியுடன் நம்புவோமாக என்று குறிப்பிட்டிருப்பது, டெல்லி சர்க்கார் எங்கள் குறிக்கோளை உணர்ந்திருக்கிறது, அவர்களிடம் எங்கள் கருத்து வலுவு அடைந்திருக்கிறது என்று மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து தெரிவிக்க சந்தர்ப்பம் தந்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**SRI J. MATHA GOWDER**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையை ஆதரிக்கும் முகத்தான் ஒரு சில கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள், சென்ற டிசம்பர் மாதத்தில் நிகழ்த்திய உரைக்குப் பின்னால் மறுமுறையாக இப்போது நம்மிடத்தில் உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். டிசம்பர் மாதத்திற்கும் இன்றைக்கும் இடையில் எட்டு மாதத்திற்குள் புரட்சிகரமான மாறுதல் ஒன்றும் அவர்களுடைய உரையில் காணப்படவில்லை என்று சொல்லுவதைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது. சாதாரணமாக ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டுமானாலும் கூட 10 மாதங்கள் வேண்டும். அதைக்கூட ஆலோசிக்காமல் எட்டு மாதத்திற்குள் எந்த விதமான மாறுதலும் இதில் இல்லை என்று சொல்லுவதைப் பார்த்து பரிதாபப்பட வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) எட்டு மாதத்தில் பிறக்கக்கூடிய குழந்தை உதவாக்கரை குழந்தையாகத்தான் இருக்க முடியும். அப்பேர்ப்பட்ட உதவாக்கரைக் குழந்தை எங்களுக்குத் தேவையில்லை. மிகவும் நல்ல முறையில் உறுதிடன் இருக்கக்கூடிய குழந்தைகள் பிறக்க வேண்டும் என்று தான் நான் விரும்புகிறேன். உதவாக்கரைகள் வேண்டுமென்று நான் ஆசைப்படவில்லை. அவருடைய உரையில் பரம்பிக்குளத் திட்டம் நிறைவேறுவதற்கு வேண்டிய பேச்சு வார்த்தைகளை நடத்தி கேரள சர்க்காரோடு சுமுகமாக முடிவு செய்திருக்கிறோம் என்று சுட்டிக் காண்பித்திருக்கிறார்கள். சென்ற முறை கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்திய பின்னால், இந்த நாட்டில் ஒரு சில கட்சிகள் வெளியில்

[Sri J. Matha Gowder] [9th August 1960

பல்வேறு விதமான பிரசாரங்களை செய்து கொண்டிருந்தார்கள். கேரள சர்க்கார் தண்ணீர் கொடுக்க மறுத்து விட்டார்கள் என்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். இந்த நிலைமையிலும் சென்னை அரசாங்கம் விவேகமான முறையில் பேச்சு வார்த்தைகளை நடத்தி, அவர்களிடம் நமது சகோதர பாசத்தை ஏற்படுத்திக் கொண்டு சுமுகமான முடிவை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால், ஒரு சில கட்சிக்காரர்கள், காங்கிரஸ் சர்க்கார் என்ன திட்டம் போட்டிருந்தாலும் அவர்களை அந்தத் திட்டத்தை நிறைவேற்ற செய்யாமல் ஆக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, உண்மைக்குப் புறம்பாக துவேஷத்தை பரப்பி வருகிறார்கள். இதன் காரணமாக அண்டை மாநிலத்திலுள்ள மக்களுக்கும் நம் மாநிலத்திலுள்ள மக்களுக்கும் இடையே துவேஷத்தை ஏற்படுத்திவிட்டால், இந்த நாட்டிலுள்ள காங்கிரஸ் சர்க்கார் மீது அவர்களுக்கு வெறுப்பு ஏற்படும்படி செய்து விடலாம் என்ற நினைப்பில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கண் கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் அண்டை ராஜ்யங்களுடன் என்றென்றைக்கும் சகோதர பாசத்தோடு நாம் அனைவரும் நடந்து கொள்ள வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போராட்டம் போராட்டம் என்று சொல்லுகிறார்கள். போராட்டம் எப்படி ஆய்விட்டது என்பதை சமீபத்தில்தான் நாம் பார்த்தோம். போர் எல்லாம் ஆட்டம் கண்டு விட்டது. எந்த ராஜ்யத்தில் யாரோடு நாம் போராடுவது என்பதுதான் இப்போது தெரியவில்லை. மத்திய சர்க்கார் ஊழியர்களின் போராட்டம் சமீபத்தில்தான் ஆட்டம் கண்டது. அதன் பின்னும் நாங்கள் போராட்டம் நடத்துவோம் என்று சொல்லுவதைப் பார்க்கும்போது விசித்திரமாகத்தான் இருக்கிறது. இந்தி மொழியை இந்த நாட்டில் கொண்டு வந்தால் நாங்கள் போராட்டம் நடத்துவோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் ஒரு சிலர். யார், யார் மீது இந்தியைத் திணிக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்தி படிக்கவேண்டும் என்று நான் விரும்பினால் கூடாது என்று சொல்வதற்கு நீ யார் என்று கேட்கிறேன். இந்த நாட்டு மக்கள் இந்தி படிக்கவேண்டும் என்றால் அதை எதிர்ப்பதற்கு நீ யார் என்று கேட்கிறேன்.

**Sri P. U. SHANMUGAM :** ஸார், பாயின்ட் ஆப் ஆர்டர், தங்களைப் பார்த்து அடிக்கடி 'நீ' என்று குறிப்பிடுவது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : It does not refer to the Chair.

**Sri J. MATHA GOWDER :** யார் எதிர்க்கிறார்களோ அவர்களைத்தான் குறிப்பிடுகிறேன்.

**Sri M. KARUNANITHI :** பாயின்ட் ஆப் ஆர்டர், 'நீ' என்று குறிப்பிடுவது மரியாதை தானா?

DEPUTY SPEAKER : I said that it did not refer to the Chair.



9th August 1960]

**Sri J. MATHA GOWDER :** சேரன் செங்குட்டுவன் தமிழில் எனக்குப் பேசத் தெரியாது. எனக்குத் தெரிந்த தமிழில் தான் என்னால் பேச முடியும். கவர்னர் பெருமான் அவர்கள் நேரு அவர்கள் குறிப்பிட்டதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். ஒரு மொழியைப்பற்றி பேசும்போது, அந்த மொழியை புதிதாக கொண்டுவரும்போது அதற்கு எந்த விதமான இடையூறும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு சொல்லுக்கு தமிழ் வார்த்தை கண்டு பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் போய் பழைய வார்த்தையை இப்போது நாம் தேடிக்கொண்டிருக்கிறோம். சைக்கிள் என்ற வார்த்தையை எடுத்துக்கொண்டால், அது மக்களுக்கு இப்போது நன்றாகப் புரிந்திருக்கிறது. அதை விட்டு விட்டு, சேரன் செங்குட்டுவன் காலத்திலுள்ள வார்த்தையை பொறுக்கி எடுத்து துவிச் சக்கர வண்டி என்று வைக்கவேண்டும் என்று சொல்லுகிறோம். இது திடீரென்று ஒருவருக்கும் புரிவதில்லை. இதை விட்டு விட்டு, சைக்கிளினால் இப்போது இருப்பதை விட இன்னும் என்னவெல்லாம் அனுகூலம் ஏற்படும், இப்போது இருக்கின்ற ஃப்ரிவில்-லை மாற்றினால் இன்னும் அதிகமான அளவில் ஏதாவது பயன் கிடைக்குமா என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டால் நன்றாக இருக்கும். அதல்லாமல் துவிச்சக்கர வண்டி என்று எப்படி பெயர் வைக்கலாம் என்பதற்காக பழைய ஏடுகளை புரட்டிக் கொண்டிருப்பது நல்லதல்ல என்பதை மிக மிக வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதை நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். பல நாடுகளின் மொழிகளையும் கற்றுக்கொள்ள நம் நாட்டு மாணவர்களுக்கு—தமிழ் நாட்டு மாணவர்களுக்கு—திறன் இருக்கிறது. நம்முடைய மாணவர்கள் திறன் இல்லாதவர்கள் என்று சொல்லக்கூடிய வகையில் இந்தி வேண்டாம், தமிழ் படித்தால் போதும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். வேறு நாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டு அந்த நாட்டு மாணவர்கள் எந்த ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள், எவ்வளவு முன்னேறிப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று பார்ப்பதை விட்டுவிட்டு வார்த்தையை வைத்துக் கொண்டு பிரித்துக்கொண்டு போகும்போது, அவர்களோடு இருக்கக் கூடிய தொடர்பை அறுத்துக்கொண்டு போகிறோம் என்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு காலேஜில் படிக்கக் கூடிய மாணவர்கள் இந்தியும் படித்து, ஆங்கிலமும் படித்து, தமிழும் படித்தால் அவர்களுக்கு எதிர்காலத்தில் நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறார்கள். இந்தியைப் படிப்பது சரியல்ல என்று ஒரு கட்சிக்காரர்கள் தூண்டும்போது அந்த மாணவர்களுக்கு என்ன இடைஞ்சல்கள் ஏற்படும் என்று புரிந்து கொள்ளவேண்டும். குறிப்பாக 1948-ம் வருஷத்திலே கல்லூரிகளுக்கு சர்க்கார் பணம் கொடுக்கக் கூடாது என்று இன்றைக்கு இந்தி வேண்டாம் என்று சொல்லக் கூடியவர்கள்

கொண்டு இருந்தது உண்மையாக இருந்தால் இந்திய அரசாங்க யந்திரம் ஸ்தம்பித்துப் போயிருக்கவேண்டும். அந்த அளவுக்கு தலையங்கங்கள் எழுதிக்கொண்டு வந்தன. இவ்வாறாக நாட்டினுடைய நன்மையைப்பற்றிக் கவலைப்படாமல் ஆளும் கட்சியினருக்கு எவ்விதமான இடையூறுகளைக் கொடுப்பது என்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

மொழிப் பிரச்னை சம்பந்தப்பட்ட மட்டில் மூன்றாவது பாஷையாக இன்ன பாஷை என்று குறிப்பிடாவிட்டாலும் கூட எல்லா பாஷைகளையும் கற்றுக்கொள்ள வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் இந்திக்கு ஆதரவு அதிகமாக இருப்பதன் காரணமாக அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் மற்ற பாஷைகளைக் குறைந்தபட்சம் கணிசமானவர்கள் படிக்க முன் வரும்போது அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதாகவும் நிதி மந்திரியவர்கள் கூறினார்கள். "இந்தி இங்கே தலை காட்டக் கூடாது; மற்ற எந்த பாஷையாவது வந்து விட்டுப் போகட்டும்; தாங்கள் எதிர்க்கும் இந்தி மொழி இந்த மாநிலத்திலே தங்களால் தடுக்கப்பட்டு விட்டது" என்ற பிரசாரத்தைச் செய்வதற்காக இந்த உபாயத்தை அவர்கள் கையாளுகிறார்கள். இந்தியை மூன்றாவது பாஷையாக அதிகமான பேர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அது அதிகமான பேர் பேசக் கூடிய பாஷையாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பாஷையைப் படிப்பதை ஏன் தடுக்கவேண்டும்? இப்படிப்பட்ட ஒரு குறுகிய மனப்பான்மையுடன் கூடிய கொள்கைகளைக் கொண்ட ஒரு கட்சி தமிழ் நாட்டில் இருப்பது பெரிய துரதிருஷ்டமாகும். இது தமிழ் நாட்டுக்கே பேரவமானமாகும். அத்தகைய முறையில் அவர்கள் குறுகிய எண்ணங்களைத் தங்களுடைய கொள்கைகளாக வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். மருமகள் மஞ்சள் பூசிக் கொள்கிறாள்; கணவனுக்குப் பிரியமாக சிங்காரித்துக் கொள்ளுகிறாள் என்று மாமியார் அவள் மீது பொறாமை கொண்டு "இவள் தாலியறுக்கவேண்டும்; இவள் மொட்டையடித்துக்கொள்ள வேண்டும்; முக்காடு போட்டுக்கொண்டு வர நான் பார்க்க வேண்டும்; என்று குறுகிய மனப்பான்மையில் எப்படிக் கூறுவாளோ அதைப் போல் . . .

**Sri A. GOVINDASAMY:** சட்டசபையில் "கம்மநாட்டி" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது . . .

**DEPUTY SPEAKER:** பேசும்போது அந்த வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாம்.

**Sri R. KRISHNASAMY NAIDU:** அந்த மாமியார் மருமகளை நினைக்கிற மாதிரி என்று சொன்னேனே தவிர ஒரு கட்சியைக் குறிப்பிடுவதாகாது. இந்த நாட்டுக்கு எது நன்மை பயக்கத் தக்கது, எது தீமை பயக்கத்தக்கது என்று ஆராய்ந்து காரியங்களை அணுகுவதாகத் தெரியவில்லை. இவர்கள் நாட்டின் எதிர்கால சுபிட்சத்தை மனதிலே கொள்ளாமல் நாட்டிலே சுபிட்சத்தை



உண்டாக்கவேண்டுமென்ற யோசனையோடு காரியம் ஆற்றாமல் தீமையான செயல்களில் ஈடுபடுவது மிகவும் விசனிக்கத்தக்கது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பல திட்டங்களைப் பற்றி கவர்னர் பெருமான் முக்கியமாக இங்கு குறிப்பிட்டிருந்தார்கள். உணவுப் பொருள்களின் விலை ஏற்றம் பற்றியும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த விலையேற்றத்தைத் தடுப்பதற்கான பல யோசனைகளை இங்கே பேசுகிறவர்கள் கொடுத்திருந்தால் வரவேற்கத்தக்கதாக இருந்திருக்கும். இந்த விலையேற்றம் சம்பந்தப்பட்ட வரையில் நிச்சயமாக நானும் மனக் குழப்பம் அடைந்திருக்கிறேன் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். எதிர்க் கட்சிக்காரர்கள், "இந்த அரசாங்கம் விலையேற்றத்தைத் தடுப்பதற்கான திட்டங்களை வகுக்கத் தவறி விட்டது, இந்த அரசாங்கம் வீண் தம்பட்டம் அடித்துக் கொள்கிறது' என்ற முறையில் பேசக்கூடிய பேச்சுக்கள் உபயோகமற்ற பேச்சுகள் என்று குறிப்பிட விரும்புகிறேன். நல்ல யோசனைகளைக் குறித்துப் பேசுவதில் அர்த்தமிருக்கிறது. அவ்வாறு யோசனைகளை எடுத்துக் கூறிப் பேசாது வெறுமனே இதைச் செய்யவில்லை அதைச் செய்யவில்லையென்று பேசுவதில் உபயோகமில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் இங்குள்ள முக்கிய ஜலதாரங்களில் எல்லாம் அணைக்கட்டுகள் கட்டப்பட்டு பல பகுதிகளுக்கு பாசனத்திற்கு வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இந்த வகையிலும் எதிர்க்கட்சிகள் . . .

**DEPUTY SPEAKER:** உங்களுடைய நேரம் முடிந்து விட்டது.

* **Sri V. K. KOTHANDARAMAN:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையானது, என்னைப் பொறுத்த வரையில் சொல்லவேண்டுமானால், பாராட்டுதலுக்கு உரிய உரையல்ல என்றுதான் சொல்ல வேண்டும். வேண்டுமானால் துதி பாடக் கூடியவர்கள் இந்த உரையை ஆதரித்து, இதைப் போல் உரை வேறு எதுவுமே இல்லையென்று சொல்லலாம். இந்த உரையிலே எடுத்துச் சொல்லப்பட்ட பல அம்சங்கள் இன்றைக்குப் புதிதாகக் கண்டு பிடித்துச் சொல்லப்பட்டவையல்ல. இதற்கு முன்னால் நீண்ட நெடுங்காலமாகக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் சொல்லிக் கொண்டு வந்ததை, "இவர்கள் சொல்வதா, நாங்கள் கேட்பதா"? என்ற நிலையில் இருந்தவர்கள் இன்றைக்கு அவற்றில் சில அம்சங்களை ஒப்புக்கொள்ளக் கூடிய முறையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு நீண்ட காலத்திற்குப் பிறகாவது உண்மையை உணர்ந்தார்களே என்பதற்காகத்தான் பெருமைப்பட வேண்டுமே தவிர மற்றபடி இந்த உரையிலே புதிதாக ஒன்றும் கிடையாது. விலைவாசிகளைக் குறைக்கவேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மட்டுமல்லாது எல்லா எதிர்கட்சிகளும் சேர்ந்து இந்தத் தமிழ் நாட்டிலே கிளர்ச்சி செய்தது. அன்று இதை உணரக்கூடிய சக்தி இந்த அரசாங்கத்திற்கு இல்லை,

[Sri V. K. Kothandaraman] [9th August 1960

அதைத்தான் இன்று கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார். இந்த விலைவாசிகளை என் கட்டுப் படுத்தவில்லையென்று சொல்லக் கூடிய நேரத்தில் மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் ஸ்ரீநிவாச அய்யர் அவர்கள் ரத்தக் கண்ணீர் வடித்தார். "விவசாயிகளைப் பற்றி யாருமே எண்ணிப் பார்க்கமாட்டேன் என்கிறார்கள்" என்று மிகுந்த அனுதாபத்துடன் பேசினார். நான் சொல்கிறேன்—அவர் நிலப் பிரபு, மிட்டா மிராசுதாரர் என்ற நிலையிலிருந்து விவசாயி என்று பார்க்கிறார். நாங்கள் சொல்வதைப் போல் சாதாரண விவசாயிகளுடைய நிலைமை என்ன, விலைவாசி உயர்வின் பலனை அவர்கள் அடைகிறார்களா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். இந்த விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தினால் வியாபாரிகளும், பதுக்கல்காரர்களும் நிலப் பிரபுக்களும்தான் பாதிக்கப்படுவர்.
2-30 p.m. ஆகவேதான், விலைவாசியைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று நாம் சொல்கிறோம். நான்கு வருஷ காலத்தில் இந்த அளவுக்கு விலைவாசி உயர்ந்திருக்கிறதென்றால், அதற்குக் காரணம், பதுக்கி வைத்தது மாத்திரம் அல்ல, மேலும் சொல்லவேண்டுமானால், புதிய நோட்டுகளை அச்சடித்து, அவைகளை எப்படியாவது மார்க்கட்டிலே செலாவணி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு, ஒன்றுக்கு இரண்டு மடங்காக, — ரூ. 20, ரூ. 25 மூட்டை விலை என்றால், ரூ. 50, ரூ 60 என்று விலை கொடுத்து நெல் வாங்கக் கூடிய அளவுக்கும், மிளகாய் வற்றல் வாங்கக் கூடிய அளவுக்கும், கண்மூடித்தனமாக நோட்டுகளைக் கொடுத்து வாங்குகிறார்கள். சர்க்காரிலே எந்த அளவு நோட்டு அடித்தால் நல்ல முறையிலே விலைவாசி இருக்கும் என்று உணராத தன்மையில் மேலும், மேலும் புதிய நோட்டுகளை அச்சடிக்கும் அளவுக்கு இருக்கும் காலத்திலே தான், சர்க்காரைச் சேர்ந்திருக்கும் முதலாளிகளும் அச்சடிக்கிறார்கள் கள்ளத்தனமாக. இதெல்லாம் கூட . . . .

**Sri R. KRISHNASAMY NAIDU:** *சர்க்காரைச் சேர்ந்த எந்த முதலாளிகள் அச்சடித்திருக்கிறார்கள் என்று அவர் தைரியமாகச் சொல்லமுடியுமா ?*

**Sri V. K. KOTHANDARAMAN:** இப்பொழுது பிடிக்கப் பட்டிருக்கிறவர்கள் அத்தனை பேரும் சர்க்காரைச் சேர்ந்தவர்கள். சர்க்காரைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று கனம் அங்கத்தினரால் சொல்ல முடியுமா ?

**Sri R. KRISHNASAMY NAIDU:** *ஒரு பெயரை தைரியமாகக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா ?*

**Sri V. K. KOTHANDARAMAN:** காங்கிரஸ்காரர்கள் தான்.

**Sri R. KRISHNASAMY NAIDU:** *பெயர் என்ன என்று சொல்ல முடியுமா ?*

**DEPUTY SPEAKER:** *கனம் அங்கத்தினர் தொடர்ந்து பேசலாம்.*



9th August 1960]

**Sri M. R. KANDASAMY MUDALIAR:** *நான் சொல்கிறேன், கோயமுத்தூரில் கள்ள நோட்டு அச்சடித்தவர்கள் கம்யூனிஸ்டுகாரர்கள் என்று. இதை நான் தாராளமாகச் சொல்கிறேன்.*

DEPUTY SPEAKER: கனம் அங்கத்தினர் கோதண்டராமன் தொடர்ந்து பேசலாம்.

**Sri V. K. KOTHANDARAMAN:** பகிரங்கமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு உடந்தையாக இன்றைக்கு அதிகாரிகளும் இருந்திருக்கிறார்கள். போலீஸ் அதிகாரி வீட்டிலே 6 லட்சம் சொச்சம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் . . .

DEPUTY SPEAKER: The case is under investigation and the hon. Member need not refer to it further.

**Sri V. K. KOTHANDARAMAN:** இதற்கெல்லாம் காரணம், இன்றைக்கு மாகாண ரீதியிலே அமைச்சர்கள் போகக்கூடிய நேரத்திலே முதலாளிகளுடைய பங்களாக்களிலே தங்கக்கூடிய காரணத்தினாலும், மாகாண அதிகாரிகள் முதலாளிகளுடைய பங்களாக்களிலே தங்கக்கூடிய காரணத்தினாலும்தான் இவர்களுடைய உற்சாகமும், இவர்களுடைய தைரியமும் இருந்துகொண்டு இப்படிக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு கள்ளத்தனமான காரியங்களிலே ஈடுபடக்கூடிய நிலைமை இருக்கிறது. இதைக் குறிப்பாக ஏன் சொல்கிறேன் என்றால், இதைப்போன்ற காரணத்தினாலே விலைவாசி உயர்ந்துக்கொண்டு போகிறது. இதை மூடி மறைப்பதற்குத்தான் இன்றையதினம் இவர்கள் 'கவனிப்பது இல்லை, கொஞ்சம் கூடக் கவலைப்படுவது இல்லை, நாங்கள்தான் கவலைப்படுகிறோம்' என்று இரத்தக் கண்ணீர் வடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறதே, அது எதிர்க்கட்சி சொல்லிக்கொண்டுவந்ததுதானே தவிர, புதியதாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்வது அல்ல. (ஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமி நாயுடு—குறுக்கீடு) உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். அது போல், உண்மையைச் சொன்னவுடனே கவலையாக இருக்கிறது. இதுபோன்று மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய போராட்டம் நடந்த நேரத்திலே, சர்க்காருக்கு உண்மையிலேயே சட்டத்தின் பேரிலே நம்பிக்கை கிடையாது; போலீஸ் பேரிலும் நம்பிக்கை கிடையாது. போலீஸ் பேரில் நம்பிக்கை இருந்தது என்றால், இந்தச் சட்டத்தைத் தலைகீழாக மாற்ற முயற்சிக்க மாட்டார்களே. போலீஸ் இவர்கள் கையில் இருக்கிறது; துப்பாக்கி, தடி இருக்கிறது; அதைத் தாராளமாக உபயோகப்படுத்திப் பாருங்களேன். அதன்பேரில் நம்பிக்கை இல்லாததால் சட்டத்தை மாற்றவேண்டுமென்ற நிலைமை வந்திருக்கிறது. இப்படிப் போராட்டத்தைச் சுமுகமான முறையில் முடித்ததற்குக் காரணம், போலீஸ்காரர்கள். ஆகவே நன்றி என்று சொல்கிறார்கள். என்ன சுமுகமான முறையில் முடிந்திருக்கிறது என்று

விசாரித்துப் பார்த்தால் உண்மை தெரியும். வீட்டிலே நுழைந்து தடியைக்காட்டி ஆண்களையும், பெண்களையும் பதறப் பதற அவர்களை விரட்டி, மிரட்டி, வாயிலே வந்ததையெல்லாம் பேசியிருக்கிறார்கள் போலீஸ்காரர்கள் என்பதற்கு அந்தந்த உத்தியோகஸ்தர்களின் வீட்டிலுள்ள தாய்மார்களைக் கேட்டால் தெரியும். ஆண்டவன் பேரில் பக்தியும் நம்பிக்கையும் இருக்கிறதாகச் சொல்கிறார்களே, அவர்கள், அந்த உத்தியோகஸ்தர்களின் வீட்டில் என்ன வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது போலீசாரால், என்று விசாரித்தால் தெரியும். ஆகவே போலீசாரின் தடிகளுக்கு நன்றி செலுத்துங்கள். அதில் அர்த்தமிருக்கிறது.

**THE HON. SRI P. KAKKAN:** கம்யூனிஸ்டுக் கட்சிக்குத்தான் ஆண்டவன் பேரில் நம்பிக்கை இல்லையே.

**SRI V. K. KOTHANDARAMAN:** எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, ஆண்டவன் பேரில் நம்பிக்கை இருக்கிறதாகச் சொல்லக்கூடியவர்கள், அந்தப் பெயரைச் சொல்லி ஏமாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதற்காகத் தான் குறிப்பிடுகிறேன். ஆகவேதான், இவ்வளவு மோசமான நிலைமையில் போலீஸ்காரர்கள் அவர்களை அடக்கி ஒடுக்கினதற்கு நன்றி என்று சொல்லலாமே தவிர, மற்றபடி சுமுகமான முறையில் நடக்கவில்லை.

ஹரிஜன ரட்சகர்கள், ஹரிஜன மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக வேண்டி, எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் பார்த்தீர்களா என்றும், வீடு கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்றும் சொல்லக் கூடிய நமது சர்க்கார் இன்றைய தினம் நமது சர்க்கார் சிப்பந்திகளுக்கு என்று சம்பளக் கமிஷன் நியமித்திருக்கிறது. அந்தச் சம்பளக் கமிஷன் என்ன அறிக்கை தந்திருக்கிறது? ஸ்தல ஸ்தாபனங்களில் வேலை செய்யக்கூடிய சிப்பந்திகளுக்கு எந்த அளவு சம்பளம் என்பதைப் பார்த்தால், 'மினிஸ்டீரியல் ஸ்டாப்' தவிர மற்றவர்கள் அத்தனை பேருக்கும் இந்த சென்னை சர்க்கார் ஊழியர்கள் சம்பளம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், நம்மை நல்ல முறையில் ஆரோக்கியமாகவும், நமக்கு எந்த நோய் நொடியும் வராமல் நாம் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதற்காக மல ஜலங்களை அள்ளும் நகரசுத்தித் தொழிலாளர்களைப்பற்றி சம்பளக் கமிஷன் அறிக்கையிலே என்ன சொல்லியிருக்கிறது? அவர்கள் முழு நேர ஊழியர்கள் அல்ல என்றும், அவர்கள் பகுதி நேர ஊழியர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். ஐந்து வருஷ சர்வீசுக்கு மேல் இருந்தால் அவர்களை முழு நேர ஊழியர்களாக்குங்கள் என்கிறார்கள். ஸ்தல ஸ்தாபனங்களின் நிதி நிலைமை சரியில்லை என்று சொல்கிறார்கள். சாதாரணமாக ஒரு சர்க்கார் ஊழியருக்குக் குறைந்த பட்சம் 60 ரூபாயாவது சம்பளம் இருக்க வேண்டுமென்கிறது. அவர்களைப்போல், நகரசுத்தித் தொழிலாளர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கும் வயிறு ஒன்று தான்.



அவர்களுக்கு ஐந்து ரூபாய் கொடுக்கவேண்டும் என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறது. 60 ரூபாய்க்குக் குறைவு இல்லாமல் மாதச் சம்பளம் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்தல ஸ்தாபனங்களில் பணம் இருக்கிறதா இல்லையா என்ற பிரச்னை வரக்கூடாது. அவர்களிடம் பணம் இல்லையென்றால், மாகாண சர்க்கார் கொடுக்க வேண்டும். மாகாண சர்க்காருக்கு நிதி நிலைமை மோசமாக இருக்கிற நேரத்தில் எப்படி மத்திய சர்க்காரிடத்திலே கேட்டு வாங்குகிறார்களோ அதுபோல் இந்த சர்க்கார் அந்த ஸ்தல ஸ்தாபனத்திற்குக் கொடுத்து உதவி செய்யவேண்டும். அந்த முறையிலே இன்றைக்கு ஹரிஜன மக்களுக்கும் நகரசுத்தித் தொழிலாளிகளுக்கும் 60 ரூபாய்க்குக் குறையாத சம்பளம் கொடுப்பதற்கான ஏற்பாட்டை உடனடியாகச் செய்யவேண்டும். அப்படிக் கொடுக்காமல் மத்திய சர்க்கார் சிப்பந்திகளைத் தடியால் அடித்து அடக்கிவிட்டோம் என்று சொல்லி நகரசுத்தித் தொழிலாளிகளை, தாழ்த்தப்பட்ட தொழிலாளிகளைத் தடியால் அடித்தால், மலத்தால் அடிப்பேன் என்று சொல்லிக் கண்டிப்பாகச் சமாளிக்கக்கூடிய அளவுக்குத் தொழிலாளிகளுக்குச் சக்தி உண்டு.

**THE HON. SRI P. KAKKAN:** பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். கனம் அங்கத்தினர் அவர்கள், 'தடியால் அடித்தால் மலத்தால் அடிப்பார்கள்' என்று சொல்லி, தப்பான எண்ணத்தை உண்டு பண்ணுகிறார்கள் இந்தச் சபையில் இவர்கள்தான் தொழிலாளிகளுக்கு வழிகாட்டக் கூடிய தலைவர்களா என்று கேட்கிறேன்.

**SRI V. K. KOTHANDARAMAN:** இது 'அன்பார்லமெண்டரி' வார்த்தை அல்ல. 'பார்லிமெண்டரி' வார்த்தை தான். இதில் ஒன்றும் தப்பே கிடையாது.

**SRI M. R. KANDASAMY MUDALIAR:** தலைவர் அவர்களே, சபையிலே பேசக்கூடிய நேரத்தில் ஒழுங்கு தவறிப் பேசக்கூடாது என்று சட்டசபை விதி இருக்கிற நேரத்திலே 'மலத்தால் அடிப்பார்கள்' என்று ஒரு கனம் அங்கத்தினர் பேசுவது யோக்கியப் பொறுப்புடனும் கண்ணியமான முறையிலும் பேசக்கூடிய பேச்சா என்று அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER: அது தவறான வார்த்தை அல்ல என்றாலும், அவர் உபயோகப்படுத்தியது தவறு என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**SRI M. R. KANDASAMY MUDALIAR:** அந்த வார்த்தையை அவர் வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டும்.

**DEPUTY SPEAKER:** அந்த வார்த்தை 'அன்பார்லிமெண்டரி' அல்ல. அந்த வார்த்தையை அவர் உபயோகப்படுத்தியது தவறு.

**SRI V. K. KOTHANDARAMAN:** பட்ஜெட் உரையில்கூட 'மலம்' என்ற வார்த்தை வந்திருக்கிறது. நான் அந்த வார்த்தையை உபயோகித்தது தப்பானால், பட்ஜெட் உரையில் நிதி

[Sri V. K. Kothandaraman] [9th August 1960

அமைச்சர் அவர்கள் 'மலம்' என்ற வார்த்தையை உபயோகித்ததும் தப்பாக இருக்கவேண்டும் என்பதையும் அவர்கள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஆகவே, ஏழை நகரசுத்தித் தொழிலாளிகளுக்குக் குறைந்த பட்சம் 60 ரூபாய் சம்பளமாவது கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: நேரம் ஆகிவிட்டது. இப்பொழுது திரு. நாகராஜ மணிகார் பேசுவார்.

SRI M. R. KANDASAMY MUDALIAR: பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார். கனம் அங்கத்தினர் பேசிய நேரத்திலே கள்ள நோட்டு விஷயமாகக் குறிப்பிட்டார். ஆனால், உலகமே போற்றக் கூடிய உத்தமமான ஆட்சி நடந்ததாகச் சொல்கிறார்களே அந்த மலபார் ராஜ்யத்திலே, திரு. நம்பூதிரிபாத் காலத்திலே அங்கிருந்து வந்த கள்ள நோட்டு . . . .

DEPUTY SPEAKER: மலபார் ராஜ்யத்தைப்பற்றிப் பேச வேண்டியதில்லை.

SRI V. K. KOTHANDARAMAN: அதற்கு நான் பதில் சொல்கிறேன்.

DEPUTY SPEAKER: Let the hon. Member resume his seat. Now, the hon. Member, Sri Nagaraja Monigar will speak.

* SRI S. NAGARAJA MONIGAR: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைக்காக அவருக்கு வந்தனம் தெரிவிக்கும் முறையில் உள்ள தீர்மானத்தை ஒட்டி நானும் இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறேன். மேலும் மேலும் வந்தனம் செலுத்தவேண்டும் என்று கூட நான் ஒரு திருத்தம் சொல்வேன். ஆனால், அதற்குரிய காலம் நேற்றே சென்று விட்டது. ஏன் மேலும் வந்தனம் செலுத்தவேண்டுமென்றால், கவர்னர் பெருமான் அவர்கள் அந்த நிலையிலே இங்கே பதவி வகித்து சேவை செய்து வருகின்றார். இந்த நாட்டிற்கு விடுதலை கிடைத்து, 13 வருஷங்கள் ஆகியிருக்கிறது. இந்தியா பூராவுமே குறிப்பாக நமது ராஜ்யமும் திட்டமாக, அமைதியோடு, காந்தீய வழியில் முன்னேறிக்கொண்டிருக்கும்போது, இதைக் கண்டு அன்னியர்களெல்லாம் வியப்புறுகிற போது, இங்கே உள்நாட்டிலே நிலைமை சற்று சரியில்லை; சனி, ராகு, கேதுக்கள் என்று சொல்லலாம். ராகு காலத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஆகையால், நான் கூறுவது மிகப் பொருத்தம் என்று நினைக்கிறேன். கொசுக் கடி, மூட்டைப் பூச்சிக் கடி, தேள் கடி, பாம்புக் கடியாக மாறி இங்கே நிலைமை கஷ்டத்திலே இருக்கிறது. ஒரு சாரார் உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பதுபோல், வெளிநாட்டார் எப்படி நம்மை நினைத்தாலும், நிலைமையை மறந்தோ என்னவோ இன வெறி, ஜாதி வெறி, தமிழ், ஆந்திரம் என்று பேசி, ஜாதி வகைகளையெல்லாம் மனுவோ, ஆரியர்களோ, பிராமணர்களோ புகுத்திவிட்டார்கள் என்று சொல்லி அடுத்த நிமிஷத்திலேயே எவ்வளவு ஆழமாக



9th August 1960] [Sri S. Nagaraja Monigar]

தமிழ், தமிழர்கள், தமிழ் ஜாதி என்ற ஜாதி வெறியையும் இன வெறியையும் புகுத்த முடியுமோ அதிலே முனைந்துவிட்டிருக்கிறார்கள். 'கிரௌடிங்' என்று பி.டபிள்யூ.டி-யில் ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். சாதாரணமாக அணை முதலானவைகள் கட்டும் பொழுது அஸ்திவாரம் போடும்பொழுது பாறையைச் சுற்றி கெட்டியாக இருக்கின்ற அளவிலே ஒரு துளை போட்டு அதிலே பொறைகள் இருந்தால் சிமெண்டை கரைத்து அதிகமான பிரெஷர் வைத்து எங்கெல்லாம் செல்லுமோ அங்கெல்லாம் போகுமாறு அதிலே வேலை செய்து உள்ளே செலுத்துவார்கள். அந்த அளவுக்கு ஆழமாக ஜாதி வெறி, இனவெறி இந்த நாட்டிலே வளர ஒரு சாரார் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு சாரார் அகில உலக தேசீயவாதிகள். அவர்களுக்கு இந்தியாவே போதாது. அவர்களோ எங்கு சண்டை கிடைக்கும், சந்து கிடைக்குமோ என்று பார்ப்பவர்கள். தங்களுடைய கட்சிக் கொள்கையில் வெற்றி பெறாதவர்கள், மற்றவர்கள் வண்டியிலே ஏறிக்கொண்டே எப்படியோ போகவேண்டிய இடத்தை அடைந்து விடலாம் என்று பார்க்கிறவர்கள். சமீபத்தில் பிரஜா சோஷலிஸ்டு கட்சியிடம் இந்த வேலையை ஆரம்பித்தார்கள். அவர்கள் அதை ஆரம்பித்தார்களோ அல்லது வேஷம் போட்டார்களோ? அதிலே இன்னொரு சாரார் அவர்களுடைய கைவரிசையைக் காட்டினார்கள். சுதந்திர கட்சி போன்று புதிய கட்சிகள் மூலம் தங்களுடைய காரியங்களை சாதிக்க முடியுமா என்று பார்க்கிறார்கள். இம்மாதிரி நிலையிலே ஜாதி வெறி, இன வெறியில் இறங்குவது உண்மையிலே தெரியாமல் செய்தால் பரவாயில்லை. அதைத் தெரிந்தே செய்வார்களேயானால் அதைவிட தமிழ் நாட்டிற்குச் செய்யவேண்டிய புண்ணிய கைங்கரியம் என்ன இருக்கும்? எந்த வள்ளுவர் சொன்னார்? எங்கிருந்து இது வந்தது? நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதற்கு மேலே அரசியல் முறைக்கு போனால் கவர்னர் எங்களுக்கு வேண்டியதில்லை என்று சொல்வதை பார்க்கிறோம். அங்கிருந்து ஒரேயடியாக கீழ் மட்டத்திற்கு இறங்கி இனவெறி, ஜாதி வெறி, வடக்கத்தியான், தெற்கத்தியான் விஷயத்தில் புகுந்துவிடுகிறார்கள். கவர்னரை எங்களுக்கு பிடிக்காது, அதனால் அவர் உரையைக் கேட்க வருவதில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் பின்னாலேயே அவர்களுடைய உரையைப் பற்றி பேசுகிறபொழுது வந்து கலந்துகொண்டு விவாதத்தில் பங்கு கொள்ளுகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், பெண்டாட்டி பிடிக்காது, ஆனால் அவள் செய்த கொழம்பு, ரசம் இவைகள் நன்றாக இருக்கின்றன, அல்லது சாம்பாரில் உப்பு இல்லை, ஹல்வாவில் நெய் இல்லை இன்னும் கொஞ்சம் கொண்டுவா சாப்பிட்டு பார்த்து சொல்கிறேன் என்று சொல்லி சாப்பிடுவது போல் இருக்கிறது. கவர்னர் உரையின்மீது விவாதத்தில் கலந்து கொண்டு அந்த பிளாக் வேண்டும், இந்த ரோடு, கிணறு வேண்டும் என்று கேட்கிறார்கள். இம்மாதிரி தமிழர், திராவிடர், ஆரியர் என்று இருந்திருப்பார்களா என்று ஒன்றுமே என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழர் யார், திராவிடர் யார், ஆரியர் யார் என்று நிர்ணயம் செய்து கூற இங்கு யார் இருக்கிறார்கள், எப்பொழுது பேசப்போகிறார்கள் என்பதையும் நான் புரிந்துகொள்ள முடியவில்லை.

[Sri S. Nagaraja Monigar] [9th August 1960

உறுதி மொழி இங்கு எடுத்துக்கொண்டார்கள். இத்தகைய நிலைமையிலே கவர்னர் பெருமான் அவர்கள் வடக்கிலிருந்து இங்கு வந்தாலும், அது காரணமில்லை, வடக்கத்தியார் என்ற முறையில் ஜாதி பேதமில்லை, கவர்னர் என்ற ஸ்தானம் இருக்கவேண்டியதில்லை என்று சொல்லுவார்கள். இத்தகைய நடவடிக்கைகளை எல்லாம் அவர்கள் பொறுத்துக்கொண்டு பணியாற்றுகிறார்கள். சுயராஜ்யம் வாங்கிய பழுத்த பெரிய பிரமுகர்களில் அவர்களும் ஒருவர். அஸாம் மாகாணத்திற்கு வேண்டி மாத்திரம் அவர் தியாகம் செய்யவில்லை. தமிழ் நாட்டிற்கு சுதந்திரம் வேண்டுமென்று மாத்திரம் தமிழர்கள் தியாகம் செய்யவில்லை. ஒரு நாடு பூராவிற்கும் சுதந்திரம் வேண்டுமென்று தியாகம் செய்தார்கள். எந்த இராஜ்யமாவது தங்களுக்கு மாத்திரம் சுதந்திரம் வேண்டுமென்று தியாகம் செய்திருந்தால் நாட்டிற்கு சுதந்திரமே கிட்டியிருக்காது. அன்றைக்கு எல்லோரும் ஏகோபித்து வாங்கிய சுயராஜ்யம் இது. இன்று எதிர்ப்பு அவர்களுடைய பேசுகின்ற குழந்தைகளை உள்ளே புகுத்தி அவர்களுக்கு வோட்டு வாங்கிக்கொடுத்து அவர்கள் பெண்டாட்டி பிள்ளைகளுக்கு ஓட்டு வாங்கிக் கொடுத்து இங்கே வாழ வைத்திருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பொறுமையோடு உரை ஆற்றியிருப்பதற்கு மேலும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழர், திராவிடர் என்ற சொற்கள் இந்த நாட்டிலே சுற்றி சுற்றி வருகின்றன. 'மரத்தை மறைத்தது மாமத யானை, மரத்தில் மறைந்தது மாமத யானை' என்று சொல்லுவது போல் இருக்கிறது. தமிழர் என்று சொல்லுவது அவசியம் இல்லாதபோது அதை திராவிடர் என்று எடுத்துக் கொள்ளுகிறது. திராவிடர் வேண்டாமென்றால் தமிழர் என்று எடுத்துக்கொள்ளுகிறது. ஒன்றிலும் நம்பிக்கை இருப்பதாக நிச்சயமாக தெரியவில்லை. அதைப்பற்றி ஆதாரங்கள் சொல்லுவதற்கு இங்கு நேரம் போதாது. தமிழர்கள், திராவிடர்கள் என்பது சைனு பஜார், மவுண்டு ரோடுகளில் படம் விற்பார்கள். ஒரு பக்கம் பார்த்தால் லக்ஷ்மி தெரியும், மறு பக்கம் பார்த்தால் சரஸ்வதி தெரியும். அதை கிராமப்புறத்திலிருந்து வருபவர்கள் பார்த்தால் ஆச்சரியப்படுவார்கள். தமிழர்கள், திராவிடர்கள் என்று கலந்து பேசுவதெல்லாம் இப்படி ஏமாற்றுகின்ற வித்தை, கண்ணுடி செப்பிடு வித்தை. பிறர் ஆள்கிறார்களே என்று வயிற்று எரிச்சல். வேறு வழியில்லாமல் எப்படியாவது சர்க்காரில் புகுந்து கொள்ள முடியுமா என்று பார்க்கிறார்கள். ஒற்றுமையாக உள்ள நாட்டை துண்டாட வழி செய்தால் வாழ முடியாமலே போய்விடுவார்கள். குமரி முதல் இமயம்வரை கொடி நாட்டினார்கள் என்று சொல்லக்கூடியவர்கள், 'நன்றி மறப்பது நன்றன்று' என்று இருப்பதை 'நன்றி மறப்பது நன்று என்று' என்பதாக அதை திருத்தவேண்டிய பாணியில் இருக்கின்றார்கள். அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன், ஒற்றுமையிலிருந்து பிறழாமல் அல்லவா இருக்கவேண்டும். தன்னைச் சுரண்டுகிறார்கள் என்று சொல்லி பிறரை கன்னத்தில் திருப்பி அடிப்பது என்பது தமிழ் நாட்டுப் பண்பு ஆகாது. சுரண்டப்படமாட்டோம், சுரண்டப் படக்கூடிய அளவுக்கு நாம் பேடிகள் அல்ல என்பதையும் மறந்துவிடக்கூடாது. மொழி சம்பந்தமான வெற்றிக்கு நாங்கள்



9th August 1960] [Sri S. Nagaraja Monigar]

தான் காரணம் என்று சிலர் சொல்லுகிறார்கள். கம்யூனிஸ்டு அவர்கள்தான் காரணம் என்று சொல்லுகிறார்கள். ஸி. ஆர் அவர்கள்—அவருக்கு வயது ஆகிவிட்டது.

(Expunged as ordered by the Chair.)

போக மேலும், கவர்னர் அவர்கள் உரையிலே பல விஷயங்களைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் ஒன்று சொல்லுவேன். காந்திய முறை சிக்கன வாழ்வை கடைப்பிடிக்கவேண்டும். நீர்ப்பாசனம் போன்ற திட்டங்களைத்தவிர, பெரிய கட்டிடச் செலவுகளை சர்க்காரே குறைத்து, சினிமா முதலான வகையிலே பணம் அதிகமாக செலவழிப்பதை நாமும் நிறுத்தி, எளியோர் பலனடையும்படியான திட்டங்களை மேற்கொள்ளவேண்டும். 'ஸ்மால் ஸ்கேல் சேவிங்ஸை' சர்க்கார் துரிதப்படுத்த ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுயராஜ்யம் வாங்கிக்கொடுத்த பிறகு, நாட்டு மக்கள் ஒற்றுமையோடு இருந்து ஒன்றாக வாழ்வதற்கு நண்பர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. P. SARATHI : சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையின் மீது, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கவர்னர் உரையில் மத்திய அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் சமீபத்தில் தோன்றிய நெருக்கடி நாட்டுக்குப் பெரும் கெடுதி எதையும் விளைவிக்காமல் சுமுகமாக முடிவடைந்ததைப் பற்றியும் தன்னுடைய பெருமையையும் சந்தோஷத்தையும் அடைந்து தன் உரையை ஆரம்பித்திருக்கிறார்கள். அதே உரையில் விலைவாசி ஏறிவிட்டது. அதை நம்மால் கட்டுப்படுத்த முடியாது. ஆகையினால், மத்திய சர்க்காருக்கு யோசனை சொல்லியிருக்கிறோம் என்றார்கள். இந்த மத்திய சர்க்கார் ஊழியர்களின் யூனியன்கள் சர்க்கார் விதிப்படி ஏற்பட்டவை; இந்த யூனியன்களை சர்க்கார் அங்கீகாரம் செய்திருக்கிறது. அப்படி இருந்தும், அவர்கள் விதிப்படி செய்யும் வேலை நிறுத்தத்தை அடக்கி விட்டு, அது சுமுகமாக முடிவடைந்தது என்று பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கூடிய காரியமா அது? அதுவும் ஒரு அரசாங்கத்திற்கு, அதிலும் ஜனநாயக அரசாங்கத்திற்கு பொருந்துமா? என்று கேட்க விரும்புகிறேன். அது சர்வாதிகார ஆட்சிக்கு உகந்ததாக இருக்குமே தவிர, ஒரு ஜனநாயக ஆட்சிக்கு உகந்ததில்லை. சர்க்காரே அங்கீகரித்த யூனியன் செய்யும் காரியத்தை ஒரு அவசரச் சட்டம் போட்டு, ஊழியர்கள் ஸ்ட்ரைக் செய்யக் கூடாது என்றும், செய்தால் அபராதமும், வேலையை விட்டு நீக்கப்படுவார்கள் என்றும் ஷரத்துக்களைப் போட்டு உருவாக்கி, சர்க்கார் ஊழியர்கள் பேரில் பழி வாங்குவது பற்றி சந்தோஷப்பட ஒரு சர்க்காருக்கு என்ன நிலை இருக்கிறது? நான் வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். அந்த வேலை நிறுத்தத்தை போலீசாரே அடக்கி விட்டார்கள் என்று நினைக்கவில்லை. மூன்றாந்தர, நான்காம்தர காங்கிரஸ்காரர்கள், சர்க்காரில், நாங்கள் வேலை செய்கிறோம் என்று சொல்லி, வீடுவீடாக, தபால் கடிதங்களை பட்டுவாடா செய்தார்கள். அவர்கள் ரொம்பக் கீழ்த்தரமாக நடந்திருக்கிறார்கள். எனக்கு வரும் தபாலை ஒரு

[Sri M. P. Sarathi] [9th August 1960

காங்கிரஸ்காரர் பிரித்து பார்க்காமல் என்னிடம் கொடுப்பாரா? அவ்வளவு கீழ்த்தரமான முறையிலே ஒரு சர்க்கார் போய்க் கொண்டிருந்தால், எந்த விதத்தில் நல்ல முறையில் காரியங்கள் நடைபெறும்? ஒரு ஸ்ட்ரைக் செய்த ஊழியரின் வீட்டில் இரவில் 2 மணி, 3 மணிக்கு சென்று, கதவைத் தட்டி, எங்கே என்று கேட்டார்கள். இல்லை என்றதும், அவரை ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லுங்கள், என்று பயமுறுத்தி, தாய் தந்தையரை போலீசாருடன் சென்று காங்கிரஸ்காரர்கள் பெரிய மனிதன் என்பவர்கள், ஊழியரின் மனைவி, தாய், தந்தையரை அச்சுறுத்தி இருக்கிறார்கள். இதுதானா உங்கள் ஆட்சி, இதற்காகவா ஒரு கவர்னர் சந்தோஷப்படுகிறது என்று கேட்கிறேன்.

ஆட்சி சம்பந்தமாக, 1959-ம் ஆண்டிலேயே, நமது பிரதம மந்திரி இந்திய மொழிா கொள்கைபற்றிப் பேசிய பேச்சும், அரசியல் அமைப்பின் 344-வது பிரிவின்படி ஜனாதிபதி மேற்படி கொள்கை அடிப்படையில் வெளியிட்ட உத்தரவும் மொழி பற்றி தொல்லை தரும் பிரச்சினைக்கு முடிவு கண்டுள்ளன, என்று கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு முடிந்து விட்டதா? கவர்னர், எப்படி முடிந்துவிட்டது, அதுதான் முடிவு, என்று கூறுகிறார்? 1965-க்குப் பிறகு தான் ஹிந்தி வரும் என்றால், இப்பொழுதே ஏன் ஒவ்வொரு கடிதத்திலும், போஸ்ட் ஆபீசிலும், ரெயில்வேயிலும், கார்டு, கவர் போன்றவைகளிலும் ஹிந்தியிலே தானே இருக்கிறது. அமைச்சர் பெருமையாகச் சொல்கிறார்கள் தமிழைக் காப்பாற்றுவதில், மற்றவர்களை விட நாங்கள் குறைந்தவர்கள் இல்லையென்று. அவர்கள் , ஒரு கடிதத்திலாவது, தமிழைப் போடக்கூடிய ஒரு நிலையைச் செய்திருக்கிறார்களா? ஏன்? அந்த மனப்பான்மை வரவில்லை. எஜமானன் கோபிப்பார்களே என்று அவர்களுக்கு இவர்கள் தாளம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பாவம் என்ன செய்வார்கள். சிறு குழந்தைகள் உடல் பயிற்சிக்காக ஏ.சி.சி., என்.சி.சி. போன்றவைகளில் ஹிந்தியில்தான் "-பேரேடு" சொல்கிறார்கள். அது 1965-ல் வந்தால் வந்து தொலைந்து போகட்டுமே. இப்பொழுதே ஏன் இந்தத் தொல்லை என்று கேட்கிறேன். அப்போது பார்த்துக்கொள்ளலாம்.

விலைவாசி உயர்வு பற்றி கவர்னர் உரையில் இதற்கு என்ன காரணம் என்றும், நம்மால் கையால் ஆகாது, மத்திய சர்க்காருக்கு யோசனை சொல்லியிருக்கிறோம் என்கிறார்கள். முதலீடு செய்யும் விகிதம், தொழில் கொள்கை, இறக்குமதிக் கட்டுப்பாடுகள், கலால் தீர்வைகள், கடன் நிபந்தனைகள் முதலிய அம்சங்கள் தான் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் என்கிறார்கள். இந்த சின்ன சர்க்கார், அந்தப் பெரிய சர்க்காருக்கு யோசனை சொல்கிறது. ராஜாஜி நோட்டு அடிப்பதைப் பற்றி சொன்னார்கள். இதுவும் ஓர் யோசனை. இந்த சர்க்கார் அந்த சர்க்காருக்கு யோசனை சொல்கிறது. அந்த அளவில்தான் நம் சர்க்கார் யோசனை சொல்ல முடியுமே தவிர, நாம் தீவிரமாக இன்னதுதான் செய்ய வேண்டுமென்று கட்டுப்படுத்த முடியாது.



9th August 1960] [Sri M. P. Sarathi]

தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது பற்றிப் பேசவேண்டுமானால், ஒவ்வொரு பட்ஜெட்டிலும், நெய்வேலியைப் பற்றி குறிப்பிடுகிறோம். இந்த உரையில் அலுமினியம் தொழிற்சாலை இத்தாலிய உதவியுடனும், பிரஞ்சுக்காரர்கள் உதவியில் கச்சா பிலிம் தொழிற்சாலையும், ரஷ்ய உதவியுடன் அறுவைக்கருவிகள் தொழிற்சாலையும் நிறுவுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் வெளிநாட்டாரின் உதவிகொண்டு செய்வதாக இருக்கிறது. ஒரு வெளிநாட்டானை வைத்துக் கொண்டே அவதிப்பட்டுவிட்டு, அவனைத் துரத்திவிட்டு, இப்பொழுது பலவெளி நாட்டார்களின் பிடியில் அகப்பட்டுக் கொள்வது உகந்த விஷயமா? மத்திய சர்க்காருடைய உதவியில் என்னென்ன செய்யப் போகிறார்கள் என்று சொல்லி பெருமை அடித்துக் கொள்ள என்ன இருக்கிறது? தூத்துக்குடி துறைமுக சம்மந்தமாக அன்று முதல் அமைச்சரவர்கள அது கண்டிப்பாக மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப் படும் என்று சொன்னார்கள். நாங்களும் சந்தோஷப்பட்டோம். ஆனால், மறு நாளே, மத்திய சர்க்கார் உதவி மந்திரியொருவர், பணமில்லை, எடுப்பது சந்தேகம் என்று சொல்கிறார். இதை இன்று பத்திரிகையில் பார்க்கிறோம். ஆகவே, நாம் சொல்லி கண்டிப்பாகச் செய்யச் சொல்ல என்ன இருக்கிறது? நாம் ஒன்றும் அநியாயமாகச் சொல்லவில்லை. நியாயமான முறையிலே, நம் தேவையைக் கண்டிப்பாகச் செய்யவேண்டும் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மூன்றாவது திட்டத்திற்கு, கவர்னர் சர்வ கட்சித் தலைவர்கள் கூடி அதன் மூலமாக என்னென்ன வேண்டுமென்று யோசனை கூறுங்கள் என்று சொல்லி முடித்திருக்கிறார்கள். இங்கே எங்கள் அண்ணா ரூபாய் 1,000 கோடிக்குத் திட்டம் சொன்னால், நிதியமைச்சரவர்கள், வெளியில் சென்று பண்டாரம் கதை சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். இப்படிப் பெரிய பண்டாரம், சின்ன பண்டாரம் கதை சொல்ல ஆரம்பித்தால், திட்டம் எப்படி உருப்படும்? அதைப் பார்த்தால் ரொம்ப வேதனையாக இருக்கிறது.

அடுத்தபடியாக மின்சாரத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இங்கே மின்சார அமைச்சரவர்களும் இருக்கிறார்.

வேலூருக்கு அடுத்தாற்போல் ஒன்றிரண்டு மைல்களில் ஊசூர், அரியூர், பூதூர், அத்தியூர் போன்ற கிராமங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை. ஆனால் பக்கத்திலுள்ள டவுன்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. கவர்னர் அவர்கள் உரையில் அநேகம் கிராமங்களுக்கு மின்சாரம் சப்ளை செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆகவே இந்த கிராமங்களுக்கும் மின்சாரம் சப்ளை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பக்கத்திலுள்ள டவுனுக்கு மின்சாரம் வரும்போது இந்த கிராமங்களுக்கு மின்சாரம் சப்ளை செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. அங்கு தனிப்பட்ட கம்பெனி இருப்பதுதான் காரணமோ என்னமோ தெரியவில்லை. அங்கு சந்திரி கம்பெனி என்ற தனிப்பட்ட கம்பெனி ஒன்று மின்

[Sri M. P. Sarathi] [9th August 1960

சாரம் சப்ளை செய்து வருகிறது. அவர்களைக் கேட்டால் தங்களிடம் பணம் இல்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு கடன் வழங்கியாவது உடனடியாக அந்த கிராமங்களுக்கு மின்சாரம் சப்ளை செய்யச்சொல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI V. SANKARAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் உரையில், தமிழ் நாட்டில் இன்றைய நிலை என்ன, என்னென்ன தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன, என்னென்ன தொழிற்சாலைகள் ஆரம்பிக்க இருக்கின்றன, என்னென்ன வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, என்னென்ன திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ராஜ்யத்தில் சாதித்திருக்கக்கூடிய வேலைகள் அவ்வளவையும் சொல்லா விட்டாலும் குறிப்பாக சுருக்கமாக என்னென்ன நடைபெற்று இருக்கின்றன என்பதைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. என்னென்ன திட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்னென்ன
·00 .m. திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றியெல்லாம் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி, மின்சாரம், இன்னும் மற்றவைகளில் இந்த மாநிலம் மற்ற மாநிலத்தைக் காட்டிலும் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருக்கிறது, எவ்வளவு வேலைகளைச் செய்திருக்கிறது என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாநிலம் சரியான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் என்னென்ன தொழில்களை ஆரம்பித்தால் வாழ்க்கைத்தரம் உயரும் என்றும் அதற்குத்தக்கபடி தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருப்பதையும் அவர் சொல்லியிருக்கிறார். அத்துடன் பருவ மழை சரியாக இல்லை என்பதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். இது சம்பந்தமாக நாம் ஒன்றை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். உணவு பொருள்களின் விலை இப்பொழுது அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. அது பொது மக்கள் வாங்கக் கூடிய அளவில் விற்கப்படவேண்டும். நாம் எவ்வளவு திட்டங்களைப் போட்டாலும் அவற்றை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்தாலும் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களின் விலை குறைவாக விற்றால் தான் நாம் போடக்கூடிய திட்டம் அவர்கள் அனுபவிக்கக்கூடிய நிலைமையில் நிறைவேற முடியும். ஆகவே பொது மக்கள் வாங்கக் கூடிய உணவுப் பொருள்களுடைய விலையைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நாம் செய்து வரும் அபிவிருத்தி வேலைகளை மக்கள் உணர முடியாது. அப்படி உணருவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். இன்றைக்கு நாம் எவ்வளவு திட்டம் போட்டாலும் உணவுப் பொருள்களின் விலை குறையாவிட்டால் அந்த திட்டங்கள் எல்லாம் மக்களுடைய கண்ணில் படாது. ஆகவே பாமர மக்கள் சாதாரண ஏழை மக்கள் வாங்கக்கூடிய விலை அளவில் உணவு பொருள்கள்



9th August 1960] [Sri V. Sankaran]

கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும். அதற்கு வேண்டி எந்த வகையாவது கையாள வேண்டும். சப்சிடி கொடுத்தாவது அல்லது இறக்குமதி செய்தாவது அல்லது வேறு எந்த வழியைக் கைப்பிடித்தாவது ஓரளவு உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். பல வழிகளில் அதைக் குறைப்பதற்கு வழி காண வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமையாக இருக்கவேண்டும். இப்பொழுதே பருவ மழை தவறி விட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இப்பொழுது முதற் கொண்டே அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லா விட்டால் சென்ற வருஷம் பின்னால் கஷ்டப் பட்டது போன்ற நிலைமை ஏற்படும். இதற்கு இடம் கொடுக்காமல் இப்பொழுதிருந்தே அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய கம்யூனிஸ்ட் அங்கத்தினர் ஒருவர் பேசும்போது கள்ள நோட்டு அச்சடிப்பதைப்பற்றி சொன்னார். அதாவது காங்கிரஸ் கட்சிக்குச் சார்பாக உள்ளவர்கள் கள்ள நோட்டு அச்சடிக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். எங்கள் ஊரில் ஒரு வதந்தி உலவியது. அதைப்பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன். அது ஒரு வதந்திதான். கள்ள நோட்டு அச்சடிப்பது ஆரம்பம் ஆனது கேரளாவில்தான் முதலில் ஆரம்பம் ஆயிற்று என்றும், அங்குதான் இந்தத் தொழிலை முதலில் ஆரம்பித்தார்கள் என்றும், இந்தியாவின் ஜெனரல் எகானமியை பாழாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அங்கு அதிகப்படியாக கோடிக் கணக்கான கள்ள நோட்டுகள் அச்சடிக்க ஏற்பாடு செய்யப்பட்டு அதை இந்தியா பூராவிலும் புழக்கத்தில் இருப்பதற்கு அனுப்பப் பட்டதாக ஒரு வதந்தி இருந்தது. அப்பொழுதுதான் ஓரளவு நம் ராஜ்யத்திலிருந்து அந்த ராஜ்யம் இங்கிருந்து வாங்கப்பட்ட அரிசிக்கு அதிகப்படியான பணம் கொடுத்துக்கூட வாங்கினார்கள் என்றும் சொல்லப்பட்டது. மூட்டைக்கு சாதாரண விலைக்கு மேல் ஐந்து அல்லது பத்து ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்கி அந்த விதத்தில் அந்தக் கள்ள நோட்டுகளை வெளியில் புழக்கத்தில் விட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் அந்த வதந்தி உண்மையாக இருக்கும் என்று நான் சொல்லவில்லை.

அடுத்தபடியாக கவர்னர் உரையைப் பார்க்கும் போது "முழு நிதி உதவி அளிக்கும் திட்டம்" ஒன்றை தஞ்சையில் ஆரம்பித்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை தஞ்சை ஜில்லாவில் சில ப்ளாக்குகளில் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். அதைப்போலவே எல்லா ஜில்லாக்களிலும் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லா ஜில்லாக்களிலும் எல்லா ப்ளாக்குகளிலும் அதை ஆரம்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி ஆரம்பித்தால் எல்லா விவசாயிகளுக்கு ரொம்பவும் உதவியாக இருக்கும். கிராமங்களில் விவசாயிகள் கடன் வாங்கி படும் கஷ்டத்தைப் பார்த்தால் ரொம்பவும் பரிதாபகரமாக இருக்கிறது. அவர்கள் கொடுக்கக்கூடிய வட்டியை கணக்கிட்டுப் பார்த்தால் ஏராளமாக இருக்கும் 100-க்கு 40 வட்டி என்று கூட கணக்கு ஆகிறது. அப்படிப்பட்ட இந்தத் திட்டத்தை எல்லா ப்ளாக்குகளிலும் ஆரம்பித்தால் விவசாயிகளுக்கு எவ்வளவோ

[Sri V. Sankaran] [9th August 1960

நன்மையாக இருக்கும். ஆகவே இந்தத் திட்டத்தை எல்லா ஜில்லாக்களிலும் எல்லா ப்ளாக்குகளிலும் பரப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வி சம்பந்தமாக pay commission ரிப்போர்ட்டைப் பார்த்தால் அங்கே ஆசிரியர்களுக்குள் பாரபட்சம் இருக்கிறது. சீனியர் ஆசிரியர்களுக்கும் ஜூனியர் ஆசிரியர்களுக்கும் வசதி சலுகைகளில் வித்தியாசம் இருக்கிறது. ஜூனியர் ஆசிரியர்களுக்கு பூர்ண வசதி இருக்கிறது, அவ்வளவு வசதிகள் சீனியர் ஆசிரியர்களுக்கு இல்லை. இதைப் பார்த்துச் சரி செய்யவேண்டும். கொடுக்கப்பட்டிருக்கும் சலுகையை எல்லா ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கக்கூடிய அளவில் இருக்கவேண்டும்.

கைத்தறி சம்பந்தமாக சொல்லும்போது இன்றைக்கு நூல் விலையின் நிலைமை ரொம்பவும் மோசமாகிக்கொண்டு வருகிறது. கைத்தறி கமிட்டியில் கூட இதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. மோட்டா ரக நூல்களில் செய்யக்கூடிய துணிகள் எல்லாம் வெளி நாடுகளுக்கும் வட இந்தியாவுக்கும்தான் அனுப்பப்படுகிறது. ஆதலால் நைஸ் நூலில் நூற்கப் பழகிக்கொள்ளவேண்டும் என்பது சரியான யோசனையாகாது. அப்படிப்பட்ட மோட்டா ரக நூல்களுடைய விலை ஒரேயடியாக உயர்ந்திருக்கிறது. அதைக் குறைப்பதற்கு வழிவகை காணவேண்டும். இல்லாவிட்டால் நெசவாளர்கள் கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்படும். கைத்தறித் தொழில் நசுக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படலாம். ஆகவே நூல் விலையை கணிசமாகக் குறைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி குறைத்து நெசவாளர்களுக்கு நூல் மலிவாக வசதியான முறையில் கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் கைத்தறித் தொழிலை நாம் காப்பாற்ற முடியும்.

அடுத்தபடியாக சர்க்கரை சம்பந்தமாக சொல்ல வேண்டும். நமது ராஜ்யத்திற்கு உள்ள கோட்டா பத்தாயிரம் டன் என்று சொல்லப்படுகிறது. அது ரொம்பவும் குறைவானது. நமக்கு குறைந்த பட்சம் பதினைந்து ஆயிரம் டன்னாவது கோட்டா இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வற்புறுத்தியாக வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஆங்கில விஷயம். ஏற்கெனவே வகுப்புகளில் ஸ்டாண்டர்ட் ரொம்பவும் குறைவாக இருக்கிறது. செகண்டரி, எலிமெண்டரி க்ளாஸ் ஆசிரியர்களுக்கு வேண்டிய ஆங்கில பயிற்சி இல்லாமல் இருப்பதால் அவர்களைக் கொண்டு ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க வேண்டுமானால் ஸ்டாண்டர்ட் ரொம்பவும் குறைந்து போய்விடும். மாணவர்களுடைய ஸ்டாண்டர்ட் நல்லபடியாக இருக்கவேண்டுமானால் ஆசிரியர்களுடைய தரமும் நன்றாக இருக்கவேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் ஆசிரியர்களுக்கு வேண்டிய பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். ஆகவே ஆங்கிலத்தில் சொல்லிக்கொடுக்க போதிய பயிற்சியை அடிக்கடி Refresher Courses மூலம் ஆசிரியர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுது தான் மாணவர்களுடைய ஸ்டாண்டர்டும் நல்ல முறையில் இருக்கும்.



9th August 1960] [Sri V. Sankaran]

அடுத்தபடியாக சேரி ஒழிப்பு சம்பந்தமாக சொல்லும்போது, அதைப்பற்றியும் கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சேரி ஒழிப்பைப்பற்றி பல வருஷங்களாக சொல்லிக்கொண்டு வந்திருந்தபோதிலும் மதுரை போன்ற நகரங்களில் இன்னும் தொடக்கூடப்படவில்லை. அவைகள் எல்லாம் திட்டம் அளவில் இருக்கிறதேயொழிய உண்மையில் சேரிகளை புனரமைக்க எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. குறிப்பாக வைத்தியநாதபுரம் என்ற இடத்தில் அதை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று ஐந்தாறு வருஷங்களாகச் சொல்லிக் கொண்டு வந்தும் இது வரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

அடுத்தபடியாக விற்பனை வரி சம்பந்தமாக, சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சில பொருள்களை விற்பனை வரியிலிருந்து விலக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வந்தும் இன்னும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. அவைகளுக்குப் போடப்படும் விற்பனை வரியை எடுத்து விட்டால் எவ்வளவோ நலமாக இருக்கும். மக்களுக்கு நல்ல சமிக்ஞை (gesture) ஆக இருக்கும். அதிகப்படியாக தேவையாக உள்ள இரண்டொரு பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். அவைகளில் முக்கியமானது பால், நெல். கண்டிப்பாக இவைகளுக்கு விற்பனை வரி கூடாது. சீக்கிரத்தில் அதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதைப் போலவே நெய்க்கும் விலக்கு அளிக்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த வருஷம் முதற்கொண்டே எடுத்துக்கொண்டால்தான் அடுத்த வருஷத்திலாவது அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே இவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உரம் சம்மந்தமாக கூட்டுறவு சொஸைடி மூலம் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டபோதிலும்கூட போதிய அளவு, குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கவில்லை என்ற குறைபாடு எல்லா இடங்களிலும் இருந்து கொண்டிருக்கிறது. உழவு காலத்தில், நடவு காலத்தில் உரம் போதுமான அளவுக்குக் கிடைக்கும்படியாக வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஸ்காலர்ஷிப் சம்பந்தமாகவும் ஒரு குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. உதவி கொடுக்கும்படியாக நிலைமையில் அவ்வப்போது சீக்கிரத்தில் அதைக் கொடுத்தால்தான் நன்றாக இருக்கும். முன்னால் கட்டி, பின்னால் வாங்குவது என்றால் எல்லோராலும் முடியாது. காரணம் பல குடும்பங்கள் இன்றையதினம் மிகவும் கஷ்டமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த ஸ்காலர்ஷிப் தொகையை முன்கூட்டியே காலத்தில் கொடுத்துதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக வில்லேஜ் ஆபீசர்கள் சம்பந்தமாக ஓரளவுக்கு நிலைமையைச் சீர்திருத்தியிருந்தாலும் கூட பே கமிஷன் மூலமாக செய்யப்பட்ட வழிவகை மூலம் அவர்களுக்குப் போதுமான நிவாரணம் அளிக்கவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னால் காபினெட் சப் கமிட்டி அமைக்கப்பட்டபோதிலும்கூட ஓரளவு சிக்கல்

[Sri V. Sankaran] [9th August 1960

இருக்கிறது. அவர்களை முழுநேர ஊழியர்களாகக் கருதுவதா பார்ட்டைம் ஊழியர்களாகக் கருதுவதா என்ற பிரச்னை இருந்தது. இப்பொழுது அவர்களுடைய வேலையும் அதிகமாகி விட்டது. நிறைய ரெக்கார்டுகள் வைக்கவேண்டியிருக்கிறது. அடிக்கடி ஹெட்குவார்டர்சுக்கும் போகவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களை முழு நேர ஊழியர்களைப் போலக் கருதி அவர்களுடைய நிலைமையை சீர்திருத்தவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. ஏதோ பாரம்பரை பாத்யதை போன்றவற்றையெல்லாம் சர்ச்சை செய்து கொண்டிருக்காமல் அவர்களுடைய நிலைமையைப் பரிசீலனை செய்யவேண்டும். அதுவும் அகவிலை அதிகரித்து இருக்கும்படியான நிலைமையில் ஓரளவாவது ஊதியத்தை உயர்த்தலாமா என்ற முறையில் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சென்னை நகரத்தில் தனி கார்ப்பரேஷன் ஏற்படுத்தி நகர அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்திருப்பது போல இதர நகரங்களிலும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் புதுத் தொழில்களை ஆரம்பிக்கும்போது குறிப்பிட்ட சில நகரங்களில் மட்டுமல்லாமல் எல்லா ஜில்லாக்களிலும் பரவலாக ஏற்படுத்தவேண்டும். அதுவும் பின்தங்கிய ஜில்லாக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏற்படுத்தவேண்டும். அப்போது தான் அங்குள்ளவர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்தரமும் உயரும் என்று சொல்ல விரும்புகிறேன். மேலும் நகரங்களில் அதிக நெருக்கடி இருப்பதன் காரணமாக புதுத் தொழில்கள் ஏற்படுத்துவது என்றால் நகரங்களுக்கு அப்பால் பத்துப் பதினைந்து மைல்கள் தள்ளி ஆரம்பிக்கவேண்டும். நகரங்களுக்குள்ளேயே தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்போது வாழ்க்கைத்தரம் உயர்ந்துபோகிறது. இடநெருக்கடி அதிகமாகிறது. அதனால் பல கஷ்டங்கள் உண்டாகின்றன. ஆகவே நகரங்களுக்கு அப்பால் பத்துப் பதினைந்து மைல் தள்ளித்தான் புதுத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* SRI K. ANBAZHAGAN : சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரையின் மீது என்னுடைய கருத்தைத் தெரிவிப்பதற்காக நான் நிற்கின்றேன். கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரையையொட்டித் தமது நன்றி அறிதலை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நன்றி அறிதல் தெரிவித்துக்கொள்வதை என்னைப்போன்றவர்கள் தவறாகக் கருதாவிட்டாலும், நன்றி அறிதல் தெரிவித்துக்கொள்வதன் மூலம் அவர் உரையை அப்படியே முழுவதும் ஆமோதிப்பது என்ற மனப்பான்மையில் கவர்னர் பெருமான் உரையில் இந்த அரசாங்கத்தார் மேற்கொண்டிருக்கிற சில திட்டங்களையும், நடைமுறைகளையும் கூறியுள்ளபோது அவற்றில் உள்ள குற்றங்குறைகள் என்ன என்பதைப் பார்க்காமலேயே ஒத்துக்கொள்வது நல்லது அல்ல என்று கருதியே, இந்த மாற்றத்தைத் தெரிவிக்க மற்ற கட்சி உறுப்பினர்கள் மறுப்பு தெரிவித்திருக்கிறார்கள். உண்மையாகவே கவர்னரின் உரையை சென்ற ஆண்டு நிகழ்ந்ததற்கும், இப்போது நிகழ்ந்ததற்கும் இடையில் எட்டு, ஒன்பது மாதங்கள் ஆகியுள்ளது.



9th August 1960] [Sri K. Anbazhagan]

அதை வேறு கோணத்தில் ஆளுங்கட்சியினர் குறிப்பிட்டார்கள். நான் சென்ற ஆண்டு பேசியபோது குறிப்பிட்டதாக நினைக்கிறேன். அப்போது அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கவர்னர் பெருமான் உரையை பட்ஜெட் நிதிவரவு செலவுத்திட்ட உரைக்கு முன்னால் இரண்டொரு மாதங்களில் அமைப்பதில் பயன் இல்லை. நான்கு ஐந்து மாதங்கள் முன்பாக அமைத்தால்தான் அதன்பேரில் அங்கத்தினர்கள் சொல்கிற ஆலோசனைகளின் அடிப்படையில் நமது நிதி நிலை அறிக்கையைத் தயார் செய்யமுடியும். அந்த விளக்கங்களின் பேரில் உருவாக்க முடியும் என்று குறிப்பிட்டேன். அந்த முறையில் இந்த முறை உரைநிகழ்த்தப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன், அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும்.

கவர்னர் அவர்கள் உரையில் மிகவும் குறிப்பாகத் தெரிவித்திருக்கவேண்டிய கருத்தாக—இலங்கையில் இன்றைய தினம் பாதிக்கப்பட்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான தமிழர்களுடைய பிரச்னை இருந்தும் அது பற்றி ஒன்றும் குறிப்பிடப்படாதது வருத்தந்தருவதாகும். இன்றும் தீராத தலைவேதனையாக அது இருக்கிறது. இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்கடி நேரிடலாம். அந்த அரசாங்கத்தில் மாறுதல்கள் ஏற்படலாம். இப்படி மாற்றம் ஏற்பட்டாலும், நெருக்கடி நேரிட்டாலும் இங்கே இருந்து அங்கே சென்று குடியேறிய தமிழர்களே. வேதனைப்படவேண்டியதாக இருக்கிறது. நான் 'தமிழர்கள்' என்று சொல்லும்போது, மாற்றுக் கட்சியில் உள்ள சிலர் தமிழர்களிடத்தில் மட்டும் அக்கறைகாட்டுகிறீர்களா? திராவிடர்களிடத்தில் அக்கறை காட்டுகிறீர்களா, யாரிடத்தில் உங்கட்கு அக்கறை என்கிறார்கள். இன்னும் சிலர் ஆரியர்களைப்பிரித்துப் பேசலாமா என்றும் கேட்கின்றனர். நான் 'தமிழர்கள்' என்று சொல்கிற நேரத்தில் திராவிட இனத்தவர், இந்திய மக்கள் என்ற எண்ணத்தை மறந்து, மறுத்துச் சொல்லவில்லை. 'தமிழ் பேசுகின்ற தமிழ்நாட்டில் வாழ்கின்ற மக்கள், தமிழர், திராவிடர்கள் என்ற பெயரால் குறிப்பிடப்படுகிற தமிழர்கள், மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடர்கள். ஆகியோர் திராவிட இனத்தவர். இன்னும் இப்படி இருக்கும்படியான அநேக பிரிவினரையும் இனத்தாரையும் ஒன்றாக இணைத்துக் குறிப்பிடுகிற நேரத்தில், எப்படியோ ஒரே அரசியல் அமைப்பிற்கு உட்படுத்தியிருப்பதால் 'இந்தியர்கள்' என்று குறிப்பிடப்படும் முறையையும் மறந்து விடவில்லை. தமிழர்கள் என்னும்போது திராவிடர்களுடைய நலனுக்குக் குந்தகம் இல்லாமல், இந்தியர்களுடைய பொது நன்மைக்குக் கேடு இல்லாமல் தமிழ் நாட்டில் தமிழ் பேசும் இனத்தவர்களைக் குறிப்பிடுகிறேன். குடியேறிய தமிழர்கள் இலங்கையில் படுகிற அல்லலை நினைந்து பேசுகின்றேன். இன்றைய தினம் அவர்களுக்கு அங்கேயும் வாழ்வதற்கு வழிவகை இல்லை. இங்கே வந்தால் அவர்களுக்கு வாழ்வளிக்க நமக்கும் வக்கு இல்லை. நமது அரசாங்கத்திடம் அவர்களுக்கு உதவ எவ்வித திட்டமும் இல்லை. அவர்கள் நிலையை மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்திச் சொல்லக் கூடிய ஆற்றலும் நமக்கு இல்லை. மத்திய அரசை வற்புறுத்தி இலங்கை அகதிகளுக்கு உதவிசெய்ய இணங்கச் செய்வதற்குத் தக்க விளக்கம் கொடுக்க முடியாத நமது அமைச்சர்கள், அவர்கள் கொடுக்கிற விளக்கத்தை ஏற்றுக்கொண்டு வருகிற நிலைதான்

இருக்கிறது. 'அகதி' என்ற சொல்லுக்கு ஏது இலக்கணமோ அதை இலங்கைவாழ் இந்தியர்கள் பெற்றிருக்கவில்லை என்று டெல்லி சர்க்கார் சொன்னவுடன் அதை இவர்கள் ஏற்று வருகிறார்கள் இது மிகமிக வருந்தத்தக்கது. திக்கற்றவர்கள் ஆவதற்கு ஏது காரணமாக இருந்தாலும் அது, அகதியின் நிலைமைதான். வாழ்வதற்குரிய வழிவகைகளை எல்லாம் இழந்து நிற்பவர்கள் 'அகதிகள்' தான். அப்படிப்பட்ட அகதிகளைப்பற்றி இலங்கையில் அல்லல்படுகிற குடியேறிய தமிழர்களின் நிலையைப்பற்றி—இல்லையானால் திராவிடர்களின் நிலையைப் பற்றி—பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் அந்த இந்தியர்களின் நிலைமையைப்பற்றி கவர்னருடைய உரையில் எதுவும் காணப்படவில்லை என்று சொன்னால் நமது அமைச்சர்கள் தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறார்கள், நம்முடைய மக்களுக்குத் துரோகம் விளைவிக்கிறார்கள் என்றுதான் கருதவேண்டியிருக்கிறது. ஆகவே இதுபற்றி இனியாகிலும் அமைச்சர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குறிப்பிட விரும்புவது விலைவாசிகளின் உயர்வு பற்றியதாகும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே பலமுறை விலைவாசியை குறைக்க வழிசெய்ய வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். வற்புறுத்தி இருந்தும் இதுவரையில் அந்தப் பிரச்னையில் ஒரு சிறிதளவு முன்னேற்றங்கூட ஏற்படவில்லை. அதைப் பற்றியும் திட்டவட்டமாகக் குறிப்பிடாததோடு, விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு தெளிவான வவழிகைகள் இருப்பதாகக்கூட சுட்டிக்காட்டப்படவில்லை. குறிப்பாக எதிர்கட்சியினர் ஒருவருக்கொருவர் மாறாக பல விஷயங்களைக் குறிப்பிடுவது வழக்கம். இருப்பினும், இன்றைய தினம் இந்த விலைவாசிகளைக் குறித்து உடனடியாகக் கட்டுப்படுத்தாவிட்டாலும் இதனால் என்ன என்ன தீமை உண்டாகும், மக்கள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்பதைப்பற்றி ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அம்மையார் பேசியதை அரசாங்கத்திற்கு நினைவூட்டுகிறேன். அகவிலைகள் 'விஷம்' என ஏறிக்கொண்டே போகின்றன. இதற்குக் காரணம் காங்கிரஸ் கட்சிதான் என்றால் யாரும் மறுக்க முடியாது. தொடர்ந்து பதிமூன்று வருடங்களாகப் பதவியில் காங்கிரஸார் இருந்து கொண்டே இருக்கிறார்கள். இவர்களுடைய நிர்வாகத்தின் விளைவாக, இன்றைய தினம் பண்டங்களின் விலைகள் ஒரேயடியாக ஏறியுள்ளன. நான் சொல்வதனை அரசாங்கத்தை ஆதரிப்பவர்களே கூட உணர்ந்து எடுத்துச் சொல்கிறார்கள். இதுவரையில் சென்னை அரசாங்கம் இதற்கு எந்தவிதமான நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்றோ, எடுக்கப்போகிறார்கள் என்றோ தெரிவிக்கவில்லை. மத்திய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்தால்தானே நாங்கள் எடுக்க முடியும் என்று அமைச்சர்கள் சொல்லலாம். மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் மற்ற மாநிலங்கள் பாதிக்கப்படுவதைவிடத் தமிழகம்தான் அதிகமாக பாதிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களின் வருவாய், அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவை நம்மைவிட உயர்ந்திருக்கிறது. அவர்களுக்குக் கிடைக்கும் பணத்தை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படியோ,



தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்கிக்கொள்ளும் சக்தி, நம்மைவிட அவர்களுக்கு, அதிகமாக இருக்கிறது. ஏனெனில், அவர்களின் வருவாய் இன்றையதினம் நம்மைவிட அதிகம். மத்திய மாகாணத்தின் மக்கள் சராசரி வருவாய் நம்மைப் போல் 1-3/4 மடங்கு இருக்கிறது. பம்பாய் மாகாணத்தின் வருவாய் நம்மைப் போல் 1-1/2 மடங்கு இருக்கிறது. அப்படி அங்குள்ள வருவாய் அதிகமாகவிருப்பதால் விலைவாசி உயருகிறபோது அங்கு உள்ள மக்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறவர்களாக இல்லை. இருந்தபோதிலும், அவர்களும் கூக்குரல் எழுப்புகிறார்கள், போராடவும் தயாராயிருக்கிறார்கள். இந்நிலையில் இந்த நாட்டு மக்களின் துன்பத்தை உணர்ந்து, இவர்களின் குறைகளைத் தீர்க்க, விலைவாசியைக் குறைப்பதற்கு இந்த அரசாங்கம் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தது என்று கேட்கிறேன்.

அரிசி விலை ஒன்றைக் குறைத்தால்கூட நிச்சயமாக நாட்டு மக்கள் ஓரளவு நிம்மதி பெறக்கூடும். அப்படி உணவுப்பண்டங்களில் ஒரு பொருளான அரிசி விலை குறைந்தால்கூட மக்கள் ஓரளவு நிம்மதி பெறுவார்கள் என்று இருக்கும்போது, மத்திய அரசாங்கத்தினிடம் அரிசி இறக்குமதிக்கு அனுமதி கேட்டு, அரசாங்கம் பண உதவி செய்வது மூலம் மக்களுக்கு வேண்டிய அரிசியை நியாயமான விலையில் வழங்க முன்வரவேண்டும். விலைவாசி ஏறினால் விவசாயிகள் நன்மை பெறுவார்கள் என்று கூறுவது, அதிக நிலம் உள்ள விவசாயிகளுக்குத்தான் பொருந்தும். நிலம் இல்லாத விவசாயிகள், கூலிக்காகப் பாடுபட்டு உழைக்கக் கூடிய விவசாயிகளுக்கு இது பொருந்துகிற வாதமல்ல. கூலி வேலை செய்பவர்களாயிருந்தாலும் சரி, தொழிலாளர்களாகயிருந்தாலும் சரி, அல்லது அரசாங்க ஊழியர்களாக இருந்தாலும் சரி, இவர்களுக்கு முதலாவதாகத் தேவைப்படுவது அரிசி. ஆகவே, அரிசி முதலான உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க அரசாங்கம் அக்கறை காட்ட வேண்டும். ஆந்திரம், வங்காளம் போன்ற இடங்களில் அதிகப்படியாகவே அரிசி விளைகின்றது. சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில், மக்களுக்குத் தேவைப்படுகிற இந்த அரிசியின் விலையையாவது குறைத்து மக்களுக்கு வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். புஞ்சை உணவுத் தானியங்களான கேழ்வரகு, கம்பு போன்றவைகளின் விலையையும் குறைக்குந் தா என்ன வழி என்று சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியும் கேட்காவிட்டால் அதற்கு வேண்டிய பணத்தை ஒதுக்கியும் மக்களுக்கு குறைந்த விலையில் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். மக்களைப் பட்டினி போட்டுவிட்டு பஞ்சத்தின் சாயல் நிலவவிட்டுவிட்டு ஒரு அரசாங்கம் வேறு எந்த வழியில் நல்லமுறையில் ஆட்சி செய்கிறோம் என்று சொன்னாலும் அது சிறந்த ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்குத் துணை ஆகாது.

அடுத்து, ஆலைத்துணி விலையைக் குறைப்பதாக இன்றைய தினம் ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. மத்திய சர்க்கார் ஏற்பாட்டால் ஆலைத்துணி விலை—பத்து சத விகிதம் குறைகிறது என்றால் அது கைத்தறித் துணிக்குப் போட்டியாக அமையும்.

[Sri K. Anbazhagan] [9th August 1960

தமிழ் நாட்டுக் கைத்தறி நெசவாளர்கள் கண்ணீர் சிந்துவதைப் பற்றி உயர்திரு கந்தசாமி அவர்கள் கூறினார்கள். எனக்கு அவர்களை 'முதலியார்' என்று சேர்த்துச் சொல்ல மனம் வரவில்லை. எந்த 'ஜாதி' இப்பொழுது சுத்தமாக இருக்கிறது என்று எனக்குத் தெரியாத காரணத்தால். ஆகவே ஜாதியைக் குறிப்பிடாமல் பெயரை மட்டும் கூறுகிறேன், உயர்திரு கந்தசாமி அவர்கள், எடுத்துச் சொன்னார்கள், கைத்தறி நெசவாளர்களின் துயர நிலை பற்றி. இன்றைய தினம் ஐவுளி விலை இறங்கினால் கைத்தறி நெசவாளர்களின் கழுத்தில் கை வைத்து நெரிக்கும் நிலைதான் ஏற்படும். அந்நிலை ஏற்படக்கூடாது என்று எண்ணினால் ஐவுளி விலை இறங்கும் வேளையில், கைத்தறிக்கு கொடுக்கப்படுகிற தள்ளுபடியைச் சிறிது அதிகப்படுத்த சர்க்கார் முன் வரவேண்டும், சிறிது காலத்திற்காவது. இரண்டு மாத காலத்திற்காவது இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்தால்தான் உடனடியாகக் கைத்தறி நெசவாளர்கள் கண்ணீர் வெள்ளம்போல் பெருகும் நிலை ஏற்படாது தடுக்க முடியும். எனவே இந்தச் சூழ்நிலையை உணர்ந்து சென்னை அரசாங்கம் டில்லி அரசிடம் எடுத்துக் கூறி தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அடுத்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் நமது மாநிலப் பங்கு என்ன என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். நமது பங்கைக் கேட்பதில் தவறு இல்லை. அண்ணன், தம்பி ஒற்றுமையாக இருந்தாலும், ஒருவர் வீட்டிற்கு ஒருவர் திருமணம், சீமந்தம் இவைகளுக்குத் தவறாது போய் வந்து கொண்டிருந்தாலும் அவர்களிடையே பங்கு பிரிப்பது என்பது பழக்க வழக்கத்திற்கு விரோதமானதல்ல, நீதிக்கும் விரோதமானதல்ல, நியாயமுமாகும். அதே முறையில் சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில், மத்திய அரசிடம் நமது பங்கு என்னவென்று பேசி அதற்கு உட்படக்கூடிய திட்டங்கள் இன்னின்னவென்று தீர்மானிக்க வேண்டுமே தவிர நம் பங்கைக்கூட அவர்களே தீர்மானிப்பார்கள், திட்டம் தீட்டுகிறவர்கள் இன்னின்ன செய்ய வேண்டுமென்று நமக்குச் சொல்வார்கள் என்றால், நமது பங்கு அறுதியிடப்படவில்லை உரிமை ஏற்கப்படவில்லை என்றுதான் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, தூத்துக்குடி துறைமுகம் விரிவாக்கப்பட வேண்டுமென்று கேட்டால், அல்லது அதைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னால் அதைச் செய்வதற்கில்லை என்று மறுப்பதற்கு அவர்கள் காரண காரியம் காட்ட முடியும். சேதுசமுத்திரத் திட்டம் பற்றிக் கேட்டால், அதை மறுப்பதற்கும் அவர்கள் காரணம் காட்ட முடியும், நிதி வசதியில்லை என்று கூறி—சேதுசமுத்திரத் திட்டத்திற்கு பணமில்லை என்று சொன்னால், நமக்கு ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை. ஒதுக்க வேண்டிய தொகை இவ்வளவு என்று தெரிந்தால், நாம் தூத்துக்குடித் துறைமுக அபிவிருத்திக்கு முதலிடமும், சேது சமுத்திரத் திட்டத்திற்கு இரண்டாவது இடமும் கொடுத்து திட்டங்களை நம் விருப்பம் போல் தீட்ட முடியும். வட நாட்டு அமைச்சர்களை விட நம் அமைச்சர்களைத் தான் நாம் நம்ப



9th August 1960] [Sri K. Anbazhagan]

முடியும், நம்ப வேண்டும். நம் நாட்டிலே பிறந்து, நம்மோடு வாழ்கிறவர்கள் என்றிருக்கும்போது நமது மாநில அமைச்சர்களை நாம் நம்ப வேண்டுமே தவிர வேறு யாரையும் இந்த அளவு நம்புவதற்கில்லை.

எனவே, நமது பங்கு என்ன என்பதை நமது அமைச்சர்கள் அறுதியிட்டு தீர்மானித்து உரிமை பெற வேண்டும். மற்ற மாநில அரசாங்கங்கள் தங்களால் நிறைவேற்ற முடிந்ததை விட அதிகமாக தொகை ஒதுக்கக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் கனம் சுப்பிரமணியம் அவர்கள் மூன்றாவது திட்டத்தில் தங்களால் முடிந்ததைவிடக் குறைவாக நிதி கேட்டிருக்கிறார்கள். இதை ஒரு குற்றச்சாட்டாகக் கூறுகிறேன். நாம் நேற்று வரை திட்டங்களை நிறைவேற்ற வேண்டும், அதற்கு என்ன செலவாகும் என்று கணக்கிட்டுப் பார்த்துக் கேட்க வேண்டும். இரண்டாவது திட்டத்திற்கு என்ன செலவு செய்தோம், நாம் இன்று என்னன்ன ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு கிடைத்த தொகை எவ்வளவு? நேற்று நமது அரசாங்கத்தால் நிறைவேற்ற முடிந்ததுதான் இன்றும் முடியும் என்ற அடிப்படையில் கேட்க ஆரம்பிக்கக் கூடாது. நமக்கு இவ்வளவு தேவை என்றால் அதை அவர்கள் அப்படியே ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பது எல்லோரும் அறிந்ததே. நமக்குள்ள நியாயமான பங்கைக் கேட்க வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்கவில்லை என்ற கூக்குரல் நாடெங்கும் எழுந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்ற குறை மக்கள் மனதில் குமுறுகிறது. நமக்குக் கிடைக்கவேண்டிய பங்கு இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் கிடைக்கவில்லை, என்றிருக்கும்போது அந்தப் பங்கையும் சேர்த்து இப்பொழுது கேட்பதில் என்ன தவறு இருக்கிறது? அப்படிக் கேட்காவிட்டாலும், இன்றைய மாநில மக்கள் தொகை என்ன, மக்களின் சராசரி வருமானம் எவ்வளவு, நமது மக்கள் சராசரி வருமானம் மற்ற மாநில மக்களின் வருமானத்தைவிட குறைவாகயிருந்தால் அதை நிறைவு செய்ய எவ்வளவு தொகை வேண்டுமென்று நாம் கேட்டிருக்க வேண்டும். 280 கோடி அளவு மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் நம் மாநிலத்திற்குக் கேட்கலாம் என்று குறிப்புக் காட்டினார் நிதி அமைச்சர். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணாத்துரை அவர்கள்; ஆலோசனை கேட்கப்பட்ட காரணத்தினால் சொன்னார்கள், ஆயிரம் கோடி ரூபாய் கேளுங்கள், அதற்குத் திட்டங்கள் இவை என்று. அண்ணாதுரை அவர்களுக்குப் பொருளாதாரம் தெரியுமா, என்றனர். அவர் பொருளாதார நிபுணர் அல்ல. அவருக்கு அரசியல் தெரியுமா என்றனர். அமைச்சர்களுக்குத் தெரிந்த அரசியல் அவருக்குத் தெரியாது. திட்டத்தினைப் பற்றிப்புரிந்துக் கொண்டுதான் இவர் ஆயிரம் கோடி கேட்டாரா என்றெல்லாம் கேலி செய்தார்கள். யார், எப்பொழுது, எங்கே சொன்னார்கள் என்பதைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. அண்ணா அவர்கள் 1,000 கோடிக்குத் திட்டமிட்டால்தான் இந்த திட்டங்களில் பெரும் அளவான திட்டங்கள் நிறைவேறி நம் நாட்டு மக்கள் துன்பம் நீங்கும் என்று, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆயிரம்

[Sri K. Anbazhagan] [9th August 1960

கோடி அளவுக்குக் கேட்க வேண்டும் என்று சொன்னார்கள். அது தவறில்லை என்பதற்கு மட்டுமின்றி நியாயமே என்பதற்கு சென்னை மாநில சர்க்கார் தங்களுக்கு பொருளாதாரத் துறையில் ஆலோசனை தெரிவித்து, இந்நாட்டுத் தொழில் துறையை வளப்படுத்தவேண்டுமென்ற நோக்குடன் உயர்திரு. லோகநாதன் அவர்கள் தலைமையில் நிபுணர்கள் கொண்ட ஒரு குழு அமைத்து ஆலோசனை கேட்டிருந்தார்கள். அறிஞர் அண்ணாத்துரை பொருளாதாரம் தெரியாதவர் என்று கூறினாலும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நல்லெண்ணம் இல்லையென்று சொன்னாலும், நிபுணர் லோகநாதன் அவர்கள் தெரிவித்திருக்கும் ஆலோசனை என்ன? அறிஞர் அண்ணாத்துரை கேட்டது 1,000 கோடி அளவு. ஆனால் டாக்டர் லோகநாதன் அவர்கள் திட்டத்தின்படி எவ்வளவு? இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் சேர்த்து, 10 ஆண்டுகளுக்கு, எவ்வளவு கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் தீட்டினால், எத்தனை கோடி ரூபாய் தொழில் துறையில் மூலதனம் இட முன்வந்தால் இந்த நாடு வாழும் வளரும் என்று சொல்லும்போது, 10 ஆண்டுகளுக்கு 2,000 கோடி அளவிற்கு இந்த நாட்டில் திட்டம் இட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது, நிபுணர்கள் போட்ட திட்டத்தின்படி தரப்படும் கணக்கு. 15 ஆண்டுகளுக்குத்தான் 2,000 கோடி என்கிறார் நிதி அமைச்சர். 1962-ம் ஆண்டிலிருந்து 1972-ம் ஆண்டு வரையில் செய்யவேண்டியது பற்றித்தான் பல குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள் என்பது என் நினைவு. 15 ஆண்டுகளுக்குத்தான் 2,000 கோடி என்றாலும் ஏறத்தாழ 650 கோடிக்காவது இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கேட்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அண்ணா அவர்கள் சொன்ன திட்டத்தை முழுவதும் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த யாருக்கும் உரிமையில்லை. ஆனால் அவர் கூறியதன் நோக்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கலாம். அதன் அடிப்படையில் அமைச்சர் அவர்கள் 650 அல்லது 700 கோடி ரூபாய் கேட்டிருக்கலாம். இப்பொழுதும் கேட்க முன்வரலாம். நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் முன்பு ஒரு முறை திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பதில் சொல்வதாக நினைத்துச் சொன்னார்கள், "இன்னொரு பத்து வருடங்கள் கிளர்ச்சியை நிறுத்திக் கொள்ளுங்கள், திராவிட நாட்டுப் பிரச்னையை ஒத்தி வையுங்கள், பத்து ஆண்டுகளில் இந்த நாடு முன்னேறுவதற்கு திட்டமிட்டு வழி வகுப்பேன், தொழில் துறையில் நம் மாநிலம் முன்னேறுவதற்கு தேவையான நிதியை மத்திய அரசாங்கத்தினிடம் கேட்பேன், இதற்காகவாவது திராவிட நாடு பிரிவினையை ஒத்தி வையுங்கள்" என்று சொன்னார்கள். அந்த வாதம் உண்மையாகயிருந்தால், இப்பொழுது 650 கோடி ரூபாய் அளவு கேட்பதற்காவது அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். 650 கோடி கிடைக்கவில்லை, 600 கோடிதான் கிடைத்தது என்றால்கூட அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன். ஆனால் அம்மா தாயே, சோறு போடு என்றுகூடக் கேட்காது 'கஞ்சி ஊற்று தாயே' என்று கேட்டு சோறும் இல்லை, கஞ்சியும் இல்லை என்ற பதில் கிடைத்தால் என்ன கதியாவது? என்றுதான் வேதனைப்படுகிறேன். அடுத்து தூத்துக்குடி துறைமுகத் திட்டம் ஒருவேளை நிறைவேற்றினாலும் நிறைவேறும், நிறை



9th August 1960] [Sri K. Anbazhagan]

வேறாது போனாலும் போகும்; சேதுசமுத்திரத் திட்டம் காகிதத்தில் இருக்கிற திட்டம், சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இனி சேர்க்கப்படக் கூடும், என்றிருக்கும் ஐயநிலை எவ்வளவு வெட்கப்படத் தக்கது, எவ்வளவு வருந்தத் தக்கது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இது, தமிழர்களைப் பஞ்சைகளாக ஆக்குகிற வழியாகும். வட நாட்டு ஆட்சி வஞ்சிக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளாத இந்த அரசாங்கம் தாங்களேதான் வஞ்சிக்க வழி வகுக்கிறார்கள் தடுக்கவகையின்றி என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இன்றைய வாட்டமான நிலையை மாற்றினால்தான் இந்த நாடு வாழ முடியும். நம் நாடு நலம் பெறுவதற்குரிய வழி குறித்து கவர்னர் உரையில் ஒன்றும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் நம் நாடு எப்படி வாழும் என்று எண்ணிப்பார்க்கும்போது, நன்றி தெரிவிக்க வேண்டுமென்று விரும்பினாலும்கூட, வருத்தத்தையும் கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், அணுசக்தி மின்சார உற்பத்தி உலையை நம் நாட்டிலேயே, தமிழகத்தில் ஏற்படுத்துவதற்கு முன்வர வேண்டும். இதில் நம்முடைய மின்சார அமைசசர் அவர்கள் கவனமாக இல்லை என்று கருதுகிறேன். பொதுவாக மின்சார அமைச்சர் அவர்களை ஆளும் கட்சியினர் அதிகமாகப் பாராட்டுகிறார்கள். அதன் காரணமாகத்தான் இவர் தன் கடமையை மறந்து விடுகிறார் என்று நினைக்கிறேன். அணுசக்தி உலை மூலம் மின்சார உற்பத்தி ஏற்படுத்துவதில்கூட வட நாட்டில் ஏற்படுத்திய பின்னால் அதை நம் நாட்டில் கொண்டு வந்தால் போதும் என்று இருக்காமல் நம் மாநிலத்திலேயே முதன் முதலாக கொண்டு வருவதற்கு வேண்டிய வழிவகைகளை எடுத்துக்கூறி, அதை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் வாதாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 1-30 p.m.

The House then adjourned.

## IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. STATUTORY RULES AND ORDERS.

* 70. *Notification under section 22 of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, regarding the Ryotwari Settlement of Estates in Chingleput district other than Kachinad Estate issued with Memorandum No. 24415-J3/60-3, Revenue, dated 2nd May* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948.]

* 71. *Notification under section 22 of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, regarding the Ryotwari Settlement of Estates in Thanjavur district other than*

[9th August 1960

*Pattukkottai, Orthanad and Arantangi taluks issued with Memorandum No. 20847-J3/60-2, Revenue, dated 21st April* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

* 72. *Notification under section* 22 *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *regarding the Ryotwari Settlement of Estates in Chingleput district issued with Memorandum No.* 41424-J3/60-2, *Revenue, dated 14th May* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

* 73. *Notification issued with G.O. Ms. Nos.* 666, 668, 671, 673, 674, 675, 677, 679, 680, 681 and 684, *Local Administration, dated 12th April* 1960, *regarding declaration of Panchayat Development Blocks and Constitution of Panchayat Unions in various districts under section* 7 (3) *of Madras Panchayats Act*, 1958. [Laid on the table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]

†*74. *Notification under section* 22 *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *regarding the Ryotwari Settlement in Mudukulathur taluk of Ramanathapuram district issued with Memorandum No.* 34187-J3/60-2, *Revenue, dated 6th May* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

* 75. *Amendments to the Madras Molasses Control and Regulation Rules*, 1958, *issued in G.O. Ms. No.* 562, *Home, dated 19th February* 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]

* 76. *Amendment to rule* 4 (2) *of the Madras Molasses Control and Regulation Rules*, 1958, *issued in G.O. Ms. No.* 1683, *Home, dated 7th June* 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]

*77. *Notification under section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *regarding the Ryotwari Settlement of Estates in Arantangi taluk of Thanjavur district issued with G.O. Ms. No.* 1799, *Revenue, dated 6th April* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

* 78. *Notification under section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *regarding the Ryotwari Settlement of Estates in Mannargudi taluk of Thanjavur district issued with G.O. Ms. No.* 1387, *Revenue, dated 8th March* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]



9th August 1960]

* 79. *Notification under section* 1 (4) *of the Madras Estates (Abolittion and Conversion into Ryotwari) Act*, 1948, *regarding the Ryotwari Settlement of Estates in Arantangi taluk of Thanjavur district issued with G.O. Ms. No.* 1391, *Revenue, dated 8th March* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

* 80. *Notification under section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *regarding the Ryotwari Settlement of Estates in Mannargudi taluk of Thanjavur district issued with G.O. Ms. No.* 962, *Revenue, dated 18th February* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari Act, 1948 (Madras Act, XXVI of 1948).]

* 81. *Notification under section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *regarding the Ryotwari Settlement of Estates in Mannargudi taluk of Thanjavur district issued in G.O. Ms. No.* 1388, *Revenue, dated 18th March* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

* 82. *Notification issued with G.O. Ms. No.* 1415, *Home, dated 9th May* 1960, *making the Madras Distillery Rules*, 1960, *for the establishment and working of distilleries for regulating the manufacture, issue, transport and export of spirit including denatured spirit and for the inspection and supervision thereof.* [Laid on the table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]

* 83. *Notification under section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *regarding the Ryotwari Settlement of Estates in Tiruvadanai taluk of Ramanathapuram district issued with G.O. Ms. No.* 1662, *Revenue, dated 26th March* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

* 84. *Notification under section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *regarding the Ryotwari Settlement of Estates in Arantangi taluk of Thanjavur district issued in G.O. Ms. No.* 815, *Revenue, dated 11th February* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

[9th August 1960

* 85. *Notification under section 1 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, regarding the Ryotwari Settlement of Estates in Mannargudi taluk of Thanjavur district issued in G.O. Ms. No. 814, Revenue, dated 11th February* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

† 86. *Notification under section 1 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, regarding the Ryotwari Settlement of Estates in Arantangi taluk of Thanjavur district issued with G.O. Ms. No. 1392, Revenue, dated 8th March* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

† 87. *Notification under section 1 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, regarding the Ryotwari Settlement of Estates in Arantangi taluk of Thanjavur district issued in G.O. Ms. No. 1390, Revenue, dated 8th March* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act X[VI of 1948).]

† 88. *Notification under section 1 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, regarding the Ryotwari Settlement of Estates in Arantangi taluk of Thanjavur district issued in G.O. Ms. No. 743, Revenue, dated 8th February* 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]

† 89. *Notification issued with G.O. Ms. No. 1167, Industries, Labour and Co-operation (Labour), dated 5th March 1960 amending rules 6, 9, 10 and 39 of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Rules, 1959.* [Laid on the table of the House under section 41 (3) of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958 (Madras Act XXXII of 1958).

‡ 90. *Amendment to Rule 12 (b) of the Madras Rectified Spirit Rules, 1959, issued in G.O. Ms. No. 1821, Home, dated 22nd June* 1960. [Laid on the table of the House under section 54 (3) of the (Madras Act XXXII of 1958).]

‡ 91. *Notification issued with G.O. No. 1640, Revenue, dated 24th March 1960 appointing the 1st day of April 1960 as the date on which the provisions of the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswom Act, 1959 shall come into force.* [Laid on the table of the House under section 29 (3) of the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswom Act, 1959 (Madras Act 30 of 1959).]



[9th August 1960

‡ 92. *Notifications regarding constitution of certain Panchayats and division of wards in Salem, North Arcot and Madurai districts.* [*Laid on the table of the House under section 113 (4) of the Madras Panchayats Act, 1950 (Madras Act X of 1950) (Four notifications).*]

B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

§ 36. *Third Memorandum on Official Language (English).*

§ 37. *Third Memorandum of Official Language (Tamil).*

§ 38. *Translatation of the Prime Minister's Speech in Parliament on Official Language Problem.*

---

* Sent by post on 29th July 1960.
† Sent by post on 1st August 1960.
‡ Sent by post on 4th August 1960.
§ Placed on the table on 8th August 1960.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

SECRETARIAT LIBRARY
MAY 1961

## Wednesday, the 10th August 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Palar Basin Rules*

* 61 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1931-ம் வருடத்திய பாலாறு பேசின் விதிகள் (Palar Basin Rules, 1931) கிளை நதிகளுக்கும் பொருந்துமா ?

(ஆ) அப்படியாயின், எந்தெந்த நதிகளுக்கு ?

(இ) இதை ரத்து செய்ய உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN: (*a*) & (*b*) The Palar Basin Rules of 1931 will apply to all channels branching off from the Palar river.

(*c*) No, Sir.

SRI S. M. ANNAMALAI: ஸார், வட ஆற்காடு மாவட்டத்தில் சரிவர மழையே கிடையாது. ஆறுகளும் அதிகம் கிடையாது. இருக்கக் கூடிய ஆறுகள் அனைத்தும் பாலாறில்தான் கலக்கின்றன. அத்தனை ஆறுகளுக்கும் பாலாறு பேஸின் விதிகள் இருக்கின்ற காரணத்தினால் அந்த ஆறுகளின் ஓரத்தில் கிணறுகள் தோண்டக்கூடாது, ரிவர் பம்பிங் ஸ்கீம் கூடாது, பம்ப் செட் கூடாது என்ற நிலையில் மக்கள் அவதிப் படுகிறார்கள். இந்தக் கஷ்டத்தை அகற்ற இதை மறு பரிசீலனை செய்து அந்த விதியை நீக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN: தண்ணீர் கஷ்டம் இருக்கின்ற காரணத்தினால்தான் இந்த விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கஷ்டம் இல்லாமல் கீழே ஓடக் கூடிய தண்ணீரைத் தரவேண்டுமென்று ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே 2,000 அடிக்கு அப்பால் வெட்டிக் கொள்வதற்கு ஆட்சேபணை கிடையாது. எல்லோருடைய நன்மையையும் கருதித்தான் இந்த விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

SRI S. M. ANNAMALAI: ஸார், பாலாறு சம்பந்தப்பட்ட வரையில் இந்த விதிகளை நீக்காவிட்டாலும் பாலாற்றின் கிளை நதிகளைப் பொறுத்த மட்டிலாவது இதை நீக்க முயற்சிப் பார்களா ?

[10th August 1960

THE HON. SRI P. KAKKAN: கிளை நதிகளைப் பொறுத்த மட்டிலும்கூட அங்கேயும் 2,000 அடிக்கு அப்பால் கிணறு வெட்டிக் கொள்ளலாம்.

SRI A. A. RASHEED: Will the Government consider the question of at least relaxing the rules if not repealing them, since the rules prove to be irksome and stand in the way of larger irrigation in the Palar Basin?

THE HON. SRI P. KAKKAN: In some cases rules are relaxed after gettingt the report of the Collector and the Chief Engineer concerned.

*Soil Conservation Scheme*

* 62 Q.—SRI M. A. B. ARUMUGHASAMY: கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் (Soil Conservation Scheme) மதுரை ஜில்லாவில் எந்தெந்த பிளாக்குகளுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் தொகை இனமாகக் கொடுக்கப்படுகிறதா அல்லது கடனுகக் கொடுக்கப் படுகிறதா ?

(இ) எந்த அடிப்படையில் ?

(ஈ) கடனுகக் கொடுக்கப்பட்டால் எத்தனை வருஷத் தவணையில் திருப்பிச் செலுத்த வேண்டும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) Soil Conservation works are in progress in the Athur, Batlagundu, Kodaikanal and Bodinaickanur Blocks in Madurai district.

Allotment of funds is not made blockwise. A sum of Rs. 3·56 lakhs has been allotted to Madurai district for 1960-61.

(b) The ryots' share is advanced as loan.

(c) According to the existing pattern of financial assistance, the Government of India will share 12½ per cent of the cost of soil conservation works, fifty per cent of the afforestation expenses and 12½ per cent of the cost of the workcharged staff, subject to an equal amount being shared by this Government. The State Government will have to bear in addition 90 per cent of the cost of machinery. The remaining 75 per cent of the cost of soil conservation measures,, 75 per cent of the cost of the work-charged staff, the entire expenditure on the non-work charged staff *plus* contingencies and 10 per cent of the cost of the machinery are obtained from the Government of India by the State Government by way of loans. This amount of loan is recovered from the ryots.

(d) In equated annual instalments not exceeding twenty.



10th August 1960]

SRI M. A. B. ARUMUGHASAMY: ஸார், தற்சமயம் கோடைக்கானல் தாலூக்காவில் மலைப் பிரதேசத்திலுள்ள தோட்டங்களில் கட்டப்படும் கற்சுவர்களுக்கு சர்க்கார் கொடுத்துவரும் ஸப்ஸிடியை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ? உயர்த்திக் கொடுத்தால் இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படும் என்று சர்க்கார் உணருகிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஒன்றுமே வசூல் செய்யாமல் செய்தால்கூட நன்றாகத்தான் இருக்கும். இதிலே மாநில அரசாங்கம் பாதி கொடுக்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கம் கொஞ்சம் கொடுக்கிறது. இது இந்த மாதிரித்தான் இருக்க வேண்டும். இந்த விதிப் பிரகாரம்தான் வேலையும் நடந்து வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Is there any proposal before the Government to take up soil conservation work even in the non-block areas?

THE HON. SRI M. A. MANICKAVELU: I take it that it is not confined to block areas only but to other areas also.

SRI N. R. THIAGARAJAN: ஸார், மதுரை ஜில்லாவிற்குரிய இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டப் புத்தகத்தில் கோடைக் கானல் மலைப்பகுதியில் 1,250 ஏக்கர் அளவுக்கு இந்த திட்டத்தை நிறைவேற்றுவது என்று பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லி அதற்காக 6.92 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருப்ப தாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பெரியகுளம் தாலூக்காவில் போடிக்கு அருகில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்வதற்கு ஸாங்ஷன் செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருமங்கலம், பழனி தாலுக்காக்களிலும் இந்த வேலை நடை பெறும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தும் இது வரையில் ஒரு வேலையும் நடைபெறவில்லையே. இந்த வேலை இனிமேலாவது நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதிலே ஆரம் பத்திலே கொஞ்சம் காலதாமதம் இருந்தது. பிற்பாடு வேலை துரிதமாக ஆவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

SRI V. SUBBIAH: எந்த முறையில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU: காற்று அடித்து மண் மேடிட்ட நிலத்திற்கு செடி வைத்து தடுக்கப்படுகிறது. ஸாயில் எரோஷனுக்கு காண்டூர் பண்டிங் முறையில் தடுக்க ஏற்பாடு ஆகியிருக்கிறது. இன்னும் பள்ளம் குழி இருந்தால் அவைகள் சமமாக்கப்படுகிறது.

SRI M. A. B. ARUMUGHASAMY: தற்சமயம் மலைப் பிரதேசங் களில் ஏக்கருக்கு இவ்வளவு என்று கொடுக்கப்படும் தொகை போதவில்லை என்று சம்பந்தப்பட்ட என்ஜினீயர்கள் சர்க்காருக்கு சிபாரிசு செய்திருக்கிறார்களா ? அப்படியானல் அதன் மீது சர்க்காருடைய முடிவு என்ன ?

[10th August 1960

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தத் தகவல் எனக்குத் தெரியவில்லை. இதைப் பற்றி கனம் அங்கத்தினர் குறிப்பாக ஒரு கேள்வி போட்டால் விசாரித்து பதில் சொல்லலாம்.

*Power-boring and hand-boring set*

* 63 *Q.*—SRI K. GOPALA KOUNDER: கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் இன்று வரையில் அரசாங்கத்தால் வாங்கப்பட்ட

(i) பவர் போரிங் செட்டுகள்,

(ii) கை போரிங் செட்டுகள், எத்தனை ?

(ஆ) இவைகள் எந்தெந்த ஜில்லாவிற்கு எத்தனை கொடுக்கப்பட்டன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) (i) No power-boring sets were purchased from 1st January 1960, till date.

(ii) Eleven hand-boring sets were manufactured at the Government Industrial Engineering Workshop, Madras.

(*b*) The eleven hand-boring sets were distributed as follows :—

(1) Chingleput district—7.

(2) Tiruchirappalli district—3.

(3) Salem district—1.

SRI K. GOPALA KOUNDER: ஸார், மலைப் பிரதேசம் அதிகமாக இருக்கிற தென்னார்காடு ஜில்லாவுக்கு எத்தனை பவர் போரிங் செட் கொடுக்கப்பட்டிருக்கிறது ? கல் உடைக்கும் இயந்திரங்கள் எத்தனை கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இன்னும் 25 ஹாண்ட் போரிங் செட்டுகளுக்கு ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. அவை தயாரானதும் அந்தந்த ஜில்லாக்களுக்கு விநியோகிக்கப்படும்.

SRI K. GOPALA KOUNDER: மலைப் பிரதேசம் அதிகமாகவுள்ள செஞ்சி தாலுகாவுக்கு ஒரு பவர் போரிங் செட்டும், ஒரு கல் உடைக்கும் இயந்திரமும் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: எந்தெந்தப் பகுதியில் இவை மிக அவசியமோ அதைக் கவனித்து டிப்பார்ட்மெண்டார் வழங்குவார்கள்.



10th August 1960]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : There is shortage of power-boring sets in this State. As such may I know whether there is any proposal before the Government to produce more power-boring sets to meet the needs of agriculturists?

THE HON. SRI M. A. MANICKAVELU : There is difficulty in getting more power--boring sets. That is why Government are now manufacturing these hand-boring sets. They are much cheaper and one can get them in reasonably short time.

SRI S. LAZAR: இந்த போரிங் செட்டுகள் குடிதண்ணீர்க் கிணறுகளுக்கும் விவசாயத்திற்கும் பயன்படுகிறது. இவை இப்போதிருக்கும் அளவு போதவில்லை என்ற உண்மையை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா ? அதிகப்படியான ஹாண்ட் போரிங் செட்கள் வாங்கி விநியோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஏற்கெனவே அதிகமான அளவுக்கு ஹாண்ட் போரிங் செட்களுக்கு ஏற்பாடாகியிருக்கிறது. பவர் போரிங் செட்கள் வாங்க "பாரின் எக்ஸ்சேஞ்ச்" அதிகமாக வேண்டும். போதுமான "பாரின் எக்ஸ்சேஞ்சை"ப் பெறுவதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

SRI C. NATARAJAN: கள்ளக்குறிச்சி வட்டார அபிவிருத்தி கவுன்சில் அந்தப் பகுதிக்குக் கல் உடைக்கும் இயந்திரம் தனியாகக் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறதா? அதன் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த மாதிரி இயந்திரங்களைச் செய்ய உள் நாட்டில் முடியவில்லை. வெளி நாட்டிலிருந்து வாங்க "பாரின் எக்ஸ்சேஞ்ச்" தேவையாக இருப்பதால் அதற்காக ஏற்பாடு செய்து கொடுக்கிறோம்.

SRI M. D. THIAGARAJA PILLAI: தலைவர் அவர்களே, ஹான்ட் போரிங் செட்களுக்கு குழாய்கள் கிடைக்காததனால் கால தாமதம் ஏற்படுகிறது. குழாய்கள் வாங்கி சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த மாதிரியான கஷ்டங்கள் நடைமுறையில்தான் தெரிய வருகின்றன. அதைத் தெரிந்த பிறகு டிப்பார்ட்மெண்டார் எப்படி நிவர்த்திப்பது என்று நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்கள்.

*Repatriates from Ceylon* — P. 269, 10th Aug 19

* 64 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லை ஜில்லா இலங்கையிலிருந்து கடல் கடந்து தாயகம் திரும்பியோர் சங்கத்தின் சார்பில் 1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22உ, 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் தேதியில்

[10th August 1960

அவர்களின் குறைகளைப் பற்றி கனம் முதல் அமைச்சர், கைத் தொழில் அமைச்சர் அவர்களுக்கும் கனம் உள்விவகார அமைச்சர் அவர்களுக்கும் முறையே மகஜர் கொடுக்கப் பட்டதா ?

(ஆ) அதன் பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Two representations were received on behalf of the Tirunelveli district Ceylon Repatriates' Association, dated 20th September 1959 and 18th March 1960. These representations were addressed to the Chief Minister.

(b) Some measures for the relief and rehabilitation of Ceylon repatriates were suggested in these representations. The Government were already seized of the question of relief to Ceylon repatriates and they had initiated several measures for their rehabilitation. The Association was apprised of the position.

SRI K. RAMACHANDRAN : It is not the case with regard to Tirunelveli District only, it is so in almost all Southern districts. Will the Government consider it desirable to issue directives giving preference to at least qualified Ceylon repatriates in the matter of giving employment? I know a case where a qualified Ceylon repatriate has been without employment for over two years. He has been in search of employment for these two years. Will the Government give concessions to such kind of qualified Ceylon repatriates at least in the matter of employment?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, very many concessions are being given to Ceylon repatriates. We are also giving assistance to them for the purpose of starting small industries so that they can get themselves established. As a matter of fact reliefs granted to Ceylon repatriates were listed and placed before the table of the House in answer to starred question No. 436.

*Paddy and rice*

* 65 Q.—SRI P. G. MANICKAM: கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தஞ்சாவூரிலும், மற்ற ஜில்லாக்களிலும் 1959–60-ம் வருஷத்தில், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்ட நெல், அரிசி ஆகியவைகளின் விலை மதிப்பு எவ்வளவு ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No paddy or rice was procured by the merchants in Thanjavur and other districts during 1959–60 for export to places outside the country, as the export of paddy and rice outside the country is prohibited.



10th August 1960]

SRI K. B. S. MANI: இந்த நெல் அரிசி, மற்றைய ஜில்லாக்களுக்கு அனுப்பப்படவில்லையென்று சொன்னால் இன்றைய தினம் 48 பட்டணம் படி கொண்ட ஒரு மூட்டை $47\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்கப்படுவதன் காரணம் என்ன ? இது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குத்தான் தடை. தென் ஸோனில் ஒரு மாநிலத்தி லிருந்து மற்றொரு மாநிலத்திற்குப் போகலாம். அந்த அளவிலே கொஞ்சம் நெல், அரிசி கேரளாவுக்குப் போயிருக்கிறது.

SRI A. VEDARATHNAM: கேரளாவுக்கு அனுப்பினாலும் வெளியே அனுப்புவதுதான். கேரளத்திற்கு எவ்வளவு அரிசி அனுப்பப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU: கேரளத்திற்கு அனுப்பம்ப்பட்டிருக்கிற அரிசியின் அளவு 268,657 டன். ரயில் மூலமாக இரண்டு லட்சத்துச் சொச்சமும் ரோடு மூலமாக 67,614 டன்னும் அனுப்பப்பட்டிருக்கிறது.

*Madras State Police Officers' Conference*

* 66 Q.—SRI P. G. MANICKAM:
SRI V. K. KOTHANDARAMAN: } கனம் நிதி
SRI S. M. ANNAMALAI:
அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உதக மண்டலத்திலே 1960-ம் வருஷம் மே மாதத்தில் நடை பெற்ற சென்னை ராஜ்ய போலீஸ் அதிகாரிகள் 4-வது மகாநாட்டிலே கலந்தாலோசிக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM: It will not be in public interest to disclose the details of the proceedings of that Conference.

*President, National Project Workers' Union, Kundah*

* 67 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the President; National Project Workers' Union, Kundah, was arrested on 22nd April 1960 under the Preventive Detention Act?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

SRI N. K. PALANISAMI: இந்த குந்தா எலெக்ட்ரிசிடி ஒர்க்கர்ஸ் காரியதரிசியை 151-வது செக்ஷன் பிரகாரம் " வாரண்ட் " இல்லாமல் அடைத்து வைக்க வேண்டிய காரணம் என்ன ?

[10th August 1960

THE HON. SRI C. SUBRAMANIAM: அவர் செய்த காரியங்களுக்காகவும், செய்ய இருந்த காரியங்களுக்காகவும் 151-வது செக்ஷன் பிரகாரம் அரஸ்ட் செய்திருக்கிறார்கள். தவறுதலாக அரெஸ்ட் செய்திருந்தால் கோர்ட்டுக்குப் போய் நிவாரணம் பெற சட்டத்தில் இடமிருக்கிறது.

## *Crop Competitions*

* 68 *Q*.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the maximum yield per acre secured by agriculturists in the District Crop Competitions of last year conducted by the Government through Agricultural department or the Community Project department;

(*b*) the maximum yield per acre in each of the seed farms of our State; and

(*c*) the steps taken to increase the yield in the seed farms?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*): A paper[a] is placed on the table of the House.

(*c*) Provision of adequate irrigation facilities and application of appropriate doses of manures and fertilisers in economic quantities and adoption of improved methods and plant protection measures.

SRI K. RAMACHANDRAN: In the statement placed on the table of the House, Tirunelveli has recorded production of 8,300 lb. It seems to me to be high. May I know what are the methods adopted in that district for having such increased production and if so, will such methods be recommended to other districts also?

THE HON. SRI M. A. MANICKAVELU: More or less same methods are adopted in all districts but the extra production might be due to richness of the soil or timely wetting of the crop and other factors.

SRI S. LAZAR: இந்தக் குறிப்பில் இருந்து தெரிந்து கொள்ளக் கூடியது தனியார் விவசாயப் பண்ணைகளில் 8,000 ராத்தலும், சர்க்காருடைய பண்ணைகளில் 2,000 ராத்தலும் என்ற அளவில் இருக்கிறது. சர்க்கார் பண்ணைகளில் ஏறக்குறைய 4-ல் ஒரு பங்குதான். இவ்வளவு வித்தியாசம் இருப்பதற்குக் காரணம் என்ன? பொது மக்கள் அரசாங்கப் பண்ணைகளை மாதிரிப் பண்ணைகளாக வைத்து முன்னேறவேண்டுமென்று சொன்னால் இவைகளைத் திருத்தியமைத்து நல்ல முறையில் சாகுபடி செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமா?

[a] Printed as appendix on pages 368 and 369 infra.



10th August 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU: The State Seed Farm yields are practically average yields obtained under average conditions in average types of soil under the new set up. The State Seed Farms are run to produce improved strains of seeds thus stressing on 'quality' whereas in crop competition stress is upon the 'quantity' of any crop.

SRI S. M. ANNAMALAI: மேஜை மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வேப்பங்குளம் பண்ணையில் 120 ராத்தல் நிலக்கடலை ஏக்கரொன்றுக்கு விளைந்ததாகவும், கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள செடிமுத்தார் பண்ணையில் 491 ராத்தல் நிலக்கடலை ஏக்கரொன்றுக்கு விளைந்ததாகவும், செங்கற்பட்டு மாவட்டத்தில் சிறுகாவேரிப்பாக்கம் பண்ணையில் ஏக்கரொன்றுக்கு 578 ராத்தல் நெல்லும், 484 ராத்தல் நிலக்கடலையும் விளைந்ததாகவும், இராமனுதபுரம் மாவட்டத்தில் புள்ளூர் பண்ணையில் ஏக்கரொன்றுக்கு 277 ராத்தல் நிலக்கடலை விளைந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்படி நான்கு பண்ணைகளில் இவ்வளவு குறைவாக விளைவித்ததற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: முன்பே சொன்னேன். நல்ல வித்துக்களாக உற்பத்தி பண்ணவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் முக்கியமான கொள்கை. அதிகப்படியாக உற்பத்தி செய்வது என்பது தனி விஷயம். விதை போட்டால் நன்றாக, செழிப்பாக பயிர் வரவேண்டும் என்பதிலே "கான்ஸென்ட்ரேஷன்" செய்யப்படுகிறது.

SRI V. SUBBIAH: விதைப் பண்ணைகளை அரசாங்கமே எடுத்து நடத்துவதைவிட, இப்பொழுது வரக்கூடிய பஞ்சாயத்து யூனியன்களே விதைப் பண்ணைகளை நடத்தும் முறையில் அவர்களிடம் ஒப்படைக்கும் உத்தேசம் இருக்கிறதா? அப்படியிருந்தால், அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லாமலும் விவசாயிகள் அதில் அக்கரை எடுத்துக் கொள்ளவும் முடியும் அல்லவா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அரசாங்கம் நடத்தும் பண்ணையிலேயே அந்த ஆராய்சி முடியவில்லை. அதுதான் இன்னும் "எக்ஸ்பெரிமென்டில்" இருக்கிறது. அதைப் பார்த்த பிற்பாடு எது உசிதமோ அதன் பிரகாரம் செய்யலாம்.

SRI T. S. RAMASWAMI: தனி நபர்களே ஏழாயிரம் எட்டாயிரம் ராத்தல் வரை ஏக்கரொன்றில் உற்பத்தி பண்ணும் போது, நல்ல பயிற்சியும் எல்லா வசதிகளும் பெற்றுள்ள அரசாங்கப் பண்ணைகள் எடுத்துக்காட்டாக இருக்கவேண்டியிருக்க, அவைகளில் மகசூல் ஏன் குறைவாக இருக்கிறது? அதைக் குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU: நான் முன்பே சொன்னேன் தனிப்பட்ட நபர்கள் நிறைய உற்பத்தி பண்ணவேண்டுமென்ற நோக்கத்தோடு செய்கிறார்கள். ஆனால்,

[10th August 1960

அரசாங்கப் பண்ணைகளிலே நல்ல பொறுக்கு விதைகள், நல்ல " க்வாலிடி " விதைகள், உயர்ந்த ரக விதைகள் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்வதால் உற்பத்தி சற்றுக் குறைவாக இருக்கிறது. ஆனால், நல்ல சரக்கு.

*Chillies and tamarind*

* 69 *Q.*—Sri A. A. RASHEED, Sri S. M. ANNAMALAI } Will the Hon. the Minister for Revenue be pleased to state the gist of the reply received from the Union Government regarding the export of chillies and tamarind?

The Hon. Sri M. A. MANICKAVELU : The Government of India have replied that the export policy in respect of chillies and tamarind has been carefully reviewed and that due to the considerations of earning foreign exchange and in the long term interests of trade in these commodities they do not consider it advisable to recommend a change in the existing export policy.

Sri A. A. RASHEED : Sir, May I know whether the Government have represented to the Union Government the hardships of the consumers as against the producers?

The Hon. Sri M. A. MANICKAVELU : We represented and this is the reply we have received. In the interest of the trade itself and to earn foreign exchange, export should not be totally banned.

Sri S. M. ANNAMALAI: நம் மாநிலத்திற்கு ஆண்டொன்றுக்குத் தேவையான புளி, மிளகாய், எவ்வளவு? வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற புளியின் அளவுக்குப் பற்றாக் குறை இருக்கிறதா? பற்றாக்குறை இருக்கும்போது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதனால் தமிழ் நாடு பாதிக்கப் படுகிறது. ஆகையால் மத்திய சர்க்காரிடத்தில் புளி, மிளகாய் இவைகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கக் கூடாது என்று இந்தச் சர்க்கார் ஏன் வற்புறுத்தக் கூடாது?

The Hon. Sri M. A. MANICKAVELU: இதைப் பற்றி முன்பே எழுதியதற்குப் பதில் வந்தது. இன்னும் வற்புறுத்த வேண்டுமானால் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் அர்த்தம்.

Sri A. A. RASHEED : Sir, Is the Hon. Minister aware that the prices of chillies and tamarind are still high now in our State? Will the Government once again recommend to the Union Government to allow restricted export, if there cannot be a total ban, of these commodities of chillies and tamarind?

The Hon. Sri M. A. MANICKAVELU : Now the foreign exchange is very necessary for more useful purposes and we are also asking for it. In this context it will not be advisable to make any suggestion that will not bring us more foreign exchange.



10th August 1960]

Sri S. M. ANNAMALAI: சென்ற ஆண்டு இதே நேரத்தில் புளி, மிளகாய் விலை எவ்வளவு இருந்தது? இப்பொழுது விலை எவ்வளவு இருக்கிறது?

The Hon. Sri M. A. MANICKAVELU: தகவல் வேண்டுமானால் தனியாகக் கேள்வி போடவேண்டும். புளி, மிளகாய் இவைகளை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு உடம்புக்கு நல்லது என்று சொல்வார்கள்.

Sri V. SANKARAN: மத்திய சர்க்காருடைய பதிலிலே, தற்போதுள்ள ஏற்றுமதிக் கொள்கையிலே எந்தவித மாறுதலும் தேவையில்லை என்று இருப்பதாகச் சொல்லப்பட்டது. தற்போதுள்ள மத்திய சர்க்காரின் ஏற்றுமதிக் கொள்கை என்ன என்பதை விவரமாக எடுத்துச் சொல்ல முடியுமா?

Mr. SPEAKER : The hon. Member must put a separate question.

Sri S. LAZAR : Is the Government aware that the prices of certain other goods like tannery goods are going very high and will this Government recommend to the Union Government to ban the export of these also?

The Hon. Sri M. A. MANICKAVELU : This morning I am concerned only with chillies and tamarind.

Sri V. K. KOTHANDARAMAN: நமது ராஜ்யத்திலிருந்து புளி, மிளகாய் ஏற்றுமதி செய்யக்கூடிய கம்பெனிகள் யாவை என்று சொல்ல முடியுமா?

Mr. SPEAKER: தனிக் கேள்வி போட வேண்டும்.

Sri N. R. THIAGARAJAN: ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், அந்த நாட்டு மக்களின் தேவையை ஓரளவு குறைத்தாவது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பணம் சம்பாதிப்பதை முக்கியமாகக் கருதி, அதே வகையில் புளி, மிளகாய் இவைகளை இலங்கைக்கு ஏற்றுமதி செய்து கொண்டு வந்தோம். அதை மீண்டும் கையாண்டு, அதிகமாக ஏற்றுமதி செய்ய அரசாங்கம் முன் வருமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: அந்த மாதிரி எல்லோரும் புரிந்துகொள்ளவில்லை. அதுதான் கஷ்டம்.

*Housing scheme for industrial workers*

* 70 *Q.*—Sri M. P. SARATHI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) இந்த ராஜ்ய தொழிலாளர்களுக்கு வீடு அமைப்புத் திட்டத்திற்காக ஆயுள் இன்ஷூரன்சு கார்ப்பொரேஷனிடமிருந்து அரசினர்துறைக்கு கிடைத்த கடன் தொகை எவ்வளவு?

[10th August 1960

(ஆ) ராஜ்ய அரசாங்கம் இத் திட்டத்தின் கீழ் எந்த இடங்களில் எத்தனை வீடுகள் கட்ட முடிந்தது?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Life Insurance Corporation of India is not giving any loan to the State Government for construction of tenements for industrial workers.

(b) Does not arise.

*Sugar*

* 71 Q.—SRI N. R. THIAGARAJAN: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லாவிற்கு ஒதுக்கப்பட்ட சீனி மூட்டைகள் எத்தனை?

(ஆ) அதில் பெரியகுளம் தாலூகாவிற்கு எத்தனை மூட்டைகள் கொடுக்கப்பட்டன?

(இ) சீனி வாங்கி சில்லறையில் பொதுமக்களுக்கு விற்று பழக்கமில்லாதவர்களுக்கு சீனி பெர்மிட் கொடுக்கப்பட்டதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) 10,000 bags.

(b) 1,200 bags.

(c) No, Sir.

SRI N. R. THIAGARAJAN: "சர்க்கரை" என்ற சொல் தான் இனிப்பாக இருக்கிறதே தவிர, விநியோக விஷயத்தில் இனிப்பாக இல்லை; கசப்பாக இருக்கிறது. நகரவாசிகளுக்கு அதிகமாக விநியோகிக்கப்படுகிறதே தவிர, கிராமவாசிகளுக்குப் பரவலாக விநியோகிக்கப்படவில்லை என்ற புகார் இருக்கிறது. ஆகவே, ஒரு திட்டவட்டமான கொள்கையை வகுத்து, நகரங்களில் பங்கீடு செய்வதைப்போல் கிராமங்களிலும் சரியாகப் பங்கீடு செய்யப்படவேண்டுமென்று சர்க்கார் சரியான உத்தரவு போடுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: திட்டம் போட்டு, எந்த எந்த ஜில்லாவுக்கு எவ்வளவு தேவை இருக்கிறதோ அதைக் கணக்கிலெடுத்து அதற்குத் தகுந்தாற்போல் ஏற்பாடு செய்யப்படுகிறது. இதிலே கஷ்டம் என்னவென்றால், வட நாட்டிலிருந்து சர்க்கரை இங்கு வருவதற்கு ஒரு மாதம் இரண்டு மாதம் ஆகிறது. அதுபற்றி அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். ஒரு மாதம், இரண்டு மாதத்திற்கு முன்பே "லோட்" பண்ணி அனுப்பச் சொல்லியிருப்பதால், இனி காலா காலத்தில் வரும்; அப்பொழுது சரியாகப் போய்விடும்.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM: மதுரை நகரைப் பொறுத்தவரையில், அங்கு விசேஷ காலங்களிலும் மற்ற காலங்களிலும் சர்க்கரை வேண்டியிருந்தால், தாசில்தாரோ, ரெவின்யூ



10th August 1960]

டிவிஷனல் ஆபீசரோ கொடுக்க மறுக்கிறார்கள். விசேஷ காலங்களில் சர்க்கரை கிடைக்க அரசாங்கம் வகை செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அதைச் செய்து கொண்டுதான் வருகிறார்கள். தீபாவளி, பொங்கல் காலத்தில் அதிகமாக சர்க்கரை கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள்.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM: கல்யாண சமயங்களிலே . . .

THE HON. SRI M. A. MANICKAVELU: கல்யாணங்கள் ஒரு வருஷத்திலே ஜாஸ்தி நடக்கலாம், ஒரு வருஷத்திலே குறைவாக நடக்கலாம். அதைப்பற்றி திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. பண்டிகை என்றால், அந்தந்தக் காலத்தில் தாராளமாக அதிகமாகக் கொடுக்கிறோம்.

SRI K. SATTANATHA KARAYALAR: சர்க்கரை விநியோகிப்பதற்கு எந்த விதமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக பெரும் பகுதி கொடுக்கப்படாமல் மிகக் குறைந்த அளவு தானே கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. பத்து சதமானத்திற்கும் குறைவாகத்தான் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. சர்க்கரை விநியோகத்தில் நமக்குப் பரிபூரணமான கட்டுப்பாடு கிடையாதா? கூட்டுறவு இயக்கத்திற்கு முதல் இடம் கொடுக்காமல் பரம்பரை வியாபாரிகள் மூலமாகவே கொடுக்கப்படுவது ஏன்?

MR. SPEAKER: மூலக் கேள்வி, "மதுரை ஜில்லாவிற்கு ஒதுக்கப்பட்ட சீனி மூட்டைகள் எத்தனை" என்பது பற்றியது, "பாலிஸி மாட்டர்" கேட்கப்படவில்லை. மந்திரி அவர்கள் சுருக்கமாகப் பதில் கொடுப்பதாக இருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை. I should have even disallowed the question of the hon. Member Srimathi Lakshmikantham and there is no justification for the hon. Member to put a similar question.

(பதில் இல்லை)

* 72 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken to bring down the price of sugar in the Madras City?

THE HON. SRI M. A. MANICKAVELU: Sugar is being sold in Madras City at present at Rs. 118 to 121·44 per bag and Rs. 1·66 to 1·71 per viss, which is the controlled price.

[10th August 1960

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that sugar is not available at the controlled rate in the Madras City and it is sold in fact at Rs. 2-50 in blackmarket and if so, what steps the Government have taken to put down blackmarketing and sell sugar at the control price?

THE HON. SRI M. A. MANICKAVELU : Government have fixed control price but the prices vary in the blackmarket. Blackmarket is a very elusive sort of market. If more sugar is put on the market, blackmarket will have no busy time. The only remedy is for more sugar to be made available and also for the public to boycott the blackmarket.

MR. SPEAKER : Now the hon. Member, Sri Sattanatha Karayalar, can put his supplementary question in a modified form under this main question.

SRI K. SATTANATHA KARAYALAR: கூட்டுறவு சங்கங்களின் மூலமாக சர்க்கரையை விநியோகித்தால் அதன் விலை குறையும் என்று சர்க்கார் கருதவில்லையா? சர்க்கரையை முழுவதும் கூட்டுறவு மார்கெட் மூலமே விநியோகிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அதற்குப் போதுமான கூட்டுறவு சங்கங்கள் இருக்கவேண்டும். இம்மாதிரி சர்க்கரை விற்கிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். மதுரை தாலுகாவில் மாத்திரம் 800 சில்லரை வியாபாரிகள் இருக்கிறார்கள். எல்லா தாலூக்காக்களிலும், பிர்க்காக்களிலும் கூட்டுறவு சங்கங்கள் கிடைப்பது கஷ்டம். ஆகையினால் சாத்தியமான இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகிக்கிறோம். மற்ற இடங்களில் "ரீடைலர்ஸுக்கு" கொடுக்கிறோம்.

SRI R. KRISHNASAMI NAIDU: சர்பத் அல்லது மற்ற இனிப்பு பண்டங்கள் தயாரிப்பதற்காக பெர்மிட் வாங்கிக் கொள்ளுபவர்கள், சர்க்கரை மூட்டைகளைக் குறைந்த அளவுக்கு உபயோகப்படுத்திக்கொண்டு, பாக்கியை பிளாக்மார்கெட்டில் விற்பதாக பரவலாக புகார்கள் இருக்கின்றன. கொடுக்கப்படும் பெர்மிட்டுகளின் பேரில் வாங்கப்படும் சர்க்கரை சரிவர உபயோகப்படுத்தப்படுகிறதா என்பதைப் பரிசீலனை செய்து, இம்மாதிரி பாக்கி சர்க்கரை பிளாக்மார்கெட்டில் விற்கப்படுவதைத் தடுக்க சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இம்மாதிரி சர்க்கரை பிளாக்மார்கெட்டில் விற்கப்படுவதற்கு உபயோகிக்கப்படுகிறது என்று புகார்கள் வரும் சமயத்தில், அவைகளை விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். புகார் வந்தால்தான் தெரியும்.

SRI A. A. RASHEED : In order to reduce the price of sugar, have the Government of Madras asked the Government of India for increased allotment of sugar for our State and if so, what is the reply received from them?



10th August 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU : We have not only asked for increased supply but have also asked them to send the consignment a little in advance so that it may come here in time. As I said earlier, it takes $1\frac{1}{2}$ to 2 months for sugar to reach Madras after it is loaded in Uttar Pradesh and other States.

SRI P. M. MUNUSAMI GOUNDER: சர்க்கரை விநியோகம் செய்வதில் மற்ற சாமான்கள் வாங்கினால் தான் சர்க்கரை கொடுக்கப்படும் என்ற முறையில் நடந்துகொண்டிருக்கிறது. ஆகையால் புதியவர்கள் போகும்பொழுது சர்க்கரை கொடுக்க மறுக்கிறார்கள். யார் சென்றாலும் கொடுக்கலாம் என்ற முறையை சர்க்கார் ஏற்படுத்தவேண்டும். அதே மாதிரி சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கூட தனிப்பட்ட முறையில் சர்க்கரை விநியோகம் செய்யப்படுவதாகத் தெரிகிறது. அந்தச் சலுகை எல்லோருக்கும் கிடைக்கச் செய்ய சர்க்கார் ஆலோசிக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அதிலே என்ன கஷ்டம் என்றால், சர்க்கரையை கண்டிரோல் விலைக்கு வாங்கி பிளாக்மார்கெட்டில் விற்பதற்கென்றே ஆள்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 8 அணா 12 அணா கூலி கொடுக்கப்படுகிறது, கியூவில் நின்று வாங்குவதற்காக. இன்னும் ஏதாவது சாமான் வாங்கவேண்டுமென்று வற்புறுத்துவது, இதை ஓரளவுக்குத் தடை செய்வதுமாதிரி இருக்கிறது.

*Madras-Chingleput District Retail Dealers' Association*

* 73 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received a memorandum, dated 3rd March 1960, from the Madras-Chingleput District Retail Dealers' Association, Madras, regarding the difficulties in respect of procurement and distribution of wheat, sugar skimmed milk powder, rice and camphor; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes.

(*b*) Under the direction of the Government, the Commissioner of Civil Supplies had looked into the matter and had also given a reply on the 12th April 1960 to the Retali Dealers' Association.

*Five-faced Lingam*

*74 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா திருவானைக்காவலில் வடக்குத் தெருவிலுள்ள ஒரு பழைய கோவிலில் சமீபத்தில் பஞ்சமுக லிங்கம் அகப்பட்டதா?

[10th August 1960

(ஆ) அப்படியாயின், அதை அரசாங்கம் என்ன செய்திருக்கிறது?

THE HON. SRI V. RAMIAH : (a) & (b) One anchamuga Lingam was unearthed in 1943 and it was installed in a temple under the order of Sri Sankaracharya Mutt, who are in management of the temple.

SRI A. VEDARATHNAM: இம்மாதிரி பூமியில் அகப்படுகின்ற விக்கிரகங்களையெல்லாம் சர்க்கார் என்ன செய்கிறார்கள்? இது விஷயத்தில் அவர்களுடைய கொள்கை என்ன? சில இடங்களில் அதை அந்தந்த ஆலயங்களில் கொடுத்து பூஜை செய்ய அனுமதிக்கிறார்கள். சில இடங்களில் அப்படி அகப்படுகின்ற விக்ரகங்களை மியூஸியத்திற்குக் கொண்டு போகிறார்கள். அப்படிச் செய்யாமல் அந்தந்த ஆலயங்களில் அந்த விக்ரகங்களைக் கொடுத்து பூஜை செய்வதற்கு அனுமதிப்பார்களா?

THE HON. SRI V. RAMIAH: நல்ல பழுது இல்லாமல் இருக்கும் விக்ரகங்கள் கிடைத்தால், ஆங்காங்கு இருக்கக்கூடிய கோவில்களில் வைத்து பூஜை செய்வதற்கு ஏற்பாடு செய்கிறார்கள்.

SRI M. KARUNANITHI: பஞ்சமுக லிங்கம் என்று கூறப்படுகிறது. ஐந்து முகங்களா அல்லது வறுமையில் அடிபட்ட முகமா? (சிரிப்பு)

(பதில் இல்லை)

SRI V. K. KOTHANDARAMAN: முகம் மாத்திரம் பஞ்சமா? அல்லது கால், கை, வயிறு எல்லாமே பஞ்சமாக இருக்கிறதா?

(பதில் இல்லை)

*Kabaleeswarar Devasthanam*

MR. SPEAKER: The hon. Member, Sri K. Vinayakam, is not in his seat. The question and answer will be printed in the proceedings.

* 75 Q.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state on what basis the trustees of Kabaleeswarar Devasthanam, Mylapore, Madras are appointed?

THE HON. SRI V. RAMIAH : The trustees are appointed according to the scheme settled by the Hindu Religious and Charitable Endowments authorities.

*Cashewnut*

MR. SPEAKER : The hon. Member, Sri K. R. Viswanathan, is not in his seat. The question and answer will be printed in the proceedings.



10th August 1960]

* 76 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have received any petition, dated 23rd June 1960 from the villagers of Udaiyarpalayam taluk requesting to bring cashewnut crop under the Regulated Market system; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Does not arise.

*Sulphur*

*77 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

1959-ஆம் டிசம்பர்மீ 15-ம் தேதி நட்சத்திரக் குறியிட்ட கேள்வி எண் 181-க்கு அளித்த பதிலையொட்டி போளூர் தாலுகா தாளியார் பங்களாவுக்கு அருகில் கிடைக்கும் கந்தகத்தைத் தோண்டி எடுப்பது எந்த நிலையில் உள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : The Director, Geological Survey of India, has reported that the Geological Survey of India are short of drilling equipment and that the work will be taken up during the Third Plan period as soon as a drill becomes available.

SRI S. M. ANNAMALAI: நானும் இந்தச் சட்டமன்றத்தில் 3-1/2 ஆண்டுகளாக இருக்கின்றேன். இதுபற்றி 4 கேள்விகள் போட்டு, அடுத்தாற்போல் 5-வது கேள்வி போட்டிருக்கிறேன். இந்த ஐந்து கேள்விகளுக்கும் அமைச்சர் அவர்கள் இதே மாதிரி தான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நாடு இருக்கிற நிலைமையில் இந்தக் கந்தகத்தை தோண்டி எடுத்தால் மிகவும் கிராக்கியாக இருக்கும். இந்த நிலைமையை ஒட்டி இந்த கந்தகத்தை தோண்டி எடுப்பதற்கு மத்திய சர்க்காரை அணுகி கூடிய சீக்கிரம் துரிதமான நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN: ஐந்து கேள்விகள் போடுவதன் மூலம் ஒரு டிரில் கிடைக்குமானால், இன்னும் ஐந்து கேள்விகள் போடலாம் கனம் அங்கத்தினர். டிரில் அகப்படவில்லை என்பதுதான் காரணம்.

*Improvement of tanks*

*78 Q.—SRI K. GOPALA KOUNDER: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலுகா, செம்மேடு கிராமத்தில் உள்ள P.W.D. ஏரியை அபிவிருத்தி செய்யத் திட்டம் தயாரிக்கப்பட்டதா?

(ஆ) அப்படியானால், எப்பொழுது வேலை துவக்கப்படும்?

[10th August 1960

The Hon. Sri M. A. MANICKAVELU : (a) Yes, Sir. Proposals for (i) Special repairs and improvements to the tank and (ii) Desilting-*cum*-reclamation of the tank are being finalised.

(b) The works are likely to be started in January 1961.

Sri K. GOPALA KOUNDER: ஏற்கனவே இந்த ஏரி வேலையை 1959–60-ல் எடுத்துக்கொள்ளுவதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் நாளது வரையிலும் ஒரு விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகையால் 1960–61-ம் ஆண்டிலாவது துரிதமாக இந்த வேலை எடுத்துக் கொள்ளப்படுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: ஜனவரி 1961-ல் அதாவது நடப்பு நிதி ஆண்டில் எடுத்துக்கொள்ளப்போவதாகத் தான் சொன்னேன்.

* 79 Q.—Sri S. M. ANNAMALAI: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தாலூகா, வளையாம்பட்டில் உள்ள லாலா ஏரி, துலசீபாய் ஏரிகளைப் பழுதுபார்க்க வேண்டு மென்று கோரி கிரிசமுத்திரம் கிராம மக்களிடமிருந்து 1951-ம்ஞு பிப்ரவரிமீ 11, 1957-ம்ஞு ஆகஸ்டுமீ 26, 1959-ம்ஞு டிசம்பர்மீ 1 தேதிகளில் மகஜர் வந்ததா?

(ஆ) அப்படியானால், அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

The Hon. Sri M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Necessary sanction of estimate for the restoration of the Lala tank has been issued by the Board of Revenue (Food Production). Proposal of the Superintending Engineer (Food Production) for the restoration of the Thulasi Bai tank is awaited by the Board.

Sri S. M. ANNAMALAI: இந்த ஏரிகள் எப்பொழுதோ உடைந்துவிட்டன. சுமார் 15 ஆண்டு காலமாக பல மகஜர்கள் அனுப்பியும்கூட மகஜர் ஒன்றும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இந்த ஏரிகள் மூலம் ஏறத்தாழ 1,000 ஏக்கர்களுக்கு மேல் பாசன வசதி கிடைக்கும். இவ்வளவு காலமாக இவைகளை சும்மா விட்டுவைப்பது சர்க்காருக்கு நியாயமா? ஆகையால் உடனடியாக இதைக் கவனித்து சீக்கிரம் நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருவார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : There was an order of ban. The ban order was lifted only in January 1959 so that each case may be considered on merits. In view of that, it was further examined and now an estimate of Rs. 23,000 has been sent from the Superintending Engineer for the restoration of the Lala tank. The department has also instructed the Superintending Engineer to expedite the proposal in respect of the Thulasi Bai tank. So, we have asked the estimates to be expedited.



10th August 1960]

Sri T. KARIA GOUNDER: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஏரிகளைப் புதிப்பிப்பது, பாலார் பேசின் ரூல்ஸ்படி நிறுத் தப்பட்டிருக்கிறதா? அப்படி உடைந்துபோன ஏரியைப் புதிப் பிக்க ரூல்ஸ் இடம் கொடுக்காது என்பதை தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU: ரிப்பேர் செய்வது என்று முடிவு செய்துதான் எஸ்டிமேட் வந்திருக்கிறது. அதை முழுவதும் பரிசீலித்த பிறகு ரிப்பேர் செய்யப்படும்.

*Death of a worker*

* 80 Q.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the reasons for not holding a post-mortem examination over the dead body of a building worker who died on 8th March 1960 in the Mary's College, Tuticorin?

The Hon. Sri C. SUBRAMANIAM : In this case death was due to an accidental fall and there was no foul play or suspicion. As the incident was not reported to the Police no post-mortem examination was held over the body of the deceased.

*Police dogs*

* 81 Q.—Sri P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1959–60-ல் போலீஸ் நாய்களின் பராமரிப்புக்காக எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது?

(ஆ) கேஸ்களைத் துப்புத்துலக்க நாய்களைக் கூட்டிச் சென்றதற்காக எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது?

(இ) எத்தனை கேஸ்களில் துப்புத்துலக்க போலீஸ் நாய்கள் உபயோகப்படுத்தப்பட்டன?

(ஈ) இவைகளுள் எத்தனை கேஸ்கள் துப்புத்துலக்கப் பட்டன?

The Hon. Sri C. SUBRAMANIAM : (a) Rs. 8,023-08 nP.

(b) Rs. 5,546-98 nP.

(c) 184.

(d) 59.

Sri P. G. MANICKAM: சார், சென்னையிலிருந்து பல ஜில்லாக்களுக்கும் நாய்களை அனுப்ப வேண்டியிருப்பதால் அதிகச் செலவினங்கள் ஏற்படுகின்றன. ஆகையினால், நாய்களை வளர்ப்பதை இன்னும் சில ஜில்லாக்களுக்கு விஸ்தரித்து, அங்கெல்லாம் நாய் வளர்க்கும் திட்டத்தை அமுலாக்க சர்க்கார் பரிசீலனை செய்கிறதா, அல்லது இனி பரிசீலனை செய்யுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

[10th August 1960

*Intensive Cultivation schemes*

* 82 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆடுதுறையில் துவக்கப்பட்டிருக்கும் தீவிரச் சாகுபடி பரீட்சார்த்த திட்டத்திற்காக (1) போர்டு ஸ்தாபனம், (2) மத்திய சர்க்கார், (3) நம் ராஜ்ய சர்க்கார், பங்குத் தொகை எவ்வளவு?

(ஆ) எத்தனை ஏகரா நிலப்பரப்பில் இத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும்?

(இ) விவசாய அபிவிருத்திக்காக விவசாயிகளுக்கு என்னென்ன உதவிகள் அளிக்கப்படும்?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) According to the tentative scheme received from the Government of India, the sharing of the expenditure is as follows :—

The Ford Foundation will meet 50 per cent of the cost of additional staff during the entire period of the programme. The balance of 50 per cent during 1960-61 will be borne by the Government of India, during the subsequent years the balance will be shared between the Centre and State Governments on a 50 : 50 basis.

In respect of other items such as training of staff in farm management, resources survey and evaluation, transport, agricultural workshops, scientific demonstrations, foreign specialists, etc., the finalised scheme from the Government of India is awaited and precise details of the pattern of financial assistance will be known after it is received.

(*b*) The scheme will be implemented in Thanjavur district and to start within an area of 184,800 acres in 22 blocks and it will be extended eventually to 34 blocks at the end of the Five-year period, covering an area of about 9 lakh acres.

(*c*) The essence of the scheme is that each farmer will be helped to draw up a plan of increasing production in respect of his farm and to achieve the planned target by providing technical guidance and timely credit and supplies required under his farm plan.

Sri P. G. MANICKAM: ஸார், இந்த பரீக்ஷார்த்த திட்டத்தை அமுலாக்க, வேலை முறைகளை வகுக்க, தஞ்சாவூரிலும் கோயம்புத்தூரிலும், அதிகாரிகள், விவசாயிகள் மகாநாடு நடந்திருப்பதாகத் தெரிகிறது ; அந்த மகாநாட்டில் என்னென்ன வேலை முறைகளை வகுத்திருக்கிறார்கள் ?

The Hon. Sri M. A. MANICKAVELU: தஞ்சாவூர் பாக்கேஜ் திட்டத்தைப் பற்றியதுதான் இது ; அந்த விவரங்கள் கொடுக்கப்பட்டன.



10th August 1960]

Sri A. VEDARATHNAM: ஸார், இந்த பாக்கேஜ் டீலில் எடுத்துக் கொண்டிருக்கிற ப்ளாக்குகள், "வெட் ஏரியாஸ்" நீர் பாசன வசதிகள் உள்ள பகுதிகளைத்தான் எடுத்திருக்கிறார்கள். அங்கே உள்ள மானாவரி, "ரெயின்பட்" பகுதிகளும் இந்த பாக்கேஜ் டீலில் சேர்க்கப்படுமா? பாசன வசதியில்லாத பகுதிகளுக்கு பாசன வசதியும் செய்து கொடுக்க, அந்த முறையில் பாக்கேஜ் டீலை அமுலாக்க, வசதி செய்து கொடுக்கப்படுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: ஆரம்பத்தில் 184,800 ஏக்கர் என்று சொன்னேன். திட்ட காலத்திற்குள் அது ஒன்பது லட்சம் ஆகும். அதற்கு வேண்டிய நிலம், ரொம்ப நல்ல வசதியான நிலம் எங்கு இருக்கிறதோ, அது எடுக்கப்படும்.

Sri M. D. THIAGARAJA PILLAI: தஞ்சை ஜில்லாவில், கடைசியாக எடுக்கப்பட்டிருக்கின்ற புது ப்ளாக்குகள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுமா, அங்கு இது விஸ்தரிக்கப்பட இருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: இப்பொழுது 22 ப்ளாக்குகளுக்கு இருப்பது, பின்னால், 34 ப்ளாக்குகளுக்கு விஸ்தரிக்கப்படும் என்று சொன்னேன்.

Sri K. RAMACHANDRAN : Sir, the basis of the scheme is to increase production, and therefore, in the implementation of the scheme, what is the rate of increase in production that is anticipated?

The Hon. Sri M. A. MANICKAVELU : We must wait a bit and see.

*Nalagarh Committee*

* 83 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Central has called for any proposals from this State for giving effect to the recommendations of the Nalagarh Committee on Agricultural Administration; and

(*b*) if so, the details of the reply sent?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The proposals are under consideration of the Government.

Sri N. K. PALANISAMI : When I put the queston some $1\frac{1}{2}$ years ago the same reply was given. Now it is being repeated. May I know why in spite of the lapse of $1\frac{1}{2}$ years the matter is still under consideration?

The Hon. Sri M. A. MANICKAVELU : The Government have examined all the recommendations of the Committee. Almost all the recommendations have been treated as already in vogue in this State. Necessary action has been taken to implement a few

recommendations which require implementation. Some more proposals are expected. When they are received they will be examined and final decision taken.

*Air-conditioning of the House of the Legislative Assembly*

* 84 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to air-condition the House of the Madras Legislative Assembly; and

(*b*) if so, when?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact that members and Ministers can turn out much better and more work in an air-conditioned House than in a sultry place? If so, will the Government reconsider the air-conditioning of this House?

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not know whether all hon. Members would agree with the proposal put forward by the hon. Member. As a matter of fact the general experience is once one is inside an air-conditioned chamber it is all right. But when he comes out he suffers all the more.

Sri K. S. G. HAJA SHERIFF : It is a recognized fact that in an air-conditioned room one could turn out more work. So will the Government consider the possibility of providing at least Ministers' rooms with air-conditioning plant so that they could turn out better and more work?

The Hon. Sri S. SUBRAMANIAM : I suppose it is not a reflection against the quality of the present work turned out by Ministers. (Laughter.)

*Hand-made paper*

* 85 *Q.*—Sri M. P. SARATHI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) '*Testing laboratory for standardization of hand-made paper*' இந்த ராஜ்யத்தில் நிறுவப்பட்டுள்ளதா ?

(ஆ) எவ்வளவு காலமாக ?

(இ) இதை நிறுவ மத்திய அரசாங்கம் உதவி செய்ததா ? எந்த அளவில் ?

The Hon Sri V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) and (*c*) Do not arise.



*Cinema theatres*

* 86 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இரவு குறிப்பிட்ட நேரத்திற்குமேல் நடைபெறும் சினிமாத் தியேட்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

(ஆ) அப்படியானால், 1960-ல் இதுவரை எத்தனை தியேட்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) One in Thanjavur and one in Madras.

Sri N. R. THIAGARAJAN : ஸார், குறிப்பிட்ட படம் ஓடும் தியேட்டர்களை சஸ்பெண்ட் செய்து நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக, அபராதம் மட்டும் விதிக்கும் முறையை கையாள்வார்களா ? படங்கள் 15,000 அடிக்கு மேல் போவதால்தான் அதிக நேரம் ஓட வேண்டிவருகிறது. ஆகவே, படங்கள் 15,000 அடிக்குக்குறைவாகத் தயாரிக்கச் சட்டம் போட்டு விதி வகுப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சஸ்பெண்ட் பண்ணினாலே, அது அபராதத்திற்கு மேல் வரும்படி குறைகிறது, செலவினங்கள் ஏற்படுகின்றன. படத்தின் நீளத்தை குறைப்பது பற்றி இந்தக் கேள்வியில் பதில் சொல்ல முடியாது.

*Common Police Force for the Southern Zone*

* 87 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்மண்டலப் போலீஸ் படை ஒன்று அமைக்கும் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது ?

(ஆ) இதில் சம்பந்தப்பட்ட ஏனைய மாநில சர்க்கார்கள் ஒத்துக்கொண்டு விட்டார்களா ?

(இ) இத் திட்டம் உருவானால் எப்போது அமுலுக்கு வரும் ?

(ஈ) அதன் மூலம் இம்மாநிலத்திற்குள்ள அனுகூலங்கள் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*), (*b*) & (*c*).—The matter is still in the stage of consideration by the Inspector-General of Police of the States in Southern Zone.

(*d*) In cases of emergencies in this State, the entire personnel of the Common Armed Police Reserve will become available for use in this State and it wil ease the burden of the State in respect of keeping an armed reserve in sufficient strength to meet an emergency.

[10th August 1960

Sri A. VEDARATHNAM: முன்பு இந்தப் பிரச்னை வந்த காலத்தில் கேரள ராஜ்யத்தைத் தவிர மற்ற ராஜ்யங்கள் இதற்கு ஒத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது இருக்கிற கேரள அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ? அப்படியானால் அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: கேரள சர்க்கார் பல பிரச்னைகளை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளில் அனுகூலமான முடிவு எடுப்பார்கள் என்றும் எதிர்ப்பார்க்கிறேன்.

Sri A. VEDARATHNAM: அப்படி ஒரு பொது போலீஸ் படை ஏற்படுத்துவது என்று முன் வந்தால் அது எந்த இடத்தில் அமைக்கப்படும்.

The Hon. Sri C. SUBRAMANIAM: ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒவ்வொரு பகுதி அமைக்கப்படும்.

### *"Your Friend"*

*88 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

"உங்கள் நண்பன்" என்ற போலீஸ் படக்காட்சி எந்தெந்த ஜில்லாக்களிலே, எத்தனை தடவைகள் காட்டப்பட்டது ?

The Hon. Sri C. SUBRAMANIAM: The film was exhibited in all the districts in the State including Madras City. It is not possible to state the number of times the film was exhibited, as no record is maintained for the purpose.

Sri P. G. MANICKAM: இந்தப் படக்காட்சிகள் எல்லாம் போலீஸ் இலாகா மூலம் காட்டப்படுகிறதா அல்லது யாரால் காட்டப்படுகிறது ? சினிமா தியேட்டர்கள் ஒவ்வொன்றும் இந்தப் படக்காட்சியைக் காட்டுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: பல இடங்களில் இந்தப் படக்காட்சி காட்டப்படுகிறது. போலீஸ் இலாகா மூலம் மட்டும் அல்ல.

### *Buffalo Farm*

*89. *Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have instructed the District Veterinary Officer, Erode, to examine the feasibility of opening a buffalo farm in Chennimalai forests;



10th August 1960]

(b) whether any report has been received, and

(c) if so, the steps taken thereon?

The Hon. Sri M. A. MANICKAVELU: (a) Yes, Sir.

(b) & (c) The report has just been received by the Director of Animal Husbandry and it is being examined by him.

Sri N. K. PALANISAMI: Sir, since there are no buffalo farms in the State, will the Government open a buffalo farm in Chennimalai forests and also in some more centres in our State?

The Hon. Sri M. A. MANICKAVELU: Yes, Sir. There is necessity for a buffalo farm in Chennimalai area. An extent of 323 and odd acres is under the control of the Forest Department and this place seems to be an ideal place for opening such a farm. This is under the examination of the department. The Forest Department must release that land and that question is being taken up now.

### *Rubber Industry*

*90 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ம் வருடம் மே மாதம் மலேயா தேசத்திலிருந்து சென்னைக்கு வந்த ரப்பர் நிபுணர்களோடு சென்னை அரசாங்கம் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விவரங்கள் யாவை ?

The Hon. Sri V. RAMAIAH: It is presumed that the Honourable Member refers to the discussion which the officials of the Madras Government had with the Rubber Experts from Malaya on 30th April 1960 at the Secretariat. The Leader of the Team made certain suggestions regarding rubber cultivation in the State and explained the measures taken for the better cultivation of rubber in Malaya.

Mr. SPEAKER: Questions are over.

**[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—EXPUNCTION OF OBJECTIONABLE MATTER.

The Hon. Sri C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, yesterday during the course of the discussion on the Governor's Address Sri S. Nagaraja Monigar during his speech made some observations against which objection was taken by certain hon. Members of this House. Unfortunately, I was not present in the House and the Hon. Speaker was not also in the Chair. Now I have the excerpts of the speech with me. I have gone through it. Even though on the face of it, it might be considered that there is nothing objectionable in it, still I feel Sir, that it contains insinuation and innuendoes. Apart from what the hon. Member might have meant by that speech, certain hon. Members have taken objection to it and I am inclined to agree with them that

[Sri C. Subramaniam] [10th August 1960

that portion of the speech is objectionable. I would, therefore, respectfully submit to the Hon. Speaker to order expunction of that portion of the speech starting from "200 ஆண்டுகளுக்குமுன்" and whole of the ending with "கேட்டுக் கொள்கிறேன்" that is the whole of the paragraph.

MR. SPEAKER: I was not in the Chair. Even that would not have made any difference. This morning the Hon. the Leader of the House showed me the relevant speech. I think it is indecent to say the least. I would appeal to the hon. Members that they should try to keep the debate in the House at a very high level. It is not the duty of the Speaker alone to safeguard the interests and dignity of the House. Every hon. Member has a right and share in it. Therefore, Members should not speak as though they are addressing public meetings. At public meetings they could say anything they like. There the Speaker has no control over them.

THE HON. SRI C. SUBRAMANIAM: Even when addressing public meetings one should observe a certain amount of restraint.

MR. SPEAKER: I, therefore, request the hon. Members that when they are speaking in this august body they should keep up the dignity of the House. Of course, hon. Members have to listen to all speeches that are made in the House. It is a terrible headache to the Speaker and the Deputy Speaker. Hon. Members should raise points of order and object to the speech of an objectionable type. On this matter, I am convinced that the speech is indecent. I am glad to say that the Hon. the Deputy Speaker, who was in the Chair then agrees with me that this speech is indecent and I, therefore, under rule 235 of the Madras Assembly Rules, order that the portion of the speech referred to by the Hon. the Leader of the House be expunged.

III.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER: Sri M. Kalyasundaram will now begin his speech on the Governor's Address.

SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையின் மீது நடைபெறும் இந்த விவாதத்தில் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைப் பிரேரேபித்த கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு புதிய முறையில் தன்னுடைய உரையை ஆரம்பித்தார். கவர்னர் பெருமான் உரையின் மீது நடை பெறும் விவாதத்தில் கருத்து வேற்றுமைக்கு இடம் அளிக்காத முறையில் பேசவேண்டும் என்றும், கருத்து வேற்றுமைக்கு இடம் இருக்கக்கூடாது என்றும் அவர் பிரேரேபித்துப் பேசியதோடு எதிர்க்கட்சியினர் அதை ஆமோதிக்கக் கூடிய முறையில் பேச வேண்டும் என்றும் ஒரு உயர்ந்த தத்துவத்தை எடுத்து உரைத்தார்கள். அது வரவேற்கக் கூடியதுதான். ஆனால் அதற்குக் காரணம் என்ன இருக்கிறது என்பதை ஆராய வேண்டும் என்று அவரை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். கவர்னர் உரையைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் கருத்து வேற்றுமைக்கு இடம் அளிக்காத வகையில் தயாரித்



10th August 1960] [Sri M. Kalyanasundaram]

திருந்தால், அத்தகைய சூழ்நிலையை உண்டாக்கியிருந்தால் எல்லோரும் அதை ஆமோத்தித்துத் தான் பேசுவார்கள். அந்த விதத்தில் அந்த உரையைத் தயாரித்திருந்தால் அப்படி ஆமோதித்துப் பேசுவதற்குச் சாத்தியமாக இருந்திருக்கும். ஆனால் கவர்னர் உரையைப் பார்த்தால் அது ஒரு தேர்தல் பிரசாரமாகத்தான் தோன்றுகிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தால் அதை ஆமோதித்து எப்படி பேச முடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். கருத்து வேற்றுமைகளுக்கு இடம் கொடுக்கக்கூடிய அளவில் பல விஷயங்கள் கவர்னர் அவர்களுடைய உரையில் இடம் பெற்றிருக்கின்றன. பல விஷயங்கள் கருத்து வேற்றுமைக்கு இடம் கொடுக்கக்கூடிய அளவில் சேர்க்கப்பட்டிருப்பதால் அத்தகைய சூழ் நிலை ஏற்படுவதற்கு, அதாவது கனம் அங்கத்தினர் சொன்னதுபோல், சாத்தியம் இல்லாமல் இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

உதாரணமாக, அவருடைய உரையின் முதலாவது பாராவை எடுத்துக்கொள்ள வேண்டும். அதில் போலீசுக்குப் பாராட்டு தலைத் தெரிவித்திருக்கிறார்கள். போலீஸ் என்ன செய்திருக்கக் கூடும், என்ன செய்திருக்கிறது, என்பதெல்லாம் வேறு விஷயம். ஆனால் சமீபத்தில் நிகழ்ந்த மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய வேலை நிறுத்தம் சம்பந்தமாக நம்முடைய ராஜ்யத்தில் எந்த விதமான அசம்பாவித நிகழ்ச்சியும் ஏற்படாமல் இருந்தது போலீஸ் திறமையால் அல்ல. ஆனால் அதற்குப் பாராட்டுதலைத் தெரிவித்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய கோரிக்கைகள் என்ன, அவர்கள் வேலை நிறுத்தம் செய்தது நியாயமா இல்லையா என்பதைப் பற்றி கருத்து வித்தியாசங்கள் இருக்கக் கூடாது. வேலை நிறுத்தம் நடந்த முறையைப் பற்றியும், போலீஸ் நடந்து கொண்ட முறையைப் பற்றியும் தான் இந்தச் சபையில் கருத்து வித்தியாசம் இருக்கிறது. இப்படிக் கருத்து வேற்றுமை இருக்கும் போது அந்தப் போலீசைப் பற்றி பாராட்டுதலைத் தெரிவித்துவிட்டு அதற்கு எதிர்க் கட்சிகளும் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் கலந்து கொண்டு அதை ஆமோதிக்க வேண்டும் என்று சொன்னால் அது எவ்வளவு தூரம் நியாயம் என்றுதான் தெரியவில்லை. இதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேலை நிறுத்தத்திற்குக் காரணம் என்ன? வேலை நிறுத்தத்தைத் தூண்டி விடுகிறார்கள் என்று சொல்லி, அதற்கு அரசியல் காரணமா என்று பார்த்தால் அதன் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது. வேலை நிறுத்தத்திற்குக் காரணம் அதைத் தடுக்கக்கூடிய சக்தி இவைகள் எல்லாம் அரசாங்கத்தினுடைய கையில் இருக்கிறது. அவர்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தினாலும், அவசரச் சட்டத்தினாலும், அல்லது அவர்களிடத்திலுள்ள போலீசை உபயோகித்தும், வேலை நிறுத்தத்தைத் தடுத்து விடலாம்—அதை சமாளித்து விடலாம்—என்று நினைப்பது சரியல்ல. வேலை நிறுத்தம் என்பது ஒரு நோய். அந்த நோய்க்குக் காரணம் என்ன என்று கண்டுபிடித்து அதற்குப் பரிகாரத்தைத் தேட வேண்டுமேயொழிய அந்த நோய் வந்த பிறகு அதைத் தடுக்க

நடவடிக்கை எடுத்துக் கொள்வது அவ்வளவு சரியல்ல. வேலை நிறுத்தம் நடந்த பின் அதைச் சம்மாளிக்க போலீசை வைத்துக் கொண்டு பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டுமே தவிர வேலை நிறுத்தத்தை நடைபெறாமல் போலீசை வைத்துக் கொண்டு தடை செய்வது என்பதும் அவர்களை வைத்துக்கொண்டு அடக்கு முறை மூலம் அடக்குவது என்பதும் சரியல்ல. மத்திய சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ததை போலீசைக் கொண்டு சமாளித்து விட்டோம் என்று பெருமை அடித்துக் கொள்வதில் பிரயோசனம் இல்லை. அதற்குப் பதிலாக மத்திய சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்குக் காரணமாக இருந்த கோரிக்கைகளை நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்லி அதில் வெற்றி கண்டுவிட்டோம் என்று சொன்னால் அதைக் கண்டு நான் சந்தோஷப்படுவேனே தவிர அவர்களை வேலை நிறுத்தம் செய்ய விடாமல் தடுத்து ஒடுக்கி விட்டோம் என்று திறமையாகச் சொல்லுவதை கண்டு நான் சந்தோஷப்படமாட்டேன். எந்த தேசத்திலும் எதிர்க்கட்சி அதை ஒத்துக் கொள்ளாது. வேலை நிறுத்தம் வராமல் அதைத் தடுத்து அதற்குக் காரணமாக இருக்கும் கோரிக்கைகளை விட்டுக் கொடுக்க வேண்டும். அப்படி விட்டுக் கொடுத்து வேலை நிறுத்தத்தைத் தடுத்தால்தான் அதற்குப் பெருமை உண்டு.
9-30 a.m. வெறும் அடக்கு முறை மூலம், அவசரச் சட்டத்தின் மூலம், நிறுத்தி விட்டோம் என்று சொன்னால், அது வெற்றி அடைந்ததாக ஆகாது. நம்முடைய தேசத்தில் எல்லா ராஜ்ய சர்க்கார்களுக்கும் தெரியும். மத்திய சர்க்காருக்கும் இது ஒரு சிறந்த படிப்பினையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெறும் அரசியல் நோக்கத்தோடு இந்தப் பிரச்சினையைப் பார்க்கக்கூடாது. வேலை நிறுத்தம் செய்யும் படியாக அவர்களை யார் தூண்டிவிட்டார்கள் என்பதெல்லாம் பிரச்னை அல்ல. வேலை நிறுத்தம் நடந்தது. அதை ஆரம்பித்தது சரியா என்பது பற்றி நானே வேறு விதமாக நினைக்கலாம். சரியானபடி தயாரிப்பு இல்லாமல் ஆரம்பித்தார்களே என்றுதான் வருத்தம். அவர்கள் அநுபவம் அற்றவர்கள் என்றோ புலிமேல் உட்கார்ந்து சவாரி செய்தவர்கள் என்றோ . . .

The Hon. Sri C. SUBRAMANIAM: பார்லிமெண்டில் இப்போது நிகழ்ந்த நிகழ்ச்சியைப்பற்றி இங்கே குறிப்பிட்டுப் பேசுவது சரியல்ல. நமக்குள் இருக்கும் விஷயங்களைப் பற்றி பேசலாம். அங்கே நடந்தது பற்றிப் பேசினால் அதற்கு நான் பதில் சொல்ல முடியாது. அவர்களும் பதில் சொல்ல இங்கில்லை.

Sri M. KALYANASUNDARAM: பார்லிமெண்டில் நடந்த விஷயங்களைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. (கனம் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணியம்: "புலி மேல் உட்கார்ந்து சவாரி" என்று சொல்லுகிறபோதே தெரிகிறது. யாரும் படிக்காமல் இருக்கமாட்டார்கள்.) அதைப் பார்த்து நான் குறிப்பிடவில்லை. ஒருகால் நான் குறிப்பிட்டது அது போலவே இருக்கலாம். (கனம் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணியம்: அதைத் தெரிந்து





கொள்ளாமலேயே அவர் அதை அப்படி ஒத்துக்கொள்கிறார் என்றால் சரிதான்.) (சிரிப்பு) இந்த வேலை நிறுத்தத்திற்குப் பொறுப்பாளியாகத் தலைமை தாங்கியவர்கள் மீது எந்த நடவடிக்கை எடுத்தாலும் ஆட்சேபணை இல்லை. அது அரசியல். அதற்கு இடம் உண்டு. என் மீது கூட வழக்கு போட்டிருக்கிறார்கள். வழக்கு கோர்ட்டில் இருப்பதனால் அதுபற்றிய விவரங்களை நான் குறிப்பிட விரும்பவில்லை. என்னை விசாரணை செய்வதெல்லாம் முடிந்துவிட்டது. தீர்ப்பு அளிக்க வேண்டியதுதான் பாக்கி. ஆனால் இந்தச் சமயத்தில் ராஜ்ய சர்க்கார் வழக்கை வாபஸ் பெறவேண்டாம் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். வழக்கை வாபஸ் பெற்று பின்வாங்கி ஓட வேண்டாம். அரசியல் தலைவர்களை கோர்ட்டுக்கு இழுங்கள். சிறைக்கு இழுங்கள். ஆனால் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வது சரியல்ல. அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளிலும், அவசரச் சட்டத்தின் 4-வது பிரிவுப்படி தொடரப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்குவதாக மட்டும் சொன்னால் சரியாகாது. நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் போலீசார் கொஞ்சம் அதிக ஆர்வத்துடனேயே செக்ஷன் 4, 5 ஆகிய இரண்டையும் சேர்த்தே வழக்குப் போட்டு விட்டார்கள். ஆகவே இப்போது சர்க்கார் ஊழியர்களைப் பழிவாங்கும் எண்ணத்தோடு நடந்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் எல்லோருடைய ஒத்துழைப்பினாலும் தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெற வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் உள்ளம் உடைந்து போனால் அதனால் என்ன நிலைமை உண்டாகும் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதிருக்காது. ஆகவே அவர்கள் மீது போடப்பட்டிருக்கும் வழக்குகள் எல்லாவற்றையும் வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் மீதோ, திரு. அண்ணாதுரை மீதோ போடப்பட்டிருக்கும் வழக்குகளை வாபஸ் பெறவேண்டுமென்று நான் சொல்லவில்லை. இதை நடத்துங்கள்.

The Hon. Sri C. SUBRAMANIAM: உங்கள் மீது உள்ள வழக்கை வாபஸ் வாங்காது நடத்த வேண்டுமென்று சொல்லுங்கள். அவரையும் ஏன் சேர்த்து இழுத்துக் கொள்கிறீர்கள் அங்கும் கம்பெனி வேண்டுமா?

Sri M. KALYANASUNDARAM: வேலை நிறுத்தம் செய்த ஊழியர்களின் மீது வழக்குகள் போட்டு பழி வாங்குவதற்கு முன்னால் வேலை நிறுத்தத்திற்குக் காரணம் என்னவென்று ஆராய்ச்சி செய்ய வேண்டும். மத்திய சர்க்கார் ஊழியர்களாக இருந்தாலும் சரி, ராஜ்ய சர்க்கார் ஊழியர்களாக இருந்தாலும் சரி, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை மட்டும் உயர்த்திக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை எழுப்பியிருந்தால் அதை நானே ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன். ஆனால் இன்றைய தினம் அவர்களுடைய கோரிக்கை என்ன? குறைந்து கொண்டே

[Sri M. Kalyanasundaram] [10th August 1960

போகிற அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை சரிக்கட்ட வேண்டுமென்பது தான். "அதற்கு ஈடு செய்யுங்கள்" என்பது தான் அவர்கள் கோரிக்கையாகும். இன்றைக்கு வாங்கக் கூடிய சம்பளத்தின் மதிப்பைவிட விலைவாசிகள் உயர்ந்து விட்டன. ஆகவே, அதற்கு ஈடுசெய்ய வேண்டுமென்று அவர்கள் கோருவது மிகவும் நியாயமான கோரிக்கையாகும். திருட்டுத்தனமாக தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை மட்டும் தாங்கள் கேந்திரமான ஸ்தானங்களில் இருப்பதன் காரணமாக —உயர்த்திக் கொள்ளவேண்டுமென்று அவர்கள் கோரிக்கையை வைத்திருந்தால் அதை யாரும் ஏற்க முடியாது. அப்படி இல்லாதபோது இவர்களுடைய கோரிக்கை என்ன என்பதைக் கூட ஆராய்ச்சி செய்யாமல் அவர்களுடைய மனம் உடைந்து போகும்படியாக நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது சரியல்ல. அவர்களுடைய கோரிக்கைகளில் இருக்கும் நியாயத்தை உணர்ந்து கொள்ள இன்றைய தினம் இருக்கும் விலைவாசி புள்ளியை கவனிப்போம். இதுபற்றி சட்டசபை ரிசர்ச் செக்ஷனை நான் கேட்டிருந்தேன். இவர்கள் இதுபற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரித்து எனக்கு மட்டும் அல்ல, மற்ற அங்கத்தினர்களுக்கும் அனுப்பி இருக்கிறார்கள். அதைப் பார்த்தால் வேலை நிறுத்தத்தின் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி பொதுவாக ஜனவரி 1959-ல் 421-ஆக இருந்தது ஜனவரி 1960-ல் 441-ஆக உயர்ந்திருக்கிறது. இதில் உணவுப் பண்டங்களை மட்டும் எடுத்துப் பார்த்தால் ஜனவரி 1959-ல் 478-ஆக இருந்தது ஜனவரி 1960-ல் 501-ஆக உயர்ந்திருப்பது தெரியும். பிப்ரவரி 1959-ல் 461-ஆக இருந்தது பிப்ரவரி 1960-ல் 510-ஆக உயர்ந்திருக்கிறது. இப்படி வரிசையாகப் பார்க்க வேண்டும்.

| | 1959 | 1960 |
|---|---|---|
| மார்ச் .. .. | 452 | 505 |
| எப்ரல் .. .. | 463 | 505 |
| மே .. .. | 478 | 511 |
| ஜூன் .. .. | 491 | 523 |
| ஜூலை .. .. | 498 | 523 |

ஆகஸ்டு பற்றிச் சொல்லவேண்டியதில்லை. 1959-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 494-ஆக இருந்தது என்றால் இப்போதுள்ள நிலவரத்தைப் பார்த்தால் சரித்திரத்திலேயே இதைவிட அதிகமாக எப்போதும் உயர்ந்து இருந்ததில்லை. இதற்கு முன் எப்போது பார்த்தாலும்—யுத்த காலத்திலும் கூடச் சரி— உணவுப் பண்டங்களின் விலை இவ்வளவு அதிகமாக இருந்ததே இல்லை என்று சொல்லி விடலாம். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். இப்படி விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போவதைத் தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? வேலை நிறுத்தத்திற்குக் காரணமாக இருந்ததே இந்த விலைவாசி உயர்வுதானே? அந்த உயர்வுக் கேற்ற பஞ்சப்படி தரவேண்டும் என்பது நியாயமற்ற



10th August 1960] [Sri M. Kalyanasundaram]

கோரிக்கையா? எதேச்சாதிகார நாடு என்று சொல்லப் படுகிற கம்யூனிஸ்ட்டு நாடுகளை விட்டு விடுங்கள். நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. இதர பிரான்சு, பிரிட்டன் போன்ற எந்த நாட்டில் பஞ்சப்படி என்று இருக்கிறது? இங்குதான் கிராக்கிப்படி என்பதைப் பஞ்சப்படி என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். சம்பளத்தையும் கூட்டாமல், விலை உயர்வுக்கேற்ற பஞ்சப்படியும் தராவிட்டால், அவர் களுடைய வாழ்க்கை எப்படி நடக்கும்? மனம் உடையாமல் அவர்கள் எப்படி இருப்பார்கள்? உயர்ந்து கொண்டே போகிற வாழ்க்கைப் புள்ளிவிவரத்திற்குக் கட்டுப்படியாகும் வகையில் சம்பளத்தையோ, மற்றவற்றையோ கொடுத்துவிட்டு அவர்கள் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்றால் புரிந்து கொள்ள முடியும். அல்லது அவற்றைப் பெறுவதற்குரிய வாய்ப்பைச் செய்து விட்டு வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்றால் அதைப் புரிந்துகொள்ள முடியும். அவர்களுடைய வாங்கும் சக்தி எவ்வளவு குறைந்து இருந்தாலும் சரி, பட்டினி கிடந் தாலும் சரி, வேலைநிறுத்தம் செய்யாது உழைக்க வேண்டும் என்றால் இதன் பலாபலன் யாருக்கு? உணவுப்பண்டங்களின் விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போவதைப்பற்றி இந்தச் சட்டசபையிலும் சரி, வெளியிலும் சரி பல முறையும் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. இது ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல. இது கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்சினை. மக்கள் எல்லோருக்கும் உணவுப் பண்டங்கள் வழங்குவது, அவர் களுடைய மொழி சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஆகியவை ஏதாவதொரு கட்சியின் பிரச்சினையாகக் கருதக்கூடாது. இது தேசீயப் பிரச்சினை. ஆகவே இந்தத் தேசீயப் பிரச்சினையில் —உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது? எதிர்க் கட்சிக்காரர்கள் என்னவோ கூக்குரல் போடுகிறார்களே என்று சொல்லலாம். எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள், அதிலும் கம்யூனிஸ்ட் கட்சி அதிகமாகச் சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், என்று மாத்திரம் சொல்லுகிறார்கள். இதைப் பற்றி பிளானிங் கமிஷனிலே பேசினார்களா என்று தெரியவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே கூட சுறுசுறுப்பான நடவடிக்கை எடுக்கப் போகிறார்களா என்பதும் சந்தேகம். ஏனென்றால் அதற்கான அறிகுறி ஒன்றையும் காணோம். 'What structure of regulatory devices including price control, zonal arrangement, prescription of minimum and maximum State Trading will ensure optimum results, needs to be carefully examined. These problems are at present under study by a Committee of the National Development Council.' தேசிய அபிவிருத்தி கவுன்சில் முன்பாக விலைவாசிகள் உயர்வைப் பற்றி சொன்னதாகவும், அதை ஒரு நிலைக்குக் கொண்டுவருவது பற்றிய ஆராய்ச்சியும் நடந்து கொண்டிருப்பதாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜட் பிரசங்கத்தில் குறிப்பிட்ட வாசகம் என்ன ஆயிற்று? இந்தப் பிரச்சினை இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது. விலைவாசிகள் விஷம் போல் இன்னும் உயர்ந்து கொண்டே இருப்பதை நாம் பார்க்கிறோம். விலை

வாசிகள் உயர்வுக்குக் காரணம் தனியார் துறையில் வியாபாரம் அதிகரித்துக் கொண்டு, விலைவாசிகள் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு உயர்ந்துக்கொண்டே போகிறது. போதாக் குறைக்கு, சர்க்கார் தான் நோட்டை அச்சடிக்கிறது என்றால், தனிப்பட்டவர்களும் நோட்டுக்களை அச்சடித்து மக்களிடையே பரவச் செய்திருப்பது மிகவும் வருந்தத் தக்க விஷயம் ஆகும். இதைக் கண்டிப்பாகத் தடுப்பதற்கு சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இது மிக மிக அபாயகரமான ராஜ துவேஷ குற்றம் என்று நினைக்கிறேன். இதைத் தடுப்பதற்கு கால தாமதம் ஏற்படக்கூடாது. அதுவும் நோட்டு அச்சடிப்பது என்பது சாதாரணமான விஷயம் அல்ல. இதைப் பற்றிய வழக்கு கோர்ட்டில் இருப்பதால்—ஸப் ஜூடிஸாக இருப்பதால்—நான் அதிகமாகப் பேசப்போவதில்லை. இதனால் நாட்டில் உற்பத்தியாகும் செல்வம் தனியார் கைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. விலைவாசியின் உயர்வைத் தடுக்க வேண்டும். நிலத்தில் உற்பத்தியாகக் கூடிய பொருள்கள் தனியார் கைக்குப் போகக் கூடாது. அப்படித் தனியார் கையில் இருப்பதுதான் விலைவாசிகள் ஏற்றத்திற்கு முக்கிய காரணமாக இருக்கும்; எந்தப் பொருளையும் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள், உதாரணமாக புளி, மிளகாய், எண்ணெய் முதலிய எல்லா அத்தியாவசியப் பண்டங்களும், விலை உயர்ந்து கொண்டே போகிறது. இதற்குக் காரணம் ஏற்றுமதி என்று சொல்லுகிறார்கள். வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதனால் தான் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகிறது என்பதை நான் ஒத்துக் கொள்ள முடியாது. நம் தேசத்தின் முன்னேற்றத்திற்கு, வெளிநாடுகளில் தொடர்பு இருப்பதற்கும், ஓரளவு ஏற்றுமதி செய்வது அவசியமாக இருக்கிறது. இதனால்தான் விலை ஏறிக்கொண்டே போகிறது. ஆகையால் அதைத் தடுக்க வேண்டும் என்று சொல்லுவது சரியல்ல. இதை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசாங்கம் சரியான புள்ளி விவரங்கள் தான் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அத்தியாவசியமான பண்டங்களின் விலை உயர்ந்து கொண்டே போகிறது. அதைத் தடுக்காமல், உற்பத்தியாகும் பொருள்களையெல்லாம் தனியார் கையில் கொடுத்து விடுகிறோம். அதுதான் முக்கியமான காரணம். ஸ்டேட் டிரேடிங்கை ஒரு கொள்கையாக சர்க்கார் கொள்ளவேண்டும். நியாயமான முறையில் விலைவாசியின் உயர்வைத் தடுத்து இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க முடியும். அப்படியிருக்கும்போது சர்க்கார் ஏன் இதை எடுத்துக்கொள்ள பயப்படுகிறார்கள் என்பது புரியவில்லை. இதற்கு பொதுமக்களும், எல்லாக் கட்சியினரும் நிச்சயம் ஆதரவு அளிப்பார்கள். வேலை நிறுத்தத்தைத் தடுக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள், விலைவாசியை முதலில் தடுத்தால் இந்தப் பிரச்சினையே எழாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒரு சிலருக்காக, அதுவும் தங்கள் கட்சிக்கு ஆதரவாளர்கள் என்று, ஸ்டேட் டிரேடிங்கை எடுத்துக் கொள்ளாமல் லட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டு விலையைக் கட்டுப் படுத்தாமல் இருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவைகளையெல்லாம்



சிந்தித்துப் பார்த்தால் அரசாங்கத்தின் கொள்கை மீதுதான் குறை கூற வேண்டும். சர்க்காரின் கொள்கை காரணமாகத் தான் இந்த நிலைமை இருக்கிறது. அந்த ஆபத்தான நிலைமையைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு விலைவாசி ஒரே நிலையை அடைவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த முயற்சி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேகூட வெற்றி பெறாது என்றுதான் சொல்ல வேண்டும். தேசீய அபிவிருத்தி கவுன்சிலிலும், டில்லியில் மத்திய அரசாங்கத்திடமும் எடுத்துக்கூறி, தீவிர நடவடிக்கை எடுத்தால் தான் ஸ்டிரைக்கைக்கூட ஓரளவு தவிர்க்க முடியும்.

இந்த நாட்டிலே தொழில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது; உற்பத்தி பெருகியிருக்கிறது; திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன; அதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் விலைவாசியின் உயர்வைத் தடுப்பதற்கு சர்க்காரின் கொள்கை என்ன என்பது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் விளக்கப்படவில்லை. தொழிலாளர்கள் சம்பந்தமாகச் சர்க்கார் என்னென்ன கொள்கைகளை அனுசரித்துப் போகிறது என்பதை விளக்கவில்லை. முன்பு 292 ஆயிரம் ஏக்கர் நிலம் பயிர் செய்யப்பட்டது. நீர் பாசனத் திட்டங்கள் நிறைவேறிய பிறகு $3\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் நிலத்தில் சாகுபடியாகிக்கொண்டிருக்கிறது. அரசாங்கம் சரியான புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறது. இதில் தவறு ஒன்றுமில்லை. இந்தப் புள்ளிவிவரத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். உற்பத்தி பெருகியிருக்கிறது. திட்டங்கள் பெருகியிருக்கிறது, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிலாளர்கள் கொள்கை என்ன? விலைவாசியின் கொள்கை என்ன? தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்குக் காரணம் என்ன? விலைவாசியின் உயர்வுதான் காரணம் என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொழிற் சங்கத்தை ஒழித்துக்கட்டப் பார்க்கிறார்களே தவிர பதுக்கல்காரர்களை ஒழித்து தேசத்தினுடைய நலனைப் பாதுகாக்க பயப்படுகிறார்கள். இதற்கு ஆதரவு கொடுக்க மக்கள் இருக்கிறார்கள். இந்த மன்றம் இருக்கிறது. இங்கே எல்லோரையும் கலந்தாலோசித்து ஏற்ற நடவடிக்கை எடுக்கலாம். சகல அரசியல் கட்சிகளும் இதற்கு ஒத்துழைப்பார்கள். அதை விட்டுவிட்டு, ஒரு தொழிற்சங்கக் கட்சியிலுள்ள அங்கத்தினர்களை இன்னொரு தொழிற்சங்கத்திற்கு மாற்றுவதற்கு போலீஸை உபயோகித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இந்தத் தொழிற்சங்கம், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்ததா அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்ததா என்று பார்த்து தங்கள் அதிகாரத்தை அரசியல் கட்சியில் பிரயோகப்படுத்துகிறார்கள். அதனால் சமீபத்தில் பல தொழில் தகராறுகள் மத்தியஸ்தத்திற்கு விடப்படவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் பஞ்சாலைத் தகராறில் சமரசம் ஏற்பட்டதை வரவேற்கிறேன். அதற்காகச் சந்தோஷப்படுகிறேன். ஆனால் அதற்கு அரசாங்கம் பொறுப்பா? அரசாங்கத்திற்கு

அதிலுள்ள பங்கு என்ன? அரசாங்கம் ஆட்களை கூட்டி வைத்திருக்கலாம். ஆனால் யார் விட்டுக் கொடுத்தது? யார் விட்டுக் கொடுத்தது யாரது உரிமை பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்று பார்த்தால் தொழிலாளர்களைத்தான் நாம் பாராட்ட வேண்டும். தொழிலாளர்களும், தொழிற்சங்கமும் விட்டுக் கொடுத்துத்தான் சமரசம் ஏற்பட்டதே தவிர முதலாளிகள் விட்டுக் கொடுத்தல்ல. அல்லது அரசாங்கம் முதலாளிகள் மீது எடுத்த நடவடிக்கைகளினால் அல்ல. எதிர்க் கட்சிகளைத் தாக்குவதற்கு, அரசாங்க அதிகாரத்தைப் பயன் படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சி ஜில்லாவில் புதுக்கோட்டை பக்கத்தில் ஒரு பஞ்சாலை மூடப்பட்டிருக்கிறது. அதை அரசியல் காரணத்திற்காக உபயோகப் படுத்துகிறார்கள். அதன் தொழிற் சங்கம் அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸோடு இணைக்கப்பட்டது. அது இதற்கு முன்பு ஐ.என்.டி.யு.சி.-யில் இருந்தது. பின்னர், அது ஏ.ஐ.டி.யு.ஸி.-யோடு சேர்க்கப்பட்டது. கோவையில் இருப்பதைவிட அதிக வேலைப் பளுவை செய்ய முதலாளிகள் நிர்பந்தித்துக் கொண்டு வந்தார்கள். அது முடியாததால் நெருப்புப் பிடித்த சாக்கைக் காண்பித்து 800 தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள் இரண்டு மாத காலமாக. அது சரியா? அந்தத் தொழிலாளர்களை ஐ.என்.டி.யு.ஸி.-யில் சேருவார்களேயானால் அந்த மில்லைத் திறக்கிறேன் என்று அந்த முதலாளி பகிரங்கமாகக் கூறுகிறார். நான் கேட்கிறேன், இந்த "க்ளோஷர்" நியாயமா என்று? தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியிருப்பது சட்டப்படி செல்லத் தக்கதா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்கிறேன். கூறப்படும் காரணம் உண்மையான காரணமா? இது குறித்து . . .

THE HON. SRI R. VENKATARAMAN: இந்த விவாதத்தில் எனக்குப் பதில் சொல்ல சந்தர்ப்பம் இல்லையாதலால் இப்போதே ஒரு நிமிஷத்தில் இதற்கு பதில் சொல்லிவிடுகிறேன். 5 லட்சம் ரூபாய் பெருமான பஞ்சு அந்த இடத்தில் எறிந்து விட்டது. ஆகவே எம்களால் மில்லை நடத்த முடியாது என்று அவர்கள் சொன்னதால் வேறு நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

MR. SPEAKER: The hon. Member has already taken 27 minutes.

SRI M. KALYANASUNDARAM: முதலாளி சொன்ன காரணத்தைத்தான் சொல்லுகிறார்களே தவிர அது நியாயமான காரணமா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: போலீஸ் ரிப்போர்ட்டும் அது மாதிரித்தான்.

SRI M. KALYANASUNDARAM: தீ பிடித்தது உண்மையே. ஆனால் உண்மையில் மில்லை "க்ளோஸ்" செய்யப் போகிறார்களா? வேறு முறையில் அதைத் தொடர்ந்து





நடத்தப் போகிறார்களா? வேலை தொடங்க வேண்டுமென்பதுதான் முதலாளியின் நோக்கம். அதற்குச் சர்க்கார் கொள்கை உதவியளிக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN: அது உங்கள் கட்சி.

SRI M. KALYANASUNDARAM: அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று சொன்னேன். நான் சொல்வது சரியல்ல என்றால் அதை நிரூபிக்கட்டும். தொழிலாளர்கள் சம்பந்தப் பட்ட மட்டில், தொழிற்சங்கங்களை அரசியல் காரணத்திற்காகப் பாகுபடுத்தி, குரோதத்தோடு நடத்துவது என்ற தொழில் கொள்கை இருந்தால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொழில் அமைதி கெட்டு, தகராறு ஜாஸ்தியாகுமே தவிர தொழில் அமைதி ஏற்படாது. அதோடு திட்டமிட்டபடி, திட்டமிட்ட முறையில், உற்பத்தி பெருக வேண்டுமென்று சொன்னால் சர்க்கார் கொள்கையில் மாறுதல் வேண்டும். குறிப்பாக, விலைவாசிக் கொள்கையில், தொழிலாளர் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் கையாண்டு வரக் கூடிய கொள்கையில் மாறுதல் வேண்டுமென்று கூறிக்கொண்டு எனது உரையை முடிக்கிறேன்.

MR. SPEAKER: $3\frac{1}{2}$ மணி நேரம் இருக்கிறது. 20 அங்கத்தினர்கள் பேசுவதற்கு என்னிடம் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு அங்கத்தினரும் பத்து நிமிஷத்திற்கு மேல் பேச வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படியானால் $3\frac{1}{2}$ மணி நேரத்திற்குள் எல்லோரும் பேச முடியும். ஒன்பது நிமிடம் ஆன உடன் மணி அடிப்பேன். பத்து நிமிஷத்திற்குள் அவர்கள் பேச்சை முடித்துவிட வேண்டும்.

* SRI A. A. RASHEED: Mr. Speaker, Sir, it is but natural that we should give a Vote of Thanks to the Governor for his Address because the Governor's Address contains a resume of, past achievements, present progress, and the future prospects in the agricultural, educational and industrial fields. It has also touched upon the problem of language and hence I would like to speak first on the language problem.

Sir, in India there are fourteen constitutionally recognised languages, but we have no common language for inter-State correspondence. Hence, a language must be found. Sir, the greatest heritage of the British regime was the introduction of the English language. It had a unifying force. It was this language which was used by our leaders to rouse the masses during the freedom struggle. (The Hon. Sri C. Subramaniam: Not for rousing masses.) At least from the English newspapers they were able to get support from the public. I am not pleading here for the retention of English but one common language must be found. What is the common language—whether it should be Hindi or English or should both the languages continue as common languages? In the case of Hindi, it has limited vocabulary and limited literature and besides the Hindi fanatics had made it so much Sanskritized that it is difficult to understand even for a Urdu knowing person like me. Sir Hindi should not be the common language till it attains proficiency and until that time English

[Sri A .A. Rasheed] [10th August 1960

should continue to be the common language. Also only when the Southern States have attained proficiency, perhaps we can think of making Hindi the common language. With due apologies and in the face of the protest of the Dravida Munnetra Kazhagam, I would say that one of the Indian languages must become a common language of the *lingua franca* of India.

What have we done? Have we done the right thing in our State? It is up to the Government to see whether they have done the right thing in introducing Tamil as the medium of instruction at the college level, when many educationists of the type of Dr. C. P. Ramaswami Iyer, Dr. Lakshmanaswami Mudaliyar, Dr. Subbarayan and many others regard this, as a wrong-minded obstinacy of the Government and not based on calculated reasoning.

MR. SPEAKER : The hon. Member need not drag in the names of those who are not in this House.

SRI A. A. RASHEED : I am guided by my elders.

Sir, besides, many English and Tamil dailies consider that it is not a desirable step. Why? Because there are only a very few Tamil text-books for the University classes. Until the original text is written in Tamil, we should postpone it. I am, sure, the day will not be very far when text-books will be written in Tamil, when all colleges could have Tamil as the medium of instruction. Until that time I would request the Government to go slow with their policy and not entirely drop the proposal. (The Hon. Sri C. Subramaniam : What is your opinion?) The Government have introduced it in one college. Let them await the results of the experiment in that college and then introduce it in other colleges, instead of trying to introduce it in all colleges and making it a failure.

Sir, the Government must be like Caesar's wife. They must be above suspicion. Now I may refer to another controversial subject but I am not going to say much on that because the matter is *sub judice*. I refer to the appointment of Sri Alagirisami as the Government Pleader.

MR. SPEAKER : I must draw the attention of the hon. Member to the fact that the matter is *sub judice* and so he should not refer to it to-day. The judgment is being reserved and he cannot refer to it individually.

SRI A. A. RASHEED : I am not saying that the appointment was a wrong one. The Government have done the right thing.

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think the hon. Member can express even such an opinion. Either way he cannot express it.

MR. SPEAKER : The hon. Member is well advised not to refer to it and I would appeal to him not to persist in that.

SRI A. A. RASHEED : Justice should not only be just but also appear to be just. What Government does, should not only be right but appear to be right.



10th August 1960] [Sri A. A. Rasheed]

A scare has been created by the circulation of forged notes in cities and towns. As a result even genuine 100-rupees notes are exchanged at discount. I would request Government to recommend to the Union Government to demonetise 100-rupee notes and take back all 100-rupee notes under circulation now and issue fresh 100-rupee notes so that this scare and chaos and confusion created by forged notes may be put an end to.

Many hon. Members of this House have referred in their speeches mainly to the ever-increasing price of essential commodities. The price has risen to the detriment of the fixed salary earners. The purchasing power of money has gone down to 25 per cent of what it was in 1935. The time has come when Government should solve the problem. Government should control the increase in prices. Giving more salary to public servants means more money in circulation and more inflation That amounts to too much money chasing too few articles. If things are allowed to go as at present, the time is not far off when bagfull of notes will purchase only a handful of articles. God forbid, let us not reach that stage.

To solve the ever-increasing price problem, the hon. Member from Lalgudi has given a suggestion. [illegible] Government should give more subsidy so that we co[illegible] the increase in prices. Has that hon. Member realised the immensity of the problem? Has he realised the amount of money that would have to be spent on subsidy? The whole of the money that we have allotted for the Third Five-Year Plan would not be sufficient if Government were to come forward to give subsidy to all commodities produced by the ryots It is true that the tiller of the soil must get his share. But that does not mean that he, the tiller, should put the community to ransom. Someting must be done immediately and quickly to this problem of ever-increasing prices. It is a contradiction in terms to say that when production has increased, prices also have increased at the same time. (The Hon. Sri R. Venkataraman : If the hon. Member knew economics, he would understand it.) I would like to tell the Hon. Minister for Industries that I am an Economics Graduate of the Madras University. I know something of economics.

THE HON. SRI C. SUBRAMANIAM : That is the real difficulty. The hon. Member should re-learn what economics he would have learnt in colleges because they do not apply to the present-day conditions.

SRI A. A. RASHEED : There is no use of saying that the Doctor has performed the operation successfully but that the patient has died. The operation should be performed keeping the patient alive.

What about the State we are living in and also the country we are living in? When Vinobaji was asked whether we are having a Welfare State in our country he stated that it is an Illfare State

[Sri A. A. Rasheed] [10th August 1960

There is some truth in what he said. I am not belittling the achievements of this Government. We have done a lot to improve the lot of the villages and the public at large. (The time bell was rung.)

One minute, Sir. I would like to say something about the development of Tuticorin Port and the taking up of the Sethu-samudram Project because yesterday the Hon. Minister for Finance has given an assurance that he would again address the Government of India to include these two schemes in the Third Plan. These two schemes shuold be included in the Third Plan. Otherwise people of the south will say that the Union Government is not Government of the people but, Government of the North, by the North and for the North. Let us not allow that thing to be said of the Government.

There are already proposals to establish a ship-building yard at Cochin. I welcome it. But it is a disturbing bit of news to find that an oil refinery is also going to be established near Cochin itself. Do we not have a suitable place in Madras State to locate an oil refinery? Why should even the oil refinery, besides the ship-building yard, be established near Cochin?

THE HON. SRI C. SUBRAMANIAM: How does the hon. Member say that?

SRI A. A. RASHEED: I have read so in the newspapers. If it is wrong, the Hon. Minister can contradict me and say that it is not proposed to establish an oil-refinery at Cochin.

THE HON. SRI C. SUBRAMANIAM: If newspapers could establish refineries I think we should have 100 refineries in our country today. I do not think hon. Members should give credence to such kind of newspaper reports.

* SRI S. RAMALINGA PADAYACHI:
தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரைக்கு கனம் சட்ட மன்ற
திரு. லாசர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நன்றித் தீர்மானத்
தின்மீது, அதை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச ஆசைப்
படுகிறேன். சமீபத்தில் மத்திய அரசாங்க ஊழியர்கள் வேலை
நிறுத்தம் செய்து பல தொந்தரவுகளை ஏற்படுத்தினார்கள்.
நாட்டிலுள்ள தலைவர்கள் எல்லாம் வேலைநிறுத்தம் செய்யக்
கூடாது என்று கேட்டுக் கொண்டும்கூட மத்திய சர்க்கார் ஊழி
யர்கள் வேலை நிறுத்தம் செய்தது மிகவும் வருந்ததக்க விஷயம்.
குறிப்பாக திருச்சியில் இதனால் பலவிதமான தொந்தரவுகள்
ஏற்பட்டன. ஒரு அரசியல் கட்சி தொழிலாளிகள் அங்கு வேலை
செய்யப்போனபோது வேறு இரண்டு அரசியல் கட்சியில்
அமைந்திருக்கும் தொழிலாளிகள் அவர்களை அடித்து ஒருவர்
கையை ஒடித்துவிட்டும் மேலும் கலகம் நடக்கும் நிலைமையி
லிருந்தபொழுது வேலைக்குப் போகக்கூடாது என்று தடுத்து
நிறுத்தினார்கள். அப்போது அங்குள்ள மாவட்ட கலக்டர்
அவர்களும், டி.எஸ்.பி. அவர்களும் தக்க நடவடிக்கை எடுத்துத்
தொந்தரவு செய்த ஊழியர்களை அப்புறப்படுத்தினார்கள். இதன்
காரணமாக பொதுமக்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள்



10th August 1960] [Sri S. Ramalinga Padayachi]

ஏற்பட்டன. இம்மாதிரி வேலைநிறுத்தம்கள் நடைபெறுவதினால் அரசாங்கத்தின் முற்போக்கு சக்திகள் எல்லாம் தடைபடுகின்றன. அதோடு எந்த நாட்டிலும் இம்மாதிரியான போக்கு நடைபெற்றிருக்காது. இதைப்பற்றி நேற்றுகூட திராவிட முன்னேற்றக்கழகத்திலுள்ள ஒரு அங்கத்தினர், "வேலை நிறுத்த காலத்தில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் வீட்டுக் வீடாகப் போய் வேலைக்குப் போங்கள் என்று சொன்னார்கள். மண்டல காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களே தபால் கடிதங்களை வீடு வீடாகக் கொண்டுபோய் கொடுத்தார்கள்; அது காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு இழிவு இல்லவா" என்று கேட்டார். இதில் என்ன இழிவு இருக்கிறது? இவ்விதமான வேலைநிறுத்தங்கள் நடைபெறுவதால் பொதுமக்களுடைய பணிகள் கெட்டுப் போகக்கூடாது என்பது காங்கிரஸ்காரர்கள் எண்ணம். அது மட்டுமல்ல. நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித்தந்த தலைவர்களின் வழியில் வேலை செய்து கொண்டிருக்கும் நமது தலைவர்களும் இவ்வித பணியை செய்தார்கள். இதில் எந்த விதமான தவறும் இல்லை என்றுதான் சொல்லமுடியும். ஆகவே இம்மாதிரி செய்தது சரியா தப்பா என்று இந்தச் சபையில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, திருத்தணி நம்முடைய தாயகத்தோடு சேர்ந்ததைப்பற்றி அங்கிருந்து வந்துள்ள நம்முடைய அங்கத்தினர் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். தாயகத்தில் சேர்ந்த மக்களைப் பாராட்ட வேண்டியது நம்முடைய கடமையாகும்.

அடுத்தபடியாக, ஆரணியாறுத் திட்டம், பரம்பிக்குளத் திட்டம் எல்லாம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கத்திற்கு மேலாக இப்படி ஒரு மத்திய அரசாங்கம் இருக்கின்ற காரணத்தினால்தான் இவ்விதமான திட்டங்கள் எல்லாம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருக்கின்றன. அதல்லாமல் நாம் தனியாகப் பிரிந்து இருப்போமானால் இம்மாதிரியான ஒரு பலனை நாம் அடைய முடியுமா? ஆகவே நாட்டுப் பிரிவினை என்பது பொருத்தமற்றது. நாடு பிரிவினைப்பட்டு இருந்தால் நிச்சயமாக இதுபோன்ற பலன்கள் எல்லாம் கிடைக்காமல் போகலாம். ஆகவே இனிமேலாவது நாட்டுப் பிரிவினை வேண்டும் என்று சொல்லுபவர்கள் அவ்விதம் சொல்லுவதைக் கைவிடுவார்கள் என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தி மொழியைப்பற்றி சிலர் என்ன வெல்லாமோ சொல்லுகிறார்கள். முன்னால் 6,000 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்து நம்மை ஆண்டு கொண்டிருந்த போது அந்த மொழி வேண்டாம் என்று அப்போது யாரும் சொல்லவில்லை. ஆனால் இப்போது மட்டும் நம்முடைய இந்தியாவில் உள்ள ஒரு மொழியாகிய இந்தி வேண்டாம் என்று சொல்லுவதில் என்ன பொருத்தம் இருக்கிறது? நாணயங்களில் எல்லாம் நயா பைசா என்று எழுதுவதினால் இந்தி புகுத்தப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் அது சரியல்ல, நம்முடைய போதனா மொழி தமிழாகத் தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள எல்லோரும் ஒரே வகையில் செயல் பட்டுக்

[Sri S. Ramalinga Padayachi] [10th August 1960

கொண்டிருக்க வேண்டுமானால் நாணயங்களிலும், மைல் கல்களிலும் இந்தி எழுதுவதனால் எந்தவிதத் தவறும் இல்லை. இந்தியா பூராவுக்கும் ஒரே மொழி இருக்கவேண்டும் என்று சொல்லுவது பாராட்டத்தக்கதுதான் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக தென்-மேற்கு பருவக் காற்று மழை இந்த
10-10 a.m. வருஷம் அதிகமாக இல்லை—நதிப் பெருக்கு அதிகமாக இல்லை— என்று சொன்னாலும் கூட, குறிப்பிட்ட காலத்தில் கோடை மழை பெய்திருக்கிறது. அதோடு புஞ்சைக்கு வேண்டிய காலத்தில் பெய்யும் மழையும் நல்ல முறையில் பெய்திருக்கிறது. மலையாளப் பகுதியில் பெய்யும் மழை அதிகமாகப் பெய்யாவிட்டாலும் கூட நமது மாநிலத்தில் பெய்யக் கூடிய மழை நல்ல முறையில் பெய்திருக்கிறது. வட கிழக்குப் பருவக் காற்று மழையும் சரியான முறையில் பெய்யும், அதனால் எந்த விதமான கஷ்டமும் இருக்காது என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக தொழிற்சாலைகளைப் பற்றி கவர்னர் பெருமான் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கச்சா ஃபில்ம் தொழிற்சாலை உதகையில் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது மிக மிக வரவேற்கத்தக்கது. இந்தத் தொழிற்சாலைக்கான இடம் உதகையானாலும் கூட, வேறு இரண்டு தொழிற்சாலைகளைச் சென்னையில் ஏற்படுத்தப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரே இடத்தில் சென்னையைப் போல அதிகமான ஜன நெருக்கம் இருக்கக் கூடிய இடத்தில்—மேலும் மேலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்திக் கொண்டே போனால் இன்னும் அதிக ஜன நெருக்கம் ஏற்படும். திருச்சியில் நல்ல தண்ணீர் வசதி இருக்கிறது. இட வசதியும் இருக்கிறது. ஆகவே இந்தத் தொழிற்சாலைகளை ஒரே இடத்தில் வைக்காமல் திருச்சி போன்ற இடங்களிலும் பரவலாக ஏற்படுத்தினால் ஆங்காங்கு தொழில் வசதி ஏற்படும். அதனால் ஜன நெருக்கம் அதிகமாகி கஷ்டங்களும் ஏற்படாது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நெய்வேலியைப் பொறுத்த வரையில் வேலை நல்ல முறையில் நடந்துகொண்டு வருகிறது. குறிப்பிட்ட காலத்திற்கு முன்னலேயே ம்வேலை முடிந்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி எடுத்த பிறகு சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிறது. இந்த நெய்வேலித் திட்டம் பூர்த்தியானவுடன் வட நாடு வளர்கிறது, தென் நாடு வஞ்சிக்கப்படுகிறது என்று சொல்வதற்கு இடமில்லாமல் போய்விடும் என்று நான் நினைக்கிறேன். ஒவ்வொரு நாட்டுக்கும் எந்தெந்த சமயத்தில் வசதி ஏற்படுகிறதோ அந்தந்த சமயத்தில் தான் இதையெல்லாம் செய்ய முடியுமே தவிர, அதற்கு முன்பாகச் செய்ய முடியாது. இப்போது தென் நாடு வளர்ந்து கொண்டுதான் வருகிறது. தென் நாடு வஞ்சிக்கப்படுவதாகச் சொல்ல முடியாது. இனிமேலும் இந்த மாதிரித் தொழில்கள் இங்கே அதிகமாக ஏற்படும்போது இந்த மாதிரி சொல்ல முடியாது என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.



10th August 1960] [Sri S. Ramalinga Padayachi]

அடுத்தபடியாக மின்சாரத்தைப் பற்றிச் சொல்லும்போது இப்போது இருக்கும் மின்சாரத்தை விட இனிமேல் குந்தாத் திட்டத்தினால் அதிகமாகக் கிடைக்கும். இது வரையில் நமது நாட்டிலே 10,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அனல் விசை மின் சக்தி நிலையம் நெய்வேலியில் ஏற்பட்ட பிறகு எல்லா கிராமங்களுக்கும் கொடுப்பதாக இருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு மற்ற மாநிலங்களுக்கும் கூட மின்சாரம் கொடுக்கக் கூடிய வசதி ஏற்படும். மற்ற மாநிலங்களை விட நமக்கு அதிக வசதி ஏற்படப் போகிறது. அமைச்சர் அவர்கள் பெரு முயற்சியெடுத்து மின்சார உற்பத்தியை அதிகப்படுத்தியதற்கு மாநில மக்களின் சார்பாக அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களான ஆயக்கட்டு ஏரிகள் பழுது பார்க்கப்படாத நிலையில் இருக்கின்றன. குறிப்பாக உடையார்பாளையம் தாலுக்காவில் குழமூர் ஏரி 15 ஆண்டுகாலமாக ஒன்றும் செய்யப்படாத நிலையில் இருக்கிறது. 15 ஆண்டுகளுக்கு முன்பு திட்டம் ஏற்படுத்தியும் கூட, 4–5 ஆண்டுகளுக்கு முன்பு 85,000 ரூபாய் செலவில் செய்வதற்கு திட்டம் அப்ரூவ் ஆகியும் கூட வேலை எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சொட்டைப்பாளையத்திலிருந்து நாமக்கல் வழியாக எங்கள் பகுதிக்கு தண்ணீர் கொடுக்க சாத்தியம் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. பெரம்பலூர் உயரமான லெவலில் இருப்பதால் சாத்தியமில்லை என்று சொன்னார்கள். உடையார்பாளையம் மிக தூரமாக இருப்பதால் தண்ணீர் கொடுக்க சாத்தியமில்லை என்று சர்க்காரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. சொட்டைப்பாளையத்திலிருந்து 15 மைல் அளவுக்கு உயரமாக இருந்தாலும், தண்ணீர் பாயக்கூடிய வாய்ப்பு இருக்கும் இடங்களுக்கு தண்ணீர் கொண்டுவர வசதி இருக்கிறது. ஆகையால் சர்க்கார் இதை மறு பரிசீலனை செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* Sri K. RAMACHANDRAN: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர்பெருமான் ஆற்றிய உரையின்மீதும், அதன் மீது வந்துள்ள தீர்மானங்களின் மீதும் எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக முதலிலேயே மத்திய சர்க்கார் ஊழியர்கள் ஸ்டிரைக்கைப்பற்றி கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஸ்டிரைக் வந்து, அது நடந்து, முடிந்ததுமே பொது மக்களுக்குத் திருப்திகரமாக இருக்கிறது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால் தேவையில்லாமல் ஒரு ஸ்டிரைக்கை ஆரம்பித்தது பொதுவாக யாருக்குமே பிடிக்காத விஷயமாக இருந்தது. பொதுமக்களுடைய கருத்தைப் பார்த்தால் ஸ்டிரைக் காலத்தில் ரயில்கள் கூட சரியான நேரத்தில்

[Sri K. Ramachandran] [10th August 1960

வந்துகொண்டிருந்தன—இந்த மாதிரி இருந்தால் கூடத் தேவலை என்ற அளவுக்கு பேச்சு இருந்தது. ஸ்டிரைக் காலத்தில் பல இடங்களில் சென்று பார்க்கும்போது ரயில்கள் "டு தி மினிட்" சரியாக வந்துகொண்டிருந்தன. பல இடங்களில் சென்று பார்த்தோம். நானும் கூட ஒரு கிளாஸ்—4 ஊழியர்கள் யூனியனின் தலைவராக இருக்கிறேன். இந்த ஸ்டிரைக்கைப்பற்றி முன் அறிவிப்பே கிடையாது. அவர்களை விசாரித்ததில் திடீரென்று எங்களை ஸ்டிரைக் செய்யவேண்டுமென்று மேலேயிருந்து சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். 12 மணிக்கு ஸ்டிரைக் ஆரம்பிப்பதில் 11 மணி வரையில் என்ன என்று சொல்ல முடியாத நிலையில் இருந்தது. பொதுவாக கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்திரம் அவர்கள் சொன்னது போல விலைவாசி அதிகமாகி விட்டது என்ற காரணத்திற்காக இந்த ஸ்டிரைக்கைச் செய்தார்கள் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. யாரோ ஒரு சிலர் கூறியதற்காகத்தான் இந்த ஸ்டிரைக்கைச் செய்ய முன் வந்திருக்கிறார்கள். விலைவாசி உயர்வுபற்றிச் சொன்னார்கள். விலைவாசி உயர்ந்திருப்பது வாஸ்தவம்தான். ஒப்புக்கொள்கிறேன். 3 லட்சம் பேர்களுக்கு மட்டுமல்ல இந்த விலைவாசி உயர்வு. மத்திய சர்க்கார் ஊழியர்கள் 22 லட்சம் பேர்களில் 3 லட்சம் பேர்கள்தான் ஸ்டிரைக் செய்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கும்தான் இந்த உயர்வு இருக்கிறது. அதே போல ஸ்டேட் அரசாங்க ஊழியர்கள் இருக்கிறார்கள். மற்றவர்களெல்லாம் இருக்கிறார்கள். மூன்று மாதங்களுக்கு முன்புதான் மத்திய சர்க்கார் சம்பளக் கமிஷன் ரிப்போர்ட் வந்திருக்கிறது. இந்த நேரத்தில், இந்த நிலையில் ஸ்டிரைக் நடந்திருக்கிறது. இதைப் போன்ற காரியங்களில் அனுபவம் இல்லாமல் செய்துவிட்டார்கள் என்று அனுதாபப் பட்டார்கள். நானும்கூட அனுதாபப்படுகிறேன். இப்படிப் பட்ட தொழிற் சங்கத் தலைவர்களை நம்பி ஏதோ செய்து விட்டார்கள், அனுபவமில்லாதவர்கள். இந்த ஸ்டிரைக் வெற்றியடைந்திருந்தால் இதை நாங்கள்தான் ஏற்று நடத்தினோம், மாபெரும் வெற்றி வந்துவிட்டது என்று சொல்வார்கள். இன்றைக்குத் தோல்வியடைந்து விட்டதால் "பாவம், அனுபவமில்லாதவர்கள்" என்று சொல்லுகிறார்கள். சிப்பந்திகளுக்கு தொழிற் சங்க உரிமைகள் இருக்க வேண்டுமென்று வரவேற்பவர்களுள் நானும் ஒருவன்தான். ஆனால் இந்த மாதிரியான தொழிற் சங்கத் தலைவர்களை நம்பி காரியத்தில் ஈடுபடக் கூடாது. இதை ஒரு படிப்பினையாக எடுத்துக்கொள்ள வேண்டும். நமது மாநில சிப்பந்திகள் கூட அனுதாபம் தெரிவித்ததாகச் சொன்னார்கள். இவர்களுக்குள் இருக்கக் கூடிய டிஸ்பாரிட்டியே பெரிதாக இருக்கிறது. இதையெல்லாம் மனதில்கொண்டு சர்க்கார் நல்ல விதத்தில் சம்பளத்தை உயர்த்தியிருப்பதைப்பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இந்த மாதிரி சர்க்கார் சிப்பந்திகள் ஈடுபடக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தும்கூட.

அடுத்தபடியாக, மொழிப் பிரச்னைபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை சர்க்கார் கடைப்பிடிக்கும் திட்டம் நன்றாகத்தான் இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த



10th August 1960] [Sri K. Ramachandran]

வரையில் தமிழ் முக்கியம் என்றிருக்கிறது. இந்தியுடன்கூட மற்ற மொழிகளும் கற்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் கூட இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமை இந்தி ஒவ்வொரு விதத்திலும் ஆதிக்கம் பெறக் கூடிய நிலைமைதான் கண்ணுக்குத் தெரிகிறது. இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில் இந்திக்கு அவ்வளவு முக்கியத்துவம் இருக்க வேண்டிய அவசியமில்லை. அந்த மொழியின் ஆதிக்கம் ஏற்படக் கூடிய நிலைமை ஏற்படுமானால் அது விரும்பத்தக்கதல்ல. ஆங்கிலம் எல்லோருக்கும் ஒரு பொதுவான மொழியாக இருக்க சந்தர்ப்பம் இருக்கிறது. இந்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலைமையை நீக்க நமது அரசாங்கம் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரை, பரம்பிக்குளத் திட்டத்தைப் பொறுத்து ஒரு நல்ல முடிவு ஏற்பட்டது குறித்துச் சந்தோஷப்படுகிறேன். கவர்னர் உரையிலே, கேரளத்துடன் மற்ற பல திட்டங்களைப் பற்றியும் பேசி முடிவு காண முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறியிருந்தால் நான் சந்தோஷப்பட்டிருப்பேன். "அப்பர் பெரியார்" திட்டம் இருக்கிறது. இன்னும் இது போன்ற பல திட்டங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டங்களையெல்லாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வைகை அணையைப் பொறுத்தவரை கிழக்கு ராமநாதபுரம் பகுதிக்கு ஓரளவு நல்ல முறையில் தண்ணீர் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை நிரந்தரமான முயற்சியாக்கி, இதுவரை போடாது இருக்கிற "ரூல்ஸ் ரெகுலேஷன்" போடவேண்டும். $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் வைகையில் "ரீ மாடல்" செய்து தண்ணீர் விநியோகத்திற்கான நல்ல திட்டம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதையும் நல்ல முறையில் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போதைய எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டைப் பார்த்தால் கிட்டத்தட்ட 14,700 குளங்கள் இன்னும் ரிப்பேர் செய்யப் படாமல் இருக்கிறது என்று தெரிகிறது. இன்றைக்கு நாம் அந்தக் காரியத்தைச் செய்யும் வேகத்தைப் பார்த்தால் இன்னும் 50 வருஷ காலம் அவ்வளவு குளங்களையும் சீர்படுத்துவதற்கு ஆகும். ஒரு "எமர்ஜன்ஸி பேஸிஸ்" வைத்து அந்தக் காரியத்தைத் துரிதப்படுத்த வேண்டும். நம் எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை நன்றாக ஆராய்ந்து பரிசீலிக்கவேண்டும். தண்ணீர் விட்டாலும் கால்வாய்களில் தண்ணீர் வரக்கூடாத நிலைமை இருக்கிறது. இந்த மாதிரி நிலைமையைச் சீர்திருத்தம் செய்ய துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தொழில் கொள்கையைப் பொறுத்தவரை பரவலாக இந்தத் தொழில்கள் அமையவேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தை இதற்காக நம்முடைய அரசாங்கம் வற்புறுத்தி வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கொள்கையை நம்முடைய அரசாங்கமே

முதலில் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் கூறியிருக்கிறேன். இப்போது நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைப் பார்த்தால் ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளே முன்னேறிக்கொண்டு போகும் நிலைமை இருக்கிறது. பல பகுதிகள் தொழில் வளர்ச்சியற்ற நிலைமையில் இருக்கின்றன. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டுமென்று தொழில் மந்திரியவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அந்த வகையில் நடக்கவில்லை. இன்றைக்கு கிழக்கு ராமநாதபுரத்தில் ஒரு டெக்ஸ்டைல் மில் ஏற்படுத்த வேண்டுமென்றும், மானாமதுரையில் ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அங்கு இவற்றுக்கு வேண்டிய சௌகரியங்கள் இருப்பதால்தான் சொல்கிறோம். கிழக்கு ராமநாதபுரம் கோஸ்டல் ஏரியாவில் தாதுப் பொருள்கள் கிடைக்கின்றன. அவைகளையெல்லாம் பயன்படுத்தி அந்தப் பகுதியில் தொழில் வளர்ச்சி ஏற்பட வழிசெய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை ராஜ்ய சிப்பந்திகளின் சம்பளக் கமிஷன் அறிக்கை ஓரளவு திருப்தியாக இருக்கிறது. அதில் "வில்லேஜ் ஆபீசர்களை"ப் பொறுத்தவரை நிவாரணம் இல்லையென்று சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு ஏதாகிலும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரை கிராமாந்திரங்களில் முன்போல் வேகமாக மின்சார விஸ்தரிப்பு வேலை நடக்கவில்லை. கம்பெனிகள் இருந்த காலத்தில் கூடியவரை சீக்கிரமாகச் செய்து வந்தார்கள். சர்க்கார் டிபார்ட்மெண்ட் வேலை செய்யும் போது காலதாமதம் ஏற்படுவது வருந்தத்தக்கது. இதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

Sri K. S. G. Haja Sheriff: Mr. Speaker, Sir, it is a great pleasure for me to support the Motion of Thanks moved by my esteemed colleague, Mr. S. Lazar for the address of His Excellency the Governor. Sir, we are very much gratified to note from the speech that the State had recorded all-round improvement in every sector. That only shows the efficiency of the administration. The State has registered all-round progress in each and every direction. We must pay compliments not only to the Governor, not only to the Ministers but also to the officers who are engaged in giving shape to a socialistic structure of society which is our goal.

Sir, at the same time, I should not fail to give expression to some of our disappointments. I find that there has been no provision made for eradication of the slums. I feel that slum eradication work must be taken up on an emergency basis. In this metropolitan City, Sir, there are umpteen slums whose condition very abnormal and beyond the imagination of most of the



Members here. I have been visiting these slums on many occasions but I should express before this House my complete shock about the condition of the people who are living there. How they live there, how they maintain their health and to what conditions they are subjected to, I cannot express in this House. It is, therefore, very essential that this slum eradication work should be taken up on an emergency basis and we must see that the slum dwellers are completely rehabilitated.

Sir, I am aware of the difficulties that would confront the Government when they take up slum improvement work. But these should not be an excuse for not improving these slums. Particularly, slums in the heart of the City are very dangerous from all aspects compared to the slums existing in the villages. If an epidemic or any such thing breaks out in the slums in the villages, it will not be very dangerous but if it breaks out particularly in the slum areas in the City, the havoc caused by it cannot be imagined and I, therefore, suggest to the Government that immediate attention should be paid to the question of wiping out these slums.

Recently, we have been hearing of a number of fire accidents in these slums. Most of them happened on account of small things, some people throwing beedi butts and some such things. Unless these are looked into, I am afraid things will go very bad and will lead to very wide discontent among the poor people.

Sir, I am also particularly glad to note that new industries are coming up in many parts of our State. But I have been pleading that these industries should not be located in the metropolitan City or in the hearts of the towns, because even from the defence point of view it is not safe to locate these industries in these areas. Experience has taught us how during the Second World War particularly major ports were made targets of attack and how most of the big industries had been shattered to pieces.

So, I would like that this industry should as far as possible be located in each and every district so that it would also be safe from all points of view. It will not create very great difficulties to the Government, particularly when they are introducing electricity and when they are forming roads even in the remote hamlets. Therefore, I would suggest that the industry should as far as possible be located in various places.

Sir, I would urge very much the development of Minor ports, 10-30 a.m.
especially the port of Tuticorin. I can say that the port of Tuticorin is in a very exalted position. Among very few minor ports which are free from Nature's adverse activities in the world, Tuticorin port is one, which is an all-weather port. Steamers can work all the 24 hours and 365 days without any interference. Already that port is doing excellent service and it is of great use. If it is developed into a major port with the introduction of three berths, I am sure it will double its capacity and in no time that port will be a great asset. We must develop that port since there is no major port between Madras and Cochin and there is no possibility of developing

[Sri K. S. G. Haja Sheriff] [10th August 1960

any other port other than the Tuticorin Port as a major port. So, I would urge upon the Government to see that all pressure is put and even with slight adjustment, the Tuticorin Port is developed as a major port and completed during the Third Plan period.

Sir, another major factor for developing ports is the co-operation that is required from the Transport authorities. At persent we find that although the Transport authorities are co-operating, still they stand as a sort of bottleneck in the development of the port in the Madras City. I am referring to the Madras Port where mechanical contrivances are being introduced. But I must point out that on account of the bottleneck of transport, particularly railways, it is not able to develop as fast as it could. I went through the connected papers which have been submitted to this House about two days ago, wherein a target of 32 million tons of export during the Third Plan period was fixed. In our port we will be able to handle 4 million tons provided the railways play their part. I would suggest to the Hon. Minister for Industries to take up the matter at a high level and see that the railways do play an important role so that there may not be any necessity for reduction in our targets.

Sir, some hon. Members referred to the upward trend in the price of commodities. May I ask one thing? What are the reasons for this upward trend in prices? It is a plain fact that wages chase the price and the price chases wages. This has been referred to even in the last Budget speech. We must come to a sort of understanding in this regard. I make a plea that we must freeze the wages at a particular level. Some hon. Members might object to it and say that the profit also should be freezed. But profit has already been freezed. The only solution is that unless wages are freezed, prices cannot be freezed. This is a very serious problem. Already there is unemployment among the people, particularly among the educated people. The people employed in industries are in a very comfortable position and are getting better wages as compared to those working in any office including the Government office. But uneducated and illiterate workers are getting hundreds of rupees even though the educated workers are not getting that amount. It is not correct to put so much money into their hands as it would only create inflation and it would be difficult to stop it later. In a developing country, people's purchasing power is increasing and as a result of it they go in for more foodstuffs. It is only due to consumption of more foodstuffs, that prices are also going up and at the same time commodities also are not available. So, I would suggest that we must arrest the rise in prices and should not allow it to go beyond a certain limit. At the same time, we must also arrest the rise in wages. I hope my good friends who are controlling labour unions would realize this. Due to abnormal rise in prices, to a certain extent if the industries are to bear additional expenditure on account of rise in wages, to that extent the industries would have to increase the price of commodities. When the price of commodities is increased, there is a hue and cry



10th August 1960] [Sri K. S. G. Haja Sheriff]

raised that the wage should be increased. It is working like a vicious circle. I hope the Government would give serious attention to this aspect of the matter.

* SRI S. THANGAVELU: கனம் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின்மீது நானும் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ஆற்றிய உரையில் நாட்டின் முன்னேற்றத்திற்கான காரியங்களைப் பல வகைகளாகப் பிரித்து, ஒவ்வொரு வகையிலும் திட்டங்கள் வகுத்திருப்பதைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டிருப்பதற்காக அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய சர்க்கார் சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்ததைப்பற்றியும் கவர்னர் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு சில கட்சிக்காரரர்கள் சர்க்கார் சிப்பந்திகளைத் தூண்டிவிட்டு, அவர்கள் மூலமாகத் தங்கள் கட்சியைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். பொதுமக்கள் ஆதரவு இல்லாததன் காரணமாக வேலைநிறுத்தம் முடிவடைந்துவிட்டது என்பதைக் குறித்து நான் பெருமிதத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வேண்டிய நல்ல திட்டத்தைத் தீட்டியிருப்பது பற்றியும் அவருடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அதாவது சாதாரண ஏழை விவசாயிகளுக்குத் தரிசு புரம்போக்கு நிலங்களைப் பட்டா செய்துகொடுக்கவேண்டும். கண்டிஷன் அடமானம் செய்துகொடுக்கப்படவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு தரிசு புரம்போக்கு நிலம் எவ்வளவு இருக்கிறதோ அதை ஏழை ஜனங்களுக்குப் பட்டா செய்துகொடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், எனது தொகுதியில் பல கிராமங்களுக்கு மின்சார வசதி செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக சர்க்காரைப் பாராட்டுகிறேன். அழகபெருமாள்குப்பம், அலியனூர், பகண்டை, மேலப்பாளையம், திருவதி, பாயித்தம்பாடி ஆகிய கிராமங்களுக்கும் இன்னும் பண்ணுருட்டி பிர்க்காவில் பல கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்துகொடுத்திருப்பதற்காக சர்க்காரைப் பாராட்டுகிறேன். அதேசமயத்தில் மின்சக்தி வேண்டும் என்று அகரம் பிர்க்கா, குரிஞ்சிப்பாடி பிர்க்கா முதலிய இடங்களிலிருந்தும் கேட்டிருக்கிறார்கள். அந்த இடங்களுக்கும் மின்சக்தி கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வகையிலே, நெய்வேலி 1961-ம் ஆண்டு எடுக்கப்போகும் நிலக்கரி சம்பந்தமாகவும் ரசாயன உரங்கள் சம்பந்தமாகவும் விரைவிலே நடவடிக்கை எடுத்து நாட்டு மக்களுக்கு நல்ல சந்தர்ப்பங்களைத் தேடிக் கொடுக்கவேண்டுமென்றும் நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்ல. இந்தி மொழி பிரச்னையைப்பற்றி இந்தி வேண்டாம், நாம் தமிழர்கள், மற்ற பாஷைகளை நாம் கற்றுக்கொள்ளவேண்டாம்

[Sri S. Thangavelu] [10th August 1960

என்று ஒரு சில கட்சியினர்கள் பொதுமக்களிடத்திலே, ஒன்றுமே அறியாத பாமர மக்களிடத்திலே முட்டுக்கட்டை போட்டுக் கொண்டு வருகிறார்கள். அது தவறுதலான காரியம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாம் பல ஊர்களுக்கு போகவேண்டி இருப்பதால் பல பாஷைகள் தெரிந்திருக்க வேண்டும். இந்த தேசத்தில் எல்லா பாஷைகளையும்விட இந்தியை அதிகமான பேர்கள் பேசுகிறார்கள். ஆகையால் பள்ளி மாணவ மாணவிகள் இந்தி கற்றுக்கொண்டால் தான் வட பிரதேசங்களுக்குச் சென்று பணி செய்துகொண்டு வருவதற்கு அது உறு துணையாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏதோ இந்தி எதிர்ப்பு என்று சொல்லி, நம் ஜனாதிபதி கனம் ராஜன் பாபு அவர்கள் வரும் காலத்தில் அவர்களுக்கு கருப்புக்கொடி காட்டவேண்டுமென்று கூட ஒரு சில கட்சியினர் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இப்பொழுது அதை வாபஸ் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக பாராட்டுதலை தெரிவித்துக்கொள்ளுவதாக பல காங்கிரஸ் அங்கத்தினர்கள் சொன்னார்கள். அவர்கள் வாபஸ் வாங்கிக்கொண்டதன் கருத்து, பொது மக்கள் ஆதரவு தங்களுக்கு கிடைக்காது என்ற காரணத்திற்காகத் தான் வாபஸ் வாங்கிக்கொண்டார்கள் என்று தெள்ளத் தெளிவாகச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அதுமட்டுமல்ல. பல தொழில்கள் நடக்கும் இடங்களில் தொழிலாளர்களை ஏமாற்றி அவர்கள் மத்தியிலே நாங்கள் தான் சொன்னோம், அதனால் தான் காங்கிரஸ் சர்க்கார் செய்கிறது என்று பெருமை பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். தோல்வி அடையும்போது அவர்கள் மீது பரிதாபப்படுகிறார்கள். அவர்களுக்கு நல்ல முறையில் பலன் கிடைக்காதபோது போலீஸை வைத்துக்கொண்டு மிரட்டி மத்திய சர்க்கார் சிப்பந்திகளை மீண்டும் வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். போலீஸ் சிப்பந்திகள் நாட்டில் இருக்கும் சட்டங்களை அமுல் நடத்தவும், மக்கள் மத்தியிலே அமைதியை நிலைநாட்டவும் இருக்கிறார்கள். நாம் போடும் சட்டங்களையும், திட்டங்களையும் அமுல் நடத்துவதற்காக இருக்கும் போலீஸ் அதிகாரிகளைக் கொண்டு மிரட்டி சர்க்கார் சிப்பந்திகளை டியூடிக்கு சேரும்படி செய்துவிட்டார்கள் என்று அவதூறாகப் பேசுவது சரியல்ல என்பது தான் என்னுடைய வேண்டுகோள். இம்மாதிரி நல்ல காரியங்களை நடத்திக்கொண்டு போகும் மாநில சர்க்கார் இன்னும் மற்ற மாகாணங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. பல தொழிற்சாலைகளையும், பல விவசாய காரியங்களையும் நல்ல முறையில் நடத்திக்கொண்டு போகும்பொழுது ஒரு சில கட்சியினர்கள் குறுக்கே புகுந்து அந்த திட்டங்கள் நடந்தால் காங்கிரஸுக்கு அதிக பலம் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சி பொதுமக்களிடத்தில் போய் பல தப்பிதமான காரியங்களை சொல்லிக்கொண்டு, அது வெற்றிகரமாக நடந்தால் நாங்கள் தான் சொன்னோம் அதனால் தான் காங்கிரஸ் சர்க்கார் செய்தார்கள் என்று சொல்லுகிறார்கள். நடக்காவிட்டால், "பார்த்தீர்களா, பார்த்தீர்களா, காங்கிரஸ் சர்க்கார் இதைச் செய்



10th August 1960] [Sri S. Thangavelu]

வில்லை, அதைச் செய்யவில்லை, என்று குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். "ஸப் இந்தி படோகி, லிக்கோதி பனோங்கிநவாப்பு" எல்லா மாணவ மாணவிகளும் இந்தி படித்தால் தான் எல்லா அலுவலகங்களிலும் அமர்ந்து நாட்டினுடைய சட்ட திட்டங்களை நிர்வகித்து அமுல் நடத்துவதற்கு முடியும். வருங்கால மாணவ மாணவிகள் இந்தி மணிகளாக திகழ வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஹிந்தி கற்றுக்கொள்ளவேண்டாம் என்று தடை செய்து முட்டுக்கட்டை போடும் ஒரு சில கட்சியினர்கள் அந்தத் தவறுதலான மனப்பான்மையை விட்டுவிட்டு, எல்லா மக்களும் இன்புற்று வாழவேண்டும் என்ற நல்லெண்ணத்தின் கீழ் நாம் பாடுபடவேண்டுமே தவிர, இம்மாதிரி தவறுதலான காரியங்களை செய்யவேண்டாம் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நமது மாகாணத்தில் சர்க்கரை ஆலைகள் தொடங்கும் விஷயத்தைப் பற்றி கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில் இருக்கிறது. அந்த ஆலைகளுடைய நிர்வாக வேலைகள் கூடிய சீக்கிரம் தொடங்கி, அதன் மூலம் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அம்சமும் அதில் கண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் இதை ஆரம்பிக்கவேண்டுமென்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீர்ப்பாசன விஷயமாக நமது சென்னை மாநிலத்தில் பல் வேறு நல்ல திட்டங்களை தீட்டிக்கொடுத்து பல நீர் தேக்கங்களை கட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் சர்க்காரைப் பாராட்டுகிறேன். தென் ஆற்காடு ஜில்லாவில் வீடூர் அணையைக் கட்டி பல ஆயிரக்கணக்கான ஏகர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். நாம் எவ்வளவு தான் அணை கட்டி வசதி செய்து கொண்டாலும், இயற்கை சோதனை நம்மோடு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மக்கள் எல்லோரும் எல்லா ஆலயங்களிலும் தெய்வ பக்தியோடு பூஜை செய்தால், எல்லா ஏரிகள், குளங்கள், அணைக்கட்டுகள் ரொம்புவதற்கு தெய்வ சக்தியால் மழை பெய்யும். ஆகவே நாம் எல்லோரும் நல்ல மழை பெய்வதற்கு எல்லா ஆலயங்களிலும் தெய்வத்தை பூஜை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கவர்னர் பெருமானுடைய உரையை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். "ஜெய் ஹிந்த்"

Sri P. S. SANTHANAM: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையிலே எனது கருத்தினை சொல்ல முற்படுகிறேன். கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தத்தை திறமையாக போலீஸார் அடக்கி அமைதிப்படுத்தியிருக்கிறார்கள் என்ற முறையில் போலீஸ் இலாகாவை பாராட்டியிருக்கிறார்கள். உண்மையிலேயே அதுபற்றி நான் வேதனைப்படுகிறேன். போலீஸ்காரர்களை அதற்காக பாராட்டுவதற்கில்லை. போலீஸ் காவல்படையினர் கொலை, கொள்ளைகளை தடுப்பதற்காக இருக்கின்றனர். வட ஆற்காடு ஜில்லாவில் திருவண்ணாமலையை

[Sri P. S. Santhanam] [10th August 1960

அடுத்த இடத்தில் சுமார் ஒரு ஆண்டு காலத்திற்குள் 5, 6 கொலைகள் செய்யப்பட்டும், கொலை என்று தெரிந்திருந்தும், துப்பு துலக்குவதற்கு போலீஸாருக்குத் திறமையில்லை. அதிலே துப்புத் துலக்குவதற்கு நாய் வந்தபோதிலும், அதை நிராகரித்து விட்டனர். அத்தகைய போலீஸ் இலாகாவை நாம் எப்படி பாராட்டமுடியும்?

(Sri S. M. Annamalai in the Chair.)

நிற்கவும், நமது மாநில கவர்னர் பெருமான் ஆற்றிய உரையில் நிலமில்லாதவர்கள் ஏழைகளுடைய திட்டங்கள் காணப்படவில்லை என்பது குறித்து உண்மையிலேயே நான் வருந்துகிறேன். நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கப்படும், உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் என்று அரைகூவிய சர்க்கார், சர்க்காருக்கு ஆதரவாய் ஆணி வேராய் இருக்கிற கவர்னர் பெருமான் உரையில் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பதுபற்றி ஒரு வார்த்தை கூட இல்லாததுபற்றி நான் வருந்துகிறேன். நம் மாநிலத்தை எடுத்துக்கொண்டால் பெரும்பாலான மக்கள் விவசாயத்தை நம்பி வாழக்கூடியவர்கள். 8-ல் 6 பங்கு உழவர்கள். நமக்கு அதிக தொழில் வளம் கிடையாது. விவசாயிகளுக்கு வேண்டிய சில பண்பாடுகள் செய்வதற்கு சர்க்கார் பல அணைகளைக் கட்டி இருக்கிறார்கள். அதை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். ஏரிகளை செப்பனிடுவதற்காகவும், சிறிய கால்வாய்களை பயன்படுத்துவதற்காகவும் சிறிய நீர்தேக்கங்களுக்காகவும் சர்க்கார் பல திட்டங்களை போட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். சிறிய ஏரிகளை, சிறிய கால்வாய்களை செப்பனிடுவதற்கு பல திட்டங்கள் இருந்தும், பல ஆண்டு காலமாக அத்தகைய திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருப்பதினால் அங்குள்ள ஏழை விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உதாரணமாக குடி தண்ணீர் வசதிக்காக பல பகுதிகளில் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். திருவண்ணாமலையில் குடி தண்ணீருக்காக கஷ்டப்பட்டு, ஏறக்குறைய் 5, 6 மைல் தூரத்திலிருந்து கிணறுகளிலிருந்து லாரிகள் மூலம் 50,000 ரூபாய்க்கு மேற்கொண்டு செலவு செய்து டவுனுக்கு குடி தண்ணீர் சப்ளை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, சாத்தனூர் கால்வாயிலிருந்து குடி தண்ணீரை சமுத்திர ஏரிக்கு விட்டால், சுமார் 6,000 ஏக்கராவுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுவதுமின்றி, ஏறக்குறைய 50,000 ஜனத்தொகை கொண்ட அந்த பிராந்தியத்திற்கு குடி தண்ணீர் வசதியும் கிடைக்கும். ஆனால் அம்மாதிரியான திட்டத்தை சர்க்கார் இதுவரை கொண்டுவரவில்லை. உண்மையிலே அவர்கள் அப்படிக் கொண்டு வராததற்காக வேதனைப்படுகிறோம். செங்கம் தாலூக்காவை அடுத்த சிறிய கால்வாயை மராமத்து செய்ய ஏறக்குறைய ரூ. 20 லட்சம் செலவாகும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்யாதது அந்தப் பகுதி மக்களுக்கு மிகுந்த குறையாக இருக்கிறது என்று இந்த மா மன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.



10th August 1960] [Sri P. S. Santhanam]

தொழில் வளம் பற்றிச் சொல்லும்போது, இன்றைக்குச் சிறிய திட்டங்களைப் பற்றிக் கவர்னர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். வட ஆற்காடு செங்கம் தாலூக்காப் பக்கத்தில் சந்தனக் கட்டைகள் அதிகமாகக் கிடைக்கிறது. அங்கே நிரம்பக் கட்டடங்களும் இருக்கின்றன. அந்தக் கட்டைகளையும் வைத்து, அந்த கட்டடங்களைக் கொண்டு, சந்தனத் தைலம் இறக்கும் தொழிலை ஆரம்பிக்க ஏதுவாக இருக்கும். திருவண்ணாமலை, அதன் பக்கத்தில் உள்ள கிராமங்களில் மைகா கிடைப்பதாக, அந்த ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் அவர்கள் சர்க்காருக்குக் குறிப்பு அனுப்பியிருந்தும், சர்க்கார் எந்த நடவடிக்கைகளும் எடுத்தாகத் தெரியவில்லை. போளூர் தாலூக்காவில், கந்தகம் கிடைப்பதாக கனம் அண்ணாமலை குறிப்பிட்டிருக்கிறார்கள். அம்மாதிரிக் கனிப்பொருள்களை எடுக்க உடனடியாக நடவடிக்கை எடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு நல் வாழ்வு வாழ வழி செய்ததாகும் என்று இந்த மன்றத்தின் மூலம் தெரிவிக்கிறேன். சுமார் 5, 6 ஆண்டுகளுக்கு முன் ஒரு சர்க்கரை ஆலை நிறுவ, லைசென்சு கொடுக்கப்பட்டது. ஆனால், அதை வாங்கியவர், ரங்கசாமி ரெட்டியார் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதில் எந்தப் பங்கும் எடுக்கக் கூடாது என்று இருந்த தன் காரணத்தால், அந்த லைசென்சு ரத்து செய்யப்பட்டது. மீண்டும் சர்க்கரை ஆலையைப் பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது சம்மந்தமாக ஐந்து விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அதில் திருவண்ணாமலை ஒன்று. முக்கியமாக சர்க்காருக்குக் கூற விரும்புகிறேன், செங்கம் தாலூக்கா, போளூர் தாலூக்கா, திருவண்ணாமலை, ஆரணி இன்னும் பல கிராமங்கள் மத்தியில் ஒரு ஆலை நிறுவினால், அது மக்களுக்கு ரொம்ப சௌகரியமாக இருக்கும் என்பதையும், அதற்கு லைசென்சு வழங்கினால் பெரும் ஆதரவு இருக்கும் என்றும் இந்த மன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜனங்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தை எடுத்துக் கொண்டால் மிகவும் வருந்தத் தக்கதாக இருக்கிறது. மந்திரிகள் ஓடி ஓடிப் பார்க்கிறார்கள்; மண்டல காங்கிரஸ் அங்கத்தினர்கள், காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள் எல்லோரும் ஓடியோடிப் பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கும் நேரத்தில், அந்த ஹரிஜனங்கள் வாழும் பகுதிகளை இவர்கள் நேரில் கண்டால், கண்ணீர்தான் விடுவார்கள். அது நிச்சயம். அவர்களுடைய நிலையைச் சீர்படுத்தப் பல, பலத் திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், சர்க்கார் அவற்றை நிறைவேற்றத் தயங்குகிறார்கள். அதன் நோக்கம் அங்குள்ள பெரிய, பெரிய நிலச்சுவாந்தார்கள், மில் முதலாளிகள், மோட்டார் மன்னர்கள் அதை எதிர்க்கிறார்கள். நான் இந்த சமயம் ரயிலில் வரும் நேரத்தில் பேசிக்கொள்கிறார்கள்:—“இவர்கள் இந்த ஹரிஜனங்களுக்கு இம்மாதிரிச் சலுகைகளையெல்லாம் கொடுத்து விடுகிறார்கள். ஆகவே, அவர்கள் எங்களை மதிக்கமாட்டேன் என்கிறார்கள். என் பண்ணைக்கு வேலைக்கு வர மாட்டேன் என்கிறார்கள். இதனால்தான் இவர்கள் கிசான் போராட்டம்

[Sri P. S. Santhanam] [10th August 1960

நடத்துகிறார்கள். அதிகக் கூலி கேட்கிறார்கள்" என்றெல்லாம். ஆகவே ஹரிஜனங்களுக்கு, உள்ளன்போடு மற்றவர் தடுப்பதைப் பாராட்டாமல், ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பள்ளிப் பிள்ளைகளுக்கு பகல் உணவு கொடுப்பதுபற்றி பெரு மகிழ்ச்சியடைகிறேன். இப்பொழுது இதை சர்க்கார் பல பள்ளிகளுக்கும் விஸ்தரிக்கப் போகிறார்கள். இதே சமயத்தில் தனியார் நடத்தும் ஹாஸ்டல்களையும், சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும். தனியார் நடத்தும் ஹாஸ்டல்கள் ஹரிஜன மக்களுக்கு பயன் அளிப்பதில்லை. ஆகவே அந்த விஷயத்தையும் இந்த மன்றத்திலே கூறுகிறேன். அம்மாதிரி ஹாஸ்டல்களில் பல குற்றங்கள், குறைகள் இருக்கின்றன. குறிப்பாக சிதம்பரம் தென்னாற்காடு பகுதிகளை எடுத்துக்கொண்டால் ....

(டெம்பரரி சேர்மன் மணியடித்து அடுத்த மெம்பரைக் கூப்பிட்டார்.)

Sri C. R. RAMASWAMI: சபைத் தலைவர் அவர்களே. ஆண்டுக்கு ஒருமுறை கவர்னர் அவர்கள் சம்பிரதாய முறைப்படி ஒரு உரையை நிகழ்த்துகிறார்கள். அதன்மேல் நாம் விவாதம் நடத்துகிறோம். முக்கியமாக அரசாங்கத்தின் கொள்கையை இந்த உரையில் எடுத்துச் சொல்லுகிறார்கள். இந்த ஆண்டு உரையில் முக்கியமாக மூன்று விஷயங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். முதன்முதலில், மத்திய சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ததை சர்க்கார் சமாளித்ததற்கு மத்திய சர்க்காரையும், மாகாண சர்க்காரையும் நாம் பாராட்ட வேண்டும். அது ஒரு பெரிய சாதனைதான். நம் சுதந்தரமே பறி போகும் போல் ஏற்பட்ட நிலைமையைக் கண்டோம். முக்கியமாக சில அரசியல் கட்சிகள் சேர்ந்துகொண்டு இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு, இராஜ்யத்தையே கைபிடிக்கலாம் என்று ஆரம்பித்தார்கள். முக்கியமாக கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், அவர்களுடைய முதல் தலைவர், லெனின், கடைப்பிடித்ததைத்தான் ஆரம்பித்தார்கள். லெனின் சொன்னார், "முதலில் நாட்டிலே ஒரு பெரிய குழப்பத்தை உண்டாக்கி, ஸிவில் அதாரிடி கம்ப்ளீட்டாக "கொலாப்ஸ்" ஆகக் கூடிய சூழ்நிலையைக் கொண்டு வந்து, ஒரு பெரிய புரட்சியைக் கொண்டு வர வேண்டும்" என்று. இதில் அவர்களுக்கு பல கட்சிகளும் துணையாக வந்தன, திராவிட முன்னேற்றக் கட்சி நண்பர்கள், அவர்களோடு துணைசெய்ய முன்வந்தார்கள். இவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி கொள்கை நன்றாகத் தெரிந்துதான் துணை செய்ய முன் வந்தார்களா, அல்லது அவர்கள் கொள்கை புரியாமலே காங்கிரஸ் கட்சிக்கு எதிராக இருக்கிறது என்பதற்காக ஆதரவு கொடுத்தார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் அரசியல் ஞானம் இருந்துதான் சேர்ந்தார்கள் என்றால், அதை வரவேற்கத்தான் வேண்டும். ஆனால், கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தை எதிர்க்கிறார்கள், அதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று புரட்சியையும்



10th August 1960] [Sri C. R. Ramaswami]

குழப்பத்தையும் ஏற்படுத்தவேண்டுமென்றால் அது சரியல்ல என்பது என் எண்ணம். இருபத்திரண்டு லட்சம் தொழிலாளிகளில், ஓரிரண்டு லட்சம் தொழிலாளிகளே வேலைநிறுத்தத்தில் சேர்ந்திருந்தார்கள். மீதி 20 லட்சம் தொழிலாளிகளுக்கு நம் பாராட்டுதலைத் தெரிவிக்க வேண்டும். பிரதம மந்திரி நேரு அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். இம்மாதிரி நாட்டில் வேலை நிறுத்தம் ஏற்பட்டால், நாம் எந்த வேலையையும் நன்றாகச் செய்ய முடியாது என்று. அது நாட்டுக்கு ஒரு சோதனையாக இருந்தது. அதைச் சமாளித்ததற்கு நாம் ராஜ்ய சர்க்கார்களையும், மத்திய சர்க்காரையும் பாராட்ட வேண்டும். அது திரும்பவும் ஏற்படக் கூடாது என்ற எண்ணத்தில், தொழில் சங்கத் தலைவர்கள் பற்றி திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். முக்கியமாக அரசியல் கட்சித் தலைவர்கள் சங்கத் தலைவர்களாக இருக்கக் கூடாது என்று. அது மிகவும் முக்கியமானது.

மொழிப் பிரச்னையைப் பற்றி கவர்னர் அவர்களும் அது ஒரு சிக்கலான பிரச்னை என்று சொல்லியிருக்கிறார்கள். திரு பணிக்கர் அவர்கள் மைலாப்பூரில் சொன்னார்கள்: "300 ஆண்டுகளாக ஆங்கிலம் போதனை செய்யப்பட்டும், நாம் படித்து வந்தும், நாட்டில் ஒன்றரை சத விகிதம் கூட ஆங்கிலம் படித்தவர்கள் இல்லை" என்று. ஆகவே, ஆங்கிலத்தில் எல்லோரும் படித்தவர்களாக இருப்பது சாத்தியமில்லை. அது அவசியமும் இல்லை. ஆகவே, ஒவ்வொரு மாகாணமும், தன் சொந்த மொழியில், கல்லூரிகளிலும் போதனை செய்ய ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். அகில இந்திய ரீதியில் பார்த்தால், ஹிந்தி வேண்டுமா, ஆங்கிலம் வேண்டுமா என்ற பிரச்னையில், அது ஹிந்திதான் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அப்படி மறுப்பவர்களுக்கு, காலத்தின் போக்குத் தெரியவில்லை யென்று தான் சொல்ல நான் முன் வந்துள்ளேன்.

நமது இந்தியாவில் ஏறக்குறைய 41 சத விகிதம் பேர்கள் 11-00
சாதாரணமாக ஹிந்தி புரிந்து கொண்டிருக்கிறார்கள். வியா a.m.
பாரிகளும் ஹிந்தி அவசியம் கற்றுக்கொள்ளள வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வட இந்தியாவில் எல்லோரும் ஹிந்தியில் கணக்குகள் எழுதி வருவதால் அவர்களுடன் இவர்கள் வியாபாரம் நடத்துவதற்காக இவர்களும் ஹிந்தி கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்பொழுதுதான் அவர்களுடைய வியாபாரம் நல்ல விதத்தில் நடக்கும் என்ற முறையில் அப்படி கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். இப்பொழுது எல்லோரும் ஆங்கிலத்தில் தங்களுடைய வியாபாரக் கணக்குகளை எழுதுவதில்லை. எந்த மாகாணத்திலும் ஆங்கிலத்தில் கணக்குகள் எழுதுவதில்லை. இங்கு தமிழில் கணக்குகளை எழுதிக்கொண்டிருந்தால் அதை வைத்துக்கொண்டு மற்ற மாகாணங்களுடன் வியாபாரம் செய்ய முடியாது என்று வியாபாரிகள் நினைப்பதால், எல்லோரும் ஹிந்தியில் கணக்குகளை எழுதுவதற்கு முற்படுகிறார்கள். ஆகவே அந்த விதக்கிலும் ஹிந்கி கற்றுக்கொள்வது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே வியாபார ரீதியில் பார்த்தாலும் கூட

[Sri C. R. Ramaswami] [10th August 1960

ஹிந்தி கற்றுக்கொள்வது அவசியமாக இருக்கிறது. ஹிந்தி வரப்போவதில்லை என்று நினைத்துக்கொண்டிருந்தால் இந்தியாவின் முக்கியவத்துவத்திற்கு பாதகம் ஏற்படக்கூடியதாக இருக்கிறது. ஹிந்தியே வரப்போகிறதில்லை என்று இருந்தால் முன்னேற்றமடையவே முடியாது. ஆங்கிலத்தையே முழுதும் நம்பிக்கொண்டிருக்க முடியாது. ஆங்கிலத்தையே நம்பிக்கொண்டிருந்தால் நம்முடைய காரியம் முழுவதும் நடைபெறாது. ஏனென்றால் மற்ற மாகாணங்களில் ஹிந்தியில் கணக்குகளை எழுதும் போது நாம் மட்டும் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிக்கொண்டிருந்தால் ஒன்றும் பிரயோசனப்படாது. ஒவ்வொரு தடவையும் அவைகளை மொழி பெயர்த்துக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை ஏற்படும். அதனால் வியாபாரம் பாதிக்கப்படும். அந்த அடிப்படையில் ஹிந்தி கற்றுக்கொள்ள வேண்டியது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது.

ஆங்கிலத்தை அடியோடு விட்டு விடவேண்டுமென்பதும் இல்லை. அவற்றையும் கொஞ்சம் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கு அது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. விஞ்ஞானப் படிப்பு முதலியவைகளுக்கு அது அவசியமாக இருக்கிறது. அதற்கு வேண்டி ஒவ்வொரு கல்லூரியிலும் "பேசிக்" ஆங்கிலம் என்று சொல்லக்கூடிய குறைந்த அளவில் ஆங்கிலம் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதன் மூலமாக விஞ்ஞானம் முதலியவைகளைக் கற்றுக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே ஆங்கிலம், ஹிந்தி இரண்டும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. விஞ்ஞானப் படிப்புக்கு வேண்டிய அளவு ஆங்கிலம் கற்றுக்கொள்ள வேண்டும். ஆங்கிலமே கூடாது என்று சொல்வதற்கு இல்லை. எல்லா மொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டியது ரொம்பவும் அவசியம். எவ்வளவு அதிகப்படியான பாஷைகளைக் கற்றுக்கொள்ளுகிறோமோ அந்த அளவுக்கு நன்மைதான். எனக்குத் தெரியும் இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் மாணவ, மாணவிகள் பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய பாஷைகளைக் கற்றுக்கொள்வதற்கு எவ்வளவோ ஆசைப்படுகிறார்கள் என்பது. இந்த அடிப்படையில் பார்க்கும் போது நாம் எவ்வளவு பாஷைகளைக் கற்றுக்கொள்ளுகிறோமோ அந்த அளவுக்கு நன்மைதான். அப்படி அதிகப்படியான பாஷைகளைக் கற்றுக்கொண்டால் பொதுஜனங்களுக்கும் லாபம் உண்டு, மற்றவர்களுக்கும் லாபம் உண்டு. ஆகவே மற்ற பாஷைகளைக் கற்றுக்கொள்வதற்கு வெறுப்புக்காட்டுவதற்கு அர்த்தமே இல்லை. அப்படிக் காட்டுவதும் நியாயம் அல்ல. இனிமேலாவது அப்படி காட்டுகிறவர்கள் காட்ட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே தேசீய மொழியாகிய ஹிந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக ஆகிறது. மாகாண ரீதியில் பார்த்தாலும் அது அவசியமாக இருக்கிறது. நமது தாய்மொழி மூலமாக குழந்தைகளுக்கு படிப்புக்கற்றுகொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்பொழுதுதான் அவர்களுக்கு படிப்பு நன்றாக



10th August 1960] [Sri C. R. Ramaswami]

வரும். ஆகவே இது விஷயத்தில் அனாவசியமாக விருப்பு வெறுப்பை உண்டாக்க வேண்டியதில்லை. அனாவசியமாக சண்டை போட வேண்டியதில்லை. அனாவசியமாக சண்டையைக் கிளப்பினால் நாட்டிற்குக் கெடுதலே தவிர வேறு ஒரு பிரயோசனமும் இல்லை. நாட்டிலுள்ள ஒரு பகுதி, அதாவது திராவிட முன்னேற்றக் கழகம் கட்சியைச் சேர்ந்தவர்கள், இதை நன்றாக உணர்ந்து இதைப்பற்றி தீவிரமாக ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மொழிப் பிரச்னையில் அனாவசியமாக சண்டையைக் கிளப்பிக்கொண்டிருக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக சண்டை போடுவதற்கு இப்படிப்பட்ட ஒரு ஆயுதம் கிடைத்தது என்று அதை வைத்துக்கொண்டு சண்டை போட வேண்டாம் என்று அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அது மிகவும் தவறான காரியம். இப்படிச் சண்டைபோட்டால் அவர்களுடைய அரசியல் வளர்ச்சிக்கு அது ஒரு முட்டுக்கட்டையாகத்தான் இருக்கும் என்பதையும் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் மூன்றாவது விஷயமாக சொல்லியிருப்பது விலைவாசி உயர்வைப் பற்றி. அதைப்பற்றி மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு அவர்களுடைய கையில் தான் எல்லா விதமான ஆயுதங்களும் இருக்கின்றன. ரிசர்வ் பாங்க் மூலமாக அவர்கள் எல்லாவற்றையும் கண்ட்ரோல் செய்ய முடியும் எல்லா துறைகளிலும் அவர்கள் "மொனாபலி கண்ட்ரோல்" செய்ய முடியும். அதற்கு வேண்டிய அதிகாரங்கள் அவர்களுடைய கையில் இருக்கின்றன. அதை ஏன் அவர்கள் செய்யவில்லை என்று நாம் அவர்களை கேட்க வேண்டும். அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருந்தாலும் அப்படி எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கை போதாது என்று நாம் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். சென்ற ஐந்து வருஷ காலமாக பண வீக்கம் அதிகமாகிக்கொண்டு வருகிறது. ஆனால் பண அதிகரிப்புக்குத் தகுந்த அளவு உற்பத்தி பெருகவில்லை. அதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நமக்கு வேண்டிய அத்தியாவசிய பண்டங்களின் விலை உயர்வால் தான் எல்லா பண்டங்களின் விலையும் உயர்ந்திருக்கிறது. ஆகவே அதைக் குறைக்க வேண்டி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சில கொள்கைகளை அனுசரித்து வருகிறார்கள். அதைக் கொஞ்சம் தளர்த்த வேண்டும். அதைச் சரிக்கட்டுவதற்கு நமது அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் விதி செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் இப்பொழுதுள்ள ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையை கொஞ்சம் விரிவு படுத்தினால் விலைவாசிகள் கொஞ்சம் குறையலாம். உணவு தானியங்கள் மற்றும் சில முக்கியமான பொருள்களுக்கு அதிகப்படியான வசதிகள் செய்து கொடுத்தால் "ப்ரைஸ் ஸ்டபிலைசேஷன்" மூலம் விலை குறைவதற்கு வழி ஏற்படும். இப்பொழுது அரசாங்கமே கொள்முதல் செய்கிறார்கள். அதை வியாபாரிகளுக்கு விட்டு விடவேண்டும். அரசாங்கம் கொள்முதல் செய்வதில் அதிகப்படியான பணம்

மாற்றப்படுவதால் அவர்களுக்கு அங்கங்கே வீட்டு வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI D. S. AUTHIMOOLAM: தலைவர் அவர்களே, கவர்னருடைய உரையில் முதல் அத்தியாயமாக மத்திய அரசாங்க ஊழியர்களுடைய வேலை நிறுத்தத்தைப்பற்றியும், அதை ரொம்பவும் சாமர்த்தியமாக சமாளித்ததுபற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னொரு விஷயம் ஏன் சொல்லப்படவில்லை என்று நான் ஆச்சரியப்படுகிறேன். ஏனென்றால் அகில இந்தியாவில் உள்ள பதினைந்து ராஜ்யங்களில் முக்கியமாக இந்த சென்னை ராஜ்யத்தில்தான் தேசீயக் கொடியை எரிப்பது வழக்கமாக வருஷாவருஷம் ஒரு தடவை நடந்து வருகிறது. தேசீயக் கொடியை பெரியார் எரிக்கப்போகிறார் எரிக்கப் போகிறார் என்று விளம்பரம் செய்கின்றது. பெரியார் அரெஸ்டு செய்யப்படுவார் என்று சொல்வது உடனே அவர்கள் போனில் பேசிக்கொள்வார்களோ என்னமோ தெரியாது. பெரியாரை முதல்நாள் கைது செய்து மறுநாள் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரப்படுவார். அப்புறம் அவருக்கு இங்கே ஆரஞ்சுப் பழம் என்ன, பாதாம் ஹல்வா என்ன என்று உபசாரம். இது மகா கேவலம். சர்க்கார் இப்படி நடத்துவதற்குக் காரணம் அவர் மூலமாக சில வோட்டுக்களைப் பெறுவதற்காகத்தான். வோட்டு, வோட்டு என்று இப்படி மகாகேவலமாக நடந்து கொண்டால் இந்தத் தேசம் அழிந்து நாசமாகிவிடும். இந்தத் தேசம் பண்பில் சிறந்த தேசம். அந்தப் பண்பை பாதுகாப்பதற்கு நல்ல அரசாங்கம் வேண்டும். தேசீயக் கொடி என்பது மக்களின் உயிருக்கு மேலான ஒரு சமாசாரம். அதை வருஷத்திற்கு ஒருதரம் எரிக்கிறேன் என்று சொன்னால் அம்மாதிரி எரிக்கக்கூடிய நபர்களை—தேசீயக் கொடியை எரித்தார்கள் என்றால் அதற்குப் பின்பு சரியானபடி நடவடிக்கை எடுத்து வருஷக்கணக்காக உள்ளே தள்ள வேண்டும். அவர்கள் வருஷத்திற்கு ஒரு தடவை இப்படி கொடி எரிப்பு நடத்தட்டும். அதனால் அவர்களுக்குக் கொஞ்சம் விளம்பரம் வரட்டும். அந்த விளம்பரம்தானே அவர் மூலமாக நமக்கு பின்னால் சில வோட்டுக்களை வாங்கித் தரும் என்று எண்ணினால் இது மிகமிக வெட்கமானது என்று சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இப்போது சர்க்கார் எதை எடுத்தாலும் ஓட்டுப் பெறுகிற கண்ணோட்டத்தோடு நடந்து வருவதானது இந்த ராஜ்யத்திற்கு அவ்வளவு நல்லது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, முக்கியமாக அகவிலையைப் பற்றியது. எல்லாப் பொருள்களின் விலையும் விஷம்போல ஏறிக்கொண்டிருக்கிறது. இப்படி அகவிலை ஏறுவதற்குக் காரணம் என்ன? பெரிய பெரிய திட்டங்களை எல்லாம் போடுகிறோம் என்றால் உங்களை யார் இவ்வளவு பெரிய திட்டங்களை எல்லாம் போடச் சொன்னார்கள்? உங்களுக்கு இந்த அதிகாரத்தை யார் கொடுத்தது? மக்கள் கொடுத்தார்கள் என்று உடனே சொல்வீர்கள். இது மிகவும் பின் தங்கிய நாடு என்று சொல்லிக் கொண்டு அதைப் பதினைந்து வருஷங்களில் ஒரேயடியாக முன்னுக்குக் கொண்டுவரப்போகிறோம் என்று திட்டங்களை



எல்லாம் வெகுவேகமாகப் போட்டு கடைசியில் இன்றைக்கு எதைப்பார்த்தாலும் ப்ளாக்மார்க்கெட்டாக ஆக்கிவிட்டனர்கள். அரிசி விலை ஏறிவிட்டது. ஜீனி விலை ஏறிவிட்டது. ஒரு வீசை ஜீனி என்ன விலை என்றால்—நான் அடிக்கடி வாங்கி பழக்கம் இல்லை—(ஒரே சிரிப்பு) இப்படி விலை இருந்தால் ஏழை ஜனங்கள் என்ன செய்வார்கள்? ஒரு ஏழை மகன் படிக்கவேண்டுமென்றால் ஒரு குயர் பேப்பர் என்ன விலை உயர்ந்து கிடக்கிறது? புத்தகங்கள் எல்லாம் என்ன விலையாகிறது? ஆகவே இதற்கெல்லாம் காரணம்—விளையாட்டாகச் சிரித்துப் பிரயோஜனம் இல்லை. இப்போது நான் சொல்வதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். பழைய காலத்தில் மஞ்சள் பெட்டிக்கு வோட்டு என்றால் போதும். காங்கிரஸ்காரரர் யார் நின்றாலும் தேர்தலில் "அன் அப்போஸ்டாக" வெற்றிபெற்று வருவார். ஆனால் இன்றுள்ள நிலைமை வேறு. முதல் மந்திரி அவர்கள் திக்விஜயம் செய்து புஷ்பஹாரங்களாக வாங்கிச் சூட்டிக்கொண்டு வரலாம். மற்றபடி தேர்தல் காலத்தில் வந்தால் நிலைமை என்ன? சமீபத்தில் அருப்புக்கோட்டை தேர்தல் நடந்தது. அங்கே சுயேச்சையாக நின்ற அபேட்சகரைத் தோற்கடிக்க என்ன என்ன பாடுபட்டார்கள். வரவுசெலவு லட்சக்கணக்காக இருந்திருக்கும். காங்கிரஸ் அமைச்சர்கள் குடும்பத்தோடு சென்றார்கள். "நாம் கன்னடிகர் அல்லவா? இந்திய சர்க்காரில் —திரு. ராமசாமி அவர்களுக்கு தம் சாதி பற்றி தானே மந்திரி பதவி கொடுத்திருக்கிறார்கள்"—இப்படி என்ன என்னவோ முறையில் சொல்லியும் பார்த்தார் காசை செலவழித்தும் பார்த்தார்கள். கடைசியில் பிச்சுக்கொண்டுபோய்விட்டது. நிலைமை முன்மாதிரி இல்லை. எதிர்க்கட்சிக்காரன் பத்தாயிரம் செலவழிக்கிறான் என்றால் காங்கிரஸ்காரனும் பத்தாயிரம் செலவழித்து தோற்றும் போகலாம். அல்லது ஒரு நூறு அல்லது இருநூறு வோட்டு வித்தியாசத்தில் ஜயிக்கலாம். ஆகவே மக்களுடைய அபிமானத்தை கொஞ்சம், கொஞ்சமாக இழந்து வருவதோடு பணத்தால் தடுமாறி வோட்டுப்பெற்று உலவி வருகிறார்கள். நீங்கள் பரம்பரையாக இருப்பதை, அமைச்சர்களாக இருந்து நிர்வாகம் செய்து வருவதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நீங்கள் நல்லவிதமான அரசாட்சி நடத்த வேண்டும். இன்றைய தினம் ஒரேயடியாக விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன. இந்த ராஜ்ய சர்க்கார்கள் அந்த விலையைக் கட்டுப்பாடு செய்ய தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். ஆனால் இன்றுள்ள நிலைமையில் இவர்கள் அப்படிச் செய்கிறார்களா?

அபிவிருத்தித் திட்டங்கள் என்று போடப்பட்டவைகள்தான் என்ன ஆகிறது? ஸ்தல ஸ்தாபனத் திட்டத்தின்கீழ் பல்லாயிரக் கணக்கான மைல் ரோடுகள் போடப்பட்டன. ஆனால் இன்று அவை பராமரிக்கப்படாமல் வீணாகிக் கிடக்கின்றன. ஜில்லா போர்டு ரோடுகள் ஆஸ்பத்திரிகள் எல்லாம் சீரழிந்து கிடக்கின்றன. இப்பொழுது புதிய பஞ்சாயத்து யூனியன் பிரிசிடன்ட் வந்துவிட்டார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: பழைய டிஸ்ட்ரிக்ட் போர்ட் பிரிசிடென்ட் இருந்த காலத்திலே மாத்திரம் என்ன நடந்தது?

[10th August 1960

SRI D. S. AUTHIMOOLAM: அந்தக் காலத்தில் ஜஸ்டிஸ் பார்ட்டி ஆள் இருந்தபோது ஜில்லாபோர்டுகள் நன்றாக இயங்கி வந்தன. தஞ்சாவூரில் திரு. நாடிமுத்துப்பிள்ளை பிரிசிடென்டாக இருந்தபோது அங்கே 60 லட்சம் ரூபாய் இருந்தது. அதோடு கூட அப்போது டிஸ்ட்ரிக்ட் போர்ட்டில் ரயில்வே லைன்கூட இருந்தது. ஆனால் 1958-ம் ஆண்டிலே பஞ்சாயத்து யூனியன் சட்டம் வந்து, Scrap Iron ஸ்க்ராப் ஐரனைத் தள்ளுவதுபோல் டிஸ்ட்ரிக்ட் போர்ட்டைத் தள்ளிவிட்டார்கள். ஆகையால் நான் சொல்வது என்னவென்றால் பழையபடி டிஸ்ட்ரிக்ட் போர்ட்டை ரிவைவ் (Revive) செய்தால் நலமாக இருக்கும். இப்போது பஞ்சாயத்து மாற்றம் ஏற்படுவதனால் சர்க்காருக்கு 3, 4 கோடி அதிகமான செலவு ஏற்படுகிறது. இப்படியெல்லாம் செலவு செய்கிறார்களேயொழிய ஒரு கிராம அதிகாரிக்கு 5 ரூபாய் சம்பளம் அதிகமாக கொடுக்கவேண்டுமென்றால் யோசனை பண்ணிக்கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே நம் நாட்டின் அந்தஸ்த்து உயரவேண்டுமென்றால், ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படுத்தவேண்டும். விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு திட்டங்களைத் தீட்டவேண்டும். டில்லிக்குப்போய் காரியங்களை சமாளிப்பதற்கு முன்னால் நம்மை நாமே தயார் செய்துகொண்டு ராஜ்யம் ஆளவேண்டுமே தவிர ஓட்டு வாங்கவேண்டுமென்ற நோக்கத்தோடும், ஒரு கட்சியை பலப்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடும் ஒரு காரியத்தை செய்யாமல் மக்களுக்கு எவ்வளவு தூரம் நன்மை செய்ய முடியுமோ, அவ்வளவு தூரம் கண்திறந்து பார்த்து வேலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்கு பேசுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI P. M. MUNUSAMI GOUNDER: கனம் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் உரையின் பேரில் வாழ்த்துக்கள் தெரிவித்து, அவர்கள் பேசிய விஷயங்களின் கருத்துக்களில் சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். முக்கியமாக கவர்னர் பெருமான் அவர்களுடைய உரை சர்க்காருடைய கொள்கை என்ன, சர்க்கார் எந்த எந்த முறையிலே வேலை செய்கிறார்கள் என்ற முறையில் அமைந்திருக்கிறது. ஆனால் பல பேர்களுக்குத் தவறான கருத்துக்கள் இருந்த போதிலும், இந்த உரையில் பொதுப்படையான நல்ல அம்சங்கள் இருக்கின்றன. இது மிகவும் வரவேற்கத்தக்கது. முக்கியமாக நம் நாட்டில் சில மாதங்களுக்குள் நடந்த விஷயங்களில், குறிப்பாக மத்திய சர்க்கார் ஊழியர் வேலைநிறுத்தத்தைப் பற்றியும், ஆந்திர மாநிலத்திலிருந்து சில பகுதிகள் சென்னை மாநிலத்திற்கு வந்தது பற்றியும், தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது பற்றியும், மின்சாரத்தில் எந்தெந்த வகையில் இன்னும் சலுகைகள் தரப்படுகின்றன என்று பல அம்சங்கள் இதில் அமைந்திருப்பதால் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை நாம் பாராட்டவேண்டும். ஆனால் சில அங்கத்தினர்கள் ஓட்டுவாங்கும் முறையிலே இந்தப் பிரசங்கம் அமைந்திருக்கிறது என்று சொல்வது சரி அல்ல என்று கூற விரும்புகிறேன். இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். நாம்



10th August 1960] [Sri P. M. Munusami Gounder]

திட்டங்கள் போடாமல் எந்த வேலையும் செய்ய முடியாது. எந்த சிறிய காரியத்தைச் செய்யவேண்டுமானாலும் திட்டம் போட்டுத்தான் செய்யவேண்டும். ஆனால் இதில் திட்டம் போட்டு சதி செய்திருக்கிறார்கள் என்று சொல்லுவது சரி அல்ல. இதில் சதி ஒன்றும் நடக்கவில்லை. ஆகையால் சர்க்கார் தீட்டியுள்ள திட்டங்களை நன்றாக சிந்தித்துப்பார்த்து இது ஓட்டு வாங்குவதற்காகவா அல்லது நல்ல காரியங்களை செய்வதற்காகவா என்று எதிர்க்கட்சியினர் பார்க்கவேண்டும்.

தவிர மத்திய சர்க்கார் வேலைநிறுத்தத்தைப்பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி காங்கிரஸ் கட்சியிலிருந்தும், எதிர்க்கட்சியில் இருந்தும் அபிப்பிராயங்கள் கூறப்பட்டன. எதிர்க்கட்சியினர்கூட மத்திய சர்க்கார் ஊழியர் வேலை நிறுத்தத்தைக் கண்டித்து பேசியிருக்கிறார்கள். இதனால் பொதுமக்களின் அபிப்பிராயம் எந்தவிதத்தில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். தொழிற்சங்கங்கள்தான் இந்த வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டது. உண்மை என்னவென்றால் நம் நாட்டில் மிகவும் அத்தியாவசியமான திட்டங்களை சர்க்கார் அமுல் நடத்தி பொதுமக்கள் பொருளாதாரத்துறையில் உயர்வதை தடுப்பதற்காக, நாட்டிலே ஒரு குழப்பத்தை உண்டாக்குவதுதான் அவர்களுடைய நோக்கம் என்று கூறவேண்டும். இந்த ஒரேநோக்கத்துடன்தான் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சர்க்கார் பேரிலே குறைசொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் மட்டுமல்ல, தொழிற்சாலையில் வேலைச்செய்யும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்குக்கூட இம்மாதிரி வேலை நிறுத்தத்தைத் தூண்டி விடுகிறார்கள். ஏதாவது ஒரு தனிப்பட்ட தொழிலை எடுத்துக்கொண்டால் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளைக் கொண்டு சங்கங்கள் அமைத்துக் கொள்ளுகிறார்கள். உதாரணமாக மோட்டார் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் 5 பஸ்களை வைத்துக்கொண்டு நடத்தினாலும் அங்கு வேலைநிறுத்தம் செய்ய இந்தத் தொழிற்சங்கத்தலைவர்கள் தூண்டி விடுகிறார்கள். இந்த சங்கத்தின் முக்கிய நோக்கம் என்னவென்றால் அவர்கள் சந்தா வசூலிப்பது என்ற ஒரே நோக்கத்தோடு இருக்கிறார்களே தவிர தொழில்கள் வளரவேண்டுமென்ற அக்கறை அவர்களுக்குக் கிடையாது. இம்மாதிரியான ஒரு நிலைமை இருந்தால் நம் நாட்டில் தொழிற்சாலைகள் எவ்வாறு அமைய முடியும்? ஆகையால் மத்திய சர்க்கார் ஊழியர்கள் மட்டும் அல்ல, மற்ற துறையில் வேலை செய்கின்றவர்கள் விஷயத்திலும் வேலை நிறுத்தம் செய்வதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது. இதற்காக சட்டத்தை திருத்த வேண்டுமானாலும் திருத்துவதற்கு சர்க்கார் ஆராயவேண்டும்.

அடுத்தபடியாக, சென்னை ராஜ்யத்துடன் திருத்தணி தாலூகா இப்போது சேர்ந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம். அங்கிருந்த மக்கள் இந்த திருத்தணியும் இன்னும் மற்ற பகுதிகளும் நம் ராஜ்யத்தில் சேருமா அல்லது ஆந்திரா ராஜ்யத்துடன் இருக்குமா என்ற நிச்சயமற்ற நிலையில் அவதிப்

[Sri R. Subramaniam] [10th August 1960

அடுத்தபடியாக, விலைவாசி உயர்வு பற்றி சொல்லும்போது அநேக அங்கத்தினர்கள் உணவு தான்ய விலை பற்றித்தான் குறிப்பிடுகிறார்களே தவிர உணவுப் பொருள் உற்பத்தி செய்வதற்கு ஆதாரமாக இருக்கக் கூடிய பொருள்களின் விலை பற்றி அவர்கள் சொல்வது கிடையாது. உணவுதான்ய விலையைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியந்தான். ஆனால் அதேமுறையில் உணவு உற்பத்திக்கு சாதகமாக இருக்கக் கூடிய மற்ற பொருள்களின் விலையையும் கட்டுப்படுத்த வேண்டுமென்பதே என் அவா, என் வேண்டுகோள். சாதாரணமாக, கிராமங்களை எடுத்துக் கொண்டால் பெரியதனக்காரர்கள் மட்டுமல்ல, சிறு விவசாயிகள் கூலி வேலை செய்பவர்கள் கூட தான்யமாகத்தான் பெற்றுக் கொள்கிறார்கள். ஆக, உணவு விலையைக் கட்டுப்படுத்தினால் பெரிய பணக்காரர்கள் மட்டும் பாதிக்கப்படுபவர்கள் அல்ல, சிறிய விவசாயிகள், கூலி வேலை செய்பவர்கள் ஆக கிராமங்களில் உள்ள எல்லா மக்களும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, நிதானமாக யோசித்துப்பார்த்து மற்ற பொருள்களின் விலையையும் கட்டுப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டாமென்று நான் சொல்லவில்லை. கட்டுப்படுத்தவேண்டும். ஆனால் அதேபோல் மற்ற பொருள்களின் விலைபற்றியும் சற்று நிதானமாக சிந்தித்துப் பார்த்து அவைகளின் விலைகளையும் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, தஞ்சாவூர் ஜில்லாவில் இப்பொழுது தீவிர சாகுபடித் திட்டம் ஆரம்பமாகி நல்லமுறையில் வேலை நடந்து வருகிறது. அங்குள்ள கலெக்டர் அவர்களும் அவர் கீழ் உள்ள அதிகாரிகளும் மிக அக்கரை எடுத்துக்கொண்டு இதை வெற்றிகரமாக்குவதற்கு தங்களால் இயன்ற அளவிற்கு வேலைகள் செய்து வருகிறார்கள். அதிகாரிகளை பொறுத்தவரையில் நாம் அவர்களைத் தாக்கிப் பேசினால் அவர்களின் நிலைபற்றி எடுத்துச்சொல்ல பொதுக் கூட்டங்களோ அல்லது சட்டமன்றமோ இப்படி அவர்களுக்கு எதுவும் கிடையாது.

(Mr. Speaker in the Chair.)

ஆகவே அவர்களைப் பற்றி சொல்லும்போது நிதானமாக யோசித்துப் பார்த்து சொல்லவேண்டும். ஆனால் இப்பொழுது காங்கிரஸ் இயக்கத்தின் மீது வெறுப்புற்ற ஒரு சிலர் கொடுத்த தகவலை வைத்துக்கொண்டு மிகப் பொறுப்புள்ள தினசரிப் பத்திரிகையும், வாரப் பத்திரிகையும் தஞ்சாவூர் ஜில்லாக் கலெக்டரைப் பற்றியும் அவர் கீழ் வேலை செய்யக் கூடியவர்களைப் பற்றியும் மிகவும் குறைவாக எழுதியிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். உண்மையைச் சற்று ஆராயவேண்டும். ஜூன் 15-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டது. தஞ்சாவூருக்கு தண்ணீர் வரும்போது 20-ம் தேதி வந்து சேர்ந்தது. தஞ்சாவூர் கடைக்கோடிக்கு 25-ம் தேதி வாக்கில் தண்ணீர் போய்ச் சேர்ந்தது. புழுதி நாற்று போட்டு நடவு ஆரம்பித்தால் ஜூன் 25-ம் தேதிக்கு முன் நடவு நட்டிருக்க முடியாது. நிலைமை இப்படியிருக்க, நடவு நட்ட ஒரு மாதத்திற்கு அப்புறந்தான் சல்பேட் தேவை. ஜூலை 1-ம் தேதிக்கு முன்பாக இது



10th August 1960] [Sri R. Subramaniam]

மாதிரி கிளர்ச்சி ஏற்பட்டு, நல்லமுறையில் அங்கு ரசாயன உரம் கிடைக்கவில்லை, என்று பத்திரிகைகளில் எழுதியிருப்பதைப் பார்த்து வருந்துகிறேன். வாரப் பத்திரிகை, கலகியில எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு இதைப்பற்றிக் கூட கவலையில்லை. கல்கி பத்திரிகையை எடுத்துக்கொண்டால் அதை சுதந்திராக் கட்சியின் வாரத் தாள் என்றே சொல்ல முடியும். அவர்கள், ஒன்றில் எழுதியிருக்கிறார்கள், கலெக்டர் அவர்கள், முதன் மந்திரியவர்களின் சுற்றுப்பிரயாணத்தை வெற்றிகரமாக்க முனைந்திருந்ததால் இம்மாதிரி வேலையில் அவர்கள் ஈடுபடவில்லை என்று தாக்கி எழுதியிருக்கிறார்கள். இது மிகவும் தவறான கருத்தாகும். ஏனெனில், முதன்மந்திரியவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் 19-ம் நாள் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். முதன்மந்திரியவர்கள், தஞ்சாவூர் கலெக்டரிடம் வந்தவுடன் " நீங்கள் என்னோடு வர வேண்டாம், உங்கள் வேலையைக் கவனியுங்கள் " என்று சொல்லி விட்டார்கள். முதன் மந்திரி அவர்கள் வந்த அன்று பார்த்தார்கள், பின்னர் அவர்கள் திரும்பிப்போகும்போது பார்த்தார், நடுவில் ஒரு தடவை முதன் மந்திரியவர்களைச் சந்தித்து இருக்கிறார்கள். ஆக, கலெக்டர் அவர்கள் முதன் மந்திரி அவர்களுடன் கூடப் போகவில்லை. அதற்காக நேரத்தை செலவிடவும் இல்லை. ஆகவே, அவர்கள் அவர்களது வேலையை நன்கு கவனித்து வந்திருக்கிறார்கள். இவ்வளவு கூச்சலும் எதனால் எழுப்பப்பட்டது என்பதற்கு மற்றும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டில் இந்த ரசாயன உரம் தனிப்பட்டவர்களுக்கு விற்பனைக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டிலிருந்து தனிப்பட்டவர்களுக்கு விற்பனைக்கு கொடுக்கக் கூடாது, ரசாயன உரத்தை சொஸைட்டிகள் மூலம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே, அதனால் அதிருப்தி அடைந்த சிலர் இம்மாதிரி தாறுமாறாக தகவல் கொடுத்து இவ்வளவு தூரம் தாக்கி எழுத முற்பட்டிருப்பது வருந்தத்தக்க செயலாகும். இது பொதுவாக ராஜ்யப் பிரச்னையாக இல்லாவிடினும் தஞ்சாவூரைப் பொறுத்த மட்டில் இது ஒரு பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது. இதுபற்றி கவர்னர் அவர்கள் அவர்களது உரையில் தெரியப்படுத்தாதிருந்த போதிலும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இது பற்றி சற்று விளக்கமாக சொல்லும்படி தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, தொழிற்சாலைகள் அமைப்பதைப்பற்றி சொல்லியிருப்பதைப் பாக்கும்போது பரவலாக ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன். ராஜ்யத்திற்கு ராஜ்யம் தொழில்கள் எல்லாம் பரவலாக இருக்க வேண்டும் என்ற கருத்து பொதுவாக இருந்து வந்த போதிலும் கூட இந்த ராஜ்யத்தைப் பொறுத்த வரையில், தொழில்களை ஏற்படுத்தும்போது தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்தவரையில் அங்கு நெல் அதிகமாக விளைகிறது என்ற காரணத்தினால் அதை விட்டு விடுகின்றார்கள். ஆனால் அங்கு பெரிய தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்பது என்னுடைய அவா. ஒன்று வேதாரண்யத்தின் பக்கத்தின் 150 சதுர மைல் அளவுக்கு இயற்கையாகவே உப்பு கிடைக்கிறது. அதிலிருந்து காஸ்டிக் சோடா

[Sri R. Subramaniam] [10th August 1960

போன்றவை தயாரிக்க முடியும். இதற்காக ஒரு பாக்டரி ஏற்படுத்தலாம். அதைப்பற்றி நான் அடிக்கடி நமது நிதி அமைச்சர் அவர்களிடத்திலும், தொழில் அமைச்சர் அவர்களிடத்திலும் கூறியிருக்கிறேன். இதன் மூலம் பல உபரி பொருட்கள், ஸிப்ஸம், க்ளோரின் போன்றவைகள் தயாரிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இம்மாதிரியான ஒரு பாக்டரியை ஏற்படுத்த முடியுமா என்பதைப்பற்றி ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில், அங்கு வைக்கோல், மூங்கில், கரும்பு சக்கை அதிகமான அளவில் கிடைக்கின்றன, அதைக்கொண்டு பேப்பர் கார்ட் போர்ட் தயாரிக்கலாம் என்று தெரிகிறது. ஆகவே இதற்கான ஒரு பாக்டரியை அங்கு ஏற்படுத்த முடியுமா என்பதைப்பற்றியும் அதி தீவிரமாக ஆலோசனை செய்து பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய ராஜ்யத்தில் பெரிய நீர்ப் பாசனத் திட்டங்கள் எல்லாம் முடிந்து விட்டது. இப்போது பரம்பிக்குளத் திட்டம், ஆரணியாறுத்திட்டம் இவைகள் எல்லாம் சீக்கிரத்திலேயே நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் அதே சமயத்தில் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 33,000 குளங்கள் 22 லட்சம் ஏக்கர்களுக்கு நீர்பாசன வசதி செய்து கொடுக்கிறது. இந்தக் குளங்களை எல்லாம் சரியான முறையில் மராமத்து செய்ய வேண்டுமென அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் 2,000 குளங்கள் இருக்கின்றன. அங்கிருக்கின்ற 50 ஆயிரம் ஏக்கர்களுக்கு இந்தக் குளங்கள் மூலமாகத்தான் நீர்பாசன வசதி செய்யப்படுகிறது. இந்தக் குளங்களை எல்லாம் சரியான முறையில் மராமத்து செய்ய வேண்டும். எனவே ராஜ்யத்தில் குளங்கள் மராமத்துக்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 25 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மொழிப் பிரச்னையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதைப்பற்றி இங்கு அதிகமாக பேசப்பட்டது. இதில் என்னுடைய கருதது என்னவென்றால் மொழிப்பிரச்னை என்பது எல்லோருக்கும் பொதுவான ஒரு பிரச்னையாகும். இந்தப் பிரச்னை ஒரு கட்சிக்கு மட்டுந்தான் சொந்தமானது என்று நினைப்பது தவறான கருத்தாகும். ஆகவே மொழிப்பிரச்னை தங்களுடைய கட்சிப்பிரச்னையாக வைத்துக் கொண்டு வாதாடுவது அவ்வளவு நல்லதல்ல. இந்தப் பிரச்னையை வைத்துக்கொண்டு வாதாடுகிற கட்சியை எடுத்துக் கொண்டால் அவர்கள் ஏன் அதை மட்டும் எடுத்துவைத்துக் கொண்டு வாதாடுகிறார்கள் என்றால் அவர்களுக்கு சொல்வதற்கு இப்போது எதுவும் இல்லை. அதனால்தான் இந்த இந்தி பிரச்னையை எடுத்துக்கொண்டார்கள். எதையாவது அரசாங்கம் சொன்னால் அதை எதிர்த்து ஏதாவது சொல்ல வேண்டும் என்பதைத்தான் நோக்கமாக கொண்டிருக்கிறார்கள்.



10th August 1960] [Sri R. Subramaniam]

இரண்டாவது திட்டத்திற்கு 151 கோடி என்றிருந்தால் அது போதாது இன்னும் அதிகம் இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். இப்போது 300 கோடி ரூபாய்க்கு திட்டமிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது போதாது குறைந்தது 1,000 கோடி ரூபாய்க்காவது திட்டங்கள் இருக்கவேண்டும் என்று சொல்வார்கள். அதே சமயத்தில் நாம் ஏதாவது ஒரு திட்டத்திற்கு அதிகமான ரூபாய் வேண்டும் என்று கேட்டால் அதைக் குறைக்கவேண்டும் என்று சொல்வார்கள். உச்சவரம்பு விதிப்பதில் 30 ஏக்கர் என்று நிர்ணயித்தால் அதைக் குறைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஏதாவது சர்க்கார் சொல்லுவதையே மாற்றிச்சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணமே தவிர வேறு எதுவுமில்லை. இது அவ்வளவு நல்லதல்ல. நமது நிதி அமைச்சர் அவர்களும், முதல் மந்திரி அவர்களும், 1965-க்குப் பின்னாலும் இந்தியும், இங்கிலீஷும் அரசாங்க பாஷையாக இருக்கவேண்டும் என்று நல்ல முறையில் மத்திய அரசாங்கத்தோடு வாதாடி அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி நேருஜி அவர்களும் செப்டம்பர் 4-ம் தேதி உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். இவ்வளவு இருந்தும் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், நமது அமைச்சர்களின் கையாலாகாத்தனத்தின் காரணமாகத் தான் இவ்விதம் வந்து விட்டது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், 1947-ம் வருஷத்தில் சுதந்திரம் வந்த காலத்தில் 1 லட்சம் கிலோ வாட்டாக இருந்த மின்சாரம் இப்போது 5,72,000 கிலோவாட்டாகப் போகிறது என்று சொன்னால், இது நமது அமைச்சர்களின் கையாலாகத்தனமா என்று கேட்கிறேன். அதற்கு அடுத்ததாக, கல்வியை எடுத்துக் கொண்டால் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 10 சதமானமாக இருந்தது, இப்போது 40 சதமானமாக உயர்ந்திருப்பது கையாலாகாத்தனமா என்று கேட்கிறேன். அடுத்தபடியாக 152 கோடி ரூபாய்க்கு இருந்த நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை 181 கோடி ரூபாய் என்ற அளவில் உயர்த்தியது கையாலாகாத்தனமா என்று கேட்க விரும்புகிறேன். இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், ஏதாவது சர்க்காருக்கு எதிராக சொல்லிக்கொண்டிருக்க வேண்டும் என்று சொல்லுவதற்காகத்தான் இதைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வெளியிலும் இதே தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள், இங்கேயும் அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மொழிப்பிரச்னை என்பது ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமான பிரச்னை அல்ல, எல்லா மக்களுடைய பிரச்னைதான் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அத்துடன் கூட நேருஜி அவர்கள் பார்லிமெண்டில் பேசியபோது இந்தி தெரியாத ராஜ்ய மக்களில், சென்னை ராஜ்யத்திலுள்ள மக்கள் தான் அதிகமாக இந்தியைக் கற்றிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியாயின் இவ்வளவு படித்தவர்கள் யார்? ஏற்கனவே ஓரளவுக்கு வாழ்க்கையில் நல்ல வசதியில் இருப்பவர்களின் குழந்தைகள்தான் இந்தியை கற்றுக் கொள்ள முடியும். ஆனால் நாட்டிலுள்ள பாமரர்கள் இவர்களுடைய சொல்லைக் கேட்டு இந்தியை கற்றுக்கொள்வதில்லை.

[Sri R. Subramaniam] [10th August 1960

நாளைக்கு இந்தி இந்த நாட்டில் வந்தால் நல்ல வசதியுள்ளவர்கள் எல்லாம் தங்களை தயார் செய்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அப்போது எந்தவிதமான கஷ்டமும் ஏற்படாது. இந்தியை கற்காதவர்களுக்குத்தான் கஷ்டங்கள் ஏற்படும். ஆகவே நாளைக்கு ஏதாவது மாறுதல்கள் ஏற்பட்டால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் இந்த நாட்டிலுள்ள பாமரர்களே. (மணியடிக்கப் பட்டது).

* SRI M. KARUNANITHI: சட்டமன்றத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையைப்பற்றி என்னுடைய கருத்துக்களை சொல்லுகின்ற நிலையில் நான் இங்கு நின்று கொண்டிருக்கின்றேன். கவர்னர் அவர்களுடைய உரை இங்குள்ள ஆளும் கட்சி உறுப்பினர்களால் நன்றி நோக்குடன் பாராட்டப்பட்டது என்றாலும் எதிர்க்கட்சிகளால் போற்றுகின்ற அளவில் இந்த உரையில் இந்த நாட்டு மக்களுக்குத் தேவைப்படுகின்ற பல பல திட்டங்கள் இல்லை என்பதை சுட்டிக்காட்டவும், இந்த உரையில் போதுமான அளவு திருப்தி இல்லை என்பதை எடுத்துக் காட்டவும் நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற முறையில் இங்கு எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்களை எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர கவர்னர் அவர்களுடைய உரையை வேண்டுமென்றே புறக்கணித்து மறுத்துப் பேச வேண்டும் என்பதல்ல எங்கள் நோக்கம் என்பதை அமைச்சர் பெரு மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் சொல்லுகின்ற கருத்துக்களில் இருக்கின்ற நல்லெண்ணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையில் அண்மையில் நடைபெற்ற மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய வேலைநிறுத்தத்தைக் குறிப்பிட்டு அந்த வேலைநிறுத்தம் பொது மக்களுடைய ஆதரவாலும் போலீசாருடைய நல்ல நடவடிக்கைகளினாலும் எந்த அளவுக்கு சமாளிக்கப்பட்டது என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இங்கு பேசிய கனம் உறுப்பினர்களில் சிலர் இந்த வேலை நிறுத்தத்தைத் தோற்கடிக்கின்ற அளவுக்கு பொதுமக்கள் தாங்களாகவே ஊழியர்களாக இருந்துக்கொண்டு அதை சமாளித்தார்கள் என்பதைப் பெருமையோடு குறிப்பிட்டார்கள். நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புவது வேலை நிறுத்தத்தைச் சமாளிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள் நிரந்தரமாகவே அந்தந்த வேலைகளில் ஒரு வேளை நியமிக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக கொஞ்ச நாட்களில் இப்போது வேலைநிறுத்தம் செய்தவர்கள் என்ன கோரிக்கைகளை எல்லாம் கேட்டார்களோ அதைவிடக் கூடுதலாக சில கோரிக்கைகளை ஏன் கேட்கமாட்டார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கோரிக்கை அளவில், தேவை அளவில் அவர்களுடைய போராட்ட முறை அல்லது அவர்களுடைய வேலைநிறுக்க முறை எப்படியிருந்தாலும் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படை கொள்கை என்ன என்பதைச் சற்று ஆராய்ந்து பார்த்து அதற்கான நடவடிக்கை எடுக்க சர்க்கார் தவறி விட்டது என்பதை நாம் இந்த நேரத்தில் நினைவுபடுத்திக்



10th August 1960] [Sri M. Karunanithi]

கொள்ள வேண்டியது அவசியமாகும். அதைச் செய்யத் தவறி விட்டோம் என்று உள்ளத்தில் தெரிந்திருந்த போதிலும் இனிமேலாவது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களை பழி வாங்குகின்ற முறையைச் செய்துகொண்டு வராமல், அவர்களுடைய குழந்தைகள், குட்டிகள் அவர்களுடைய ஏழை குடும்பங்கள் நல்லமுறையில் மறுமலர்ச்சியடைந்து வாழக் கூடிய வகையில், அவர்கள் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்க வேண்டும் என்பதை இந்த அவையில் குறிப்பிட விரும்புகிறேன்.

மொழிப்பிரச்னையைப்பற்றி கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிடும்பொழுது நேரு அவர்களுடைய வாக்குறுதியும், ஜனாதிபதியினுடைய உத்தரவும் ஒன்றாக இருக்கிறது என்று சூசகமாக குறிப்பிட்டு மொழிப்பிரச்னை தொல்லை குறைந்து விட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார். இதற்குப் பதிலாக இந்த வாசகம் எப்படி இருந்திருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன் என்றால் "1959-ம் ஆண்டு செப்டம்பர் 4-ம் நாள் நமது பிரதம மந்திரி பேசிய பேச்சும், அரசியல் அமைப்பின் 344-வது பிரிவும் ஒன்றுக்கொன்று முரணாயிருந்ததினால், நிலைமையை விளக்குகின்ற முறையில் மீண்டும் குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர் நேரு, உள் நாட்டு அமைச்சர் பந்த் இவர்கள் அறிக்கைகளை தந்து உறுதி மொழிகள் அளிப்பதற்குக் காரணமாயிருந்த திராவிட முன்னேற்றக்கழகத்தை பாராட்டுகிறேன்" என்று இப்படி கவர்னர் அவர்களுடைய உரை இருந்திருக்குமானால், அதைப்பார்த்து நான் சந்தோஷப்படுவேன். வேலைநிறுத்தத்தை சமாளித்ததாகக் கூறப்படும் பொது மக்களைப் பாராட்டுவதற்கு கவர்னர் அவர்களுடைய உரையில் எப்படி இடம் கிடைத்ததோ, அதேபோன்று மொழித் தொல்லை நீங்கியதற்குக் காரணமாயிருந்த எதிர்க்கட்சியினரை பாராட்டியிருந்தால் உள்ளபடியே நாங்கள் பெருமைப்பட்டிருப்போம். ஆனால் நேரு அவர்கள் தந்த உறுதி மொழியும், மத்திய அரசவையிலிருந்து வந்த உறுதிமொழியும் போதுமானதுதானா இதை வைத்துக்கொண்டு வெற்றி முரசு தட்டுவது சரிதானா என்று கேட்டால்—கனம் சபாநாயகர் மூலமாக நான் இந்தச் சபைக்குக் கூறிக்கொள்கிறேன்—இத்தகைய உறுதிமொழி வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டதற்குக் காரணமே, நாட்டிலே கொலை நடந்தால் கொலையைச் சமாளிக்க—கொலையைத் தடுக்க—ஒரு சட்டம் வேண்டுமென்று சொல்லக்கூடிய முறையில் தான் நாங்களும் உறுதிமொழி கேட்டோம். சட்டம் வந்த காரணத்தினால் கொலை தடுக்கப்பட்டு விடுமா என்று கேட்கிறார்கள். நடக்கக் கூடும்—இல்லை என்று மறுக்கவில்லை. அதற்காக சட்டமே வரக் கூடாது, கொலை நடந்தால் பார்த்துக்கொள்ளலாம் என்று இருக்க முடியாது. இந்த முறையில் சிலர் நிதி அமைச்சர் அவர்களைக் கூட குற்றம் சாட்டி இந்த அவையில் பேசியதைக் கேட்டேன். கொலையைத் தடுக்கும் அளவுக்கு முதற்படியாக சட்டம் வந்தது போல இந்த உறுதிமொழி வந்திருக்கிறது. இதைத் தான் எங்கள் வெற்றி என்று எண்ணுகிறோம்—பெருமித

மடைந்திருக்கிறோம். "நிச்சயமாக நாட்டில் நடக்கின்ற தமிழ் கொலை தடுக்கப்பட்டு விட்டதா" என்று கேட்டால், "அல்ல" என்று இந்த நேரத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் பேசும்போது, நமது மாநிலத்திலுள்ள தாணாக்காரர்களுக்குப் பயிற்சி கொடுப்பதிலும், அற நிலைய நிர்வாகங்களிலும் எந்த அளவுக்கு இந்தி திணிக்கப்படுக்கிறது—பயன்படுத்தப்படுகிறது—என்று குறிப்பிட்டுள்ளார்கள். நான் மிக மிக வருத்தத்தோடு இதைச் சொல்ல விரும்புகிறேன். உறுதிமொழி கொடுத்துவிட்டு, டில்லியிலிருந்து வந்து தமிழகத்து மண்ணிலே உலவும் நேரத்தில், நாளைய தினம் நடைபெறவிருக்கின்ற சுதந்திர விழாவினையொட்டி ஜனாதிபதி அவர்களின் சார்பில் வந்துள்ள அழைப்பில் ஒரு புறத்தில் பார்த்தால் ஆங்கிலத்திலும், மற்றொரு புறத்தில் பார்த்தால் இந்தியிலும் அச்சிடப்பட்டு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கின்றது. (அழைப்பிதழைக் காட்டி) இந்த அழைப்பு ஆங்கிலத்திலும் தமிழிலும் இருந்தால் போதாதா? அந்தச் சட்ட மன்றத்திலுள்ள உறுப்பினர்களில் பலர் கேள்வி நேரத்தில் முதற் கேள்விக்குக் கொடுக்கப்படும் பதிலை ஆங்கிலத்தில் தராதீர்கள், தமிழில் தந்தால் தான் எங்களால் துணைக் கேள்விகள் கேட்க முடியும் என்று சொல்லக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்று இத்தகைய சட்ட மன்ற உறுப்பினர்கள் இதை யாரிடத்திலாவது கொண்டு போய்க் காட்டி, இது என்ன என்று கேட்கும் அவல நிலை இருக்குமானால், ஜனாதிபதியின் உறுதிமொழியை இந்த மன்றமோ, அல்லது இந்த அமைச்சரவையோ எப்படி காப்பாற்றப் போகிறது? எனவே இதனை சுதந்திரத் திருவிழாவிற்கு வரவேற்பதற்காக காகிதத்தில் தரப்பட்ட அட்டை என்று கருதாமல், நமது மான உணர்ச்சியை உறிஞ்சுகிற அட்டையாக இதனை நான் கருதுகிறேன். உள்ளபடியே மொழிப் பிரச்னையில் தீர்வு காணவேண்டுமென்றால் அரசியல் சட்டத்திலே மொழிபற்றிய பிரிவுக்கு திருத்தம் செய்தாக வேண்டும். அரசியல் சட்டம் திருத்தப்படும் வரையில் எங்கள் போராட்டம் ஓயாது, ஓயாது. மறைமுகமாக இந்தியைத் திணிப்பதை திராவிட முன்னேற்றக் கழகம் கவனித்துக் கொண்டு வருகிறது. இந்த வெற்றியில் திளைத்து விடாமல் இந்தி ஆதிக்கத்தை முழு மூச்சோடு எதிர்த்தே நிற்போம் என்று அமைச்சர்களுக்கு நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி குறிப்பிட்டு விட்டு இதைப் பற்றி அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தால் பாராட்டத் தக்கதாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கருத்துக்களைக் கூறத் தயார் தான். தரப்பட்ட கருத்துக்கள், இந்த மன்றத்திலே எங்களால் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள், சிறப்புக் குழுக்களை அமைத்து எங்கள் தலைவர் அவர்கள் அழைக்கப்பட்டு பேசும் போது அவர்களால் தரப்பட்ட கருத்துக்கள் உள்ளபடியே மரியாதையோடு, மதிப்போடு ஒப்புக்கொள்ளப்படுகிறதா?—இல்லை. கமிட்டிகளில் பேசப்படுவது, கமிட்டிகளில் தெரிவிக்கப்



படும் கருத்துக்கள் அம்பலத்திற்கு வரக் கூடாது என்பது மரபு, மாண்பு. இத்தகைய மரபையும் மாண்பையும் மீறி, நமது கண்ணியம் மிகுந்த, நேர்மை கொண்ட நிதி அமைச்சர் அவர்கள், செங்கற்பட்டு மாவட்டத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் திட்டக் குழுவில் தந்த யோசனையைப் பற்றி கூறி, அதையடுத்து ஒரு பண்டாரக் கதையைச் சொல்லி, அண்ணாதுரை ஒரு பண்டாரம் என்ற முறையில் . . .

The Hon. Sri C. SUBRAMANIAM: உங்கள் பத்திரிகையில் தான் முதலில் "அண்ணா 1,000 கோடி கேட்டார்" என்று கொட்டை எழுத்தில் போட்டுக் கொண்டீர்கள். முதலில் அம்பலத்திற்குக் கொண்டு வந்தது யார் என்று கேட்டால் கனம் அண்ணாதுரை அவர்கள் தான் அதை அம்பலத்திற்குக் கொண்டுவந்தார்கள்.

Sri C. N. ANNADURAI: எல்லாப் பத்திரிகைகளிலும் இதைப் பற்றி வந்த அளவுக்குத்தான் எங்கள் பத்திரிகையிலும் வந்தது. நான் குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி வேறு ஒன்றும் அதிகமாக எங்கள் பத்திரிகையில் வந்துவிடவில்லை.

The Hon. Sri C. SUBRAMANIAM: பத்திரிகை குறிப்புக் கொடுத்ததுகூட நாங்கள் அல்ல—தாங்கள் தான்.

ஸ்ரீ. ஸி. என். அண்ணாதுரை எழுந்தார்—

Mr. SPEAKER: கனம் அங்கத்தினர் அண்ணாதுரை அவர்களும் கனம் அமைச்சர் அவர்களும் இம்மாதிரி ஒருவர் மாறி ஒருவர் பேசிக்கொண்டிருந்தால் கனம் அங்கத்தினர் கருணாநிதி அவர்களின் நிலை என்ன ஆவது?

Sri M. KARUNANITHI: இப்போது மட்டுமல்ல பல ஆண்டுகளாகவே திராவிட முன்னேற்றக் கழகம், வடநாட்டுக்காரர்களால் தென்னகம் வஞ்சிக்கப்படவில்லை என்று நீங்கள் நிரூபிக்க வேண்டுமானால், நாட்டுக்குத் தேவையான வேலைகள் 200 கோடியில், 300 கோடியில் நிறைவேறாது, ஆயிரம் அல்லது இரண்டாயிரம் கோடிக்குத் திட்டம் தீட்டி நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி வருகிறது. திட்டங்களைப் பற்றிப் பேசுவதற்காகக் கூடிய குழுவில் அண்ணா அவர்கள் தெரிவித்த திட்டங்கள் நையாண்டி செய்யக் கூடிய திட்டங்கள்தானா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அண்ணா அவர்கள் என்னென்ன கூறியிருக்கிறார்கள்? பணக்காரர்களிடமிருக்கக் கூடிய பணத்தை பல வழிகளில் பெறவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்; கவனிக்கப்படாமல் இருக்கக் கூடிய தரிசு நிலங்களை உடனடியாகக் கவனித்து தானியங்கள் விளைவிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்; சூரிய வெளிச்சத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்; நாட்டின் முன்னேற்றத் திட்டங்களில் ராணுவத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னார்; அணு சக்தி உலை கட்டியாக வேண்டுமென்று கூறியிருக்கிறார்;

[Sri M. Karunanithi] [10th August 1960

கைத்தறித் துணியை எல்லா நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்றார். புதிய, புதிய தொழிற்சாலைகளையெல்லாம் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றார்; சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையும், அலுமினியத் தொழிற்சாலையும் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னார்; முந்திரியிலிருந்து பிளாஸ்டிக் தயாரிக்க வேண்டுமென்று கூறினார்; காப்பி, டீ, ரப்பர் தோட்டங்களை தேசியமயமாக்கி வருவாயை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்றார்; நீலகிரியில் ஒரு பால் பண்ணை அமைக்க வேண்டுமென்று சொன்னார்; தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு இரட்டை ரயில் பாதை போட வேண்டுமென்று கூறினார்; தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னார்; சேது சமுத்திரம் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்; மாங்கனீஸ் தாதுவை ஏற்றுமதி செய்வதை நிறுத்தி அதை இங்கேயே பயன்படுத்த வேண்டுமென்று கூறினார். ஆக, இத்தகைய உயர்ந்த திட்டங்களை அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார். ஆனால் அவர் பண்டாரம் என்று பழிக்கப்பட்டார். அவராவது பழிக்கக் கூடிய அளவுக்கு திட்டம் தந்தார் என்றால், அடுத்த திங்களே லோகநாதன் கமிட்டியார் கேட்டிருக்கிறார்கள் ஆயிரம் கோடி அல்ல—இரண்டாயிரம் கோடி. ஆயிரம் கோடி ரூபாய் கேட்டதற்கே பண்டாரம் என்று சொன்னபோது, 2,000 கோடி ரூபாய் கேட்ட அவரை நல்ல வேளையாக இரட்டைப் பண்டாரம் என்று அமைச்சர் சொல்லவில்லை—தப்பித்துக் கொண்டார். இன்றைய நிலையில் இந்தத் திட்டங்களைப் பற்றி ஆளுங் கட்சி உறுப்பினர்கள் வெளியிலே போய் என்ன சொல்லுவார்களோ என்றுகூட நாங்கள் அஞ்சுகிறோம். இப்படிப்பட்ட மாமன்றத்தில் பேசியதை வைத்துக்கொண்டு வெளியிலே போய் ஆளுங் கட்சிக்காரர்கள் "அண்ணா கசாப்புக் கடை வைக்கச் சொல்லுகிறார்" என்றும், "கருணாநிதி கடல் பாசியில் அல்வா கிண்டச் சொல்கிறார்" என்றும் நையாண்டி செய்வார்கள் என்று சபா நாயகர் மூலமாக இந்த அமைச்சரவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1971-க்குள் நமது வாழ்க்கைத் தரம் உயர, 230 ரூபாய் நபர் வருமானம் இருக்கக் கூடியது 325 ரூபாய் அளவுக்கு அதிகரிக்க, 20 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க 2,000 கோடி ரூபாய் வேண்டும் என்று டாக்டர் லோகநாதன் குழு சிபாரிசு செய்திருக்கிறது. ஒரு பழமொழி—சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்று—சொல்வார்கள். சபாநாயகர் மூலமாக நான் இதைத் தெரிவித்துக் கொள்கிறேன், மத்திய சர்க்கார் சட்டியில் 10.000 கோடி ரூபாய் இருக்கிறது, அதிலே உங்கள் அகப்பையில் 1,000 கோடி வரட்டும். 10,000 கோடியில் ஒன்றும் அகப்பையில் வரவில்லை என்றால் உங்கள் அகப்பையில் காம்பு இருக்கிறது, ஆனால் கொட்டாங்கச்சி இல்லை என்று ஆகிறது—உங்களுக்கு அதிகாரம் இல்லை என்று பொருள் படுகிறது. நீங்கள் அதிகாரம் பெறுங்கள். நீங்கள் நல்லவர்கள் தான்—வல்லவர்கள் அல்ல வட நாட்டோடு பேசி சண்டை போட்டுப் பெறுவதில் என்று நான் வருத்தத்தோடு கூறிக்



10th August 1960] [Sri M. Karunanithi]

கொள்ளுகிறேன். தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றி நேற்று இங்கே பேசப்பட்டது. அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். தூத்துக்குடி பக்கம் போகும் போது தானே இது ஞாபகம் வருகிறது. டில்லிக்குப் போகும்போது நினைவு வரவேண்டாமா? தூத்துக்குடிக்குப் போகும்போது அங்குள்ள மக்களுக்கு ஆசை காட்டிவிட்டு டில்லிக்குப் போகும் போது மறந்துவிடுவானேன்? அமைச்சர் அவர்கள் உறுதி மொழியை நிச்சயமாகக் காப்பாற்ற வேண்டும், நேரு அவர்களுடைய உறுதிமொழியைப் போல, பந்த் அவர்களுடைய உறுதிமொழியைப் போல, கனம் சுப்பிரமணியம் அவர்களும் அங்கு இருந்து உறுதிமொழி அளிக்கத் தகுதி படைத்தவர் என்ற காரணத்தினால் இந்த உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இறுதியாக கனம் அங்கத்தினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கூறியது போல நாட்டுக்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்கவில்லை, உதகையி லுள்ள ஒரு வீட்டுக்கு தமிழகம் என்று கனம் சுப்பிரமணியம் அவர்கள், நாட்டுக்கு வைக்க வேண்டிய பெயரை ஒரு வீட்டுக்கு வைத்திருக்கிறார். தமிழ் நாடு என்று பெயர் வைப்பதற்காக சங்கரலிங்கனாரின் பிணம் வீழ்ந்தது. உங்களுக்கு ஒரு எழுத்துக்கு ஒரு பிணம் வீதம் வேண்டுமென்று சொன்னால் தயாராக இருக்கிறோம் 5 பிணங்கள் தருவதற்கு. எழுத்துக்கு எத்தனை பிணம் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறோம், தமிழ் நாடு என்று பெயரிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜனாதிபதி அவர்கள் தானாக தனது சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு வழிகாட்டியாக இருக்கிறார். அந்த முறையைப் பின் பற்றி, கவர்னர் அவர்களும் தான் குறைத்துக்கொண்ட சம்பளக் கணக்கை நம்மிடம் தெரிவிப்பார்—தெரிவிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

SRI P. G. KARUTHIRUMAN: சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் இதுவரை கண்டிராத, கேட்டிராத அளவுக்கு நாட்டிலே எவ்வளவு தூரம் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சாங்கோபாங்கமாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஒரு நாட்டினுடைய சுபிட்சம் எங்கே 12-00
இருக்கிறது என்றால், சட்ட சபையிலோ, பட்டினங்களிலோ, noon.
இருக்கும்படியான தார் ரோடுகளிலோ, மெர்க்குறி விளக்கு களிலோ இல்லை. கிராமத்தில் இருக்கும்படியான ஏழை விவசாயிகளுடைய வயல்களில் இருக்கும் தானிய மணியைப் பொறுத்துத்தான் நாட்டின் சுபிட்சம் இருக்கிறது. அதற்கு ஏற்ப இன்றைய தினம் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு ஏற்ப கவர்னர் பெருமானுடைய உரை அமைந்திருக் கிறதா என்றால், நிச்சயமாக அவ்வாறு அமைந்திருக்கிறது என்பது அதைக் கவனித்துப் பார்த்தால் தெரியும். ஒரு நாட்டின் முன்னேற்றம் வயல்களிலே நாற்றை நடுகிற பெண்மணிகளின் வளையில் அசைவிலேதான் இருக்கிறதேயொழிய, செகரிடேரியட் உத்தியோகஸ்தர்கள் கையிலோ அல்லது அவர்கள் கையில்

[Sri P. G. Karuthiruman] [10th August 1960

உள்ள பேறு முனையிலோ இல்லை. உழைப்பின் தரம் குறையுமானால் நாட்டிலே சுபிட்சம் இருக்காது என்பதை எல்லோரும் உணர வேண்டும். எதிர்க் கட்சிக் காரர்கள் இந்த நாட்டிலே அபிவிருத்தி ஒன்றும் இல்லை என்று 13 வருட காலமாக சுதந்திரம் பெற்ற பின் ஒரு முன்னேற்றமும் இல்லை என்று சொல்லிவருகிறார்கள். இந்த நாட்டிலே ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக நிறைவேற்றப்பட்டு வருகிற திட்டங்களைப் பார்த்து ரஷ்ய தேசத்துத் தலைவர்கள் எல்லாம் கூடப் போற்றும்படியான நிலை இருக்கும் போது, "இதை விட ஒரு சிறந்த திட்டத்தை உருவாக்க முடியாது" என்று சர்வதேச தலைவர்கள் எல்லாம் போற்றிப் புகழ்ந்திருக்கும்போது இவர்களுடைய சர்டிபிகேட்டைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர் பேசியபோது "எங்களால்தான் இந்தித் திணிப்பு பற்றிய ஜனாதிபதி அறிக்கையால் இந்தி பேசாத மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்" என்று உறுதி மொழி கிடைத்திருக்கிறது என்று சொன்னார். அவர்களுடைய சரணாகதி படலத்தைப் பற்றி நாம் ஒன்றும் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. எல்லாம் வெளிப் பேச்சே தவிர வேறு ஒன்றுமில்லை. அப்போது "நான்சென்ஸ் நேரு" என்று சொன்னவர்கள் இப்போது "ஜனநாயக வாதி நேரு" என்று சொல்லுகிறார்கள். இதைவிட ஒரு சரணாகதி எப்படி இருக்க முடியும்?

SRI M. KARUNANITHI: "ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்". "நான்சென்ஸ் நேரு" என்று நாங்கள் சொல்லவில்லை. அவர்தான் இந்த நாட்டவரைப் பார்த்து "நான்சென்ஸ்" என்று சொன்னார்.

SRI P. G. KARUTHIRUMAN: இந்த சட்டசபையில் சொல்லவில்லை.

SRI C. N. ANNADURAI: "நான்சென்ஸ்" என்று சொன்ன நேருவுக்குத்தான் கறுப்புக் கொடி காட்டப்பட்டது.

THE HON. SRI C. SUBRAMANIAM: நேரு அவர்கள் நான்சென்ஸ் என்று சொன்னது தி.மு.காவைப்பற்றி. அது சரி என்று . . .

SRI P. G. KARUTHIRUMAN: நேரு அவர்களுடைய கடிதத்தைப் பரிசீலித்த பிறகு ஜனாதிபதி அவர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டப்போவதில்லை என்று முடிவு செய்தார்கள். ஜனாதிபதி அவர்கள் நம்முடைய வாக்குகளையெல்லாம் பெற்றுத்தான் பதவிக்கு வந்திருக்கிறார்கள். அவர் எல்லா ஜனங்களுடைய வாக்குகளையும் பெற்றவர். நமது ஜனாதிபதி அந்நியர், தமிழ் நாட்டுக்கு சம்பந்தம் இல்லாதவர் என்று சொல்லுகிறவர்கள் அவர்களுடைய அறியாமையைத் தான் வெளிப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.



10th August 1960] [Sri P. G. Karuthiruman]

அடுத்தபடியாக, "நாங்கள் கொடுத்த திட்டத்தைத்தான் சர்க்கார் செய்து வருகிறது" என்று சொல்லுகிறார்கள். "ஆங்கிலேயர்களுக்கு நாங்கள் அனுசரணையாக இருந்த காரணத்தால்தான் அந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது" என்று இவர்கள் சொல்லுவார்கள். இப்படி அவர்கள் சொன்னாலும் நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. இதைப் பற்றிப் பொது மக்கள் தீர்மானம் செய்து கொள்ளுவார்கள்.

இன்றைக்கு நம்முடைய நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி பல திட்டங்களைப் போடுகிறோம். நாம் வகுக்கும் திட்டங்கள் எல்லாம் திட்டவட்டமான பொருளாதார அடிப்படையில் இருக்கவேண்டும். இதற்காகத்தான் நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பண்டங்களின் விலை நிலையானதாக இருக்க வேண்டும் என்று கூறுகிறோம். நிரந்தரமான ஒரு விலை இருந்தாலொழிய, திட்ட வட்டமான விலை இருந்தாலொழிய திட்டங்கள் சரியானபடி நிறைவேற்ற முடியாது. நெய்வேலித் திட்டத்திற்கு 70 கோடி மதிப்புப் போட்டிருந்தோம். இப்போது அது 96 கோடியாக ஆகியிருக்கிறது. விலைவாசி ஏற ஏற திட்டங்களின் மதிப்பும் அதிகரிக்கத் தான் செய்யும். 20 வருடங்களுக்கு முன்பு உற்பத்தி செலவு ஒரு ஏக்கர் நன்செய் நிலத்திற்கு 30 ரூபாய் என்றால் இன்றைய தினம் ரூ. 300 ஆகிறது. இப்போது நான்கு அணா கூலி வாங்கிக்கொண்டு 8 மணி நேரம் வேலை செய்து வந்த விவசாயத் தொழிலாளர்கள் இன்று தொழிற்சங்கம் வைத்துக்கொண்டு ஒரு ரூபாய் கூலி வாங்கி 4 மணி நேரம் வேலை செய்யக்கூடிய ஒரு அவல நிலை வளர்ந்து கொண்டிருக்கிறது. நாலு அணாவுக்கு நாள் பூராவும் வேலை செய்து வந்த நிலை மாறி இன்றைய தினம் ஒரு ரூபாய் கூலி வாங்கிக் கொண்டு 4 மணி நேரம் கூட வேலை சரிவர செய்வதில்லை. விவசாய உற்பத்திச் செலவு அதிகமாகிவிட்டது. மாற்றுக்கட்சிக்காரர்கள் இத்தகைய தேசீய விரோதமான முறையில் நடந்து கொள்கிறார்கள்.

SRI C. N. ANNADURAI: விவசாயிகளுக்குக் கூலி வேண்டுமென்று கேட்பது தேசீய விரோதமான காரியம் என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார். விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி கிடைக்க வழி செய்து கொடுப்பதற்காக சட்ட பூர்வமான நடவடிக்கைகள் எல்லாம் எடுத்துக் கொண்டு இருக்கும்போது இதைத் தேசிய விரோதமானது என்று அங்கத்தினர் எந்தக் கருத்தில் சொல்கிறார்?

SRI P. G. KARUTHIRUMAN: அவர்களுக்கு நல்ல முறையில் கூலி கொடுக்க வேண்டியதுதான், ஒரு ரூபாய் அல்லது $1\frac{1}{2}$ ரூபாய் கூடக் கொடுக்க வேண்டியதுதான். இந்த அளவுக்கு அவர்களுக்குக் கூலி கொடுக்கும்போது அரிசிவிலை ஏன் 10 அணாவாக இல்லையென்று கேட்டால் என்ன அர்த்தம்? மத்திய சர்க்கார் ஊழியர்கள் ஸ்டிரைக் செய்தார்கள். இன்றைய தினம் ஒரு நடுத்தர மிராசுதாருக்கு, 5 ஏக்கர் உள்ள ஒரு மிராசுதாருக்கு ஒரு ஆண்டுக்கு கிடைக்கக்கூடிய

[Sri P. G. Karuthiruman] [10th August 1960

வருமானத்தைவிட மத்திய சர்க்காரில் நாலாந்தர ஊழியர் உத்தியோகத்தில் இருக்கக்கூடியவனுக்கு அதிக வருமானம் வருகிறது என்று நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். ஐந்து ஏக்கர் பூமி உள்ள விவசாயிகளுடைய நிலைமையைவிட இந்தச் சர்க்கார் ஊழியர்களின் நிலைமை நன்றாகவே இருக்கிறது. இவர்கள் சம்பளம் போதாது என்று ஸ்டிரைக் செய்கிறார்கள். சேம நல சர்க்கார் என்றால் எல்லோருக்கும் சேர்ந்துதான் சேமநல சர்க்காரே தவிர, மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கோ, மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கோ மட்டுமல்ல. நாலடியாரில்

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடனும்
அம்மா பெரிது என்று அகமகிழ்க—தம்மின்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்ற எல்லாம்
என்றே இவர்க்கு நாம் என்று"

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நம்மைவிடப் பொருளாதாரத்தில் கீழே இருப்பவர்களைப் பார்த்து நம்முடைய நிலை எவ்வளவோ மேலாக இருக்கிறதே என்று சந்தோஷப்பட வேண்டும். ஆனால் வேலை செய்வதில் ஒருவர் 4 பைல் போட்டால், நாம் 10 பைல் போடவேண்டுமென்ற முறையில் இருத்தல்வேண்டும். இந்த நிலைமையில் தேசியப் பண்புடன், அரசாங்கத்துடன் ஒவ்வொருவரும் பாடுபட்டால்தான் நாம் சுபிட்சத்தை இந்த நாட்டிலே ஏற்படுத்த முடியும். இப்போதுநடந்த வேலை நிறுத்தம் அரசியல் கட்சி ரீதியில் நடைப்பெற்றதே தவிர தேசிய முறையில் நடைபெறவில்லை. அந்தக் கட்சியின் போக்கில் பார்த்தால் கூடத் தெரியும். எங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்று கம்யூனிஸ்ட் கட்சி சொல்லலாம். ஆனால் அவர்களுடைய தேசியம் நம்முடைய தேசியமல்ல. அவர்களுடைய தேசியம் அகில உலக சர்வ தேசிய தேசியம். சைனாக்காரன் லடாக்கிற்கு ஏன் வந்தான் என்று கேட்டால் வண்ணாத்திப் பூச்சி பிடிக்க வந்தான் என்று சொல்லுவார்கள். இன்னொரு தேசியம் திராவிட தேசியம். இவர்கள் திராவிட வீரம், திராவிடத் தன்மை என்றெல்லாம் பேசுவார்கள். இது எப்படியிருக்கிறது என்று சொல்ல வேண்டுமானால் ராவணனிடத்தில் அங்கதன் சொன்ன பதிலைத்தான் சொல்ல வேண்டும். "வீரத்தைப் பாராட்டுகின்றேன், ஆனால் காட்ட வேண்டிய சமயத்தில் விரத்தைக் காட்டாமல் இப்பொழுது காட்டுகின்றாயே" என்று அங்கதன் இராவணனை நோக்கிச் சொன்னான்.

"பருந்துணைப் பாட்டி யாக்கை படுத்தநாள், பகழி பாய
மருந்தினு மினிய மாமன் மடிந்தநாள் வனத்துள் வைகி
இருந்துழி வந்த தங்கை மூக்கும் இரு செவியும்
அரிந்தநாள் வந்தி லாதான் இனிச் செய்யு மாண்மை
யுண்டோ"

என்று அங்கதன் இராவணனைக் கேட்டான். தாடகை இறந்த போது இராவணன் தன் வீரத்தைக் காட்டவில்லை; தாய் மாமன் மாரீசன் இறந்தபோதும் தன் வீரத்தைக் காட்டவில்லை.



10th August 1960] [Sri P. G. Karuthiruman]

சூர்ப்பனகை தன் மூக்கும் காதும் இழந்த போதும் வீரத்தைக் காட்டவில்லை என்றான் அங்கதன். அதே போல் நான் கேட்கிறேன்—மக்களுடைய சுபீட்சத்திற்காக தேசியப் போராட்டம் நடத்தின காலத்தில் எங்கே சென்றிருந்தது உங்கள் வீரம்? அப்பொழுது காட்டாத வீரத்தை இப்பொழுது காட்ட என்ன யோக்கியதை இருக்கிறது? என்ன அருகதையிருக்கிறது? என்ன வீரம் இருக்கிறது என்று கேட்கின்றேன்.

"வடக்கே பக்ரா—நங்கல்; தெற்கே சர்க்கரைப் பொங்கல்" என்றால் அழகாகத்தான் இருக்கிறது. இவர்கள் இப்படியெல்லாம் சொன்னதால் இங்கே திட்டங்கள் போடப் பட்டதாகச் சொல்லுகிறார்கள். இவர்கள் சொன்னதால் அல்ல. எனக்கு ஒரு உதாரணம் ஞாபகத்திற்கு வருகிறது. வானம்பாடிக் குருவி கடற்கரையில் படுத்து, கால்களை வானத்தை நோக்கித் தூக்கிக்கொண்டு, வானத்தை விழுந்து விடாமல் நிறுத்திவிட்டதாக நினைத்துக்கொள்ளுமாம். அது மாதிரிதான் இருக்கிறது இவர்கள் சொல்வது. இவர்கள் சொல்லுகிற திட்டங்களைப் பார்த்துத்தான் நாங்கள் திட்டம் போடுகிறோமோ? நாங்கள் என்ன மக்களுடைய கஷ்டத்தை உணராதவர்களா? நாங்கள் போட்ட திட்டங்களைத்தான் இவர்கள் போட்டதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

SRI C. N. ANNADURAI: எல்லாத் திட்டங்களையும் நீங்களே போட்டுக் கொள்ளுவதானால் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி, திட்டங்களைப் பற்றி ஏன் ஆலோசனை செய்ய வேண்டும்?

SRI P. G. KARUTHIRUMAN: அப்படிக் கேட்பதுதான் ஜனநாயக முறை. வோட்டுப் போட்டு உங்களை அனுப்பியிருப்பதால்தான் கேட்கிறோம். வோட்டுப் போட்டு அனுப்பவில்லை என்றால் நாங்கள் ஏன் கேட்கிறோம்? அது விதி. மக்கள் உங்களை அனுப்பிவைத்தார்கள். ஆகவே, ஜனநாயக விதியினால் நாங்கள் கேட்டுக் கொள்ளுகிறோம். மக்கள் உங்களை அனுப்பவில்லை என்றால் கேட்க வேண்டியதில்லை.

SRI C. N. ANNADURAI: அமைச்சரவை அழைப்பு அனுப்பி நடைபெற்ற ஒரு குழுவைப் பற்றியும், அதிலே அங்கம் பெற்றவர்களைப் பற்றியும், அதிலே எடுத்துச் சொல்லப்பட்ட திட்டங்கள் பற்றியும் கேவலமாகப் பேசுவதுதான் முறை என்றால் இனி எந்தக் குழுவிலுமே எங்களை அழைக்கவேண்டாம் என்று அமைச்சரவைக்கு நீங்கள் அறிவுரை சொல்லுங்கள்.

SRI P. G. KARUTHIRUMAN: சபாநாயகர் அவர்களே. தவறாகச் சொல்லவில்லை. எல்லோரையும் அழைக்கிறோம்.

MR. SPEAKER: தவறாகச் சொல்லப்பட்டிருந்தால் நான் நிறுத்தியிருப்பேன்.

[10th August 1960

(மணியடிக்கப்பட்டது.)

SRI P. G. KARUTHIRUMAN: இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

MR. SPEAKER: இன்னும் ஒரு நிமிடம்தான் பாக்கியிருக்கிறது.

SRI P. G. KARUTHIRUMAN: கவர்னர் பெருமான் உரையைப் பூரணமாக கவனித்தால் என்ன என்ன திட்டங்களெல்லாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கின்றனவோ அவையெல்லாம் இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் நிச்சயமாக ஆதரவு கொடுத்து, மக்களுடைய சுபிட்சத்திற்கும், தமிழ் நாட்டின் சுபிட்சத்திற்கும், தேசீய சுபிட்சத்திற்கும் வழி கோலுவார்கள் என்று எதிர்பார்த்து என்னுடைய சிற்றுரையை முடிக்கின்றேன்.

SRI C. N. ANNADURAI: ஆளும் கட்சியை சேர்ந்த அங்கத்தினர் ஒருவர் நேற்று முன் தினம் பேசினபோது, "மொழிப் பிரச்சினையிலே பிரதம மந்திரி நேருவும் குடியரசுத் தலைவரும், அப்படிப்பட்ட உறுதிமொழிகளையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொருட்படுத்தி, அளித்திருக்கத் தேவையில்லை" என்று பேசினார்கள். இப்பொழுது கட்சிக் கொறடா பேசும்போது, "திட்டம் போடுவதற்கு அழைக்கவில்லை" என்றார்கள். இந்தக் கருத்தைப் பற்றி ஆளும் கட்சியிலேயே அபிப்பிராயபேதம் இருக்கிறதா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER: அதிலே நான் ஒன்றும் சொல்ல முடியாது. உங்கள் வரையில் கேட்டுக்கொள்ளுங்கள். மந்திரி பதிலில் சொல்லுவார்கள்.

* SRIMATHI A. S. PONNAMMAL: மதிப்பிற்குரிய கனம் சபா நாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களின் உரையிலுள்ள பல விஷயங்களையும் நான் முழு மனதோடு ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இங்கே பேசிய பல அங்கத்தினர்கள், மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைப் பற்றிப் பல கோணங்களில் பேசினார்கள். ஒரு சில கட்சிக்காரர்கள் பேசும்போது, "விலைவாசி ஏறி விட்டது, அவர்களுக்குள்ள உரிமையைக் கொடுங்கள் என்று தானே அவர்கள் கோரினார்கள்" என்று குறிப்பிட்டார்கள். நான் கேட்கின்றேன்—அந்த உரிமையில், விலைவாசி ஏறிவிட்டது என்பதற்காக வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்பாக நாட்டின் நிலைமையையும் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் அல்லவா? நாடு இன்றைக்கு எந்த நிலைமையில் இருக்கிறது? நம்முடைய பொறுப்பு என்ன என்பதையெல்லாம் நினைத்துப் பார்க்காமல், பொறுப்பற்ற தன்மையில் பேசுவார்களானால் அது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்ல என்று நான் வருத்தத்தோடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், சைனாக்காரர்கள் 500 கெஜத்தில் நின்றுக்கொண்டிருக்கிறார்கள்,



10th August 1960] [Srimathi A. S. Ponnammal]

அந்த நிலையில் நாட்டைக் காத்துக்கொண்டு ஆயிரமாயிரம் வீரர்கள் பனி என்றும் பாராமல், மழை என்றும் பாராமல், குளிர் என்றும் பாராமல், அங்கே இரவு பகலாகக் கண் விழித்து நின்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் உணவுத் தானியங்கள் போகக்கூடாது, உணவுத் தானியம் போகாமல் அவர்கள் பாழாகி, சைனாக்காரர்கள் நம்மை அடிமையாக்க வேண்டுமென்ற முறையில் பல அரசியல் கட்சித் தலைவர்கள் தூண்டிவிட்டு வேலை நிறுத்தம் செய்தார்கள் என்பதை நான் மக்களின் சார்பாக மிக மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், மத்திய சர்க்கார் ஊழியர்கள் ஒரு வார காலம் வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாக மத்திய சர்க்காருக்கு 25 கோடி ரூபாய் வரையில் வீணாகச் செலவாகியிருக்கிறது. அந்தப் பணமெல்லாம் செலவாகாமல் இருந்தால் தூத்துக்குடித் துறைமுக அபிவிருத்தித் திட்டத்திற்குச் செலவிட்டிருக்கலாம். இருபத்தைந்து கோடி ரூபாய் வரையில் வீணாக்கிவிட்டு, தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தியைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை வெற்றிகரமாக முடித்துக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது; எங்களுடைய தலைவர்களுக்கு இருக்கிறது. ஆனால், இடையில் வீணாக 25 கோடி ரூபாய் வரையில் இம்மாதிரி நஷ்டத்தை உண்டாக்காமலிருந்தால், தூத்துக்குடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய அளவிலே சண்டைபோட முடியும். அதற்கெல்லாம் இடம் கொடுக்காமல் ஒரு கையால் தொட்டிலையும் ஆட்டிக்கொண்டு, இன்னொரு கையால் குழந்தையையும் கிள்ளி அழ வைக்கிறார்கள். அந்த அளவு நாட்டிலே கட்சிக்காரர்கள் செயல்படுவார்களானால், அது நாட்டுக்கு நல்லதல்ல; எதிர்க்கட்சிகளுக்கும் நல்லதல்ல; வருங்காலத்திற்கும் நல்லதல்ல என்று நான் பணிவோடு கூறிக் கொள்ளுகிறேன்.

மொழிப் பிரச்னையைக் குறித்து இரண்டொரு நாட்களில் விவாதிக்க இருக்கிறோம். இருந்தாலும்கூட, மொழியைப் பற்றி எல்லாக் கட்சிகளும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும், ஏதோ தமிழிலே பிறந்து, தமிழிலே வளர்ந்து, தாங்கள் தான் தமிழில் ஆர்வம் உடையவர்கள் போலப் பேசிக்கொண்டும், இந்தி கூடாது என்றும், இந்தி எதிர்ப்புத் தினம் கொண்டாட வேண்டும் என்றும், சொல்லிக்கொண்டு இருக்கும் போது, அவர்களுடைய தலைவர்களில் ஒருவர் தம்முடைய குழந்தையை டில்லியிலுள்ள தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் படிக்க வைக்காமல் ஹிந்தி பள்ளிக்கூடத்தில் படிக்க வைத்திருக்கிறார்கள் என்றால், தமிழ் நாட்டு மக்களை இவர்களா காக்கப் போகிறார்கள்? தமிழ் நாட்டின் வருங்காலச் செல்வங்களை இவர்கள் எப்படிக் காப்பாற்றுவார்கள்? தமிழ் நாட்டுச் செல்வங்களைக் கெடுப்பதற்காகத் தான் இவர்கள் இப்படிச் சொல்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

[10th August 1960

SRI C. N. ANNADURAI: அவர்கள் சொன்ன கூற்றை அந்த நண்பர் என்னுடைய கட்சிக்காரர் என்ற முறையில் நான் அறிந்திருப்பதால், நான் வன்மையாக மறுக்கிறேன்.

MR. SPEAKER: இந்தச் சபையில் இல்லாதவர்களைப் பற்றியோ அவர்களுடைய பந்துக்களைப் பற்றியோ இழிவாகப் பேசுவது சரியல்ல.

SRIMATHI A. S. PONNAMMAL: இழிவாகச் சொல்லவில்லையே!

MR. SPEAKER: தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் படிக்க வைக்காமல் ஹிந்திப் பள்ளிக்கூடத்தில் படிக்கவைப்பதாகச் சொன்னது ஒரு வகையில் இழிவான பேச்சுதானே.

SRIMATHI A. S. PONNAMMAL: கனம் சபா நாயகர் அவர்களே, நான் இழிவாக யாரையும் கூறவேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால், தமிழைப்பற்றிப் பேசக்கூடியவர்கள் தமிழ்ப் பள்ளிக்கூடத்திற்கு அல்லவா பிள்ளைகளை அனுப்பி வைக்க வேண்டும் ?

SRI C. N. ANNADURAI: அம்மையாருக்குக் கிடைத்திருக்கும் தகவல் தவறு என்று நான் சொல்லுகிறேன்.

MR. SPEAKER: இந்தச் சபையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRIMATHI A. S. PONNAMMAL: நான் குறிப்பிட்டது பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலுங்கூட, பின்னால் சொல்லிக்கொள்கிறேன். தற்போதைக்கு ஒத்துக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று. ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் ஒருவர் பேசும் போது " ஹிந்தியை ஹரிஜன மக்கள் படிக்க முடியாது " என்றார்கள். அனேக டிபார்ட்மெண்ட்களில் எத்தனையோ ஹரிஜன குடும்பங்களில் பிறந்தவர்கள் நல்ல பதவிகளில் இருந்து கொண்டு திறமையாகக் காரியங்கள் செய்து கொண்டு வருகிறார்கள். ஹரிஜன மக்களால் படிக்க முடியாது என்று சொல்வதை நான் எதிர்க்கிறேன். ஹிந்தி தேசீய மொழியாக வர வேண்டும் என்று எங்களுடைய கட்சியின் சார்பிலும் பொது மக்களின் சார்ப்பிலும் சொல்லி, அதை முழு மனதோடு வரவேற்கிறேன்.

SRI K. ANBAZHAGAN: இப்பொழுது பேசிய அங்கத்தினர் அவருடைய ஆளும் கட்சியின் சார்பில், இந்தியை தேசீய மொழியாக வரவேற்பதாகத் தெரிவிக்கிறார்கள். நிதி அமைச்சர் திரு. சுப்ரமணியம் அவர்கள், "இந்தியை ஒரு தேசீய மொழியாக வரவேற்கவில்லை " என்று தெரிவித்திருக்கிறார்கள். எது ஆளும் கட்சியினுடைய கொள்கை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: ஹிந்தியும் ஒரு தேசீய மொழிதான். அதைத்தான் அவர்கள் சொல்கிறார்கள்.



10th August 1960] [Sri C. Subramaniam]

இந்தியாவிலே இருக்கும் எல்லா மொழிகளும் தேசீய மொழிகள்; அதிலே ஹிந்தியும் ஒரு தேசீய மொழி. திராவிட முன்னேற்றக் கழகத்தின் அபிப்பிராயம் எப்படி இருக்கிறதோ அதைப் பற்றி நான் சொல்லவில்லை.

MR. SPEAKER: அடிக்கடி குறுக்கிட்டுப் பேசினால் எப்படித்தான் பேச்சை முடிக்கமுடியும் ?

SRI A. GOVINDASAMY: கனம் அங்கத்தினர் திரு. மகாலிங்கம் அவர்கள் பேசியதற்கு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் நேரத்தில், "நிர்வாக மொழி" என்று சொல்லிவிட்டு, இங்கே மறுக்கிறார்.

THE HON. SRI C. SUBRAMANIAM: ஹிந்தியைத் தேசீய மொழியாக்க வேண்டும்" என்று திரு. மகாலிங்கம் அவர்கள் சொன்னதற்கு, " ஹிந்தி இப்போதே தேசீய மொழியாக இருக்கிறது; ஆக்க வேண்டியது நிர்வாக மொழியாக" என்று நான் திருத்தமாகச் சொன்னேன்.

MR. SPEAKER: ஒவ்வொரு அங்கத்தினர் சொன்னதற்கும் மந்திரி அவர்கள் பதில் சொல்லமுடியாது. பதில் சொல்ல வேண்டுமென்று கேட்பதும் சரியல்ல. அடிக்கடி குறுக்கே பேசினால், ஸ்ரீமதி பொன்னம்மாள் அவர்களுக்கு ஒதுக்கி வைத்த நேரம் கம்மியாகிவிடும். இன்னும் இரண்டு அங்கத்தினர்கள் கம்மியாகத்தான் பேசப் போகிறார்கள்.

SRIMATHI A. S. PONNAMMAL: அடுத்தபடியாக, நம்முடைய நாட்டில் விலைவாசி ஓரளவுக்கு ஏறியிருக்கிறது என்றாலுங்கூட, எங்களுடைய கட்சிக் கொறடா கூறியது போல, ஏழை விவசாயிகள் பகல் முழுதும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் 85 சதவிகிதமுள்ள மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்களே, அவர்கள்தான் நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறார்கள் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். அப்பேர்ப்பட்டவர்கள் ஒரு ஏர் உழுவதற்காகக் கூப்பிடப்பட்டால், 2 ரூபாய்க்குப் பதில் ஐந்து ரூபாய் கொடுத்தாலும் ஏர் உழ வரமாட்டேன் என்கிறார்கள். இரண்டு ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்த மண்வெட்டி இப்பொழுது ஏழரை ரூபாய்க்குக்கூட கிடைப்பதில்லை. விலைவாசி ஏற்றத்தை குறைத்தாலுங்கூட, ஏழை பாட்டாளி மக்களாக நாட்டின் தலை விதியை நிர்ணயிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்களே, அவர்களுடைய நிலையை ஆராய்ந்து பார்த்து அவர்கள் வேலையைக் குறைத்து, இந்த சாமான்களின் விலையைக் குறைக்க வேண்டுமென்று விவசாயிகள் எதிர்பார்க்கிறார்கள். அப்படியில்லாமல், அரசாங்கத்தில், ரூ. 200, ரூ. 300 சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்குச் சலுகை காட்ட வேண்டுமென்று மாற்றுக் கட்சிக் காரர்கள் நினைத்தால், அதற்கு ஒருக்காலும் மக்கள் இடம் தரமாட்டார்கள் என்பதை அவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொரு அங்கத்தினர்கூட கூறினார். "ஏன் இம்மாதிரி அதிகாரத்தை பஞ்சாயத்து

யூனியன் கையிலே கொடுப்பது, அது மிகவும் பொருத்தமல்ல. தனிப்பட்டவர்கள் ஜில்லா நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வரும்பொழுது அது மிகவும் நல்ல முறையில் இருந்து கொண்டிருநதது." என்று சொன்னார்கள். அவர்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நாம் இருப்பது ஜனநாயக நாடு. அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கும் நோக்கத்தோடு அரசியல் நடத்திக்கொண்டிருக்கின்றோம். கிராமத்திலுள்ள பஞ்சாயத்துக்களும், கிராமச் சபைகளுக்கும் அதிகாரத்தை பிரித்துக் கொடுத்தால்தான் அவர்கள் பல விஷயங்களை தெரிந்துகொள்ள முடியும். தாங்கள்தான் ஆளவேண்டும், ஒருவர் கையில்தான் ஆட்சி இருக்க வேண்டும் என்று கூறுபவர்கள் மக்கள் மத்தியில் செல்ல முடியாது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் துறை பரவலாக நாட்டில் தொழில்களை நிறுவப்போவதாக கவர்னர் பெருமான் உரையில் கூறப்பட்டிருப்பது குறித்து நான் மிகவும் சந்தோஷப்படு கிறேன். நாம் தொழில் துறையில் எவ்வளவோ காரியங்களைச் செய்த போதிலும், எவ்வளவோ திட்டங்களைப் போட்ட போதிலும், கிராமப்புறங்களிலும், தாலுகா மாவட்டங்களிலும் அநேக விதமான தொழில்களை நாம் ஆரம்பிக்க வேண்டும். உதாரணமாக என்னுடைய தொகுதி நிலக் கோட்டையில் ஐம்புதுரைக் கோட்டையில் மைகாவும்—காகாய் பொன் என்று சொல்லுவார்கள்—கிளாஸ் செய்யக் கூடிய மண் கட்டியும் அங்கே கிடைக்கின்றன. யார் யாரோ அதை வெட்டி எடுத்துக் கொண்டு போகிறார்கள். அதையெல்லாம் ஆராய்ச்சி செய்து அந்தப் பகுதியிலே பிளாஸ்டிக் சாமான் செய்யக்கூடிய அளவுக்கு ஒரு தொழிலை ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். "ஆறு மாதம் விவசாய வேலை செய்து, மற்ற 6 மாதங்களுக்கு வேலையில்லாமல் திண்டாடுகின்ற அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு தருவ தாக இருக்கும் என்பதையும் அமைச்சர் அவர்களுக்கு தாழ்மை யோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மின்சாரம். மின்சார விஷயத்தில் நாம் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் முன் நிலையில் நிற்கிறோம் என்று வைத்துக்கொண்டால்கூட, என்னுடைய தொகுதியில் பல இடங்களில் செக்யூரிடி டெபாஸிட் கட்டி, 6, 7, ஆண்டுகள் ஆகியும், மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதைப் பரிசீலனை செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கூறி விரைவிலே மின்சார விஸ்தரிப்பு கொடுக்க வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பாசன திட்டங்கள் என்று வரும்பொழுது, நாம் பெரிய பெரிய அணைகளைக் கட்டியிருந்த போதிலும், அநேக இடங்களில் சிறிய சிறிய நீர்ப் பாசன திட்டங்கள் இன்னும் விரைவிலே எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு தாலூக்காவாரியாக ஆராய்ந்து பார்த்து, ஒவ்வொரு





தொகுதி வாரியாக ஆராய்ந்து பார்த்து சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு முதல் இடம் கொடுக்கவேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, குழந்தைகளுக்கு கட்டாயப் படிப்பை நான் மிகவும் வரவேற்கிறேன். கிராமப்புறங்களில் சரியானபடி பள்ளிகளுக்குச் செல்லாமல் இருக்கும் குழந்தைகளுக்குப் பகல் உணவு அளிப்பதோடுகூட வருஷத்திற்கு இரண்டு தடவை யாவது பின் தங்கியவகுப்பினர்களுக்கு, ஹரிஜன குழந்தைகளுக்கு நாம் துணிமணிகள் கொடுப்போமானால், கட்டாயம் அவர்கள் பள்ளிகளுக்கு வருவார்கள் என்பதை மிகவும் பணிவோடு, தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவேதான், பொருளாதார நிலைமை நமக்கு சரியாக இல்லாவிட்டாலும், இம்மாதிரியான சிறிய விஷயங்களையும் பார்த்து, கவனித்து சேர்த்து செய்வோ மானால் ஏழைக் குழந்தைகளுக்கு நல்ல அறிவை ஊட்டியவர் களாவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சம்பளக் கமிஷன் அறிக்கை வந்ததும் அநேக ஆசிரியர்கள், ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் அதை மிகவும் வரவேற்று அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்ள கூடிய நிலைமை இருக்கிறது. அதோடு, விவசாய மேஸ்திரிகள் நம்முடைய மாகாணத்தில் ஏறக்குறைய 1,200 பேர்கள் இருக்கிறார்கள். ஒரு பிளாக்குக்கு 2, 3 மேஸ்திரிகள் இருக்கிறார்கள். அவைகளில் ஒன்று, இரண்டு மேஸ்திரிகளை நீக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே பல ஆண்டுகளாக பணிபுரிந்தவர்களை இப்பொழுது வேலையி லிருந்து நீக்கினால், அவர்கள் குழந்தை, குட்டிகளுடன் கஷ்டப்படுவார்கள். அவர்களை இந்த வேலையிலிருந்து நீக்கினால்கூட, அவர்களுக்கு வேறு ஏதாவது இலாகாவில், பாரெஸ்டு இலாகாவிலோ அல்லது மரம் நடும் விழா சம்பந்தமாக பி.டபிள்யூ.டி-யிலோ அவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களை ஆதரிக்கவேண்டும் என்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, உற்பத்தியைப் பெருக்க வேண்டும், விவசாயி களுக்கு அதிகப்படியாக கடன் கொடுத்து உதவ வேண்டு மென்று திட்டம் போட்டு, அதன்படி செய்துக் கொண்டிருக் கிறோம். ஒரு சில ஏரியாக்களில், ஜமீன் ஏரியாக்களில் கடன் வாங்க முடியாமல் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள்.

(Deputy Speaker in the Chair).

அந்த ஏரியாக்களில் "புல் பினான்ஸ் ஸ்கீம்", முழுக் கடன் தொகை அளிப்புத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவந்து, கடன் வசதி செய்துக் கொடுத்தால், உற்பத்தியை பெருக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொண்டு, கவர்னர் பெருமான் உரையை பாராட்டி, எனது சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

[10th August 1960

*SRI P. VEDAMANICKAM: கனம் சட்ட மன்ற உப தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் உரையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை பெரும்பாலும் பொது மக்கள் மிகவும் கண்டித்து பேசினார்கள் என்றால், குறிப்பாக எங்கள் நகரத்தில் அந்த வேலை நிறுத்தத்தின் போது நான் அடிக்கடி சென்று பார்த்தேன். பொது மக்களுக்கு அதனால் பல இன்னல்கள் ஏற்பட்டதால், அவர்கள் அதை மிகவும் கண்டித்தார்கள். இன்றைக்கு மத்திய சர்க்கார் ஊழியர்கள் மாகாண சர்க்கார் ஊழியர்களை விட நல்ல சம்பளம் பெறுகிறார்கள். அப்படியிருந்தும் மேலும் அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டு, அவர்கள் 4, 5 நாட்களுக்கு வேலை நிறுத்தம் செய்தார்கள். பொதுமக்களுக்கு அதனால் பெரிய கஷ்டம் ஏற்பட்டது. அதனால்தான் அந்த வேலை நிறுத்தத்தை பொது மக்கள் ஆதரிக்கவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அத்துடன் பெரும்பாலான நமது மாகாண என்.ஜி.ஒக்கள் அதிக நாட்களாக தங்களுக்கு சம்பளம் போதாது வறுமையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம், சம்பள உயர்வு வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதைப் பரிசீலனை செய்து கவனித்து இந்த ஆண்டிலே அவர்களுக்குச் செய்த உதவிக்கு அவர்கள் அரசாங்கத்திற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அது குறித்து நான் அரசாங்கத்தைப் பாராட்டு கிறேன். அதோடு எங்கள் மாவட்டத்தில் அரசாங்க ஊழியர்கள் சம்பள உயர்வை மிகவும் வரவேற்று நன்றி செலுத்தி பாராட்டியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதோடு எங்கள் தாலுகாவிலே பெண்ணாடம் என்ற நகரத்தில் சர்க்கரை ஆலை ஒன்று ஆரம்பிக்க விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அரசாங்கம் கட்டாயம் அங்கே ஒரு சர்க்கரை ஆலை நிறுவப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அங்கு இன்னும் வேலை ஆரம்பிக்கப்பட வில்லை. சர்க்கரை ஆலை ஏற்படுத்துவதற்கு 5 விண்ணப்பங்கள் வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். பெண்ணாடத்தில் ஒரு ஆலை ஏற்படுவதற்கும் விண்ணப்பம் வந்திருக்கும் என்று நினைக் கிறேன். அரசாங்கம் இதைக் கவனித்து அங்குள்ள மக்களுடைய எண்ணத்தை பூர்த்தி செய்து அங்கு ஒரு ஆலையை நிறுவும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கள் மாவட்டத்தில் ரிசர்வாயர் பாய்ச்சலினால் நல்ல கரும்பு விளைகிறது. அதனால் 1,000 தொழிலாளர்கள் பிழைக்க முடியும். அடுத்த திட்டத்திலாவது இதை உருவாக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாய இலாகாவில் வேலை செய்து வரும் பின்தங்கிய ஊழியர்கள் விவசாய மேஸ்திரிகள் நூற்றுக் கணக்கில் "ரிடெரென்ச்மெண்டு" செய்யப்படுகிறார்கள் என்று அவர்கள் குறை சொல்லுகிறார்கள். குறிப்பாக எங்கள் தாலுகாவில் 2, 3



10th August 1960] [Sri P. Vedamanickam]

ஊழியர்கள் வேலையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் குடும்பமே பிழைக்க வழியில்லாமல் இருக் கிறது. உடனடியாக இவர்களுக்கு மற்ற டிபார்ட்மெண்டி லாவது வேலை கொடுத்து ஆதரிக்கவேண்டுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில் ஹரிஜன மக்களைப்பற்றி யாதொரு விஷயமும் சொல்லப்படாவிட்டாலும், ஹரிஜன மக்களுக்கு குடியிருப்பு விஷயத்தைப் பற்றி எந்த மாவட்டத் திற்குச் சென்றாலும் குறையாக இருக்கிறது. அமைச்சரவையைப் பார்க்கும்போதெல்லாம் எந்த நேரமும் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் அரசாங்கத்தினுடைய "பாலிஸி", உடனடியாக இந்தக் குறையைத் தீர்க்கக் கூடியதாக இல்லை. ஒரு ஹரிஜன சேரியை எடுத்துக்கொண்டால் குடியிருப்பு மனைப்பிரச்னை குறைந்தது 10 ஆண்டுகளாக தீராமல் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தில் சிதம்பரம் தாலுக்காவில் இந்தக் குறை நீங்கிய பாடில்லை. ஒன்றிரண்டு தாசில்தார்கள் போட்டும்கூட சரிவர நடக்கவில்லை. இதற்குக் காரணம் இது சம்பந்தமான பேப்பர்கள் சென்னைக்கு வந்து செல்ல வேண்டியிருப்பதால் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இது விஷயமாக அரசாங்கக் கொள்கையை மாற்றி இந்தக் குடியிருப்பு மனை விஷயத்தை ஜில்லா மட்டத்திலே முடிவு செய்ய அரசாங்கம் வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். குடியரசு நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நாம் குடியிருப்பு மனை வசதியை உடனுக்குடன் செய்துகொடுக்காததுபற்றி நான் வருந்துகிறேன். அந்த விஷயத்திலே அரசாங்கம் மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மின்சார விஷயத்தில் நமது மாகாணம் மிகவும் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. அதிக நாட்களாக பின்தங்கிய பிரதேசமாக இருந்த எங்கள் மாவட் டத்தில் இப்பொழுது மின்சார விஸ்தரிப்பு நடந்துகொண்டிருக் கிறது. எங்கள் தாலுகாவிலே சில இடங்களில் மின்சார விஸ் தரிப்பு இன்னும் அதிகமாக ஏற்படவில்லை. திட்டக்குடி, சிறு பாக்கம், நல்லூர் ஆகிய இடங்களுக்கு மின்சாரத்தை விஸ் தரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டில் 10, 15 கிராமங்கள் தீயால் எறிந்து விட்டன. ஏறக்குறைய அரசாங்கம் 50,000 ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்தது. இந்தப் பகுதிகளில் வைக்கோலால் வேய்ந்த வீடுகள் அதிகம். அங்கே ஒரு Fire Servi e நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னபொழுது, அதை பஞ்சாயத்தால் நடத்த முடியாது என்று அரசாங்கம் சொன்னார்கள். இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஏற்படப் போகின்றன. ஏறக்குறைய 4, 5 கவுன்சில்கள் ஏற்பட இருக் கின்றன இந்தப் பிராந்தியத்தில். ஆகவே, அங்கு ஒரு "பயர் ஸர்விஸ்" நிலையம் ஏற்படுத்தி அதை யூனியன் கவுன்சில் நடத்து மாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் வருஷத்திற்கு அரை

லட்ச ரூபாய்க்கு மேல் சர்க்காருக்கு பணம் விரயமாகிறது. ஆகவே, விருத்தாசலம் தாலூகாவில் ஒரு "பயர் .ஸர்விஸ்" நிலையம் ஏற்படுத்தினால் அது கள்ளக்குரிச்சிக்கும் உபயோகமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை வரவேற்று, ஆதரித்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

12-30 p.m.

* SRI G. G. GURUMURTHI: தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை ஆதரித்து, சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் பேருரையில் அகில இந்திய ஆட்சி மொழி பற்றி திருப்தி கரமாகச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த சட்டசபை யிலேயும், வெளியிலே சில அரசியல் கட்சிகளும் ஆட்சி மொழி யைப் பற்றியும், மற்ற மொழி பற்றியும் சர்ச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், கிராம மக்களும், பொது மக்களும், அகில இந்திய மொழியைப் பற்றியும் மற்றதைப் பற்றியும் ஈடுபடுவதில்லை. அவர்கள், பொறுப்பேற்றிருக்கும் அரசாங்கம் அதையெல்லாம் செம்மையாகச் செய்வார்கள் என்று சும்மா இருந்து விடுகிறார்கள்; விவரம் அதிகமாகத் தெரியாமலும் அப்படியிருந்து விடுகிறார்கள். தாலூகா தலைமை ஆபீசுகளிலிருந்து அவர்களுக்கு தமிழிலேயே உத்தரவுகள் வரும்போது, தமிழ் ஆட்சி மொழியாக இருப்பதின் பயனை அவர்கள் அடைகிறார்கள்.

ஆங்கிலம் வேரூன்றிய காலத்தில், எல்லோரும் பயன் படுத்திக் கொள்ளாமல் ஒரு சாரார் மாத்திரம் பயன் படுத்திக் கொண்டதினால், அவர்களிடம் துவேஷமும், அதற்கு ஒரு கட்சி ஏற்படும் நிலைமையும் உண்டாயிற்று. அதே மாதிரி, ஹிந்தி யைப் பொருத்தவரை, அதை அகில இந்திய ஆட்சி மொழியாக ஏற்கக்கூடிய தகுதி ஏற்படும்வரை ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும். ஆனால் பல்லாண்டுகளுக்குப் பிறகு, ஆங்கிலம் வகிக்கும் இடத்தை ஹிந்தி ஏற்றுக்கொள்ளும் நிலை வரும் போது, அதைப் பயன் படுத்திக் கொள்ளும் மக்கள் ஒரு பகுதி மக்களாக மட்டும் இருப்பார்கள் என்றால், அப்பொழுதும் துவேஷமும் வெறுப்பும் ஏற்படும் நிலைமை ஏற்படும். அதை நாம் தவிர்க்க வேண்டும். எனவே ஆங்கிலத்திற்கு என்ன இடம் நமது மாகாணத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதே மாதிரியான இடம் அதாவது கட்டாய பாடமாக ஹிந்தி வைக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக விலைவாசி ஏற்றத்தைப்பற்றியும், கவர்னர் உரையில் தெரிவித்திருக்கிறார்கள். இந்த உயர்வினால் விவசாயி களுக்கு அதிக நன்மை ஏற்படுகிறது என்ற தப்பான அபிப்பிராயம் ஒன்று இருக்கிறது. சிறிய விவசாயிகள் நிலைமை வேறு. பெரிய விவசாயிகளைப் பொருத்தவரை, அதிகக் கவலையில்லை. அவர்களுக்கு வேறு வழிகள் இருக்கின்றன, வேறு தொழில்கள் இருக்கின்றன. ஆனால், சிறிய மத்தியதர விவசாயி இந்த விலை ஏற்றத்தால் பயன் அடைவதில்லை. விளைபொருள்களை எடுத்துக் கொண்டாலும், மற்ற விவசாய காரியங்களுக்கு தேவையான பொருள்களை எடுத்துக் கொண்டாலும், எல்லாவற்றையுமே அவன் உற்பத்தி செய்ய





முடிவதில்லை. ஆகவே, அத்தியாவசியமான பொருள்களை அவன் மற்றவர்களைப்போல்தான் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. நான் விவசாயச் செலவைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. மற்ற தேவைப் பொருள்கள், போக்குவரத்து, உடை, வைத்தியம் போன்ற பல இனங்களில் அவன் அதிகச் செலவே செய்ய வேண்டியிருப்பதால், அவன் பொருள்களுக்குக் கிடைக்கும் அதிக விலைக்கும், அவன் கொடுத்து வாங்கும் பொருள்களின் விலைக்கும் சரியாகப் போய் விடுகிறது. இந்த விலைவாசி அதிகமாக இருந்த பத்தாண்டுகளில் எந்த சிறிய விவசாயியும் தன் பணத்தை மிச்சப்படுத்தினான் என்று சொல்லுவதற்கில்லை. இப்பொழுதும்கூட விளை பொருள்களின் விலை ஒரு ஆண்டில் அதிகமாக இருக்கிறது, மற்ற ஆண்டில் குறைந்து போகிறது. இப்பொழுது உயர்ந்த பட்ச விலை நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லும்போது, குறைந்த பட்ச விலையையும் நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுது தான் விவசாயி தன் தொழிலை நடத்த முடியும். (மணியடிக்கப்பட்டது.) ஒரு நிமிஷம், சார்.

இரண்டாவது திட்டம் நிறைவேறி, மூன்றாவது திட்டம் தீட்டும் நிலையில் இருக்கிறோம். திட்டங்களை வகுக்கும் நேரத்தில், சிறு நீர்ப் பாசன திட்டங்களுக்கு அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆனாலும், சில வேலைகள் எடுக்கப் படாமல் இருக்கின்றன. சில ஊர்களில் மண் எடுத்தோம் என்கிறார்களே தவிர புதிதாக சில குளங்களை ஏற்படுத்துவது போன்ற திட்டங்கள் இல்லை. அரசாங்கத்தில் சாங்க்ஷன் செய்யும் போதும், ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு விதமாகக் கணக்குப் பார்க்கிறார்கள். அரசாங்கத்தின் கொள்கை முரண் பாடுடையதாக இருக்கிறது. ஏக்கருக்கு இவ்வளவுதான் செலவு செய்யப்பட வேண்டுமென்ற நியதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நியதியினால் எந்த வேலையும் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கின்றன. இந்த நியதி சாத்தியமற்றதாக இருக்கிறது.

கடைசியாக மின்சாரத் துறையில், அதிக முன்னேற்றம் கண்டிருக்கிறோம். அது போற்றத் தக்கது. கவர்னர் உரையில் அன்-கனெக்டெட் மினிமம் சார்சை தள்ளுபடி செய்யப் பட்டது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். கனம் மின்சார அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன், மேட்டூர் வாய்க்கால், கீழ்பவானி வாய்க்கால் பிரதேசங்களில், விவசாயக் காரியங்களுக்கு மின்சார சப்ளை கொடுப்பதிலும் ப்ரையாரிடி கொடுப்பதில்லை . . .

DEPUTY SPEAKER: எலெக்ட்ரிசிடி பட்ஜெட் வரும் போது அதைப் பற்றியெல்லாம் பேசுங்கள்.

* SRI S. RAMAKRISHNA THEVAR: சபைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது நம் இராஜ்யத்தில், ஒவ்வொரு துறையிலும் முன்னேறி வரும் திட்டங்களைப் பற்றி கவர்னர் உரையில் கொடுத்திருக்கும் நம் திட்டங்கள் அத்தனையும் ஒரு "பாக்கட் அகராதி" யாக அமைந்திருக்கிறது. அதைப்

[Sri S. Ramakrishna Thevar] [10th August 1960

புரிந்துகொண்டோ அல்லது புரிந்துகொள்ளாமலோ தவருன நோக்கத்தில் மதிப்பிற்குரிய பல அங்கத்தினர்கள் பேசுகிருர்கள். பொதுவாக எடுத்துக் கொண்டால், நம் பிராந்தியத்தில், மின்சாரம் மின் வேகத்தில் முன்னேறி வருகிறது; கூட்டுறவு ஸ்தாபனங்கள் வாயு வேகத்தில் வளர்ச்சி யடைகிறது; மராமத்து வேலைகள், பாசுபாதாஸ்திரம் போன்று பூமியைத் துளைத்துக் கொண்டே செல்கிறது ; சுகாதாரம் சுகுந்த வாசமாக இருக்கிறது; கல்வி கடைமடை திறந்தாற்போல் வெள்ளமாகப் பாய்கிறது. அந்த மாதிரி போய்க் கொண்டிருந்தாலும், குறை சொல்லிக் கொண்டிருப்பது சாதாரணமாக இருக்கிறது. கிராமங்களில் சொல்லுவார்கள் கட்டின வீட்டுக்கு லக்கினம் சொல்லுகிருன் என்று, அம்மாதிரித்தான் இருக்கிறது, இவ்வளவு ஆக்க வேலைகளையும் பார்த்துக் கொண்டும், குறை கூறிக் கொண்டிருப்பது. அவர்கள் கதி என்னவோ சேலத்தில் எந்த விதமான இரும்பைக் கண்டுபிடித்தார்கள் என்ருல், அதில் 35 சதவிகிதம் என்ருர்கள்; ஆனல் கீழ் ராமனுதபுரம், திருப்பத்தூர், சிவகங்கை பகுதியில் உள்ள இரும்பு பரீட்சை செய்து பார்த்ததில் 45 சதவிகிதம் இருப்பதாக சொல்கிருர்கள். இன்னும் கனி வளங்கள் எத்தனையோ இருக்கின்றன. திருவாடானை, தாலூகாவில் சமுத்திரக் கரைப் பக்கத்தில் எண்ணெய் வளம் இருக்கிறது என்று ஆராய்ச்சி நிபுணர்கள் சொல்கிருர்கள். நல்ல பலன் தரும் சூழ்நிலையிருக்கிறது. அது சம்பந்தமாக ஆராய்ச்சி வேலைகள் துரிதமாகச் செய்ய வேண்டும் என்று அபிப்பிராயப் படுகிறேன்.

இரண்டாவதாக, கவர்னர் உரையில் அப்பர் பெரியாறு திட்டத்தைப் பற்றி ஒன்றுமே இல்லை. அது ஒருக்கால் மறைந்திருக்குமோ என்று யோசித்து இந்தக் கோணல் எழுத்துக்களுக்கு மத்தியில் இருக்குமோ என்றுகூட யோசித்துப் பார்த்தேன், அப்படி ஒன்றும் இருப்பதாகக் காணும். அந்தத் திட்டம் கொண்டு வந்து நிறைவேற்றிஞல் அதனுல் திருப்பத்தூர், திருவாடானை தாலூகாக்கள் வளம் பெறும். அந்த பிராந்தியத்திற்கு அது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே அதை உடனடியாக எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது நம் ராஜ்யத்தில் இருக்கிற கோணல்களைப் பார்த்தால் பத்மாசூரன் கதையில் ஞாபகம் வருகிறது. பத்மாசூரன் எப்படி தனக்கு வரத்தை வாங்கிக் கொண்டு அந்த வரதலை எப்படி அவன் துஷ்பிரயோகம் செய்ய ஆரம்பித்தான். அவன் கதி என்ன ஆச்சு, அதே போல் இந்த ராஜ்யத்திலும் தவறு செய்பவர்கள் கதி என்ன ஆகிவிடும் என்பதில் சந்தேகம் கிடையாது. என்னுடைய பகுதியை எடுத்துக் கொண்டால் அங்கு முக்கியமான சில திட்டங்களை எடுத்து நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. எங்கள் பகுதி பல விதத்திலும் முன்னேற்றமடைய வேண்டியதாக இருக்கிறது. சேது சமுத்திரம் திட்டம் வர வேண்டியதாக இருக்கிறது. சிறிய துறை முகத் திட்டங்கள் வளர வேண்டியதாக இருக்கிறது. சேது ரஸ்தா திட்டம் வர வேண்டியதாக இருக்கிறது. குளாய் கோர்வை பூச்சை திட்டம் முடிவடைய வேண்டும். எங்கள் பகுதி



10th August 1960] [Sri S. Ramakrishna Thevar]

மிகுந்த வரண்ட பிரதேசம் அங்கு இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் வந்து நிறைவேற்றப்பட்டால் எங்கள் பகுதி மக்களும் மற்ற பகுதி மக்களுடன் சேர்ந்து உலாவி வருவதற்கு இடம் ஏற்படும். ஆகவே, அவைகளையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவைகளை எடுத்து நிறைவேற்றுவதற்கு கூடிய விரைவில் மந்திரிகள் எவ்வளவு தூரம் சீக்கிரத்தில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவ்வவு சீக்கிரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI P. K. MOOKIAH THEVAR: கனம் தலைவர் அவர்களே, நமது மேன்மை தங்கிய கவர்னர் பெருமானுடைய உரையில் குறிப்பிடத்தக்கது. நாட்டு மக்களிடத்தில் உயிர் பிரச்னையாக இருக்கிற விலைவாசியைப் பற்றி குறிப்பிட்டிருப்பது அதைப் பற்றி உரையில் குறிப்பிட்டிருந்தாலும் அதற்கு எடுத்துக் கொண்ட நிவாரணம் என்ன என்பதைப் பற்றி குறிப்பிடவில்லை. மக்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும் வகையில் அது அமைந்திருக்கிறது. இப்பொழுது ஆளும் அரசாங்கத்திற்கு பதின்மூன்று வருஷம் அவகாசம் கொடுத்தும்கூட அவர்களுக்கு வேண்டிய அதிகாரம் கொடுத்தும் கூட விலைவாசிகளைக் கூட குறைக்க வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்று 250 கோடி ரூபாயும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்று ஐயாயிரம் கோடி ரூபாய் செலவு செய்திருந்தும் அவற்றில் 13 கோடி ரூபாய் மக்களிடத்தில் விளம்பரம் செய்வதற்கு என்று செலவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் விலைவாசிகளைக் குறைக்க முடியவில்லை. அது ஒரு பெரிய பிரச்சனையாக இன்னும் இருந்து வருகிறது. அப்படி இருப்பது மிகவும் வருந்தக்கூடிய விஷயமாகத்தான் இருக்கிறது.

கவர்னர் அவர்கள் எட்டு மாதங்களுக்கு முன்னதாகத்தான் ஒரு உரையை நிகழ்த்தி இருக்கிருர். அதற்குள் புரட்சிகரமான மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லையே என்று எதிர்கட்சிக்காரர்கள் குறை கூறுகிருர்கள் என்று பல ஆளும் கட்சிக்காரர்கள் சொல்லலாம். ஆனல் புரட்சிகரமாக ஒன்றும் நடைபெறவில்லை என்ருல் நாட்டில் புரட்சி ஏற்படத்தான் செய்யும் என்று சொல்ல வேண்டி வருகிறது. சுதந்திரம் அடைந்த பிறகு இப்படிப்பட்ட உரை அடிக்கடி நிகழ்ந்துகொண்டுதானிருக்கிறது. எந்த விதமான புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஏராளமாக பணம் தான் செலவு செய்யப்பட்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதிகப்படியாக அரசாங்கம் கடன் தான் பட்டிருக்கிறது. அந்த நிலைமையைத்தான் கண்டிருக்கிறது. சுமார் 4,964 கோடி ரூபாய் கடன் வாங்கி இருப்பதாகத் தெரியவருகிறது. இவ்வளவு பெரிய தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் வேண்டிய புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனல் பல திட்டங்களை நிறைவேற்றுகிருேம் என்று சொல்லுகிருர்கள். அவைகளைக் கண்டு வெளி நாட்டிலிருந்து வந்து பார்க்கக்கூடியவர்கள் கண்டு

[Sri P. K. Mookiah Thevar] [10th August 1960

பாராட்டுகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்களுக்கு நாம் வரவேற்பு அளித்து எல்லாவற்றையும் காண்பித்தால் அவற்றைக் கண்டு மரியாதைக்காக அவர்கள் புகழாமல் வேறு என்னதான் சொல்லுவார்கள். ஆகவே அவர்கள் புகழ்வதை வைத்துக் கொண்டு ஏதோ செய்து விட்டோம் என்று சொல்லிக் கொள்வதில் பிரயோசனம் இல்லை. ஆனால் இங்கே வாழ்கிற மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த விலைவாசி உயர்வினால் அவர்களால் எந்த திட்டத்தையும் கண்டு மகிழ முடியவில்லை. அவர்களுடைய வாழ்க்கைத்தரம் எந்த விதத்திலும் உயரவில்லை. விலைவாசியின் உயர்வால் நாட்டில் பட்டினிச் சாவுதான் அதிகமாகிக்கொண்டு வருகிறது. பிச்சை எடுப்பவர்களின் எண்ணிக்கைதான் அதிகமாகிக் கொண்டு வருகிறது. எங்கு பார்த்தாலும் தற்கொலை செய்துகொள்ளக்கூடிய நிலையை பத்திரிகையில் நாம் பார்க்கிறோம். ஐந்தாறு குழந்தைகளை வைத்துக் கொண்டிருக்கக்கூடிய குடும்பத் தலைவர்கள் அவைகளை வைத்துக் காப்பாற்ற முடியாமல் தற்கொலை செய்து கொள்வதையும், தான் எதற்காக தற்கொலை செய்து கொள்கிறேன் என்று எழுதி வைத்து விட்டு தற்கொலை செய்து கொள்வதையும் நாம் அடிக்கடி பார்க்கிறோம். அந்த நிலைமைக்குக் காரணம் என்ன ? இந்த விலைவாசியின் உயர்வுதான் அதற்குக் காரணம். இந்த 13 வருஷ ஆட்சிக்குப் பின்னால் கூட அவர்களால் விலைவாசிகளைக் கட்டுப் படுத்த முடியவில்லையானால் அவர்களால் ஆட்சி செய்ய முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதைப் பற்றி சொன்னால் சிலருக்குக் கோபம் வருகிறது. சாக்கடையில் தேக்கம் ஏற்பட்டால்தான் பூச்சி புழுக்கள் தானாகவே ஏற்படுகின்றன. அதனால் குற்றம் யாருடையது என்பதை கவனிக்க வேண்டும். அதனால் கோபம் வந்து பிரயோசனம் இல்லை. விலைவாசி அதிகரித்திருப்பதன் நிலைமை இந்த அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியா விட்டாலும் மத்திய அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. இவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிட்டாலும் மத்திய அரசாங்க உணவு மந்திரி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். கோடிக் கணக்கான ரூபாயைக் கடன் வாங்கியாவது அமெரிக்காவில் இருந்து தானியங்களை நிறைய வாங்கி வைத்திருக்கிறார். இவ்வளவு ஐந்தாண்டு திட்டங்கள் போட்டு நிறைவேற்றியும் இதுதானா பயன் என்று கேட்க விரும்புகிறேன். இவ்வளவு ரூபாய் செலவு செய்த பிறகும் வெளி நாட்டிலிருந்து தானியங்களை வாங்கி வரவேண்டிய அவசியம் என்ன ? இப்படிப்பட்ட நிலைமையில் விலைவாசிகளை இன்னும் குறைக்க முடியவில்லை என்றால் அதற்கு முக்கிய காரணம் என்ன ? அதற்குக் காரணம் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையில் ஏதோ கோளாறு இருப்பது தான் அதற்குக் காரணம். அடிக்கடி நோட்டுக்களை அச்சடிப்பதும், கடன் வாங்குவதும் ஊதாரித்தனமான செலவும் இன்ப்ளேஷனும் தான் இதற்குக் காரணம். இதையேதான் பல நிபுணர்களும் சொல்லுகிறார்கள். ஸ்டேட் ட்ரேடிங் ஸ்கீமும் இதற்கு ஒரு பரிகாரமாக காட்டப்பட்டது. அரசாங்கம் இப்பொழுது



10th August 1960] [Sri P. K. Mookiah Thevar]

வியாபாரத்தை எடுத்து நடத்துகிறார்கள். அவர்களே சிமெண்ட், சர்க்கரை முதலியவைகளை வியாபாரம் செய்கிறார்கள். அப்படி இருந்தும் ஏன் அவைகளுக்கு பற்றாக்குறை, அவைகளின் விலை உயர்வதற்குக் காரணம் என்ன? முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும் விலைவாசிகளைக் குறைக்க முடியவில்லையென்றால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களுக்கு என்ன நம்பிக்கை ஏற்படப் போகிறது.

பஞ்சாயத்துச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரப் போகிறார்கள், அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கப் போகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் மூலம் உற்பத்தியை பெருக்குவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கப்போவதாகவும் சொல்லப்படுகிறது. முதல் இரண்டு திட்டங்களைப் பார்க்கும் போதே மக்களுக்கு நம்பிக்கை இல்லை. விலைவாசிகளைக் கட்டுப் படுத்த முடியவில்லை. அந்த நிலைமையில் மூன்றாவது திட்டத்தில் அவர்களுக்கு என்ன நம்பிக்கை இருக்கப்போகிறது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு 1,200 கோடி ரூபாய் செலவு செய்யப் போவதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு வேண்டிய பணத்திற்கு இன்னும் அதிகப்படியான வரி போடப் போவதாகவும் சொல்லப்படுகிறது. சிறு சேமிப்பு, டெபிசிட் பைனான்சிங் முதலியவைகளினால் விலைவாசிகள் அதிகரிப்பது போன்று இன்னும் அதிகமாக விலைவாசிகள் உயருவதற்கு இடம் ஏற்படுகிறது. அதனால் மக்கள் எவ்வளவோ கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்படப் போகிறது. அதனால் அவர்கள் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எவ்வளவு தூரம் எதிர் பார்ப்பார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுது அரசாங்கப் பொருளாதாரக் கொள்கையில் ஏதோ கோளாறு இருப்பதாகத் தெரிய வருகிறது. இன்னும் அதிகப்படியான கோளாறுகள் ஏற்படுவதற்கு இடம் ஏற்படுவதற்கு இருக்கிறது. அதனால் மக்களுடைய நம்பிக்கை இல்லாமல் போய்விடுகிறது. ஆகவேதான் திட்டங்களில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை மந்திரிகள் தெரிந்து கொண்டுதான் அவர்கள் கிராம மக்களுடன் நேரடி தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்காக கிராமம் கிராமமாக சுற்றுப் பிரயாணம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுடைய மனதை மாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் சுற்ற ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் அவர்களுக்குத் திட்டங்களில் உண்மையான பலன் கிடைக்கவில்லை. அப்படி கிடைத்திருந்தால் அவர்கள் தலைநகரமாகிய சென்னையிலேயே உட்கார்ந்து கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளுவார்கள். ஆகவேதான் அவர்கள் கிராமங்களில் சுற்றக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எவ்வளவோ திறமையுள்ளவர்கள்தான் மந்திரிகளாக வந்திருக்கிறார்கள். அவர்கள் மந்திரிகளாக வந்து விட்டதனால் கிராமங்களில் பிரசாரம் செய்வதற்கு காங்கிரஸ் கட்சிக்கு ஆள்கள் இல்லாமல் போய்விட்டது. அதனால் இவர்களே சென்று பிரசாரம் செய்ய வேண்டியதாகப்

[Sri P. K. Mookiah Thevar] [10th August 1960

போய்விட்டது. அவர்கள் திறமைசாலிகளாக இருப்பதால்தான் இரண்டு வேலையும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. வேண்டுமானாலும் அவர்கள் மந்திரிப் பதவியை ராஜீனாமா செய்து விட்டாகிலும் கிராமங்களுக்குச் சென்று கட்சிப் பிரசாரம் செய்வதற்கு முற்படலாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். அதற்கு அவர்கள் தகுதியுள்ளவர்கள்தான். அப்படிச் செய்தால் தான் அவர்களுக்கு கிராம மக்களுடன் நேரடி தொடர்பு இருக்கும். திட்டம் தோற்றுப் போய் விட்டது என்பதற்காக அவர்கள் இந்த முறையைக் கையாண்டிருக்கிறார்கள். இவர்கள் இந்த விதமாகக் கிராமங்களுக்குச் சென்று கட்சிப் பிரசாரம் செய்வதால் அதிகப்படியான செலவாகிறது. பல உத்தியோகஸ்தர்கள் அவர்களுடன் செல்ல வேண்டியதாக இருக்கிறது. போலீஸ்காரர்கள் வரவேண்டியதாக இருக்கிறது. மந்திரிகள் வருகிறார்கள் என்றால் முதல் நாளே போலீஸ்காரர்கள் ஸ்டேஷனில் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ரயில் வந்தவுடன் அவர்கள் காரேஜில் மந்திரி இருக்கிறாரோ, இல்லையோ அதைப் பார்த்து சலாம் போட வேண்டியதாக இருக்கிறது. இம்மாதிரி பல ஹிம்சைகள் உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கின்றன. இரண்டு ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பள்ளிக் கூடத்தை திறந்து வைப்பதற்கு செலவு நாலு ஆயிரம் ரூபாய் ஆகிறது. இதையெல்லாம் தான் விலைவாசிகளின் உயர்வுக்குக் காரணம் என்று சொல்லலாம். இதனால்தான் டெபிசிட் பைனான்சிங் ஏற்படுகிறது.

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் இப்பொழுதுதான் ஒரு பள்ளிக்கூடத்தை வந்து திறந்து வைக்க வேண்டும் என்று சொன்னதாகச் சொல்கிறார் கனம் அமைச்சர் ராமய்யா அவர்கள்.

SRI P. K. MOOKIAH THEVAR: நான் அழைக்கவில்லை. நாங்கள் என்ன சொன்னாலும் சில மக்கள் எடுத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். அதனால் ஜனங்களுடைய பிரதிநிதி என்ற முறையில் அவர்களை திருப்தி செய்ய மந்திரிகளை அழைக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்களே வந்து திட்டங்களைப் பற்றி நேரடியாகச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் அப்படி அழைக்கிறோம். ஜனங்களுக்கு நம்பிக்கை வரவேண்டும் என்பதற்காகத்தான் அப்படி அழைக்கின்றோம். மக்கள் திட்டம் திட்டம் என்று பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் மந்திரிகளை எதிர்பார்க்க வைத்திருக்கிறீர்கள். மக்களுடைய மனதை திருப்ப வேறு வழி இல்லை. அதனால்தான் அவர்கள் வந்து ஆக வேண்டும் என்று நிர்பந்தம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இதற்கு உதாரணமாக திருவாழ்த்தான் கதை ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது திருவாழ்த்தான் குதிரை வளர்த்த கதை என்று சொல்லுவார்கள். திருவாழ்த்தான் குதிரை வளர்த்தான். ஒரு இடத்தில் அதனை அடைத்து வைத்து தீனி போடாமல் வைத்திருந்தான். பல நாள் அப்படி தீனி இல்லாமல் இருந்த அந்தக் குதிரை பாதுஷா எட்டிப் பார்த்தபோது அவருடைய தாடியை புல் என்று பிடித்து



10th August 1960] [Sri P. K. Mookiah Thevar]

இழுத்துக்கொண்டதாம் என்று கதை சொல்லுவார்கள். அப்படி இன்றைய தினம் விலைவாசிகள் எல்லாம் ஒரேயடியாக ஏறிப்போக, மக்கள் எல்லாம் பட்டினியால் திண்டாட விட்டு விட்டு இருக்கும் வேளையில் திட்டம் திட்டம் என்று பிரசாரம் செய்யும் போது மக்கள் அதை அப்படியே வேறு வழியில்லாமல் அது Plan mongers ஆக பிடித்து கொள்கிறார்கள் இன்று. ஆகவே அவர்களுடைய கருத்தைத்தான் நாங்கள் பிரதிபலிக்கிறோம், உங்களை அழைக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று முக்கியமானது: ஆலயங்கள் புனிதத் தன்மை வாய்ந்தவை. அவைகள் இன்று வெறும் விளம்பர ஸ்தலமாக மாறிக்கொண்டு வருகின்றன என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு சமயம் தமிழ் நாட்டுக் கோயில் ஒன்றைப் பாத்துவிட்டு மதிப்பிற்குரிய நேரு அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். "இது கோவிலா அல்லது விளம்பரப் போர்டா" என்று கேட்டார்கள். காரணம் விளக்குகள் மூலம் இன்னும் சில மண்டபங்களில் தர்மத்தைச் செய்தவர்களுடைய பெயர்கள் எல்லாம் எழுதி விளம்பரப் படுத்தப்படுகின்றன. சில கவிதைகள் எழுதி அதைக் கல்வெட்டில் புதைத்து அதை எழுதியவர்கள், கல் உதவியவர், டிரஸ்டிகள் இப்படி எல்லோருடைய பெயர்களும் பொரிக்கப்பட்டு புதைக்கப்பட்டு வருவது மிகவும் இழிவானதாகும். இப்படி நம்முடைய ஆலயங்களில் செய்யப்படும் செய்கை நம்முடைய ஆலய புனிதத் தன்மைக்கும், தர்ம குணத்தைப் பாதிக்கின்ற அளவில் இருக்கக் கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் எங்கள் பகுதிக்கு ஸ்காலர்ஷிப் பணம் கொடுப்பது பற்றி நமது அமைச்சர்களிடத்தில் நேரில் சொன்னேன். அவர்கள் உடனே கவனித்து ஏற்பாடு செய்கிறார்கள். இப்படி எல்லோரும் கவனத்திற்கு வரும் விஷயங்களை கவனித்துச் செய்தாலுங்கூட எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் இன்னும் இருக்கப்பட்ட குறைகளை எடுத்துச் சொன்னால்தான் அவர்களால் நல்ல முறையில் பணி செய்ய முடியும் என்பதற்காக குறைகள் சொல்கிறோமே தவிர குறைகள் சொல்லவேண்டுமென்பதற்காக அல்ல. உடனடியாக இருக்கப்பட்ட பிரச்னைகளை எல்லாம் நன்கு கவனித்துச் செய்ய வேண்டுமென்பதற்காக நான் இவற்றையெல்லாம் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI A. E. CHANDRASEKHARA NAYAGAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் மின்சார விஸ்தரிப்பு, நீர்ப்பாசன வசதியைப் பெருக்குதல், மற்றும் பல தொழில்களை வளம்பெறச் செய்தல் ஆகியவற்றில் தக்க நடவடிக்கைகள் பலவற்றை சர்க்கார் எடுத்துக்கொண்டிருப்பதற்காகப் பாராட்டுகிறேன்: பலவகையிலும் நம் ராஜ்யம் சிறந்த

[Sri A. E. Chandrasekhara Nayagar] [10th August 1960

முறையில் முன்னேறி வருகிறது. மேலும் நம் ராஜ்யத்தில் பல நல்ல தொழில் திட்டங்களை அமைத்து அபிவிருத்தி செய்வதற்கும் முயற்சி செய்து கொண்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக மொழி விஷயமாக ஒரு குழப்பமான நிலைமையை இப்போது நம் ராஜ்யத்தில் உண்டாக்கியிருக்கிறார்கள். அதைக் கண்டிப்பாக மாற்றியே தீரவேண்டும். இந்தியைக் கட்டாய பாடமாக ஆக்கித் தீரவேண்டுமேயொழிய இப்படி இரண்டுங்கெட்டான் நிலைமையில் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. ஏதோ ஒரு சில கட்சிகள், பத்திரிகைகள் இதை எதிர்க்கின்றன என்ற காரணத்திற்காக நாம் திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வராமல் இருப்பது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சமீபத்தில் நடந்த மத்திய சர்க்கார் ஊழியர்கள் ஸ்ட்ரைக் சம்பந்தமாக சர்க்கார் கடுமையாகவும், உறுதியாகவும் நடந்து கொண்டதற்காகப் பாராட்டுகிறேன். சர்க்கார் அப்படி நடந்துகொள்ளவில்லை என்றாலும் மக்கள் அப்படி நடந்து கொண்டிருப்பார்கள். பல விடங்களில் மக்களே வேலைநிறுத்த காலத்தில் முன்வந்து சர்க்கார் பணிகளைச் செய்திருக்கிறார்கள். ஆகவே இந்தமாதிரி தேசீயத்திற்கு விரோதமான செயல்களில் யார் இறங்கினாலும் அதை மக்கள் ஆதரிக்கமாட்டார்கள். மேலும் இனிமேல் அரசியல் கட்சிகள் இந்தச் தொழிற்சங்கங்களில் தலையிட்டு நிலைமையைக் குலைக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல் கட்சிகள் உள்ளே நுழைந்து அரசியல் நோக்கத்திற்காக ஊழியர்களை, தொழிலாளர்களைத் தவறாக இழுத்துக்கொண்டு போவது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். சட்ட மூலம் இதை தடை செய்ய வேண்டும். ஆகவே இந்தமாதிரியாகச் செய்வது மிகவும் அனுகூலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் தருவாயில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கும் கட்டத்தில் நாம் இருக்கிறோம். முதல் இரண்டு திட்டங்களினால் நமக்கு நிறைய அனுபவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்போது முன்பு போட்ட திட்டங்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகப் பலன் அளிக்கும் நிலையை எட்டியிருக்கிறது. ஆனால் ஒருவகையில் பின் தங்கியவர்கள், பிற்போக்கான பிரதேசத்தில் உள்ளவர்கள் பயன் அடைய முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே நாம் போடுகிற மூன்றாவது திட்டமும் முன்னேற்றம் அடைந்தவர்களுக்கு முன்னேற்றம் அளிப்பதாக, முன்னேற்றம் அடைந்த பிரதேசம் முன்னேற்றம் அடையும்படியாகப் போட்டுவிடக் கூடாது. பின்தங்கிய பிரதேசம், பின் தங்கிய மக்கள் இவர்களுக்கு அனுகூலம் ஏற்படும் வகையில் திட்டமிடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சமுதாயத்தில் உள்ள ஏற்ற தாழ்வுகளை நீக்கக் கூடிய வகையில் திட்டம் அமைந்தால் தான் வெற்றியுடையதாக இருக்குமே



10th August 1960] [Sri A. E. Chandrasekhara Nayagar]

யொழிய இல்லாவிட்டால் பயன் இல்லை. மேலும் திட்டக் கமிஷன் முதல் ப்ளாக் வரையில் நிர்வாகத் தொடர்பு இருக்க வேண்டும். அப்போது தான் வட்டார வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் காண முடியும். சாதாரணமாக இப்போது எல்லா பகுதியிலும் திட்டத்திற்கு ஆகும் பாதிச் செலவை அந்த வட்டாரத்தவர்களே கொடுக்கவேண்டும் என்று இருப்பது சரியல்ல. பிற்பட்ட வட்டாரங்களில் நிலைமையைக் கவனித்து அவர்களுடைய சராசரி வருமானம் தேசத்தின் சராசரி வருமானத்திற்கு குறைவாக இருந்தால் அவர்களுக்கு விதிவிலக்குக் கொடுத்தாகிலும் பல திட்டங்களை அங்கே நிறைவேற்றினால் தான் அந்தப் பிரதேசங்கள் வளர்ச்சி அடைய முடியும். இப்போது கிராமாந்திரங்களில் அநேகம் பேர்கள் வேலை இல்லாமல் திண்டாடுகிறார்கள். அவர்களுக்கு மூன்றாவது திட்டங்களில் வேலையும் கொடுத்து, உணவும் கொடுத்து திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும். குடும்பத் திட்டம் என்று சொல்கிறோம். குடும்பத்திலுள்ள அனைவரும் (1 p.m.) உணரவேண்டுமென்றால் ஒவ்வொரு வட்டார வளர்ச்சித் திட்டத்திற்கும் ஒரு திட்டம் தயார் செய்து அதை வெளியிட்டு ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளும்படிச் செய்தால் தான் மக்களை திட்டங்களின் பின்னால் கொண்டு செல்ல முடியும். திட்டங்களுக்காக பத்திரிகைகளை நாம் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பத்திரிகைகள் இருந்தால்தான் திட்டங்கள் நல்லமுறையில் நிறைவேற முடியும். ஆகவே எல்லாப் பத்திரிகைகளும், திட்டத்திற்காக அவர்களுக்கு ஏதாவது ஒரு ஊதியம் ஏற்பாடு செய்து பத்திரிகைகளில் ஒரு பக்கம் அல்லது தினசரி இரண்டு "காலம்ஸ்" திட்டத்தைப் பற்றி வெளியிடவேண்டுமென்று விதியை சர்க்கார் ஏற்படுத்தினால் திட்டங்கள் நல்லமுறையில் வெற்றிபெற அவை மிக உதவியாகயிருக்கும். கிராம மக்களும் திட்டங்களைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டும் . எலிமெண்டரி ஸ்கூல்கள், கிராம அதிகாரிகள் இவர்கள் மூலம் திட்டங்களை எடுத்துச் சென்று பரப்ப அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பின்னர், ஜில்லாக்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள் மேல் போய்க் கொண்டேயிருக்கிறது. அதைத் தடுக்க முடியவில்லை. ஆக, ஜில்லாக்களிடையே ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்காமல் பாலன்ஸ்ட் முறையில், சம சந்தர்ப்பம் அளிக்கும் முறையில் நமது திட்டங்களும் செயலும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் தேசத்திலுள்ள அனைவரும் பொருளாதார அபிவிருத்தியடைய முடியும். அப்படியின்றி, ஒரு ஜில்லா உயர்ந்து, மற்றொரு ஜில்லா தாழ்ந்த நிலையில் இருக்கிறது என்றால், வளர்ச்சிக் குறைவாக உள்ள ஜில்லா எந்த முறையில் அமைந்திருக்கிறது என்று பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் அதை எந்த முறையில் அபிவிருத்தி செய்வது என்பதற்கு வேண்டிய வழிவகைகள் வகுக்க வேண்டும். கவர்னர் அவர்கள் உரையில், தொழில்கள் பரவலான முறையில் அமைய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஜில்லாக்களிடையே பரவலாக காரியங்கள் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். வட ஆற்காடு ஜில்லா எந்த விதமான வாய்ப்புமின்றி மிக வறண்ட

[Sri A. E. Chandrasekhara Nayagar] [10th August 1960]

ஜில்லாவாகயிருக்கிறது. ஒன்று குறிப்பாக தெரிவிக்க விரும்பு கிறேன். நீர்ப்பாசனத்திற்காக ஐந்து ஏக்கருக்கு ஒரு கிணறு வீதம் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று ஒரு திட்டம் வகுக்க வேண்டும். அதை, சர்க்காரே எடுத்து மான்யம் கொடுத்து நிலக்காரனிடமிருந்து வசூல் செய்தாலும் பரவாயில்லை. தரை மட்டத்திற்கு கீழுள்ள ஜலம் வட ஆற்காடு ஜில்லாவில் அதிக மாகயிருக்கிறது. ஆனால் அதை பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் வட ஆற்காடு ஜில்லாவில் இல்லை. அதை ஏற்படுத்திக் கொள்ள ஐந்து ஏக்கருக்கு ஒரு கிணறு கண்டிப்பாக இருக்கவேண்டுமென்று ஏற்படுத்தி, லிப்ட் இரிகேஷன் வசதி செய்து, காம்ப்ரிஹென்ஸீவ் ஸ்கீம் ஒன்றை பரீட்சார்த்தமாக தயார் செய்து அதை அமுலுக்கு கொண்டு வந்தால் விவசாயத்தில் தஞ்சாவூருக்கு அடுத்தபடியாகயிருக்கும் வட ஆற்காடு ஜில்லா சிறந்த முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்க உதவியாக இருக்கும். பின்னர் வருங்கால வளர்ச்சிக்கு கிருஷ்ணா, கோதாவரி ஆற்றுத் தண்ணீரினால் வட ஆற்காடு செங்கற்பட்டு போன்றவிடங்கள் பயன் அடையச் செய்யும் படியான திட்டத்தையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) மேலும் வட ஆற்காடு ஜில்லாவில் உள்ள காட்டு வளத்தையும் பெருக்கி அதையும் பயன்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய திட்டங்கள் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI: சட்டமன்ற உப தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் மூன்று தினங்களாக நடைபெறக் கூடிய கவர்னர் அவர்கள் உரையின் மீது நானும் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஆளும் கட்சியைச் சார்ந்த கொறடா அவர்களும் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் சரணாகதியாகி விட்டார்கள், அவர்கள் வெற்றி விழா கொண்டாடுவதற்கு லாயக்கில்லை என்று கூட இந்த மன்றத்தில் பேசினார்கள். ஆனால் ஒன்றை நான் இந்த சட்டமன்றத்தில் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். திராவிட முன்னேற்றக்கழகம் கண்யமான முறையில் நடைபெறக் கூடிய ஒரு கட்சியாக இருப்பதால் பெரும் தலைவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் உறுதிமொழி தந்த காரணத்தினால் சென்னை மாநிலத்திற்கு வந்திருக்கக் கூடிய ஜனாதிபதி அவர்களுக்கு கறுப்புக் கொடி காட்டக் கூடிய நிகழ்ச்சியை நிறுத்தி விட்டோம். ஆனால் இன்றுள்ள அமைச்சரவையும், அதே போல் ஆளும் கட்சியிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வேண்டுமானால் கறுப்புக் கொடி காட்டிக் கொள்ளட்டும் என்று சொன்னால் ஜனாதிபதி அவர்கள் 16-ம் தேதி வரையில் இங்கு இருக்கிறார்கள், நாங்களும் அதைக் காட்ட தயாராயிருக்கிறோம் என்பதை இந்தச் சட்டமன்றத்தின் முன்னால் எடுத்துச் சொல்ல ஆசைப் படுகிறேன். நாங்கள் வெற்றி விழா கொண்டாடினோமா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் சைனா உள்ளே புகுந்து, இந்திய ராணுவத்தினர் 17 பேர் இறந்து விட்டார்கள்



10th August 1960] [Sri S. M. Annamalai]

என்று சைனாக்காரன் சொல்லுகிறான், ஒன்பது பேர்கள் இறந்த தாக இவர்கள் கூறுகிறார்கள். இந்தப் புள்ளி விவரமே தெரியாது, அதில் வெற்றி பெற முடியாதிருக்கிறது இக்கட்சி. பாகிஸ்தான் நிலை இன்னும் முடிவு பெறாமல் இருக்கிறது. போர்ச்சுகல்காரன் இந்நாட்டிலேயே சில பகுதியை இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறான், ஏறத்தாழ 13 ஆண்டுகளாகியும் கூட. இவற்றிற்கு வெற்றி விழா கொண்டாடாமல் இருக்கும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எங்களைப் பார்த்து நீங்கள் வெற்றி விழாக் கொண்டாடாது சரணாகதி அடைந்து விட்டீர்களே என்று சொல்லுவது எவ்வளவு பொறுத்தமற்ற தாகும். மறுமுறை இங்கு சொல்கிறேன். ஆளும் கட்சியும், அமைச்சரவையும் வேண்டுமானால் நீங்கள் கறுப்புக் கொடி காட்டுங்கள் என்று சொல்லுவார்களானால் நாளைக்கே எங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தன் செயல் குழுவைக் கூட்டி அதற்குண்டான முடிவை எடுத்து 16-ம் தேதி ஜனாதிபதி இம்மாநிலத்தை விட்டு வெளியே செல்வதற்கு முன்னர் கறுப்புக் கொடி காட்ட நாங்கள் தயாராயிருக்கிறோம் என்று இந்த சட்ட மன்றத்தின் முன்னால் மீண்டும் எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன்.

கவர்னர் உரையைப் படித்துப் பார்க்கும் போது அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், எல்லா திட்டங்களும் நிறைவேறி விட்டன; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 152 கோடி ரூபாய்க்கு செலவு செய்கிறோம் என்று சொல்லி 181 கோடிக்கு செலவழித்திருக்கிறோம், சில திட்டங்கள் வெற்றி கரமாக நடைபெற்றுவிட்டன. சில திட்டங்கள் அளவிற்கு மேல் நடைபெற்று விட்டன என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயத்துறையை எடுத்துக் கொண்டால் இவர்கள் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட முடிவிற்குள் 12.79 லட்சம் டன் அளவு உணவு உற்பத்தியைப் பெருக்குவோம் என்று டார்ஜெட் கொடுத்தார்கள். அந்தத் திட்டம் நிறைவேறிற்றா? அதற்கு கவர்னர் அவர்களே சொல்லுகிறார்கள், பத்து லட்சம் டன்தான் எங்களால் உற்பத்தி செய்ய முடிந்தது என்று உரையில் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், 152 கோடிக்குப் பதிலாக 181 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம் என்கிறார்கள். புள்ளிவிவரத்தில் வேண்டுமானால் பணத்தில் இவ்வளவு காட்டலாமே தவிர, வேண்டுமானால் இந்த மாநிலத்தில் கள்ள நோட்டு அச்சடிப்பது உள்பட 200 கோடிக்கு மேல் செலவு செய்திருந்தாலும் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட முடிவிற்குள் 12.73 லட்சம் டன் உணவு தான்யத்தை உற்பத்தி செய்வோம் என்று சொல்லிய இந்த சர்க்கார் திட்டமிட்டபடி உணவு தான்ய உற்பத்தியை செய்தார்களா என்றால் கவர்னர் அவர்களே சொல்லுகிறார்கள் 10 லட்சம் டன்தான் முடிந்தது என்று. ஏன் இந்நிலை ஏற்பட்டது? விளாங்கு என்று சொல்வார்கள், அப்படி பாம்பு போல் ஒன்று உண்டு. பாம்பைக் கண்டால் அது தலையைக் காண்பிக்கும், அதே சமயத்தில் மீனைக் கண்டால் வாலைக் காண்பிக்கும். அப்படிப் பாம்பைக் கண்டால் தலை, மீனைக் கண்டால் வால் என்று காண்பிக்கும் விளாங்குக்

[Sri S. M. Annamalai] [10th August 1960

கொள்கையை இந்தச் சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கிறது. மிராசுதார்களைப் பார்த்து, உங்களுக்காக நல்ல கொள்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறோம், ஆகவே நீங்கள் பயப்படாதீர்கள். நாங்கள் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்தாலும் உங்களை அது அதிகமாகப் பாதிக்காது என்று மிராசுதார்களைப் பார்த்து சொல்கிறீர்கள். அதே போல் ஏழை உழவர்கள், நிலச் சீர்திருத்தச் சட்டம் வருகிறது, ஆகவே நமக்கு அதனால் பலன் உண்டு என்று சர்க்காரை நம்பிக் கொண்டிருக்கும் நிலைமையில் இவர்களைப் பார்த்து உங்களுக்காக நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். பாம்பிற்கு தலையையும் மீனிற்கு வாலையும் காட்டும் விளாங்கைப் போல மிராசுதார்களைப் பார்த்து, நீங்கள் ஆறுதல் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு, அதேபோல் உழவர்களைப் பார்த்தும் நீங்களும் ஆறுதல் கொள்ளுங்கள் உங்களுக்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது இந்த சர்க்கார். ஆக, இந்த சர்க்காருக்கு திட்டவட்டமான கொள்கை கிடையாது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தை எடுத்துக் கொண்டாலும் திட்டவட்டமான கொள்கை கிடையாது. பல சட்டங்கள் இந்த சட்ட மன்றத்தில் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. நியாயவாரச் சட்டம், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், அதே போல் குத்தகை பயிரிடுவோர் பாதுகாப்புச் சட்டம் இது போன்ற பல சட்டங்கள் இந்த மன்றத்தில் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. இந்தச் சட்டங்கள் உண்மையில் செயல்படுகிறதா என்றால் செயல்படவில்லை. குறிப்பாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு சில விவசாயிகள், எங்களுக்கு சட்டப்படி கிடைக்க வேண்டியவை கிடைக்கவில்லை, எங்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டால், உடனே எந்தப் போலீஸ் தோழர்களை பாராட்டுகிறீர்களோ அதே போலீஸை ஏவி அவர்களை அடக்க விடுகிறீர்கள்.

ஆகையினால் விவசாயிகளிடமிருந்து அதிகமான அளவுக்கு வாரம் வாங்கும் பகுதிகளில் போதுமான சட்டம் இருந்தும், உண்மையிலேயே அதனால் எந்த விதமான பலனும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. பிற மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் இம்மாதிரியான சட்டங்கள் இருக்கின்றதா என்று கேட்கக் கூடிய அளவில் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. சமீபத்தில்கூட திட்ட கமிஷன் இந்த மாநிலத்தை கேட்டிருக்கிறார்கள், இது வரை நிறைவேற்றிய திட்டங்களில், முக்கியமாக நிலச் சீர்திருத்தச் சட்டம் எந்த அளவுக்கு இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்கின்ற புள்ளிவிவரங்களை தரும்படியாகச் சர்க்காரைத் திட்டக் கமிஷன் கேட்டிருப்பதாக நாங்கள் அறிகிறோம். இந்த மாநில சர்க்கார் திட்டக் கமிஷனுக்கு புள்ளி விவரங்களை அறிவிக்கின்ற நேரத்தில் இந்த மாநிலத்தில் நடைபெறுகின்ற சட்டமானது எந்த முறையில் நடத்தப்படுகிறது என்கின்ற உண்மையான விவரங்களைக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கின்ற பொழுது இதைப் பற்றி சரியான விதத்தில் விசாரணை செய்வதற்காக ஒரு கமிட்டியை நியமித்து, அல்லது ஒவ்வொரு பஞ்சாயத்துக் கவுன்சில் வாரியாக ஆங்காங்கு சிறு சிறு கமிட்டிகள் நியமித்து போட்டிருக்கின்ற சட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் செயல்படுகின்றதா என்பதை ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



10th August 1960] [Sri S. M. Annamalai]

அடுத்தபடியாக, கைத்தறித்துணிகளைப் பொறுத்த வரையில் முன்பு கொடுத்த ரிபேட் இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கிறது. அதோடு பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்த துணிகளின் அளவும் குறைந்துகொண்டு வருகின்றன. ஆகவே கைத்தறியாளர்களிடையே கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளாவது கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருப்பார்கள் என்று மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் இதைப் பற்றி ஒரு வார்த்தை கூட அதில் இல்லையென்பதை கூறி என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri P. G. KARUTHIRUMAN: பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் பேசியது போல் சமீபத்தில் எங்களுடைய தூண்டுதலின் பேரில்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது, என்றும் அதாவது நேருஜியும் இந்த அமைச்சரவையும் கொடுத்த வாக்குறுதியின் பேரில்தான் கைவிடப்பட்டது என்றும், மக்களிடையே சொல்லி தப்பித்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவ்விதம் நாங்கள் யாரும் தூண்டவில்லை. ஆகவே இம்மாதிரியான விஷயங்களில் மட்டுமல்ல எப்போதுமே பெருந்தன்மையோடு நடந்துகொள்ள வேண்டும் என்று உங்கள் மூலமாக அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

* Sri M. KANDASAMY PADAYACHI: சட்டமன்ற உப தலைவர் அவர்களே, நமது மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது அரசாங்கம் எவ்வளவோ திட்டங்கள் போட்டிருந்தும்கூட, நமது ஊழியர்களுடைய சம்பளங்கள் எவ்வளவோ அதிகப்படுத்தி கொடுத்திருந்தும் அவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்க முன் வந்தார்கள். திட்டத்திலே எங்களுக்குப் போதிய ஊதியம் கிடைக்கவில்லை, அதிலும் சென்னை மாகாணத்தில் அதிகச் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள், அதைப் போன்று மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்ற முறையில் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தார்கள், ஏதோ அரசாங்கம் நல்ல முறைகளை எல்லாம் கையாண்டதின் காரணமாக வேலை நிறுத்தத்தை கைவிட்டு விட்டார்கள். விலைவாசி அதிகமாய் இருக்கின்ற காரணத்தினால் எங்கள் ஊதியத்தையும் அதிகப்படுத்த வேண்டும் என்று அவர்கள் காரணம் சொன்னார்கள். உண்மையில் கவர்னர் பெருமான் அவர்கள் தங்களுடைய உரையில், பருவ மழை சரியாகப் பெய்யவில்லை என்றும், அதன் காரணமாக உணவு உற்பத்தி போதிய அளவுக்கு அதிகரிக்கவில்லை என்றும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே மத்திய தர விவசாயிகளுக்கு பயிரிடுவதில் எத்தகைய லாபமும் இருக்கிறதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு

வேண்டிய வசதிகள் எல்லாம் கிடைக்கின்றதா என்பதையும் எதிர்க் கட்சி அன்பர்கள் பார்க்க வேண்டும். சமீபத்தில் பருவ மழை பெய்யாததின் காரணமாக பெரிய நீர்த் தேக்கங்களில் எல்லாம் மேட்டூர், பெரியாறு போன்ற நீர் தேக்கங்களில் எல்லாம் நீர் மட்டம் போதிய அளவுக்கு வரவில்லை என்பதை நாம் பார்க்கிறோம். இம்மாதிரி பருவ மழை சரியான சமயத்தில் பெய்யாத காரணத்தினால் ஏரி குளங்களில் எல்லாம் போதிய அளவு தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் காய்ந்த பூமிகளில் எல்லாம் மணிலா, கம்பு, எல்லாம் குறித்த காலத்தில் விளை வெடுக்க முடியாமல் போய்விட்டது. இவ்விதம் கஷ்டங்கள் எவ்வளவோ இருக்கின்றன. இங்கு கனம் அம்மையார் ஒருவர் குறிப்பிட்டது போல் ஓர் ஏருக்கு (கலப்பை) 4 ரூபாய் கொடுக்க வேண்டும். ஒரு தொழிலாளியை விவசாயத் தொழிலுக்கு அமர்த்த வேண்டுமானால் தினக்கூலி, $1\frac{1}{2}$ ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதிலும் முன் காலம் போல் அல்ல, எல்லா இடங்களிலும் சங்கு (ஸைரன்) ஒலிக்கிறது. அதன் சப்தம் கேட்டவுடன் வேலையிலிருந்து போய்விடுவார்கள். அவர்களுடைய சம்பளங்கள் எல்லாம் உயர்ந்து கொண்டே இருக்கிறது. அதே போன்றுதான், கலப்பை, மண்வெட்டி போன்றவைகளுக்கும் விலைகள் எல்லாம் அதிகமான அளவில் கூடிக்கொண்டேயிருக்கிறது. முன்னால் இயற்கையாக தழை உரங்கள் எல்லாம் அதிகமான அளவில் கிடைத்துக் கொண்டிருந்தன. இப்போது காடுகள் எல்லாம் போய்விட்டன. இதன் காரணமாகவே போதிய அளவு தழை உரம் கிடைப்பதில்லை. இப்போது எல்லோருமே ரசாயன உரத்தைத்தான் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கவேண்டியிருக்கிறது. ஒரு மூட்டை நெல் 25 ரூபாய் என்றால் ஒரு மூட்டை உரத்திற்கு 30 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. மேலும் பருவ மழை காலாகாலத்தில் பெய்யாவிட்டால் பயிர்கள் எல்லாம் நாசமாய் போய்விடுகிறது. இன்ஷூரன்ஸ் திட்டம் எதற்கெல்லாமோ இருக்கிறது. அப்படியானால் பயிர்களுக்கு மட்டும் ஏன் இந்தத் திட்டத்தைக் கொண்டுவரக் கூடாது என்று கேட்கிறேன். 2,000, 3,000 ரூபாய் செலவு செய்து பயிரிட்ட பிறகு, இம்மாதிரி நஷ்டங்கள் ஏற்பட்டு விட்டால் அரசாங்கம் அதற்கு ஏதாவது உதவி செய்தாக வேண்டும். சாதாரணமாக ஆரம்பத்தில் பயிரேற்றிவிட்ட உடனேயே அந்தந்த மணியக்காரரோ அல்லது கர்ணமோ அதற்கு வரி வசூலிப்பதற்கு மாதூல் எழுதிவிடுகிறார்கள். இதோடு அக்ரிகல்ச்சரல் இன்கம் டாக்ஸை பொறுத்தவரையில் ஏதோ $12\frac{1}{2}$ ஏக்கர்களுக்கு மேல் இருந்தால்தான் போட வேண்டும் என்று சொல்லப் பட்டிருப்பதாக தெரிகிறது. இவ்விதம் டாக்ஸ் போடுவதால் ஒன்றுமில்லை. ஆனால் அவர்களுக்கு வேண்டிய எல்லா வச்திகளையும் செய்து கொடுத்துவிட்டு இம்மாதிரி வரிகளைப் போட்டால், உண்மையில் அதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

அதோடு மட்டுமல்ல. நெய்வேலித் திட்டத்திலே 96 கோடி ரூபாயில் அதோடு சேர்த்து பல நல்ல திட்டங்களைச் செய்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த





விஷயம். கவர்னர் உரையிலே பல பகுதிகளில் தொழிற் சாலைகள் ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சியில் ஒரு விமான நிலையம் கட்டப்பட்டு இப்போது அது ஒரு காடாக ஆகியிருக்கிறது. அந்த இடம் நெய்வேலிக்குச் சமீபத்தில் இருப்பதால், அங்கு நல்ல திட்டங்கள் வருவதால் அந்த விமான நிலையத்தில் தொழிற்சாலை திறந்தால் ரொம்பவும் வசதியாக இருக்கும் சேலம் ஜில்லாவிலே உருக்குத் தொழிற்சாலை வரப்போகிறது . எங்கள் பகுதியிலுள்ள விவசாய மக்களுக்கு உதவியாக எங்கள் பகுதியில் விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்யக்கூடிய அளவில் சேலம் ஜில்லா உருக்குத் தொழிற்சாலையின் கிளையையாவது எற்படுத்தலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மின்சாரத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலம் முன் போக்கில் போய்க்கொண்டிருக்கிறது. பத்து ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள். எங்கள் பக்கத்தில் கிணற்று நீரை இறைத்துத்தான் பயிர் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கு மின்சாரம் இருந்தால் நலமாக இருக்கும். பிளாக்கிலே கேட்டால் 100 சதவீதம் மின்சாரம் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்கள் மொத்தத் தொகையையும் கொடுக்க சக்தியில்லாமல் இருக்கிறார்கள். வட்டார வளர்ச்சிப் பகுதியிலே மின்சாரத்தை விஸ்தரித்தால் விவசாய உற்பத்தி ஏற்படும்.

அடுத்தப்படியாக நமது மாநிலத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் வருகின்றன. இது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் மக்களாட்சியில் ஜனநாயக ரீதியில் நிறைவேற்றப் பட்டால் மக்களுக்கு வேண்டிய திட்டங்களை அநேகமாகச் செய்துகொள்ள முடியும். அதிலே கூட வட்டார வளர்ச்சியில் செய்து கொண்டுவரும் திட்டத்திலே முக்கியமாக 50 சதவீதம் கொடுக்க வசதியில்லாத இடங்களில் டோக்கனை வாங்கிக் கொண்டோ அல்லது 25 சதவீதமாவது வாங்கிக்கொண்டோ கிணறு வெட்ட, ரோடு போட, பள்ளி வைக்க ஏற்பாடு செய்து நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory rules and orders.

93. *Notification issued with G.O. Ms. No.* 2215, *Revenue, dated* 11*th May* 1960, *under the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 . [*Laid on the table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act XXII of* 1959).]

[10th August 1960

94. *Notification issued with G.O. Ms. No. 1081, L.A., dated 25th June 1960, extending the term of office of the members of Santhiyur Panchayat (Thanjavur district) under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1960. [Laid on the table of the House under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950).]*

95. *Notification issued with G.O. Ms. No. 1076, L.A., dated 25th June 1960, extending the term of office of members of Andamullipallam Panchayat (South Arcot district) under section 10 (1) of the Madras Village Panchayat Act, 1950. [Laid on the table of the House under section 10 (1) of the Madras Village Panchayat Act, 1950 (Madras Act X of 1950).]*

96. *Notification issued with G.O. Ms. No. 1072, L.A., dated 25th June 1960, extending the term of office of members of Veedividangan Panchayat (Thanjavoor district) under section 10 (1) of the Madras Village Panchayat Act, 1950. [Laid on the table of the House under section 10 (1) of the Madras Village Panchayat Act, 1950 (Madras Act X of 1950).]*

97. *Notification issued with G.O. Ms. No. 1077, L.A., dated 25th June 1960, extending the term of office of members of Minjur Panchayat (Chingleput district) under section 10 (1) of the Madras Village Panchayat Act, 1950. [Laid on the table of the House under section 10 (1) of the Madras Village Panchayat Act, 1950 (Madras Act X of 1950).]*

98. *Notification issued with G.O. Ms. No. 1075, L.A., dated 25th June 1950, extending the term of office of members of Andanapettai Panchayat (Thanjavur district) under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1950. [Laid on the table of the house under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950).]*

99. *Notification issued with G.O. Ms. No. 1079, L.A., dated 25th June 1960, extending the term of office of the members of Tirumangalam and Santhavelur Panchayats (Chingleput district) under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1950. [Laid on the table of the House under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950).]*

100. *Notification issued with G.O. Ms. No. 1965, Revenue, dated 21st April 1960, reducing from 3 per cent to 1 per cent with effect on and from 1st April 1960, the tax payable on the last purchasing in the State of Wattle bark including dying and tanning materials under section 3 (2) of the Madras General Sales Tax Act, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*



10th August 1960]

101. *Notification issued with G.O. Ms. No. 1603, Home, dated 31st May 1960 regarding the revision of forms prescribed for refund under Madras Court Fees and Suits Valuation Act, 1955 and Civil Procedure Code. [Laid on the table of the House under section 82 (2) of the Madras Court Fees and Suits Valuation Act, 1955 (Madras Act XIV of 1955).]*

**B: Reports, Notifications and other papers.**

39. Amendment to rule 5 of the Madras Livestock Improvement Rules, 1942, issued in G.O. Ms. No. 1533, Food and Agriculture, dated 26th April 1960 under section 20 of the Madras Livestock Improvement Act, 1940 (Madras Act XV of 1940).

# APPENDIX.

[Vide answer to clauses (a) and (b) of starred question No. 68 asked by Sri T. S. Ramaswamy at the meeting of the Legislative Assembly held on 10th August 1960, page 272 supra.]

(a) *Maximum yields per acre in crop yield competitions held during the year 1958-59.*

| Serial number and district (1) | Paddy. (2) LB. | Cholam. (3) LB. | Potato. (4) LB. | Groundnut. (5) LB. |
|---|---|---|---|---|
| 1 Chingleput | 7,625 | .. | .. | 1,900 |
| 2 North Arcot | 7,790 | .. | .. | 2,983 |
| 3 South Arcot | 7,255 | .. | .. | 1,800 |
| 4 Thanjavur | 8,105 | .. | .. | .. |
| 5 Tiruchirappalli | 7,810 | .. | .. | 1,990 |
| 6 Madurai | 7,990 | .. | .. | 3,575 |
| 7 Ramanathapuram | 6,850 | .. | .. | .. |
| 8 Tirunelveli | 8,300 | .. | .. | .. |
| 9 Kanyakumari | 7,500 | .. | .. | .. |
| 10 Salem | 7,995 | .. | .. | 2,919 |
| 11 Coimbatore | 7,090 | 6,040 | .. | 4,980 |
| 12 The Nilgiris | .. | .. | 14,800 | .. |

* Crop competitions for cumbu crops were not held in the year 1958-59.

(b) *Maximum yields of crops per acre in State Seed Farms during 1958-59.*

| Serial number and name of the State Seed Farm. (1) | Paddy. (2) LB. | Cholam. (3) LB. | Potato. (4) LB. | Groundnut. (5) LB. |
|---|---|---|---|---|
| 1. *South Arcot district*— | | | | |
| Sethiathope | 1,816 | .. | .. | .. |
| Neyveli | 1,988 | .. | .. | .. |
| Vellapakkam | 2,446 | .. | .. | 263 |
| Vandayampattu | 2,848 | .. | .. | .. |
| Vadakkanandal | 2,717 | .. | .. | .. |
| Kakuppam | 2,407 | .. | .. | 297 |
| Vanur | 2,573 | .. | .. | .. |
| 2. *Thanjavur district*— | | | | |
| Kanchikudikadu | 2,301 | .. | .. | .. |
| Orathur | 2,572 | .. | .. | .. |
| Deevambalpattinam | 2,847 | .. | .. | .. |
| Namasivayapuram | 2,451 | .. | .. | .. |
| Nedumbalam | 2,898 | .. | .. | .. |
| Veppangulam | .. | .. | .. | 120 |
| Keeranthi | 2,257 | .. | .. | .. |
| Mahadanapuram | 2,217 | .. | .. | .. |
| Naganangalam | 2,148 | .. | .. | .. |
| Tirukadayur | 1,922 | .. | .. | .. |
| Kondathur | 1,890 | .. | .. | .. |
| Marudanallur | 1,596 | .. | .. | .. |
| Sakottai | 1,862 | .. | .. | .. |





(b) *Maximum yields of crops per acre in State Seed Farms during 1958—59—cont.*

| Serial number and name of the State Seed Farm. (1) | Paddy. (2) LB. | Cholam. (3) LB. | Potato. (4) LB. | Ground-nut. (5) LB. |
|---|---|---|---|---|
| 3. *Coimbatore district*— | | | | |
| Bhavani | 2,900 | .. | .. | .. |
| Sennakpalayam | 2,022 | 1,060 | .. | .. |
| Pungalur | .. | 383 | .. | .. |
| Kannampalayam | 1,608 | 1,951 | .. | .. |
| Sedimuthar | .. | 130 | .. | 491 |
| 4. *Nilgiris*— | | | | |
| Kuruthukuly | .. | .. | 2,829 | .. |
| Kakathope | . | .. | 11,673 | .. |
| Thumanathy | .. | .. | 10,512 | .. |
| Killur | 1,147 | .. | 1,896 | .. |
| Colgrain | .. | .. | 8,021 | .. |
| 5. *Kanyakumari*— | | | | |
| Thirupathisaram | 2,088 | .. | .. | .. |
| 6. *Tiruchirapplli district*— | | | | |
| Manachanallur | 2,348 | .. | .. | .. |
| Marudur | 2,449 | .. | .. | .. |
| Vengaikurichi | 1,531 | 1,050 | .. | 755 |
| Thirukampuliyur | 1,387 | .. | .. | 120 |
| 7. *Chingleput division*— | | | | |
| Uthukottai | 1,527 | .. | .. | 796 |
| Modaiyur | 1,892 | .. | .. | 59 |
| Sirukaveripakkam | 578 | .. | .. | 484 |
| 8. *North Arcot district*— | | | | |
| Athiyandal | 3,043 | .. | .. | 994 |
| Marudadu | 2,877 | .. | .. | 1,260 |
| Kilnarma | 2,152 | .. | .. | .. |
| 9. *Madurai district*— | | | | |
| Kappalur | 3,294 | .. | .. | 392 |
| Iyalur | 1,686 | .. | .. | 771 |
| 10. *Tirunelveli district*— | | | | |
| Karaiyiruppu | 3,318 | .. | .. | .. |
| 11. *Ramanathapuram district*— | | | | |
| Pullur | 277 | .. | .. | .. |
| Devadanam | 2,666 | .. | .. | .. |
| 12. *Salem district*— | | | | |
| Nachiampatty | 1,914 | .. | .. | .. |
| Papparapatty | 3,112 | 356 | .. | .. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday the 11th August 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Transfer of certain villages of the Polur taluk*

* 91. *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டத்தில் போளூர் தாலுகாவிலிருந்து எந்த கிராமங்களை ஆரணி தாலுகாவுக்கும், ஆரணி தாலுகாவிலிருந்து எந்த கிராமங்களை போளூர் தாலுகாவிற்கும் மாற்ற உத்தேசம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : There is no proposal to transfer any village from Polur taluk to Arni taluk, but a proposal to transfer 21 villages of Arni taluk to Polur taluk is under the consideration of the Collector of North Arcot.

SRI S. M. ANNAMALAI : அப்படி சில கிராமங்களை மாற்றுகின்றபோது மக்கள் தொகை அடிப்படையில் மாற்றப்படுகின்றதா ? அவ்வாறு மாற்றும்போது அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர்களைக் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முக்கியமாக நிர்வாகத்திற்குச் சௌகரியமாக இருக்கும் முறையிலே இந்த மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இந்த வருஷமும், 1961 மார்ச் மாதம் வரையிலும் கவனிக்க முடியாது. ஏனென்றால் சென்சஸ் எடுக்கிறார்கள். அதுவரைக்கும் இது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : இந்தக் கிராமங்களை மாற்றக் கூடாது என்று பஞ்சாயத்து போர்டிடம் இருந்து ஆட்சேபனை வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அந்தப் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட்டையும், அந்தப் பகுதி சட்ட மன்ற உறுப்பினரையும் கலந்து ஆலோசித்து முடிவு எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கொடுத்த கேள்விக்குப் பதில் போளூர் தாலுகாவில் மாற்றம் இல்லையென்று சொல்லிவிட்டேன். நான் சொன்னது புதிது.

[11th August 1960

SRI V. SUBBIAH : நமது ராஜ்யத்திலே ஜமீன்தாரி ஒழிப்பிற்குப் பிறகு பல கிராமங்கள் குறிப்பிட்ட தாலுகாவிலிருந்து 40 மைல் தூரத்தில் இருக்கின்றன. அவற்றைச் சமீபத்தில் உள்ள தாலுகாவுடன் இணைக்க என்ன திட்டம் இருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி வட ஆற்காடு மாவட்டத்தைப் பொருத்தது. கனம் அங்கத்தினர் பொதுவாகக் கேட்பதால் தனியாகக் கேட்டால் பதில் அளிக்க முடியும்.

*Ship-building yard at Tuticorin*

*92. *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கொழும்பு திட்டப்படி, பிரிட்டனிலிருந்து வந்த நிபுணர் கோஷ்டி தூத்துக்குடி கப்பல் கட்டத் தகுதியான இடம் என்று சிபாரிசு செய்தார்களா ?

(ஆ) அப்படியானால், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No, Sir.

(ஆ) Does not arise.

*Figures of leaders on the postage stamps*

*93. *Q.*—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தபால் தலைகளிலே எந்தெந்தப் பெரியோர்களின் உருவங்களை வெளியிடப்பட வேண்டுமென்று சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள் ?

(ஆ) எந்தெந்த பெரியோர்களுடைய உருவப் படங்களை வெளியிட சர்க்கார் சம்மதித்திருக்கிறார்கள் ?

(இ) 1960-61-ம் வருஷத்திலே மத்திய சர்க்காரால் புதிதாக வெளியிடப்போகும் தபால் தலைகளிலே சென்னை சர்க்காரால் தெரிவிக்கபட்டிருக்கும் பெரியோர்களுடைய உருவங்கள் அச்சிடப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No recommendation has been made in this regard by this Government to the Central Government.

(*b*) & (*c*) Do not arise.

SRI P. G. MANICKAM : சென்ற வருஷம் நமது சென்னை அரசாங்கம் முயற்சி எடுத்ததன் காரணமாகத் திருவள்ளுவர் படமானது தபால் தலைகளில் பொறிக்கப்பட்டது. இந்த ஆண்டிலும் அதே போல் நம்முடைய நாட்டிலுள்ள பெரியோர்களின் படங்



11th August 1960]

களைத் தபால் தலைகளில் பொறிப்பதற்காக, நம்முடைய மாகாண அரசாங்கமானது மத்திய அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : சென்ற வருடம் திருவள்ளுவர் உருவப்படம் தபால் தலைகளில் வந்ததற்குக் காரணம் முழுக்க முழுக்க மத்திய அரசாங்கந்தான். அதற்காக நாம் ஒன்றும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை.

SRI N. R. THIAGARAJAN : திருவள்ளுவர் படம் வெளிவந்திருந்தாலும் அவருடைய படம் எப்படி இருக்கும், போட்டோ எடுக்கப்பட்டதா என்ற அபிப்பிராயங்கள் எல்லாம் இருக்கும். நமது காலத்தில் வாழ்ந்த கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணியம், வ.உ.சி. போன்றவர்களின் உருவப்படத்தைத் தபால் தலைகளில் வெளியிட நமது அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை எப்போதும் சிபாரிசு செய்யவில்லை. இது மத்திய அரசாங்கத்தினுடைய வரம்புக்குட்பட்டது. கனம் அங்கத்தினர் அவர்கள் மத்திய அரசாங்க மந்திரிக்கு எழுதினால் கண்டிப்பாகப் பரிசீலனை செய்வார்கள்.

*Bonus to Plantation Workers*

*94 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether employers and employees of plantations have represented to the Government to refer the bonus issue of 1959 to adjudication; and

(*b*) if so, the steps taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) A meeting of Planters and Unions was convened on 9th July 1960, in Madras. It was decided at the meeting to set up a Committee consisting of the representatives of Planters and Unions with the Commissioner of Labour as Chairman, to evolve a formula based on price and yield for the payment of bonus for 1959. The matter is being pursued.

SRI N. K. PALANISAMI : When there is dispute between workers and employers every year regarding the disbursement of bonus, may I know whether there is a proposal before Government to formulate some principle on which the bonus could be disbursed to workers every year?

THE HON. SRI R. VENKATARAMAN : That is the matter which is now being pursued.

*Family Planning*

* 95 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of men and women who have been sterilized under the Family Planning Scheme in the Madras City in 1958–59 and 1959–60?

THE HON. SRI M. A. MANICKAVELU: The number of men and women who underwent sterilization (Vasectomy and Salpingectomy) in Government Hospitals in the City during the years referred to are as follows:—

| | | | Men. | Women. |
|---|---|---|---|---|
| 1958 | ... | .. | 325 | 879 |
| 1959 | .. | .. | 436 | 855 |
| 1960 | ... | .. | 382 | 461 |

(Up to 30th May 1960)

SRI A. A. RASHEED: May I know whether Government are offering any inducement to both men and women who undergo this operation? If so, what is the amount that the Government give to them?

THE HON. SRI M. A. MANICKAVELU: Government are paying Rs. 30 for every case. This is to meet conveyance and loss of emoluments for one or two days on which they would not be able to attend to work immediately after the operation.

SRI A. A. RASHEED: May I know whether Government have received any complaints that unmarried girls and bachelors have been sterilized in some hospitals? If so, may I know whether there is any proposal before Government to stop such kind of sterilization?

THE HON. SRI M. A. MANICKAVELU: That cannot come under this scheme. In this scheme only women above 24 and men below 50 and only if they have three children and more will be operated. That is the rule. But if any sterilization takes place as suggested by the hon. Member, then it must be at their initiative.

SRI K. VINAYAKAM: Is the Hon. Minister aware of the fact that a local daily is carrying on an outright and scurrilous propaganda against this family planning? If so, may I know what steps Government have taken to put down such kind of anti-social elements?

THE HON. SRI M. A. MANICKAVELU: Government are making available to the public various methods of family planning and sterilization is one of them. With regard to non-sterilization methods I think even the Pope (I have read so in the papers) had no objection to non-surgical methods. If anybody wants sterilization it is done voluntarily.

SRI K. VINAYAKAM: Does this Government believe in this kind of propaganda directed against the present methods of family planning and if so may I know why Government should not take effective steps to check this anti-national propaganda carried on by some local daily indulging in this kind of scurrilous and anti-family planning propaganda?





THE HON. SRI M. A. MANICKAVELU: We are aware that certain papers are making anti-propaganda as it were. In due course that matter also may be looked into.

*Bicycle tax*

* 96 *Q.*—SRI M. P. SARATHI: கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் எத்தனை நகர மன்றங்கள் (Municipalities) சைக்கில் வரியை (Bicycle tax) ரத்து செய்ய அரசாங்க அனுமதியைக் கோரின?

(ஆ) எந்தெந்த நகர மன்றங்கள்?

(இ) அனுமதி வழங்கப்பட்டனவா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (அ) to (இ) During 1960, the municipal councils of seven towns, viz., Periakulam, Cuddalore, Dindigul, Thanjavur, Madurai, Tuticorin and Pudukkottai sought sanction for the abolition of cycle tax. Sanction was not accorded in any case.

SRI S. M. ANNAMALAI: ஸார், அப்படி "சாங்ஷன்" கொடுக்காமல் இருக்கக் காரணம் என்ன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இந்த வரியை குறைப்பதன் காரணமாக வேறு பல முன்னேற்ற வேலைகள் தடைப்படுகின்றன. அதிகமான அளவு முனிசிபாலிடிகள் இந்த வரியை ரத்து செய்து விட்டு அதற்கு ஈடான பணத்தை அரசாங்கம் தரவேண்டுமென்று கேட்டார்கள். அரசாங்கம் அதைக் கொடுக்க முடியாது. இந்த மாதிரி குறைந்த அளவில் போடும் வரி ஒருவரையும் பாதிக்காது..

SRI A. A. RASHEED: May I know, Sir, what is the amount of income these municipalities are getting by way of cycle tax?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: The income of these municipalities are as follows:—

| | | | | | | RS. |
|---|---|---|---|---|---|---|
| Periakulam | ... | ... | ... | ... | ... | 2,400 |
| Cuddalore | ... | ... | ... | ... | ... | 7,600 |
| Thanjavur | ... | ... | ... | ... | ... | 8,000 |
| Pudukkottai | ... | ... | ... | ... | ... | 6,200 |
| Tuticorin | ... | ... | ... | ... | ... | 9,790 |
| Tindivanam | ... | ... | ... | ... | ... | 7,000 |
| Salem | ... | ... | ... | ... | ... | 12,600 |

[11th August 1960

SRI N. MARUDACHALAM : சைக்கிள் வரியை எடுத்துவிட வேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பும்போது, அதன் மூலம் ஏற்கெனவே வந்து கொண்டிருந்த தொகையைச் சரிக்கட்டுவதற்கான உத்தேசங்களையும் தெரிவித்துத்தான் அனுமதி கோருவார்கள். கோவை முனிசிபாலிடியிலே சைக்கிள் வரியை ரத்து செய்யவும், அதை ஈடு செய்ய வேறு வரி போடவும் அனுமதி கோரி சர்க்காருக்குத் தீர்மானம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அங்கே சைக்கிள் வரியை ரத்து செய்ய ஏதாவது உத்தேசம் உண்டா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கோவையிலிருந்து அம்மாதிரி தீர்மானம் இன்னும் இங்கு வரவில்லை.

SRI V. SUBBIAH : நகரசபை ஏரியாக்களில் மட்டுமல்லாமல் மேஜர் பஞ்சாயத்துக்களிலும், மைனர் பஞ்சாயத்துக்களிலும்கூட இம்மாதிரி சைக்கிள் வரியை எடுத்துவிடவேண்டுமென்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்களா? அப்படியானால் எத்தனை பஞ்சாயத்துக்களிலிருந்து அம்மாதிரித் தீர்மானங்கள் வந்திருக்கின்றன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இக் கேள்வி, "1960-இல் எத்தனை நகர மன்றங்கள் சைக்கிள் வரியை ரத்து செய்ய அரசாங்க அனுமதியைக் கோரின?" என்பது. ஆகையால், நகர மன்றங்கள் பற்றிய பதிலைத் தயாரித்திருக்கிறேன். பஞ்சாயத்துக்களைப்பற்றித் தகவல் வேண்டுமானால், வேறு கேள்வி கேட்கவேண்டும்.

SRI S. M. ANNAMALAI : சைக்கிள் வரியை ரத்து செய்வதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை அந்தந்த நகராட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்வதாயிருந்தால், சர்க்கார் அனுமதி தருமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அனேகமாக நகராட்சிமன்றங்களின் வருமானம் குறைவாக இருக்கிறது. செலவினங்கள் அதிகப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதனால், இருக்கிற வரியை எடுத்துவிட்டு இன்னொரு வரியைப் போடுவதைவிட, இருப்பதை வைத்துக்கொள்வதே நலம் என்று நான் கருதுகிறேன்.

MR. SPEAKER : The Hon. the Minister for Works is not in Madras. I will take up his question No. 97 on his return.

*Auctioning of bamboo coups.*

* 98. *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏலம் விட்டுவந்த மூங்கில் காடுகளை ஆண்டிற்கு ஒரு முறை ஏலம் விடக் காரணம் என்ன?



11th August 1960]

(ஆ) இதனால் காடுகள் அழிக்கப்படுகின்றன என்பது உண்மையா?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) A paper[a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : மேஜைமீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையில், ஆண்டுக்கு ஆண்டு ஏலம் விடுவதால் சர்க்காருக்கு அதிக வருமானம் வருகிறபடியால், அப்படி ஏலம் விடப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ஆண்டுக்கு ஆண்டு ஏலம் விடுவதால் ஒரு வருஷ வளர்ச்சியடைந்த பிஞ்சு மரங்களை, பிற கூப்புகளுக்கும் சென்று வெட்டிவிடுகிறார்கள். அதனால், மூங்கில் காடுகள் அழிந்துகொண்டுவருவதால், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏலம் விடுகிற முறையை மறுபடியும் சர்க்கார் கொண்டு வரமுடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதெல்லாம் அனுபவத்திலே பார்த்துத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இதிலே வருமானம் அதிகம் வருவது மட்டுமல்ல; மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை ஏலத்திற்கு விட்டால், பெரிய கண்டிராக்டர்கள்தான் பணம் அதிகம் கட்டி, ஏலம் எடுக்க முடிகிறது. ஒவ்வொரு வருஷமும் ஏலத்திற்கு விட்டால் சாதாரண சிறிய கண்டிராக்டர்களும் ஏலம் எடுக்க முடிகிறது. இந்த இரண்டு காரணங்களுக்காகத்தான் அம்மாதிரி செய்யப்படுகிறது.

SRI S. M. ANNAMALAI : வருஷத்திற்கு ஒரு முறை ஏலம் விடுவதினால் அவர்கள் போட்டா போட்டியில் அதிகமான தொகைக்கு ஏலத்திற்கு எடுத்துவிடுகிறார்கள். நஷ்டம் ஏற்படுகிறது. அதனால், பிற கூப்புகளில் சென்று பிஞ்சு மூங்கில்களை வெட்டுகிறார்கள். பிஞ்சு மூங்கில்கள் வெட்டப்படாமல் அவைகளைப் பாதுகாப்பதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : மற்ற கூப்புகளில் சென்று எடுக்காமலிருக்க அரசாங்கம் கூடுமானவரையில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை எடுத்துக்கொள்ளும்.

*Purchase of 'Dead Stock' by the District Agricultural Officers*

* 99 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லா விவசாய இலாகா அதிகாரிகளின் வரம்புக்குட்பட்டு "Dead Stock" சாமான்கள் வாங்குவதானால், எவ்வளவு வரை வாங்கலாம்?

(ஆ) இது எப்போது எந்த ஆண்டில் போடப்பட்ட அதிகாரம்?

---

a Printed as appendix on page 470 infra.

[11th August 1960

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The District Agricultural Officers are empowered to purchase dead stock articles made in India up to a limit of Rs. 300 for experimental cultivation, demonstration and propaganda purposes.

(b) These powers were delegated for two years in August 1958 and extended for another one year in June 1960.

SRI V. K. KOTHANDARAMAN : பல ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வரம்புக்கு உட்பட்டிருக்கும் காரணத்தினால், இப்பொழுது விலைவாசி உயர்ந்திருக்கும் அளவுக்கு, அதை அதிகப்படுத்தக்கூடிய உத்தேசம் ஏதாவது உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதை உடனே அதிகப் படுத்துவதற்கு அவ்வளவு அவசியம் இல்லை.

*Women porters*

* 100 Q.—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் ரயில் பிரயாணிகள் பெட்டி, படுக்கை சாமான்களை தூக்கிச் செல்ல பெண் போர்டர்களுக்கு லைசென்ஸுகள் வழங்குவதுபற்றி மத்திய கவர்ன்மெண்டு நம் மாகாண சர்க்காரை கலந்தாலோசித்தார்களா ?

(ஆ) அப்படியானால் பெண் போர்டர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதுபற்றி எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

SRI P. G. MANICKAM : மற்ற ராஜ்யங்களில் பெண் போர்ட்டர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. என் நமது ராஜ்யத்திலும் அவ்வாறு பெண் போர்ட்டர்களை நியமிக்கக் கூடாது ? தனித்துப் பிரயாணம் செய்யும் பெண்களுடைய சாமான்களை எடுத்துச் செல்ல பெண் போர்ட்டர்கள் உதவியாக இருப்பார்கள் அல்லவா ? சர்க்கார் இந்த யோசனையைப்பற்றிக் கவனிப்பார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : மற்ற ராஜ்யங்களில் இருக்கும் நிலைமை எனக்குத் தெரியாது. ஆனால், நமது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இதுபோன்ற சிபார்சுகள் ஒன்றும் மத்திய அரசாங்கத்திற்குச் செய்யவில்லை.

SRI V. SANKARAN : பெண் போர்ட்டர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதினால் ஆண் போர்ட்டர்களுக்கு வேலை கிடைக்காது என்ற ஆபத்தை உணர்ந்து, அம்மாதிரி யோசனை ஏதாவது வந்தால், அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதில்லை என்று தீர்மானிக்குமா ?

MR. SPEAKER : It is only a suggestion.



11th August 1960]

SRI A. VEDARATHNAM : குஜராத் போன்ற மாகாணங்களில் எல்லாம் இப்பொழுது பெண் போர்ட்டர்களுக்கு லைசென்ஸ் கொடுத்து, பெரும்பாலும் பெண் போர்ட்டர்கள்தான் ரயில்வே நிலையங்களில் வேலை செய்கிறார்கள். அந்த முறையை இங்கும் அனுஷ்டிப்பதில் அரசாங்கத்திற்கு என்ன சிரமம் இருக்கிறது என்பதைத் தயவுசெய்து அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

THE HON. SRI V. RAMAIAH : குஜராத் மாகாணத்தில் இருக்கும் நிலை எனக்குத் தெரியாது என்று முன்பே சொல்லிவிட்டேன். ஆனால், நமது ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில், பெண்கள் கொண்டுவரும் பொருள்களை ஆண் போர்ட்டர்கள் அதிகக் கஷ்டமில்லாமல் தூக்கிக்கொண்டு போவதைப் பார்க்கின்றோம். ஆகையால், இதிலே ஒரு மாறுதல் செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

(There was noise due to the flight of a jet plane.)

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Members are being treated to the noise of a jet plane, Sir.

MR. SPEAKER : We are in a jet age.

*Minimum wages for Government Transport workers*

* 101 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any minimum wages have been fixed for the Motor Transport Workers in the Government Transport; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) No separate minimum wages have been fixed for the workers in the Madras State Transport Department. The minimum wages fixed by the Government for employment in public motor transport under the Minimum Wages Act, 1948 are applicable to the workers in the State Transport Department. In addition to this I may add that Pay Commission has now determined their wages and pay scales.

SRI N. K. PALANISAMI : May I know, Sir, when the Government direct the private industries to fix minimum wages to their workers, why the Government are refusing to fix minimum wages to their industrial employees?

THE HON. SRI R. VENKATARAMAN : I said that the minimum wages have been fixed for the public motor transport workers and it is applicable to the State Transport workers and also the wages and pay scales are higher than that

[11th August 1960

*Overhead ' Express way ' in the Poonamallee High Road*

* 102 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Traffic Development Committee has submitted its recommendations to the Government regarding the opening of an overhead ' Express way ' in the Poonamallee High Road; and

(*b*) if so, the decision taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Provision of an overhead express way is one of the suggestions that is under consideration of the committee preparing a plan for the development of traffic requirements of Madras City. The committee has not yet made any specific proposal for Government's consideration.

SRI A. A. RASHEED : May I know, Sir, whether the Government have any details of these recommendations and may I know the approximate expenditure for the construction of express highways?

THE HON. SRI V. RAMAIAH : I have already stated that the committee is considering and that they have not submitted any proposals yet.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know, Sir, whether the Hon. Minister will be pleased to state whether this road passes through Aminjikarai or St. Thomas Mount.

THE HON. SRI V. RAMAIAH : I have no information, Sir.

*Godowns for foodgrains*

* 103 *Q.*—SRI M. P. SARATHI : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) உணவுத் தானிய சேமிப்புக் கிடங்குகளைக் கட்டுவதற்கு உத்தேசம் உண்டா?

(ஆ) அப்படியானால், எங்கெங்கு எந்த அளவுக்குத் தானியங்கள் சேமிக்கத்தக்க வகையில் கட்டப்படும்?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

| | | |
|---|---|---|
| (*b*) | Madras City .. | 3 godowns (each of the size of 120′×50′ with a capacity of 770 tons). |
| | North Arcot District, Vellore. | 1 godown (of the size of 120′×50′ with a capacity of 770 tons). |
| | South Arcot District, Cuddalore. | 1 godown (of the size of 120′×50′ with a capacity of 770 tons). |
| | Madurai District, Dindigul and Madurai. | 2 godowns (each of the size of 120′×50′ with a capacity of 770 tons). |



11th August 1960]

SRI M. P. SARATHI : மற்ற ஜில்லாக்களிலும் தாலுகா தோறும் கிடங்குகள் கட்டினால் வியாபாரிகளுக்கு நல்ல வசதியாக இருக்கும் என்ற காரணத்தினால், அவைகளையெல்லாம் கட்ட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU : சர்க்காரிலேயே 21 கிடங்குகள் கட்டுவது என்ற ஏற்பாடு இருந்தது. தஞ்சாவூர், திருச்சி, சேலம், கோயமுத்தூர், மதுரை, வடாற்காடு ஜில்லாக்களில் கட்டவேண்டுமென்பதற்கு மத்திய சர்க்காருக்குத் தெரிவித்ததில், அவர்கள் இப்பொழுது ஒன்பது கிடங்குகள் கட்டுவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். பாக்கி 12 கிடங்குகள் கட்டுவதுபற்றி கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு கிடங்கு கட்டவும் நிறையச் செலவாகிறது. ஏதோ இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய்க்குள் ஒரு கிடங்கைக் கட்டிவிடலாம் என்பது அல்ல. ஒவ்வொரு கிடங்குக்கும் நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் செலவாகிறது.

SRI M. P. SARATHI : அதைக் கட்ட அதிகச் செலவானாலும், கட்டணம் வசூலிப்பது மூலமாக சர்க்காருக்கு வருமானம் வருகிறது. ஆகையால், அவைகளையெல்லாம் கட்ட சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : லாபம், சௌகரியம், அனுகூலம் இருக்கிறது என்பதனால்தான், ஒரு 'பேஸ்டு ப்ரோக்ராம்' படி கட்டப்படுகின்றன.

SRI A. VEDARATHNAM : மற்ற இடங்களைவிட தஞ்சை ஜில்லாவில் 'கோடவுன்கள்' மிகவும் அவசியமாக இருப்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா? இப்பொழுது அங்கு ஏதாவது கோடவுன்கள் இருக்கிறதா? இல்லையானால் அங்கு உடனடியாக 'கோடவுன்' ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா? முன்பெல்லாம் நெல்லை களத்திலேயே வைத்துக்கொண்டிருப்பார்கள். இப்பொழுது கம்யூனிஸ்டு தொந்தரவு அதிகமாகப் போய் விட்டதால் களத்தில் நெல் போட முடியாத நிலைமை, சேர் கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகையால் தஞ்சையில் 'கோடவுன்களை' அதிகரிப்பதற்கும், 'கோடவுன்' இல்லையென்றால் உடனடியாக ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதனால் தான் மற்ற ஜில்லாக்களில் ஒன்று, இரண்டு கோடவுன்கள் தஞ்சாவூரில் ஆறு கோடவுன்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : 'ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர்', சார். கம்யூனிஸ்டு தொல்லைகள் அதிகமாய் போய் விட்டன, ஆகையால் 'கோடவுன்கள்' கட்டவேண்டுமென்று அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அம்மாதிரி சொல்லுவது இந்தச் சபையிலுள்ள அங்கத்தினர்களை மாத்திரமல்ல, ஒரு இயக்கத்தையே இழிவு படுத்துவது போல் ஆகும். பெருந்தன்மை வாய்ந்த வயது முதிர்ந்த ஒரு பெரியவர் இம்மாதிரி சொல்லு

வதும், அதை சபாநாயகர் அனுமதிப்பது என்று சொன்னுல், எங்களுக்கும் தெரியும், அதே போல காங்கிரஸ் கட்சியைப்பற்றி மோசமாக நாங்களும் சொல்லலாம். ஆகையினுலே இதை தயவு செய்து அங்கத்தினர் வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER** : அது அவர்களுடைய அபிப்பிராயம். அந்த அபிப்பிராயத்தை நான் எப்படி நிறுத்த முடியும்? நீங்களும் உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லலாம். நீங்களும் கேள்வி கேளுங்கள்.

**SRI V. K. KOTHANDARAMAN** : அதை கனம் அங்கத்தினர் வாபஸ் வாங்கவேண்டும். நாங்களும் அதைப் போல வார்த்தைகளை உபயோகப்படுத்தலாமா ?

**SRI M. P. SARATHI** : கம்யூனிஸ்டுகள் தொந்தரவால் நெல்லைப் போடமுடியவில்லை என்று சொல்லுவது, கம்யூனிஸ்டுகள் கொள்ளை அடிக்கிறுர்கள் என்று குற்றச்சாட்டு சொல்வது போல் ஆகாதா ? வேறு அதற்கு என்ன பொருள் ?

**MR. SPEAKER** : அப்படி அவர்கள் சொல்லவில்லை. நீங்கள் சொல்லுகிறீர்கள். (சிரிப்பு.)

**SRI V. K. KOTHANDARAMAN** : கனம் அங்கத்தினர் வேதரத்னம் அவர்கள் மறைமுகமாகச் சொன்னதை ஸ்ரீ சாரதி அவர்கள் அர்த்தத்தோடு விளக்கிச் சொல்லுகிறுர்கள். ஆகையால் அதை கனம் அங்கத்தினர் ஸ்ரீ வேதரத்னம் அவர்கள் வாபஸ் வாங்கவேண்டுமென்று கனம் சபாநாயகர் அவர்கள் உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER** : அது 'அன்பார்லிமெண்டரி' என்று சொல்ல முடியாது. ஆகையால் அதை வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல்ல முடியாது. விதிகளை மீறிப் பேசினுல் அப்போது 'பாயிண்டு ஆப் ஆர்டர்' கொண்டுவந்தால், அதை நிறுத்தலாம்.

**SRI A. GOVINDASAMY** : தென் ஆற்காடு ஜில்லாவில் எந்த இடத்தில் 'கோடவுன்' ஏற்படுத்தப்பட்டிருக்கிறது ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : கடலூரில்.

*Poramboke lands in Voimedu village*

*** 104 Q.—SRI A. VEDARATHNAM** : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வாய்மேடு கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலம் எவ்வளவு ?

(ஆ) இது சர்வே ஆகிவிட்டதா ? எப்போது ?





(இ) இந்த நிலத்தை நிலமற்ற விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்க சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறுர்களா ? எப்போது ?

(ஈ) எப்போது இது அமுலுக்கு வரும் ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : (*a*) and (*b*) Presumably the hon. Members refers only to Government lands which are normally surveyed for assignment and not to all communal porambokes. The extent of swamp poramboke lands in Voimedu village that could be surveyed with a view to their being assigned to landless poor persons was computed as 2,516.53 acres. The survey of the lands was completed on 11th June 1959.

(*c*) In 1953, the Government ordered that the waste blocks of lands available for assignment in Voimedu, among other villages in Tiruthuraipoondi taluk, Thanjavur district, be granted in favour of deserving landless poor persons individually free of land revenue at 2 acres for each family.

(*d*) The Collector has sanctioned proposals for transfer of classification of the lands to be assigned and has issued instructions to push through the assignment. The work is expected to be completed soon.

**SRI A. VEDARATHNAM** : 1953-ம் வருஷத்தில் உத்தரவு போடப்பட்டும் 7 வருஷ காலமாக தாமதப்பட்டிருக்கிறது. மிராசுதாரர்களிடத்திலிருந்து நிலங்களையெல்லாம் எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் முன் வந்திருக்கிற காலத்தில் அரசாங்கத்தினிடமிருக்கும் இவ்வளவு விஸ்தீரண நிலத்தை, 2,500 எக்கரை, நிலம் இல்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க ஏன் இவ்வளவு தாமதம்? இந்த ஆண்டு சாகுபடிக்கே அது பயன்படும்படியாக அதைப் பிரித்துக் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : கடந்ததெல்லாம் போகட்டும். இப்பொழுது ரொம்பவும் துரிதமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு ஆகியிருக்கிறது. நானும் அதை நேரில் போய் பார்த்தேன். ஆகையினுல் அநேகமாக அதெல்லாம் இந்த வருஷத்தில் செய்யப்படும்.

*Kilpallipattu Dalavai Tank*

*** 105 Q.—SRI S. M. ANNAMALAI** : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், ஆரணி தாலூகா, கீழ்ப் பள்ளிப்பட்டு தளவாய் ஏரியைப் பழுது பார்க்கவேண்டுமென்று கோரி 3—12—59-ல் பொது மக்களிடமிருந்து மகஜர் வந்ததா ?

(ஆ) அப்படியானுல், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** :

(*a*) Yes, Sir.

[11th August 1960

(b) The matter is under the consideration of the Board of Revenue (Food Production).

**Sri S. M. Annamalai** : ரெவின்யு போர்டுக்கு ஆலோசனைக்கு வந்து எவ்வளவு நாட்கள் ஆகின்றன? ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது?

**The Hon. Sri M. A. Manickavelu** : இதிலே கஷ்டம் என்னவென்றால் இது 'அபாண்ட்டன்டு ஸோர்ஸ் ஆப் இர்ரிகேஷன்'. அது ரயில்வே லயனை பாதிக்கக்கூடிய ஒரு ஏரி. ஆகையினாலே, ரயில்வே அதிகாரிகளையும் இதுபற்றி கேட்க வேண்டியிருக்கிறது. ரயில்வே லயனை பாதிக்காத அளவிலே எந்த மட்டத்திற்கு எப்படிச் செய்யலாம் என்பதையெல்லாம் கவனித்துச் செய்ய கொஞ்சம் தாமதமாகிறது.

*Fertilizers*

* 106 *Q.*—**Sri V. K. Kothandaraman** : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கூட்டுறவு சங்கங்களுக்கு உரம் அலாட்மெண்டு நேரடியாக ஜில்லா மத்திய சங்கத்திலிருந்து போவதை நிறுத்தி தாலுகா கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைடிகளின் மூலம் விநியோகம் செய்ய உத்தேசம் உண்டா?

**The Hon. Sri M. A. Manickavelu** : The District Co-operative Supply and Marketing Society functions as the Government stockist in the district and in certain centres it also functions as the retail distributor. So far as the stockist function is concerned, no change is contemplated.

As regards the retail distribution, it has been decided that the District Co-operative Supply and Marketing Societies should not function as retail distributors in places where retail distribution can be entrusted to the local primary societies, viz., Taluk Marketing Societies, Village Credit Societies and Agricultural Banks, etc., and this decision is being implemented.

**Sri V. K. Kothandaraman** : மத்திய சங்கத்திலிருந்து 'அலாட்மெண்டு' செய்வதால் பல விதத்திலே விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். விநியோகம் செய்வதிலே கூட பல விதத்தில் ஊழல்கள் ஏற்படுகின்றன என்கின்ற காரணத்தினால், இன்றைக்கு எப்படி ஜில்லா போர்டு அதிகாரம் ஒரு இடத்தில் இருக்கக்கூடாது, பிளாக் லெவலில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மூலம் அதிகாரம் பரவலாக இருக்கவேண்டுமென்று சொல்லுவது போல், பிளாக் மூலமாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மூலம் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**The Hon. Sri M. A. Manickavelu** : மத்திய ஸ்தாபனத்தின் மூலமாக மற்ற கிளை ஸ்தாபனங்களுக்கெல்லாம் அனுப்ப வேண்டும். முன்னாலேயே சொன்னேன் அந்த வகையிலே விநி



11th August 1960]

யோகிக்கப்படுகிறது என்று. அவ்வப்பொழுது அந்தந்த நிலைமையை அனுசரித்து 'பிராபர் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' கொடுப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்ட்ரார் ஏற்பாடு செய்வார்கள்.

**Sri T. T. Daniel** : May I know whether officers are appointed to make periodical checking to find out whether these co-operative societies are functioning properly and especially whether physical checking—not merely account checking—is actually made?

**The Hon. Sri M. A. Manickavelu** : I presume so.

**Sri V. Subbiah** : ஜில்லா சென்டிரல் ஸ்டோர்ஸ் மூலம் விநியோகம் செய்வதினால், கிராமாந்திர விவசாயிகளுக்கு அதில தொடர்போ அல்லது அவர்கள் அதில் அங்கத்தினர்களாகவோ இல்லாமல் இருப்பதை முன்னிட்டு இரண்டுவித கமிஷன் ஏற்படுகிறது. ஒன்று ஜில்லா ஸ்டோர்ஸ் கமிஷன் கொடுத்து அங்கிருந்து மார்க்கெட்டிங் சொஸைடிகளுக்கு வருவதற்கு உள்ள வாடகை மற்ற செலவுகளும் சேர்ந்து விடுவதால் நிறைய செலவாவதை முன்னிட்டு, கிராம விவசாயிகள் தொடர்பு உள்ள மார்க்கெட்டிங் சொஸைடிகளிடம் விநியோகத்தை ஒப்படைப்பது பொருத்தமாக இருக்காதா என்பதை யோசிக்க வேண்டும்.

**The Hon. Sri M. A. Manickavelu** : இந்த இலாகா அமைச்சர் இரண்டு நாட்களில் வந்துவிடுவார்கள். அவர்களிடம் இந்த விஷயத்தைச் சொல்லுகிறேன்.

**Sri A. Govindasamy** : இப்பொழுது சமுதாய நல திட்டப் பகுதிகளில் ஒரு சில கிராமங்களில் இருக்கிற சொஸைடிகளின் மூலம் உரம் வழங்கப்படுகிறது. எந்தெந்த கிராமங்களில் சொஸைடிகள் இருக்கின்றனவோ, அந்த சொஸைடிகளின் மூலம் அந்தக் கிராமத் தேவையை அறிந்து உரம் விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் புதிய உத்தரவு போடுமா?

**The Hon. Sri M. A. Manickavelu** : இந்த விஷயத்தையும் மனதில், கவனத்தில் வைத்துக்கொள்ளுகிறேன்.

*Payment of Sivoijama for the cultivation of Government fallow lands*

* 107 *Q.*—**Sri P. G. Manickam** : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருடம் மார்ச் மாதம் 21-ல் 489-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி நம் மாநிலத்திலே சர்க்கார் தரிசு நிலமாகிய 1, 13, 394 ஏக்கர் நிலத்திலே சர்க்காரின் அனுமதியில்லாமல் விவசாயம் செய்து கொண்டிருக்கும் விவசாயிகளுள் எத்தனை பேர்கள் சிவாஜிமா செலுத்திக் கொண்டு வருகிறார்கள்?

[11th August 1960

(ஆ) சிவாஜிமா செலுத்திக்கொண்டு மேற்கண்ட தரிசு நிலங்களை உழுது வருபவர்களுக்குள் ஹரிஜன விவசாயிகள் எத்தனை பேர்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) The public interest served by answering the questions will not be commensurate with the time and labour involved in collecting the particulars for the answer.

SRI P. G. MANICKAM : 'சிவாஜிமா' செலுத்திக்கொண்டு இந்த நிலங்கள் உழுபவர்களுடைய எண்ணிக்கையை ஜில்லா கலெக்டர் மூலம் வெகு சுலபமாகத் தெரிந்துக் கொள்ளக்கூடும். அவர்கள் குத்தாயம் செலுத்துகிற நிலங்களை அந்த ஹரிஜனங்களுக்கே பட்டா போட்டுக் கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் கண்டிப்பாக ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு ஒரு உத்தரவு போட்டால், ஜில்லா கலெக்டர் அந்த நிலங்களை ஹரிஜனங்களுக்கு வழங்குவார்கள். ஆகையால் கவர்ன்மெண்டார் இது விஷயமாகத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கோருவது நிலம் தாராளமாக ஹரிஜனங்களுக்கு 'அஸைன்' பண்ணவேண்டுமென்பது. அதையெல்லாம் மனதில் வைத்து இப்பொழுது நிலம் இல்லாதவர்களுக்கு, குறிப்பாக ஹரிஜனங்களுக்கு, இம்மாதிரி நிலங்களை விநியோகம் செய்ய வேண்டும் என்று இப்பொழுது ஏற்பாடாகி, அதற்காக ஸ்பெஷல் தாசில்தார், டெப்யூடி கலெக்டர் ஆகியோர்களை நியமனம் செய்து வேலை நடந்து கொண்டிருக்கிறது.

9-00 a.m. SRI M. K. SOMASUNDARAM : ஸார், இம்மாதிரிப் புறம்போக்கு நிலங்களை ஹரிஜன மக்கள் 12 வருஷங்களாக அனுபவித்து வந்திருப்பதனால், அதை அவர்களுக்கே ஜாரி பண்ணிக் கொடுக்காததற்குக் காரணம் என்ன? அது சம்பந்தமாக கலெக்டருக்கு தகுந்த உத்தரவு போட சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : உத்தரவு சென்ற மாதம் கூட அனுப்பப்பட்டது.

*Tamilnad Plantation Union*

* 108 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to recognise the registered Tamilnad Plantation Union?

THE HON. SRI R. VENKATARAMAN : It is presumed that the Hon. Member refers to the request made by the Tamilnad Plantation Workers' Union, Valparai, for recognition of the Union by the Cinchona Department for the purpose of representing the workers of the Government Cinchona Plantations in the Anamalais. If so, the matter is under consideration of the Government.



11th August 1960]

SRI N. K. PALANISAMI : Sir, while the INTUC which has got only 2,000 members has been recognised, the AITUC having a membership of more than 10,000 has not been recognised. May I know why there is delay in recognising it?

THE HON. SRI R. VENKATARAMAN : The AITUC has not furnished the list of members called for by the Government.

MR. SPEAKER : The Hon. Minister for Works is not in Madras. We shall postpone his question No. 109.

*Supervisors for the Co-operative Agricultural Farms*

* 110 Q.—SRI M. P. SARATHI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

கூட்டுறவு விவசாயப் பண்ணைகளில் மேற்பார்வையிட நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் விவசாயத் துறையில் விசேஷப் பயிற்சி பெற்றவர்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : Senior Inspectors of Co-operative Societies who supervise and manage Co-operative Farming Societies have not undergone any special training in agriculture. But they are assisted by Agricultural Demonstration Maistries or Agricultural Fieldmen.

SRI S. M. ANNAMALAI : ஸார், இப்படி விவசாயப் பண்ணைகளில், சீனியர் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கும் போது, ட்ரெயினிங் இல்லாமல் இருப்பதால், அவர்களுக்கு நிலத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் இருக்கிறது. ஆகையினால், அவர்களுக்கு ட்ரெயினிங் கொடுத்து, அதன் மூலமாக அவர்கள் அதிக உபயோகமுள்ளவர்களாக இருக்க சர்க்கார் அவர்களுக்கு ட்ரெயினிங் கொடுக்க முன் வருவார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : இதிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று, விவசாயத் தொழில் பயிற்சி; இரண்டாவது கூட்டுறவுப் பயிற்சி. கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருக்கிறவர்கள், பணம் கடன் வாங்குவது, கடனை விநியோகம் செய்வது, நிர்வாகம் இவற்றிலெல்லாம், கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தைப் பற்றிய அலுவல்களை, அக்ரிகல்சர் பீல்ட்மென், டெமான்ஸ்டிரேடர் இவர்கள் கவனிக்கிறார்கள். சாதாரணமாக சீனியர் இன்ஸ்பெக்டர்களுக்கு குறைந்த காலப் பயிற்சி அளிப்பதனால், அவர்கள் எல்லாப் பயிற்சியும் அடைய முடியாது.

SRI A. GOVINDASAMY : கூட்டுறவுப் பண்ணை வைப்பதன் நோக்கம், உற்பத்தியைப் பெருக்குவது என்பதினால், விவசாயத்தில் கூட்டுறவுப் பயிற்சியும் அளிக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதைத்தான் இப்பொழுது சொன்னேன், இதிலே விவசாயப் பயிற்சி ஒன்று, நிர்வாகப்

பயிற்சி மற்றொன்று. கூட்டுறவுக்கு அதில் பயிற்சி பெற்ற நிர்வாகஸ்தர்களையும், விவசாயத்திற்கு அதற்கு ஏற்ற டெக்னிகல் பர்சனல்களையும் நியமிக்கிறோம்.

SRI M. D. THIAGARAJA PILLAI : தலைவர் அவர்களே, கூட்டுறவு பண்ணைகளை அபிவிருத்தி செய்ய, சீனியர் இன்ஸ்பெக்டர்களையும், பீல்ட்மென்களையும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், அநேக சங்கங்களுக்கு, அந்த உத்தியோகஸ்தர்கள் உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, சீக்கிரமாகவே நியமனம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : போதுமான பீல்ட் ஆபீசர்கள், அக்ரிகல்சர் பீல்ட் ஆபீசர்கள் கிடைக்காதது தான் அதற்குக் காரணம்.

SRI S. M. ANNAMALAI : சீனியர் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கும் போது, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தனிச் சலுகை அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சீனியர் இன்ஸ்பெக்டர்கள் எந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று பார்ப்பதற்கில்லை ; சீனியர் இன்ஸ்பெக்டர்களைத்தான் போட முடியும்.

SRI A. GOVINDASAMY : இதுவரை கூட்டுறவுப் பண்ணைகளில் ஏற்பட்ட அனுபவத்தை ஒட்டி, அதைத் திருத்தியமைக்க அரசாங்கத்திற்கு, புதிய நடவடிக்கை எடுக்க, உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒன்றும் இல்லை.

SRI M. K. SOMASUNDARAM : சார், விவசாயத்திற்குக் கடனோ, உரங்களோ வழங்கும்போது, பயிரிடும் காலங்களை ஒட்டி, தக்க சமயத்தில் வழங்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a separate subject, Sir,

*Land acquisition.*

*111 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் ஆரணி தாலுகாவில் எத்தனை பட்டாதாரர்களின் நிலங்கள் நீர்ப் பிடிப்பு என்று சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The total number is 2,072.

SRI S. M. ANNAMALAI : எவ்வளவு ஏக்கர் நிலங்கள் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : 1,765 ஏக்கர்கள்.



SRI S. M. ANNAMALAI : ஸார், இப்படி சிறு நிலச் சுவாந்தார்கள், 4 ஏக்கர், 3 ஏக்கர் வைத்திருப்பவர்களை, ஏரித்தண்ணீர் பிடிப்பு என்று, கிணறுகளை மட்டும் விட்டு விட்டு, சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 4, 3 ஏக்கர்கள் வைத்து இருப்பவர்கள், கிணற்றை மட்டும் வைத்துக்கொண்டு விவசாயம் செய்ய முடியாது. ஆகவே, அதை மறு பரிசீலனை செய்து, நிலங்களை அவர்களுக்கே ஜாரி பண்ணிக் கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தச் சூழ் நிலை ஏன் ஏற்பட்டது என்றால், ஜாகிர்தார் தன் இஷ்டம் போல் அஸைன் பண்ணி விட்டார் ; செட்டில்மெண்ட் செய்யும் போது, தவறாகச் செய்திருப்பது தெரிகிறது. டாங்க் பெட்டில் பயிர் செய்வதானால், ஏரி தூர்ந்து போய்விடும். இம்மாதிரிப் பயிர் செய்யக் கூடாது என்று தடுக்க வேண்டியிருக்கிறது. ஆனாலும், இம் மாதிரி நிலம் இழந்தவர்களுக்கு, சர்க்கார் நிலத்தைப் பங்கீடு செய்யும் போது, அவர்களுக்கு, ப்ரிபரென்ஸ், முதல் படியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே, அவர்களுக்கு நிலம் கிடைக்கும்.

SRI A. GOVINDASAMY : பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நஷ்ட ஈடு கொடுக்க முடியாது. இது துராக்ருதமாக, ஜாகீர்தாரோ, ஜமீந்தாரோ, செய்ததை நம்பி வாங்கி விட்டார்கள் ; அப்படி வாங்கியிருக்கக் கூடாது. சட்டப் பிரகாரம் நஷ்ட ஈடு கொடுக்க முடியாது.

*Tax exemptions to motor vehicles owned by local bodies*

* 112 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether tax exemptions are granted to motor vehicles owned by municipalities and panchayats;

(*b*) if so, from which year; and

(*c*) on what basis?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Road-rollers and tractor graders belonging to local bodies are exempt from payment of tax from 1934 and 1941 respectively. Other motor vehicles owned by local bodies have to pay tax.

(*c*) It is considered that the machinery used for maintaining the roads should not be taxed.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், ஸ்தல ஸ்தாபனங்களிலே, நகர அபிவிருத்தி, சுகாதாரம் போன்ற பொதுக் காரியங்களுக்கு உபயோகிக்கும் எல்லா மோட்டார் வாகனங்களையும், வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க, இனிமேலாவது திட்டமிட உத்தேசமுண்டா ?

[11th August 1960

**THE HON. SRI V. RAMAIAH :** இன்றைக்கு இருக்கும் நிலையை பதிலில் சொன்னேன். அம்மாதிரி மோட்டார் வாகனங்களுக்கு வரி உண்டா, இல்லையா என்பது பெரிய கொள்கை அடிப்படைப் பிரச்சினை. அது பரிசீலனை செய்யப்படவேண்டியது. அப்படிப் பரிசீலனை செய்யும்போது, அங்கத்தினர் கருத்துக்களை மனதில் வைத்துக் கொள்வோம்.

**SRI N. MARUDACHALAM :** விலக்கு அளிக்கும்படி எத்தனை முனிசிபாலிடிகள் கேட்டிருக்கின்றன?

**THE HON. SRI V. RAMAIAH :** தனிக் கேள்வி போட வேண்டும்.

*Research on artificial rain*

*113 *Q*—**SRI P. G. MANICKAM :** கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செயற்கை மழை ஆராய்ச்சி எந்தெந்த இடங்களிலே நடைபெற்று வருகிறது?

(ஆ) 1960-ல் எந்தெந்த ஜில்லாக்களிலே செயற்கை மழை ஆராய்ச்சி செய்ய உத்தேசம்?

(இ) செயற்கை மழை ஆராய்ச்சி எத்தனை தடவை நடத்தப்பட்டது?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The experiments on artificial rain making are now being conducted in Coimbatore.

(*b*) The experiments will be continued during 1960 in the Coimbatore district. The question of conducting experiments in the Tiruchirappalli district is under consideration. Proposals from the Chief Engineer (Irrigation) for conducting experiments in the Nilgiris and Salem districts are awaited.

(*c*) The total number of times the experiments were conducted is 267.

**SRI P. G. MANICKAM :** ஸார், மேற்கொண்டு பரிசோதனை செய்வது வெற்றிகரமாக இருக்குமா, திட்டம் உண்மையிலேயே பயன் அளிக்குமா? சர்க்கார் அபிப்பிராயம் என்ன?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** இந்த முறையிலே ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில்தான் மழை பெய்யச் செய்யமுடியும். ஆனால், அப்படிச் செய்வது, நமக்கு இருக்கும் அவசியம் பூரா வுக்கும் உபயோகிக்கும் வகையில் பிரயோஜனப்படுமா என்று தெரியவில்லை. எக்ஸ்பெரிமெண்ட் மூலம் வரவழைக்கலாம் என்று தான் தெரிகிறது.



11th August 1960]

**SRI A. GOVINDASAMY :** இந்த வகையில் மழை உண்டு பண்ணமுடியுமா, போதுமா, போதாதா என்ற சந்தேகம் இருக்கும்போது, வீண் செலவு ஏன் செய்யவேண்டும்?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** இப்பொழுது இதற்குப் பணம் செலவிடவேண்டும் என்பது, ஒரு இடத்தில் ஏதாவது புதையல் இருக்கிறது என்றால், புதையல் இருக்கிறதா, இல்லையா என்று தெரிந்து நிச்சயிக்கவே, நிலத்தைத் தோண்டி, செலவு செய்து பயன் உண்டா என்று பார்க்கவேண்டும் என்பதுபோல் தான்.

**SRI M. KALYANASUNDARAM :** ஆராய்ச்சிக்கு எத்தனை தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது, அந்தத் தொகை போதுமானது என்று அரசாங்கம் கருதுகிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : The rain-making trials are conducted at Coimbatore at a cost of Rs. 5,000 from 1st June for one year and it is being extended from time to time.

**SRI R. SRINIVASA IYER :** இப்படி ஒரு அங்குல மழை பெய்யவேண்டுமென்று நினைத்தால் அதற்கு எவ்வளவு ரூபாய் செலவு ஆகும் என்ற கணக்கை சர்க்கார் எடுத்திருக்கிறார்களா?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** மழையைக் கொண்டு வருவதற்கு முன் அதற்கு முன்பு அந்த இடத்தில் மழை பெய்திருக்க வேண்டும். (சிரிப்பு). அப்பொழுதுதான் இந்த பரீட்சை பயன்படுகிறது. கால்சியம் க்ளோரைட், சோடியம் க்ளோரைட் முதலியவைகளை சுமார் முப்பது அல்லது நாற்பது அடி உயரத்திற்குக் கொண்டுபோய் அங்கே வைக்கக்கூடிய சூழ்நிலையில் மழை பெய்வதற்கு இடம் ஏற்படுகிறது. அப்படி கால்சியம் க்ளோரைட் முதலியவைகளை உபயோகப்படுத்தக்கூடிய அளவில் இவ்வளவு மழை பெய்கிறது என்று கண்டு பிடிக்கப் படுகிறது. அதற்கு முன்பு எவ்வளவு செலவு ஆகும் என்று சொல்வது முடியாது. பரீட்சை செய்து பார்க்கும்போதே இவ்வளவு செலவு ஆகும் என்று திட்டமாகச் சொல்ல முடியாது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

**SRI P. G. MANICKAM :** இயற்கை மழையைக் கொண்டு வருவதற்கு செய்யப்பட்ட பரீட்சை மூலம் வெளி நாடுகளில் நடத்தப்பட்ட நடவடிக்கைகளில் வெற்றி கண்டிருப்பதாக பத்திரிகை மூலமாக அறிகிறோம். அந்த முறையே இந்த நாட்டிலும் அனுஷ்டிக்கப்படுகிறதா அல்லது வேறுமுறை ஏதாவது அனுஷ்டிக்கப்படுகிறதா?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** எக்ஸ்பெரிமெண்ட் என்று சொன்னால் அதில் எல்லாவிதமான முறைகளையும் தான் கையாண்டு பார்ப்பார்கள். அந்த மாதிரி வகையில்தான் இங்கு எக்ஸ்பெரிமெண்ட் செய்துகொண்டு வருகிறோம்.

[11th August 1960

SRI K. VINAYAKAM : May I know, Sir, what are the lessons learnt by this Government in this kind of experiment? Is the cost, labour and time involved commensurate with the rains that are brought to the earth? Will the Government drop this kind of mad experiment?

THE HON. SRI M. A. MANICKAVELU : This is only an experiment. If it succeeds there are great potentialities. One doctor took fourteen years to isolate a particular virus. If the doctor was a man of the hon. Member's temperament he would not have succeeded.

SRI P. U. SHANMUGAM : கனம் விநாயகம் அவர்கள் mad experiment என்று சொன்னார். அப்படிச் சொல்லலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

SRI K. VINAYAKAM : This is my view.

MR. SPEAKER : The hon. Member can call any experiment anything.

SRI A. VEDARATHNAM : ஸார், இந்த ஆராய்ச்சி மிகவும் சிறந்த ஆராய்ச்சி. அதில் வெற்றி பெற்றால் நம் நாடு பஞ்சம் இல்லாத நாடாகி விடும். நம் நாட்டிலிருந்து பஞ்சத்தை ஓட்டி விடலாம். ஆனால், இந்த ஆராய்ச்சிக்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிற பணம்தான் கொஞ்சமாக இருக்கிறது. அதற்கு ஒதுக்கி இருக்கக்கூடிய 5,000 ரூபாய் போதாது என்று தோன்றுகிறது. அது ரொம்பவும் குறைவு. அதற்கு எவ்வளவு தொகை வேண்டுமானாலும் ஒதுக்க சர்க்கார் முன் வரவேண்டும். அப்படி எவ்வளவு வேண்டுமானாலும் ஒதுக்கி வைத்து ஆராய்ச்சியை தொடர்ந்து நடத்த வேண்டும். ஆகவே அப்படி அதிகப்படியாக பணம் ஒதுக்க முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எக்ஸ்பெரிமெண்ட் பண்ணுவதற்கு எவ்வளவு பணம் வேண்டும் என்றாலும் ஒதுக்கலாம். இப்பொழுது ஒதுக்கியிருப்பது போதும் என்று கருதித்தான் அப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக வேண்டுமானாலும் ஒதுக்குவதற்கு தேவையான போது யோசிக்கலாம்.

SRI A. A. RASHEED : Sir, may I know whether any landlords have protested to the Government that the rains have fallen during the harvest season?

THE HON. SRI M. A. MANICKAVELU : I am not aware.

SRI A. GOVINDASAMY : பிரார்த்தனை செய்து அதன் மூலமாக மழை பெய்யச் சொல்லலாம் என்று சொல்லுகிறார்களே, அந்த முறையிலும் அரசாங்கம் பரிட்சை செய்து பார்த்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: பிரார்த்தனை செய்து மழையைக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை இருக்கிறவர்கள் அதைச் செய்து மழையைக் கொண்டு வந்து கொள்ளலாம்.



11th August 1960]

*Minimum wages for the employees in the Cinema industry*

* 114 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the South Indian Cinema Employees Association has submitted a memorandum of grievances to the State Government and to the Film Industry Committee appointed by the Government of Madras during May 1960 requesting the Government to appoint a wage board to go into the service conditions of the Cine employees and fix a decent wage for them; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) It is proposed to take steps to fix the scales of pay for the various categories of workers in consultation with the concerned interests and ultimately to draw up a decasualisation scheme for labour in this industry.

SRI N. K. PALANISAMI : May I know, Sir, whether this Government have taken any steps on a previous occasion taking into consideration their daily work and their daily wages and their very poor condition?

THE HON. SRI R. VENKATARAMAN : There have been some awards given by the Industrial Tribunals.

*Electrification of Tambaram-Villupuram Railway line*

* 115 Q.—SRI A. A. RASHEED : }
SRI M. P. SARATHI : } Will the Hon. the Minister for Electricity be pleased to state the present stage of the proposal to electrify Tambaram-Villipuram Railway line?

THE HON. SRI V. RAMAIAH : Our information is that all the ancillary civil engineering works connected with the scheme have been practically completed. The system of electrification to be adopted is under consideration of the Railway Administration and technical details are being worked out by them for undertaking the work.

SRI A. A. RASHEED : May I know Sir, the reasons for this delay in taking up this job?

THE HON. SRI V. RAMAIAH : There is not much undue delay. The proposal involves many different problems and they had to be solved. They are being attended to and earnest attempt will be made to finish it soon.

SRI R. SRINIVASA IYER : ஸார் இந்த எலெக்ட்ரிபிகேஷன் சம்பந்தமாக ரயில்வே ஸ்டேஷன்களில் இரட்டை ப்ளாட்பாரம் போடப்பட்டு வந்தது எறக்குறைய ஒரு வருஷ காலமாக நிறுத்தப் பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஏ.சி., டி.சி.,

[11th August 1960

போன்ற வித்யாசங்களினுல் கால தாமதம் ஏற்பட்டிருப்பதற்கும் வேலை துவக்கத்திற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

**THE HON. SRI V. RAMAIAH:** ஏ.சி. சிஸ்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதா அல்லது டி.சி. சிஸ்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதா என்பதைப்பற்றிய ஒரு பிரச்னை பரிசீலனையில் இருந்து வருகிறது. கனம் அங்கத்தினர் சொன்ன மாதிரி ப்ளாட்பாரம் சம்பந்தமான வேலையைப்பற்றிய தகவல் என்னிடம் ஒன்றும் இல்லை.

*Complaint against the President, Anakkavur Agricultural* ***Co-operative Bank***

* 116 *Q.*—**SRI S. M. ANNAMALAI:** கனம் கைத்தொழில் அமைச்சர்அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், செய்யார் தாலூகா, அனக்காவூர் விவசாய கூட்டுறவு பாங்கின் தலைவர்மீது 13—7—59-ல் பொதுமக்களிடமிருந்து புகார் வந்ததா?

(ஆ) அப்படியானல், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(இ) எவ்வளவு பணம் கையாடினர்?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) Yes, Sir.

(ஆ) & (இ) An enquiry was conducted in the matter. It was found that the President had not committed any misappropriation of the funds of the society. However, in view of certain other irregularities committed by him lik the indiscriminate issue of loans to some of his relatives on inadequate securities, the Special Deputy Registrar (Credit and Marketing), Vellore has cancelled his nomination as a Director and President of the Bank. The President has appealed to Government against the above order and the appeal is under the consideration of the Government.

**SRI A. GOVINDASAMY:** தவறுதலாக வழங்கப்பட்ட கடன் தொகைகளைத் திருப்பி வாங்குவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

**THE HON SRI R. VENKATARAMAN:** வழக்கமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

**SRI V. K. KOTHANDARAMAN:** ஸார், 1937-ம் ஆண்டு வரையில் செய்யார் தாலூகா சூபர்வைஸராக இருந்த அந்த நபர் 13,000 ரூபாய் கையாடல் செய்து அவர்மீது வழக்கு தொடரப்பட்டு தண்டனையும் விதிக்கப்பட்டு அதன் பிறகு டிஸ்மிஸ் செய்யப்பட்டவர் இதற்குத் தலைவராக இருக்கிறார். ஆகவே இது விஷயமாக ரிஜிஸ்தரார் அவர்களுக்குத் தெரியப்படுத்தி தலைமை பதவியையும்



11th August 1960]

டைரெக்டர் பதவியையும் விட்டு அவரை உடனே விலக்குவதற்கு உத்தரவு போட்டுள்ளது என்பது தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON SRI R. VENKATARAMAN:** இருபத்தி இரண்டு வருஷங்களுக்கு முன் அவர் மீது குற்றம் சாட்டி இருந்தது என்ற தகவல் இருக்கிறது. ஆனல் அவர் வேறு காரணத்திற்காக நீக்கப்பட்டிருக்கிறார். அவர் அப்பீல் செய்திருக்கிறார்

**SRI S. M. ANNAMALAI:** அந்த சூபர்வைசர் அந்த தாலூகாவில் 200 ரூபாய் கோர்ட்டு மூலம் அபராதம் விதிக்கப்பட்டு, பைன் போட்டுக் கட்டியிருக்கிறார். அப்படிப்பட்ட சூப்பர்வைசரை நீக்காமல் அவரை மறுபடியும் பாங்குக்குத் தலைவராக நியமித்தால் அந்த பாங்கு சரிவர நடக்குமா? அவருடைய அப்பீல் பரிசீலனை செய்யப்பட்டதா?

**THE HON SRI R. VENKATARAMAN:** கனம் அங்கத்தினர் அவர்கள் தயவு செய்து அவர் என்ன உத்தியோகம் வகித்தார், எப்பொழுது தண்டிக்கப்பட்டார் என்பதைப்பற்றிய முழு விவரத்தையும் எழுதி அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*The Madras Agricultural Produce Markets Act,* 1959

*Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) புதிதாக நிறைவேற்றப்பட்ட " The Madras Agricultural Produce Markets Act 1959 " அமுலில் வந்துவிட்டதா?

(ஆ) இல்லையென்றால், ஏன்?

(இ) மார்க்கெட் ஏரியா ( area ) எவ்வளவு?

(ஈ) அதை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

(*b*) Rules under the Madras Agricultural Produce Markets Act, 1959 have to be framed and they are under examination. Further, the Government have decided that the Madras Agricultural Produce Markets Act, 1959 should be brought into force only after the Market Committees are reconsituted in accordance with the provisions of the existing Act (namely, the Madras Commercial Crops Markets Act, 1933) and steps to reconstitute the Market Committees by way of holding election are under way.

(*c*) & (*d*) It is presumed that the number refers to the " notified " market area mentioned in sub-section (4) of Section 5 of Madras Act 23 of 1959. Market area has to be specified by the Government by way of notification. The market area will be fixed on the recommendation of the Market Committee and will be dependent on factors, such as availability of transport facilities, places from which the commodities come and other circumstances if any. The question has not yet been taken up.

[11th August 1960

*Land ceiling*

* 118 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) உச்சவரம்பு திட்டத்தின்கீழ் எத்தனை ஏக்கர் நிலங்கள் நிலச்சுவான்தாரர்களிடமிருந்து கிடைக்கலாம்?

(ஆ) இந்நிலங்கள் யார் யாருக்கு பகிர்ந்து கொடுக்கப்படும்?

THE HON. SRI M. A. MANICKAVELU : According to the statistics gathered by the Special Officer for Land Reforms last year, the extent of surplus land that will be available, if ceiling is fixed at 30 standard acres, adopting the definition of 'standard acre' contained in the Madras Agricultural Income Tax Act, 1955, is 2.82 lakhs standards acres. The definition of 'standard acre' adopted in the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960 is slightly different. Many land sales have also taken place, all over the State, since the statistics were gathered. In the circumstances, the actual extent of surplus land that will be available as a result of the imposition of land ceiling cannot be stated with any accuracy.

The manner in which the surplus land acquired by the Government under the proposed Ceiling Act will be disposed of, will be decided at the time of framing of rules under that Act; but, in the disposal of the lands, preference will be given to persons who are completely dispossessed of their holdings or whose extent of holding is reduced below three standard acres. In this connection, I invite the attention of the Hon. Member to clause 84 of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960.

SRI S. M. ANNAMALAI : இந்த நில உச்சவரம்பு மசோதாவானது செலெக்ட் கமிட்டியில் இருக்கிறபோது, அதில் கண்டுள்ளபடி 6—4—1960-ல் இருந்து செல்லத்தக்கது என்று இருக்கிறபோது தஞ்சை மாவட்டத்தில் நிலங்களை விற்றுக்கொண்டிருப்பதாகவும், அந்த நிலங்களின் விலைகள் ஏறிக்கொண்டு போவதாகவும் சொல்லப்படுகிறதே, இதனால் பெரும்பாலான விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் தெரிகிறதே இதைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU: மசோதாவில் க்ருஷல் தேதி ஒன்று சொல்லப்பட்டிருக்கிறபோது—அப்படி ஏதாவது நடந்தால் அந்தச் சட்டப்படி என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமோ, அவை எல்லாம் காலாகாலத்தில் எடுத்துக் கொள்ளப்படும். ஆனால் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படாத நிலத்தை விற்கலாம். அதை எப்படி தடுக்க முடியும்?



11th August 1960]

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த நிலச்சீர்திருத்த உச்ச வரம்பு சட்டத்தினால் நிலம் மிச்சப்படுவது என்பது ஒருபுறம் இருக்க, இப்போது ஐந்து ஏக்கர் அதற்கும் குறைவாக நிலம் வைத்துக் கொண்டிருக்கிற உழவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க, நியாயவாரச் சட்டத்தின்படி ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த மசோதாவை உத்தேசித்து தற்காலிகமாக என்னென்ன ப்ரிகாஷனரி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமோ அவை எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. பொறுக்குக் கமிட்டியில் பரிசீலனை செய்தபிற்பாடு சட்டமாகும்.

SRI M. KALYANASUNDARAM : திட்டக் கமிஷன் நிலச்சீர்திருத்தக் குழு புதிதாக ஏதேனும் நமக்கு ஆலோசனை அனுப்பியிருக்கிறார்களா? அதாவது குடும்பத்திற்கு என்று—தனிநபர்களுக்கு உச்சவரம்பு விதிப்பதற்கு பதிலாக—உச்சவரம்பு நிர்ணயிக்க யோசனை சொல்லியிருக்கிறார்களா? அவை பரிசீலிக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அரசாங்கபூர்வமாகத் தகவல் ஒன்றும் இல்லை. பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்துத்தான் தெரியும். காம்பென்சேஷன் கொடுப்பது, இன்னும் ஐந்து நபர்கள் கொண்ட ஒரு குடும்பம் என்று வைத்து உச்சவரம்பு நிர்ணயிப்பது என்பதாக யோசனைகள் தெரிவித்திருக்கிறார்கள் போலிருக்கிறது. பத்திரிகையில் தான் பார்த்தேன்.

*Leather Marketing Centre in Madras*

* 119 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether a Leather Marketing Centre has been opened in Madras; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Yes, Sir, A General Marketing Depot for leather has been started in Madras with the financial assistance sanctioned by the Khadi and Village Industries Commission. The Depot is intended to arrange for the sale of leather and leather goods manufactured by the institutions under the Village Industries Programme and will function on a regional basis.

SRI A. A. RASHEED : May I know the total quantity of leather received and sold since the Centre was opened in Madras?

THE HON. SRI V. RAMAIAH : I want notice.

[11th August 1960

*Industrial Training Centre.*

*120 *Q*.—SRI P. G. MANICKAM : *கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*அரசாங்கத் தொழிற்பயிற்சி நிலையங்களிலே,*

(1) Leather cloth including artificial leather;

(2) Bags and trunks;

(3) Pickers;

(4) Picking bands and straps;

(5) Roller skins;

(6) Belting of leather; and

(7) Saddlery and harness.

*முதலிய சாமான்கள் தயாரிக்கப்படுகின்றனவா ?*

THE HON. SRI V. RAMAIAH : Bags and suit cases and saddlery products are manufactured in the Government Footwear Units, Perambur and Pallavaram, and in the Training-*cum*-Production Centre for the manufacture of fancy leather goods, Industrial Estate, Guindy. The other articles mentioned in the question are not being manufactured at present in the Departmental units.

SRI P. G. MANICKAM : *இந்தக் கேள்வியிலே கூறப்பட்டிருக்கும் சாமான்களுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருப்பதனால், சர்க்காரினாலேயே நடத்தப்படும் தொழிற்சாலையில் மேற்கொண்டு இந்தச் சாமான்களை அதிகம் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?*

THE HON. SRI V. RAMAIAH : *இந்தக் கேள்வியில் சொல்லப்பட்ட சாமான்கள் உற்பத்தி செய்வது பற்றித்தான் நானும் பதில் சொன்னேன்.*

MR. SPEAKER : Questions are over.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—POINT OF ORDER *re*. USE OF A CERTAIN EXPRESSION WITH REFERENCE TO A PARTICULAR PARTY.

MR. SPEAKER: *கேள்வி நேரத்தின்போது இன்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ வேதரத்னம் பிள்ளை 103 என்னுள்ள கேள்வியின் கீழ் போட்ட ஒரு உபகேள்விக்கு கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் ஒரு 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' எழுப்பினர். நான் அதற்கு பதில் சொன்னேன். இதே மாதிரியாக லண்டன் பாராளுமன்றத்தில் நடந்த விஷயங்களுக்கு அங்கு சொல்லப்பட்டிருக்கக் கூடிய ரூலிங்ஸ் என்ன என்று இப்போது படித்துக் காட்டி கனம் அங்கத்தினர்களுக்கு விளக்க விரும்புகிறேன்.*



11th August 1960] [Mr. Speaker]

*அங்கே ஒரு மெம்பர் பேசுகிறார் :—*

'I think that some high-ranking officers now know why.
It is because the Government know that their defence policy is criminal, and they have bribed silence among the party opposite.'

*அதற்கு இன்னொருவர் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறார் :—*

'On a point of order, Mr. Speaker. The word 'bribery' applied to hon. Members on this side is surely unparliamentary?

*அதற்கு சபாநாயகர் கொடுத்த ரூலிங் :*

'Words can be used of a party as a whole that would be intolerable if applied to an hon. Member . . . It was a general accusation against the party opposite, but I think that that is quite common, and is not out of order.'

*இரண்டாவதாக இன்னொரு சந்தர்ப்பத்தில் எழுப்பப்பட்டது.*

'On a point of order. This last supplementary question contained the words "dishonourable" as applicable to members of the present Administration and "dishonesty". Are not those words completely out of order . . .'

*இதற்கு சபாநாயகர் கொடுத்த ரூலிங் :—*

'They are very undesirable, but it has always been the rule in this House that one can apply abusive words to the Government or to the party opposite to an extent which would not for one moment be permitted if directed to any particular Minister or hon. Member. It is, however, quite undesirable that such language should be used in a supplementary question.'

*கடைசியாக மூன்றாவது ரூலிங். நான் இந்த மூன்றையும் தான் பார்த்தேன். இன்னும் அதிகமாக உதாரணம் கொடுக்க வேண்டுமென்றாலும் பார்த்துக் கொடுக்கத் தயார். இங்கே பார்லிமெண்டரி செக்ரடரி பேசுகிறார் :—*

'This, of course, is part of the general discussion of Socialism *versus* the free economy. I make no complaint about that. There will always be Socialists as long as there is anything left to steal—.'

Then a point of order was raised.—

'Is the Parliamentary Secretary entitled to refer to us as thieves?

Then Mr. Speaker said : 'I have frequently ruled that an expression which if used about an individual Member, would be a gross breach of order, is not out of order when applied to a party. I have heard many harsh things said about parties.'

*ஆனால் ஒன்று மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்கலாம். கம்யூனிஸ்ட் கட்சி மெம்பர்கள் இதற்கு 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' ரெய்ஸ் பண்ணக்கூடாது என்று சொல்லுவேன். அதேபோல கம்யூனிஸ்ட் மெம்பர்கள் காங்கிரஸ் மெம்பர்களைத் தாக்கினால் காங்கிரஸ் மெம்பர்கள் 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' ரெய்ஸ் பண்ணக்கூடாது. ஆகவே கனம் அங்கத்தினர்கள் பேசும்போது கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பேச வேண்டும்.*

## III.—FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR THE YEAR 1960-61.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I rise to present the first Supplementary Statement of demands for further expenditure in 1960-61. The detailed explanatory statement has been placed on the table of the House.

2. The Government have accepted all the main recommendations of the Madras Pay Commission and have announced their decision to implement them with effect from 1st June 1960. The scope of these recommendations cover about 170,000 employees of State Government. 113,000 teachers employed under various agencies and 40,000 employees of local bodies other than teachers. Formal orders implementing the revised scales of pay and the revised rates of Dearness and House Rent Allowances have since been issued, in the case of Government employees. Orders will issue shortly for teachers under local bodies and aided institutions and for other employees under local bodies. It may be hoped that the fixation of pay in the revised scales would be done and the
9-30 a.m. arrears from 1st June 1960 drawn by the bulk of Government employees by the end of this month.

3. The Pay Commission has evolved the revised pay structure on the basis of minimum remuneration of 60 for an unskilled employee such as a last grade servant and Rs. 100 for a 'white-collar worked like a Lower Division Clerk. The Commission has also recommended the merger of the bulk of dearness allowance with pay. Based on these two principles, a revised structure of pay and allowances has been evolved which represents a considerable rationalisation and simplification of the existing structure. In the revised scales, special consideration has been shown to technical personnel. Common scales of pay have been accepted for teachers whether serving under Government, local bodies or aided institutions. The pay scales for University teachers are on the basis of scales recommended by the University Grants Commission with adjustments to suit local conditions. The Commission has also recommended the permanent retention of posts which have continued as temporary for more than five years and the upgrading of a sufficient number of lower division clerical posts to the upper division in each department so as to ensure adequate promotion prospects. Government have accepted these general recommendations in principle and will implement them as early as possible. On the issue of Retirement benefits, the Commission has recommended the adoption of the Liberalised Pension Scheme enjoyed by the Central Government employees. This concession together with the merger of the bulk of the dearness allowance with pay, will effect a considerable liberalisation in the retirement benefits of low-paid Government employees.

4. The recommendations of the Commission involve an immediate cost of about Rs. 491.40 lakhs per annum. Apart from the main recommendations, the Commission had also suggested that the temporary increase given to pensioners may be enhanced from Rs. 6 to Rs. 10. This suggestion has also been accepted by Government at an estimated cost of Rs. 8.65 lakhs per annum. The total immediate cost per annum is therefore Rs. 500.05 lakhs. The ultimate cost of the recommendations will be about Rs. 713 lakhs per annum, but will be felt in full only over a period, as the existing employees under different age groups attain the age of superannuation and benefit in full from the merger of dearness allowance with pay and the other recommendations relating to the Liberalised calculation of pension. The present supplementary demand is for three-fourths of the immediate cost representing the expenditure for nine months in the current year.



5. One other item which has been included in the supplementary demand is a token provision of Rs. 100 for the grant of a Ways and Means advance to the statutory Madras Khadi and Village Industries Board in order to enable the Board to carry on its functions.

6. With these few words, Sir, I commend the supplementary estimates for favour of approval by the House.

## IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : Today two leaders from the Opposition group will speak and then the Hon. Leader of the House will reply. But still I feel there is time for two or three hon. Members of the House to speak. I had asked hon. Member Sri C. N. Annadurai to come at 9-30 a.m. But he has not come so far. I presume he will come at 10.00 a.m. Therefore I will now call upon one Member from D.M.K. one Member from I.N.D.C. and one Member from Congress to speak.

I have got one more suggestion. I have got more than 20 amendments to the Motion of Thanks. Amendment Nos. 1, 3, 8 and 28 refer to the same subject, viz., rise in prices. Similarly, amendments with Nos. 2 and 21 relate to the same subject, viz., unemployment. There are several amendments which cover one another. Instead of taking vote on each amendment, if hon. Members could agree, one of the amendments covering the same subject might be taken up for voting. That would save much time of the House. It is only a suggestion. I hope the hon. Leader of the Opposition Group, Sri V. K. Ramaswamy Mudaliyar and others would agree. Taking vote on each amendment covering the same subject will be a waste of time. I have only offered a suggestion. I hope hon. Members would agree to it.

SRI K. VINAYAKAM : On a point of Order, Sir. May I know whether this system about which you have just now told, viz., that three more speakers would be allowed to participate in the discussion on the Governor's Address, is evolved to suit the convenience of an hon. Member who could not be present in the House to take part in the discussion. Can we change the programme thus to suit a particular Member?

[11th August 1960

MR. SPEAKER : The Hon. Minister will reply at 11-30 a.m. The hon. Leader of the Opposition Group will start at 11-30 a.m. hon. Member, Sri C. N. Annadurai might speak for half an hour. Because there was still some time left (about 30 to 40 minutes), I have permitted three hon. Members to speak. There is no rule. It is entirely left to the discretion of the Speaker to call any hon. Member to speak at any time he (the Speaker) likes. If the hon. Member, Sri Vinayakam is questioning anything, it is my discretion.

### V.—AMENDMENTS TO THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) BILL, 1959 L.A. BILL NO. 20 OF 1959.

SRI S. LAZAR : I want to say something by way of clarification. For giving amendments to the Madras Buildings (Lease and Rent Control Bill, 1959), the last time fixed is 1.00 p.m. today. I understand, Sir, that Government propose to move certain amendments which are likely to radically change the Bill as submitted by the Joint Select Committee. If so, hon. Members might be given an opptrunity to read the amendment that the Government might propose and then move their amendments. So the present time-limit (1.00 p.m. today) might be extended.

MR. SPEAKER : I have at present no notice of any amendments to be moved by Government. I shall consider the hon. Member's suggestion as and when Government give notice of moving amendments to the Rent Control Bill.

THE HON. SRI C. SUBRAMANIAM : We would like to know what hon. Members think about the Bill. They need not wait to know what Government are going to do and what amendments Government are going to bring forward and then move their amendments. The Bill as reported by the Joint Select Committee is before the House. Therefore it is upto the hon. Members to move the amendments they wish, within the time-limit fixed. I do not think they can wait till Government move any amendment and then move their amendments. I persist that the present time-limit for moving amendments need not be extended.

MR. SPEAKER : So the original programme stands and hon. Members should give notice of their amendments before 1.00 p.m. today.

### IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : We shall now continue the discussion on the Governor's Address. Hon. Member Sri Ramaswamy Thevar may now speak.

* **SRI S. RAMASAMI THEVAR :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரையின் மீது சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். நமது நாட்டிலே சர்க்கார் ஊழியர்களுக்கெல்லாம் ஊதியம் சிறிது அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதை நாம் வரவேற்கிறோம். அவர்களுடைய ஊதிய



11th August 1960] [Sri S. Ramasami Thevar]

உயர்வை வரவேற்றாலும்கூட. இந்த உயர்வு சரியானபடியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதாவது, அவர்களுக்கு சம்பளம் அதிகமாக்கப்படுகிற அதேசமயத்தில் பண்டங்களின் விலைவாசிகளும் உயர்ந்துக்கொண்டேபோகின்றன. அதிகமான விலையில் விற்கப்படும் பண்டங்களை வாங்குவதற்கு, சம்பளம் ஓரளவு அதிகமாகக்கொடுத்தும்கூட. அது போதாமல் இருக்கிறது. ஆகவே, உயர்ந்தபட்ச விலையைக் குறைப்பதற்கு பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த சர்க்கார் முயலவேண்டும். பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தாவிட்டால், எவ்வளவு சம்பளம் வாங்கினாலும் போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம் நாட்டிலுள்ள பல பொருள்களை வியாபாரிகள் மற்றவர்களுக்கு கன்ட்ரோல் விலையில் விற்கவேண்டும் என்ற விதியில்லை, விதியினால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. சீனி அதிகம்ம் இருந்தாலும் இன்றைக்கு கொள்ளை விலையில் விற்கப்படுகிறது. சீனி ஒரு விசையின் விலை ரூ. 1.68 நயா பைசே என்றால், அதை ரூ. 2½-க்கு விற்கிறார்கள். அப்படி அதிகமான விலை கொடுத்தாலும் கிடைப்பதில்லை. ஏன் இப்படி விற்கிறீர்கள் என்று அவர்களைக் கேட்டால் "எங்களுக்கு கொடுக்கின்ற கோட்டா மிகவும் குறைவாக இருக்கிறது. நாங்களே திருட்டுத் தனமாக, அதிகவில்லைக்கு வாங்கிவிற்கிறோம்" என்று சொல்லுகிறார்கள். இதைத் தடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். அவர்களுக்கு வேறு வழிகளில் எப்படி கிடைக்கிறது என்பதை சர்க்கார் ஆராய வேண்டும். அவர்கள் அதிகப்படியான விலைக்கு விற்காமல் பார்த்துக்கொள்வது சர்க்காருடைய கடமை. இதைப் பற்றி எடுத்துச்சொன்னாலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கவனிப்பதாகத் தெரியவில்லை.

அடுத்தபடியாக இனாம் கிராமங்கள், ஜமீன் கிராமங்கள் நோடிபிகேஷன் செய்யும் காலத்திலேயே, அதிகபட்ச வரி வாங்கினார்கள். அப்போ துஆங்காங்குள்ள விவசாயிகள் முறையிட்டனர். இதுபற்றி சில கிராமங்களில் உள்ளவர்கள் உயர்நீதி மன்றத்திலே ரிட் பெடிஷன் ரேபட்டார்கள். அடுத்துள்ள சர்க்கார் கிராமங்களிலே என்ன வரி விதிக்கப்படுகிறதோ, அதே அளவிற்குத்தான் இனாம் கிராமங்களுக்கும் வரி போடவேண்டுமென்று உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு கூறப்பட்டது.

எந்தக் கிராமத்தார் ரிட் பெடிஷன் போட்டார்களோ அவர்களுக்கு மட்டும் சலுகை கொடுத்திருக்கிறார்களே தவிர மற்ற கிராமங்களுக்கு அந்த விதிவிலக்கு தரமுடியாது என்று சொல்லப்பட்டது. அப்படிச் சொல்லப்பட்டு அதிக வரி வாங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அதிக வரி செலுத்தினாலும் செட்டில்மென்டான பிற்பாடு அதற்கு என்ன வரி என்று தீர்ப்பாகிறதோ அந்த அளவை வசூலித்து அதிகப்படியாக வாங்கியிருப்பதை பாக்கியில் கழித்துக் கொள்வோம் என்று சொல்லப் பட்டது. ஆனால் இன்று அப்படி யல்ல. என் தாலுகாவாகிய, பட்டுக் கோட்டை போன்ற தாலுக்காக்களில் பல லட்சக்கணக்கான ரூபாய் அதிகமாக வசூலித்திருக்கிறார்கள். ரிட் மனுப் போட்டு,

எதிர்த்தவர்களுக்கு மட்டும்தான் இந்தச் சலுகை. அப்படி எதிர்க்காது பேசாதிருக்கும் மற்ற கிராமத்தாருக்கு ஒன்றுமே செய்யமுடியாதவர்களுக்கு அதிகம் வரி என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஆக, கூடுதலாக வாங்கப்பட்டிருக்கும் வரியைப் பின்னர் கழித்துக்கொள்வதுதான் நியாயம், தர்மமுமாகும். அடுத்தபடியாக, இன்னும் கிராமங்களில் சில நிலங்கள் பட்டா ஆகவில்லை. ஏற்கனவே விவசாயிகள் உழைத்து வந்த நிலம், அவர்கள் ஏற்கனவே வரி செலுத்திய நிலங்கள் இன்று சர்க்கார் வசமாகிவிட்டது. அவர்கள் ஏற்கனவே அந்த நிலங்களுக்கு வரி செலுத்தியிருக்கிறார்கள் என்றால் அப்படி வசூலித்த வரியை, வரிப்பணத்தை சர்க்கார் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும். அடுத்து ஒரு பெரிய விஷயத்தை கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் ஜமீன் இனம் கிராமங்கள் சர்க்கார் வசமான காலமுதல் பல கையாடல்கள் நடந்திருக்கின்றன. எனது பகுதியில் திருவானூர், ஆயிங்குடி, அரசர்குளம், மாத்தூர், எருக்கலக்கோட்டை போன்ற இடங்களில் அங்குள்ள கிராம அதிகாரிகள் கையாடல் செய்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ரூபாய் கையாடல்கள் செய்திருக்கிறார்கள். பணத்திற்கு ரசீது கொடுக்க, ரசீது புத்தகங்கள் முடிந்த பிற்பாடு, மறுபடி ரசீது புத்தகங்கள் கொடுக்க வேண்டியது சர்க்கார் கடமை. அப்படியிருக்க ஒவ்வொரு அதிகாரியும் பத்து பதினைந்து ரசீது புத்தகங்கள் கொடுக்க வேண்டியது சர்க்கார் கடமை. அப்படியிருக்க ஒவ்வொரு அதிகாரியும் பத்து பதினைந்து ரசீது புத்தகங்கள் வைத்துக் கொண்டு அவர்கள் மனம்போல் ஏழை விவசாயிகளிடமிருந்து வரி என்று சொல்லி பணத்தை கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். பதினாயிரம் கணக்கில் கையாடல் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி கேள்வி வந்த நேரத்தில் இவர்களை 'ஸஸ்பெண்ட்' செய்வது போல் செய்து, மறுபடியும் 'மயிலே மயிலே இறகு போடு போடு' என்று சொல்வதுபோல கொள்ளையடித்த பணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தண்டிப்பதில்லை. சில வட்டங்களில் மூன்று நான்கு வருடங்களாக கிராம அதிகாரிகள் ஸஸ்பென்ஷனில் இருக்கிறார்கள். இதேபோன்று பல மோசடிகள் நடந்திருக்கின்றன. சிலர் நல்லவராகயிருக்கலாம். என் தாலூகாவில் 100-க்கு 60 கிராமங்களில் மோசடி நடந்திருக்கிறது. வரி கொடுத்து ரசீது வைத்திருப்பவனிடமே போய் பணம் கேட்டு அவர்கள் பொருள்களை ஜப்தி செய்து வரி கொடு என்று கேட்கிறார்கள். பணம் கொடுத்த ரசீதைக் காட்டினாலும், எங்களிடம் அதற்கு கணக்கு இல்லை என்று சொல்லி அவர்களைப் பணம் கொடுக்க விரட்டியடிக்கிறார்கள். இது விவசாய காலம். இந்த ஆடியில் மழை பெய்திருக்கிறது. இந்த சமயத்தில் கூட "கலெக்ஷன் டிரைவ்" என்று வேட்டையாடுகிறார்கள். இது தகாது. ஆக, விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மேலும் அவர்களைக் கஷ்டப் படுத்தக் கூடாது. அவர்களின் கஷ்டங்களைப் போக்க வேண்டும்.





அடுத்தபடியாக, கவர்னர் அவர்களது உரையின்மீது இதற்கு முன் நடந்த விவாதங்களில் நான் கலந்துகொண்டு இலங்கை தமிழ் மக்களைப் பற்றி யாதொன்றும் குறிப்பிடப்படவில்லை என்று எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன். இலங்கையைப் பற்றி எதுவும் குறிப்பிடுவதில்லை. இலங்கைவாழ் தமிழர்களைப் பற்றி, அவர்கள் படும் கஷ்டங்களைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. இலங்கையில் உள்ள மக்களோடு நாம் அதிகத் தொடர்பு கொண்டிருக்கிறோம். நெடுநாட்களாக அவர்களோடு வசித்து வந்தோம். அவர்களோடு கொண்டுள்ள உறவு இன்றும் அற்றுப் போகவில்லை. அப்படியிருக்க இங்கிருந்து அங்கு போவதற்கு "விஸா" கிடைப்பதில்லை. விஸா கேட்டால் இங்குள்ள சிலோன் ஆபீஸர்கள், திருச்சி போன்ற இடங்களில் உள்ளவர்கள் இரண்டு மூன்று மாதங்கள் கழித்து வரச் சொல்லுகிறார்கள். ஆக, அவசியமாகவும், அவசரமாகவும் அங்கு ஒரு காரியத்திற்காக போக வேண்டுமென்றால் அது முடிவதில்லை. இது விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்தி விஸா சீக்கிரமாகக் கிடைக்கும்படி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்று நாட்டிலே ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கள்ள நோட்டு காரணத்தினால் இன்று பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மக்கள் படும் கஷ்டங்கள் சொல்லி முடியாது. கஜானாவிற்குச் சென்று மாற்ற வேண்டுமென்றால் அதற்கு கமிஷன் கொடுக்க வேண்டியிருக்கிறது. பாங்குக்குச் சென்றால் பிரைஸ் சர்டிபிகேட் வாங்க வேண்டியிருக்கிறது. வியாபாரிகளிடம் சென்றால் 20% கமிஷன் கேட்கிறார்கள். ஆக, மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கும் சர்க்கார் வழிவகைகள் காணவேண்டுமென்று கூறிக் கொண்டு இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**SRI A. GOVINDASAMI:** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரைமீது நான் ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ராஜ்யத்தில் தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டதாக பல காலத்திற்கு முன்னாலேயே இந்த சபையில் அறிவிக்கப்பட்டிருந்தும்கூட அதை மீண்டும் நினைவு படுத்துகிற முறையில் தமிழ் ஆட்சிமொழியாகி விட்டதென்ற செய்தியை கவர்னர் அவர்கள் அவர்களது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே இந்தச் சட்டசபையிலே நடக்கிற நடைமுறையைப் பார்க்கிறபோது, அமைச்சர்கள் கேள்விகளுக்கு பதில் சொல்கிறபோது ஆங்கிலத்தில்தான் பதில் சொல்கிற நிலை இருக்கிறது. முக்கியமான விவரங்களை ஆங்கிலத்தில் படிக்கிற காரணத்தினால் அதை உணர முடியாது சில அங்கத்தினர்கள் சங்கடத்திற்கு உள்ளாகிற நிலையை அறிந்தாவது அதை மாற்ற வேண்டும். எத்தனையோ தடவை இதுபற்றி இந்த மன்றத்தில் வற்புறுத்தியும்கூட அதுபற்றி கவனிக்கப்படாதிருக்கும் நிலை பரிதாபத்திற்குரிய விஷயமாகும். இதை உணராது தமிழை ஆட்சிமொழியாக்கி விட்டோம், சர்க்கார் காரியாலயங்கள் சிலவற்றில் தமிழில் பெயர் பலகைகள் பொருத்தி விட்டோம்

என்று சொல்வதினால் உண்மையிலேயே தமிழ் ஆட்சிமொழியாகி விட்டதாக சொல்லமுடியாது. அதற்கு எடுத்துக்காட்டாக, சில நிமிடங்களுக்கு முன்பு இந்த மன்றத்தில் படிக்கப் பட்ட அறிக்கையை ஆங்கிலத்தில் படித்தார்கள். அதை, தமிழில் படிக்கமுடியாதா? தமிழில் படித்தால் அதை எல்லோரும் புரிந்து கொள்ள முடியும் என்பதில் ஏன் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவில்லை என்று கேட்கிறேன். இதைக் குற்றச் சாட்டு என்றே சொல்கிறேன். எதிர்காலத்திலாவது திருந்திக் கொள்வார்கள் என்று இதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், சர்க்கார் ஊழியர்கள் சம்பளத்தை உயர்த்துவதற்காக, அவர்கள் குறைகளை நிவர்த்திப்பதற்காக 1959-ம் வருஷம் பெப்ரவரி 24-ம் தேதி பே கமிஷன் நியமிக்கப்பட்டது ஆனால் சம்பள உயர்வு ஜூன் 1960-ல் இருந்து கொடுக்க சிபார்சு செய்திருக்கிறார்கள். ஆனால் மத்திய சர்க்கார் ஊழியர்களின் பே கமிஷன் 1959 நவம்பரில் இருந்து கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருந்தும்கூட மத்திய அரசாங்கம் 1959 ஜூலையிலிருந்து சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மத்திய அரசாங்கத்தைப் பின்பற்றும் இநத அரசாங்கம், அரசாங்க ஊழியர்கள் விஷயத்தில் மத்திய சர்க்கார் அரை மணி நேரம் வேலை நேரத்தை உயர்த்தியிருக்கிறது என்று சொல்லி இவர்களும் வேலை நேரத்தை அரை மணி நேரம் உயர்த்த, மத்திய சர்க்காரில் விடுமுறை நாட்களை குறைத்ததுபோல் இங்கும் குறைக்க, சம்பள உயர்வு விஷயத்தில் மட்டும் ஏன் அவர்களை பின்பற்றக் கூடாது என்று கேட்கிறேன். எதிர்காலத்தில் இந்த ராஜ்யம் பஞ்சாயத்து ராஜ்யமாக மாற இருக்கிறது. அத்திட்டம் நன்கு நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்று அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற மத்திய சர்க்கார் கட்டளையை ஏற்றுக்கொள்ளும் இந்த சர்க்கார் பஞ்சாயத்து ஊழியர்கள் சம்பள உயர்வு விஷயத்தில் ஏன் கவனம் செலுத்தவில்லை? இதுபற்றி பேசுவதற்கு இரண்டு நாட்கள் இருப்பதால் அப்பொழுது இதுபற்றி விரிவாகப் பேசிக்கொள்கிறேன். இப்பொழுது அதுபற்றி சுருக்கமாக ஒன்றிரண்டு கருத்துக்கள் மட்டும் கூறிவிட்டு மற்ற விஷயங்களுக்கு வருகிறேன்.

மின்சாரத்தை பரவலான முறையில் விஸ்தரித்து இருக்கிறோம் என்று ஒவ்வொரு ஆண்டும் சொல்லப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் 8,000, 9,000 கிராமங்களுக்கு விஸ்தரித்திருக்கிறோம் என்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இதில் எங்கள் பக்கத்தில் குறிப்பாக விருத்தாசலம் வட்டாரத்தில் சில கிராமங்களில் சில தகராறுகள் இருந்து வருகின்றன. அதாவது தோரனூர், கீரனூர் முதலிய கிராமங்களில் மின்சார விஸ்தரிப்பு நடந்து கொண்டிருந்தது. என்ன காரணத்தினாலோ திடீரென்று இடையில் நிறுத்தி விட்டு திருச்சி மாவட்டத்தில் ஆண்டிமடம் போன்ற இடங்களுக்கு கொண்டு போய்விட்டார்கள். இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதோடு இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் 152 கோடி ரூபாய்க்கு திட்டமிட்டு கடைசியில் 181 கோடிக்கு





செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று பெருமையாக கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் 181 கோடிக்கு மேல் திட்டமிட்டு பின்னால் மத்திய அரசாங்கம் வெட்டிக் குறைத்த தொகைதான் 152 கோடி ரூபாய்.

அது மாத்திரமல்ல, இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தையேயொட்டி எதிர்காலத்தில் சமுதாய நலத்திட்டங்கள் எல்லாம் பஞ்சாயத்து மூலமாகவே நடத்துவதற்கு எல்லா வழிகளும் செய்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதே அளவில் அண்டையிலுள்ள ஆந்திர ராஜ்யத்திலும், ராஜஸ்தானிலும் பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்படுத்தியிருப்பதைப்பார்த்தால் பஞ்சாயத்து கவுன்சில்களுக்கு எல்லாம் பொது மக்களின் பிரதிநிதிகளைத்தான் தலைவர்களாகப் போட்டிருக்கிறார்கள். ஜில்லா லெவலில் இருக்கின்ற மாவட்ட பஞ்சாயத்துக்களிலும் பிளாக் யூனியன் பஞ்சாயத்துகளிலும் பொதுமக்களின் பிரதிநிதிகள்தான் தலைவர்களாக இருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகள் காரியதரிசிகளாக இருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்தை எடுத்துக்கொண்டால் டெவலப்மென்ட் கௌன்சில், பஞ்சாயத் யூனியன், இவைகளை எல்லாம் ஏற்படுத்தியிருக்கின்ற முறைகளைப் பார்க்கின்ற நேரத்தில், மத்திய அரசாங்கம் சொல்லுகின்ற கொள்கைகளை எல்லாம் ஒத்துக்கொள்கின்ற இந்த அரசாங்கம், பஞ்சாயத்துக்களினால்தான் இனி எல்லா காரியங்களும் செவ்வனே நடைபெற முடியும் என்று திரு. எஸ். கே. டே போன்றவர்கள் அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதன்படி பஞ்சாயத்துக்கள்தான் இனிமேல் முன்னேற வேண்டும் என்று நினைக்கின்ற இந்த அரசாங்கம் ஆந்திராவிலும், ராஜஸ்தானிலும் ஏற்படுத்தியிருப்பது போன்று இங்கும் ஏற்படுவதற்கு ஏன் தயங்குகிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். நாங்கள் இந்தச் சட்டத்தை பாஸ் செய்கிறபொழுது இதற்கான திருத்தங்களை கொடுத்திருந்தோம். (குறுக்கீடு) எவ்வளவுதான் நாங்கள் திருத்தங்கள் கொடுத்திருந்தாலும் அரசாங்கத்தின் பக்கம் மெஜாரிட்டி இருக்கின்ற காரணத்தால் அவர்கள் எதையும் செய்து விடுகிறார்கள். ஆனால் எங்கள் விருப்பம் அப்போது நிறைவேற்றப்படவில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். உண்மையிலேயே அரசாங்கத்திற்கு நல்லெண்ணம் இருக்குமானால் இனி மேலாவது திருத்தம் கொண்டு வந்து பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கு இடம் கிடைக்கிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் எல்லாம் மக்களின் பிரதிநிதிகளுக்கு தலைவராக இருப்பதற்கு வாய்ப்பு அளித்திருக்கின்ற நேரத்தில் இந்த அரசாங்கம் மாத்திரம் ஏன் அது மாதிரி செய்ய முன் வரக்கூடாது என்று கேட்கிறேன்.

இன்றைய தினம் கேரள சர்க்காரோடு பரம்பிக்குளத் திட்டத்தில் உடன்பாடு ஏற்பட்டதைப்பற்றியும், திருத்தணிப் பிரதேசம் தமிழ் நாட்டோடு சேர்ந்ததைப்பற்றி சந்தோஷப்படுவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் செங்கல்பட்டு

[Sri C. Subramaniam] [11th August 1960

பேசவேண்டும் என்பதைப்பற்றி எடுத்துச்சொல்ல எனக்கு கடமையுண்டு. அதல்லாமல் வேஷம் போட்டுக்கொண்டு நான் பேசவில்லை. . .

**MR. SPEAKER:** பிரெஸிடெண்டைப்பற்றி பேசாமல் வேறு விஷயங்களைப் பற்றி பேசுங்கள்.

**SRI A. GOVINDASAMI:** மேலும் இந்தச் சபையில் சுவர்களை எல்லாம் ஆபாசப்படுத்துவதை தடுக்கவேண்டும் என்பதற்காக நமது நிதி அமைச்சர் அவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆட்சேபகரமான சுவரொட்டிகளை ஒட்டக் கூடாது, சுவர்களை ஆபாசப்படுத்தக்கூடாது என்கின்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றினார்கள். ஆனால் இப்போது அந்தச் சட்டத்தை ஒரு கருவியாக வைத்துக்கொண்டு எதிர்க்கட்சி களை அடக்குவதற்கு, அவர்களுடைய பிரசாரங்களை அடக்குவதற்கு முயற்சித்து வருகிறது இந்த அரசாங்கம். சென்னைப் பகுதியில் இப்போது எந்தப்பக்கத்திலும் எதிர் கட்சிகளுக்கு கூட்டம் நடத்துவதற்கு வழியில்லாதபடி செய்திருக்கிறது இந்த அரசாங்கம். சுவற்றில் தான் எழுத முடியவில்லை என்றாலும், ரோட்டில் எழுதுவதையும் தடுத்து விடுகிறது இந்த அரசாங்கம். எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சதியா இது என்று கேட்கவிரும்புகிறேன். வீட்டுச் சொந்தக்காரர்களே சுவரொட்டிகளை ஒட்டிக்கொள்வதற்கு சம்மதித்தாலும் கூட, அந்த இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டப் போகின்றவர்களை கைது செய்து, அவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள். இத்தகைய முறை மாற வேண்டும். சரியான விதத்தில் இந்தச் சட்டத்தை அமல் செய்வதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் இதை துணையாக வைத்துக்கொண்டு எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்கு முயற்சிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***SRI N. R. THIAGARAJAN:** தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரை மீது ஆதரித்துப் பேசுமுன், கவர்னர் அவர்
10.00 a.m. களுடைய உள்ளத்திலே எது உறுத்திக்கொண்டு இருந்ததோ—அதாவது மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலை நிறுத்தம்—அது தான் எனது உள்ளத்திலேயும் உறுத்திக்கொண்டிருந்தது. மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலைநிறுத்தம் வாராமல் இருக்கவேண்டும் என்று எதிர் பார்த்தவர்களில் நானும் ஒருவன். வேலை நிறுத்தம் எப்படியோ வந்து விட்டது. வந்துவிட்ட பிறகு அவர்களே வாபஸ் வாங்கி விட்டார்கள்—வேலை நிறுத்தம் முடிந்து விட்டது. நமது மாநில சர்க்காருக்கு இந்த வேலை நிறுத்தம் சம்பந்தமாக மத்திய சர்க்காரிலிருந்து சில ஆலோசனைகள் வந்திருப்பதாகத் தெரிகிறது. அதாவது வேலை நிறுத்தம் செய்த மத்திய சர்க்கார் ஊழியர்கள் விஷயத்தில் அனுதாபமாக நடந்துகொள்ளுங்கள் என்று கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நான் மாநில சர்க்காரைக் கேட்டுக் கொள்வதெல்லாம், அனுதாபம் அவர்கள் விஷயத்திலே காட்டவேண்டியதுதான்—குறைந்த சம்பளத்தில்



11th August 1960] [Sri N. R. Thiagarajan]

அதிக வேலை வாங்குகிறார்கள் என்று வேலைக்கு வராமல் இருந்தார்கள். ஆகையால்—இப்போதும் வேலை செய்ய வேண்டாம், உங்கள் மீது அனுதாபம் காட்டுகிறோம், தயவு செய்து வீட்டிலேயே இருந்துவிடுங்கள் என்று கூறி, இது தான் நாங்கள் உங்களுக்குக் காட்டும் அனுதாபம் என்று அரசாங்கம் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய சர்க்கார் ஊழியர்கள் ஏதோ டாட்டா, பிர்லா, டால்மியா போன்ற கம்பெனிகளில் வேலை செய்வதாக நினைத்துக் கொண்டு, சர்க்கார் என்று ஏதோ ஒன்று தனியாக இருக்கிறது, அதற்கு எதிராக இந்த வேலை நிறுத்தம் என்று நினைத்துக் கொண்டார்கள் போலும். மற்ற இடங்களில் எப்படியோ. எங்கள் ஊரில் இந்த வேலை நிறுத்தம் பொது மக்களுக்கு எதிரானது என்பதைத் தெரிந்து கொண்டார்கள். போஸ்டல் உத்தியோகஸ்தர்கள் இருக்கக் கூடிய வீட்டுக்குப் பொது மக்கள் போய் வேலை நிறுத்தம் செய்தால் நாங்கள் உங்களுடன் பேச மாட்டோம், அந்த மாதிரி எங்கள் காங்கிரஸ் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள், நாவிதர்கள் உங்களுக்கு க்ஷவரம் செய்ய மாட்டார்கள், சலவைத் தொழிலாளர்கள் உங்கள் துணிமணிகளை எடுத்துச் செல்லமாட்டார்கள், ஓட்டல்களில் உங்களுக்கு காப்பி, பலகாரம் வழங்க மாட்டார்கள், வேலை நிறுத்தம் எங்களுக்கு எதிரானது என்று ஒவ்வொரு தபால் இலாகா சிப்பந்தி வீட்டிற்கும், டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் சிப்பந்தியின் வீட்டுக்கும் சென்று கூறினார்கள். அதன் பிறகு அங்கு எப்படி வேலை நிறுத்தம் நடைபெறும்? அலுவலகங்களுக்கு 8 மணிக்குச் செல்லவேண்டியவர்கள் 7-45 மணிக்கே சென்று நுழைந்து கொண்டார்கள். அதனால் தான் படு தோல்வி அடைந்து இவ்வளவு சீக்கிரமாக வாபஸ் வாங்கிவிட்டார்கள். அவர்களுக்கு அனுதாபம் காட்ட வேண்டும். சம்பளம் போதவில்லை என்று கூறுவதைக் காட்டிலும் "உங்களால் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்ய முடியாது, வேறு வேலைக்குப் போய் விடுங்கள்" என்று வேலைக்கு வராமல் இருந்து கொண்டவர்களுக்கு பிரிவு உபசாரப் பத்திரம் ஒன்று வாசித்தளித்து அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதைத் தான் மறைமுகமாக கவர்னர் அவர்கள் நினைத்திருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் உரையிலே திருத்தணியைப் பற்றி கூறியிருக்கிறார். அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி வாசிகள் முன்பு வந்துசேர்ந்தார்கள். வந்து சேர்ந்தவுடன் இங்கே பிறந்த வீட்டுப் பெருமையையே பேசிக்கொண்டிருந்தார்கள். அதே நேரத்தில் திருத்தணி வாசியாக இருக்கின்றவர் நல்வரவு கூறும் வகையில், வாழ்த்துக் கூறும் வகையில் புகுந்த வீட்டுப் புகழ் பாடிக்கொண்டு வந்தார். ஆறு மாதத்திற்குள் வேலை நன்றாக இருக்கிறது என்று சந்தோஷப்பட்டிருக்கிறார். அதைக் கண்டு நானும் சந்தோஷப்படுகிறேன்.

மூன்றாவதாக, மொழிப் பிரச்னையில் இந்த நாட்டிலே இந்தியை எதிர்க்கப்போகிறோம் என்று ஒரு கூட்டத்தார் கறுப்புக் கொடி காட்டவேண்டுமென்று ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். இப்போது நல்ல வகையில் தமிழன் பண்பாடு காக்கப்படும் முறையில் வாபஸ் வாங்கிக்கொண்டார்கள். ஏதோ நேருஜி உறுதி மொழி, ராஜன் பாபு அறிக்கை என்று ஒரு சால்ஜாப்பைக் கூறி எப்படியோ புத்திசாலித்தனமாக இந்த இயக்கத்தை விட்டு விட்டார்கள். நான் நேரு அவர்கள் முன்பு கூறியதையும் படித்துப் பார்த்தேன், இப்போது கூறியதையும் படித்துப் பார்த்தேன்.

SRI P. U. SHANMUGAM : நேரு கொடுத்த வாக்குறுதியை சால்ஜாப்பு என்று சொல்லுகிறார். அம்மாதிரி இந்த மன்றத்தில் சொல்வது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

SRI N. R. THIAGARAJAN : நேரு அவர்களின் வாக்குறுதியைப் பற்றிக் கூறவில்லை. ஏதோ சால்ஜாப்புக் கூறி இவர்கள் வாபஸ் வாங்கிக்கொண்டார்கள் என்றுதான் சொன்னேன். எப்படியோ பண்போடு நடந்து கொண்டார்கள். இதற்கு முன்பு எனக்கு இவர்களைப் பற்றி உயர்வான எண்ணம் கிடையாது. இப்போது இதை வாபஸ் வாங்கிக்கொண்ட பிறகு சற்று நினைக்கும்படி ஏற்பட்டிருக்கிறது. இப்போதுதான் நம் தமிழ் நாட்டுப் பண்பாடு காப்பாற்றப்பட்டது. ஏதோ புத்திசாலித்தனமாக யோசனை செய்து வாபஸ் வாங்கி விட்டார்கள். நாட்டுப் பிரிவினை, இனத் துவேஷம் இவைகளை ஒழித்துவிட்டால் இங்கு மட்டுமல்ல இந்திய பாராளுமன்றத்திலும் கூட பிரதான எதிர் கட்சியாக இருக்கவேண்டுமென்று விரும்புவேன். இதை நான் சொல்லவில்லை. அவர்கள் கட்சியிலிருந்து விலகிய ஒருவரே கூறியிருக்கிறார். "இன வெறி அதிகமாக இருக்கிறது, ஆகையால் அதிலே இருக்க முடியவில்லை" என்று கூறியிருக்கிறார். இன வெறி, நாட்டுப் பிரிவினை ஆகிய இரண்டையும் விட்டு விட்டால் நல்ல எதிர் கட்சியாக இருக்க முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றி ஐந்தாவது பாராவில் கூறியிருக்கிறார். போட்ட கணக்குக்கு மேல் செலவு செய்து திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன. பெரியார் மின்சாரத் திட்டம் வைகை அணைக்கட்டுத்திட்டம் எல்லாம் கோடி கணக்கில் செலவு செய்யப்பட்டு நிறைவேறியிருக்கின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி மதுரை ஜில்லாவைப் பொறுத்த வரையில் ஒரு புத்தகம் இருக்கிறது. இந்தப் புத்தகத்தில் கண்டுள்ளவை பெரும்பாலும் நடைபெறவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மராமத்து சம்பந்தமாக ஒரு புத்தகம் கூட இருக்கிறது. அந்தப் புத்தகத்தில் கண்டுள்ளவைகளும் பெரும்பாலும் நடைபெறவில்லை. கல்வி இலாகாவைப் பொறுத்த வரையில் நன்றாக கவனித்துக் கொண்டால் போதும், கல்வி நன்றாகப் பரவினால் போதும் என்று இருந்து விடக்





கூடாது. மின்சாரத்தைப் பொறுத்த வரையில் நமது இலாகா நன்றாக வேலை செய்கிறது என்று அவர் பேசாமல் இருந்து விடக் கூடாது. எல்லா இலாகாக்களும் சரியாக இருக்கின்றனவா, வேலைகள் சரிவர நடைபெற்றிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான அரசாங்கத்தை நடத்தி வந்தாலும், மனதில் உள்ளதைக் கூற வேண்டியிருக்கிறது. இந்தப் புத்தகத்தில் போட்டுள்ளபடி சில திட்டங்கள் அதிகமாக நடந்திருக்கின்றன. எங்கள் தாலுகாவில் நான்கு உயர்நிலைப்பள்ளிகள் இருந்தன, ஆனால் இப்போது 22 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இப்போது பள்ளி இல்லாத ஊரே கிடையாது. மூன்று மைலுக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய தாலூகாவில் மூன்று கிராமங்களுக்குத்தான் மின்சாரம் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது 100 கிராமங்களுக்கு மேல் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு எம்.எல்.ஏ.-யின் தொகுதியை எடுத்துக்கொண்டாலும் இன்னின்ன காரியங்கள் நடந்திருக்கின்றன என்று கண்டு கொள்ளக்கூடிய வகையில் வேலை நடக்க வேண்டும். இன்றைய தினம் பார்த்தால் கல்வி இலாகா, மின்சார இலாகா தவிர மற்ற இலாகாக்களில் சரிவர வேலை நடைபெறவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய தஸ்தாவேஜுகள், ரெக்கார்டுகள் வைத்திருக்கிறேன். அமைச்சர்கள் அதை நன்றாகப் பரிசீலனை செய்து நடைபெற்றிருக்கிறதா என்று பார்த்து, நடைபெறவில்லையானால் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள்ளாகவாவது வேலைகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி பேசிய கவர்னர் அவர்கள் விலைவாசி கூடிக்கொண்டு வருகிறது என்று கூறியிருக்கிறார். அதற்கு நாம்தான் காரணம்—நம் சர்க்கார்தான் காரணம். "மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு 7 கோடி ரூபாய் கொடுத்தார்கள், யாரைக் கேட்டுக் கொண்டு கொடுத்தார்கள்? எங்களைக் கேட்டார்களா கொடுப்பதற்கு முன்னால்? எங்களைத்தான் கேட்கவில்லையென்றாலும் என். ஆர். தியாகராஜனையாவது கேட்டார்களா?" என்று ஒருவர் கேட்டார். ஏழு கோடி ரூபாய் கொடுத்ததன் பலன் மார்க்கெட்டுக்குச் சென்று பார்த்தால் கடைக்காரர்கள் கூறுகிறார்கள் விலைவாசி கூடி விட்டது என்று. சென்ற சட்ட சபைக் கூட்டத்திற்கு வந்தபோது ஒரு ரூபாயாக இருந்த அரிசி இப்போது 1 ரூபாய் 2 அணாவாக ஆகியிருக்கிறது. அவர்களைக் கேட்டால் முதல் தேதியிலிருந்து 10 தேதி வரையில் சர்க்கார் ஊழியர்கள் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு போய் விடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். விலைவாசி உயர்வுக்குக் காரணம் நாம் சம்பளம் அதிகமாகக் கொடுப்பது தான். சம்பளம் அதிகமாகக் கொடுப்பதைவிட அண்டை நாடுகளிலிருந்து அரிசி போன்ற உணவுப் பொருள்களை வாங்கி குறைந்த விலையில் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப் பரிசீலிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri N. R. Thiagarajan] [11th August 1960

அடுத்தபடியாக கவர்னர் அவர்கள் தஞ்சை உணவுத் திட்டத்தைப்பற்றி பேசியிருக்கிறார். தஞ்சை ஜில்லாவிலே எனது கணக்குப்படி 15 லட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. ஏக்கருக்கு 30 கலம் விளைந்தால் கூட தமிழ்நாட்டு மக்களுக்கு ஆளுக்கு மூன்று மூட்டை நெல் கொடுக்கலாம். உணவு நெருக்கடி வருவதற்கே வழியில்லை. வேறு நாடுகளுக்குக் கூட ஏற்றுமதி செய்ய முடியும். எனது ஜில்லாவையே எடுத்துக்கொண்டாலும் பெரியார் பாசனத்தின் கீழ் 1½ லட்சம் ஏக்கர்கள் இருக்கின்றன. ஒரு ஏக்கருக்கு 30 மூட்டை நெல் விளைகிறது என்று வைத்துக் கொண்டாலும் 90 லட்சம் மூட்டை விளைகிறது. அங்குள்ள மக்களுக்கு மூன்று மூட்டை வீதம் கொடுத்து விட்டு பாக்கி கூட இருக்கும். எனது தொகுதியில், எனது தாலூகாவில் 30 கலம் அல்லது 40 கலத்திற்கும் அதிகமாக விளைவிக்கிறார்கள். ஒவ்வொரு விவசாயியும் 30 கலத்திற்குக் குறைவாக விவசாயம் செய்யக் கூடாது என்றும் அவ்வாறு 30 கலத்திற்குக் குறைவாக விவசாயம் செய்தால் தண்ணீர் கொடுப்பதில்லை என்று கூட சட்டம் போடலாம். இந்த முறையில் விவசாயம் செய்தால் ஜில்லாவிற்கு 10, 15 லட்சம் ஏக்கர் கூடத் தேவையில்லை; ஒன்று அல்லது ஒன்றரை லட்சம் ஏக்கரே போதுமானது என்று சொல்ல விரும்புகிறேன். அப்படியிருந்தால் தஞ்சாவூர் அரிசியை வைத்துக் கொண்டு இந்த நாடே வாழ முடியும் என்று சொல்லிக்கொண்டு கவர்னர் பெருமானுடைய உரையை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri C. N. ANNADURAI :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தமுறை கவர்னருடைய பேருரையின் மீது நான் எடுத்துச் சொல்ல இருக்கின்ற கருத்துக்களின் அளவையும், அதனுடைய சிக்கலையும் என்னுடைய கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில் எடுத்துச் சொல்லி என்னுடைய சுமையை வெகுவாகக் குறைத்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் இதற்கு எதிரான கருத்துக்களை எடுத்துச் சொன்ன காலத்தில், மற்ற கனம் அங்கத்தினர்களும் கவர்னர் பேருரையிலே இருக்கக் கூடிய குறைகளை நல்ல முறையிலே அலசிக் காட்டி "என்றாலும் நாங்கள் வரவேற்கிறோம்" என்ற முறையிலே தங்களுடைய பேச்சை முடித்திருக்கிறார்கள். என்னுடைய அலுவல் குறைந்திருக்கிறது என்பது மட்டுமல்ல; கவர்னர் பேருரையின் மீது நாங்கள் கொண்டிருக்கின்ற கருத்துக்களை எடுத்துச் சொல்லும் நேரத்தில் அது ஆளும் கட்சியினரால்—அமைச்சர்கள் உள்பட எந்த வகையிலும் அளவிலும் கவனிக்கப்படுகிறது என்பதைப் பார்க்கும் நேரத்தில், இவைகளைப்பற்றி விரிவாகப் பேசிக் கொண்டிருப்பதால் ஏதாவது பலன் கிடைக்குமா என்றால் இல்லை. விருப்பு வெறுப்பு இல்லாமலும், கட்சிக் கண்ணோட்டத்தில் பிரச்னைகளைக் கவனிக்காமலும் எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்ட உணர்ச்சியுடன் செயலாற்றி இந்த மாகாணத்திற்குப் பெருமை தேடித்தரவேண்டுமென்று கவர்னர் பெருமான் தம்முடைய பேருரையில் வலியுறுத்திச் சொல்லியிருப்பதை அமைச்சர்களும் அடிக்கடி



11th August 1960] [Sri C. N. Annadurai]

தங்களுக்குக் கவனத்திற்கு வருகிற நேரத்தில் எடுத்து விளக்கியிருந்தும்கூட, ஒவ்வொரு முறையும் எங்கள் கழகத்தின் சார்பில் எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் எள்ளிநகையாடப்பட்டு எரிச்சலூட்டப்படுகின்றதே தவிர முன் பின் நடவடிக்கைகளை ஆராய்ந்து, உள்ளபடியே சொல்லப்படுகின்ற குறைபாடுகளை உணர்ந்து கவனிக்கத்தக்க அக்கறை இந்த அமைச்சரவைக்கும், ஆளும் கட்சிக்கும் இல்லாமலிருப்பதைப் பார்த்து மிகுந்த வருத்தமடைகிறேன்.

கவர்னர் பெருமான் தம்முடைய உரையிலே எல்லா நிலைமைகளும் திருப்தியாக இருக்கிறது என்று சொல்லியிருந்தாலும் அவரும் அதை வெளிப்படையாகக் கூறவில்லை. இந்த நாட்டை ஆளுகின்றவர்களாக இருந்தாலும் கூட, அவர்கள் இன்று இருக்கும் நிலைமை போதுமானது, திருப்திகரமாக இருக்கிறது என்று பூரித்துக்கொள்ள இயலாத நிலையிலேதான் நாட்டில் பல்வேறு சிக்கல்கள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன. எடுத்துக் காட்டாகச் சொல்லவேண்டுமானால், கவர்னர் பெருமான் தம்முடைய உரையிலே "அகவிலையைக் கட்டுப்படுத்தவில்லை என்றால் மக்களுடைய வாழ்க்கைத்தரம் குறைந்து சிக்கல்கள் அதிகமாகி விடும்" என்பதை ஒவ்வொரு முறையும் வலியுறுத்திச் சொல்லி வருகிறார். இந்த விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் இந்த ஆட்சியிருக்கிறது என்று நம்பி இந்த மன்றத்திற்கு வெளியே உள்ளவர்கள் இவர்களைப் பதவியில் அமர்த்தியிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் கடை வீதியில் இருப்பவர்களைப் போல், சாலையோரத்தில் இருப்பவர்களைப் போல், அடுப்படியில் இருப்பவர்களைப் போல் அதே பாணியில் பேசிக் கொண்டு இங்கே ஆட்சிப் பொறுப்பில் உட்கார்ந்து கொண்டு "விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவேண்டும்" என்று யாரைப் பார்த்துச் சொல்லுகிறார்கள்? இன்றைக்கு இவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற காரணத்தால் நாம் இவற்றை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்கிறோம். இங்கே எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்களை இவர்கள் உள்ளபடியே உதாசீனப்படுத்துகிறார்களே தவிர யோசித்துப் பார்ப்பதில்லை. உள்ளே பேசினாலே கவனிப்பதில்லையென்றால் வெளியே பேசினால் இவர்கள் கவனிக்கப் போகிறார்களா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு கட்சி ஆட்சி மிகப் பலம் பொருந்தியதாகத் தெரிகிற நேரத்தில் அவர்கள் மற்றக் கட்சியினர் சொல்லுகின்ற குறைபாடுகளை அக்கறையுடன் கவனித்துச் செயலாற்றுவது அந்தக் கட்சிக்கு மட்டுமல்ல; அந்த ஆட்சிக்கே, நாட்டுக்கே நல்லது என்பதை அவர்கள் உணர வேண்டும். நம்மிடத்தில் இருக்கும் பலம் அசைக்க முடியாதது என்று அவர்கள் எதிர்க்கட்சிகளை அசிரத்தையாக நினைத்தால்—நான் அவர்களுக்குக் கவனமூட்ட விரும்புகிறேன்—அவ்வித அரசுகள், எதேச்சதிகார ஜனநாயக அரசுகள் கவிழ்க்கப்பட்டு விட்ட சரித்திரத்தை ஓய்வு நேரத்தில் ஆட்சியாளர்கள் படித்துப் பார்க்கவேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[Sri C. N. Annadurai] [11th August 1960

விலைவாசிகளைக் குறைப்பதற்காக இந்த ஆட்சி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று துருவித் துருவிப் பார்க்கின்ற நேரத்தில் ஒவ்வொரு முறையும் "விலைவாசிகள் ஏறி விட்டன" என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, இப்படிக் குறிப்பிட்டிருக்கிறோம் என்ற புள்ளி விவரக் கணக்கை எடுத்துச் சொல்லக் கூடிய அவல நிலையிலேதான் இருக்கிறார்களே தவிர வேறில்லை. இதைச் சொல்லும் நேரத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சிக் கொரடாவாக இருக்கும் திரு. கருத்திருமன் அவர்கள் நெல், அரிசி விலை மட்டுந்தான் ஏறிவிட்டது என்று சொல்லுவது போல் பேசியிருக்கிறார். உணவுப் பொருள்களின் விலைவாசி குறையவேண்டுமென்று சொல்லும் நேரத்தில், நெல், அரிசி ஆகியவற்றின் விலை மட்டும் குறைந்தால் போதாது, உழவன் உற்பத்தி செய்வதற்குப் பயன் படக்கூடிய கருவிகளின் விலையும் குறையத்தான் வேண்டுமென்பது உள்ளடங்கியதுதான். கனம் கருத்திருமன், நெல், அரிசி முதலியவற்றின் விலையைக் குறைப்பதன் மூலம் உழவர்கள் தங்களுக்கு வேண்டிய மண்வெட்டி, ஏர் போன்ற கருவிகளை வாங்க முடியாத நிலைமையில் செயலற்றவர்களாகிவிடுவார்கள் என்றார். அவர்களை இந்த நாட்டிலே செயலற்றவர்களாக்க வேண்டுமென்ற முறையிலே யாரும் வாதாடவில்லை என்பதை அவருக்கு எடுத்துச் சொல்லுவதன் மூலம் மற்றவர்களுக்கும் தங்கள் மூலமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இந்த 10, 15 ஆண்டு காலத்தில் விலைவாசி ஏறிக்கொண்டேயிருக்கிறது என்று ஆட்சியாளர்களும், ஆட்சியாளர்களுக்கு அவ்வப்போது ஆலோசனை சொல்கிற பொருளாதார நிபுணர்களும் சரியான முறையில் வகுத்துக்காட்டவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இரண்டொரு தினங்களுக்கு முன்னால், டில்லியில் பொருளாதார நிபுணர்கள் இந்த இந்தியத் துணைக் கண்ட பிரதம அமைச்சரின் முன்னால் உட்கார்ந்து இந்த விலைவாசிகளின் ஏற்றத்திற்குக் காரணம் என்ன என்பதுபற்றிப் பேசிய பேச்சைப் படித்துப் பார்த்ததில் அவர்களுக்குள்ளாகவே ஒருமித்த கருத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இப்படிப் பட்ட சிக்கல் நிறைந்த இப் பிரச்னையைப்பற்றி எதிர்த்தரப்பில் சொல்லப்படுகிற குறைபாடுகளைப் பரிசீலிக்க வேண்டுமென்றும், அவர்களைக் கலந்து வழிவகைகளை வகுக்கலாம் என்றும் கூற விரும்புகிறேன். அதை விடுத்து இரு முறை கவர்னர் உரையில் "அகவிலை குறைக்கப்பட வேண்டும்" என்று எடுத்துச் சொல்லி விட்டால் விலைவாசிகள் குறைந்துவிடாது என்பதை மட்டும் பணிவோடு இந்த மன்றத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இந்த அகவிலையைக் குறைப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளாமல் நீங்கள் எத்தனைதான் திட்டங்களைத் தீட்டினாலும், அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பெரும் பெரும் நிபுணர்களைக் கலந்தாலோசித்தாலும், வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகை கடனாகவோ, தானமாகவோ தரப்பட்டாலும், எவ்வளவு அதிகமான வரிச் சுமையை இந்த நாட்டு மக்கள் மீது சுமத்



11th August 1960] [Sri C. N. Annadurai]

தினாலும் இந்தத் திட்டங்களுக்கு முழு வெற்றி கிடைக்காமல் போய்விடும்; நல்ல பலனைத் தராது என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆட்சி விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வில்லையென்ற குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

"சுதந்திரப் போராட்ட காலத்தில் எங்கே போயிருந்தீர்கள்?" என்று காங்கிரஸ் கட்சிக் கொரடா, ஏதோ போராட்ட காலத்தில் ஆள் சேர்க்கும் வேலை இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததைப் போலவும், இவர் தேடித் தேடிப் பார்த்த நேரத்தில் நாங்கள் யாரும் சிக்காமல் இருந்ததைப் போலவும், தளபதி பட்டத்தைத் தன்னிடம் தந்துவிட்டதைப் போலவும் பேசினார். யார் யாரோ தளபதியாகும்போது கனம் கருத்திருமன் அவர்கள் தளபதியாவதில் தவறில்லை. உண்மையிலேயே சொல்ல விரும்புகிறேன்—நான் இருந்த இடம் உங்களுடைய மாணிக்கவேலு பக்கத்தில்; நான் இருந்த இடம் உங்கள் ஹாஜா ஷெரிப் இருந்த இடத்தில்; நான் இருந்த இடம் உங்கள் சி. ஆர். ராமசாமி இருந்த இடத்தில்; நான் இருந்த இடம் உங்கள் ராஜா சர் முத்தையாச் செட்டியார் இருந்த இடத்தில். ஆனால் அவர்கள் எல்லாம் இன்றையதினம் உங்கள் கட்சியில் இருக்கிறார்கள் என்பதாலும், நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறோம் என்பதாலுந்தான் பொறுப்புள்ள ஒருவர் அவ்வாறு பேசினார்.

SRI C. R. RAMASWAMI : Sir, I was never a member of the Justice Party.

SRI C. N. ANNADURAI : கனம் ராமசாமி அவர்கள் என்னுடைய வாதத்திற்கு வலுவூட்டுகிறார்கள். அப்போது அவர் காங்கிரஸ் கட்சியில் கூட இல்லை.

(Sri K. S. G. Haja Sheriff rose.)

SRI C. R. RAMASWAMI : நான் 1938-லிருந்தே காங்கிரசில் இருக்கிறேன்.

MR. SPEAKER : If any hon. Member wants clarification I will give a chance to him at the end of the speech of the hon. Member Sri Annadurai. So let hon. Members do not disturb him please.

SRI C. N. ANNADURAI : அவர்களெல்லாம் இன்றைய தினம் ஆளும் கட்சியினுடைய திட்டங்களை ஆதரிக்கிறார்கள், அல்லது அதிலே சில பேர் தங்களுடைய மனதிலே இருக்கும் குமுறலை, அரசியல் நாகரீகத்திற்காகவோ, கட்சிக் கட்டுப்பாட்டுக்காகவோ, அல்லது சலுகைகள் கிடைக்காமல் போய்விடும் என்று அஞ்சுவதினாலோ, வெளிப்படுத்தாமலிருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களை அணைத்துக்கொள்ளத் தவறாத காங்கிரஸ் கட்சிக் கொரடா, எதிர்த் தரப்பிலுள்ள எங்களைப் பார்த்து, "நீங்கள் அப்பொழுது என்ன செய்தீர்கள்?" என்று கேட்டு, அவர்களுக்கு இருக்கும் இராமாயண ஞானத்தை நேற்றையதினம் இங்கே காட்டிக்கொண்டு அங்கதனைப்பற்றியும், இராவணனைப்பற்றியும் சொன்னார்கள்.

[Sri C. N. Annadurai] [11th August 1960

அங்கதன் இராவணனைப் பார்த்துக் கேட்டதற்கு அப்பொழுது இராவணன் என்ன பதில் சொன்னான் என்பதை, இராமாயணத்தை அவ்வளவு படிக்காத காரணத்தால் எனக்குத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், எண்ணிப் பார்க்கும் நேரத்தில், இராவணன் என்ன பதில் சொல்லி இருந்திருப்பான் என்று கருதுகிறேன் என்றால், "ஏடா, மூடா, தந்தைக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு நீ இவ்வளவு தைரியமாகப் பேச வந்துவிட்டாயாடா?" என்று ஒரு சமயம் இராவணன் கேட்டிருக்கக்கூடும். அப்பொழுது எழுதப்படாவிட்டாலும் இனி எழுதி இணைக்கப்படும் என்று இராமாயண நிபுணருக்கு நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், பழைய புராணங்களிலிருந்து ஆதாரங்கள் எடுத்துக்கொண்டு அலசுவது என்றால் சபையிலே நேரம் போதாது; நேரம் இருக்குமானால், எழுதியவருக்கே நடுக்கம் எடுக்கும் அளவுக்கு, அதற்கு உட்பொருள் எடுத்து விளக்க அனைவருக்கும் தெரியும். ஆனால், அதற்கு வேறு இடங்கள் இருக்கின்றன என்ற காரணத்தால் அவைகளை எடுத்துச்சொல்லவில்லையே தவிர, கனம் கருத்திருமன் சொல்வது போல, ஒவ்வொரு இடத்திற்கும் அங்கதன், வாலி, சுக்கிரீவன் என்று சொல்லி வால் படைத்த மனிதர்களைச் சபை முன்னால் இழுத்துவந்து, தனது வாதத்திற்குத் துணை தேடுவதைப் பார்த்து நான் மிக்க பரிதாபப்படுகிறேன்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடாதவர்கள் இருந்தாலும் அவர்களையும் சேர்த்து அணைத்துக்கொண்டு ஆட்சி நடத்துவதற்குத்தான் 'குடியரசு' என்று பெயர். இது உண்மையிலேயே புரட்சிக்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட சர்க்காராயிருந்தால், அந்தப் புரட்சிக்கு எதிரிடையாக இருந்தவர்கள் ஒன்று சுட்டுத் தள்ளப்பட்டிருப்பார்கள்; அல்லது நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டிருப்பார்கள்; அல்லது நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டிருப்பார்கள்; அல்லது அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்றால், பர்மாவில் நடந்ததைப்போல, அமைச்சர்கள் கூடியிருக்கும் இடமாகப் பார்த்து, உள்ளுக்குள் தெரியாமல் இருந்துகொண்டு, கையிலே துப்பாக்கியை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு அமைச்சராகத் தேடிப் பார்த்து, அவர்கள் செய்த அக்கிரமங்களைச் சொல்லிச் சொல்லி, சுட்டுத்தள்ளியிருப்பார்கள். நாங்கள் அப்படிப்பட்ட முறைக்குச் செல்லவில்லை; செல்லவும் மாட்டோம்; நீங்களும் அப்படிப்பட்ட முறைக்குப் போகமாட்டீர்கள். ஏனென்றால், நாம் அனைவரும் ஜனநாயகத்தை ஒத்துக்கொண்டு இந்த மன்றத்திலே அமர்ந்திருக்கிறோம். ஆகையால், 'நாங்கள் என்ன செய்திருக்கமுடியும், தெரியுமா' என்று பேசிக்கொண்டிருப்பது உண்மைப் பிரச்னைக்குப் பரிகாரம் ஆகாது; ஜனநாயகத்தை வளர்ப்பதும் ஆகாது. ஆகையால், அகவிலையைக் குறைக்க வழி என்ன என்று எடுத்துச்சொல்லப்படுகிற நேரத்தில், 'அதுபற்றி கூடிக் கலந்து பேசுவோம்' என்று ஒரே ஒரு வரியில் பதில் சொல்வது ஆட்சியாளருக்குக் கண்ணியமே தவிர, ஆட்சியாளர் பொறுப்பை உணர்ந்திருக்கிறார்கள் என்று எடுத்துக்காட்டுமே தவிர, "நீங்கள் எப்படிபட்டவர்கள் தெரியுமா?" என்று உங்கள் வீர தீரத்தைச் சொல்லி, வாதாடிக்கொண்டிருப்பதானது மாலைநேரத்தில் எங்கோ பேச வேண்டிய பேச்சை இங்கே வந்து பேசுகிறார்கள் என்ற



11th August 1960] [Sri C. N. Annadurai]

நிலையை ஏற்படுத்திவிடக்கூடாது. ஆகையால், அந்த முறையிலே இருப்பதால், கவர்னர் தம்முடைய பேருரையில் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்கவேண்டும், நல்லபடி ஒத்துழைத்துப் பணியாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பது ஆட்சியாளர்களாலேயே நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது, கவர்னர் தம்முடைய பேருரையில் குறிப்பிட்டிருப்பது, இந்த நாட்டினுடைய மொழிப் பிரச்னையைப்பற்றி. இந்த மொழிப் பிரச்னையைப்பற்றி என்னுடைய கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இந்த இடத்திலே மிக விளக்கமாக எடுத்துப்பேசியிருக்கிறார்கள். அதைப்பற்றிக்கூட அனுதாபத்தோடு கவனிக்க அவர்கள் தவறிப்போயிருப்பதைப் பார்த்து நான் வருத்தப்படுகிறேன். அதைப்பற்றி பேசப்பட்ட நேரத்தில், கனம் சர்தார் வேதரத்னம் அவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்களை நான் வெகுவாக வரவேற்கிறேன். 'வரவேற்கிறேன்' என்றால், ஆதரிக்கிறேன் என்ற முறையில் அல்ல; உள்ளத்தைத் திறந்து பேசியிருப்பதை நான் வரவேற்கிறேன். அப்படிப்பட்டவர்களை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அப்படிப்பட்டவர் சொல்கிற வாதங்கள் சரியா தவறா என்பது வேறு விஷயம். அதை ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா என்றால், அதுவும் வேறு விஷயம். என்றாலும், தங்கள் உள்ளத்திலே இருப்பதை வெளிப்படையாக எடுத்துப் பேசக் காண்கிறேன். அப்படிப்பட்டவர்கள் மறைமுகமாக எந்தக் காரியத்தையும் செய்யாமல் நேரடியாகச் செய்கின்றார்கள். அந்த வகையிலே அல்லாமல், மொழியைப் பற்றி நாமெல்லோரும் கலந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதிலே முயற்சி எடுத்துக்கொண்டு, சென்னை துரைத்தனத்தைச் சேர்ந்த அமைச்சர்களும், ஆளும் கட்சி அங்கத்தினர்களும் மொழிப் பிரச்னைக்கு யார் யாராலோ என்ன காரணத்தாலோ ஏற்பட்டிருந்த பெரிய நெருக்கடி தவிர்க்கப்பட்டு, உலகம் பூராவும் கூர்ந்து கவனித்து, 'ஐயோ! இப்படியா நடந்தது!' என்று சேதிதக்க ஒரு விபரீதமான நிலைமை தவிர்க்கப்பட்டு, 'கறுப்புக் கொடி காட்டுவது' என்ற நிகழ்ச்சி கைவிடப்பட்டது. அதைப்பற்றி ஒரு வார்த்தை பாராட்டிப் பேச மனம் இல்லாவிட்டாலும், அப்படிப் பாராட்டிப் பேசினால், அதனால் எங்களுடைய கழகத்திற்கு வலு வந்துவிடும் என்ற கிலி பிடித்துக்கொண்டதாலோ, என்னவோ, நேற்றையதினம் காங்கிரஸ் கட்சிக் கொரடா சொன்னபோது, 'சரணாகதி அடைந்துவிட்டார்கள்' என்று சொன்னது உண்மையிலேயே பிரச்னையிலுள்ள சிக்கலை மேலும் அதிகரிக்கச் செய்வதாகும்; அதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். மனிதர்கள் உணர்ச்சிவசப்பட்டவர்கள்—அரசியல்வாதிகள் உட்பட. உணர்ச்சிவசப்பட்ட மனிதர்களை, உணர்ச்சிவசப்பட்ட அரசியல்வாதிகளை, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், அந்த உணர்ச்சிகள் நியாயமான ஆதாரத்தின் பேரில் ஏற்பட்டதா என்று ஆராய்ந்து பார்த்து, அந்த உணர்ச்சிகளுக்கு மதிப்பு அளிக்கவேண்டுமே தவிர, எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்ப்பதுபோல, 'நீங்கள் சரணாகதி அடைந்துவிட்டீர்கள்' என்று காங்கிரஸ் கட்சிக் கொரடா பேசியிருப்பது

[Sri C. N. Annadurai] [11th August 1960

மேலே இருக்கும் பெருந் தலைவர்கள் கையாண்ட ராஜதந்திர முறைக்கு முற்றிலும் முரணாகும். அதுதான் இவர்களுக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசமோ என்றுகூட நான் அஞ்சுகிறேன். உண்மையிலேயே, 'சரணாகதி அடைந்துவிட்டோம்' என்று எங்களைப் பார்த்துப் பேசி, கீர்த்தியோ, கிதாப்போ அவர் கட்சிக்குத் தேடிக்கொண்டார் என்றால், உண்மையிலேயே நம்முடைய நிதி அமைச்சர் பத்திரிகை நிருபர்களை வரவழைத்து, நிலைமையையெல்லாம் எடுத்துச்சொன்ன அந்த அறிக்கையைப் படிக்கின்ற கனம் கருத்திருமன் போன்றவர்கள் 'நிதி அமைச்சர் சரணாகதி அடைந்துவிட்டார்' என்று தப்பாகக் கருதிக்கொண்டிருக்கக்கூடும் என்பதற்காக நான் எடுத்துச் சொன்னேன். இந்தக் கழகக்காரர்கள், அல்லது இந்தி விஷயத்தில் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களைக் கலந்து பேசுவதற்குக் கனிவோடு அழைக்கிறேன் என்று சொன்னார்கள், அமைச்சர் அவர்கள். அவர் ஓரே ஒரு வரியிலும் பதிலளித்திருக்க முடியும். அதாவது, 'அவர்கள் போகிற பாதை தவறானது; சட்டம் தன்னுடைய வேலையைச் செய்யும்' என்று சொல்லியிருக்கக்கூடும். அதுவும் இப்பொழுது அவர்கள் சொல்ல முடியும். சட்டத்தை காப்பற்ற வேண்டிய பெரும் பொறுப்பும், போலீஸ் படையும் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கல்வியமைச்சராக இருப்பதால், பல பாடங்கள் அவர்கள் படித்திருப்பதால், அவர்கள் பத்திரிகை நிருபர்களை அழைத்து இந்தப் பிரச்னையை விளக்கினார். நான் காங்கிரஸ் கட்சிக் கொரடாவைக் கேட்கிறேன்—'சரணாகதி அடைந்தாரா, நிதி அமைச்சர்?' என்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். நிதி அமைச்சர் சரணாகதி அடைந்துவிட்டார் என்று பொருளா? அல்லது அவருக்கு இல்லாத அளவுக்கு அந்தக் கட்சியினுடைய கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்குத்தான் இருக்கிறது என்று மற்றவர்கள் ஏன் முந்திக்கொள்ளவேண்டும் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இப்போதும் சொல்கிறேன்—அந்தப்பிரச்னையிலுள்ள சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒரு முடிச்சு அவிழ்க்கப்பட்டிருக்கிறதே தவிர, பரிபூரணமாக சிக்கல் தீர்க்கப்படவில்லை. இன்னும், கனம் நிதி அமைச்சர் தங்களுடைய அறிக்கையில் கொடுத்திருக்கிறபடி, குடியரசுத் தலைவர் ஆணைக்கும், பண்டித நேருவின் வாக்குறுதிக்கும் ஒன்றுக்கொன்று முரண்பாடு இருக்கிறதா, இல்லையா என்பதுகூட இன்னும் அவர்கள் கொடுத்திருக்கிற அபிப்பிராயமாக இருக்கிறதே தவிர, அறுதியிட்டு, உறுதியாக, உண்டு இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை இல்லை. இதை நன்றாக உணர்ந்த காரணத்தால், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், 'நான் அதைத் துருவித் துருவிப் படித்துப் பார்த்தேன்; ஒரு முரண்பாடும் தெரியவில்லை; என்னுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது இல்லை; இதை மற்றவர்கள் மீது திணிக்கக் கூடாது என்ற காரணத்தால் இரண்டு உயர்தர மேலதிகாரிகளைப் பார்க்கச் சொன்னேன்; அவர்களும் நான் சொன்ன கருத்தை ஆதரித்தார்கள்; அதுவும் போதாது என்று கருதினால், இன்னும் கருத்து வேற்றுமை இருக்குமானால், பொதுவான நிபுணர்களிடத்தில் சென்று கருத்தைக் கேட்கலாம் வாருங்கள்' என்று எடுத்துச்சொன்ன கனிவை, ராஜதந்திரத்தை நான் பெரிதும் போற்றுகிறேன். அவர்கள் மேல்நாட்டுக்குப் போவதற்கு முன்னால் ராஜதந்திர உணர்வு அவர்களுக்கு வந்திருப்பது பற்றி நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.



11th August 1960] [Sri C. N. Annadurai]

THE HON. SRI R. VENKATARAMAN: ராஜதந்திரம் மேல்நாட்டிலேதான் இருக்கிறதா? நம்மிடத்தில் இல்லையா?

SRI C. N. ANNADURAI: நம்முடைய கனம் தொழில் அமைச்சர் அவர்கள், 'மேல் நாடுகளுக்குப் போவதற்கு முன்பே' என்று நான் சொன்னது மேல்நாட்டு ராஜதந்திரத்தைப் பாராட்ட என்று எடுத்துக் கொண்டுவிட்டார். என்னுடைய அடுத்த வாக்கியத்தைத் தொழில் அமைச்சர் அவர்கள் பொறுமையோடு கேட்டிருந்தால் இப்பொழுது குறுக்கிட்டிருக்கமாட்டார். மேல்நாடு போவதற்கு முன்பே இந்த ராஜதந்திர உணர்ச்சி அவர்களுக்கு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன், என்று சொன்ன நேரத்தில், மேல்நாட்டிலிருக்கும் ராஜதந்திர முறைப்படி எதிர்ப்புகளைச் சமாளிக்க எதையாவது சொல்லிவிடக்கூடிய அந்த ராஜதந்திரத்தை அங்கிருந்து கற்றுக்கொண்டு வரவேண்டாம் என்றுதான் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

எதிர்ப்பாளர்கள் எதை உண்மையாக, மனதார நம்பிச் சொல்கிறார்களோ, அதை ஆராய்ந்து பார்த்து, அன்போடு, அனுசரணையோடு கவனிப்பதுதான் உண்மையில் ராஜதந்திரமாகும். அந்த முறையில் அவர்களுடைய அறிக்கை அமைந்திருந்தது கருதி எங்களுடைய உள்ளமே கொஞ்சம் ஆடியது. ஆனால், காங்கிரஸ் கட்சிக் கொரடா அவர்கள் நேற்று பேசிய பேச்சினால் நாங்கள் ஆடிவிட்டிருப்போம் என்று அவர் கருதினால், அது சரியல்ல; அது எங்களைப் பலப்படுத்திற்று. நிதி அமைச்சர் போன்றவர்கள் கொடுக்கும் அறிக்கைகள்தான், கனிவான அறிக்கைதான் ஓரளவுக்கு எங்கள் உள்ளத்தை ஆட வைக்கிறது. மனித சுபாவம், யார் அணுகி வருகிறார்களோ அவர்களை அணுகிச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துமே தவிர, எழுந்து நின்று, 'ஆகா' என்று கூச்சல் போட்டால், அதற்குப் பதிலாக 'ஓகோ' என்று கூச்சலிடத்தான் மற்றவர்களுக்குத் தோன்றும். இதிலே குரல் வலிமையைக் காட்டுவதிலே ஒரு லாபமும் இல்லை. ஆகையால், இனி நம்முடைய காங்கிரஸ் கட்சிக் கொரடா அவர்கள், இந்த மொழிப் பிரச்னையைப் பற்றிப் பேசும்போது, யார் சரணாகதி அடைந்தார்கள் என்று ஆராயத் தேவையில்லை. இப்பொழுது திட்டவட்டமாக சொல்லுகிறேன். இந்தப் பிரச்னைக்கு நல்ல முற்றுப்புள்ளி 10-30 a.m. வைக்கத்தக்க அளவுக்கு ஒரு முடிவுகட்டப்படவில்லை. இன்றைக்கு குடியரசுத் தலைவர் ஆணைக்கும் நமது பிரதம மந்திரி அவர்களின் வாக்குறுதிக்கும் முரண்பாடு இருக்கிறது என்று கருதுபவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய அறிக்கையை நாம் கூர்ந்து கவனித்துப்பார்த்தால் அவர் இந்தப் பிரச்னையை விளக்குகின்ற நேரத்தில், அவர் ஒரு கருத்தை விளக்கு

[Sri C. N. Annadurai] [11th August 1960]

வதற்கு என்னென்ன பதங்களை கையாண்டிருக்கிறார்கள் என்பது தெரியும். Contrary to; not in consonance with; militating against என்ற ஆங்கிலப் பதங்களை ஒவ்வொரு இடத்திலும் வைத்திருப்பது அவருக்கு இதில் ஏற்படுகின்ற தடுமாற்றத்தை வெளிக்காட்டியிருக்கிறது. அத்தனையும் ஒத்துக் கொள்ளப்படவில்லை. குடியரசுத் தலைவர் ஆணை பிரதம மந்திரியினுடைய வாக்குறுதியை உள்ளடக்கியதாக இல்லை என்ற முறையில் இருக்கிறது. It is complete. நிதி அமைச்சர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவர்களுக்குத் தெரியும். Commission is an offence. Omission is also an offence. குடியரசுத் தலைவர் ஆணையில் பிரதம மந்திரியின் வாக்குறுதி சேர்க்கப்படாமல் இருப்பதும் குற்றத்தின்பாற்பட்டது தான். அவர்களுக்கு உள்ளூர இருக்கும் எண்ணத்தைத் தெரிவிக்கும் வகையில் அதைத் திருத்திக்கொள்வதற்கு modify செய்வதற்கு தேவையானால் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன், வாதாடுகிறேன், போராடுகிறேன், இந்த ஆட்சியாளர்களையே பணிய வைக்கிறேன் என்று சொல்லக்கூடிய அளவுக்கு பேசியிருக்கிறார்கள். இதைப் படித்த நேரத்தில் ஆளும் கட்சியினருக்கு ஒரு நல்ல மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்ற ஒரு எண்ணத்தோடு உள்ளே வந்திருக்கிறோம். அந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சி கொரடா அங்கதன் சொன்னதாக உள்ள பாட்டை பாடுகிறார்கள். அதனால் ஆளும் கட்சியினருக்கு இந்த விஷயத்திலே எந்த வகையான கருத்து இருக்கிறது என்று திட்டவட்டமாக தெரிந்துகொள்ளக்கூடிய அவசியம் இருக்கிறது என்று எங்களுக்கு தோன்றுகிறது.

மொழிப் பிரச்னையில் எல்லா கட்சியினர்களும் ஒப்பம் அளித்து மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்ற கருத்தை நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி உள்ளேயும், வெளியிலும் வலியுறுத்திக்கொண்டு வருகிறார்கள். எல்லாக் கட்சிகளையும் கலந்து ஆலோசிக்கப்பட்டது உண்மை. எங்களுடைய கட்சியின் சார்பில் வந்திருந்த நேரத்தில் ஆங்கிலம் 1965-க்குப் பிறகும் நீடித்து, தொடர்ந்து காலகேடு இல்லாமல் இருந்துவரவேண்டும் என்ற ஒரு வார்த்தைக்குத்தான் நான் ஒப்பம் அளித்தேன் என்று இந்த மன்றத்தில் பல முறை நான் எடுத்துச் சொல்லி, கனம் நிதி அமைச்சர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். அந்த அறிக்கை இங்கே விவாதத்திற்கு வந்த நேரத்தில் எங்களுடைய கட்சி சார்பிலே, நாங்கள் எந்த மக்களுக்கு பிரதிநிதிகள் என்று உண்மையாக நம்பிக் கொண்டிருக்கிறார்களோ அந்த மக்கள் சார்பிலே, எந்த மக்கள் எங்களுடைய பிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென்றாலும், நாங்கள் சொல்லுகின்ற கருத்தை நாளாவட்டத்தில் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறதோ அந்த மக்கள் சார்பில் பல திருத்தங்கள் அந்த அறிக்கைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. கனம் அன்பழகன் அவர்கள் இந்திய அரசியல் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவரவேண்டும், அந்தத் திருத்தம் நிறைவேறுதவரை இந்த மொழிப் பிரச்னைக்கு நிரந்தரமான பரிகாரம் கிடைக்காது என்பதாக ஒரு திருத்தம் கொடுத்து, அது விவாதிக்கப்பட்டு, கனம் நிதி அமைச்சர் அவர்கள் 'இப்படிப்பட்ட மாறுபாட்டை இப்பொழுது எழுப்பாதீர்கள்' என்று கேட்டுக்கொண்டும் கூட, அவர்கள் வார்த்தைக்கு மதிப்பு அளிக்கவேண்டிய பெரும் பொறுப்பு எங்களுக்கு இருந்தாலும் கூட, அவர்களுடைய கனிவு உரை எங்களுக்கு மகிழ்ச்சி அளித்தாலும் கூட, எங்களுடைய கொள்கை நட்பிற்கும் மேற்பட்டது என்ற காரணத்தினால், எங்களுடைய கொள்கை கட்சிக்காக மட்டும் அல்ல, நாட்டிற்காகவும் இருக்கிறது என்ற காரணத்தினால், அதுபற்றி வோட்டு எடுக்கவேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தி, இந்த மன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. எங்கள் தரப்பில் உள்ளவர்கள் இந்திய அரசியல் சட்டத்திற்கு திருத்தம் வேண்டும் என்பதற்கு வாக்களித்து, எதிர் தரப்பில் உள்ளவர்கள் வேறு பல கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகச் சேர்ந்து—எனக்கு கவனம் இருக்கிறது—ஏறக்குறைய 72 உறுப்பினர்கள் அதற்கு எதிரிடையாக வாக்களித்து அந்தத் திருத்தத்தை தோற்கடித்திருக்கிறார்கள். அதுபோலவே, கல்விக்கூடங்களிலும் 3 மொழிகள் படிக்கப்படவேண்டும் என்ற முறையை மாற்றி இரண்டு மொழிகள் இருந்தால் போதும், தமிழும் ஆங்கிலமும் போதும் என்று ஆத்தூர் தொகுதி உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் திருத்தம் கொடுத்து, அதுவும் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை அங்கத்தினர் திரு. ப. உ. ஷண்முகம் சுப்ரீம் கோர்ட்டில் கடைசி வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று ஒரு திருத்தம் கொண்டுவந்து, அதுவும் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய நண்பர் கோவிந்தசுவாமி அவர்கள் பாராளுமன்றத்தில் எந்த மொழியில் பேசினாலும், உடனுக்குடன் அதை வேறு எல்லா மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்து அளித்தாக வேண்டுமென்ற திருத்தத்தைக் கொடுத்து, அதுவும் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய கரத்தில் இருக்கிற, எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற 'Language Problem of India-III Memorandum' மூன்றாவது அறிக்கையில்—நான் கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். இதிலே அதுபற்றி குறிப்புகள் இடம் பெறவேண்டாமா? அதிலே இடம் பெறச் செய்வது ஜனநாயக மரபு அல்லவா? அந்த அறிக்கையை படித்துப் பார்த்தால் சென்னை துரைத்தனத்தார் கொடுத்திருக்கிற கருத்துக்களை எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்று தெளிவுபட எழுதப்பட்டிருக்கிறதே தவிர, அடிப்படையை ஏற்றுக்கொண்டாலும் கூட, அதிலே மிக முக்கியமான பிரச்னைகளில் நாங்கள் மாறுபட்டிருக்கிறோம் என்பதைக் காட்ட அதுபற்றி எங்களால் இங்கே திருத்தங்கள் கொடுக்கப்பட்டு அவைகளெல்லாம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன என்பதாக ஒரு 'அபெண்டிக்ஸ்' இணைப்பு இதிலே சேர்த்திருக்க வேண்டுமா? இப்படி நாங்கள் எல்லோரும் மொழிப் பிரச்னையிலே ஒன்று பட்டிருக்கிறோம் என்று எடுத்துக் காட்டுவதன் மூலம்—நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் எதற்காக இந்த இருட்டடிப்பு செய்ய விரும்புகிறீர்கள்? அதனால் எங்களுக்கு பெருமை தேடிக்கொள்ளவேண்டும் என்று நாங்கள் உங்களைக் கேட்கவில்லை. எங்களுக்கு நாங்களே பெருமை கொள்ள எங்களாலேயே முடியும். எங்களுக்கு நாங்களே பெருமை தேடிக்கொள்ள முடியாவிட்டால் அப்பொழுது உங்களிடம் வரலாம். ஓரளவுக்கு நாட்டு மக்கள் எங்களிடம் வைக்கவேண்டிய மதிப்பை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று எங்களுக்கு



11th August 1960] [Sri C. N. Annadurai]

[Sri C. N. Annadurai] [11th August 1960

இன்று பார்ப்பது, நாம் மேலும் மேலும் அடக்க உணர்ச்சியோடு இருப்பதினால், அவர்கள் எந்த அளவுக்கு இந்தி வெறி தலைவிரித்து ஆடுவதற்கு இடம் அளிக்கிறார்கள் என்பதை கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசியல் சட்டத்தைப் பார்க்கவேண்டுமானால் அதை நன்கு புரிந்துகொண்டிருக்கவேண்டும். கனம் நிதி அமைச்சரவர்கள், ஆசிரியர்போல் ஆசிரியர் வேலை பார்ப்பதில் குற்றம் ஒன்றுமில்லை —படித்ததில், புரிந்து கொண்டிருப்பதில், குடியரசுத் தலைவர், மொழிபற்றி அறிக்கை மீது, அதற்கு ஒரு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று சட்டத்தில் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆணையிடலாம்: 'How may' என்று தான் இருக்கிறது; 'may' implies 'may not' also. ஆகவே, ஆணை பிறப்பித்தும் இருக்கலாம், பிறப்பிக்காமலும் இருக்கலாம். அவர்கள் அவசர அவசரமாக ஆணையிடவேண்டிய அவசியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. இந்திய அரசியல் சட்டத்தை புரிந்து கொள்வது மட்டுமல்லாமல், ஒவ்வொரு வார்த்தையையும், வார்த்தையின் பொருளையும் கூர்ந்து கவனிக்கும் அளவில் அவர்கள் செய்த காரியம் விளங்கவில்லை. ஆகையினால் நான் சொல்லுவேன், மொழி விஷயத்தில், எங்கள் கழகம் கோருவதுபோல், இந்திய அரசியல் சட்டத்திற்கு திருத்தம் ஏற்படும் வரை, சட்ட பூர்வமாக நிம்மதி கிட்டாது, நிலைமை சிக்கலாகவே இருக்கும், அடிக்கடி தொந்தரவுகள் ஏற்படும் நிலை நீடிக்கும் என்று. ஆகவே, இந்த மன்றத்தில், மன்றத்தின் சார்பில் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்ற முடிவு எடுத்து, சட்ட ரீதியாக மொழிப்பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். கவர்னர் அவர்கள் அந்த மொழிப் பிரச்னை குறித்துச் சொல்லும் நேரத்தில், நாட்டு மக்களின் மனதில் எவ்வளவு தூரம் அது ஆங்காரத்தைத் தூண்டியிருக்கிறது, இந்த மாநில மக்கள் எவ்வளவு நிதான புத்தியோடு இருந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லவில்லை. அஸ்ஸாமிலே மக்களைத் தாக்குவதும், அகதிகளாக்கித் துரத்துவதுமான சூழ்நிலை அவர்கள் மாகாணத்தில் இருப்பதும், இந்த மாநிலத்தில், காங்கிரஸ் கட்சிக் கொரடா ராமாயணத்தைச் சொல்லி, கதை சொல்லிப் பேசினாலும், நிதானமான சூழ்நிலை இருப்பதை அவர்கள் குறிப்பிட்டு இருந்தால், உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்திருப்பேன். முதல் ஆண்டிலேயே அவர்கள் நமக்குச் சொன்னார்கள்; நான் வடகோடி மாநிலமாகிய அஸ்ஸாமிலிருந்து வருகிறேன். வடகோடியில் இருந்துகொண்டு இந்தியாவை ஒரே கண்ணோடு நோக்கும் நிலையை நமக்கு எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒருமைக் கண்ணோடு இந்தியாவைப் பார்ப்பவரின் மாநிலத்தில் வங்காளியைப் படுத்தும் பாட்டைப்பற்றி, மொழிப் பிரச்னைமீது இந்தத் திங்கள் 24, 25 நாட்களில் நடக்கவிருக்கும் விவாதத்தின்போது கூறலாம் என்று கருதுகிறேன்.

இறுதியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் நிதியமைச்சரவர்கள் வருந்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆர அமர யோசித்த பிறகே இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். நேற்றைய தினம் கழகத்தைச் சேர்ந்தவர்கள் துரைத்தனத்தார் குழுக்களுடன் சேர்ந்திருப்பதைக் குறித்து மிகக் கேவலமான முறையில், காங்கிரஸ் கட்சிக் கொரடா அவர்கள் பேசினார்கள். கனம் நிதி அமைச்சரவர்கள் இருந்தார்களோ என்னவோ. அவர்கள் சொன்னார்கள், எங்கள் விதி; மக்கள் உங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இனி அந்த சங்கடத்தை நாங்கள் உங்களுக்குக் கொடுக்கவில்லை. நாங்கள் வரவேண்டிய அளவில் வந்து, பெறவேண்டிய பெருமையைப் பெருவோம் என்று நம்பிக்கையோடு கூறுவேன். எங்கள் கழகக் கூட்டங்களில்கூட, எந்தக் குழுக் கூட்டத்து நடவடிக்கைகளிலும் நாங்கள் கேவலமான முறையில் மரபில்லாமல் பேசியது கிடையாது. கனம் நிதியமைச்சர் சொன்னார்கள்; அறிக்கை வெளியிட்டார்கள். நான் எந்த நிருபரையும் கழகக் கூட்டத்திற்கு அழைக்கவில்லை, பத்திரிகை அறிக்கை கொடுத்தது கிடையாது. எந்த விஷயத்தைப் பற்றியும் பகிரங்கமாகப் பேசியது இல்லை. கனம் நிதி அமைச்சர் அறிக்கைக்குப் பிறகு, உங்கள் பதில் என்ன என்று கேட்டதின் பேரில், அவர்கள் பண்டாரக் கதை சொன்னதின் பேரில், நான் ஒரு பாதுஷா கதையை மறுப்பு காட்டத்தக்க வகையில் சொன்னேன். அதுகூட காங்கிரஸ் கட்சிக் கொரடாவிற்கு பொருக்கவில்லை போலும். அரசியல் குழுக்களில் இடம் பெற்று இருப்பதும் அவருக்குப் பிடிக்கவில்லை போலும். கனம் நிதி அமைச்சரவர்கள் அந்தக் கட்சித் தலைவர் மட்டுமின்றி, இந்த சபைக்கும் தலைவராக இருக்கும் காரணத்தினால், தங்கள் மூலம் "உங்களுக்கு சங்கடம் எதற்கு; ஏதோ சேர்த்து வைத்துக் கொண்டோம், கோவிலைத் திறந்ததும் அர்ச்சகர் ஓரமாக நின்றாற்போல், அரசியல் தீண்டாதவர்களாக நினைத்து, உள்ளே இங்கு இருக்கிறார்களே என்று எண்ணி சேர்த்துக்கொண்டு கிட்ட வந்தால் தீட்டு பட்டுவிடுமோ என்று இருக்கிற அந்த சங்கடம் உங்களுக்கு வேண்டாம் என்று நானும், என்னைச் சேர்ந்தவர்களும் உங்கள் குழுக்களிலிருந்து விலகிக் கொள்ளுகிறோம்" என்பதை தெரிவிக்கிறேன். நாங்கள் சொல்லும் கருத்துக்களும், இழிவான முறைகளும் உங்களிடம் வராமல் பாதுகாக்க நாங்களே விலகிக் கொள்ளுகிறோம். உங்கள் திட்டங்கள் இந்த மன்றத்திற்கோ, நாட்டுக்கோ வரும்போது எங்கள் கருத்துக்களைச் சொல்லிக் கொள்ளுகிறோம். இன்று காங்கிரஸ் கட்சிக் கொரடா அவர்கள் தலையில் அடித்துக் கொள்கிறார்கள்; பின்னால் வயிற்றிலே அடித்துக் கொள்வார்கள், இரண்டு கையாலும் அடித்துக் கொள்வார்கள். ஓங்கி ஒரு சமயம் கனம் சுப்பிரமணியத்தையே அடித்து விடுவார்கள். அப்படி சுப்பிரமணியத்தை கொரடாவின் கையில் விடாமல், எங்களுக்கு இடம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு, அகவிலை குறித்தும், மொழிப் பிரச்சினை குறித்தும் சரியானபடி தீர்வுகாணாததாலும், தூத்துக்குடி, சேது சமுத்திரம் திட்டங்கள் பற்றி உத்திரவாதம் இல்லாததாலும், இந்தப் பேருரையை—தமிழ்ப் புலவர்கள் "பேருரை" என்று சொல்வதற்கு தவறாக நினைக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன்—பேருக்கு உரை என்று இருப்பதால், அதைப் பாராட்டவோ, அதைக் கண்டு மகிழ்ச்சியடையவோ இடம் இல்லை என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.





11th August 1960] [Sri C. N. Annadurai]

[11th August 1960

**SRI P. G. KARUTHIRUMAN :** *கனம் சபா நாயகர் அவர்களே, திராவிடக்கட்சித் தலைவர் பேசியபோது, அங்கதன் தூதுபோல் என்று நான் சொன்னதைக் குறித்து என்னைப் பற்றிப் படலம் படலமாக பேசினார்கள். அவர்கள் பேச்சில் பெரும்பாகம் அதிலேயே செலவிட்டார்கள். கம்பராமாயணம் தனக்கு அதிகம் தெரியாது என்றும் குறிப்பிட்டார்கள். அவர்கள் கம்பரசம் எழுதினபிறகுதான் நான் கம்பராமாயணத்தைப் படித்தேன். நேருஜி அவர்களுக்கு சம்பத்து எழுதின கடிதமும் அதற்கு நேருஜி எழுதிய பதிலும், எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது எல்லாரும் அறிவார்கள். ராமாயணத்தில்கூட, அங்கதன் தூதிலும் . .. . . . . . . . . .*

**SRI P. U. SHANMUGAM :** *தலைவர் அவர்களே, அங்கத்தினர் இரண்டாவது முறையாகப் பேச விதி அனுமதிக்கிறதா ?*

**MR. SPEAKER :** *'பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன்' என்று எழுந்து தவறாகப் புரிந்துகொண்ட கருத்தைத் தாங்கள் திருத்தலாம். ஆனால் இரண்டாவது முறை பேச முடியாது.*

**SRI P. G. KARUTHIRUMAN :** *பதிலில் என்னைப்பற்றி குறிப்பிட்டதினால், நான் விளக்கம் தரும் முறையில் சில வார்த்தைகள் சொல்லுகிறேன். திராவிடக் கழகத் தலைவர், எதிர்க்கட்சியைத் தழுவி இருக்கவேண்டுமென்பதை சர்க்கார் கட்சி தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டுகிறார். அங்கதன் தூது அனுப்பின அடிப் படையே "புறத்துறை வலியரேனும், பொறையுடன் பொருந்தி வாழ்தல் ஜயத்துறை அறனும் அஃதே" என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.*

**SRI A. VEDARATHNAM :** *ஸார், 'ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் . . . . . . . . . .*

MR. SPEAKER : The hon. Member can raise, a point of order or give personal explanation, but no 'point of clarification.'

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : *கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரையின்மீது அநேகம் அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். அவர் தன்னுடைய உரையில் எவ்வளவோ குறைகளை நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லிய போதிலும், முக்கியமாக அதை கவனித்தால் அது பெரிய ஏமாற்றத்தைத்தான் அளிக்கிறது என்பதைப்பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை.*

MR. SPEAKER : There is too much noise. I want hon. Members to move out slowly without making noise when they are going out of the Chamber. I hear noise from the galleries. If I hear the noise anymore I will clear the galleries. I want silence.



11th August 1960]

**SRI V. K. RAMASWAMI MUDALIYAR :** *அது ஒரு பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. முக்கியமாக என்ன ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்றால் விலைவாசிகள் உயர்ந்திருக்கிறது என்று சொல்லிவிட்டு அதைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி உரையில் சொல்லவில்லை. அதைப்பற்றி அவருடைய உரையில் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கவேண்டும். விலைவாசிகள் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது. இந்த ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் 500 பாயிண்ட்டுக்கு மேல் ஏறி இருக்கிறது. ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் இன்னும் 700 பாயிண்ட்டுக்குப் போய்விடுமோ என்று கூட தோன்றுகிறது. இன்னும் 1,000 பாயிண்டுக்குக்கூட போய்விடுமோ என்று ஒரு பெரிய கவலையை மக்களுக்கு உண்டு பண்ணி இருக்கிறது. அதனுடைய காரணம் என்னவென்றால் அரசாங்கம் போட்டு நிறைவேற்றி வரக்கூடிய ஐந்தாண்டு திட்டங்கள்தான். ஐந்தாண்டு திட்டங்களைப்போட்டு ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றி வருவதால் அதற்கு எவ்வளவு தூரம் செலவு ஆன போதிலும்கூட அதற்கு ஆகக்கூடிய செலவை மக்களின்மீது வரி மூலமாக சுமத்தி வசூலித்து வருகிறார்கள். அதனால் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் குறைந்துகொண்டே வருகிறது. இதை உண்மையில் வெற்றிகரமாக நடத்த முடியுமா என்பதைப்பற்றி சர்க்கார் திட்டவட்டமாக யோசிக்கவேண்டும். வரிக்குமேல் வரி போட்டுக்கொண்டும், நோட்டுக்களை அதிகமாக அச்சடித்துக் கொண்டு அவற்றை விஸ்தரித்துக்கொண்டு அதன் மூலம் பண வீக்கத்தை அதிகரித்துக்கொண்டும் வருவதுதான் இப்படிப் பட்ட விலைவாசி உயர்வுக்குக் காரணம். அதனால்தான் விலைவாசிகள் நாளுக்கு நாள் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது. அதைப்பற்றி சர்க்கார் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைப்பற்றி கவர்னர் உரையில் ஒன்றையும் காணோம். ஆனால் வருத்தம்தான் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி திட்டவட்டமாக ஒன்றும் சொல்லப் படவில்லை. அதை எவ்விதம் கட்டுப்படுத்தப் போகிறார்கள் என்பதைப்பற்றி ஒன்றும் தெரிவிக்கவில்லை. அதைப் பற்றியேதான் இரண்டு பக்கத்திலும், அங்கத்தினர்கள் எல்லோரும் ஆளும் கட்சியிலும் சரி, எதிர் கட்சியிலும் சரி எடுத்துச் சொன்னார்கள். ஆனால் சர்க்காருடைய நோக்கம் என்னவாக இருக்கும் என்பதைப்பற்றி யோசித்துப் பார்த்தால் கடைசியில் அவர்கள் மறுபடியும் கண்ட்ரோல்களைக் கொண்டு வருவார்களோ என்றுதான் தோன்றுகிறது. கண்ட்ரோல்கள் சில வருஷங்களுக்கு முன்பு இருந்தது. அப்பொழுது அது எப்படி நடைபெற்றது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.*

**(Sri S. Ranganatha Mudaliar in the Chair.)**

*இதற்கு முன்பு கண்ட்ரோல் எப்படி நடந்தது என்பதைப் பற்றி நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. கண்ட்ரோல் என்றால் அதைக் காரணமாக வைத்துக்கொண்டு சர்க்கார்*

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [11th August 1960

துஷ்பிரயோகம் செய்வார்கள், அதிகப்படியான கஷ்டம் ஏற்படும், அதன் காரணமாக 'அபிஷியல் டாமினேஷன்' (official domination) ஏற்படும், 'பேவரிட்டிஸம்' இதற்கெல்லாம் இடம் ஏற்படுகிறது. அதனால் கண்ட்ரோல் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அதன் காரணமாக பொருளாதாரத் துறையில் நஷ்டம் ஏற்படும், எல்லாவிதங்களிலும் ஜனங்களுக்கு கஷ்டம் ஏற்படும். கண்ட்ரோலைக்கொண்டு வந்தால் அதை வைத்துக்கொண்டு யாராலும் நியாயமாக நடத்தமுடியாது. அது திருப்திகரமாக நடக்காது. கண்ட்ரோல் வருவதால் தவறுகள்தான் நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும், அதனால் பலவிதமான ஊழல்கள் ஏற்படலாம். பலர் அதிகப்படியான நஷ்டம் அடைவார்கள். ஆகவே நாங்கள் கண்ட்ரோல் வருவதை ஆதரிக்கவில்லை என்பதை மட்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயத்துறையை எடுத்துக்கொண்டால், இந்த விலைவாசியின் உயர்வின் காரணமாக விளை பொருள்களில் விலையெல்லாம் அதிகமாக உயர்ந்துவிட்டது. 'காஸ்ட் ஆப் கல்டிவேஷன்', அதாவது உற்பத்திச் செலவு ஒன்றுக்கு பத்து மடங்கு அதிகமாகி இருக்கிறது. இதைப்பற்றி நான் ஏற்கனவே புட் அட்வைசிரி கமிட்டியில் சொல்லியும் இருக்கிறேன், அடிக்கடி எழுதியும் இருக்கிறேன். பல அறிக்கைகள் மூலமாகவும் தெரிவித்திருக்கிறேன். (The price should be acceptable both to the consumer and to the producer.) உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் விலை அவைகளை உபயோகிப்போர்கள் வாங்கக்கூடிய அளவில் இருக்கும்படியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அந்த முறையில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அந்த முறையைக் கையாண்டால் எந்தவிதமான கட்டுப்பாட்டுக்கும் தேவையில்லை. உணவு உற்பத்திக்கு அதிகச் செலவு ஆவதால்தான் அதிகப்படியான விலைவாசிக்குக் காரணமாக இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அதிக கூலி கொடுப்பதும் முக்கியமான காரணமாக இருக்கிறது. இதைத் தவிர உரமும் சரிவர கிடைப்பதாக இல்லை. நேற்றுகூட பத்திரிகையில் பார்த்தேன் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் சென்னை மேல் சபையில் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது பதில் சொல்லி இருக்கிறார் "உரங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன, ஆனால் விவசாயிகள்தான் அதை வாங்குவதற்குத் தயாராக இல்லை" என்று. ஆனால் எங்கள் பிராந்தியத்தை எடுத்துக் கொண்டால் . . . . . . . . .

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : அந்தக் கேள்வி தஞ்சை ஜில்லாவைப்பற்றிய கேள்வி. இரண்டு மாதங்களுக்கு முன்னால் உள்ள நிலைமை கிடைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது கிடைக்கிறது என்று சொன்னேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : எங்கள் பிராந்தியத்தில் உரம் கிடைக்கவில்லை. அதனால் அநேகம் பேர்கள் கஷ்டப்படுகிறார்கள். உரம் விநியோகத்தில் கறுப்பு மார்க்கெட்தான்



11th August 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. சர்க்காருடைய கண்ட்ரோல் சரிவர நடைபெறவில்லை. கண்ட்ரோலை சரிவர நடத்தாவிட்டால் ப்ளாக் மார்க்கெட்தான் நடக்கும் என்பதைத் திட்டவட்டமாக கனம் அமைச்சருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கண்ட்ரோல்கள் சரிவர நடந்தால் ப்ளாக் மார்க்கெட்டுகள் இருக்கவே முடியாது. கண்ட்ரோல் இருந்து அது சரிவர நடைபெறாவிட்டால் அந்த மாதிரியான சூழ்நிலையில் விவசாயிகள் அதிகப்படியாகக் கஷ்டப்படுவார்கள்.

அடுத்தபடியாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக வரக்கூடிய அறிக்கைகளைப் பார்த்தால் மறுபடியும் அதிகப்படியாக சர்க்கார் லாண்ட் ரிவினியூ தீர்வை போடப்போவதாகத் தோன்றுகிறது. அப்படிப்பட்ட ஒரு யோசனையையும் கூறியிருக்கிறார்கள். அது ரூபாய்க்கு ரூபாய் அதிகப்படுத்தப் போகிறார்களோ அல்லது ரூபாய்க்கு அரை ரூபாய் வீதம் அதிகப்படுத்தப்போகிறார்களோ தெரியவில்லை. அதைப்பற்றி ஒன்றும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. இப்பொழுதே ஒவ்வொரு வருஷமும் வரி ஏறிக்கொண்டே போகிறது. அதனால் விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் தேர்தல் வரப்போகிறது. அப்பொழுது எந்த வரியையும் போடமாட்டார்கள், அதுவும் கண்டிப்பாக போடமாட்டார்கள். தேர்தல் முடிந்து 1962-க்குப் பிறகு என்னென்ன வரிகளைப் போடப்போகிறார்கள் என்பதைப்பற்றி கொஞ்சம் நிதானித்துப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. எப்படியும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பத்து ஆயிரம் கோடி ரூபாய் இந்தியா பூராவும் செலவு செய்யவேண்டுமென்றால் அதற்கு அதிகப்படியான வரிகள் மூலம் சம்பாதித்தாக வேண்டும். அல்லது கடன் மூலமாகவாவது சம்பாதித்தாக வேண்டும். அப்படிச் சம்பாதித்துத்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மக்களிர்த்தில் திணிக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வரும் என்பதைப்பற்றி சந்தேகம் இல்லை. அதனால் மக்கள் கஷ்டப்படப்போகிறார்கள். இப்போது சமீபத்தில் இங்கிலாந்து தேசத்தில் பார்த்தோம். அங்கு தேர்தல் நடந்தது. அதன் காரணமாக கன்சர்வேடிவ் கட்சியார் No control—but prosperity என்று கோஷித்தார்கள். ஆனால் இங்கு All plan but no prosperity என்று சொல்லும்படியாக இருக்கிறது. அந்த சூழ்நிலை இங்கு வந்திருக்கிறது. இது ரொம்பவும் வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது. இதையெல்லாம் இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி இவைகளையெல்லாம் நன்றாக எடுத்துக்காட்டி பண வீக்கம் ஏற்பட்டால் அதன் விளைவு என்னவாகும் என்பதையும் எடுத்துக்காட்டி அப்படி ஏற்படாதவாறு அதற்கு வழி செய்யவேண்டும். அதற்கு இந்தச் சர்க்கார் முன் வரவேண்டும்.

இரண்டாவதாக சமீபத்தில் நடந்த மத்திய அரசாங்க ஊழியர்களுடைய வேலை நிறுத்தத்திற்கு நாங்கள் எந்த விதமான ஆதரவும் கொடுக்கவில்லை. அதைத் தடுக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட முறைகளையெல்லாம் நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். அதாவது எந்தவிதமான நிகழ்ச்சியும் ஏற்படா

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [11th August 1960

வண்ணம் அதைச் சமாளித்ததற்காக அதைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. முக்கியமாக மக்களிடத்தில் ஒரு நல்ல உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. வேலைநிறுத்தம் செய்தது தவறு என்ற எண்ணம் சாதாரணமாக மக்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதனை சமாளித்ததைப்பற்றி மக்கள் பாராட்டுகிறார்கள். ஆனால் அதே சமயத்தில் இப்படிப்பட்ட வேலை நிறுத்தம் செய்வதற்கு ஏற்பட்ட காரணம் என்ன என்பதைப்பற்றி ஆராய வேண்டியது அவசியமாக இருக்கிறது. பொருளாதாரத் துறையில் மக்கள் கஷ்டப்படுவதன் காரணத்தால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது ஏற்படாமல் அவர்கள் சமாளித்திருக்க வேண்டும். இதை முன்கூட்டியே செய்திருந்தால் இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றிருக்காது. சீனாவிலிருந்து வந்த ரேடியோ செய்திகளிலிருந்து ஏதோ இந்திய பிரதம மந்திரியால் இந்த வேலை நிறுத்தம் சமாளிக்க முடியவில்லை என்றும் இன்னும் ஏதோ சிலர் இதை தூண்டி விட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது. அது எப்படி இருந்தாலும் வேலை நிறுத்தம் வராமல் முன்கூட்டியே நடவடிக்கை எடுத்துக்கொண்டு அதைத் தடுத்திருக்கலாம். ஏதோ நடந்துவிட்டது. அநேகம் உத்தியோகஸ்தர்கள்மீது ஏதோ கேஸ்கள் போடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. எப்படியாவது அவைகளை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள்மீது பழி வாங்கும் முறையைக் கைவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப்பற்றி நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்லி அவர்கள்மீது போடப்பட்டிருக்கும் கேஸ்களை வாபஸ் வாங்கும்படியாகச் செய்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தவிர யூனியன் லீடர்ஷிப்புகளுக்கு யூனியனுக்குள்ளேயே இருக்கும் நபர்கள்தான் வரவேண்டும், வெளியில் இருந்து ஆட்கள் தலைவர்கள் வரக்கூடாது என்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவரப் போவதாக அநேக நாட்களாக வெளியில் பேச்சுக்கள் நடந்து வருகின்றன. நம்முடைய சர்க்காரும் திட்டவட்டமாக மத்திய சர்க்காருக்குச் சொல்லி அந்தமாதிரியான ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மொழிப் பிரச்சனை. மொழிப் பிரச்சனையைப் பற்றி விவாதிக்கத் தனியாக இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டிருப்பதனால் நான் அதிகமாக இப்போது அதைப்பற்றி சொல்லப்போவதில்லை. அப்பொழுது விஸ்தாரமாகப் பேசலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக இந்தியைத் திணிக்கக் கூடாது. தமிழ் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும். இன்னும் கொஞ்ச நாளைக்கு டெக்னிகல் எஜுகேஷன் போன்றவைகள் ஆங்கிலத்தில் படிப்பதற்கு வசதியாக ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்பதே என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். சர்க்கார் இதைப் பற்றி திட்டவட்டமாக உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



11th August 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

அடுத்தபடியாக பே கமிஷன் ரெக்கமெண்டேஷன் (Pay Commission recommendation). இதைப்பற்றி பொதுவாக எங்கே பார்த்தாலும் திருப்திதான். ஆனாலும் அதிருப்தி ஏற்படவில்லை என்று சொல்வதற்கில்லை. பே கமிஷன் சில இலாகா சம்பந்தமாகச் செய்திருக்கும் சிபார்சுகள் ஒப்புக்கொள்ளப்படவில்லை. மாறாக பே (சம்பள) கட் கூடச் செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக பே கமிஷன் ரிப்போர்ட்டை சீனியர் ஆபீசரைப் போட்டுப் பரிசீலனை செய்யாமல் நிதி இலாகாவில் ஒரு செக்ஷனைக் கொண்டு பரிசீலனை செய்ததுதான் இந்தக் குறைகளுக்குக் காரணம். இதைப்பற்றியும் சர்க்கார் நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

இன்னும் டீசர்கள் (teachers) சம்பந்தப்பட்டவரை இரண்டு கிரேடுகள்—அந்த இலாகா அட்டெண்டர்கள் இன்னும் இதர சிப்பந்திகள் சம்பந்தமாக—ஏன் டிஸ்பாரிடி disparity இருக்க வேண்டும் என்பதை யோசிக்கவேண்டும். இதன் காரணமாக சிலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்னும் சில இலாகாக்களில் டென்யூர் போஸ்ட் என்று ஏற்படுத்திவிட்டு மூன்று வருஷம், நான்கு வருஷமாக ஒருவரையே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக டென்யூர் போஸ்ட் என்றால் என்ன அர்த்தமோ அதுவே தெரியாமல் போகிறது. இதைப்பற்றியும் நன்றாக யோசிக்கவேண்டும். ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் சிலருக்கு எக்ஸ்டென்ஷன் (extension) கொடுக்கப்படுகிறது. சிலருக்கு மறுக்கப்படுகிறது. ஒருவருக்கு ஒரு இலாகாவில் சூப்பர்ஆன்யுவேஷன் (superannuation) கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த போஸ்ட் அபாலிஷ் ஆனதினால் வேறு இலாகாவிற்கு மாற்றப்பட்டிருக்கிறார். இப்போது அவர் இருக்கக்கூடிய போஸ்ட் ஒரு டெபுடி செக்ரடரி இருக்க வேண்டியது. இதனால் சர்க்காருக்கு எவ்வளவு நஷ்டம்? அது அவசியமா என்பதைப்பற்றி நன்றாக யோசிக்கவேண்டும். தவிர போர்டு மெம்பர் என்ற ஸ்தானத்தைக் கொடுத்து இரண்டு போர்டு மெம்பர்களை இங்கே வைத்துக்கொண்டு இவர்களுக்குப் பதிலாக ஜூனியர் ஆபீசர்கள் இரண்டுபேரை போர்டு மெம்பர்களாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதன்காரணமாகவும் சர்க்காருக்கு எவ்வளவு நஷ்டம்? இது அவசியம்தானா என்பதையும் அமைச்சர்கள் யோசிக்கவேண்டும். இம்மாதிரி செய்வதன் காரணமாக நமக்குச் செலவுகள் அதிகமாகின்றன. இந்த இனங்களில் செலவுகளைக் குறைக்க தக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒவ்வொரு இலாகாவையும் பிரித்துக் கொண்டிருப்பதன் காரணமாக செலவுகள் எல்லாம் அதிகப்பட்டுக்கொண்டிருக்கிறது. முக்கியமாக இப்போது கவுன்சிலைப் பிரித்தோம். அதன் காரணமாகக் கொஞ்சம் அதிகச் செலவு. இன்னும் ஸ்தல ஸ்தாபன இலாகா போன்றவைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் அதிகச் செலவுதான். இப்படி இலாகாக்களைப் பல

லாகப் பிரித்திருப்பதன் காரணமாகப் பேப்பர்கள் ஒன்றும் சீக்கிரத்தில் டிஸ்போசல் செய்யப்படவில்லை. நாளுக்கு நாள் செலவு தான் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அநேகம் பேர்களுக்கு பல மாதங்கள் ஆகியும் பதில் வரவில்லை. அங்கத்தினர்களும் சரி, வெளி ஆட்களும் சரி, இந்த பதில்களை எதிர்பார்த்துக்கொண்டே இருக்கவேண்டியதாக இருக்கிறது. முக்கியமாக மக்களிடத்தில் ஒரு பிரச்சனை. அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் என்று போய்விடுவதன் காரணமாகத்தான் இந்த பேப்பர்கள், மனுக்கள் எல்லாம் பரிசீலனை செய்யப்படுவது தாமதமாகிறது என்று. இன்னும் அநேகம் சரிவர பரிசீலனை செய்யப்படாமலேயே டிஸ்போசல் செய்யப்படுகிறது. அதையும் கவனித்துத் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று புதிதாகத் தொழில் ஆரம்பிப்பது என்றால் நகரத்திற்கு 50 மைல்கள் தள்ளியே ஆரம்பிக்கவேண்டும். இன்னும் பிற்போக்கான பகுதிகள் என்ன என்ன என்று பார்த்து ஆரம்பிக்க வேண்டும். இப்படி அநேகம் தொல்கழிள் ஆரம்பிக்கப்பட்ட நம் தமிழ்நாட்டை தொழில்வளம் நிரம்பிய நாடாகச் செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பாம்பிக்குளம், ஆரணியாறு திட்டங்கள்பற்றி எடுக்கப்பட்ட முடிவுகளைப்பற்றி சந்தோஷம். ஆனால் சிறு நீர்ப்பாசனங்கள் விஷயத்தில் நன்றாக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் தமிழ்நாட்டில் அநேகம் குளங்கள் மராமத்து செய்யப்படாமல் கிடப்பதனால் நீர்ப்பாசன வசதி பாதிக்கப்பட்டிருக்கிறது. இவற்றை மராமத்து செய்யவேண்டும். வறண்ட கிணறுகளைத் தோண்டுவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த வேலைகள் எல்லாம் தற்போது ஆமை வேகத்தில் நடந்துகொண்டிருக்கின்றன.

மின்சாரம் நல்லமுறையில் நம் ராஜ்யத்தில் விஸ்தரிக்கப்படுகிறது. இருந்தபோதிலும் காலையில் பத்திரிகையில் பார்த்தேன். பிரதம மந்திரி அவர்கள் ஆடாமிக் எனர்ஜி பிளாண்ட் வடக்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைப்போலவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நம் பிராந்தியத்திலும் ஆடாமிக் எனர்ஜி பிளாண்ட் ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று முக்கியமாக ஜில்லா போர்டுகளை ஸ்தல ஸ்தாபன இலாகா எடுத்த பிறகு—பஞ்சாயத்து கவுன்சில்கள் ஏற்பட்டு அமுலாக்கப்படாமல் இருக்கிறது. அக்டோபர் மாதத்திற்குள் எல்லாம் பஞ்சாயத்து கவுன்சிலின்கீழ் வரவேண்டுமென்பது திட்டம். இப்போது நிலைமை எப்படி இருக்கிறது? ரோடுகள் எல்லாம் சரிவர போடப்படவில்லை. எங்கள் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் ஆயிரத்து ஐந்நூறு ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. ஹைஸ்கூல்கள் 45 இருக்கின்றன. ஒரு வருஷ காலமாக இவைகள் எல்லாம் சரியான முறையில் இன்ஸ்பெக்ஷன் செய்யப்படவில்லை. சர்க்கார் இதை நல்ல முறையில் எடுத்துக்கொள்ள வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





ஹைஸ்கூல் ஏற்படுத்துவதில் கட்சி நோக்கத்தோடுதான் செய்யப்படுகின்றன. மாணவர்கள் நிறைந்த இடங்களில் பள்ளிகள் போட வேண்டுமென்றால் அந்த இடங்களில் போடுவது கிடையாது. பள்ளிகள் எகனாமிக்காக வேலை செய்யுமே என்பதைக் கவனிப்பதில்லை. என்னுடைய தொகுதியில் நல்ல ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் (Higher Elementary School) இருக்கிறது. அங்கே 900 பேர் படிக்கிறார்கள். ஹைஸ்கூல் இருப்பதற்கு வேண்டிய வசதிகள் யாவும் இருந்தும், அங்கே ஹைஸ்கூல் ஏற்படுத்த அனுமதி கொர்டுக்கவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் இந்த இடத்தைப் பார்த்தும் அனுமதி அளிக்கவில்லை. எகனாமிக்காக வேலை செய்யாத இடங்களில் எல்லாம் ஹைஸ்கூல் வைத்திருக்கிறார்கள். ஐந்து மைல்களுக்கு அப்புறம் ஒரு ஹைஸ்கூல்தான் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் ஒன்று, இரண்டு மைல் தூரத்தில் இன்னொரு பள்ளி நடத்துவதற்கு அனுமதி கொடுக்கிறார்கள். இதுவும் கட்சி நோக்கத்துடன்தான் செய்கிறார்கள். அப்படியில்லாமல் பரந்த நோக்கத்துடன் பரிசிலனை செய்து மக்களைத் திருப்தி பண்ணக்கூடிய வகையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எலிமெண்டரி ஸ்கூல்கள் சரிவர நடப்பதில்லை. அதுவும் ஜீப் போகாத இடங்களில் எலிமெண்டரி ஸ்கூல் வாத்தியார்கள் சரியாக வேலை செய்வது கிடையாது. அவர்களுக்கு பள்ளி சீரமைப்பு உதவிக்காக சர்க்காரிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறது. அதன் காரணமாக உபாத்தியாயர்கள் மத்தியான உணவிற்காக அரிசி வாங்குவதற்காகவும், கடிகாரம் முதலியவைகள் வாங்குவதற்காகவும் பக்கத்து கிராமங்களுக்கு போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதனால்தான் அவர்கள் பள்ளிகளில் இருப்பது கிடையாது. இந்த நிலைமை நீடித்தால் பள்ளிக்கூடங்கள் சரிவர நடக்குமா? ஆதலால்தான் அநேக பள்ளிகளெல்லாம் மிகவும் சீர்கேடான நிலைமையில் இருக்கின்றன. இதைப்பற்றி நான் அதிகமாக பேச விரும்பவில்லை.

பஞ்சாயத்துக்களை எடுத்துக்கொண்டால், பஞ்சாயத்துக்களை ஏற்படுத்துவதிலும்கூட கட்சி மனப்பான்மையில்தான் ஏற்படுத்துகிறார்கள். 15 மைல்களில் உள்ள அநேக கிராமங்கள் சேர்ந்து பஞ்சாயத்து ஏற்பட்டிருக்கிறதை பிரித்து ஏற்படுத்தவேண்டும் என்று இருந்தாலும் பிரிப்பதில்லை. போதுமான வருமானம் இல்லாத சிறு சிறு கிராமங்களிலும் பஞ்சாயத்துக்கள் நிறுவப்படுகின்றன. ஒரு பிர்க்காவில் இரண்டு மூன்று பஞ்சாயத்துக்கள் தனித்தனியாக இயங்குகின்றன. மற்றொரு பிர்க்காவில் இருக்கும் கிராமத்தை இவைகளுடன் சேர்த்திருக்கிறார்கள். இம்மாதிரியான நிலைமையை ஏன் உண்டுபண்ணவேண்டும்? எந்தெந்த இடங்களில் பஞ்சாயத்துக்கள் அமைந்தால் சரிவர இயங்கும் என்று யோசித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கப்புறம் லோகல் பண்டு ஆடிட்டை (local fund audit)-ஐ எடுத்துக்கொண்டால், இதில் நிறைய ஊழல் ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி

கூட்டத்தில்கூட அங்கத்தினர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆடிட் விஷயத்தைக் கட்சி நோக்குடன் கவனிக்காமல் மக்கள் நலனை பாதிக்காத வகையில் எந்தெந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பிளானிங் கமிஷன் சிற்சில பகுதிகளுக்கு அதிகமாகவும், சில இடங்களுக்குக் குறைவாகவும் பணம் விநியோகம் செய்கிறது. பிற்போக்கான பகுதிகளுக்கு சரியாகப் பணம் ஒதுக்குவது கிடையாது. ஆகையால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது மக்களுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் சமமாகப் பிரித்துக் கொடுக்க வேண்டியிருப்பதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக சேரி ஒழிப்பை எடுத்துக்கொண்டால் இது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம். இதுவும் கட்சி நோக்கத்துடன்தான் கவனிக்கப்படுகிறது. ஆங்காங்கே சேரிகள் திடீர் திடீர் என்று உற்பத்தியாகின்றன. இப்படி ஒரு சேரியைப் பார்த்தேன். அதற்கு காமராஜ் நகர் என்று பெயரிட்டு, காங்கிரஸ் கொடியைப் பறக்க விட்டிருக்கிறார்கள். இம்மாதிரி நினைத்த இடங்களில் எல்லாம் சேரிகளை அமைக்காமல் பார்த்துக் கொண்டு, அதை மீறுகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜெனரல் அட்மினிஸ்ட்ரேஷனை எடுத்துக்கொண்டால் இதில் லஞ்சத்தைக் (corruption) குறைத்து அட்மினிஸ்ட்ரேஷனை டோன் அப் (tone up) செய்ய வேண்டும். இந்தச் சமயத்தில் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஜனாதிபதி அவர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர் அல்ல. அப்படியிருக்கும்போது அவர்களை வரவேற்கும்போது கவர்ன்மென்டைச் சேர்ந்தவர்களுக்குத் தான் அழைப்பு அனுப்பியிருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்புதான் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. மற்ற கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பியிருந்தால் அவர்களும் வந்திருப்பார்கள். அவ்வாறு செய்யவில்லை. ஆகையால் இம்மாதிரியான விஷயங்களில் கட்சிக் கண்ணோட்டத்துடன் பார்க்காமல் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்தாலோசித்து நாட்டுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதைப்பற்றி இன்னும் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. எந்த நல்ல காரியத்தை செய்வதானாலும் எல்லாருடைய அபிப்பிராயங்களைக் கேட்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டால் மக்களுக்குத் திருப்தி ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: கனம் சபாநாயகர் அவர்களே, இதுவரை அறுபத்திரண்டு கனம் அங்கத்தினர்கள் இவ்விவாதத்தில் பேசி இருக்கிறார்கள். நான் 63-வதாக இங்கு பேசுகிறேன். (சிரிப்பு) இங்கு நடந்த விவாதத்தில் பல முக்கியமான, அடிப்படையான விஷயங்கள் விவாதிக்கப்



பட்டன. முதல் முதலாக மத்திய அரசாங்கத்தின் வேலை நிறுத்தத்தைப்பற்றி குறிப்பிடப்பட்டது. இந்த வேலை நிறுத்தத்தைப்பற்றிச் சொல்லும்போது நாம் இதை ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சியாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இதன் மூலமாக நாட்டில் இருக்கக்கூடிய பிரச்னையை, மக்கள் எல்லோரும் யோசனை செய்யக்கூடிய ஒரு கட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இப்பொழுது நடந்த மத்திய அரசாங்க வேலை நிறுத்தம் காரணமாக பொதுமக்கள் நிலைமை என்ன? தொழிலாளர்கள் உரிமை என்ன? தொழிலாளர்கள் கடமை என்ன? அரசாங்கத்திடம் பணிபுரியக்கூடிய ஊழியர்களின் உரிமை என்ன? கடமை என்ன? என்பதையெல்லாம் யோசித்து ஒரு முடிவிற்கு வரக்கூடிய வாய்ப்பும் கொடுத்திருக்கிறது. இந்த முறையிலே பார்க்கும் பொழுது ஓரளவிற்கு இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டதை நான் வரவேற்கிறேன். இதில் இன்றைக்கு இருக்கக்கூடிய அடிப்படையான பிரச்னை என்னவென்றால் அரசாங்க ஊழியர்களாக இருக்கக்கூடியவர்கள் வேலை நிறுத்தம் செய்யலாமா என்பதைப் பற்றி ஒரு முடிவிற்கு வர நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

முடிவிற்கு வந்து அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனில், இன்று அரசாங்கத்தின் மூலம் பல்வேறு பணிகளை நிறைவேற்றும் பொறுப்பை நாம் மேலும், மேலும் ஏற்றுக்கொண்டு வருகிறோம். அப்பொறுப்புக்களை நிறைவேற்றவேண்டுமென்று சொன்னால் நிர்வாக இயந்திரம் சரியான முறையில் அமைந்து அது வேலை செய்து வந்தாலொழிய இந்தப் பொறுப்புகளையெல்லாம் நாம் நிறைவேற்ற முடியாது. மத்தியில், எந்தக் காரணத்தினாலும் சரி ஒடிந்து போகக் கூடிய இயந்திரம் இருந்தால் இத்தகைய பொறுப்புக்களை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. இதெல்லாம் நம்மால் ஆகாத காரியம் என யோசித்து நாம் செய்யும் பணிகளைக் குறைந்திருக்க வேண்டும். அரசாங்கம் பல்வேறு துறைகளில் தீவிரமாக ஈடுபட்டு பல்வேறு பணிகளைச் செய்ய வேண்டுமென்று சொல்கிற கட்சிகள் இதை மிகவும் ஆழ்ந்து யோசிக்க வேண்டியதொரு கட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக ஒரு சில பகுதிகளில் அல்ல இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அது, பொது வேலை நிறுத்தம். இதைத் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லக் காரணம், வெறுமனே அரசியல் வாதிகள் தலைவர்களாக இருந்தார்கள் என்ற காரணத்திற்காக அல்ல. அது ஒரு புறமிருக்க அடிப்படை நோக்கம், அடிப்படை முறைகள் எவை எவை கையாளப்பட்டன என்று யோசித்துப் பார்த்தால் உண்மையில் ஏதோ தொழிலாளர்களுக்காக அவர்களின் உரிமைக்காக, அவர்களுக்கு அதிகச் சலுகை பெறுவதற்காக ஏற்பட்ட வேலை நிறுத்தம் இது என்று இதை யாரும் ஒப்புக் கொள்ளவே முடியாது. மத்திய சர்க்காரில் பணியாற்றக் கூடியவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தையொட்டி பே கமிஷன் நியமிக்கப்பட்டது. அவர்கள் சிபாரிசு செய்து அந்தச் சிபாரிசுகள் பூராவும் அமுலுக்குக் கூட வரவில்லை. அவை அமுலுக்கு வந்த பிற்பாடு, இதன் மூலம் நன்மை ஏற்படும் என்று நினைத்தோம். ஆனால் அதனால் நன்மை ஏற்படவில்லை, இன்னென்ன

கஷ்டங்கள் இருக்கின்றன, இவைகளைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லி ஏதாவது நடவடிக்கைகள் எடுத்திருப்பார்களேயானால் அது தொழிலாளர்களின் நன்மையைப் பாதுகாக்கக் கூடியது. அவர்கள் கஷ்டங்களைத் தீர்க்க எடுக்கும் நடவடிக்கைகள் இது என்று சொல்லலாம். ஆனால் அவை பரிசீலனையில் இருந்து அவை பூராவும் தீர்க்கப் படவில்லை. அவைகளை எல்லாம் உடனடியாக நிறைவேற்றவேண்டுமென்று சொல்கிற ஸ்ட்ரைக் அல்ல இது. கொடுக்கப்பட்டிருக்கிற சலுகை போதாது, இன்னும் அதிகப்படியாக வேண்டுமென்று கேட்கக்கூடிய நிலை ஏற்பட்டது. இப்பொழுதுதான் நான் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டேன், தொழிலாளர்கள் என்று சொன்னால் ஏதாவது ட்ரிப்யூனல் ஏற்படுத்தி தீர்ப்புச் சொன்னால் அது எவ்வளவு ஆண்டுகள் செல்லும் என்று கேட்டேன். ஒரு வருடம் செல்லும் அதற்கு மேல் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கச் சட்டம் இடம் கொடுக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். இதுவோ அமுலுக்கு வரவேயில்லை. அதற்கு முன்பே வேலை நிறுத்தம் ஏற்பட்டது. இது சட்ட விரோதம் என்பது ஒருபுறமிருக்க அதன் உண்மை நோக்கு தொழிலாளர் உரிமைக்காக அல்ல, வேறு நோக்கமாகத்தான் இருக்க வேண்டுமென்கிற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் இதை யார் முடிவு செய்தார்கள் என்பது பற்றி திரு. ராமசந்திரன் அவர்கள் அவர்களுக்குத் தெரிந்ததை விளக்கினார்கள். ஸ்ட்ரைக் வேண்டுமா, வேண்டாமா என்று கேட்டதாகத் தெரியவில்லை, அவர்கள் முழித்துக் கொண்டிருந்தார்கள், என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை, ஆக கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது மாதிரி பல ஊழியர்கள் இருந்தார்கள் என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். "கௌன்சில் ஆப் ஆக்ஷன்" என்று வைத்துக்கொண்டு எப்படி இருந்தாலும் சரி இந்த வேலை நிறுத்தம் செய்தேயாக வேண்டுமென்று அவர்களால் முடிவு செய்யப்பட்டது. எதற்காக எந்தச் சூழ்நிலையில் இந்த முடிவு செய்யப்பட்டது என்று பார்க்கும் போது இது அரசியல் நோக்கத்தோடு ஏற்பட்ட வேலை நிறுத்தமே தவிர வேறு ஒன்றுமல்ல என்று முதலில் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. இதோடு இன்னொரு கோணத்திலும் பார்க்கலாம். இன்று அரசாங்கத்தில் பணியாற்றக் கூடியவர்களுக்குச் சம்பளம் கொடுக்கக் கூடியது, எவ்வளவு கொடுக்க வேண்டும், எந்த விதத்தில் கொடுக்க வேண்டும் என்பது பற்றிக் கடைசியாக முடிவு செய்ய வேண்டியது எது? பார்லிமெண்ட். நாம் ஏற்றுக் கொண்டிருக்கக் கூடிய அரசியல் முறைப்படி ஜனப்பிரதிநிதிகள் கொண்ட பார்லிமெண்ட் செய்வதுதான் கடைசி முடிவு. அந்தப் பார்லிமெண்டைப் பணிய வைத்து, அல்லது வேறு பல முறைகளை உபயோகப்படுத்தி, நிர்ப்பந்த முறைகளைப் பயன்படுத்தி அவர்கள் சரி என்று நினைக்காத முடிவை எடுக்க வேண்டுமென்ற முறையில் நடவடிக்கைகள் எடுத்தால் அது ஜனநாயக அடிப்படைக்கு விரோதமானது. இன்று கொடுக்கக்கூடிய சம்பளம் போதுமா, போதாதா, இன்றைய நாட்டு நிலைமைக்கு எந்த அளவிற்கு இவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்ய வேண்டியது, பார்லிமெண்ட். இந்த ஸ்ட்ரைக் செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்தவர்கள் கூட பலர் பார்லிமெண்டில்



இருக்கக் கூடியவர்கள். அங்கு எடுத்துச் சொல்லி அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக, விரோதமாக முடிவு செய்வதாகயிருந்தால் அல்லது வேறு விதமாக மாற்றவேண்டுமென்ற முறையில் நேர் நடவடிக்கைகள் எடுத்தால் அது தொழிலாளர் உரிமை அல்ல, அது ஒரு பெரிய அரசியல் நடவடிக்கை என்பதைத்தான் இங்கு நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆக, அரசாங்கத்தைப் பணிய வைத்து ஒரு முடிவு எடுக்க வைத்து அதன்படி பார்லிமெண்ட் ஒரு முடிவு செய்து வைக்க வேண்டும். அவர்கள் எண்ணம் வேறு எதுவாகயிருந்தாலும் சரி, வெளி நடவடிக்கைகள் எடுப்பதால், அப்படி எடுத்து பார்லிமெண்டை வேறு விதமாக முடிவு செய்ய பணிய வைக்க வேண்டுமென்று முயற்சி செய்வது பார்லிமெண்ட்டரி டெமாக்ரசிக்கு—வேறு அடிப்படையில் இருந்தால் எப்படியோ—பார்லிமென்ட்டரி டெமாக்ரசிக்கு—அது விரோதமானது. அப்படி எடுப்பது தொழிலாளர் உரிமைக்காக அல்ல, அது அரசியல் நடவடிக்கை என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது, ஆகவே தொழிலாளர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, ஆகவேதான் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்று கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். வாஸ்தவம் ஆனால் 'விலையை எப்படி கட்டுப்படுத்த வேண்டும்? எந்த முறையில் கட்டுப்படுத்துவது' என்பதெல்லாம் பொருளாதார அடிப்படையில் நாம் யோசிக்க வேண்டியது. கடைசியாக முடிவு எடுக்க வேண்டியது பார்லிமெண்ட். கட்டுப்பாடு வேண்டுமா, அதை எந்த விதத்தில் செய்வது, இப்பொழுதுள்ள நிலையில் கட்டுப்பாடு இல்லாமல் செய்து கொண்டு போகலாமா என்பதைப் பற்றியெல்லாம் செய்து கொண்டு போகலாமா என்பதைப் பற்றியெல்லாம் பார்லிமென்ட்தான் முடிவு எடுக்கவேண்டும். ஆனால் அரசாங்க ஊழியர்கள், கட்டுப்பாடு வந்துதானாக வேண்டும், அல்லது வேறு விதமான நடவடிக்கைகள் எடுக்கத்தான் வேண்டுமென்கிற முறையில் தங்கள் வேலை நிறுத்தம் மூலம் அதை நிறைவேற்ற வேண்டுமென்று வரும்போது, அவர்கள் பார்லிமெண்ட் செய்ய வேண்டிய வேலையை, மக்கள் பிரதிநிதிகள் செய்ய வேண்டிய வேலையை, அரசியல் அமைப்பின் கீழ் செய்ய வேண்டிய வேலையை அவர்கள் தாங்களே ஏற்று "இந்த பார்லிமெண்ட்டுக்கு யோக்கியதையில்லை, இந்த பார்லிமெண்டில் இருக்கிறவர்களுக்கு அறிவு இல்லை, ஆகவே நாங்கள் இந்த நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தித்தான் விலைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று சொல்லும்போது அது தொழிலாளர் இயக்கம் அல்ல, பெரிய அரசியல் நடவடிக்கை. அதோடு மட்டுமல்ல. இன்று அதிக ஊதியம் வேண்டுமென்று கேட்கிறார்கள். பொது வேலை நிறுத்தம் என்ற முறையில் 'ரயில் ஓடக் கூடாது, தந்தி போகக் கூடாது, தபால் போகக் கூடாது, விமானம் ஓடக் கூடாது, மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த எந்தப் பணி நிலையங்களும் வேலை செய்யக் கூடாது' என்கிறார்கள். அதன் மூலம் என்ன நேர்ந்திருக்கும்? அவர்கள் இதில் வெற்றி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்திருப்பார்கள், அதற்கு வேண்டிய ஆயத்தங்களும் செய்திருப்பார்களா என்பது கம்யூ-

[Sri C. Subramaniam] [11th August 1960

னிஸ்ட் கட்சிக்கும், பிரஜா சோஷியலிஸ்ட் கட்சிக்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடாகயிருக்கலாம். வேலை நிறுத்தத்தின் நோக்கம், ரெயில் போவது, தந்தி போவது எல்லாம் ஸ்தம்பித்துப் போக வேண்டுமென்ற முறையில் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக ஏற்பாடு செய்தார்கள். அப்படி நின்று போனால் நாட்டின் பொருளாதாரம் என்னவாகியிருக்கும்? உற்பத்தி எவ்வளவு குறைந்திருக்கும்? சர்க்கார் வருமானம் எவ்வளவு குறைந்திருக்கும்? சர்க்கார் வருமானம் குறைந்த பிற்பாடு, நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட பிற்பாடு எப்படி அதிகமாக இவர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியும்? ஆக, ஊதியம் அதிகம் வேண்டுமென்று நினைத்திருப்பார்களேயானால் அதை சர்க்கார் கவனத்தில் கொண்டு வர ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கலாம். அப்படியில்லாமல் நீடித்த பொது வேலை நிறுத்தம் என்றால், அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் மூலம் அதிக ஊதியம் என்பது இருக்க, இப்பொழுது கொடுக்கக் கூடிய ஊதியம் கூட கொடுக்கக் கூடிய நிலைமையை பாழ்படுத்தக் கூடிய நிலைமையை ஏற்படுத்தும் நிலையில் அவர்கள் நடவடிக்கைகள் இருந்தால், ஊதியத்தை நினைத்து வேலை நிறுத்தம் செய்தார்களா அல்லது சர்க்காரைக் கவிழ்க்க வேண்டும், இன்றுள்ள அரசியல் அமைப்பையே மாற்றவேண்டுமென்று முன்வந்தார்களா? ஆக, அது தொழிலாளர்களுக்காக செய்யப்பட்ட வேலை நிறுத்தம் அல்ல, அரசியல் அமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென்ற நோக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு, அதை வெளியில் சொல்லாமல் மற்றவர்களை இந்த வழியில் இட்டுச் சென்றிருப்பார்கள் என்று ஊகித்தால் அது தவறு என்று சொல்ல முடியாது. திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள், அப்படி நினைத்திருந்தால் ஆயத்தங்கள் செய்யாமல் அதற்கு வேண்டிய முன்னேற்பாடு இல்லாமல் இறங்கியிருப்பார்களா என்று கேட்டார்கள்.

11 30 a.m. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு "Who dares call treason, when it succeeds," இராஜாங்கத் துரோகம், அரசத் துரோகம், சதி என்றெல்லாம் சொல்லும்போது இவைகள் எல்லாம் ஜெயித்து விட்டால் சதியாகாது. அது தோற்று விட்டால்தான் சதியாகும். "when you are tried for treason" இதைப் பொறுத்த வரையில் நாம் தோற்றுப் போய் விட்டோம், ஆகவே இதை எப்படிச் சதி என்று சொல்லுவது, ஆகவே இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு வாதாடுவது சரியல்ல என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் அவர்களுடைய கட்சியைப்பற்றி சொன்னார். அவர்களுடைய கட்சி சொன்னது என்னவென்றால், "நாங்கள் வேலை நிறுத்தம் செய்திருந்தால், இப்படியா செய்திருப்போம், அதுவும் இப்போதா செய்திருப்போம்" என்று சொல்லியிருக்கிறார்.

**Sri M. KALYANASUNDARAM**: நான் அவ்விதம் ஒன்றும் சொல்லவில்லையே.



11th August 1960]

**The Hon. Sri C. SUBRAMANIYAM**: திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொல்லாவிட்டாலும் அவர்களுடைய கட்சி இப்படித்தான் சொல்லியிருக்கிறது. . . . .

**Sri V. K. KOTHANDARAMAN**: தனிப்பட்ட முறையில் யாராவது சொல்லி இருந்தால் அதைக் கேட்டுவிட்டு சபையில் வந்து ஞாபகப்படுத்திப் பேசுவது சரியா?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: தனிப்பட்ட முறையில் சொல்லப்பட்டது அல்ல. 'உங்கள் கட்சி' தான் இவ்விதம் சொல்லியிருக்கிறது, வெளியிலுள்ள கருத்துக்கள் இந்தச் சபையில் வந்த பிறகு மாறுகிறது, அல்லது அதில் மயக்கம் ஏற்படுகிறது என்றால் அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஏதோ சோஷியலிஸ்டுகள், பிரஜா சோஷியலிஸ்டுகள், லோகியா கட்சிக்காரர்கள் இவர்கள் எல்லாம், ஷர்டுகளை இழுப்பார்கள், கையைப்பிடித்து இழுப்பார்கள், மயிரைப்பிடித்து இழுப்பார்கள். ஆனால் கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் குரல்வளையையே பிடித்து நெறிப்பார்கள். அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வது தப்பு, அவர்கள் இப்படிப்பட்ட வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டால் நம்முடைய திட்டங்கள் எல்லாம் நிறைவேற முடியாமல் போகும். ஆகவே இந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்கின்ற அடிப்படையில் கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் சொல்லவில்லை. எப்படிப்பட்ட சமயத்தில் எவ்வாறு சர்க்காரை நசுக்கிவிடலாம் என்கின்ற முறையில் யோசனை சொல்லக்கூடியவர்கள் அவர்கள். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற அரசியல் அமைப்பை ஒத்துக்கொண்டு, அதற்கேற்ற ஜனநாயக முறையில் நம்பிக்கைக் கொண்டவர்கள்-(குறுக்கீடு)-பழனிசாமி அவர்களுக்கு வேண்டுமானால் இதைப்பற்றி தெரியாமல் இருக்கலாம், திரு. கல்யாணசுந்தரம் அவர்களுக்குத் தெரியும்.-இந்த ஜனநாயக அடிப்படையில் நாட்டை நடத்திச் செல்ல வேண்டும் என்று நினைக்கும்போது, இது மாதிரி அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யலாம் என்கின்ற உரிமை இருக்கவேண்டும். அவ்வித உரிமை இல்லாமல் இருப்பது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று சொல்லக்கூடிய கூற்றை இன்று நாம் பார்க்கின்றோம். நான் வெகு தாழ்மையுடன் சொல்ல விரும்புவது, இம்மாதிரியான பொது வேலைநிறுத்த உரிமை வேண்டும் என்று சொல்லுவது, நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற ஜனநாயகத்திற்கு மிக பாதகமானது என்பதைத்தான். மற்ற நாடுகளில் எல்லாம் இதைப்பற்றிப் பேசவே முடியாது, இன்றைக்கு கம்யூனிஸ்டு நாடுகளை எடுத்துக்கொண்டால் அரசாங்க ஊழியர்களுடைய வேலை நிறுத்தத்தை விட்டு விட்டாலும் கூட, தொழில் நிலையங்களில்கூட இம்மாதிரியான வேலை நிறுத்தத்தைப்பற்றி பேச முடியுமா என்பதைப்பற்றிப் பார்த்தால் அது முடியாத காரியமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு வேலைநிறுத்த உரிமை இருக்கக் கூடாது என்று சொல்லுவது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று கம்யூனிஸ்டு கட்சியோ அல்லது கம்யூனிஸ்டு கட்சியிலுள்ளவர்களோ நினைத்துக்கொண்டு பேசுவார்களானால், அது ஒரு

[Sri C. Subramaniam] [11th August 1960

விநோதமான காட்சி என்று தான் எடுத்துக்கொள்ளவேண்டி
இருக்கிறது அல்லது அதைத் தெரிந்தும் இப்படி பேசிக்கொண்
டிருப்பார்களாஞல் அது நம்மைப்பார்த்து கேலி செய்வதற்
காகவோ அல்லது ஏமாற்றுகின்ற முறையிலோ தான் சொல்லு
வதாக எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இன்றைக்கு இந்த
அடிப்படையில் யோசனை செய்து பார்க்கின்ற நேரத்தில் மக்க
ளுடைய பிரதிநிதிகள் அடங்கிய இந்தச் சபை, மக்களுடைய
திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று வேலை
செய்து கொண்டிருக்கும்போது, அரசாங்க ஊழியர்களின் ஊதி
யத்தை அல்லது தொழிலாளர்களின் ஊதியத்தை எந்த
அளவுக்கு உயர்த்திக்கொடுக்கலாம் என்பதைப்பற்றி முடிவு
செய்ய வேண்டியிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்திலுள்ள இந்தச்
சபைக்கு நம் மாகாணத்தைப் பொறுத்த வரையிலும், இந்தியா
வைப் பொறுத்த வரையில், பார்லிமெண்ட் சபைக்கும் பொறுப்பு
இருக்கிறது. இன்றைக்கு அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்
தங்களில் ஈடுபடக்கூடாது, அதிலும் மிக முக்கியமான பணிகளில்
ஈடுப்பட்டிருக்கக்கூடியவர்கள் இம்மாதியான வேலை நிறுத்தங்
களில் ஈடுபடக்கூடாது என்று ஒரு முடிவுக்கு வரக்கூடாது என்று
சொல்லுவது மிகவும் வருந்தத்தக்க விஷயம். திரு. கல்யாண
சுந்தரம் அவர்கள் ' பிரான்ஸ், மற்றும் ஏதோ ஒன்றிரண்டு வெளி
நாடுகளை எல்லாம் பாருங்கள் என்றும், அந்த நாட்டில் எல்லாம்
இதற்கு உரிமை கொடுத்திருக்கிருர்கள், அப்படியாஞல் ஏன்
நாம் அனுமதிக்கக்கூடாது' என்பதைப்பற்றி சொன்ஞர்கள்.
அதே சமயத்தில், நம் நாட்டில் இருக்கின்ற நிலைமையையும்,
மற்ற நாடுகளில் இருக்கின்ற நிலைமையையும் நாம் மனதில்
வைத்துக்கொள்ள வேண்டும். அதிலும் முன்னேற்றம் அடைந்து,
தொழில் துறையில் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்து
உற்பத்தி பெருகி உயர் நிலைமையில் இருக்கின்ற நாடு வேறு.
அதே நேரத்தில், பல காலமாக அரசியல் அடிமைகளாக இருந்து
இன்றைக்குச் சுதந்திரம் பெற்று 'பொருளாதார முன்னேற்
றத்தை கொண்டு வரவேண்டும், சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்
டும்' என்று வேலை செய்து கொண்டிருக்கின்ற நம்போன்ற நாடு
கள் வேறு. ஒரு பணக்காரன் இருக்கிருன், அவனுக்கு ஒரு
வருஷத்திற்கு வியாபாரம் ஒன்றும் செய்ய வேண்டாம் என்று
நினைத்து சும்மா இருந்தாலும் அவனுக்கு எந்தவிதமான பாத
கமும் ஏற்படாது. அவனுக்கு வேண்டிய சொத்து இருக்கிறது
அல்லது வேறு விதமான வியாபாரம் ஆரம்பித்தாலும் அதில்
நஷ்டம் ஏற்பட்டாலும், அதை ஈடு செய்வதற்கு அவனிடம்
போதிய பணம் இருக்கிறது. ஆதலால் அவனுடைய வாழ்க்கை
யில் கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டாலும் அது அவனுடைய வாழ்க்
கையை பாதிக்காது. அவ்வாறு இல்லாத அன்ருடக் கூலி செய்து
பிழைக்கக்கூடிய ஒருவன் தானும் அந்தப் பணக்காரனைப்
போல் ஓய்வு எடுத்துக்கொண்டு அமெரிக்கா போகிறேன் என்று
சொன்ஞல் அவனுடைய வாழ்க்கை என்ன ஆவது என்பதைப்
பற்றி ஆலோசிக்க வேண்டும். இந்த நிலைமையில் தான் நாழ்
இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிருேம். வறுமையை நீக்கி
புதிய ஒரு பொருளாதார அமைப்பைக் கொண்டு வர வேண்டும்,
அதற்கான பொருளாதார அபிவிருத்தி ஏற்படவேண்டும்,



11th August 1960] [Sri C. Subramaniam]

அதற்காக எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகள் எல்லாம் வெற்றி
பெறச் செய்து பின்ஞல், அமெரிக்காவைப்போல், ரஷ்யாவைப்
போல் நாம் இருப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. அவர்கள்
அடைந்திருக்கக்கூடிய முன்னேற்றத்தை நாம் இன்னும் அடைய
வில்லை. நாமும் அவர்களைப்போல் முன்னேற்றம் அடைந்துவிட்ட
பிறகு என்ன சட்டங்களை வேண்டுமாஞலும் போட்டு வேலை
நிறுத்தங்களை அனுமதித்துக்கொண்டிருக்கலாம். ஆஞல்
இன்றைக்கு நிலைமை அவ்வாறு அல்ல. வறுமையை நீக்கிக்
கொண்டு பொருளாதார அபிவிருத்தி ஏற்படவேண்டும் என்று
நாம் வேலை செய்து கொண்டிருக்கிருேம், அதற்கான திட்டங்களை
மேலும்மேலும் போட்டுக்கொண்டிருக்கிருேம். இவைகள் எல்லாம்
எந்தவிதத்திலும் பாதிக்கப்படலாகாது என்பதை நாம்
அனைவரும் மனதிலிறுத்திக்கொள்ளவேண்டும். இந்தத் திட்டங்
களுக்கு எதிராகவுள்ள காரியங்களை யார் செய்வதாக இருந்
தாலும் சரி, தொழிலாளர்களாய் இருந்தாலும் சரி, முதலாளி
களாய் இருந்தாலும் சரி, யார் வேலை நிறுத்தத்திற்குக் காரண
மாய் இருந்தாலும் அது உற்பத்தியை பாதிப்பதாக இருக்கும்,
இதற்காக யாரும் ஜோஸ்யம் கேட்கத் தேவையில்லை. உற்பத்திப்
பெருக்கம் மிகவும் அவசியம் என்று நினைக்கின்ற பொழுது,
இம்மாதிரிப்பட்ட வேலை நிறுத்தங்களைத் தடுக்க முடியாதா என்ப
தைப்பற்றியும் நாம் ஆலோசிக்கவேண்டும். அரசாங்கத்துறையில்
மட்டுமல்ல, தனியார்த் துறையிலும் இதைத் தவிர்க்க முடியாதா
என்பதைப் பற்றியும் நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.
பொதுவாக, நாட்டில் தொழில்கள் மேலும் மேலும் பெருக
வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாம் திட்டங்களை எல்லாம்
போட்டு நிறைவேற்றிக்கொண்டு வருகிருேம். அதிலும் தொழி
லாளர்களுக்கு ஏதேனும் குறைகள் இருந்தாலும் அவைகளை வேலை
நிறுத்த முறைகள் அல்லாமல் வேறு ஏதாவது முறைகளிஞல்
தவிர்க்க முடியாதா என்பதைப்பற்றியும் நாம் ஆலோசனை செய்ய
வேண்டும். அதைப் பார்க்கும்பொழுது, இன்னும் பத்து அல்லது
பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு, மற்ற நாடுகளைப்
போல் பொருளாதார உயர்வு அடைகின்ற வரையில் நாம் வேலை
நிறுத்த முறைகளைக் கையாளலாமா என்பதைப்பற்றி யோசித்துப்
பார்க்க வேண்டும். அதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிருேம்,
அதற்காகத் தொழிலாளர்களுடைய நலத்தையே பார்க்கவேண்
டாம் என்று சொல்லவில்லை. தொழிலாளர்களுக்கு ஊதியத்தை
அதிகப்படுத்தி கொடுக்கவேண்டாம் என்று அர்த்தமல்ல.
கொஞ்சம் ஊதியத்தை அதிகப்படுத்துவதற்கு இம்மாதிரியான
வேலைநிறுத்த முறைகளைத் தாஞ கையாள வேண்டும், வேறு வழி
கள் ஒன்றுமேயில்லையா என்பதைப்பற்றி நாம் யோசித்துப்
பார்க்கக் கடமைப்பட்டிருக்கிருேம். எல்லாவற்றிற்கும் மேலாக
சட்டம் செய்வதற்கான உரிமைகளை நாம் வைத்துக்கொண்டிருக்
கிருேம். அதே போன்று பார்லிமெண்ட் சபைக்கும் இதற்கான
அதிகாரம் இருக்கிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்து
பார்த்துத் தொழிலாளர்களுக்கு ஊதியம் கூட்டிக் கொடுக்க
வேண்டும் என்று நிர்ணயிக்கும்போது, அதற்கான நடவடிக்கை
களைச் செய்வதற்கு நமக்குப் பூரணமான அதிகாரம் இருக்
கின்றது. அதற்காக உற்பத்தியைப் பாதிக்கின்ற முறைகளைக்

கையாள வேண்டுமா என்று பார்க்கின்றபொழுது, அது அவசியமில்லை, இதைத் தவிர்க்கலாம் என்ற முடிவுக்கு நம்மால் வரமுடிகின்றது. அதன் மூலமாகத்தான் நாம் முதலீடு செய்திருக்கின்ற பல தொழில்களையும் முன்னேற்ற மடையச் செய்யமுடியும். அதோடு அனைவரும் அனுசரிக்கக்கூடிய முறையில், நமக்கு ஏற்ற முறையில் சட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை இந்தச் சபை முன்னாலும் மக்கள் முன்னாலும் வைக்க விரும்புகிறேன். இதிலே இருக்கக்கூடிய கஷ்டம் என்ன என்று சொன்னால், இன்றைக்குத் தொழிலாளர் களுக்கு ஒரு சட்டம் வரவேண்டுமென்று சொன்னவுடனேயே முதலாளிகள் என்ன நினைத்துக் கொள்கிறார்கள் என்று சொன்னால் 'தொழிலாளிகளுக்கு அதற்கு மேல் ஊதியம் கொடுக்கவேண்டிய தில்லை' என்று எண்ணிக்கொண்டு விடுகிறார்கள். தொழிலாளி களும் லாபம் வந்தாலும், லாபம் வராவிட்டாலும் தாங்கள் நினைத்த அளவுக்கு ஊதியம் தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆகையால்தான் இதையெல்லாம் ஆலோசனை செய்து ஒரு சட்ட அமைப்பை ஏற்படுத்த முடியுமா, நாம் ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ளமுடியுமா என்று ஆலோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதைப் பற்றி ஆலோ சிக்கும்போது, அந்த அடிப்படையில் வேலை நிறுத்தம் கூடாது என்று சொல்லும்போது, அதனால் உற்பத்திப் பெருக வேண்டு மென்பதோடு, தொழிலாளிகளுக்கு எந்தவிதமான பாதகமும் எல்லாவிதமான சௌகரியங்களும் கிடைக்கக்கூடிய முறையில் இதன் மூலமாக ஏற்பாடு செய்யவேண்டிய அவசியம் ஏற்படு கிறது. அதையனுசரித்துச் செய்வோமானால் நாம் ஒரு நல்ல முடிவுக்கு வரமுடியும் என்று கருதுகிறேன். இதைப்பற்றி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பிக்கும்நிலையில் இருக்கிற இந்தக் காலத்தில் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, இதற்கெல்லாம் அடிப்படையாக இருக்கக் கூடிய காரணம் எது? எல்லோரும் சொன்னார்கள் இந்த விலை உயர்வு காரணத்தினால்தான் ஊதியம் அதிகமாகக் கேட்கவேண்டி யதாக இருக்கிறது என்று. இதைப் பற்றி எல்லோரும் சொன்னார்கள். இதிலே கருத்து வேற்றுமையே கிடையாது. ஆனால் இன்றைக்கு இந்த விலை உயர்வை எப்படித் தடுப்பது என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இப்படி எந்தக் காரணத்தினால் தான் ஏற்படுகிறது என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். ஏற்படாமல், தொழிலாளிகளுடைய உரிமை பாதிக்கப்படாமல், அதற்குப் பிறகு இதை எப்படித் தடுப்பது என்று யோசித்துப் பார்க்கவேண்டும். நாட்டிலே இருக்கக்கூடிய விலை உயர்வுக்குக் காரணம் பண வீக்கம் என்று சொல்லி, இந்தப் பண வீக்கம் என்ன காரணத்தினால் ஏற்பட்டிருக்கிறது என்று சுதந்திரா கட்சி சொல்லுகிறது என்றால், பெரிய திட்டங்களை நிறைவேற்றுகிற போது, அதிலிருந்து உடனடியாகப் பலன் ஏற்படாதபோது பண வீக்கம் ஏற்படுகிறது, அதனால் விலை உயர்வு ஏற்படுகிறது என்று—ஒப்புக்கொள்ளுகிறேன். நாமெல்லோரும் யோசித்துப் பார்க்க வேண்டும். திட்டங்கள் எதையும் நிறைவேற்றாமல், பெரும் தொழில்கள், பெரிய அணைக்கட்டுத் திட்டங்கள், பெரிய மின்சாரத் திட்டங்கள் எதையும் ஏற்படுத்தாமல், பழைய காலத்தில் இருந்த மாதிரி போகலாம்—அதுதான் சுபீட்சம்—என்று மாற்றிக் கொள்வோமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். முன்பு அரிசி நான்கு அணாவிற்கு விற்று வந்தது. அரிசி நான்கு அணாவிற்கு விற்ற காலம் இருந்ததே அதுதான் சுபீட்ச காலம் என்று சொல்ல முடியுமா? அப்போது எத்தனை பஞ்சங்கள் வந்தன? எத்தனை லட்சக்கணக்கான மக்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பஞ்சம் வந்து இறந்திருக் கிறார்கள். அரிசி விலை குறைவாகத்தான் இருந்தது அப்போது. விலை குறைவாக இருந்தது என்பதற்காக அதை சுபீட்ச காலம் என்று சொல்ல முடியுமா? இன்றைக்கு உற்பத்தி எந்த அளவுக்குப் பெருகுகிறதோ அந்த அளவுக்குத்தான் சுபீட்சமே தவிர, பணம் என்பது மத்தியில் இருக்கக்கூடிய ஒரே காரணம் தான். இதிலே அடிப்படையாக இருக்கக்கூடியது உற்பத்தி. உற்பத்தி இருந்தால்தான் பஞ்சமும் பட்டினியும் ஒழியும். அப்போதுதான் எல்லோரும் வயிராறச் சாப்பிட முடியும், நல்ல உடை உடுத்திக்கொள்ள முடியும், வீடு கட்டிக்கொள்ள முடியும், ரோடுகள் போட்டுக் கொள்ள முடியும், கார்களை வைத்துக்கொள்ள முடியும், ஏரோப்ளான்களைக்கூடப் பயன்படுத்தமுடியும். உற்பத்தி இல்லாமல் இவைகளையெல்லாம் குறைத்துக்கொள்ளலாம், விலையைக் குறைத்துக் கொள்வோம் என்று சொன்னால் அது சுபீட்சம் ஆகாது. பழைய நிலையில்—பஞ்ச நிலையில்—எல்லோரும் இருக்கலாம், ஆண்டவன் விட்டவழி என்று. இந்த இரண்டு பஞ்சம் வந்தால் இன்னொரு ஆண்டு மழை வந்துவிடும், ஆண்டவன் இப்படி விதித்து விட்டார் என்று அந்த அளவுக்கு ஒப்புக்கொண்டால் நல்லதாகி விடும். ஆனால் புதிய விதி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோம். அதற்காகத்தான் அணை கட்டி, ஒரு பக்கத்தில் பெய்யக்கூடிய மழையைத் தேக்கி வைத்து மழை இல்லாத இன்னொரு இடத்திற்குக் கொண்டுபோகிறோம். அப்படியே நடந்துகொண்டு போகட்டும், இதெல்லாம் செய்ய வேண்டாமென்று சொன்னால் நாட்டின் பொருளாதாரம் உயர்ந்து, மக்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து, மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு வழியாகாது. அதற்காக திட்டங்களை நிறைவேற்றியாகவேண்டுமென்பதில் சந்தேகமில்லை. நிறைவேற்றவேண்டுமென்று சொல்லும்போது, அதனால் பண வீக்கம் வந்துவிடுகிறது—கஷ்டம் வருகிறது. சில சமயத்தில் நாம் பார்க்கிறோம், வியாதியஸ்தருக்கு இருக்கக்கூடிய பெரிய வியாதி யைத் தீர்ப்பதற்கு டாக்டர் மருந்து கொடுக்கிறார். மருந்து எதற்காகக் கொடுக்கிறாரோ அந்த வியாதி குறைந்தாலும் அதே நேரத்தில் புதிய வியாதிகள் வருகின்றன. வைத்தியருக்குத் தெரியும், அந்த மாதிரியான சிறு வியாதிகளைப் போக்க உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டுமா அல்லது தானாகப் போய் விடும் என்று விட்டுவிடலாமா என்று. பெரிய பெரிய திட்டங்களை நிறைவேற்றுகிறோம். கற்ப காலம் என்று சொல்வார்கள்—அதாவது காலம் அதிகமாக இருக்கக்கூடிய திட்டங்கள்—மூன்று ஆண்டுகள், ஆறு ஆண்டுகள் கழித்துப் பலன்

கிடைக்கக்கூடிய திட்டங்கள், கோடிக் கணக்கில் செலவு செய்து நிறைவேற்றுகிறோம். இதனால் பண வீக்கம் ஏற்படுகிறது. ஆகையால் பக்கத்தில் போகக்கூடாது என்று சொன்னால் அவர்கள் பெரிய வியாதி அப்படியே இருக்கட்டும் என்று சொல்பவர்களாகத்தான் இருப்பார்கள். பெரிய வியாதி போகிறது, ஆனால் இன்னொரு வியாதி வருகிறது என்றாலும் அப்படியே விட்டுவிட முடியுமா? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டாக்டர் ஆலோசனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளத்தான் செய்வார். சிறு கோளாறு ஏற்படுகிற காரணத்தினால் அடிப்படையான காரணத்திற்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொன்னால், பெரிய வியாதி அப்படியே இருந்து கஷ்டம் கொடுத்துக் கொண்டிருப்பதைப் போலத்தான் ஆகும். வறுமை தீரவேண்டுமென்று சொன்னால், அதற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய உற்பத்தி பெருக வேண்டுமென்றால் பெரிய தொழிற்சாலைகள், பெரிய திட்டங்கள் இவைகளை நிறைவேற்றினால்தான் முடியும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். பண வீக்கம் ஏற்படும்போது அதை எப்படித் தடுப்பது என்பதைக் கவனிக்கவேண்டும். சில பேர்கள்—முக்கியமாக சுதந்திரா கட்சி—கட்டுப்பாடு வைக்காதீர்கள், வேறு ஏதாவது வைத்துக்கொள்ளுங்கள், கட்டுப்பாடு கூடாது, கட்டுப்பாடு வைத்தால் வேறு கஷ்டங்கள் வந்துவிடுகின்றன என்று சொல்லுகிறார்கள். கட்டுப்பாடு வைத்து நமக்கு அனுபவம் இருக்கிறது. கட்டுப்பாட்டிலே சில கோளாறுகள் இருக்கின்றன—வாஸ்தவம் தான். இந்தக் குறைகளைத் தடுக்க முடியாதா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு நாம் யோசித்துப் பார்க்கும் போது, பண வீக்கத்தைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், கட்டுப்பாடு இல்லாமல், முக்கியமாக விலைக் கட்டுப்பாடு இல்லாமல், அதைச் செய்ய முடியுமா என்று யோசித்துப் பார்க்கும்போது, அத்தியாவசியமான பொருள்களுக்கு விலை கட்டுப்பாடு இருந்தாகவேண்டுமென்று பார்க்கிறோம். விலை தாறுமாறாக ஏறுவதால் உற்பத்தி பாதிக்கப்படும். இன்றைக்கு ஜவுளித் தொழிலை எடுத்துக்கொள்ளுங்கள். உற்பத்தி இருந்தபோது வாங்குவதற்கு ஆட்கள் இல்லை, லாபமும் கம்மி. உற்பத்தி குறைவு, டிமாண்டும் அதிகமாக இருக்கிறது, அதனால் உற்பத்தி குறைகின்ற காரணத்தினால் அதிக லாபம் வருகிறது. (குறுக்கீடு) போன வருஷத்திற்கும் இந்த வருஷத்திற்கும் கணக்குப் பார்த்தால் போதுமான பஞ்சு இல்லாத காரணத்தினால் உற்பத்தி குறைந்திருக்கிறது. சமீபத்தில் வெளிவந்த ரிஸர்வ் பாங்க் அறிக்கையிலிருந்து இது தெரியும். அதிலும் ஏழைகள் வாங்கக்கூடிய மட்ட ரகத் துணி உற்பத்தி மிகவும் குறைந்திருக்கிறது. அவைகளின் விலை ஏறியிருக்கிறது. இருபது என் முதல் நாற்பது என் வரை உள்ள நாலில் தான் அதிக லாபம் இருக்கிறது. சூபர்ஃபைன் துணிகள் நெய்வதற்கு வேண்டிய பஞ்சு இல்லாமல் அதிலும் இலாபம் வருகிறது. உற்பத்தி குறையும் போது—மீதி ரகங்கள் பற்றிச் சொல்லவில்லை, பொது மக்கள் வாங்கும் ரகத்தில் உற்பத்தி குறையும்போது—அதன் காரணமாக விலை உயருகிறது. மந்திரி திரு. பட்டீல் அவர்கள்கூட உற்பத்தி பெருகி விலை சரிந்து விட்டால் எப்படி-





முட்டுக்கட்டை கொடுப்பது என்று சொல்லுகிறார்கள். அது எந்த காலத்தில் வருகிறதோ அதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் விலைக்கட்டுப்பாடு இல்லாமல் இஷ்டம்போல் மேலும் போகலாம், கீழும் போகலாம் என்பதால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. திரு. கருத்திருமன் பொருளாதாரம்கூட அது மாதிரிதான்—விலை அதிகமாக இருந்தால் உற்பத்தி செய்ய ஊக்கம் இருக்கிறது என்று சொல்கிறார். உற்பத்தி பெருகப்பெருக விலை குறைந்தால்தான் நல்லது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் உற்பத்தி குறைவாகவும் விலை அதிகமாகவும் இருக்கிறது. இதையெல்லாம் அனுசரித்தே விலை நிர்ணயக் கொள்கை அவசியம் என்று முடிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். விலை சரிந்து போகாமல் இருக்க என்ன ஏற்பாடு செய்யவேண்டும்? ஜவுளித் தொழிலாக இருந்தாலும், அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் உற்பத்தியாக இருந்தாலும் அதிகமான ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல், குறைவான லாபம், குறைவான உற்பத்தி, அதிகமான லாபம் என்று இல்லாமல் ஒரு சரியான நிலைமையை ஏற்படுத்த வேண்டியது மிக அவசியம். அதற்காகத்தான் விலைக் கட்டுப்பாடு. காங்கிரஸ் கட்சிக்குள் மட்டுமல்ல, அதை எப்படிச் செய்கிறது என்பதைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் எல்லாக் கட்சிகளுக்குள்ளும் இருக்கிறது. திரு. அண்ணாத்துரையவர்கள் சொன்னதுபோல் நிபுணர்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. நியாயமான கருத்து வேறுபாடு இருக்கும் நிலைமை இருக்கிறது. எந்தக் காரணத்தினாலாவது இதை இப்படியே விட்டுக்கொண்டு போவோமேயானால் அது நம்மையே விழுங்கி விடும். ஆகவே, கவர்னர் உரையில் மட்டுமல்ல; பட்ஜெட் உரையிலும் இதைப்பற்றி வற்புறுத்தியிருப்பதற்குக் காரணம் அதை இந்தச் சர்க்கார் எடுத்துக் காட்ட வேண்டுமென்பதற்காக அல்ல. இன்றைக்கு நாட்டு நிலைமையை ஒப்புக் கொள்ளக்கூடிய முறையில், மத்திய சர்க்காரிலே இதற்கு ஒரு முடிவு எடுத்துக் கொண்டாக வேண்டுமென்பதற்காக வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். இதில் இருக்கும் சிக்கல்கள் காரணமாக, பல்வேறு கஷ்டங்கள் காரணமாக ஒரு உறுதியான முடிவை உடனடியாக எடுத்துக்கொள்ளமுடியாமல் இருக்கிறது. இதை ஒத்திப் போட்டுக் கொண்டே போனால் நிலைமை மோசமாகிவிடும். நிலைமை தெளிவாகாது. ஆகையினால்தான் இதிலே நம்பிக்கையுள்ளவர்கள் எல்லாரும்—நம்பிக்கை இல்லாதவர்கள் வேண்டியதில்லை—எந்த வழி என்பதிலே கருத்து வேறுபாடு இருந்தாலும் கட்டுப்பாடு அவசியம் என்ற வகையில் வழி செய்யவேண்டும். பல முறைகளை நிபுணர்கள் காட்டியிருக்கிறார்கள். ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. இதையெல்லாம் பார்த்து மலைத்துப் போகாமல் ஆராய்ந்து முடிவுக்கு வந்து நடவடிக்கைகள் எடுப்போமானால் அந்த நடவடிக்கைகள் மூலமாக இதைக் கட்டுப்படுத்த முடியுமென்று நான் நம்புகிறேன். இதன் மூலம் தொழிலாளர்களுக்கும், ஏழைகளுக்கும், குறைந்த

[Sri C. Subramaniam] [11th August 1960

வரும்படி வாங்கி வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கும் ஒரு பெரிய பலன் ஏற்படும்; நன்மை ஏற்படும் என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திட்டம் இது மாதிரி நடைபெற முதலீடு செய்ய வேண்டும். இது மாதிரி விலைவாசிகள் தாறுமாறாக இருந்து கொண்டிருந்தால் முதலீடு செய்வதற்கான பணத்தைச் சமுதாயத்தில் இருந்து பெறமுடியாது, என்பதைப் பற்றியும் நான் இப்போது பேசவேண்டிய அவசியமில்லையென்று நினைக்கிறேன். திட்டத்தைப்பற்றி விவாதிக்கும்போது சேமிப்பு அவசியம். அது பற்றி விரிவாகப் பேசலாம். ஆனால், இதற்கும் விலை நிர்ணயக் கொள்கை ஏற்படுத்தவேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். இவைகளையெல்லாம் நன்றாகக் கவனித்து, பரிசீலித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்கிற காலத்திலே, விலைக் கட்டு மீறிப் போகிறது என்று சொல்லி "வேலை நிறுத்தம் செய்வோம்" என்று சொல்லும் அளவுக்குத் தொழிலாளர்களைத் தூண்டி விடக்கூடிய அரசியல் கட்சிகள் இருக்குமானால் உண்மையிலேயே அவைகள் நாட்டுக்கு நன்மை செய்யக்கூடிய கட்சிகள் அல்ல; நாட்டைப் பாழ்படுத்தக் கூடிய கட்சிகளாகத் தான் இருக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாதிரிக் குழப்பம் செய்தால்தான் தங்களுக்கு "சான்ஸ்" கிடைக்கும் என்று அவர்கள் நினைக்கலாம். வேலை நிறுத்தத்தால் தொழிலாளர்களுக்கு நன்மை கிடையாது. அதனால் கஷ்டந்தான் ஏற்படுகிறது; நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப் படுகிறது; உற்பத்தி பாதிக்கப்படுகிறது, பொருளாதார வளர்ச்சி தடைபடுகிறது. இதனால் மக்களுடைய வாழ்க்கைதரம் உயராமல் வீழ்ந்து போகிறது என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்ளுவார்கள். இந்த அடிப்படையில்தான் நாம் எல்லாரும் முடிவு எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அகில இந்திய ரீதியில் எடுக்கும் முடிவுகள் பல இருக்கும் காரணத்தால் இங்கே நாம் விவாதிப்பதன் மூலமாக, இந்தச் சூழ்நிலையை நாட்டிலே ஏற்படுத்தவேண்டும். நான் இன்னும் என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டும், எந்த அளவுக்குப் போகலாம் என்பதைப் பற்றியெல்லாம் உங்களுடைய யோசனைகளைச் சொல்லவேண்டுமென்ற அடிப்படையில் இந்தக் கருத்துக்களை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கும் காலத்தில் இந்தச் சபையில் அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பேசும்போது, முக்கியமாக திரு. அண்ணாத்துரையவர்கள் "சொல்லி என்ன பிரயோஜனம்? சொன்னால் கிடைக்கவா போகிறது? சென்னை சர்க்கார் மந்திரிகள் இதையெல்லாம் கேட்கப் போகிறார்களா?" என்ற முறையில் பேசினார்கள். இன்றைக்கு நாம் கேட்பதெல்லாம் வந்துவிடுமென்று சொன்னால் உடனடியாக இருக்கும் குறைகளையெல்லாம்



11th August 1960] [Sri C. Subramaniam]

தீர்த்து விடலாம். நமக்கு நினைப்பதையெல்லாம் முடித்துவிடக் கூடிய சக்தி இருந்தால் உடனடியாக எல்லாவற்றையும் நிறைவேற்றிவிடலாம். இன்றைக்குப் பொதுவாக நாட்டிலே இருக்கக் கூடிய நிலைமையை அனுசரித்துக் கொண்டு, நம்முடைய ராஜ்யம் ஒன்று மட்டும் அல்ல; எல்லா ராஜ்யங்களும் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் நிலையில் அந்தந்த ராஜ்யங்களுக்கு இருக்கக் கூடிய கஷ்டங்களையும் உணர்ந்து நாமும் அந்த அளவுக்கு நம்முடைய திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். திரு. அண்ணாத்துரை அவர்கள் கேட்கும் திராவிட நாடாக இருந்தாலும் நான்கு பேர் சேர்ந்து யோசிக்க வேண்டும். பெரியார் கேட்கும் தமிழ் நாடு வந்த பிறகும் 10 ஜில்லாக்கள் அடங்கியிருக்கும்போது ஒவ்வொரு ஜில்லாவுக்கும் எவ்வளவு என்று பார்க்க வேண்டும். ஒருவருக்கு மட்டும் வேண்டுமென்று நினைத்து எந்தக் காலத்திலும் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. இருக்கக் கூடிய அளவிலே ஒவ்வொரு பகுதிக்கும் எந்த முறையிலே காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதுபற்றி நாமும் நியாயமாக இருக்க வேண்டும்; மற்றவர்களும் நியாயமாக இருக்க வேண்டும். மற்றவர்கள் எப்படி வேண்டுமானாலும் போகட்டும், எங்களுக்கு ஆயிரத்தைக் கொடு, இரண்டாயிரத்தைக் கொடு என்று கேட்டால், நம்மைப் பார்த்து நமக்குப் பக்கத்தில் இருப்பவர்களும் தூரத்தில் இருப்பவர்களும் அவ்வாறு கேட்கக் கூடிய உரிமையைக் கொடுத்து விடுகிறோம். என்னைப் பொறுத்த வரையில் எது நியாயம் என்று முடிவு செய்து கேட்டால் அந்த அளவுக்குப் பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**Sri C. N. ANNADURAI:** எது நியாயம் என்று தங்களுக்குத் தோன்றி, எவ்வளவு தேவை, இன்னது தேவை என்று சொல்லிக் கேட்டு, கேட்ட அளவு தங்களுக்குக் கிடைத்த அனுபவம் இருக்கிறதா?

**The Hon. Sri C. SUBRAMANIAM:** தேவையை வைத்துப் 12
பார்ப்பது என்று சொன்னால் அது இரண்டாவது ஐந்தாண்டுத் noon.
திட்டத்திலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தீர்ந்து விடக் கூடியதல்ல. நான்கு, ஐந்து, ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகும் கூட அந்தச் சமயத்தில் இருக்கக்கூடியவர்களுக்குத் தேவை இன்னும் அதிகமாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து. இன்றைக்கு நாட்டில் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது நமக்கு ஒன்றும் குறைவாகக் கிடைத்து விடவில்லை என்பதுதான் என்னுடைய எண்ணம். இதற்கு மேல் செய்திருக்க முடியாதா என்று சொன்னால் எங்களை விடத் திறமையானவர்கள் இருந்திருந்தால் செய்திருக்கலாமோ என்னவோ தெரியாது. இன்னும் அந்தப் பங்கை, போதுமான அளவுக்கு, நியாயமான பங்கைப் பெற முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அந்த நம்பிக்கை குறையும் காலத்தில் நீங்கள் வேண்டுமானால் இந்தப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொள்ளலாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[11th August 1960

**SRI C. N. ANNADURAI :** அந்தப் பக்கத்தில் யார் சொல்லுகிறார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை. இவ்வளவு தேவை என்று கேட்டு, அதைவிடக் குறைச்சலாகக் கிடைக்கப்பட்டதாகத் தகவல் இருக்கிறது என்று சொல்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM:** முதலிலே எந்த அளவு திட்டம் போடவேண்டும் என்று அகில இந்திய ரீதியிலே போடுகிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவரங்களை எல்லோரும் படித்துக் கொண்டிருப்பார்கள். அந்த புள்ளி விவரம் நம் முன்னிலையில் இருக்கிறபடியினால் அதைக் குறிப்பிடுகிறேன். பத்தாயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டுமென்று தற்காலிக முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இதற்கு முந்தி திட்டம் போட்டபோது, இருபதாயிரம் கோடி ரூபாய் அளவிலே திட்டம் போடப்பட்டது. இருபதாயிரம் கோடி அளவுக்குத் திட்டம் போட்டது சரி என்றாலும், அந்த அளவுக்கு வசதி இருக்கிறதா என்று பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிப் பார்த்ததில், பத்தாயிரம் கோடி அளவுக்குத்தான் வசதி இருக்கிறது என்று பார்த்து, அதன்படி பத்தாயிரம் கோடி ரூபாய் அளவில் எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

இந்த பத்தாயிரம் கோடி ரூபாய் அளவிலே ஒவ்வொரு இலாகாவுக்கும் எவ்வளவு ஒதுக்க வேண்டும் என்று பார்த்து ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கும்போது கல்வி இலாகாவை எடுத்துக்கொண்டால், கல்வித் துறையிலே சொல்கிறார்கள், '300 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது போதாது, 500 கோடி ஒதுக்க வேண்டும்' என்று. அதே போல, 'ரோடு வசதிக்கு 150 கோடி ரூபாய்தானா ஒதுக்குவது? எப்படியாவது 400 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும்' என்று கேட்கிறார்கள். தொழில் துறையிலும் அப்படித்தான். 'இவ்வளவுதானா தொழிலுக்கு? இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது? ஆயிரம் கோடி ரூபாயாவது ஒதுக்குங்கள்' என்கிறார்கள். அதேபோல், ரெயில்வே முக்கியமானது தான். 'ஒவ்வொரு பகுதிக்கும் ரயில் பாதை போடவேண்டும்; 500 கோடி ஒதுக்கச் சொல்லுங்கள்' என்கிறார்கள். இப்படியாக ஒவ்வொரு இலாகாவும் போட்டி போட்டுக்கொண்டு, மேலும் மேலும் அதிகமாக வேண்டுமென்று கேட்கிறார்கள்.

இதெல்லாம் செய்ய இடம் இருக்கிறது. ஆனால், கடைசியில் கணக்குப்போட்டு, இன்றைக்கு வெளியிலிருந்து எவ்வளவு வசதி கிடைக்கும், நமக்கு இருக்கும் வசதி என்ன என்று பார்க்கும் போது, பத்தாயிரம் கோடி அளவுக்குத் திட்டம் போட முடியும் என்ற முடிவுக்கு வருகிறோம். இந்தப் பத்தாயிரம் கோடி அளவில் திட்டமிடுகிறபோது, ஒவ்வொரு இலாகாவுக்கும் எவ்வளவு குறைக்க முடியுமோ அந்த அளவு குறைத்து, அந்த அந்த இலாகாவுக்குப் பங்கு போட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பங்கு போட்டுக் கொடுக்கும்போது, ஏதாவது ஒரு இலாகாவுக்குத் தொகை குறைந்துவிட்டால் அந்த மந்திரி வந்து, 'நான் தான்



11th August 1960] [Sri C. Subramaniam]

இளித்த வாயன் போலிருக்கிறது, ஏமாந்து போய்விட்டேன், என் இலாகாவுக்கு ஒதுக்கிய தொகையிலிருந்து குறைத்துவிட்டார்களே' என்று நினைத்தாலும், அல்லது வேறு யாராவது அவரிடம் போய், 'நீ தான் மோசமாக இருக்கிறாய், உன்னை ஏமாற்றிவிட்டார்களே' என்று சொன்னாலும், அவர்கள நிலைமையை அனுசரித்துப் பார்க்கவேண்டும்.

முதலிலே 700 கோடி, 800 கோடி, ஆயிரம் கோடி என்று ஒரு இலாகாவுக்கு கேட்கப்பட்டிருக்கலாம். 'ரொம்ப முக்கியமான இலாகாவாகிய கல்வி இலாகாவுக்கு 800 கோடி முதல் 900 கோடி வரையில் கேட்டிருக்க, 300 கோடிதானே ஒதுக்கப்பட்டிருக்கிறது, இதை வைத்துக்கொண்டு என்ன வேலை செய்வது? இது மந்திரியினுடைய கோளாறு' என்றால், அது நிலைமை தெரியாமல் சொல்வதாகத்தான் இருக்கும்.

பத்தாயிரம் கோடிக்குத் திட்டம் போட்டிருந்தால், ஒவ்வொரு ராஜ்யத்திலேயும் எவ்வளவு வேண்டுமென்று அவரவர்கள் திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ராஜ்யங்களினுடைய திட்டங்களெல்லாம் அங்கு போன பிற்பாடு, 3650 கோடி ரூபாய் அளவுக்கு ராஜ்ய சர்க்கார்கள் மூலமாகச் செய்யக்கூடிய திட்டம் என்று சொல்லும்போது, இந்த 3650 கோடி ரூபாயை எந்த அடிப்படையிலே பங்கு போட்டுக்கொள்வது என்பதைப்பற்றிப் பரிசிலனை செய்து ஒரு முடிவு எடுக்கிறோம்.

**SRI C. N. ANNADURAI :** நான் கேட்டதற்குப் பதில் சொன்னதாகத் தெரியவில்லை. நான் கேட்டது—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தாங்கள் கேட்ட அளவு, கேட்ட வகைகள் கிடைத்தனவா?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** அதைத்தான் நான் சொல்கிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இம்மாதிரி போடுகின்றபோது, இப்பொழுது நாம் எவ்வளவு செய்யலாம் என்பதற்கு இங்கிருக்கும் இலாகாக்களைக் கேட்டு, 350 கோடி, 500 கோடி என்று ஏதோ நமக்குச் செய்ய முடியும் என்ற அளவுக்கு நாம் போட்டுக்கொண்டு போகிறோம். அதே மாதிரி தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஏற்பட்டது. திட்டங்கள் அங்கு போனதற்குப் பிற்பாடுகூட, நமக்கு வசதி எவ்வளவு இருக்கிறது, வெளி வசதி எவ்வளவு வரும் என்று அகில இந்திய ரீதியிலே ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் கணக்குப் போட்டுப் பார்த்து, அதற்குப் பிற்பாடு திட்டம் போடுகிறோம். அந்த முறையிலே, சென்ற தடவை நாம் கேட்கும்போது, 'காம்பொஸிட் ஸ்டேட்'டாக இருந்து, மலையாளம், தென் கன்னடம் சேர்ந்திருந்து, கேட்டதற்குக் குறைவாகத்தான் வந்தது என்று ஒப்புக்கொள்ளுகிறோம். குறைந்தது, 200 கோடி ரூபாயாவது இருந்திருக்க வேண்டுமென்று கேட்டோம். ரூ. 150 கோடி அளவுக்குத்தான் கொடுத்தார்கள். ஆனால், போட்ட திட்டங்களை நிறைவேற்றியதன் காரணமாக— மலையாளத்திற்கும், தென் கன்னடத்திற்கும் சேர்ந்து

[Sri C. Subramaniam] [11th August 1960

ரூ. 200 கோடி வாங்கியிருந்தால், நமக்கு வந்திருக்க வேண்டியது ரூ. 170 கோடிதான். பிரித்துக் கொடுத்திருந்தால் ரூ. 170 கோடிதான் வந்திருக்கும். ஆனால், திட்ட வேலைகளை நிறைவேற்றியதன் காரணமாக, அவ்வப்போது திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்றுவதன் காரணமாக, ரூ. 182 கோடி அளவுக்குத் தந்திருக்கிறார்கள்.

SRI C. N. ANNADURAI : எந்த மாநிலத்தையும் விட நம்முடைய மாநிலத்திலே இதற்காக வசூலிக்கப்பட்ட வரித் தொகையின் அளவு அதிகம் இல்லையா?

THE HON. SRI C. SUBRAMANIYAM : அது சரியல்ல. நாம் மூன்று கோடி ரூபாய்தான் வரி அதிகமாக வசூல் செய்திருக்கிறோம். மூன்று கோடி ரூபாய்க்கும் அதிகமாக திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் அவர்களின் குறுக்கீடு) ரூ. 17 கோடிக்குத் திட்டம் போட்டு ரூ. 20 கோடி ஆகியிருக்கிறது. ஆக, மூன்று கோடி ரூபாய் அதிகம்.

இதிலே பல திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன என்றால் அவை ரெவினியூ செலவில் அல்ல. மத்திய சர்க்காரிடம் கடன் வாங்கி முதலீடு செய்யக்கூடியது; அவையெல்லாம் வரியின் மூலமாகச் செய்யக் கூடியது அல்ல. திட்டங்களுக்கு அதிகமாகச் செலவு செய்யும்போது, அது வரியிலிருந்து செலவழிக்கப்படுவது அல்ல. நிர்வாகச் செலவும் அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதற்கு வரியிலிருந்து செலவழிக்கப்படுகிறது. பொது மக்களிடத்திலே கடன் வாங்கி, மத்திய சர்க்காரிடத்தில் கடன் வாங்கி, முதலீடு செய்ததன் மூலமாக 32 கோடி ரூபாய் அதிகம் ஆகியிருக்கிறதே தவிர, ரெவினியூ செலவில் அதிகம் ஆனது அல்ல. செய்யக்கூடிய திட்டங்கள் மூலமாகத்தான் திட்டத்தின் அளவு உயரவேண்டும். உதாரணமாக, போலீஸ் இலாகாவுக்கு ஐந்து கோடி, ஆறு கோடி ரூபாய் செலவு செய்வது அல்ல முக்கியம்; அதன் மூலம் ஓரளவு பாதுகாப்பு இருக்கலாம். ஆனால், அபிவிருத்தித் திட்டங்களிலே வந்துசேரக்கூடிய கணக்கைப் பார்க்கும்போது, நாம் கேட்ட அளவுக்கு, நாம் அப்பொழுது நினைத்த அளவுக்குக் கொஞ்சம் அதிகமாகவே செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இருநூறு கோடி கொடுத்தால், 'அவ்வளவுதானா கொடுப்பது? 250 கோடி கொடுத்திருக்கலாமே' என்று கேட்டுக்கொண்டிருப்பதென்றால், அதற்கு அளவே இருக்க முடியாது. இருக்கும் சூழ்நிலையை அனுசரித்து, இன்றைக்கு 3650 கோடி ரூபாய் வரையில் எல்லா மாகாணங்களுக்குமாகச் சேர்த்து ஒதுக்கியிருக்கும்போது நம்முடைய ராஜ்யத்திற்கு எவ்வளவு ஒதுக்க வேண்டும் என்பதைப் பற்றி முதலிலே ஆலோசனை செய்யவேண்டியிருக்கிறது. தொழில் துறை நாம் நடத்துவது அல்ல; அது இந்த 3650 கோடியில் வருவது அல்ல; தனியாக மத்திய சர்க்கார் நடத்த வேண்டியது; அல்லது தனியார் செய்யவேண்டியது. சர்க்கார் முதலீடு செய்யக் கூடியது மட்டுமல்ல; தனியார் முதலீடு செய்யக்கூடியதும் சேர்ந்துதான் பத்தாயிரம் கோடி ரூபாய். ஆகையால், தொழில் துறையில் எந்த முறையில் முன்னுக்குப் போகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். 3650 கோடி ரூபாயில் சரியான பங்கு வாங்குவதால் சமாளித்துவிடுவோம் என்று சொல்ல முடியாது. புதிய தொழில் எவ்வளவு வருகிறது என்று யோசித்துத் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. நமக்கு இருக்கும் கொள்கை—சில தொழில்கள் இங்கு கட்டாயம் ஏற்பட்டாகவேண்டும், அதன் மூலம்தான் தமிழ் நாட்டின் பிற்கால வளர்ச்சி ஏற்படமுடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.



11th August 1960] [Sri C. Subramaniam]

உலோகத் தொழில்களை அடிப்படையான தொழில் என்று கருதுகிறோம். அலுமினியத் தொழிலும் மிகவும் முக்கியமானது. அலுமினியம் பல தொழில்களில் பயன்படுகிறது. அந்தத் தொழிலை நிறுவவேண்டுமென்று முன்வந்தோம். லைசென்ஸ் வந்தாய்விட்டது. அதை நிறுவ ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறது. பூர்வாங்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

SRI M. KALYANASUNDARAM : ப்ரைவேட் செக்டாரில்தான் வருகிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : தொழில்களைப்பற்றிப் பொதுவாகச் சொல்கிறேன். ப்ரைவேட் ஸெக்டாரிலே வந்தாலும் சரி, பப்ளிக் ஸெக்டாரிலே வந்தாலும் சரி தொழில்கள் வளர வேண்டும் என்பதுதான் முக்கியம். தொழில்கள் வந்த பிற்பாடு அதை எந்தத் துறைக்கு வேண்டுமானாலும் மாற்றலாம்; அதற்கு வேண்டிய சக்தி நமக்கு இருக்கிறது. தொழில் வருவதற்கு முதல் இடம் கொடுக்க வேண்டும். ப்ரைவேட் ஸெக்டாரிலே வந்தால் ப்ரைவேட் ஸெக்டாரிலே வேலை செய்வோம். பப்ளிக் ஸெக்டாரிலே வந்தால் பப்ளிக் ஸெக்டாரிலே வேலை செய்வோம். சென்னை ராஜ்ய சர்க்காரைப் பொறுத்த வரையில் தொழில் கொள்கை என்னவென்றால், மேலும் தொழில்கள் ஏற்படவேண்டும் என்பதுதான். வாதப் பிரதிவாதங்கள் காரணமாக, பப்ளிக் ஸெக்டாரிலே வந்தால்தான் வரவேண்டும், இல்லாவிட்டால் வேண்டவே வேண்டாம் என்று ஒதுக்கிவைக்கக்கூடிய கொள்கை சென்னை சர்க்கார்க் கொள்கை அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இருக்கக்கூடியது இரும்பு உருக்கு செய்யக் கூடிய தொழில். அதைப்பற்றி ரொம்ப உருக்கமாகப் பேசினார் திரு. ஷண்முகம் அவர்கள். 'எங்கெங்கோ எத்தனையோ கூட்டங்களில், எப்படி உருக்கு செய்வது என்று சொல்லியாய்விட்டது, கல் நெஞ்சுடைய சர்க்கார் மனம் உருகவில்லையே' என்று பக்தன் பாடுவதுபோல் பாடினார்கள். அம்மாதிரி உருக்கமாகப் பாடி உருக்கமாகப் பேசி, உருக்கும் சமாசாரமானால் ரொம்பச் சுலபமாகச் செய்துவிடலாம். இரும்பு உருக்குத் தொழில் செய்ய வேண்டும் என்று சொல்லும்போது, இதற்கு அடிப்படையாக இருக்கும் மூலப் பொருள்கள் இரும்புக் கனி என்று தெரிகிறது. லிக்னைட்டை வைத்துக்கொண்டுதான் சேலத்து இரும்புக் கனியை

உருக்கவேண்டுமென்ற நிலைமையில் இருக்கிறோம். இன்னும் அதைப் பரீட்சை செய்யவேண்டியிருக்கிறதாமே என்று ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார்கள். ஆம்; பரீட்சை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகுமா, ஆகாதா என்பதற்காக அல்ல அந்தப் பரீட்சை. ஒவ்வொரு பக்கத்திலே இருக்கும் இரும்புக் கனியையும் எடுத்துப் பார்க்கும்போது, ஒவ்வொன்றும் வெவ்வேறு சத்துக் கொண்டதாக இருக்கிறது. அதுபோல், பழுப்பு நிலக்கரி வெவ்வேறு இடத்தில் வெவ்வேறு ரகமாக, வெவ்வேறு சத்து அடங்கியதாக இருக்கிறது. உதாரணமாக, ஒரு கோட் தைக்க வேண்டுமானால், அதற்குத் துணி வேண்டும் என்று தெரிகிறது. ஆனால், ஆளுக்குத் தகுந்த அளவு துணியை எடுத்துத் தைக்க வேண்டியிருக்கிறது. அதைப்போன்றுதான் சேலம் இரும்புக் கனி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி இவ்விரண்டையும் வைத்துக்கொண்டு இரும்பு செய்ய முடியும் என்று தெரிகிறது. ஆனால், இதற்கு எந்த விதமான இயந்திரம் வேண்டும், எந்த விதமான உலை வேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கு பழுப்பு நிலக்கரியிலே எல்லா சத்துக்களும் சேர்ந்திருக்கின்றனவா என்பதைப் பரீட்சை செய்து பார்க்கவேண்டும். கோட்டுக்கு எங்கெங்கே துணியைக் 'கட்' பண்ண வேண்டும் என்பதைப்போல், இரும்பு உருக்குவதற்கும் எந்தவிதமான உலையை எந்த மாற்றங்களோடு செய்ய வேண்டும் என்பதைப்பற்றி முடிவு செய்யவேண்டும் என்ற கருத்தைத்தான் கிழக்கு ஜெர்மனியார் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி அதற்கான பரீட்சைகள் செய்வதற்கு குறைந்தது 1,000 டன் லிக்னைட் கேட்கிறார்கள். இரும்புக் கனியைப் பொறுத்தவரைக்கும் நமக்கு வேண்டியிருக்கிறது. பரீட்சார்த்தமாக எடுத்த பழுப்பு நிலக்கரி வேறு. அந்தப் பரீட்சைகள் தீர்ந்துபோய்விட்டன. கொஞ்சம் எடுத்தோம். இன்றைக்கு 1,000 டன் வேண்டியிருக்கிறது. அது வரவேண்டியிருக்கிறது. இன்றைக்கு நாம் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம் என்று சொன்னால், அதில் எப்படி உலை மாற்றி அமைக்கவேண்டும் என்பது ஒருபுறம் இருக்க, இந்தத் தொழிலை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது. அதனால் அதற்கு வேண்டிய மற்ற பூர்வாங்க வேலைகளையெல்லாம் தொடர்ந்து நடத்தலாம் என்று சமீபத்தில் இங்கு கூடிய நிபுணர்கள் கமிட்டி கூறியிருக்கிறது. மத்திய அரசாங்கம் இதற்காக ஒரு நிபுணர் கமிட்டி போட்டிருக்கிறார்கள். அவர்கள் நெய்வேலி போய் பார்த்துவிட்டு இந்த அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவநம்பிக்கை படுவதற்கு இடமில்லை.

(Deputy Speaker in the Chair)

பூர்வாங்க வேலைகளெல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. எதுமாதிரி மெஷினரி வேண்டும் எதுமாதிரி உலை வைக்க வேண்டும் என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டும். மெஷினரி வந்தவுடன் அதை வைத்து இந்தத் தொழிலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்கிற யோசனையை அவர்கள் கூறியிருக்கிறார்கள். இரும்புத் தொழிற்சாலையை





அமைக்கவேண்டுமென்ற முறையிலே அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ, அவைகளையெல்லாம் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிறோம். அது சாத்தியம், அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி 'டிராப்ட் அவுட்லைனில்' அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது முடியும் என்பதுதான் கருத்து. அது எப்படி முடியும், எந்தவிதமான இயந்திரம், எந்தவிதமான உலை என்பதைப்பற்றிதான் பரீட்சைகள் நடந்தபிற்பாடு தெரியவேண்டும். அந்தப் பரீட்சைகள்தான் இப்பொழுது நடந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏதோ இந்த அரசாங்கத்திற்கு இந்த இரும்புத் தொழில் இங்கே வரக்கூடாது, ஏதோ சொல்லி இதை ஒத்திப்போடவேண்டும் என்பது போன்று வெளியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய எண்ணம் அதுவல்ல. எவ்வளவு சீக்கிரம் இதை செய்து முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்து முடிக்கவேண்டுமென்பதுதான் எண்ணம். இவர்களும் ஈஸ்டு ஜெர்மனியில் போய் நேரடியாகப் பார்த்தார்கள். நேரடியாகப் பார்த்தால்தான் பல காரியங்களைப் புரிந்துகொண்டு செய்ய முடியும். அங்கிருந்து நிபுணர்களையும் இங்கு அழைத்தார்கள். அவர்களும் இங்கு வந்து பார்த்து அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

அதிலே இன்னொரு விஷயம்கூட இருக்கிறது. இரும்பு 10 டன், 100 டன் எடுத்தால் டன் ஒன்றுக்கு 500, 600 ரூபாயாகிறது. டன் ஒன்றுக்கு ரூ. 70, 80, 150-க்கு மற்றவர்களுக்குக் கிடைக்கும் பொழுது, நமக்கு டன் ஒன்றுக்கு ரூ. 500, 600 என்று விலை ஆகுமானால், அதனால் நஷ்டம்தான் வரும். ஆகையால் எந்த அளவுக்குச் செய்தால் சிக்கனமாகச் செய்ய முடியும் என்பதைப் பார்க்கும்பொழுது, 5,000 டன், 10,000 டன் போட்டால் போதாது, 2 லட்சம் டன், 3 லட்சம் டன் அளவுக்குச் செய்தால்தான் முடியும்.

SRI C. N. ANNADURAI : 'A pig iron plant based on low shaft blast furnace techniques and use of coke from Neiveli lignite is also included in the Outline as a project on which preparatory work should continue with a view to reaching decisions in due course.' 'In due course' என்று சொல்லியிருப்பது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : டெக்னிகல் கமிட்டி வந்த பிற்பாடு, அவர்கள் சொல்லிப்போயிருக்கிற முடிவு, இனிமேல் ஆகுமோ, ஆகாதோ என்ற சந்தேகம் வேண்டாம். ஆகும் என்ற முடிவை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். செய்யமுடியுமோ, செய்யமுடியாதோ என்ற பயம் நீங்கிவிட்டது. செய்ய முடியும் என்ற முடிவுக்கு வந்தாகிவிட்டது. எந்த இடத்தில் செய்வது என்பதைப்பற்றியும் அவர்கள் சில யோசனைகள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி இப்பொழுது ஒரு குழப்பம் வேண்டாம். (குறுக்கீடு) ஸ்ரீ ஏ. கோவிந்தசுவாமிக்கு யோகம் அடிக்குமோ என்னவோ, யார் கண்டார்கள்?

[Sri C. Subramaniam] [11th August 1960

எந்த இடத்தில் இருந்தாலும் நமது ஊரில் தான் ஏற்படப் போகிறது. இன்றைக்கு முடியும் என்று சொன்ன பிற்பாடு அதற்கு வேண்டிய பூர்வாங்க வேலைகளெல்லாம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. எங்கு தண்ணீர் போன்ற முக்கியமான சௌகரியங்கள் கிடைக்கின்றனவோ அங்குதான் இந்தத் தொழிலை அமைக்கலாம். ஆகையால், சேலத்தில் வைத்தால்தான் தண்ணீர் கிடைக்கும் என்று சொல்லுவார்களோ, என்னவோ ஒன்றும் தெரியாது. எந்த இடத்தில் வைப்பது என்பதுபற்றி ஒன்றிரண்டு மாதங்களில் முடிவு எடுக்கப்படலாம். தண்ணீர் முதலிய மற்ற சௌகரியங்களுக்கு ஏற்பாடு செய்து, நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கு 1961-க்குள் முடியும் என்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. 1,000 டன் பழுப்பு நிலக்கரி கப்பலில் ஏற்றியதற்கு பிற்பாடு ஈஸ்டு ஜெர்மனியில் பரீட்சைக்கு 6 மாதங்கள் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்குப் பிற்பாடு அதற்கேற்றவாறு மெஷினரிகள் செய்யப்படவேண்டும். அவைகளையெல்லாம் முடிவுசெய்து அமைப்பதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் முடியும் என்கின்ற ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. எதிர்பாராத தடைகள் ஏதாவது ஏற்பட்டாலன்றி, நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவல்களை வைத்துக் கொண்டு, இருக்கிற புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் இது முடியும் என்றுதான் தோன்றுகிறது. இதற்கு மத்தியிலே ஈஸ்டு ஜெர்மனி 'ப்ரோஸெஸ்' மட்டுமல்ல. நார்வேயில் செய்யக்கூடிய ஒரு 'ப்ரோஸெஸும்' இருக்கிறது. நிலக்கரி மட்டுமல்ல. நிலக்கரியும் கொஞ்சம் போடுகிறார்கள். மின்சாரத்தினால், மின்சார உலையை வைத்துக் கொண்டு அதன் மூலம் சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனியைப் போல கொஞ்சம் தரக்குறைவான இரும்புக் கனியை வைத்துக் கொண்டு நார்வேயில் செய்துகொண்டிருக்கிறார்கள். அது மாதிரி செய்யலாம் என்ற யோசனையும் இருக்கிறது. இதிலே ஒன்று போடவேண்டும், அதிலே ஒன்று போடவேண்டும், எது நன்றாக வருகிறதோ அதை விரிவாக்கவேண்டும் என்று முடிவுக்கு வந்திருக்கிறோம். இது ஏற்படுவதுபற்றி ஒரு சந்தேகமும் இல்லை. இதை எப்படி நிறைவேற்றுவது, எந்த முறையில் நிறைவேற்றுவது என்பதைப்பற்றித் தான் ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது உருக்கமாகப் பேசுவதினால் உருக்கை உருக்கலாம் என்று நினைக்காமல், திரு. கோவிந்தசுவாமி போன்ற அங்கத்தினர்கள் இது சம்பந்தப்பட்ட காரியங்களிலெல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI C. N. ANNADURAI : உருக்கமாகப் பேசுவது அமைச்சர் அவர்களின் மனதை உருக வைப்பதற்குத்தான். இரும்பை உருக்க அல்ல.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது தான் இதிலிருக்கிற ஒரு கஷ்டம் அவர்கள் உருக்கமாகப் பேசித்தான் என் மனதை உருக்கி இரும்பு உண்டாக்கவேண்டுமென்று நினைக்க வேண்டாம். தயவுசெய்து அந்த மனப்பான்மையை விட்டுவிட்டு



11th August 1960] [Sri C. Subramaniam]

பேசுங்கள். நீங்கள் காரியங்களில் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அரசியல் காரணத்திற்காகவோ என்னவோ வெளியில் பேசும் போது 'மற்றவர்களெல்லாம் இந்தத் தொழில் இங்கு வரவேண்டியதில்லை என்று சொல்லுகிறார்கள். நாங்கள் தான் இங்கு வரவேண்டுமென்று தொந்தரவு செய்து வற்புறுத்துகிறோம்' என்றெல்லாம் கூறுகிறார்கள். அரசியல் காரணத்திற்காக இது மாதிரி பேசிக்கொள்ளட்டும். ஆட்சேபணையில்லை. ஆனால் காரியங்கள் செய்யும்பொழுது இம்மாதிரி பேசிக்கொண்டிருக்காமல், நல்ல முறையில் ஒத்துழைக்கவேண்டுமென்ற மனப்பான்மை வேண்டும். அம்மாதிரி காரியங்கள் செய்யவேண்டிய நேரத்தில் இம்மாதிரி நாங்கள் அந்தக் குழுக்களில் இருந்து ஒத்துழைக்கமாட்டோம், குழுக்களிலிருந்து வெளியேறுகிறோம் என்று சொல்வது சரியல்ல. அம்மாதிரி சொல்வது அரசியலுக்காகவோ என்னவோ தெரியாது.

SRI C. N. ANNADURAI : குழுக்களிலிருந்து நாங்கள் விலகிக் கொள்ளுவதாகச் சொன்னது உண்மையிலேயே உள்ளத்திலிருந்து வந்தது. அதற்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : முதலிலேயே ஆரம்பித்தார்கள் 'ஜனநாயக முறையில் இருக்கக்கூடிய நம்பிக்கை எனக்கு குறைந்து கொண்டு வருகிறது' என்று. இருக்கலாம். இதிலே இருக்கக்கூடிய மக்களை வைத்துக்கொண்டுதான் ஜனநாயகத்தை நடத்திக்கொண்டு போகவேண்டும். புதிதாக மக்களை வைத்துக் கொண்டு எப்படி ஜனநாயகம் நடத்திக்கொண்டு போவது? ஒரு லட்சிய அடிப்படையிலுள்ள மக்களை வைத்துக்கொண்டுதான் ஜனநாயகம் நடத்தவேண்டுமென்றால், அவர்கள் ஜனநாயகம் நடத்தும்போது நாங்களே இல்லாமல் பண்ணிவிட்டு ஜனநாயகம் நடத்துவார்களோ என்னவோ? இருக்கக்கூடிய மக்களை வைத்துக்கொண்டுதான் ஜனநாயகம் நடத்தவேண்டும். ஜனநாயகத்தில் அவர்களைப்போல் கெட்டிக்காரர்களும் இருப்பார்கள். எங்களைப்போல் திறமையில்லாதவர்களும் இருப்பார்கள். சண்டை போடுகிறவர்களும் இருப்பார்கள். எல்லாவற்றையும் அனுசரித்துக்கொண்டுதான் ஜனநாயகத்தை நடத்தவேண்டும். ஏதோ திரு. கருத்திருமன் அவர்கள் பேசினார்கள் என்பதற்காக, குழந்தைப் பிள்ளைகள் விளையாட்டில் சண்டை போட்டுக்கொண்டு எல்லாவற்றையும் அழித்துவிட்டுப் போய்விடுவது போல் போவது சரியல்ல.

SRI C. N. ANNADURAI : அமைச்சரவர்கள், காங்கிரஸ் கட்சிக் கொரடா சொன்னதற்கு குழந்தைகள் போல் விளையாட வேண்டாம் என்கிறார்கள். நான் பேசியது விளையாட்டல்ல.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நான் விரும்புகிறேன், அவர்கள் சிறு நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு, பெரிய காரியங்களில்

தவறான கருத்துக்களைக் கொள்ளக் கூடாது என்று. திரு. கருத்திருமன் ஒரு பேச்சிலேயே ஒரு குழுவிலும் இருக்கக்கூடாது என்ற நிலையை உண்டுபண்ணக் கூடுமானால், உண்மையிலேயே அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**SRI C. N. ANNADURAI:** அமைச்சரவர்கள் காங்கிரஸ் கட்சிக் கொரடாவையும் விட மோசமாக நடந்துகொள்கிறார்கள்.

**THE HON. SRI C. SUBRAMANIAM:** அப்படிச் சொல்ல அவருக்கு உரிமை உண்டு. நான் கவலைப்படவில்லை. நான் பேசுவது கொரடாவைவிட மோசமாக இருந்தாலும், அவர்கள் நாட்டின் நன்மைக்காக, ஒத்துழைக்க வேண்டும்; நாங்கள் குற்றங்கள் செய்தாலும், எங்கள் குற்றங்களையும் மீறி, அவர்கள் ஒத்துழைத்தால் தான், நாட்டில் பற்று இருக்கிறது என்றாகும். குறைகளையே பார்த்துக் கொண்டிருந்தால், அது ஒருவரோடொருவர் தள்ளி வைத்துக் கொண்டிருக்குமே தவிர, காரியங்கள் செய்யப் பயன் படாது என்று பணிவன்போடு சொல்லிக்கொள்ளுகிறேன். ஆகவே அந்தப் பேச்சை வைத்துக்கொண்டு பாராமல், காரியங்களின் அவசியத்தைப் பார்த்து, அதைப் பற்றித் திரும்ப ஆலோசனை செய்து, நாட்டின் நன்மைக்காக அவர்கள் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும், கவர்னர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி. ஆகவே, காரியங்கள் செய்வதில் நாங்கள் ஒத்துழைக்கத் தயார் என்ற முடிவுக்கு அவர்கள் வரவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

**SRI C. N. ANNADURAI:** நேற்றைய தினம் குழுக்களில் நாங்கள் இருப்பது பற்றி காங்கிரஸ் கட்சிக் கொரடா பேசிய பேச்சு, இருப்பவர்கள் மனதைப் புண் பண்ணி கேவலப்படுத்தும் முறையில் இருந்தது; மனதார உணர்ந்துதான் சொல்கிறேன், வேறு விதமாக இல்லை. நேற்று கொரடா பேசிய முறை சரிதானா, அவர்கள் சொன்ன கருத்து சரிதானா, அவர்கள் உபயோகித்த வாசகங்கள் சரிதானா? —

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இப்பொழுது ஒவ்வொருவர் பேசுவதையும் வைத்துப் பார்த்தால், நாங்கள் ஒத்துழைக்காது, மந்திரிகளாக இருக்க முடியாது. அவர்கள் கட்சிக்காரர்கள் பேசுவது அப்படி. அதெல்லாம் அரசியலுக்காகப் பேசுவதாகக் கொள்ளலாம். ஆகையினால், அரசியல் மொழியில், அரசியல் காரணத்திற்காகப் பேசுவதை வைத்துக் கொண்டு இருந்தால், காரியம் நடைபெறாது. ஆகவே, இப்பொழுதே முடிவு செய்ய வேண்டாம்; இரண்டு நாட்கள் ஆரப் போட்டுவிட்டு, (சிரிப்பு) இந்த அசெம்பிளிக் கூட்டத்திற்கு முன்னாலேயே—இது சிரிக்கக் கூடிய விஷயம் அல்ல—நல்ல முடிவைச் செய்ய அவர்கள் யோசிக்க வேண்டும் என்று . . . . .

**SRI A. GOVINDASAMY:** தாங்கள் கொரடாவைப் பாராட்டிய பிறகு யோசிக்க என்ன இருக்கிறது?





**THE HON. SRI C. SUBRAMANIAM:** அவர்கள் ஆரம்பித்ததைப் பார்த்து, அசெம்பிளியையே விட்டு விட்டு ராஜினாமா செய்து விட்டுப் போய்விடுவார்களோ என்று பயந்தேன் . . . ஆகவே வாதப்பிரதிவாதங்களை விட்டுவிட்டு, மக்களுக்காக காரியங்கள் நடக்க ஒத்துழைக்க உடனடியாக யோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) நான் சொன்ன முறையிலே தவறு இருந்தாலும், அதை ஒதுக்கி வைத்துவிட்டு, கேட்பதில் நல்லது இருந்தால், நல்ல முடிவு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[Mr. Speaker in the Chair]

மொழிப் பிரச்னையைப்பற்றித் தனியாக விவாதிக்கப் போகிறோம். இருந்தாலும், சில கருத்துக்களைத் தெளிவு படுத்த வேண்டியது அவசியம். சிலவற்றைப் பற்றித் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். ஸ்ரீ ஜவஹர்லால் நேருவின் கொள்கையை ஒத்துக் கொள்ளாமல், ப்ரெஸிடென்ட் அவர்கள் தனியாக ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதுபற்றி நான் பத்திரிக்கை நிருபர்கள் மத்தியில் சொன்னதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒருகால் நான் சொல்ல நினைத்ததைத் தெளிவாகச் சொல்லவில்லையோ என்னவோ. திரும்பச் சொல்லுகிறேன்: ப்ரெஸிடெண்ட்—ஜனாதிபதி அவர்கள்—சர்க்கார் கொள்கை எதுவோ அதைத்தான் உத்தரவில் போடமுடியும், ப்ரெஸிடெண்ட் என்று அவருக்கு ஒரு தனிக் கொள்கையை, நடைமுறையில் கொண்டுவர அதிகாரம் கிடையாது. இன்றைக்கு ப்ரெஸிடெண்ட் போட்டிருக்கும் உத்தரவு தவறானால், பிரதம மந்திரியும் தவறுதான். ஆகையினால், இதில் ஏதோ பிரெஸிடெண்ட் தனிப்படச் செய்து விட்டார் என்று ஒன்றுமில்லையென்று முன்னால் சொன்னேன். பிரிவு 344 (6) படி, இந்த உத்தரவு 1965 வரைக்கும்தான். அதற்குப் பின்னால் அந்த உத்தரவு இல்லை. அதைப் போடமுடியாது. போட்டிருக்கும் விஷயங்கள், 1965-க்குள்ளாக என்னென்ன செய்ய வேண்டும் என்று. திராவிட முன்னேற்றக் கழகம் பார்லிமெண்ட் முடிவை ஒப்புக் கொள்கிறார்கள், 1965-லிருந்து ஹிந்தியும் ஆங்கிலமும் இரண்டும் தொடர்ந்து நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்று. அப்படியென்றால், ஹிந்தி அன்றைக்குத் தயாராக இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் இப்பொழுதே எடுக்காமல் விட்டால், ஹிந்தியும் ஆங்கிலமும் சேர்ந்து இருக்க முடியாது. ஆகவே, ஹிந்தியும் நிர்வாக மொழியின் தகுதியை அடைய வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதுதான் இந்த ப்ரெஸிடெண்ட் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1965-க்குப் பிறகு என்ன ஆகவேண்டும் என்று முன்னுரையில், ப்ரீயாம்பிளில், ஜவஹர்லால் நேரு உரையில், நம் பார்லிமெண்டரிக் கமிட்டி முடிவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சர்க்கார் கொள்கை அதுதான். ஸ்ரீ ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டதுதான் சர்க்காரின் மொழிக்கொள்கை. ஆகவேதான் பிரசிடெண்ட் பிரசாத் அவர்கள் சர்க்காரையும் மீறி ஒரு

[Sri C. Subramaniam] [11th August 1960]

உத்தரவு போட்டுவிட்டார்கள் என்று சொல்ல, ஒரு கிளர்ச்சி வேண்டாம் என்றேன். கிளர்ச்சி வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் முக்கியமாக ஜனாதிபதி வரும்போது, கிளர்ச்சிகள் கூடாது, அது தமிழன் பண்புக்கு இழுக்காக இருக்கும் என்பதால் அவர்களைத் திரும்பத் திரும்ப அதைக் கைவிட வேண்டும் என்று வற்புறுத்தி பணிவுடன் வேண்டிக் கொண்டேன்.

நேற்றையதினம் அமெரிக்கா தூதர் இங்கே வந்தார்கள். அவர்களிடத்தில் பேசிக்கொண்டு இருந்தேன். பேச்சு வந்தது இங்கே இருந்த நிலைமை பற்றி; அப்பொழுது கேட்டேன்: "ஒரு முறையாவது அமெரிக்க ஜனாதிபதிக்கு கருப்புக் கொடி, அல்லது அவர்களுக்கு அவமரியாதை செய்யக்கூடிய நிகழ்ச்சி நடந்திருக்கிறதா" என்று. அவர்கள் சிறிது நேரம் யோசனை செய்து விட்டு, உறுதியாகச் சொன்னார்கள்: "இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடந்தது கிடையாது, நினைத்திருப்பார்களோ என்னவோ" என்று. ஜனாதிபதி நாட்டின் சின்னம். கொடியைப் பற்றிச் சொல்லும் போது, அதை யாராவது எரிப்பேன் என்றால், அது தேசத்தின் சின்னத்தை அவமதிப்பது என்று கருதுகிறோம். அதே போல ஜனாதிபதி, உயிரோடு இருக்கும் தேசச்சின்னம். ஆகவே, ஜனாதி-
12-30 p.m. பதிக்குச் செய்யும் அவமரியாதை, தேச மக்களுக்கு செய்த அவமரியாதையாகும். அது நம் தமிழனின் அறிவுக்கும், பண்புக்கும் இழுக்காக அமையும்.

என்ன காரணத்திற்காக அவர்கள் அதை வாபஸ் வாங்கிக் கொண்டாலும் சரி அவர்கள் அந்தக் கிளர்ச்சியை, அந்த இயக்கத்தை நடத்தாமல் நிறுத்தியது மிகவும் பாராட்டக்கூடியது. அதற்குப் பரிபூரணமாக என்னுடைய பாராட்டுதலை, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாக் காரியங்களையும் ஏற்பாடு செய்த பிறகு வாபஸ் வாங்கப்பட்டதற்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) அப்படிக் குட்டிச் சொல்வதற்கும் எனக்கு பாத்தியம் உண்டு. அப்படிக் குட்டிச் சொல்வதாலும் பரவாயில்லை. ஆகவே கிளர்ச்சியை வாபஸ் வாங்குவது என்ற முடிவுக்கு வந்தது தமிழ் மக்களுடைய அறிவுக்கே சான்று ஆகும், சான்றாக விளங்கும் என்பதை உங்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்த முடிவை நான் மிகவும் வரவேற்கிறேன். இன்றைக்கு இந்தக் கிளர்ச்சி நின்று இருக்கிறது என்று சொன்னால் ஏதோ சர்க்காருக்கு இதனால் தொல்லை வருவதாக இருந்தது அதன் காரணமாக அது நடைபெறாமல் நின்று இருக்கிறது என்பதல்ல. அல்லது கறுப்புக்கொடி காட்டுவதால் ராஜன் பாபுவின் மதிப்பு குறைந்து விடும் என்பது அல்ல. அவருக்கு இருக்கக்கூடிய மதிப்பு எப்பொழுதும் அவருக்கு இருக்கிறது. அப்படி தமிழ் நாட்டில் கறுப்புக்கொடி காட்டியிருந்தால் தமிழ் நாட்டின் மக்களுடைய மானமே போயிருக்கும். தமிழ் நாட்டின் பண்புக்கு அது உகந்தது அல்ல. அந்த முறையில் அந்தக் கிளர்ச்சியை நிறுத்தியது ரொம்பவும் வரவேற்கத்தகுந்ததுதான். அதைப்போலவே கருத்து வேற்றுமைகள் இருந்தால் அதைப் பற்றி ஒரு நல்ல முடிவுக்கு வவேண்டியதுதான் நல்லது.



[11th August 1960] [Sri C. Subramaniam]

கருத்து வேற்றுமைகள் இருக்க வேண்டியதும் அவசியம்தான். அப்படி இருந்தால் அவைகளை மனமாரப் பேசித் தீர்த்துக்கொள்ள முயலுவதுதான் நல்லது, நாட்டிற்கும் அதுதான் நல்லது. தேசத்திற்கும் நல்லது. அதன் மூலம் வெற்றி காண்பதுதான் நல்லது என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஜனநாயக அடிப்படையில் காரியங்களைச் செய்யும் போது பல கருத்து வேறுபாடுகள் வருவது இயற்கைதான். அப்படி வருவதை விவாதித்து நல்ல முடிவு காண்பதுதான் நல்லது. அப்படி வெற்றி காணாமல் போனால் காரியங்கள் நல்ல முறையில் நடைபெறாமல் போய் விடுவதற்கு இடம் ஏற்படும். இறுதியான முடிவு ஏற்படும் வரையில் வேற்றுமையுள்ள கருத்துக்களை மனதில் வைத்துக்கொள்ளாமல் கட்சி வேற்றுமைகளை மனதில் கொள்ளாமல் நாட்டின் முன்னேற்றத்தை மனதில் கொண்டு புனராலோசனை செய்து நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்று அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இம்மாதிரி பல தொழில்கள் ஏற்பட வேண்டும் என்று சொல்லும்போது தூத்துக்குடி துறைமுகத்தைப்பற்றிக் குறிப்பிடப்பட்டது. அதிலும் குறிப்பாக கனம் கோவிந்தசாமி அவர்கள் பேசும்போது அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். கனம் அமைச்சர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார். அமைச்சர்கள் வாக்குறுதிகள் கொடுத்தது வாஸ்தவம்தான், அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும். இது ஒரு தனிப்பட்ட பாலிஸி அல்ல. இது மக்களுக்கு வசதி அளிக்கக்கூடிய காரியம். எந்தக் காரியம் நியாயம் என்று தோன்றுகிறதோ அந்தக் காரியங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படும். எது நியாயம் என்று தோன்றுகிறதோ அதை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அது என்னுடைய திறமையால்தான் முடியும் என்றும் என்னுடைய செல்வாக்கினால்தான் முடியும் என்றும் சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி நினைத்துக்கொண்டிருப்பது தவறு. எந்தக் காரியமும் அது நியாயமாக இருந்தால் அதை எடுத்து நிறைவேற்றுவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும். நியாயமான காரியங்களை எடுத்து நிறைவேற்றுவதற்கு எந்த விதமான சிபாரிசும் தேவையில்லை. மக்களுக்குச் செய்ய வேண்டிய நியாயம் என்று இருந்தால் அதை எடுத்து நிறைவேற்றுவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும். அந்த முறையில்தான் தூத்துக்குடி துறைமுகத் திட்டம் இருக்கிறது. அதை எடுத்து நிறைவேற்றுவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும். அப்படி எடுத்துக்கொள்ளும்போது பல தவறுகள் ஏற்படலாம். தவறுகள் ஏற்படாது என்பது அல்ல. தூத்துக்குடி துறைமுகத் திட்டம் தமிழ் நாட்டிற்கே, அதன் முன்னேற்றத்திற்கே மிகவும் அடிப்படையாக உள்ள திட்டம். அதனால்தான் தொடர்ந்து அதைப் பற்றி வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். ஆகவே அதை

[Sri C. Subramaniam] [11th August 1960

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்து நிறைவேற்றுவதற்கு எங்களால் ஆன முயற்சியை எடுத்துக்கொள்வோம் என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன். ஆகவே இப்பொழுது இங்கே வந்திருக்கக்கூடிய சில செய்திகளைப் புனராலோசனை செய்ய முடியும் என்கிற நிலைமையை எடுத்துக்காட்டுகிறது.

அதற்கு அடுத்தபடியாக, இன்றைக்கு மின்சாரத்தைப்பற்றி பலர் பேசினார்கள். மின்சார போர்ட் பட்ஜெட்டைப்பற்றி விரிவாக தனியாக விவாதம் நடக்கப்போகிறது. அணு சக்தியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதைப்பற்றி சிலர் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு அணு சக்தியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்ற சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலும் சில கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இப்பொழுது இருக்கக்கூடிய மின்சார உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தின் விலையை விட அணு சக்தியின் மூலமாக உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தின் விலை அதிகமாக ஆகிறது என்று கணக்குப் போடுகிறார்கள். அதனால் அது சிக்கனமான முறையா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டியதாக இருக்கிறது. பல நாடுகளிலிருந்து இதைப்பற்றிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பல அறிக்கைகள் எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. அதைப்பற்றி நாங்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். வெளி நாடுகளிலுள்ள பல விஞ்ஞானிகள் அணு சக்தி மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வது பொருளாதார ரீதியில் அவ்வளவு உகந்தது அல்ல என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் இன்னும் ஐந்தாறு ஆண்டுகளில் அதிகப்படியான நிலையங்களை அமைக்கப்போவதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சில இடங்களில் அணு சக்தியைக் கொண்டு உற்பத்தியாகக் கூடிய மின்சாரத்திற்கு ஆன செலவைப் பார்த்தால் அதிகப்படியாக ஆகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் மற்ற நாடுகளில் இருக்கக்கூடிய வசதிகளைவிட அதிகப்படியான வசதிகள் இருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு இங்கே உற்பத்தி செய்வதற்கு வசதி இருக்கிறது. அந்த வசதிகளை வைத்துக்கொண்டு இன்னும் சிக்கனமாக உற்பத்தி செய்யலாம், செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் இப்பொழுது செய்து வருகிறார்கள். அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு இன்னும் அதிகமாக அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது. ஆகவே நம்முடைய தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட ஒரு நிலையத்தை அமைக்க அவ்வளவு கஷ்டமாக இருக்காது. மகாராஷ்டிரத்தில் ஆரம்பிக்கப் போகிறார்கள். அவர்களுடைய அனுபவத்தை வைத்துக்கொண்டு அது வெற்றிகரமாக இருந்தால் இங்கேயும் ஆரம்பிக்கலாம். அதன் பிறகு இங்கேயும் கொண்டு வருவதற்குக் கஷ்டம் இருக்காது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு அதிகப்படியான ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போது அதற்கு வேண்டிய போதிய அளவு மின்சாரம் இருந்தால் தான் முடியும். பல தொழிலுக்கு



11th August 1960] [Sri C. Subramaniam]

மின்சாரம் அவசியமாக இருக்கும். இப்பொழுது இருக்கும் மின்சாரத்தை வைத்துக்கொண்டு அவர்கள் கேட்கும்போதெல்லாம் கொடுக்க முடியாமல் இருக்கிறது. நமக்கு அதிகப்படியாக மின்சாரம் இருந்தாலும் தொழிற்சாலைக்கு காலா காலத்தில் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறது. ஆகையினால்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மின்சார உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படும், எடுத்துக்கொண்டும் வருகிறார்கள். முக்கியமாக நெய்வேலியில் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்று முயற்சி செய்து வருகிறார்கள்.

அத்துடன் பரம்பிக்குளம் திட்டத்தைப்பற்றியும் மற்ற திட்டங்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அதிலும் முக்கியமாக பரம்பிக்குளம் திட்டத்தைப் பற்றி பிரசாரம் செய்து வந்தார்கள். அதிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வேறு ஏதோ காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு இதைப்பற்றிப் பிரச்சாரம் செய்து வந்தார்கள். பத்திரிகைகளிலும் எழுதி வந்தார்கள். அங்கு மந்திரி போய் விட்டு ஏமாந்து வந்துவிட்டார், அதற்கு 3½ கோடி ரூபாய் செலவு செய்து விரயமாக்கிவிட்டார் என்றெல்லாம் சொல்லி வந்தார்கள். இது வராத திட்டம் என்று பேசியவர்களும் எழுதியவர்களும் உண்டு. (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி : யார் எப்படி எழுதினார்கள் ?) உங்கள் பத்திரிகைகளில் வந்ததை வேண்டுமானால் எடுத்துக்காண்பிக்கிறேன். அவர்கள் எப்படிக் கணக்குப் போட்டு அந்தத் தொகையைக் கண்டுபிடித்தார்களோ தெரியவில்லை. ஒருகால் திட்டங்களே வரக் கூடாது, வராமல் போய் விடவேண்டும் என்ற மனப்பான்மையில் அப்படிச் சொல்லுகிறார்களோ என்னமோ, தெரியவில்லை. எதையாவது வைத்துக்கொண்டு திராவிட நாடு பிரிய வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் சொல்லுகிறார்களோ என்னவோ. எந்த விதமான திட்டங்களும் வரவே கூடாது என்ற எண்ணத்தில் அப்படிச் சொல்லுகிறார்களோ என்னவோ. ஒருகால் திரு. கோவிந்தசாமி நினைக்கலாம், தூத்துக்குடி திட்டம் வராமல் போனால் இந்த மந்திரி சபையை ஒரு தாக்கு தாக்கிப் பேசலாம் என்ற எண்ணத்தில் அப்படிப் பேசுகிறாரோ என்னமோ. வேறு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் இல்லாமல் இருந்தால் நல்லது. அந்தத் துறைமுகத் திட்டம் வராமல் இருந்தால் வடநாடு தென்னாடு என்று பேசுவதற்கு இடம் ஏற்படலாம் என்று நினைக்கிறார்களோ என்னமோ. இதெல்லாம் வரவில்லை அதனால் தென்னாடு பிரிய வேண்டும் என்று சொல்லலாம் என்ற எண்ணத்தில் அப்படி வராமல் இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்களோ என்னமோ. அதன் காரணம் அவர்களை அறியாமல் சப் கான்ஷியஸ்ஸாக உட்கார்ந்து யோசித்துப் பார்த்தால் நன்றாகத் தெரிய வரும். இதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய முக்கியமான குறை என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு—அவர்களும் நம்முடைய நாட்டினுடைய

[Sri C. Subramaniam] [11th August 1960

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்து நிறைவேற்றுவதற்கு எங்களால் ஆன முயற்சியை எடுத்துக்கொள்வோம் என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன். ஆகவே இப்பொழுது இங்கே வந்திருக்கக்கூடிய சில செய்திகளைப் புனராலோசனை செய்ய முடியும் என்கிற நிலைமையை எடுத்துக்காட்டுகிறது.

அதற்கு அடுத்தபடியாக, இன்றைக்கு மின்சாரத்தைப்பற்றி பலர் பேசினார்கள். மின்சார போர்ட் பட்ஜெட்டைப்பற்றி விரிவாக தனியாக விவாதம் நடக்கப்போகிறது. அணு சக்தியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதைப்பற்றி சிலர் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு அணு சக்தியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்ற சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலும் சில கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இப்பொழுது இருக்கக்கூடிய மின்சார உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தின் விலையை விட அணு சக்தியின் மூலமாக உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தின் விலை அதிகமாக ஆகிறது என்று கணக்குப் போடுகிறார்கள். அதனால் அது சிக்கனமான முறையா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டியதாக இருக்கிறது. பல நாடுகளிலிருந்து இதைப்பற்றிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பல அறிக்கைகள் எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. அதைப்பற்றி நாங்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். வெளி நாடுகளிலுள்ள பல விஞ்ஞானிகள் அணு சக்தி மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வது பொருளாதார ரீதியில் அவ்வளவு உகந்தது அல்ல என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் இன்னும் ஐந்தாறு ஆண்டுகளில் அதிகப்படியான நிலையங்களை அமைக்கப்போவதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சில இடங்களில் அணு சக்தியைக் கொண்டு உற்பத்தியாகக் கூடிய மின்சாரத்திற்கு ஆன செலவைப் பார்த்தால் அதிகப்படியாக ஆகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் மற்ற நாடுகளில் இருக்கக்கூடிய வசதிகளைவிட அதிகப்படியான வசதிகள் இருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு இங்கே உற்பத்தி செய்வதற்கு வசதி இருக்கிறது. அந்த வசதிகளை வைத்துக்கொண்டு இன்னும் சிக்கனமாக உற்பத்தி செய்யலாம், செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் இப்பொழுது செய்து வருகிறார்கள். அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு இன்னும் அதிகமாக அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது. ஆகவே நம்முடைய தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட ஒரு நிலையத்தை அமைக்க அவ்வளவு கஷ்டமாக இருக்காது. மகாராஷ்டிரத்தில் ஆரம்பிக்கப் போகிறார்கள். அவர்களுடைய அனுபவத்தை வைத்துக்கொண்டு அது வெற்றிகரமாக இருந்தால் இங்கேயும் ஆரம்பிக்கலாம். அதன் பிறகு இங்கேயும் கொண்டு வருவதற்குக் கஷ்டம் இருக்காது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு அதிகப்படியான ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போது அதற்கு வேண்டிய போதிய அளவு மின்சாரம் இருந்தால் தான் முடியும். பல தொழிலுக்கு



11th August 1960] [Sri C. Subramaniam]

மின்சாரம் அவசியமாக இருக்கும். இப்பொழுது இருக்கும் மின்சாரத்தை வைத்துக்கொண்டு அவர்கள் கேட்கும்போதெல்லாம் கொடுக்க முடியாமல் இருக்கிறது. நமக்கு அதிகப்படியாக மின்சாரம் இருந்தாலும் தொழிற்சாலைக்கு காலாகாலத்தில் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறது. ஆகையினால்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மின்சார உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படும், எடுத்துக்கொண்டும் வருகிறார்கள். முக்கியமாக நெய்வேலியில் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்று முயற்சி செய்து வருகிறார்கள்.

அத்துடன் பரம்பிக்குளம் திட்டத்தைப்பற்றியும் மற்ற திட்டங்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அதிலும் முக்கியமாக பரம்பிக்குளம் திட்டத்தைப் பற்றி பிரசாரம் செய்து வந்தார்கள். அதிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வேறு ஏதோ காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு இதைப்பற்றிப் பிரச்சாரம் செய்து வந்தார்கள். பத்திரிகைகளிலும் எழுதி வந்தார்கள். அங்கு மந்திரி போய் விட்டு ஏமாந்து வந்து விட்டார், அதற்கு 3½ கோடி ரூபாய் செலவு செய்து விரயமாக்கி விட்டார் என்றெல்லாம் சொல்லி வந்தார்கள். இது வராத திட்டம் என்று பேசியவர்களும் எழுதியவர்களும் உண்டு. (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி: யார் எப்படி எழுதினார்கள்?) உங்கள் பத்திரிகைகளில் வந்ததை வேண்டுமானால் எடுத்துக்காண்பிக்கிறேன். அவர்கள் எப்படிக் கணக்குப் போட்டு அந்தத் தொகையைக் கண்டு பிடித்தார்களோ தெரியவில்லை. ஒருகால் திட்டங்களே வரக்கூடாது, வராமல் போய் விடவேண்டும் என்ற மனப்பான்மையில் அப்படிச் சொல்லுகிறார்களோ என்னமோ, தெரியவில்லை. எதையாவது வைத்துக்கொண்டு திராவிட நாடு பிரிய வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் சொல்லுகிறார்களோ என்னவோ. எந்த விதமான திட்டங்களும் வரவே கூடாது என்ற எண்ணத்தில் அப்படிச் சொல்லுகிறார்களோ என்னவோ. ஒருகால் திரு. கோவிந்தசாமி நினைக்கலாம், தூத்துக்குடி திட்டம் வராமல் போனால் இந்த மந்திரி சபையை ஒரு தாக்கு தாக்கிப் பேசலாம் என்ற எண்ணத்தில் அப்படிப் பேசுகிறாரோ என்னமோ. வேறு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் இல்லாமல் இருந்தால் நல்லது. அந்தத் துறைமுகத் திட்டம் வராமல் இருந்தால் வடநாடு தென்னாடு என்று பேசுவதற்கு இடம் ஏற்படலாம் என்று நினைக்கிறார்களோ என்னமோ. இதெல்லாம் வரவில்லை அதனால் தென்னாடு பிரிய வேண்டும் என்று சொல்லலாம் என்ற எண்ணத்தில் அப்படி வராமல் இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்களோ என்னமோ. அதன் காரணம் அவர்களை அறியாமல் சப் கான்ஷியஸ்லாக உட்கார்ந்து யோசித்துப் பார்த்தால் நன்றாகத் தெரிய வரும். இதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய முக்கியமான குறை என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு—அவர்களும் நம்முடைய நாட்டினுடைய

[Sri C. Subramaniam] [11th August 1960

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்து நிறைவேற்றுவதற்கு எங்களால் ஆன முயற்சியை எடுத்துக்கொள்வோம் என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன். ஆகவே இப்பொழுது இங்கே வந்திருக்கக்கூடிய சில செய்திகளைப் புனராலோசனை செய்ய முடியும் என்கிற நிலைமையை எடுத்துக்காட்டுகிறது.

அதற்கு அடுத்தபடியாக, இன்றைக்கு மின்சாரத்தைப்பற்றி பலர் பேசினார்கள். மின்சார போர்ட் பட்ஜெட்டைப்பற்றி விரிவாக தனியாக விவாதம் நடக்கப்போகிறது. அணு சக்தியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதைப்பற்றி சிலர் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு அணு சக்தியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்ற சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலும் சில கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இப்பொழுது இருக்கக்கூடிய மின்சார உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தின் விலையை விட அணு சக்தியின் மூலமாக உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தின் விலை அதிகமாக ஆகிறது என்று கணக்குப் போடுகிறார்கள். அதனால் அது சிக்கனமான முறையா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டியதாக இருக்கிறது. பல நாடுகளிலிருந்து இதைப்பற்றிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பல அறிக்கைகள் எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. அதைப்பற்றி நாங்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். வெளி நாடுகளிலுள்ள பல விஞ்ஞானிகள் அணு சக்தி மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வது பொருளாதார ரீதியில் அவ்வளவு உகந்தது அல்ல என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் இன்னும் ஐந்தாறு ஆண்டுகளில் அதிகப்படியான நிலையங்களை அமைக்கப்போவதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சில இடங்களில் அணு சக்தியைக் கொண்டு உற்பத்தியாகக் கூடிய மின்சாரத்திற்கு ஆன செலவைப் பார்த்தால் அதிகப்படியாக ஆகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் மற்ற நாடுகளில் இருக்கக்கூடிய வசதிகளைவிட அதிகப்படியான வசதிகள் இருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு இங்கே உற்பத்தி செய்வதற்கு வசதி இருக்கிறது. அந்த வசதிகளை வைத்துக்கொண்டு இன்னும் சிக்கனமாக உற்பத்தி செய்யலாம், செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் இப்பொழுது செய்து வருகிறார்கள். அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு இன்னும் அதிகமாக அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது. ஆகவே நம்முடைய தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட ஒரு நிலையத்தை அமைக்க அவ்வளவு கஷ்டமாக இருக்காது. மகாராஷ்டிரத்தில் ஆரம்பிக்கப் போகிறார்கள். அவர்களுடைய அனுபவத்தை வைத்துக்கொண்டு அது வெற்றிகரமாக இருந்தால் இங்கேயும் ஆரம்பிக்கலாம். அதன் பிறகு இங்கேயும் கொண்டு வருவதற்குக் கஷ்டம் இருக்காது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு அதிகப்படியான ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போது அதற்கு வேண்டிய போதிய அளவு மின்சாரம் இருந்தால் தான் முடியும். பல தொழிலுக்கு



11th August 1960] [Sri C. Subramaniam]

மின்சாரம் அவசியமாக இருக்கும். இப்பொழுது இருக்கும் மின்சாரத்தை வைத்துக்கொண்டு அவர்கள் கேட்கும்போதெல்லாம் கொடுக்க முடியாமல் இருக்கிறது. நமக்கு அதிகப்படியாக மின்சாரம் இருந்தாலும் தொழிற்சாலைக்கு காலாகாலத்தில் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறது. ஆகையினால்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மின்சார உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படும், எடுத்துக்கொண்டும் வருகிறார்கள். முக்கியமாக நெய்வேலியில் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்று முயற்சி செய்து வருகிறார்கள்.

அத்துடன் பரம்பிக்குளம் திட்டத்தைப்பற்றியும் மற்ற திட்டங்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அதிலும் முக்கியமாக பரம்பிக்குளம் திட்டத்தைப் பற்றி பிரசாரம் செய்து வந்தார்கள். அதிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வேறு ஏதோ காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு இதைப்பற்றிப் பிரச்சாரம் செய்து வந்தார்கள். பத்திரிகைகளிலும் எழுதி வந்தார்கள். அங்கு மந்திரி போய் விட்டு ஏமாந்து வந்து விட்டார், அதற்கு 3½ கோடி ரூபாய் செலவு செய்து விரயமாக்கி விட்டார் என்றெல்லாம் சொல்லி வந்தார்கள். இது வராத திட்டம் என்று பேசியவர்களும் எழுதியவர்களும் உண்டு. (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி: யார் எப்படி எழுதினார்கள்?) உங்கள் பத்திரிகைகளில் வந்ததை வேண்டுமானால் எடுத்துக்காண்பிக்கிறேன். அவர்கள் எப்படிக் கணக்குப் போட்டு அந்தத் தொகையைக் கண்டுபிடித்தார்களோ தெரியவில்லை. ஒருகால் திட்டங்களே வரக்கூடாது, வராமல் போய் விடவேண்டும் என்ற மனப்பான்மையில் அப்படிச் சொல்லுகிறார்களோ என்னமோ, தெரியவில்லை. எதையாவது வைத்துக்கொண்டு திராவிட நாடு பிரிய வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் சொல்லுகிறார்களோ என்னவோ. எந்த விதமான திட்டங்களும் வரவே கூடாது என்ற எண்ணத்தில் அப்படிச் சொல்லுகிறார்களோ என்னவோ. ஒருகால் திரு. கோவிந்தசாமி நினைக்கலாம், தூத்துக்குடி திட்டம் வராமல் போனால் இந்த மந்திரி சபையை ஒரு தாக்கு தாக்கிப் பேசலாம் என்ற எண்ணத்தில் அப்படிப் பேசுகிறாரோ என்னமோ. வேறு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் இல்லாமல் இருந்தால் நல்லது. அந்தத் துறைமுகத் திட்டம் வராமல் இருந்தால் வடநாடு தென்னாடு என்று பேசுவதற்கு இடம் ஏற்படலாம் என்று நினைக்கிறார்களோ என்னமோ. இதெல்லாம் வரவில்லை அதனால் தென்னாடு பிரிய வேண்டும் என்று சொல்லலாம் என்ற எண்ணத்தில் அப்படி வராமல் இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்களோ என்னமோ. அதன் காரணம் அவர்களை அறியாமல் சப் கான்ஷியஸ்ஸாக உட்கார்ந்து யோசித்துப் பார்த்தால் நன்றாகத் தெரிய வரும். இதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய முக்கியமான குறை என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு—அவர்களும் நம்முடைய நாட்டினுடைய

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்து நிறைவேற்றுவதற்கு எங்களால் ஆன முயற்சியை எடுத்துக்கொள்வோம் என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன். ஆகவே இப்பொழுது இங்கே வந்திருக்கக்கூடிய சில செய்திகளைப் புனராலோசனை செய்ய முடியும் என்கிற நிலைமையை எடுத்துக்காட்டுகிறது.

அதற்கு அடுத்தபடியாக, இன்றைக்கு மின்சாரத்தைப்பற்றி பலர் பேசினார்கள். மின்சார போர்ட் பட்ஜெட்டைப்பற்றி விரிவாக தனியாக விவாதம் நடக்கப்போகிறது. அணு சக்தியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதைப்பற்றி சிலர் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு அணு சக்தியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்ற சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலும் சில கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இப்பொழுது இருக்கக்கூடிய மின்சார உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தின் விலையை விட அணு சக்தியின் மூலமாக உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தின் விலை அதிகமாக ஆகிறது என்று கணக்குப் போடுகிறார்கள். அதனால் அது சிக்கனமான முறையா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டியதாக இருக்கிறது. பல நாடுகளிலிருந்து இதைப்பற்றிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பல அறிக்கைகள் எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. அதைப்பற்றி நாங்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். வெளி நாடுகளிலுள்ள பல விஞ்ஞானிகள் அணு சக்தி மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வது பொருளாதார ரீதியில் அவ்வளவு உகந்தது அல்ல என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் இன்னும் ஐந்தாறு ஆண்டுகளில் அதிகப்படியான நிலையங்களை அமைக்கப்போவதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சில இடங்களில் அணு சக்தியைக் கொண்டு உற்பத்தியாகக் கூடிய மின்சாரத்திற்கு ஆன செலவைப் பார்த்தால் அதிகப்படியாக ஆகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் மற்ற நாடுகளில் இருக்கக்கூடிய வசதிகளைவிட அதிகப்படியான வசதிகள் இருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு இங்கே உற்பத்தி செய்வதற்கு வசதி இருக்கிறது. அந்த வசதிகளை வைத்துக்கொண்டு இன்னும் சிக்கனமாக உற்பத்தி செய்யலாம், செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் இப்பொழுது செய்து வருகிறார்கள். அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு இன்னும் அதிகமாக அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது. ஆகவே நம்முடைய தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட ஒரு நிலையத்தை அமைக்க அவ்வளவு கஷ்டமாக இருக்காது. மகாராஷ்டிரத்தில் ஆரம்பிக்கப் போகிறார்கள். அவர்களுடைய அனுபவத்தை வைத்துக்கொண்டு அது வெற்றிகரமாக இருந்தால் இங்கேயும் ஆரம்பிக்கலாம். அதன் பிறகு இங்கேயும் கொண்டு வருவதற்குக் கஷ்டம் இருக்காது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு அதிகப்படியான ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போது அதற்கு வேண்டிய போதிய அளவு மின்சாரம் இருந்தால் தான் முடியும். பல தொழிலுக்கு





மின்சாரம் அவசியமாக இருக்கும். இப்பொழுது இருக்கும் மின்சாரத்தை வைத்துக்கொண்டு அவர்கள் கேட்கும்போதெல்லாம் கொடுக்க முடியாமல் இருக்கிறது. நமக்கு அதிகப்படியாக மின்சாரம் இருந்தாலும் தொழிற்சாலைக்கு காலாகாலத்தில் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறது. ஆகையினால்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மின்சார உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படும், எடுத்துக்கொண்டும் வருகிறார்கள். முக்கியமாக நெய்வேலியில் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்று முயற்சி செய்து வருகிறார்கள்.

அத்துடன் பாம்பிக்குளம் திட்டத்தைப்பற்றியும் மற்ற திட்டங்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அதிலும் முக்கியமாக பாம்பிக்குளம் திட்டத்தைப் பற்றி பிரசாரம் செய்து வந்தார்கள். அதிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வேறு ஏதோ காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு இதைப்பற்றிப் பிரச்சாரம் செய்து வந்தார்கள். பத்திரிகைகளிலும் எழுதி வந்தார்கள். அங்கு மந்திரி போய் விட்டு ஏமாந்து வந்து விட்டார், அதற்கு 3½ கோடி ரூபாய் செலவு செய்து விரயமாக்கி விட்டார் என்றெல்லாம் சொல்லி வந்தார்கள். இது வராத திட்டம் என்று பேசியவர்களும் எழுதியவர்களும் உண்டு. (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி: யார் எப்படி எழுதினார்கள்?) உங்கள் பத்திரிகைகளில் வந்ததை வேண்டுமானால் எடுத்துக்காண்பிக்கிறேன். அவர்கள் எப்படிக் கணக்குப் போட்டு அந்தத் தொகையைக் கண்டுபிடித்தார்களோ தெரியவில்லை. ஒருகால் திட்டங்களே வரக்கூடாது, வராமல் போய் விடவேண்டும் என்ற மனப்பான்மையில் அப்படிச் சொல்லுகிறார்களோ என்னமோ, தெரியவில்லை. எதையாவது வைத்துக்கொண்டு திராவிட நாடு பிரிய வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் சொல்லுகிறார்களோ என்னவோ. எந்த விதமான திட்டங்களும் வரவே கூடாது என்ற எண்ணத்தில் அப்படிச் சொல்லுகிறார்களோ என்னவோ. ஒருகால் திரு. கோவிந்தசாமி நினைக்கலாம், தூத்துக்குடி திட்டம் வராமல் போனால் இந்த மந்திரி சபையை ஒரு தாக்கு தாக்கிப் பேசலாம் என்ற எண்ணத்தில் அப்படிப் பேசுகிறாரோ என்னமோ. வேறு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் இல்லாமல் இருந்தால் நல்லது. அந்தத் துறைமுகத் திட்டம் வராமல் இருந்தால் வடநாடு தென்னாடு என்று பேசுவதற்கு இடம் ஏற்படலாம் என்று நினைக்கிறார்களோ என்னமோ. இதெல்லாம் வரவில்லை அதனால் தென்னாடு பிரிய வேண்டும் என்று சொல்லலாம் என்ற எண்ணத்தில் அப்படி வராமல் இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்களோ என்னமோ. அதன் காரணம் அவர்களை அறியாமல் சப் கான்ஷியஸ்லாக உட்கார்ந்து யோசித்துப் பார்த்தால் நன்றாகத் தெரிய வரும். இதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய முக்கியமான குறை என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு—அவர்களும் நம்முடைய நாட்டினுடைய

முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டியவர்களாக இருக்கின்ற காரணத்தினால்—என் மனதில் இருப்பதைச் சொல்கிறேன். அது தவறாக இருந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன்.

SRI C. N. ANNADURAI : எங்களுடைய வார்த்தைகளையோ, நோக்கத்தையோ பற்றி இங்கே எடுத்துச் சொல்வதில் தவறு இல்லை. "நாங்கள் ஏதோ எல்லாவற்றையும் அரசியல் காரணத்திற்காகச் சொல்வதாக மட்டும் எண்ணிக்கொண்டு" அவற்றில் அக்கறையற்ற முறையில் கவனிக்க வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : திராவிட முன்னேற்றக் கழகத்தினருடைய பாராட்டுதல்களைப் பெறுவதற்காக அவர்கள் என்ன எழுதுகிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்று அதைப் பார்த்து நாங்கள் முடிவுக்கு வருவதில்லை. அல்லது அரசியல் காரணத்திற்காக அப்படி எழுதிப் பேசி வருகிறார்கள் என்று அக்கறை காட்டாமலும் விடுவதில்லை. நாங்கள் எடுத்திருக்கிற முடிவு தமிழ் நாட்டு மக்களுக்கு எதையெல்லாம் நிறைவேற்ற வேண்டும், எந்த மாதிரி செய்தால் எல்லோரும் நன்மை அடைவார்கள் என்கிற அடிப்படையில்தான் இருக்கிறது. நீங்கள் நினைப்பதனாலேயே, நீங்கள் எழுதுவதனாலேயே நாங்கள் எங்கள் கடமைகளைப் புறக்கணிப்பதாகவோ, நிறைவேற்றுவதாகவோ நீங்களும் எண்ணவேண்டாம். நீங்கள் எப்படி நினைத்தாலும் மற்றவர்களும் இது மாதிரியாக நினைக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் திரு. அண்ணாதுரை சொல்வது மட்டும் அல்ல. மற்ற திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களும் அதே மாதிரி நினைத்து, பேசி, எழுதி வருவார்களேயானால் அது வரவேற்கத் தக்கது என்று எண்ணுவேன். நாம் ஏதாவது ஒரு கொள்கை அடிப்படையில் இயங்கும்போது எல்லாமே இந்தக் கொள்கைக்குப் பாதகமாக வருவதாக நம்மை அறியாமலேயே நினைத்துவிடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. தமிழ் நாட்டுக்கு இது இல்லாதது, அது இல்லாதது பெரிய தீங்கு என்று பேசும்போது 'இது தான் இருக்கிறதே' என்றால் "வந்து விட்டதா?" என்று கேட்கிற நிலைமை உண்டாகி விடுகிறது. ஏதோ ஒரு கொள்கையிலேயே நிற்கிற காரணத்தினால் இப்படி . .

SRI K. ANBAZHAGAN : கனம் அமைச்சர் அவர்கள் மிக விரிவாக விளக்கிப் பேசுகையில் திராவிட முன்னேற்றக் கழகத்து அங்கத்தினர்கள் பேசின கருத்துக்களுக்கு ஒரு மோடிவ்—உள் நோக்கம்—கற்பித்துப் பேசுகிறார்கள். அது போலவே அவர்கள் பேசுகின்ற பேச்சுக்களுக்கு ஒரு உள்நோக்கம் கற்பித்து எதிர்க் கட்சிக்காரர்கள் பேசுவது என்றால் அப்போது சட்டமன்றத்தில் ஒழுங்கு இருக்குமா? அப்படி அமைச்சர் அவர்கள் பேசலாமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : உள்நோக்கம் கற்பித்துச் சொல்லவில்லை. உங்கள் கொள்கை எங்கே கொண்டு போய்விடும் என்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்லி எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். உங்கள் மனதையே ஆராய்ந்து பார்த்தால் . . . . .



SRI C. N. ANNADURAI : நாட்டுப் பிரிவினைக்கு நாங்கள் என்னனென்ன அடிப்படையில் பேசுகின்றோம் என்பதைப் புரிந்து கொண்டிருந்தார்களானால் இப்படிப் பேசமாட்டார்கள். வேண்டுமானால் தனித்து என்னிடம் ஒரு மணி நேரம் பேசினால் அவற்றை நான் அவருக்கு விளக்க முடியும். இதற்குக் காரணம் . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் இடத்தில் பாடம் கற்க வேண்டுமென்று தான் எனக்கு ஆசை. (ஸ்ரீ. சி. என் அண்ணாதுரை—பாடம் இல்லை. செய்தி.) எதுவாக இருந்தாலும் சரி, அவரிடம் கேட்கவேண்டும் என்று தான் ஆசை. அதற்கு நான் தயார். ஆனால் இதனால் விளையக்கூடிய பலன் என்ன என்பதுதான் சந்தேகம். அப்படிக் கேட்பதற்கும் நல்ல தகுந்த இடம் அசெம்பளி தான். இங்கே நான் கிட்டத் தட்ட 3 வருடங்களாக அவர்கள் சொல்வதை எல்லாம் கேட்டு வந்தும் கூட இதுவரைக்கும் ஒன்றும் புரிந்து கொள்ளவில்லை என்றால் இனிமேல் தனியாகக் கேட்பதனால் புரியும் என்று நினைக்கவில்லை.

SRI C. N. ANNADURAI : இந்த சட்ட மன்றத்தில் இது வரைக்கும் நாட்டுப் பிரிவினையைப் பற்றி விவாதிக்கவில்லை. ஆகவே இந்த சட்டசபை விதி அனுமதிக்கும் என்றால் அதற்கென்று ஒரு நாள் ஒதுக்கினால் அதுபற்றி எழும் விவாதத்தில் நான் விளக்கத் தயாராக இருக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுவரைக்கும் அவர்கள் இங்கே பணியாற்றி வருவது கொள்கை விளக்க அடிப்படையில் தான் என்று நான் எண்ணினேன். அதன் காரணமாகவே அவர்கள் என்ன பேசினாலும், எழுதினாலும் அவற்றை ஊன்றிக் கவனித்தும் வந்திருக்கிறேன். ஆனால் எனக்கு ஒன்றும் புரியவில்லை. புரிந்துகொள்ள வேண்டுமென்று முயன்றிருக்கிறேன். (ஒரு குரல் :—குழம்பியிருக்கலாம்.) ஒத்துக்கொள்கிறேன். எனக்குக் குழம்பி இருக்கலாம். எனக்கே இப்படி என்றால் மற்றவர்கள் எல்லாம் எவ்வளவு குழம்பியிருக்கிறார்களோ தெரியவில்லை. இன்னும் தனியாகச் சென்று தெரிந்துகொள்ள வேண்டுமானாலும் தெரிந்துகொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

ஆனால் இருக்கக்கூடிய அடிப்படையான நிலைமையை விளக்கிச் சொன்னேன். ஆகையால் அணு உலையாக இருந்தாலும், மின்சாரம் வருவதாக இருந்தாலும் தொழில் முறையில் எந்த அளவுக்குக் கொண்டுவருவதற்கு எங்களாலான முயற்சியைச் செய்வோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு அடுத்தபடியான சில விஷயங்களைப் பற்றி திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் பேசும்போது தெரிவித்தார்கள், நிர்வாக முறையில் பல கோளாறு இருப்பதைப்பற்றி. அதுவும் முக்கியமாக குறிப்பாக ஒரு பள்ளிக்கூடம் நடத்துவதுபற்றி என்னிடம் முன்பே சொன்னார்கள். நானும் அவர்களுக்கு விளக்கி எழுதி இருந்தேன். அப்படி இருந்தும்கூட தனியாக இங்கே ஒரு குறையாக எடுத்துச் சொல்லவேண்டுமென்று அவர் நினைத்தது அவருக்கு இவ்விஷயத்தில் எவ்வளவு அக்கறை இருந்

[Sri C. Subramaniam] [11th August 1960

இறது என்பதைத்தான் காட்டுகிறது என்று நினைக்கிறேன். இதில் இருக்கக்கூடிய கஷ்டம் என்னவென்று பார்க்கவேண்டும். இன்றையதினம் ஆரம்பப் பள்ளிக்கூடம் இல்லாத ஊரே இல்லை. அதுபோல உயர்நிலைப் பள்ளி ஏற்படவேண்டும் என்று சொன்னால் அது சரியாகாது. இப்படி ஆசைப்படுவது வரவேற்கத் தக்கது தான். ஆனால் இது சாத்தியமா என்று யோசிக்கவேண்டும். ஒரு பள்ளிக்கூடம் என்றால் அது இருக்கும் இடம், அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் எண்ணிக்கை, குழந்தைகளின் எண்ணிக்கை எல்லாவற்றையும் பார்த்து இன்னொரு பள்ளிக்கூடம் அதற்கு அருகாமையில் எவ்வளவு தூரத்தில் ஏற்படுத்தலாம் என்று பார்க்கவேண்டும். ஏனென்றால் இருக்கக்கூடிய பிள்ளைகளைத்தான் நாம் பகிர்ந்து கொள்ளவேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு பள்ளிக்கூடத்திற்கு அருகாமையிலேயே இன்னொரு பள்ளிக்கூடம் திறந்தால் இதற்குப் போதுமான மாணவர்கள் வருவார்களா, அல்லது இந்தப் பள்ளிக்கூடம் திறப்பதானது இன்னொரு பள்ளிக்கூடத்தை மூடும்படியாகச் செய்துவிடுமா என்பதைப் பரிசீலனை செய்யாமல் திறக்க முடியாது. ஒரு பக்கம் திறப்பு விழா, இன்னொரு பக்கம் மூடு விழா என்று செய்வது சரியாகாது. ஆகவே இதைப் பரிசீலனை செய்துதான் புதுப் பள்ளிக்கூடம் திறப்பதற்கு அனுமதி அளித்து வருகிறோம். ஆகையால் அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்குப் பள்ளிக்கூடம் வரவில்லை என்று சொன்னால் அதை அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அந்த இடத்திற்கு அருகிலேயே உள்ள கிராமத்தில் ஏற்கனவே பள்ளிக்கூடம் வந்து விட்டது. ஆகவே இந்த இடத்திலும் வைக்க முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். வைத்தால் இரண்டு பள்ளிக்கூடங்களும் நன்றாக நடக்க முடியாது.

இன்னொன்று சொன்னார்கள். ஆசிரியர்கள் எல்லாரும் இன்றைக்கு வெவ்வேறு வேலைகளுக்குப் போய்விடுவார்கள், மத்தியான உணவுத் திட்டம் முதலியவற்றுக்கு வசூல் செய்ய வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். மத்திய உணவுத் திட்டத்திற்கு வசூல் பண்ணுவதற்காக அல்லது பள்ளிச் சீரமைப்புத் திட்டத்திற்குப் பொருள்கள் சேகரிக்கப் போய்விடுவதனால் படிப்பின் தரமும் குறைந்து வருகிறது என்று அவர்கள் தெரிவித்தார்கள். நான் ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதுதான் குறைந்த நேரம் அவர்கள் சொல்லிக்கொடுத்தாலும் பள்ளிக்கூடம் நன்றாக நடக்கிறது, ஆசிரியர்களும் சிரத்தையோடு சொல்லிக் கொடுக்கிறார்கள். காரணம் இப்போது அவர்களுடைய சொந்த முயற்சியினாலேயே பல காரியங்கள் பள்ளிக்கூடங்களில் நடப்பதினால் அவர்களுக்கே ஒரு சிரத்தை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். முன்பாவது "யாரோ எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறார்கள், நாம் என்ன?" என்று கொஞ்சம் அசிரத்தையாகப் போய்விடுவார்கள். ஆனால் இப்போது அப்படி இல்லையென்பதைப் பார்க்கிறோம்.

அதன்மூலம் இன்று நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது நான் பார்த்தமட்டில் மட்டுமல்ல, பல பெரியவர்கள் இங்கு வந்து பார்த்துவிட்டு மத்திய உணவுத் திட்டம், பள்ளிச்



11th August 1960] [Sri C. Subramaniam]

சீரமைப்புத் திட்டம் இவைகள் மூலம் நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆக, நல்ல காரியம் நன்கு நடந்து கொண்டிருக்கும்போது அதை வீணாகக் குறைகூறி அதில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தாமல் இருக்கவேண்டும். அவர்களுக்கு தெரியாததல்ல; சிலவிடங்களில் அவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள், என்று நம்புகிறேன். இதனால் நமது கல்வி வளர்ச்சி அதிகமாகிக் கொண்டிருக்கிறதே தவிர எந்த விதத்திலும் தரம் குறைந்து விடவில்லை.

SRI K. ANBAZHAGAN: அமைச்சர் அவர்கள், மதிய உணவுத் திட்டம், பள்ளிச் சீரமைப்புத் திட்டம், இவைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள், முன்னரும் தெரிவித்திருக்கிறார்கள். இது குறித்த நிலைமையைக் கண்டு ஆராய இச்சட்டமன்றத்தின் சார்பில் ஒரு குழு அமைத்து இருக்கிறார்கள். சந்தேகம் இராவிடில் அப்படி ஏன் அமைத்தார்கள், அவர்கள் என்ன செய்கிறார்கள், அவர்கள் கண்ட முடிவு என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதனால் ஆசிரியர்கள் சரியாக பாடம் சொல்லிக் கொடுக்கவில்லை என்று அவர்கள் கருத்து தெரிவித்தார்கள். இந்தக் குழுவை அந்த இன்ஸ்பெக்ஷன் வேலைக்காக போடவில்லை. மத்திய உணவு அளிக்கும் திட்டம் 20,000 இடங்களில் நடந்து வருகிறது. இந்த 20,000 இடங்களிலும் சரியாக நடந்து வருகிறதா, சரியாகப் போடுகிறார்களா, நிலை எப்படி, இத்திட்டம் நடைபெறுவதில் என்ன குறைகள் இருக்கின்றன, அவைகளை எப்படி நீக்குவது என்பதற்காக இந்தக் கமிட்டி போடப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் அந்த அறிக்கை நமக்குச் சமர்ப்பிக்கப்படுமென்று நினைக்கிறேன். ஆக, கமிட்டி நியமித்திருப்பது, உபாத்தியாயர்களைக் கண்காணிப்பதற்கல்ல. திட்டத்தில் என்ன குறையிருக்கிறது, அதை எப்படித் தவிர்ப்பது என்பதை ஆலோசனை செய்து அந்த அறிக்கை வந்தவுடன் அது இங்கு சமர்ப்பிக்கப்படும். அதில் ஏதாவது இருந்தால் அது பரிசீலனை செய்யப்படும். இன்னும் பல விஷயங்களைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். அவை எல்லாவற்றிற்கும் பதில் சொல்லவில்லை என்றால், அவை முக்கியமான விஷயங்கள் அல்ல என்று நான் கருதுவதால் அல்ல. இதற்கு மேல் பேசுவதற்கு, எனக்கு சக்தியில்லை என்று வைத்துக்கொண்டாலும் சரி, முடிப்பதற்கு முன்பு ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரசாரமாகப் பேசுவதுபற்றி ஆட்சேபணையில்லை. ஆனால் தகுதிக்குறைவாகப் பேசுவதை விட்டுவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரசாரமாகப் பேசினால்தான் ருசியிருக்கும். சப்பையாக பேசுவதில் ருசியில்லை. ஆனால் காரசாரமாக பேசும்போது தரக்குறைவாக பேசவேண்டுமென்ற நிலை வரவேண்டியதில்லை. இந்தக் கூட்டத்திலே கவறுகள் நடந்து விட்டன என்பதை சபாநாயகர் அவர்களே ஒப்புக்கொள்வார்கள். அப்படி அவைகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம் எல்லோருடையவும் பொறுப்பு என்று தெரிவித்துக்கொள்

[Sri C. Subramaniam] [11th August 1960

கிறேன். சில சமயங்களில் வெளியில் நடப்பது இங்கு பிரதிபலிக்கிறது. ஆகவே, வெளியிலே பேசுகிறவர்களும், எழுதுகிறவர்களும் தமிழ் நாட்டின் பண்புக்கு உகந்த வகையில் பேசுகிறோமா, எழுதுகிறோமா என்று மனதில் கொண்டு எழுத, பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை, ஒரு கட்சியைப் பார்த்துச் சொல்வதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்தக் குறை எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறது என்று ஓரளவு காண்கிறேன். ஒருவருக்கு ஒருவர் போட்டி போடுகிற மாதிரி இருக்கிறது. தகுதிக்குறைவு விஷயத்தில் போட்டி வேண்டாம். தகுதி உயர்வு விஷயத்தில் போட்டியிடுவோம். ஒருவரை ஒருவர் புகழ்வதில் போட்டி போடுவோம், போற்றுவதில் போட்டியிடுவோம் நாம் இங்கு கூடிச் செயல்படுவதும், வெளியில் இயங்குவதும் மக்களின் நன்மைக்காக மக்களின் உயர்வுக்காக என்பதை மனதில் வைத்துக்கொண்டு இருப்பதால்தான், கவர்னர் அவர்கள் சொல்லியிருப்பதுபோல், வெறுப்பு விருப்பு இன்றி, பகைமை உணர்ச்சி போன்றவைகளுக்கு இடம் கொடுக்காமல் அன்பு உணர்ச்சியோடு, நட்பு உணர்ச்சியோடு வெளியிலும், இங்கும் இயங்க வேண்டுமென்று கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : எமது கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, இந்த சபையில் எந்தப் பக்கத்தில் இருப்பவர்களும் தகுதிக் குறைவாக பேசக்கூடாது, தரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குத் தலைவணங்குகிறேன். குறிப்பிட்டு யாரையும் சொல்லவில்லை என்று சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் நேற்று நான் சற்று நேரம் பொறுத்து வந்தேன். நான் பேசியது சில அச்சிற்கு வராமல் தடுக்கப்பட்டிருக்கிறது. நான் இங்கு சொல்லிக் கொள்ள விரும்புவது, நான் இங்கு பேசியது யாரையும் புண்படுத்த வேண்டுமென்ற கருத்தோடு பேசவில்லை. நான் பேசும்போது உதவி சபாநாயகர் அவர்கள் இருந்தார்கள். அதை அனுமதித்தார்கள். யாரும் ஒன்றும் சொல்லவில்லை. மனதார யாரையும் புண்படுத்தவேண்டுமென்று நான் பேசவில்லை. நான் நல்லபடியாகத்தான் பேசினேன், யாரையும் புண்படுத்த வேண்டுமென்று பேசவில்லை என்று இந்த சந்தர்ப்பத்தில், இங்கு சொல்ல விரும்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : On a point of order, Sir, the hon. Member's speech amounts to the criticism of the speaker's ruling. Since it is the Hon. Speaker, who ordered the expunction, I do not know for what reason the hon. Member is making a speech.

MR. SPEAKER : Ultimately he wants to apologise to the House கனம் அங்கத்தினர் ஸ்ரீ வி. கே. ராமஸ்வாமி முதலியார் கொடுத்திருக்கும் திருத்தத்தை எல்லா எதிர்க்கட்சிகளும் சபையின் முடிவுக்கு விடலாம் என்று ஒப்புக்கொண்டதால் பாக்கி எல்லா அங்கத்தினர்களுடைய திருத்தங்களையும் வாபஸ் வாங்க சபை அனுமதி கொடுக்கிறது என்று நினைக்கிறேன்.



11th August 1960]

MR. SPEAKER : I shall now put the amendment of Sri V. K. Ramaswamy Mudaliyar to vote.

The question is—

"Add at the end the following :—

'but regret to note that there is no enunciation of a clear cut policy for preventing the rise in the prices of consumer goods.'"

The amendment was put and lost.

The other amendments were, by leave, withdrawn.

MR. SPEAKER : I shall now put the main motion of Sri S. Lazar to vote. The question is—

"That an humble address be presented to the Governor that the Members of the Madras Legislative Assembly thank him for the Address delivered to the Members of the Legislature on the 5th August 1960."

The motion was put and carried.

MR. SPEAKER : I now adjourn the House to meet again at 8-30 a.m. to-morrow. 12-58 p.m.

The House then adjourned.

### Appendix

[Vide answer to starred question No. 98 asked by Sri S. M. Annamalai at the meeting of the Legislative Assembly held on 11th August 1960, page 376 supra]

*A.*—(*a*) The following are the reasons for the annual auction of bamboo coupes in the Reserve Forests, which were used to be auctioned once in three years previously:—

(i) As a result of working on a lease period of three years, it was found that the sale amounts fetched were not only, not advantageous to the Government, but were less than what the concerned coupes fetched previously, when they were sold on one year lease;

(ii) by adopting a three-year lease period, the contractor is given the monopoly for working the coupe for three years irrespective of the market conditions in the subsequent two years of the lease period. Further, such a course shuts out small capitalists from participating in the auction sales and thereby limits the scope for competition; and

(iii) silviculturally, it is also desirable to work the bamboo bearing areas once in three years.

(*b*) No, Sir.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY
61341
D,
V211,37 N60
N61.33,34.

# LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
Messrs. CITY BOOK COMPANY, Madras-4.
Messrs. HIGGINBOTHAMS, LIMITED, Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. THE SOUTH INDIA SAIVA SIDDHANTHA WORKS PUBLISHING SOCIETY, Madras-1.
Messrs. VENKATARAMA & Co., Madras-1.
Messrs. M. DORAISAWMY MUDALIAR & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapetta, Madras-14.
Messrs. THE FREE INDIA CO-OPERATOR'S AGENCY, Madras-4.
Messrs. PALANI & Co., Triplicane, Madras-5.
Messrs. MOORTHY PUBLICATIONS, Alwarpet, Madras-18.

## IN MUFASSAL OF MADRAS STATE.

Messrs. AMUTHU BOOK DEPOT, BOOKSELLERS, Dhasarpuram P.O., Chingleput district.
Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
Messrs. THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTER, PUBLISHER AND BOOKSELLER, Madurai.
Messrs. J. J. M. BOOK DEPOT AND STATIONERY EMPORIUM, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. MUTHAMIZH MANRAM, Mayuram.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Tanjore, Tanjore district.
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Tanjore district.
Messrs. APPAR BOOK STALL, Tanjore.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. PALANI PRACHURAM, BOOKSELLERS, Clock Tower, Pudukkottai.
Messrs. S. KRISHNASWAMI & Co., Tiruchirappalli district.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli district.
Sri M. DURAIRAJ, CENTRAL STORES, Main Road, Manapparai, Truchirappalli. district.
Sri S. S. SULTAN MOHAMED, Alangudi, Tiruchirappalli district.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs NELLAI PUTHAKA NILAYAM, BOOKSELLERS, 10, Thana Mana Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. C. P. S. BOOKSHOP, Chidambaram.
Messrs. THE EDUCATIONAL SUPPLIES COMPANY, Coimbatore (R.S. Puram).
Messrs. VASANTHAM STORES, BOOKSELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Messrs. SIVALINGA VILAS BOOK DEPOT, Erode, Coimbatore district.
Messrs. ARIVU NOOLAGAM, BOOKSELLERS, Market, Ootacamund, Nilgiris.
Sri S. M. JAGANATHAN, BOOKSELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.

## IN OTHER STATES.

Messrs. U. R. SHENOY & SONS, Mangalore, South Kanara district.
Messrs. HAJEE K. P. AHMED KUNHI & BROS., Cannanore, North Malabar district.
Messrs. THE S.S. BOOK EMPORIUM, BOOKSELLERS "Mount-Joy" Road, Basavangudi, Bangalore-4.
Messrs. PEOPLE'S BOOK HOUSE, Mysore.
Messrs. H. VENKATARAMIAH & SONS, VIDYANIDHI BOOK DEPOT, Mysore, South India.
Messrs. PANCHAYAT SAMACHAR, GUTALA, West Godavari district.
Messrs. BOOK-LOVERS (PRIVATE), LIMITED, Guntur and Hyderabad.
Sri D. SRIKRISHNAMURTHY, Ongole, Guntur district.
Messrs. JANATHA AGENCIES, BOOKSELLERS, Gudur.
Messrs. M. SESHACHALAM & Co., Masulipatnam, Krishna district.
Messrs. THE COMMERCIAL LINKS, Governorpet, Vijayawada, Krishna district.
Messrs. TRIVENI PUBLISHERS, Masulipatnam, Krishna district.
Messrs. GUPTA BROTHERS, Visakapatinam.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. C. M. JOSEPH & SONS, Trichur.
Messrs. THE CRYSTAL PRESS, BOOKSELLERS, Marthandam P.O., S. Travancore.
Messrs. THE BOOK AND REVIEW CENTRE, Vijayavada.
Messrs. THE B.H.U. PRESS BOOK DEPOT, Banares.
Messrs. B. S. JAIN & Co., 71, Abupura, Musaffarnagar (U.P.).
Messrs. ANDHRA UNIVERSITY GENERAL CO-OPERATIVE STORES, LTD, Waltair.
Messrs. BALAKRISHNA BOOK Co., Hazratganj, Lucknow.

PRINTED AND PUBLISHED BY THE CONTROLLER OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.